மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

பாரத ரத்னா புரட்சித் தலைவர்

டாக்டர் **எம்.ஜி.ஆர்** நூற்றாண்டு விழாவில்

மாவட்டங்களில் ஆற்றிய சிறப்பு உரைகளின் தொகுப்பு

தொகுதி - 2

‘பாரத ரத்னா’ புரட்சித் தலைவர்

டாக்டர் **எம்.ஜி.ஆர்** அவர்கள்

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண். 25

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

நெஞ்சில் நிறுத்துங்கள்!

கலைத் துறையைச் சார்ந்த ஒருவர், அரசாள, அதுவும் சிறப்பாக அரசாள முடியும் என்று உலகுக்கு உணர்த்திச் சென்றவர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

ஓடுகின்ற நதிகள் எல்லாம் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடுவது போல ஏழை, எளிய மக்களின் இல்லங்களைத் தேடித்தேடிச் சென்று உதவிகளைச் செய்தவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்! இதே குறிக்கோளை, ஆளுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோதும் அடித்தட்டு மக்களின் வாழ்வு வளம்பெற பல நூறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்திக் காட்டி அந்த மக்களின் இல்லங்களில் இன்ப ஒளியை ஏற்றி வைத்தவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இத்தகைய வரலாற்றுக்கு சொந்தக்காரரான புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழக மாவட்டத் தலைநகரங்களில், தமிழக அரசு நடத்திய விழாக்களில், தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்புதான் இந்த நூல்.

“மக்களிடம் செல்வோம்; மக்களிடம் பயில்வோம்; மக்களுக்காக உழைப்போம்!” என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து சிறந்த புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் சாதனைகளையும், சரித்திரப் புகழ்பெற்ற திட்டங்களையும் மக்களுக்கு நினைவுபடுத்தும் வகையிலும், அடித்தட்டு மக்களுக்கு புதிய புதிய திட்டங்களை அறிவிக்கும் முறையிலும் இந்த விழாக்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருப்பதை இந்த நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் அறியலாம்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழ்மிகு வாழ்க்கையையும், வரலாற்றுச் சாதனைகளையும் இன்றைய சந்ததிக்கும், எதிர்காலச் சந்ததிக்கும் இந்த நூல் எடுத்துச் சொல்லும். இந்த நூலைப் பயில்வோர் அந்த உண்மையை அறிவர்.

அனைவரும் படித்து பாதுகாக்க வேண்டிய நூலை மக்களுக்குக் கொண்டு செல்வதில் மனம் மகிழ்கிறோம்.

– விழாக் குழுவினர்

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

1. பிரம்மன் படைத்திட்ட முதல் திருஉரு, கருவூரில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படைத்திட்ட
பிரமாண்டமான எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா – கரூரில் 1

2. தமிழ்காக்க அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த
கடை வள்ளல் அதியமானின் தகடூரான தருமபுரியில்
இதயக்கனி கொடைவள்ளல் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா 19

3. வீரத் தொண்டைமான்கள் ஆண்ட புதுக்கோட்டையில்
தீரத்தமிழ் மக்களின் வீரமகன்
எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா..37

4. வியாபாரம் செழிக்கும் வணிகநகர் விருதுநகரில்,
திரைத்துறையின் உயர் நாயகன் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா........................ 56

5. சிறுவயதில் தான்பெற்ற பசித்துன்பத்தை
எதிர்கால சந்ததியினர் சந்திக்காமல் இருக்க
சிறுவர்களுக்குச் சத்துணவு தந்த,
அ.தி.மு.க. வள்ளலார் எம்.ஜி.ஆருக்கு திருச்சியில் நூற்றாண்டு விழா!.....................77

6. தேனி போல சுறுசுறுப்பான மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு,
தேனியில் நூற்றாண்டு விழா.. 95

7. நெல்லைக்காக்கும் வேலிபோல் நல்லாட்சி மூலம்
மக்களைக் காத்த எம்.ஜி.ஆருக்குத்
திருநெல்வேலியில் நூற்றாண்டு விழா...115

8. விடுதலை வீரர்களின் இரத்தத்தால் சிவந்த மண் சிவகங்கையில்
வீரத்தின் விளைநிலம் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா!..137

9. தூத்துக்குடி முத்துக்கள்' பாண்டியநாட்டின்
பெருமை– "உலகம் சுற்றும் வாலிபன்"
திரைப்பட வெற்றிக்குப் பெருமை தந்த
தூத்துக்குடியில் உலகம் சுற்றிய
வாலிபன் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா...157

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
10.	இராமன் பூஜித்த இராமநாதபுரத்தில், திரை உலகிலும், அரசியலிலும் தாயைப் பூஜித்த எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா	176
11.	நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் நெற்களஞ்சியமாம் தஞ்சாவூரில் கருணைக் களஞ்சியம் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா	195
12.	தென்னிந்தியாவிலேயே "வெரைட்டி" என்னும் முதல் திரையரங்கம் கட்டப்பட்ட கோயம்புத்தூரில் திரைத்துரையின் முதன் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா	219
13.	மலைகளின் ராணி – உதகையில் மக்களின் ராஜா எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா.	244
14.	நாடாளுமன்ற தேர்தலில் நாடாள முதல் வெற்றிக்கொடியுடன் தொடர் வெற்றியினை வழங்கி வரலாறு படைத்த திண்டுக்கல்லில் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா	265
15.	நேற்று, இன்று, நாளை என்ற முக்காலத்திலும் நின்று நிலைக்கும் முதன்மை நாயகன் எம்.ஜி.ஆருக்கு முக்கடல் சங்கமிக்கும் குமரி மாவட்டம் நாகர்கோவிலில் நூற்றாண்டு விழா	290
16.	"எம்.ஜி.ஆர்" எனும் தாரகமந்திர தமிழ்த்தாயின் திருமகனும், தமிழ்த்தாயின் திருமகளும் வழங்கிய ஆட்சி நூறாண்டுகள் தொடர தன்னிகரில்லாத் தலைவர் எம்.ஜி.ஆருக்கு சென்னையில் மக்களின் அன்போடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருமையுடன் வழங்கிய நூற்றாண்டு நிறைவு விழா	312

❖ ❖ ❖

பிரம்மன் படைத்திட்ட முதல் திருஉரு, கருவூரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படைத்திட்ட பிரமாண்டமான எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா - கரூரில்

உங்கள் உள்ளங்களில் குடிகொண்டிருக்கும் உங்கள் வீட்டுப் பிள்ளை!

பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு.ப. தனபால் அவர்களே,

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றி, நல்ல பல கருத்துக்களை உங்களிடையே தெரிவித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு மக்களவைத் துணைத் தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே!

இதுவரை டாக்டர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழா கூட்டங்கள் 15 நடைபெற்று இருக்கின்றன. இன்றைக்கு 16ஆவது கூட்ட விழா கரூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்த, இந்த மாவட்ட மண்ணின் மைந்தர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜய பாஸ்கர் அவர்களே!

வரவேற்புரை ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர், திரு. இரா. வெங்கடேசன் அவர்களே!

வாழ்த்துரை வழங்கியுள்ள பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆர்.பி. மருதராஜா அவர்களே! கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி எம். கீதா அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கு. கோவிந்தராஜ் அவர்களே! இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! பரிசு பெற்றுள்ள மாணவ மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கரூர், அமராவதி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அழகுமிகு வணிக நகரமாகத் திகழ்கிறது. இந்து மத நம்பிக்கையின்படி, இறைவன் பிரம்மா தனது படைப்புத் தொழிலை இங்குதான் தொடங்கியதாக கருதப்படுகின்றது. அதன் பொருட்டே இந்த ஊர் கருவூர் என்றழைக்கப்படுவதாகவும் கூறுவர்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கிரேக்கப் புலவர்கள், தங்கள் பாடல்களில் கருவூரை சிறந்த வாணிப மையம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் தங்கள் பாடல்களில், இவ்வூரைக் "கோருவூரா" எனக் குறிப்பிட்டு உள்ளனர்.

தங்க நகைகள் ஏற்றுமதியில் கருவூர் ஈடுபட்டிருந்ததை அறிகிறோம். அகழ்வாராய்ச்சியின் போது ரோமானிய நாணயங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த ரோமானியக் காசுகள், கரூரில் மட்டும் தான் மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன.

முற்காலத்தில், கரூரில் தங்க நகை வேலைப்பாடுகளும், வைரம் பட்டை தீட்டும் தொழிலும் சிறப்பாக நடந்திருக்கின்றன.

கரூர், சேரநாட்டின் தலைநகரமாக விளங்கியிருக்கிறது. இங்கு ஆறு நாட்டார் மலையில் உள்ள கல்வெட்டுகளில் கரூரை ஆண்ட சேர மன்னர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

அமராவதி நதிக் கரையில் அமைந்துள்ள வஞ்சி மாநகரை, சேரன் செங்குட்டுவன் தன் தலைநகராகக் கொண்டு ஆண்டதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்த வஞ்சி மாநகரே, கரூர் என்று கருதப்படுகின்றது.

சோழர், பாண்டியர், சங்க கால மன்னர்கள், விஜயநகர நாயக்கர்கள், மைசூர் அரசர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆட்சியின் கீழும் கரூர் இருந்திருக்கிறது. 'வேண்மாடம்' என்று அழைக்கப்பட்ட அரண்மனையைச் சுற்றி, மதில் அரண் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வேண்மாடத்தை, மன்னன் இரும்பொறை ஆண்டு வந்தார்.

சங்க காலத் தமிழ் புலவர்களில் பெரும்பாலானோர் வாழ்ந்த தமிழ் மணக்கும் பூமி இந்த கரூர் பூமி.

அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் பாடிய கண்ணம்பாளனார், கருவூர் கதப்பிள்ளை சாத்தனார், கரூர் கிழார், அரச பரம்பரையைச் சார்ந்த, கருவூர் சேரமான் சாத்தன், கருவூர் நன்மார்பனார், கருவூர் பவுத்திரனார், கரூவூர் பூதஞ்சாத்தனார், கரூவூர் பெரும் சதக்கத்துப் பூதனாதனார் போன்ற இன்னும் பல புலவர்கள் வாழ்ந்த பூமி, இந்த கரூர் மாவட்டம் ஆகும்.

புலவர்களால் பெருமையும் புகழும் பெற்ற கருவூர், கலிங்க நாட்டு பெருவணிகர் ஒருவரையும் பெரும்புலவராக மாற்றியிருக்கிறது. கி.மு 3ஆம் நூற்றாண்டில் கலிங்க நாடு என்றழைக்கப்பட்ட ஒரிசா மாநிலத்தில் பெரும் வணிகராகத் திகழ்ந்தவர், இந்த கருவூர் புலவர்களின் புலமையை அறிந்து, தமிழ் மேல் ஆர்வம் கொண்டு, கருவூருக்கு வந்து தமிழ்ப் பயின்று, பெரும் புலவராகிப் பின் அகநானூற்றில் 183ஆவது பாடலை எழுதி 'கருவூர் கலிங்கத்தார்' என்ற பெயரும் பெற்றுப் பெரும் புலவராய் விளங்கினார். தேவாரப் பாடல் பெற்ற ஏழு தலங்களில், கரூர் பசுபதீஸ்வரர் ஆலயமும் ஒன்று. பேரரசர் சோழனின் ஆன்மிகக் குருவும், தஞ்சைப் பெரிய கோயிலின் லிங்கத் திருவுருவைப் பிரதிஷ்டை செய்தவரும், 'திருவிசைப்பா' இயற்றியவருமான, கருவூர் தேவர் அவதரித்த ஊர் இந்த கரூராகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், 1984ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்திலுள்ள புகளூரில் டி.என்.பி.எல். காகித ஆலையைத் தொடங்கி வைத்தார்கள்.

இவையாவும், எல்லாம் கரூர் மாவட்டத்திற்கு கிடைத்த பெருமைகள் ஆகவே, அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, கரூர் மாவட்டம் ஒரு முதன்மையான மாவட்டமாக விளங்கிவந்து கொண்டிருக்கிறது என்பதற்கு, இவையெல்லாம் சான்றுகள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். புகளூர், ஆசியக் கண்டத்திலேயே மிகப் பெரிய காகித ஆலையை கொண்டதாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதே ஆலையில், 100 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சிமெண்ட் தொழிற்சாலை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால், 2013ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தம் ஆட்சியின்போது, 1995ஆம் ஆண்டு, கரூரைத் தனி மாவட்டமாக உருவாக்கி, இந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தார்கள்!

இன்றைக்கு, கரூர் ஒரு தொழில் நகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. லாரி, பேருந்து கட்டுமானத் தொழிலுக்குப் பெயர் பெற்ற ஊர் கரூர். ஆகவே, இந்த ஊர் செழிப்பான ஊர். பல்வேறு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. ஆகவே, இந்த பேருந்துக் கட்டுமானத் தொழிலுக்கு, கரூர்தான் பெயர் பெற்ற ஊராகக் கருதப்படுகிறது. அதேபோல, கொசு வலை தயாரிக்கின்ற மாவட்டம் இந்தக் கரூர் மாவட்டம். கிட்டதட்ட 1,800 கோடி ரூபாய், கொசுவலை தயாரிப்பில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

கரூர் மாவட்ட மக்கள், இங்கிருக்கின்ற கொசுவலை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் மூலம், இந்தியாவிற்கு மட்டுமல்ல வெளிநாட்டிற்கும் கொசுவலை தயாரித்து அனுப்பக்கூடிய தொழில்வளம் மிக்க மக்கள் நிறைந்த மாவட்டம், இந்த கரூர் மாவட்டம்.

அதேபோல் போர்வை தயாரிப்பிலும், ஆண்டிற்கு 3,000 கோடி ரூபாய் ஏற்றுமதி செய்யக்கூடிய பகுதியாக, இன்றைக்கு கரூர் மாவட்டம் விளங்குகிறது. போர்வை தயாரிக்கினற மிகப்பெரிய மாவட்டமாகத் திகழ்கிறது. போர்வை அதிகளவில் ஏற்றுமதி செய்யக்கூடிய மாவட்டம் இந்தக் கரூர் மாவட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழில் வளம் மிகுந்த மாவட்டம் இந்த மாவட்டம். விவசாயம், தொழில், ஜவுளி ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றிருக்கும் மாவட்டம் இந்த கரூர் மாவட்டம்.

கரூர் மாவட்டத்திலுள்ள, தோகை மலையில் கிடைக்கும் வண்ணப் பளிங்குக் கற்கள் உலக அளவில் புகழ் பெற்றுள்ளன. கரூர் அரவங்குறிச்சிப் பகுதியில், விவசாய பெருங்குடி மக்கள் அதிக அளவிலான முருங்கை மரங்களைப் பயிரிட்டு வருகின்றனர். இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற முருங்கைக்காய், இங்கே மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த அளவுக்கு முருங்கைக்காய் அதிகளவில் உற்பத்தி செய்கின்ற மாவட்டம் இந்தக் கரூர் மாவட்டம்.

கரூர், கைத்தறி மற்றும் விசைத்தறி ஜவுளி உற்பத்தியில் உலகளவில் பிரசித்தி பெற்றது. இவ்வளவு பழைமையும் பெருமையும் வாய்ந்த இந்தக் கரூரில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக, எழுச்சியாகக் கொண்டாடுவதென்பது பெருமைக்குரிய விஷயம் என்பதை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்!

பாசம்மிக்க மக்களாகிய உங்கள் அனைவரின் உள்ளங்களிலும் குடிகொண்டிருக்கும் உங்கள் வீட்டுப் பிள்ளை, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றி அடுத்த தலைமுறையினரும் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கம் வெற்றி பெற்று இருக்கின்றது என்பது, ஒவ்வொரு மாவட்ட விழாவிற்கும் வருகை தரும் மக்கள் கூட்டம் உறுதி செய்கின்றது. என் பங்கிற்கு நானும், மாண்புமிகு

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகின்றேன். தாம் காலெடுத்து வைத்த திரைத் துறையிலும், அரசியல் துறையிலும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் மகத்தான வெற்றிகளை அடைந்தார்கள். அந்த வெற்றிகளுக்குப் பின்னால், எத்தனை முயற்சிகள் இருந்தன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தொடக்கக் காலத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களுக்கு ‘‘எதிர்காலத்தில், தாம் ஒரு பெரிய கதாநாயகனாக உயரமுடியும் என்ற நம்பிக்கை குறைவாகவே இருந்ததாம்!’’ காரணம், அப்போதெல்லாம் சொந்தக் குரலில் பாடத் தெரிந்தவர்கள்தான் கதாநாயகனாக இருக்க முடியும். ஆனால், திரு. எம்.ஆர். ராதா, திரு. ரஞ்சன் போன்ற நடிகர்கள் பாடத் தெரியாமலேயே கதாநாயகர்களாக ஆனவர்கள் என்பதால், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களுக்கும் அந்த நம்பிக்கை துளிர்த்தது. அதே போல, தமக்கு முன்பு, திரையுலகத்தில் வெற்றி பெற்ற கதாநாயகர்கள், எப்படி எல்லாம் செல்வாக்கு இழந்தார்கள் என்பதை ஆராய்ந்து, கண்டுபிடித்து, தாம் நடிக்கும் கதாபாத்திரங்களில் கூடத் தனி மனித ஒழுக்கக் கேடுகள் இல்லாதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், கெட்ட பழக்கங்கள் என்று மக்கள் எவற்றையெல்லாம் கருதினார்களோ, அவை எதுவும் தம்மிடம் இல்லாதவாறு கவனமாகப் பார்த்துக்கொண்டார்கள். அதனால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், மக்களின் மனங்களில் வாழ்ந்து, மக்கள் தலைவராக உயர்ந்தார்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கு. வாயில்லா ஜீவன்கள் மீதும் அளவு கடந்த பாசம் இருந்தது! அதனால்தான், சென்னையிலிருந்து சற்றுத் தள்ளி இருக்கும் ராமாவரத்தில், பல ஏக்கர் நிலத்தை வாங்கி, அதில் பெரிய தோட்டம் அமைத்து, நடுவில் வீடு கட்டி, மாட்டுப் பண்ணை அமைத்திருந்தார்கள். அந்த வாயில்லா ஜீவன்களுக்கும் வாழ்வளித்தவர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள்! தம் படங்களுக்குத் தலைப்பு வைப்பதில் கூட அதிகக் கவனம் செலுத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள். தாம் நடிக்கப்போகும் ஒரு படத்திற்கு ‘நல்லதுக்குக் காலமில்லை’ என்று அந்த படத்தின் வசன கர்த்தா திரு மா. இலட்சுமணன் தலைப்பு வைத்திருந்தார். ஆனால், அதை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் ஏற்கவில்லை. இந்தத் தலைப்பு, மக்களிடம் எதிர்மறை சிந்தனையை ஏற்படுத்தும். ‘‘நல்லது வென்றே தீரும், தீயது தோற்கும் போன்ற கருத்தைதான் நாம் சொல்லவேண்டும் – எனவே, அந்த படத்தின் தலைப்பை ‘திருடாதே’ என்று மாற்ற வேண்டும்’’ எனக் கூறினார்கள்.

மக்கள் சேவை செய்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்றது ஒரு விதம் என்றால், தம்முடைய தோற்றத்தைக் கூட, வித்தியாசமாக மக்கள் மனதில் பதிய வைத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள்.

செயலிலும் சரி, தோற்றத்திலும் சரி, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை.

1968ஆம் ஆண்டு, 'அடிமைப் பெண்' என்ற படத்தின் படப்பிடிப்புக்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது மனைவி திருமதி. ஜானகி அம்மையாருடன், ஜெய்ப்பூருக்குச் சென்றிருந்தார்கள். அப்போது ராஜஸ்தானின் முதலமைச்சராக இருந்த திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் தம்பதியினரை விருந்துக்கு அழைத்திருந்தார்கள். விருந்தின் நிறைவில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வெள்ளைத் தொப்பி ஒன்றை அன்புடன் போட்டு விட்டார்கள்.

அந்தத் தொப்பி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகவும் அழகாக இருந்தது என்று அனைவரும் பாராட்டினார்கள். திருமதி. ஜானகி அம்மையார் அவர்கள், கருப்பு கண்ணாடி ஒன்றைக் கொடுத்து, "இதை அணிந்து கொள்ளுங்கள். இனிமேல், நீங்கள் இதே தோற்றத்தில் வெளியில் சென்றால், மக்கள் உங்களை நன்றாக ரசிப்பார்கள்", என்றார்கள். அதிலிருந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு, வெள்ளை நிற தொப்பியும், கருப்பு நிற கண்ணாடியும் அணியும் பழக்கம் ஏற்பட்டது. அதுவே, பின்னாளில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அடையாளமாகவும் மாறியது. திரை உலகில் ஒரு பெரிய புரட்சியை நடத்தி வெற்றி வாகை சூடிய பிறகு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அரசியல் களத்தில் நுழைந்த போது, தமிழ் நாட்டு மக்கள்

அவரை இரு கரம் கூப்பி வரவேற்றார்கள். காரணம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் சொல்லும், செயலும் ஒன்றாகவே இருந்தன.

“நாடென்ன செய்தது நமக்கு
எனக் கேள்விகள் கேட்பது எதற்கு,
நீ என்ன செய்தாய் அதற்கு,
என நினைத்தால் நன்மை உனக்கு”

என பாடிய நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நிச்சயம் தமிழ் நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி செய்வார் என்று மக்களுக்குத் தெரிந்து இருந்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கடைசியாக நடித்த படம் ‘மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்’. படப்பிடிப்பு முடிவதற்குள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை மக்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆக்கிவிட்டார்கள். அந்தப் படத்தின் கடைசி டப்பிங் பணி முடிந்ததும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒலி பெருக்கியை தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். வாகினி தியேட்டர் நிலத்தை தொட்டு முத்தமிட்டார்கள். வெளியே வந்ததும் நிறைய பேர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்க்க கைகளில் மலர் மாலைகளுடன் காத்திருந்தனர். அவர்களைப் பார்த்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் “நான் திரை உலகுக்கு விரும்பி வரவில்லை, – காலம் என்னை திரை உலகிற்குத் தள்ளிவிட்டது. இன்றைக்கு நான் திரை வாழ்க்கையில் வெற்றி அடைந்து விட்டேன்! என் சினிமா வாழ்க்கையில் மகாராஜனாகவும், சக்கரவர்த்தியாகவும் கூட இருந்துவிட்டேன். நாளைக்கு நான் அடையப் போவது வெறும் மந்திரி பதவிதான்”, நாளைக்கு மந்திரியானாலும் எம்.ஜி.ஆர் – எம்.ஜி.ஆர்தான், அதுக்கு நீங்க எல்லோரும் தந்த மகத்துவத்தை நான் மறக்க மாட்டேன், நன்றி!!’’ என தாம் மக்கள் பணி ஆற்ற இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மக்களின் எண்ணப்படியே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ் நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி செய்தார்கள். ஒரு முதிர்ச்சி பெற்ற, ஆளுமைத் திறன் கொண்ட, அரசியல் தலைவராக தம்மை மாற்றிக் கொண்டார்கள்.

தமிழ் நாட்டில் தலைதூக்கிய அத்தனை பிரச்சினைகளுக்கும் தம் அறிவுத் திறமையால் சுமூகமாகத் தீர்வு கண்டார்கள்! அதற்கு உதாரணமாக, ஒரு நிகழ்வை இங்கே குறிப்பிடுகின்றேன். பல ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்ப் படங்களை கருநாடகாவில் திரையிட அனுமதிக்கக்கூடாது என்று, கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் போராட்டத்தில் ஈடுபட்டார். அன்னாரை நேரில் சந்தித்துப் பேச, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் பெங்களூர் சென்றார்கள். கோபக்காரரான அவரைத் தனியே சென்று சந்திக்க வேண்டாம் என மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை, பலர் தடுத்து நிறுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் கேட்கவில்லை. இருவருக்குமான சந்திப்பு கருநாடகாவில் உள்ள ஒரு ஹோட்டலில் நடந்தது. ‘‘என்னைப் பார்க்க வர்ரதுக்கு என்ன காரணம்’’? என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களிடம் அத்தலைவர் கேட்டார். ‘தமிழ்படங்கள் பெங்களூரில் ஓடக்கூடாது என்று சொன்னீர்களாம், அதுக்கு என்ன காரணம் என்று யாரும் சரியாகச் சொல்லவில்லை. உங்களிடமே நேரில் கேட்டுவிடலாம் என வந்தேன்’’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் கூறினார்கள்.

‘‘எங்கள் கர்நாடக மாநிலத்தில் கன்னடப் படம் ஓடுவதில்லை, உங்க தமிழ் படம் தான் ஓடுகிறது’’. அதனால் தான், என்றார் அந்த தலைவர் நீங்கள், தமிழ் படத்தைத் திரையிட விடாமல் தடுத்தாலும், பாதிப்பு கன்னடக்காரர்களுக்குத்தான். நாங்கள் எடுக்கிற தமிழ்ப் படங்களில் பணிபுரிகிறவர்களில் பெரும்பாலானோர் உங்கள் மாநிலத்துக்காரர்கள்தாம்! இயக்குனர் பந்துலு, சுந்தர்ராவ் நட்கர்னி போன்ற இயக்குநர்கள் உங்கள் மாநிலத்துக்காரர்கள்தாம். அங்கே உள்ள ஸ்டூடியோ முதலாளி, நடிகைகள் சரோஜா தேவி போன்றவர்கள் உங்க மாநிலத்துக்காரர்கள்தான். உங்க மாநிலத்து ஹீரோ ராஜ்குமார் அவர்களுக்குப் பூர்வீகம் தமிழ் நாடுதான்.

உங்க மாநில வி.ஐ.பி.க்களுக்கு, எங்கள் ஊரில் பெரிய பெரிய வீடுகள் உள்ளன. எங்கள் மாநிலத்துக்காரர்களுக்கும் இங்கு வீடுகள் இருக்கின்றன. தூத்துக்குடியில் தான் சங்கு விளைகிறது. அவற்றால்தான் உங்கள் பிள்ளைகளுக்கு பால் வார்க்கிறீர்கள். இதற்கு மேலேயும், நீங்கள் தமிழ்ப் படத்தை எதிர்க்க விரும்பினால் என் படங்களை கன்னட பகுதிக்கு விற்க வேண்டாம் என்று சொல்லிவிடுகின்றேன்’’, என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறினார்கள். உடனே, அந்த தலைவர் எழுந்து நின்று, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கையை பிடித்து ‘இனிமேல், உங்கள் படத்துக்கு நானே பேனர் கட்டுகிறேன், போஸ்டரும் ஒட்டுகிறேன்!’’ என்றார்.

இவ்வாறு எதிரிகளையும் பணிய வைக்கும் சாமர்த்தியம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களிடம் இருந்தது என்பதற்கு இப்படி எத்தனையோ சம்பவங்களைக் கூறலாம். திரை வாழ்க்கையில் மட்டுமன்று. அரசியல் வாழ்க்கையிலும் இப்படி எத்தனையோ பிரச்சினைகளைச் சாதுர்யமாகத் தீர்த்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் கற்ற பாடம்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தன் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை, பிரச்சினைகளின் தன்மைக்கேற்றவாறு தீர்த்தார்கள். எத்துணையளவு மக்கள் பணி ஆற்றினாலும், அதில் குறை கண்டுபிடித்துச் சொல்வதுதான் எதிர்க் கட்சிகளின் பணி என்ற இலக்கணம் வகுத்துக் கொண்டிருப்பார்கள். நியாயமான எதிர்ப்புகளை சரிசெய்வதும், காழ்ப்புணர்ச்சியில் கிளம்பும் எதிர்ப்புகளை விட்டுத் தள்ளுவதும்தான்

நல்ல ஆட்சியாளர்களின் திறமை. எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்ற ஆட்சி நடத்துகின்றோம். அந்தத் திட்டங்களுக்கு குறுக்கே வருகிறவர்களுக்கு, மக்கள் பாடம் கற்றுக் கொடுப்பார்கள். எங்கள் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, முடிவில்லாமல் தொடரும். அப்படித்தான், இந்த இனிய விழாவில் கரூர் மாவட்டத்திற்கான திட்டங்களை செயல்படுத்துகின்றோம். அம்மாவின் அரசு, கரூர் மாவட்டத்திற்குக் கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளைச் சொல்வதற்கு நிறைய இருக்கின்றன. அவற்றில், ஒரு சிலவற்றை மட்டும் இங்கே கூற விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து கொண்டு, ‘‘பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவில், என்ன செய்தார்கள், என்ன சாதனைகள் படைத்தார்கள் ?’’ என்று விமர்சனம் செய்கிறார்கள்.

ஆகேவே, புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே செய்த சாதனைகள், புரட்சித்தலைவர் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எவ்வாறு தொடர்ந்தார்கள் என்பதை சுட்டிக் காட்ட, இங்கே சில திட்டங்களை விரிவாக சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, எதிர்கட்சிகள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க விரும்புகின்றோம். நாங்கள் செய்த சாதனைகளை, இங்கே பட்டியலிட்டு காட்ட விரும்புகிறோம் என்பதை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கரூர் மாவட்டத்தில், 61 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 37ஆயிரத்து 486 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட, 37,000 மாணவர்கள் பயன்பெற்று இருக்கிறார்கள்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்குச் சென்று ஏழை எளிய மாணவர்கள் உயர்கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் அறிவுபூர்வமான கல்வி, விஞ்ஞானபூர்வமான கல்வி இந்த மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக தொலைநோக்குச் சிந்தனையோடு, இதய தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு மட்டும், 37ஆயிரத்து 486 மடிக்கணினிகளைக் கொடுத்து, மாணவர்களை அறிவுஜீவிகளாக வளர்த்த தலைவர், புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! ஆனால், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம், வேண்டுமென்றே திட்டமிட்டு, இன்றைக்கு தினந்தோறும் ஒவ்வொரு பொய்யை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், அறிவுபூர்வமான கல்வி மாணவர்களுக்கு அம்மாவின் அரசினால் கிடைத்திருக்கிறது. 12 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 37ஆயிரத்து 694 மாணாக்கர்களுக்கு, மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நம்முடைய மாவட்டம், கிராமம் சூழ்ந்த மாவட்டம். ஆகவே, கிராமத்தில் இருக்கின்ற மாணவர்கள், ஆங்காங்கே இருக்கின்ற பள்ளிகளுக்கு உரிய நேரத்தில் சென்று வீடு திரும்புவதற்கு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

தொலைநோக்கு சிந்தனையோடு நமது மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கினார்கள். இந்த மாணவர்களது வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை இது.

'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்'தின்கீழ், 25ஆயிரத்து 653 விவசாயிகளுக்கு, 15 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அம்மா அவர்கள், ஏழை எளிய விவசாயிகள் நலம்பெற வேண்டும் என்பதற்காகப் போடப்பட்ட திட்டம் இந்த திட்டம். இதன்மூலம், 25 ஆயிரத்து 653 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். 87 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏழை எளிய குடும்பங்களுக்கு, சூரிய மின் சக்தியுடன் கூடிய 5 ஆயிரத்து 232 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, அம்மாவின் ஆட்சியில்தான் ஏழைகள் மகிழ்ச்சியாக வாழ்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம்.

வீடில்லாத ஏழைகளுக்கு, வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்கள் வாழ்வதற்கு உத்தரவாதம் வழங்கிய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின்கீழ் 125 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆயிரத்து 654 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

'தாய்' திட்டத்தின்கீழ், கிராமப்புறம் வளர்ச்சி அடைய வேண்டும், கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே, 'தாய்' திட்டத்தை கொண்டுவந்து, கிராமப்புற மக்களின் வாழ்க்கையை உயர்த்திய தலைவி புரட்சித் தலைவி அம்மா, அவர்கள்! தாய் திட்டத்தின் கீழ் 157, கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 2ஆயிரத்து 174 குக்கிராமங்களில், 65 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3,849 பணிகள் நடைபெற்றுள்ளன. இதெல்லாம் அம்மா அரசு செய்த சாதனைகள் என்பதை, எதிர்க்கட்சிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஊரக வளர்ச்சித் துறையில், 'நபார்டு' திட்டத்தின்கீழ், 50 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 92 கிராமப்புற சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமத்தில் சாலைகள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக, அம்மா அவர்கள் இந்த அளவிலான நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள்.

கரூர் நகராட்சியில், 68 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காவிரி கூட்டுகுடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்களுக்குத் தங்குதடையின்றி, பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, அம்மாவினுடைய ஆட்சியிலே, கூட்டுக் குடிநீர்த் திட்டம், கரூர் நகராட்சிப் பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் என்பதை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையின் மூலம், 43 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 112 புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. பள்ளிக்கல்வித்துறையின் மூலம், 16 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பள்ளிகளில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

16 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிக் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், 99 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில், 275 குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் குடிநீர் பிரச்சினை என்பதே இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கு, இந்த மாவட்ட மக்களுக்கு 99 கோடியே 43 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 236 தனிமின்விசை குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 39 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 7 இடங்களில் புதிய மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தங்குதடையில்லாமல் மின்சாரம் வழங்குவதற்காக இந்தத் திட்டம் அம்மாவினுடைய ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டது.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 26 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில், 25 பாலங்கள், சாலைப் பணிகள் மற்றும் சிறு பாலப் பணிகள் நடைபெறுகின்றன. மேலும், 22 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில், 3 பாலங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புத் துறையின்கீழ், 367 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், 718.50 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 15 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பசுபதி பாளையத்தில் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

16 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கக்காலியூர் முதல் காந்திகிராமம் வரை, நான்கு வழிச் சாலை மற்றும் காந்தி கிராமம் முதல் வீராக்கியம் வரை, 6 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இருவழிச் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 12ஆயிரத்து 680 பயனாளிகளுக்கு, 23 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ், 53 ஆயிரத்து 952 கர்ப்பிணி தாய்மார்களுக்கு 38 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய 129 கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கான கடன்தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, விவசாயிகளின் கோரிக்கையை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி இருக்கிறது. இதன் மூலம், 27 ஆயிரத்து 939 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். மகசூல் பாதித்த 34 ஆயிரத்து 58 விவசாயிகளுக்கு, இடுபொருள் மானியமாக,

14 கோடியே 78 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்துப் பணி திட்டத்தின்கீழ், ஒரு கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 29 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 6 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 37 சிறு பாசனக் குளங்கள் தூர்வாரப்பட்டுள்ளன. புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு விவசாயிகளின் அரசு. குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற ஏரி, குளங்களில் விவசாயிகளின் பங்களிப்போடு, வண்டல் மண் அள்ளப்படுகிறது. அந்த வண்டல் மண் விவசாயிகளுக்கு இலவசமாக அளிக்கின்றோம். அந்த வண்டல் மண்ணை, விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு அடிஉரமாக இடுகிறார்கள். ஆகவே, நிலங்கள் பண்படுத்தப்படுகின்றன. அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை இந்த அம்மா அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கிறது. வண்டல் மண் அள்ளப்படுவதால், ஏரி ஆழப்படுத்தப்படுகிறது. அப்படி ஆழப்படுத்தப்படுகின்ற தருணத்தில், பருவமழை பொழிகின்ற போது மழைநீர் முழுவதும் சேகரிக்கக் கூடிய சூழ்நிலையை, அம்மா அரசு உருவாக்கியுள்ளது. இதனால் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, நிலத்தடி நீர் உயரும் சூழ்நிலையை விவசாயிகளுக்கு அரசு உருவாக்கி இருக்கிறது.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் திட்டத்தின்கீழ், 9 ஆயிரத்து 10 பேருக்கு 8 இலட்சத்து 3 ஆயிரத்து 425 கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இன்று நான் 15 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 26 கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளேன். இன்று பல்வேறு துறைகளின் சார்பில், 22 ஆயிரத்து 282 பயனாளிகளுக்கு, 88 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 8 ஆயிரத்து 435 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 34 ஆயிரத்து 70 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 482 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 716 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம், 11 ஆயிரத்து 917 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 40 ஆயிரத்து 786 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாவட்டந்தோறும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மட்டும் எங்கள் நோக்கம் அன்று; மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மக்களுக்கு எத்தகைய திட்டங்களை வழங்க வேண்டுமென்று எண்ணியிருந்தார்களோ, அவற்றையெல்லாம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின் மூலமாக, நாங்கள் அறிவித்தும், நிறைவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வருகின்றோம். இதை அறியாமல், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதையே தவறு என்பது போல, அதையும் அரசியலாக்க முயற்சிக்கிறார்கள்.

மக்களுக்கு நல்லது செய்வதற்கு, நாங்கள் யாருக்கும் பயப்படவோ, பதில் சொல்லவோ, தேவையில்லை என்பதை, இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள், மக்கள் சேவையை மகேசன் சேவையாகக் கருதி, மக்கள் தொண்டு ஆற்றுவதில் ஒரு காலமும் பின்வாங்க மாட்டோம். மக்கள் பலம் ஒன்றே எங்களுக்குப் போதும்! தவறானவர்களைப் பிடித்துக் கொண்டு, தவறான திசைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் நாங்கள் காப்பாற்றி, தாய் வீட்டிற்கு கொண்டு வருவோம்! இதைக் கூறுகிறபோது எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஓர் ஆற்றில், வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இக்கரையில் இரண்டு பேர் நின்று கொண்டிருக்கிறார்கள். எப்படி அக்கரைக்குப் போவது என்று யோசிக்கும் நேரத்தில் ஒரு காளை மாடு அங்கே வந்தது. அப்படியே ஆற்றில் பாய்ந்து, நீந்த ஆரம்பித்தது. இதைப் பார்த்த இரண்டு பேரில் ஒருத்தன் குபீர் என்று ஆற்றில் குதித்து, அந்தக் காளை மாட்டின் வாலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். காளை மாடு சுலபமாக அவனை இழுத்துச் சென்று, அக்கரையில் சேர்த்துவிட்டது. அடுத்தவன் பார்த்தான். நமக்கும் ஒரு வால் கிடைத்தால் நன்றாயிருக்கும் என்று எதிர்பார்த்திருந்தான்.

இந்த நேரம் ஒரு ஆடு வந்து ஆற்றில் குதித்தது. இதுதான் நேரம் என்று இவனும் ஆற்றில் குதித்து, அந்த ஆட்டின் வாலைப் பிடித்துக் கொண்டான். இந்த மனிதனை இழுத்துக் கொண்டு அந்த ஆடு ஆற்றில் நீந்த முடியவில்லை. ஒரு கட்டத்தில், ஆடும் அந்த மனிதனும், ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் போக நினைத்த இடம் வேறு; போய்க் கொண்டிருக்கின்ற திசை வேறு! இப்படித்தான், சிலர் ஆட்டின் வாலைப் பிடித்துக் கொண்டு கரை சேர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். யார் என்பது உங்களுக்குப் புரியும் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தனது திரைப்படத்தில்

> ‘‘பொது நீதிக்கும் நேர்மைக்கும் பயந்துவிடு,
> நல்ல அன்புக்கும், பண்புக்கும் வளைந்து கொடு,
> இன்றோடு போகட்டும் திருந்திவிடு
> உந்தன் இதயத்தை நேர்வழி திருப்பிவிடு’’

என்று பாடியது இவர்களுக்குத் தான் பொருந்தும், என்று நான் கருதுகிறேன் யார் என்பது உங்களுக்கு புரியும் என்று நான் நினைக்கிறேன்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார். இந்த மாவட்டத்திற்கும் ஆட்சிக்கும் துரோகம் செய்து விட்டார் என்று குறிப்பிட்டார். அது உண்மை தான். அதற்கு நாங்களும், துணை போய் விட்டோம். ஏனென்று

சொன்னால், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பொழுது, அரவக்குறிச்சிக்கு இடைத்தேர்தல் வந்தது. அந்த இடைத்தேர்தலிலே, தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்று இங்கே என்னை நியமித்தார்கள். திருப்பரங்குன்றத்திற்கு, அண்ணனை நியமித்தார்கள். தஞ்சாவூருக்கு அண்ணன் வைத்தியலிங்கத்தை நியமித்தார்கள். ஆகவே, மூன்று பேரும் தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்று அறிவித்தார்கள். நாங்கள் மூன்று பேரும், எங்களுக்கு ஒதுக்கப்பட்டத் தொகுதிகளுக்குச் சென்று தேர்தல் பணியாற்றினோம். அப்பொழுது, இங்கே அரவக்குறிச்சிக்கு வந்து, கழக நிருவாகிகளைச் சந்தித்தபொழுது சொன்னார்கள், தயவு செய்து இவரை ஜெயிக்க வைத்துவிடாதீர்கள், இவர் வந்துவிட்டால், நீங்கள் எண்ணியது போல் நடக்கமாட்டார், நிச்சயம் துரோகம் மனதிலே இருக்கும் என்று அப்பொழுதே தெரிவித்தார்கள்! ஆனால், நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல; இன்றைக்கு போரிலே தளபதி என்ன உத்தரவை பிறப்பிக்கின்றாரோ, அந்த உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நாங்கள் நடப்பதைப் பார்த்து, சிப்பாய் நடப்பதைப் போல, புரட்சித்தலைவி அம்மா என்ற தளபதி எங்களுக்கு இட்ட கட்டளையை, சிப்பாய் போல நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, அந்தப் பணியை மேற்கொண்டு, நான் மட்டுமன்று, இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு. விஜயபாஸ்கர் அவர்களும், அவரோடு இணைந்து பணியாற்றினோம். மேடையிலே வீற்றிருக்கின்ற பல்வேறு அமைச்சர்கள், இந்த மாவட்டத்திற்கு, மின்சாரத்துறை அமைச்சர் திரு. தங்கமணி அவர்களை அம்மா அவர்கள் பொறுப்பாளராக வைத்திருந்தார். அவரும், மற்ற அமைச்சர்களும், இங்கே இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இன்றைக்கு தேர்தல் பணியாற்றுவதற்காகப் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்துள்ளவர்களும், தேர்தல் பணியாற்றவேண்டும் என்று புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்தற்கிணங்க, நாங்கள் ஒருசேரப் பணியாற்றினோம்! அப்பொழுது, கிட்டத்தட்ட 25 நாட்கள் முகாமிட்டு, எல்லாப் பகுதிகளுக்கும் சென்றோம். எனக்கு முன்னாலே, இந்த மாவட்ட அமைச்சர் திரு. விஜயபாஸ்கர் சொல்லியதைப் போல, இரவு, பகல் பாராமல், நானும் என்னோடு இந்த மாவட்ட அமைச்சர் மற்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு மாவட்டச் செயலாளர்கள், பல்வேறு கழக நிர்வாகிகள், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூாட்சி அனைத்து நிருவாகிகளும் இணைந்து பணியாற்றினோம். கிட்டத்தட்ட, ஒரு booth–க்கு 20 பேர் வீதம், கிட்டத்தட்ட 6,000 பேர் தேர்தல் பணியாற்றினோம். இரவு, பகல் பாராமல், வெற்றிக்காக பாடுபட்டதன் விளைவுதான் அவர் வெற்றி பெற்றார், அவர் வெற்றி பெற்றும் கூட, அந்த சட்டப்பேரவை உறுப்பினர், தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லக் கூட போகவில்லை என்று அமைச்சர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள் குறிப்பிட்டார். அப்பொழுதே, நாங்கள் வாக்கு சேகரிக்க சென்ற இடமெல்லாம், மக்கள் சொன்னார்கள், ‘‘இவருக்கா நீங்கள் ஆதரவு கேட்கின்றீர்கள் ?, இவர் அமைச்சராக இருக்கின்றபொழுதே யாரையும் பார்க்கமாட்டார்,

வீட்டில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்வார். இவருக்குப் போய் நீங்கள் வாக்கு கேட்கிறீர்களே!'' என்று சொன்னார்கள், அப்பொழுதெல்லாம் எங்களுக்கு புரியவில்லை, இப்பொழுதுதான் எங்களுக்குப் புரிகிறது. அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவர் புரியவைத்து விட்டார். ஒரு மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான், ஆனால் இடைப்பட்ட காலத்திலே என்ன செய்கின்றான் என்பதுதான் அவன் இறுதியாக போகின்றபோது மக்கள் பேசுகின்ற பேச்சு. ஆனால், இவரைப் பற்றிப் பேசப்படுகின்ற பேச்சு, அரசியல் வாழ்க்கையில், இவர் ஒரு கரும்புள்ளிதான் என்பதாக இருக்கும்! இந்த இயக்கத்திற்கும், ஆட்சிக்கும் களங்கம் விளைவித்திருக்கின்றார். ஆகவே, இப்படிப்பட்டவர் சமூகத்திலே எவ்வளவு உயர்ந்தாலும், அவர் இப்பொழுது செய்கின்ற துரோகம் மறையாது, எப்போதும் வரலாறு சொல்லிக்கொண்டே இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நினைவு கூர்ந்து, இதைப் பேசக்கூடாது என்றுதான் நினைத்தேன், ஏனென்றால், இந்த மாவட்ட மக்களுக்கு தெரிய வேண்டுமென்று தான் பேசினேன். ஏனென்று சொன்னால், இது வரலாற்று நாயகன், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா! நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக, இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை, எம்.ஜி.ஆர்! அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில், இதை பேசக்கூடாது என்று நினைத்தேன், பேச வைத்துவிட்டார். ஏனென்றால், இந்த இயக்கம் சாதாரண இயக்கமல்ல; இருபெரும் தலைவர்கள் இரவு, பகல் பாராமல் உழைத்து, உழைத்துக் கட்டிக் காத்த கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். ஆகவே, அப்படிப்பட்ட உணர்வுபூர்வமான கட்சியை உருவாக்கிய தலைவர்கள், ஆட்சியை உருவாக்கினார்கள். அப்படிப்பட்ட ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று ஒருவர் நினைத்தால், எப்படிப் பேசாமல் இருக்க முடியும்? அப்படிப்பட்ட துரோகச் செயல் நினைக்கின்றவரே, இந்த மாவட்டத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்தார், அதனையே இந்த மாவட்ட அமைச்சர் வருத்தத்தோடு சொன்னார், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் இப்படிச் செய்துவிட்டாரே என்று அத்தனை மக்களும் இன்றைக்கு எண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்து மனம் நொந்து போய் விட்டது என்று சொன்னார்கள். இவ்வளவு பெரிய நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தாலும் கூட, இந்தத் தருணத்திலே, இப்படிப்பட்ட செயலில் ஈடுபட்டிருப்பது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது, எங்களது மாவட்டத்திற்கு அவப் பெயரை இவர் ஏற்படுத்திவிட்டார் என்ற செய்தியை என்னிடத்தில் சொன்னார். ஆகவே, நான் சொன்னேன், இவர் மட்டுமல்ல, இந்த செந்தில் பாலாஜி மட்டுமல்ல, அவரோடு எவ்வளவு பேர் சேர்ந்தாலும் இங்கே வந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிருவாகிகளும், தொண்டர்களும், பொதுமக்களும் எங்கள் பக்கம் இருக்கின்றவரை எவராலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது. அவர்களைப் போல் எத்தனை பேர் பிறந்து வந்தாலும், இந்த இயக்கத்தையோ, கட்சியையோ, ஆட்சியையோ அசைக்கவோ, ஆட்டவோ, அழிக்கவோ முடியாது என்பதை இந்த நேரத்திலே

தெரிவித்துக் கொள்கிறேன். அவர் நினைக்கின்றார், இந்த ஆட்சியை கவிழ்த்து விடலாம், இந்தக் கட்சியை உடைத்துவிடலாம் என்றெல்லாம். நானும், அண்ணனும், எங்களது அனுபவமும் தான் அவரது வயதாக இருக்கின்றது எனக் கருதுகின்றோம். எனவே, நாங்கள் உங்கள் வயதளவிற்கு அனுபவத்தைப் பெற்றிருக்கின்றோம். உங்களைப் போல் எத்தனையோ பேரை பார்த்துவிட்டுத்தான், இந்த மேடையிலே நாங்கள் வீற்றிருக்கின்றோம். ஆகவே, உங்களுடைய சலசலப்பிற்கோ, நீங்கள் செய்கின்ற சூழ்ச்சியோ அல்லது துரோகமோ என்றைக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையோ, கட்சியையோ வீழ்த்தமுடியாது என்பதை இந்த நேரத்திலே திடமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று உங்களுடைய மாவட்ட அமைச்சரும், மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை உறுப்பினரும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவை ஒரு சிலவற்றை நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுப்போம். பல்வேறு கோரிக்கைகளை, நீண்ட பட்டியலோடு அவர் தெரிவித்திருக்கின்றார். அதில் இடம்பெற்றிருக்கின்ற பெரும்பாலனவற்றைச் செய்து கொடுப்போம் என்று இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் கழகக் கண்மணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வாகனங்களில் பத்திரமாக ஊர் போய்ச் சேர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழகச் செயல் வீரர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

- ❖ கரூர் மாவட்டம், காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாயனூர் கதவணைக்குச் செல்லும் வழியில் உள்ள கால்வாய்களின்மேல் புதிய பாலங்கள் கட்டப்படும்.

- ❖ கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே, கதவணையுடன் கூடிய இருவழிச்சாலை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. காவிரிக் கரையின் வலது கரைக்குப் பின்புறம், அதனை ஒட்டியே அடுத்தடுத்து தென்கரைக் கால்வாய், கிருஷ்ணராயபுரம் கால்வாய், புதுக்கட்டளை மேட்டு வாய்க்கால் ஆகிய மூன்று பாசன வாய்க்கால்கள் உள்ளன.

- ❖ அவற்றின் குறுக்கே, தற்போது மதகுகளுடன் கூடிய ஒரு பழைய ஒருவழிப்பாதை பாலம் உள்ளது. இது போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, இந்தப் பழைய பாலங்களுக்கு அருகிலேயே, ஒரு புதிய இருவழிப்பாதையுடன் கூடிய, 80 மீட்டர் நீளமுள்ள பாலம் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

- ❖ சின்னதாராபுரம் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில், கூடலூர் மேல்பாகம் ஊராட்சி, பெரியதிருமங்கலம் பகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கக் கள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

- ❖ தாந்தோன்றி ஒன்றியத்தில், 14 ஊராட்சிகளைச் சேர்ந்த 274 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள, 64 ஆயிரத்து 320 மக்கள் பயன்பெறும் வகையிலான புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அடுத்த ஆண்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

- ❖ கரூர் மாவட்டம், பசுபதி பாளையம் காவல் நிலையத்தின் எல்லைகள் மிகவும் விரிவாகவும் அதிக மக்கள் தொகை கொண்டுள்ளதாகவும் உள்ளதால். தாந்தோன்றி மலையில், ஒரு புதிய காவல் நிலையம் ஏற்படுத்தப்படும்.

- ❖ கரூர் பேருந்து நிலையத்திற்கு அருகில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

கரூர் நகரில் ஒரு புதிய அணுகு சாலை

- ❖ கரூர் நகரத்தில், கோவை ரோடு முதல் 'பைபாஸ் ரவுண்டானா' வரை அமைந்துள்ள, கோவை சாலையில், மிகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே, கரூர் நகராட்சி மூலம், கரூர் இரயில்வே சந்திப்பு முதல் சேலம்–மதுரை தேசிய நெடுஞ்சாலை வரை, கரூர் நகருக்கு ஒரு புதிய அணுகு சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- குளித்தலை நகரில், தற்போது இருக்கும் பேருந்து நிலையம் மிகவும் சிறியதாக உள்ளதால், பொதுமக்கள் சென்று வருவதற்கும், பேருந்துகள் சென்று வருவதற்கும் மிகவும் சிரமமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, புதிய பேருந்து நிலையம் அமைக்கப் பரிசீலனை செய்யப்படும்.
- கோவை—ஈரோடு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் (NH—67) அதிக விபத்துகள் ஏற்படுவதால் கி.மீ.218/0 – 220/0 வரை உள்ள நான்கு வழிச்சாலைப் பகுதியில், விபத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கரூர் மாவட்டத்திற்கு மேம்பாலங்கள்

- கரூர் – ஈசநத்தம் – கூம்பூர் – வேடசந்தூர் சாலை கி.மீ. 17/6—இல் உள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- வைரமடை—தொப்பம்பட்டி சாலை கி.மீ.16/6—இல் உள்ள குறுகிய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டப்படும்.
- செல்லிவலசு – வெண்ணெய் கோதூர்ச் சாலை கி.மீ.0/2—இல் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- மணப்பாறை—குஜிலியம்பாறை சாலை கி.மீ.27/6—இல் பாலம் கட்டப்படும்.
- பாலவிதி – கடவூர் – அய்யலூர் சாலையில் கி.மீ.8/6—லும் மற்றும் கி.மீ.12/6—லும் பாலங்கள் கட்டப்படும்.
- இனங்கூர் நல்லூர் சாலை கி.மீ.5/10—இல் பாலம் கட்டப்படும்.

காவிரி ஆற்றின் குறுக்கே புகழூர் அருகில் தடுப்பணை

கரூர் மாவட்டம், கரூர் ஊராட்சி ஒன்றியம், புகழூர்ப் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட மீண்டும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) ரூபாய் 3 கோடி வழங்கும்.

தமிழ்காக்க அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்த கடை வள்ளல் அதியமானின் தகடூரான தருமபுரியில் இதயக்கனி கொடைவள்ளல் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா

மக்கள் நலத்திட்டங்களை சிந்தித்து வகுத்து கொண்டிருக்கிறோம்!

பொறுமையில் பூமாதேவி, பொங்கினால் கடல் சீற்றம், கருணையில் கார்மேகம், உறுதியில் குன்று, கொடுப்பதில் கற்பக விருட்சம், சிந்தனையில் சுரங்கம், துணிவில் தந்தை பெரியார், அறிவில் அறிஞர் அண்ணா, பரிவில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அத்தனையும் கலந்த அமுதத் தெளிவு, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவிஅம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியாலும் அருளாலும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதை, எங்கள் அனைவருக்கும் கிடைத்த பெரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.

அந்த வகையில், இன்று தருமம் மிகு தருமபுரியில் நடைபெறும் பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், ஏழைகளின் இதயக்கனி, எங்கள் தங்கம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னிலையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களே! வரவேற்புரையாற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர், திரு. இரா. வெங்கடேசன் அவர்களே மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நன்றியுரை ஆற்ற உள்ள தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன் அவர்களே !வருகைதந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! பரிசு பெற வந்துள்ள மாணவ மணிகளே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

வீரமும், ஆன்மிகமும், தருமமும் தன்னகத்தே கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் புண்ணிய பூமிதான் இந்த தருமபுரி மாவட்டம். தமக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கு தமிழ் வாழ்வதற்காக வழங்கிய கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் ஆட்சி பரவி இருந்த பகுதியை ‘தகடூர் நாடு’ என அழைத்தனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தகடூர் நாடு ‘கங்க நாடு’ என்று அழைக்கப்பட்டது. அதுதான் இப்போது தருமபுரி என்றழைக்கப்படுகின்றது. தமிழ் மூதாட்டி அவ்வையார் அவர்கள் புறநானூற்றுப் பாடல்களில் 23 பாடல்களில் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றிப் பாடி உள்ளார்.

இம்மன்னர், தகடூர் என்ற தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்திருக்கிறார். பல்லவர்கள், கங்கர்கள், பாணர்கள், நுளம்பர்கள், சோழர்கள், போசாளர்கள், விஜய நகரப் பேரரசுகள், மராட்டியர், அத்திமல்லர், மைசூர் அரசர்கள், உள் நாட்டு நாயக்கர்கள், ஆங்கிலேயர்கள் எனப் பலர் தருமபுரியை பல்வேறு காலகட்டங்களில் ஆண்டுள்ளார்கள். தருமபுரியைப் பற்றி சர் தாமஸ் மன்றோ அவர்கள் “இது மிகவும் ரம்மியமான இடம், இவ்விடத்தில் உள்ள ஒவ்வொரு மலையும், மரமும் எனக்கு இன்பத்தைத் தருகிறது” என்று குறிப்பிடுகின்றார். அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூண் இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிறது.

அதியமான் கோட்டையில் உள்ள காலபைரவர் கோயில், கோட்டைக் கோயில், சென்றாய பெருமாள் கோயில், தீர்த்த மலையில் அமைந்திருக்கும் அனுமந்த தீர்த்தம், தீர்த்த கிரீஸ்வரர் கோயில் போன்ற பல ஆன்மிகத் திருத்தலங்கள் தருமபுரியை அலங்கரிக்கின்றன. அஹிளா ஹதீஸ் பள்ளிவாசல், தௌகீத் பள்ளிவாசல், ஜும்மா பள்ளிவாசல், பள்ளிப்பட்டியிலுள்ள மௌன்ட் கார்மேல் சர்ச் ஆகியவை இம்மாவட்டத்திற்குச் சிறப்பு சேர்க்கின்றன. தருமபுரி அரூர் வட்டத்திலுள்ள மலைக்கோயில், பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் உள்ள வாணியாறு அணை, ஒகேனக்கல் அருவி ஆகிய சுற்றுலாத்தலங்கள் தருமபுரியில் உள்ளன.

‘இந்தியாவின் நயாகரா’ எனப் புகழப்படும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி மற்றும் இங்குள்ள ஐந்தருவி நீர்வீழ்ச்சிகள், தொங்குபாலம், பரிசல் பயணம், எண்ணெய்க் குளியல் ஆகியவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திருக்கின்றன. தீர்த்தமலையில் இரும்பு கனிமவளம் இருப்பதும் இங்குள்ள சுனைநீர் இரும்புச் சத்துடன் இருப்பதும் சிறப்பாகும். தருமபுரி மாவட்டத்தில் பலவகை உயர்ரக கிரானைட் கற்கள் கிடைக்கின்றன.தருமபுரியின் மொத்தச் சாகுபடி பரப்பளவில், மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மாம்பழம் சாகுபடி செய்யப்படுகின்றது. இதைத்தவிர தக்காளி, மிளகாய் போன்றவையும் பெருமளவில் பயிரிடப்படுகின்றன.

இந்திய விடுதலைப் போரில் தமது வாழ்வையே அர்ப்பணித்த திரு. சுப்பிரமணிய சிவா அவர்களுடைய சமாதி அமைந்துள்ள பாப்பாரப்பட்டியில் தமிழ்நாடு அரசால் நினைவிடம் எழுப்பப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. 1965ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டம் உருவாக்கப்பட்டது.

தமிழ் நாட்டுக்கு வளம் சேர்க்கும் காவிரி நதி தமிழகத்தில் நடக்கத் தொடங்குவது இந்த மாவட்டத்தில்தான்! தருமபுரி மாவட்டத்தில் இத்தகைய பிரமாண்டமான விழா இத்தனை சீரும் சிறப்புமாக சிறப்பாக நடைபெற, மாண்புமிகு அமைச்சருடன் ஒன்றிணைந்து செயலாற்றிய அனைத்து மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் ஊராட்சிக் கழக செயல் வீரர்களையும் இவர்களுடன்இணைந்து செயலாற்றிய அரசு அலுவலர்களையும் நான் இங்கு பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டர்களால் தொடங்கப் பெற்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் தலைமையேற்று நடத்தப்பெற்ற இயக்கம். தி.மு.க.விலிருந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பிரிந்தபோது, தந்தை பெரியார் அவர்கள், சத்யா ஸ்டுடியோவிலிருந்த புரட்சித் தலைவரை நேரில் சந்தித்து, சமாதானப்படுத்தி, திரும்பவும் தி.மு.க.வுடன் சேர்வதற்கு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது, எம்.ஜி,ஆர் மன்றத்தை சார்ந்த திரு. முசிறிப்புத்தன் தமது தலையில் இரத்தம் சொட்ட சொட்ட, பதட்டத்துடன் ஓடி வந்து, ‘தலைவரே நம்ம மன்றத்து ரசிகர்களை திமுகவினர் கடுமையாகத் தாக்குகிறார்கள். இனிமேல் சமாதானம் வேண்டாம், நாம் தனிக்கட்சியை தொடங்கி விடுவோம்!’’ என்று தெரிவித்து வேகமாக வெளியேறிவிடுகிறார். அந்த வகையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தது எம்.ஜி.ஆர் மன்றம்தான்! அப்படித் தொடங்கியதுதான் இந்தக் கழகம். மற்ற கட்சிகளில் எல்லாம் தலைவர் வழியில்தான் தொண்டர்கள் செல்வார்கள். ஆனால், அரசியல் வரலாற்றிலேயே, முதன்முதலாகத் தொண்டர்கள் வழியில் சென்ற ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தாம்! இந்தக் கழகத்தின் பெயரையும் கொடியையும் அறிவித்தவர்கள் கழகத் தொண்டர்கள்தாம்! அதனால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நடிகராக இருந்த போது ரசிகர்களாக இருந்தவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தலைவரானபோது தொண்டர்களாக மாறினார்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அமரரான பிறகு, அத்தொண்டர்கள் பக்தர்களாக மாறினார்கள். இப்படிப்பட்ட ஒரு தலைவரையும், இப்படிப்பட்ட தொண்டர்களையும் இனிமேல் உலகில் யாரும் பார்க்கப் போவதில்லை. எம்.ஜி.ஆர் மன்ற மாநாட்டில்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு செங்கோலை வழங்கினார்கள். தலைவர் அவர்கள் அந்தச் செங்கோலைத் திரும்பவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களிடமே வழங்கி, திராவிடத்தின் நான்காம் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தார்கள். தொண்டர்களைத் தலைவர்கள் நிலையில் வைத்து மதிக்கக்கூடியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். ஒரு சம்பவத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புதுச்சேரி மீனவர் குப்பத்தைச் சேர்ந்த இளைஞர் கோவிந்தசாமி என்பவர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தீவிர ரசிகர். தமது திருமணத்தை, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான் நடத்தி வைக்க வேண்டும் என்று கோவிந்தசாமி பிடிவாதமாக இருந்தார் புரட்சித்தலைவர் அவர்களுக்கு தம் விருப்பத்தைக் கடிதம் மூலமும் தெரிவித்திருந்தார். அந்தக் கடிதம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கவனத்திற்கே செல்லவில்லை!

ஒரு நாள் கோவிந்தசாமியின் பெற்றோரும் உறவினர்களும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ராமாவரம் தோட்டத்துக்கு வந்து பார்வையாளர்களுடன் நின்று புரட்சித் தலைவரைச் சந்தித்து அவர்களது மகன் கோவிந்தசாமியின் விருப்பத்தையும் அது நிறைவேற தாமதம் ஆவதால் பித்துபிடித்தவன்போல் இருக்கிறான் என்பதையும் தெரிவித்து, அவன் திருமணத்தை நீங்கள்தான் நடத்திவைக்க வேண்டும்'' என்று உருக்கமாகக் கூறினர்.அதற்கு, ''நான் விரைவில் புதுச்சேரிக்கு வரவிருக்கிறேன். அப்போது உங்கள் விருப்பத்தின்படி திருமணத்தை நடத்தி விடலாம்'', என்று புரட்சித் தலைவரும் ஒத்துக் கொண்டார்கள். அதன்படி, சில நாட்கள் கழித்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் புதுச்சேரிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, தாம் தங்கியிருந்த விருந்தினர் மாளிகைக்கு மணமக்களை அழைத்து வருமாறு, உதவியாளர்களிடம் சொன்னார்கள். மணமக்களை அழைத்து வரச் சென்ற உதவியாளர்களுடன் செல்வதற்கு திரு.கோவிந்தசாமி சம்மதிக்கவில்லை.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எங்கள் குப்பத்திற்கு வந்து தாலி எடுத்துக் கொடுத்தால் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தார். மாண்புமிகு புரட்சித் தலைவரின் உதவியாளர்களுக்கு கோபம் வந்தது. கடற்கரையோரம் இருக்கும் உங்கள் குப்பத்திற்கு, மணலில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் எப்படி வரமுடியும், மணலில் கார் வராது என்றார்கள். பாதையில் செடி கொடிகளை போடுகிறோம். வாருங்கள் என்றார்கள் குப்பத்துக்காரர்கள். இந்தச் செய்தி எம்.ஜி.ஆர் அவர்களின் கவனத்திற்கு சென்றது. உதவியாளர்களை அழைத்து, ''சரி நாம் அங்கேயே போகலாம்'' என்றார். உதவியாளர்கள் மணலில் இரண்டு கிலோ மீட்டர் செல்வது சிரமம் என்று சொல்லிப் பார்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கோபத்துடன், ‘‘அந்த ரசிகரை நான் பார்த்தது கூட கிடையாது. அவருக்கு நான் எந்த உதவியும் செய்ததும் இல்லை. என் மீது இவ்வளவு அன்பாக இருக்கிறார். வாருங்கள் திரு.கோவிந்தசாமி இருக்கும் குப்பத்திற்கே போகலாம்’’ என்றார்கள். பல சிரமங்களுக்கிடையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அந்த மீனவக் குப்பத்தை அடைந்த போது திரு.கோவிந்தசாமி ‘என் தெய்வமே’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவரின் காலில் விழுந்து கதறி அழுதார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் திரு.கோவிந்தசாமியைக் கட்டி அணைத்துக் கொண்டார்கள். கோவிந்தசாமியின் விருப்பத்தின்படியே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமது திருக்கரங்களினால் தாலியை எடுத்துக் கொடுத்துத் திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் கொடுத்துவிட்டு, நல்ல அறிவுரைகளையும் வழங்கி விட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் திரும்பினார்கள்.

உள்ளத்தில் நெருஞ்சிமுள்ளை வைத்துக் கொண்டு, உதட்டில் நந்தவனம் வளர்த்த தலைவர்களையெல்லாம் நாம் பார்த்துவிட்டோம்! இப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்! ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், திறந்த இதயத்தோடு மக்களோடு வாழ்ந்தவர்கள்! அப்படித்தான் தொண்டர்களும் இருக்கவேண்டுமென்று சொல்லித் தந்தவர்கள்! தொண்டர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொண்ட மாபெரும் மக்கள் தலைவர் அவர்.

ரசிகர்கள் மட்டும் அல்ல, தனக்கு உதவி செய்தவர்களையும் தன் இறுதிக் காலம் வரை மறக்காதவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். கஷ்டப்பட்ட காலங்களில், தமக்கு உதவி செய்தவர்கள் யார் யார் என்று நினைத்துப் பார்த்து, தாம் பேரும் புகழும் பெற்று வசதிபடைத்த காலத்தில், அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு உதவி செய்து தமது நன்றியை காணிக்கையாக்கியவர் நமது தலைவர் அவர்கள். தொண்டர்கள் பலமும், பொதுமக்களின் பெருத்த ஆதரவும் இருந்ததால்தான் மக்கள் திலகம் புரட்சித்தலைவர் அவர்கள் அதிமுக என்கின்ற அசைக்க முடியாத ஓர் எஃகு கோட்டையைக் கட்டி, அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார்கள்.

புரட்சித்தலைவர் அவர்கள் விரும்பி தனிக் கட்சி ஆரம்பிக்கவில்லை! அந்த நிலைக்கு அவர் ஆளாக்கப்பட்டார்! மக்களும், தொண்டர்களும்தாம் அவரை முதலமைச்சர் ஆக்கினார்கள். ஜப்பானில், ‘உலகம் சுற்றும் வாலிபன்’ படப்பிடிப்பில். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்தபோது, அங்கு எதிர்பாராமல் ‘‘கல்கண்டு’’ ஆசிரியர் திரு. தமிழ்வாணனைச் சந்திக்கிறார்கள். இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது திரு.தமிழ்வாணனிடம், ‘‘விரைவில் நான் அரசியலிலும் சாதிப்பேன்’’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கூறினார்கள். உடனே திரு.தமிழ்வாணன், ‘‘ஒருகாலும் இந்த நாட்டை நடிகன் ஆளமுடியாது’’ என்று சவால் விடுகிறார். ‘‘சாதித்தே காட்டுவேன்!’’ என

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சபதம் ஏற்றுக் கொண்டார். கடைசியில் திரு. தமிழ்வாணன் தோற்றுப் போனார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஆனார்கள்.

எந்த மாநிலத்திற்கும் கிடைக்காத முதலமைச்சராக நமக்குக் கிடைத்தார்கள். மாநிலத்தில் நடக்கும் எந்தப் பிரச்சினையையும் எளிதாகச் சமாளிக்கும் வல்லமை படைத்த முதலமைச்சராக நமக்குக் கிடைத்தார்கள். உதாரணத்திற்கு, இதே தருமபுரியில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம். 198இல் நடந்த சம்பவம். தருமபுரியில் நக்ஸல் இயக்கம் தலைதூக்க ஆரம்பித்தது. “நக்ஸல்களுக்கு எதிரான மக்கள் ஆதரவைப் பெறுகிற வேலையைச் சந்தடியில்லாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் நக்ஸல்களின் நடமாட்டங்களை மக்களிடமிருந்தே கேட்டறிய முடியும்” என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், காவல் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்கள்.

பணியில் இருந்த காவலர்கள் சிலரை, நக்ஸல் இயக்கத்தினர் கொன்றபோது எதிர்க்கட்சியினர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சிக்குக் கடுமையான கண்டனம் தெரிவித்தார்கள். “மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு இல்லை. எனவே ஆட்சியைக் கலைக்க வேண்டும்” என்று இப்போது சொல்வதைப் போலவே அப்போதும் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கவலைப்படாமல். அந்தப்பிரச்சினையை எளிதாகச் சமாளித்தார்கள். இறந்துபோன காவல் ஆய்வாளர் ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களே கலந்து கொண்டார்கள். இறுதி ஊர்வலத்தை நக்ஸல் ஆதிக்கம் இருந்த திருப்பத்தூர் நகர வீதிகளில் எல்லா மக்களும் காணும்படி உருக்கமான ஊர்வலமாக நடத்தினார்கள். இதனால் தீவிரவாதத்திற்கு எதிரான மக்களின் உணர்வு கிளர்ந்து எழுந்தது. அதுமட்டுமல்ல, இறந்துபோன காவல் ஆய்வாளர் குடும்பத்திற்கு, எதிர்க்கட்சிக்காரர்களே ஆச்சரியப்படும் அளவிற்குப் பெருந்தொகை ஒன்றை வழங்கி, அவர்கள் குடும்பத்தைக் காத்ததுடன், நக்ஸல் பிரச்சினையையும் வேரோடு அறுத்து முடிவுக்கு கொண்டு வந்தார்கள்.

1982இல் சென்னையில் கடுமையான குடிநீர்ப் பிரச்சனை ஏற்பட்டது. பிரச்சினையைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலமும், ஆந்திராவிலிருந்து கோதாவரி நதிநீரை இரயில்கள் மூலமும், சென்னைக்கு வரவழைத்து சமாளித்தார்கள். இந்த இக்கட்டான நேரத்தில்தான் சமயோசிதமாக செயல்பட்டு கிருஷ்ணா நீர் சென்னைக்கு கிடைக்க ஆந்திர அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பிரச்சினைகளை எப்படி சமாளிக்க வேண்டுமென்று எங்கள் மகத்தான தலைவர்கள் எங்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறார்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும் எங்களிடம் சொல்லிவிட்டுப் போன தாரகமந்திரம். ‘ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணுங்கள்!’ என்பதுதான். நாங்கள் மாண்புமிகு

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியால் ஆட்சிப் பொறுப்பேற்ற அந்த மணித்துளியிலிருந்து, தமிழ் நாட்டு மக்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்க அல்லும் பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கின்றோம். இதற்கு எடுத்துக்காட்டாக கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 9 ஆயிரத்து 838 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டது என்றும், அந்தச் சுழல் நிதியினை அப்போதைய துணை முதல்வர் அவர்கள் நின்று கொண்டே வழங்கினார்கள் என்றும் பெருமையாகப் பேசினார்கள்.

ஆனால், 2011–2016ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும், 26 ஆயிரத்து 461 கோடி ரூபாய் கடனுதவி, எந்தவித ஆரவாரமும் இல்லாமல் வழங்கப்பட்டது. தி.மு.க ஆட்சிக் காலத்தில் கொடுத்த 9 ஆயிரத்து 838 கோடி ரூபாய் எங்கே ? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அள்ளி கொடுத்த 26 ஆயிரத்து 461 கோடி ரூபாய் எங்கே ? இந்த இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்! மேலும், இத்திட்டத்தின் கீழ் வருடா வருடம் சுமார் 2 இலட்சத்து 25 ஆயிரம் குழுக்களுக்கு மிகாமல் சுழற்சி முறையில் கடனுதவி வழங்கப்படுகிறது. இது அகில இந்திய அளவில் மிகப்பெரிய சாதனையாகும்.

மக்கள் உங்களுக்கு ஐந்து முறை பொன்னான வாய்ப்பு கொடுத்துப் பார்த்தார்கள்! ஐந்து முறையும் நீங்கள் ஆடிய ஆட்டமும், அடித்த கொட்டமும் கொஞ்சம் நஞ்சமா ? ஐந்து முறையும், ஆட்சியை மக்கள் நலனுக்காக நீங்கள் பயன்படுத்தியிருந்தால்

அப்போதே தமிழகம் செல்வச் செழிப்புள்ள வளமான மாநிலமாக மாற்றப்பட்டிருக்கும். இதை, “ மக்கள் நலம் மக்கள் நலம் என்றே சொல்லுவார் – தம் மக்கள் நலம் ஒன்றே தான் மனதில் கொள்வார் ” என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தம் பாடலின் வாயிலாகச் சாடியிருப்பார்!

இந்த நாட்டில் தீர்க்கப்படாமலிருந்த எந்த பிரச்சினையையும் உங்களால் தீர்க்க முடியவில்லை அல்லது தீர்த்து வைக்க உங்களுக்கு எண்ணமோ, நேரமோ இல்லை. அதனால்தான் தமிழ்நாட்டுக்கு விடிவெள்ளியாக வந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏற்றங்கள் பல தந்தார்கள்! தங்களுக்குச் சாதகமான சட்டங்கள் போடுவதால் பலன் ஒன்றுமில்லை. மக்களுக்கு ஏற்ற திட்டங்கள் போடவேண்டும் என்று சமுதாயத்தின் கடைக்கோடியிலிருக்கிற ஏழை, எளிய மக்களை மையமாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற அளவிற்கு பார்த்துப் பார்த்து, திட்டங்கள் போட்டவர்கள் எங்கள் இருபெரும் தலைவர்கள். அவர்களுடைய பாசறையிலிருந்து அரசியல் மற்றும் ஆளுமைப் பயிற்சி பெற்று வந்தவர்கள் நாங்கள். மக்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்க மக்கள் நலத் திட்டங்களைச் சிந்தித்து, சிந்தித்து வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்து இது வரை 17 மாவட்டங்களுக்குச் சென்று அந்தந்த மாவட்டத்தின் தேவைகளை அறிந்து திட்டங்களைத் தீட்டி, அவற்றை உடனடியாகச் செயல்படுத்த அந்தந்த துறை அமைச்சர்களையும், அரசு அலுவலர்களையும் முடுக்கி விட்டிருக்கிறோம். இதுவரைக்கும் இந்த கூட்டத்தின் முன்பாக 17 மாவட்டத்தில் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடியிருக்கின்றோம். இப்பொழுது 18ஆவது மாவட்டமாக இன்றைக்கு தருமபுரியில் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா என்ற பெயரில் இந்த மகத்தான தலைவரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வதற்காகவே, ஒவ்வொரு மாவட்ட விழாவிலும் மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை அறிவித்து, இலட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுகின்ற அளவிற்கு விழா நடத்தி வருகின்றோம்.. அதன் தொடர்ச்சியாகத்தான், இன்று 18ஆவது மாவட்டமாக, தருமபுரி மாவட்டத்திற்குப் பல திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றோம். அவற்றை முழுமையாகக் கூறினால் நேரம் ஆகும்; எனவே, சுருக்கமாக கூறிவிடுகின்றேன்.

கடந்த ஆறு ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் பல்வேறு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் வசைபாடிக் கொண்டிருக்கின்றன. எதிர்க்கட்சித்தலைவர், “இந்த ஆட்சியிலே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, இந்த ஆட்சியிலே மக்களுக்கு என்ன திட்டங்களைக் கொடுத்திருக்கின்றார்கள், இந்த மக்களுக்கு என்ன பலன் கிடைத்திருக்கிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது தொலைக்காட்சியிலே பார்த்தாலும் அவருடைய பேட்டி இப்படித்தான் இருக்கின்றது. ஆகவே தான்,

நாங்கள் இதைக் குறிப்பிடுகின்றோம். புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் போடப்பட்ட திட்டங்கள் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு, மக்களுக்குப் பலன் கிடைத்திருக்கின்றது. அந்தத் திட்டங்களையெல்லாம் புள்ளி விவரத்தோடு சொல்லுகின்றோம்.

பொதுப்பணித் துறை சார்பில் 32 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில், 37 ஏரிகள், 79 அணைக்கட்டுகள், 6 அணைகள் மற்றும் 122 கி.மீ. நீர்வரத்துக் கால்வாய்கள் புனரமைக்கப்பட்டும், இரண்டு தடுப்பு அணைகள் கட்டப்பட்டும் உள்ளன. இவை யாவும் அம்மாவினுடைய ஆட்சியில் கட்டப்பட்டன. அம்மா விட்டுச் சென்ற பணியை, அம்மாவினுடைய இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். பென்னாகரம் பகுதி விவசாயப் பெருமக்களின் பயன்பாட்டிற்காக, 14 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நீர்நிலை ஒன்று, மத்தளப்பள்ளம் அருகே அமைத்து நீர் வழங்கு வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆயிரத்து 100 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், 1 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 21 ஏரிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் விளை நிலங்களை மேம்படுத்திக் கொள்ள இதுவரை, 28ஆயிரத்து 224 விவசாயிகளுக்கு, 16.92 இலட்சம் கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. பழுதுபார்த்தல், சீர்ப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் பென்னாகரம் வட்டத்தில் 7 ஏரிகளை 2 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில், சீர்செய்யும் பணிகள் தொடங்கப்பட உள்ளன. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் 'புளோரைடு' பாதிப்புக் குறைப்புத் திட்டம் ஆயிரத்து 928 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால், 29.05.2013 அன்று தொடக்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் தருமபுரி நகராட்சி, 10 பேரூராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி ஒன்றியங்களில் 251 ஊராட்சிகளில் உள்ள 3ஆயிரத்து 313 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் கடந்த 4 ஆண்டுகளைத் தாண்டி வெற்றிகரமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்து மக்களின் தாகத்தைத் தீர்த்து வருகின்றது. மேலும், காவிரி ஆறு மாசுபடுவதைத் தவிர்க்கும் வகையில், ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ், 101 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69 ஆயிரத்து 76 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இது சாதாரணத் திட்டமன்று! இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குச் சிந்தனையோடு நம்முடைய மாணவர்களுடைய திறமையை வளர்ப்பதற்காக விஞ்ஞானக் கல்வியை, இந்த தருமபுரி மாவட்டத்தில் கடைக்கோடியில், குடிசையில் இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் கூட உலக அளவிலே பிரசித்தி பெற்ற

மாணவனாக, அறிவுத்திறன் படைத்த மாணவர்களாகத் திகழவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள், 101 கோடி ரூபாய் இந்த மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள்.

விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின்கீழ், 36 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 340 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. கடத்தூரில் அரசு பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று 30 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 138 கோடியே 87 இலட்சம் ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது! இதன் மூலம், 27 ஆயிரத்து 924 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘பசுமை வீடுகள்’ கட்டும் திட்டத்தின்கீழ், 153 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஏழை எளிய குடும்பங்களுக்குச் சூரிய மின் சக்தியுடன் கூடிய, 9 ஆயிரத்து 135 பசுமை வீடுகள் கட்டி முடித்து, வழங்கப்பட்டுள்ளன. மேலும் 11 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 623 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ‘தாய்’ திட்டத்தின்கீழ், 8 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த குக்கிராமங்களில் 96 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 13 ஆயிரத்து 844 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 53 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 816 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 118 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரத்து 783 வீடுகள் கட்டி தரப்பட்டுள்ளன. மேலும், 72 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் 4 ஆயிரத்து 275 வீடுகளுக்கான பணிகள், பல்வேறு நிலைகளில் உள்ளன. 54 ஆயிரத்து 670 சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த ஆறு ஆண்டுகளில் ஆயிரத்து 735 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 19 கோடியே 14 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 74 ஆயிரத்து 670 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 12 ஆயிரத்து 523 விவசாயிகள் 7 ஆயிரத்து 436 ஏக்கர் சாகுபடிப் பரப்பிற்கு, 15 கோடியே 3 இலட்சம் ரூபாய் இழப்பீடு பெற்றுப் பயனடைந்துள்ளனர். நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 295 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 816.74 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 879 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 7 பாலம், சிறு பாலம், மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. படித்த பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தின்கீழ், 63 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி மற்றும் 110.54 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ், 81 ஆயிரத்து 582 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, 82 கோடியே 74 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 41 ஆயிரத்து 935 பயனாளிகளுக்கு 92 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் பாலவாடியில் 981 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட துணை மின்நிலையம் உட்பட ஆயிரத்து 44 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 33 பணிகள் என்னால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.பள்ளிக் கல்வித் துறை உட்பட 4 துறைகளின் சார்பில் 29 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில், 20 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும் பல்வேறு துறைகளின் சார்பில் 25 ஆயிரத்து 596 பயனாளிகளுக்கு 182 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற 16.02.2017 முதல் இன்று வரை மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 8 ஆயிரத்து 451 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 34 ஆயிரத்து 96 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 482 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 716 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம் 11 ஆயிரத்து 933 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 40 ஆயிரத்து 812 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை நான் ஒவ்வொரு விழாவிலும் சுருக்கமாக அறிவித்துக் கொண்டிருக்கிறேன். அரசியல் வேறுபாடு இல்லாமல் மக்கள் அனைவரும் இந்தத் திட்டங்களால் பலன் அடைந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் சிலர் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியடையாமல், அரசினால் கிடைக்கும் பலன்களை மட்டும் குறைவின்றி அனுபவித்துக் கொண்டு, அரசையே எப்போதும் குறைகூறுவதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை இறைவனாலும் திருப்திப்படுத்த முடியாது. இதைக் கூறுகிற போது, எனக்குக் கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு கிராமத்தில் அடர்ந்த இலைகளும், பூக்களும் கூடிய ஒரு மரம் இருந்தது. அம்மரத்தில் உள்ள இலைகள் இதமான காற்றினை அங்குள்ள மக்களுக்கு வழங்கி வந்தது! அம்மரத்தின் பூக்களோ, மக்கள் மனங்களைக் கவரும் வகையில் நறுமணம் மிக்கவையாக இருந்தன.

அக்கிராம மக்கள் எல்லாம், நிழலுக்காக அந்த மரத்தின் அடியில் அமர்ந்து, அந்த மரம் தரும் நறுமணம் கலந்த இதமான காற்றினை சுவாசித்தும், அனுபவித்தும் வந்தார்கள். இதனைப் பார்த்த அந்த மரத்தில் உள்ள ஒரு பூ என்னால் தான் இந்த மக்கள் இதமான, நறுமண காற்றின் சுகத்தினை அனுபவிக்கிறார்கள் என்று கர்வமாக நினைத்தது. அந்த நேரத்தில் காற்றானது பூவிடம், "நீ ரொம்ப அழகாக இருக்கிறாய். உன்னால்தான் இந்த மரத்திற்கே பெருமை! நீ இல்லையென்றால், இம்மரத்தினால் இதமான நறுமணக் காற்றை அளிக்க முடியாது. இதனால் மரத்திற்குப் பெருமை குறையும்! இத்தகைய திறமை வாய்ந்த நீ, இந்தக் குறுகிய வட்டத்திற்குள் இல்லாமல் என்னுடன் வந்தால் உன் பெருமை இந்த உலகத்திற்கே தெரியும்!" என்றது.

காற்றின் பேச்சைக் கேட்ட பூவானது, கர்வம் கொண்டது. காற்றுடன் சென்றால் தனது அழகும், பெருமையும் உலகம் முழுக்கத் தெரியும் என்றும், மரத்தைவிட உயர்ந்த

இடத்திற்குச் செல்லலாம் என்றும் கருதி மரத்திலிருந்து பிரிந்து காற்றுடன் சென்றது. ஆனால் காற்றால் எல்லா நேரமும் ஒரே சீராக வீச முடியாது. காற்றின் வேகம் குறைந்த நேரத்தில், அந்த பூவானது கிழே விழுந்தது. கீழே விழுந்த பூவானது, சிறிது நேரத்தில் வெயிலில் காய்ந்து, சருகாகிக் குப்பை மேட்டிற்குச் சென்று விட்டது. மரத்தை விட்டு பூ செல்வதனால் மரத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. ஒரு பூ சென்றால், இன்னொரு பூ துளிர்விடும். இது போன்று எவ்வளவு பூக்கள் மரத்திலிருந்து விழுந்தாலும், புதிய பூக்கள் துளிர்விட்டுக் கொண்டே இருக்கும். மரத்தில் இருக்கும் வரைக்கும்தான் பூவிற்கு மதிப்பு. மரத்தை விட்டு கீழே விழுந்துவிட்டால், அது குப்பமேட்டிற்குத்தான் செல்லும்!

அதுபோல் யார் எங்கு சென்றாலும், மரத்தைப் போல், இந்த இயக்கம் துளிர் விட்டுக் கொண்டே இருக்கும்! இயக்கத்திற்கு துரோகம் செய்துச் சென்றவர்களுக்குக் கீழே விழுந்த பூவின் கதிதான் ஏற்படும். தருமபுரி மாவட்டத்திலே இருவர் பாதை மாறிச் சென்றுவிட்டார்கள். அவர்கள் போனால் என்ன, தருமபுரி மாவட்டத்திலுள்ள கழக நிருவாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள், நாங்கள் அம்மாவின், இந்த அரசுக்கு அரணாக இருக்கின்றோம்!'' என்று குழுமி அரங்கம் நிரம்பி வழிகின்ற காட்சியே இதற்கு சாட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, எதிர்க்கட்சியெல்லாம் ஏதாவது ஒரு குறையைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். எதிர்க்கட்சித்தலைவர் எப்போது பேட்டி கொடுத்தாலும், "இந்த ஆட்சியைக் கவிழ்க்கவேண்டும், இந்த ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும்'' என்பதுதான் அவருடைய வேதவாக்காக இருந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு அவர்கள் தேடிதேடி, பூதக்கண்ணாடி வைத்து பார்க்கின்றார்கள், ஒன்றுமே கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதாவது ஒரு பிரச்சினையை எடுத்துக்கொண்டு போராட்டத்தை நடத்தி, இந்த அரசுக்கு ஒரு நெருக்கடியை கொடுத்து கெட்ட பெயர் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்பதே அவர்களுடைய நிலைப்பாடு. ஆனால், அம்மாவினுடைய அரசு எல்லா திட்டங்களையும் திறம்படச் செயல்படுத்தி மக்கள் எங்கள் பக்கம் இருக்கின்றோம் என்பதற்கு, இங்கு குழுமியுள்ள மக்களே சாட்சி என்பதை இந்த நேரத்திலே நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளேன். இன்றைக்கு, தமிழகத்திலே சீதோஷ்ண நிலை மாறிய காரணத்தினாலே, ஆங்காங்கே 'டெங்கு' காய்ச்சல் பரவிக் கொண்டிருக்கின்றது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. பருவகாலங்களில் ஏற்படும் காய்ச்சல் குறிப்பாக, 'டெங்கு' காய்ச்சல் கட்டுப்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பணிகளை மேலும் தீவிரப்படுத்த, வாரந்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமையையும் "டெங்கு தடுப்புத் தினம்'' என அறிவித்து, தூய்மைப் பணிகள், டெங்கு தடுப்பு நடவடிக்கைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றைத் துரிதப்படுத்த தமிழ்நாடு அரசு முடிவெடுத்து, அதனை 05.10.2017 முதல் தொடர்ந்து செயல்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசின் 'டெங்கு' தடுப்பு நடவடிக்கைகளுக்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என இந்த நேரத்திலே வேண்டி விரும்பிகேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசில், இந்த டெங்கு ஒழிப்பிற்காக 23.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 'செல் கவுண்ட்டர்' கருவிகள் வாங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக, 837 'செல் கவுண்ட்டர்' வாங்கப்பட்டு அரசு மருத்துவமனையிலே வழங்கப்பட்டிருக்கின்றன. இது இரத்த அணுக்களைக் கண்டுபிடிக்கக்கூடிய கருவி. இன்றைக்கு சீதோஷ்ண நிலை மாறிய காரணத்தினால், ஆங்காங்கே மழைப் பொழிவு ஏற்பட்ட காரணத்தினாலே, டெங்குக் கொசு நல்ல தண்ணீரிலிருந்துதான் உருவாகிறது. ஆகவே, அப்படி உற்பத்தியாகின்ற அந்தக் கொசு நம்மை கடிக்கின்ற பொழுது, இந்தக் காய்ச்சல் நமக்கு ஏற்படுகின்றது. ஆகவே, பொதுமக்கள், காய்ச்சல் ஏற்பட்டவுடனேயே ஆங்காங்கே இருக்கின்ற மருத்துவமனையிலே நீங்கள் ரத்த மாதிரிகளைக் கொடுத்து, உடனடியாக 40 வினாடிகளில், இந்த 'செல் கவுண்ட்டர்' கருவியின் மூலமாக உங்கள் இரத்தத்திலே இருக்கின்ற அணுக்களிலே டெங்கு காய்ச்சல் இருக்கின்றதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு உடனுக்குடன் சிசிச்சை அளிக்கின்ற முறையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. ஆகவே, இங்கே வந்திருக்கின்ற பொதுமக்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்வது, காய்ச்சல் ஏற்பட்டால் நீங்கள் உடனடியாக மருத்துவர்களை சந்தித்து, தக்க பரிசோதனை செய்து அந்த பரிசோதனையின் மூலமாக என்ன காய்ச்சல் என்று தெரிந்து, அதற்கு சிகிச்சை மேற்கொண்டால், நிச்சயமாக இந்த நோயிலிருந்து குணமடையலாம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, இன்றைக்கு அரசை பொறுத்தவரைக்கும், இந்த டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப்பட்டு வருகின்றன, தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, இந்த டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்காக, ஏற்கெனவே 25,000 மஸ்தூர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, டெங்குக் காய்ச்சலை முற்றிலும் ஒழிக்கவேண்டும் என்ற நடவடிக்கையின் மூலமாக, மேலும், இன்றைக்குக் கூடுதலாக 15,000 மஸ்தூர்கள் நியமிக்கப்பட்டு, 40,000 மஸ்தூர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமன்று; ஆங்காங்கே கொசு மருந்து அடிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 'டெங்கு'க் காய்ச்சலைக் குணப்படுத்துவதற்குத் துறையின் வாயிலாக, பேருந்து நிலையம், இரயில் நிலையம், அரசு மருத்துவமனை, பள்ளி மற்றும் மக்கள் அதிகமாகக் கூடுகின்ற இடங்களிலே நிலவேம்புச் சாறு வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக, 'டெங்கு'க் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு, அரசால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்தக் கொசுவை பொறுத்தவரைக்கும்,

நல்ல தண்ணீரில் உருவாகிறது. ஆகவே, நம் வீட்டில் தண்ணீர் வைத்திருக்கிறோம். அந்தத் தண்ணீரில்தான் இந்த கொசுவே உற்பத்தியாகின்றது. வீட்டில் தண்ணீர் வைத்துவிட்டு, சில நேரங்களில் 20 நாட்கள், 15 நாட்கள் வெளியூர் சென்றுவிடுவோம். அந்த தண்ணீரை மூடாமல் சென்றுவிட்டால், அந்த தண்ணீரில்தான், அந்த கொசு உருவாகிறது. ஆகவே, பொதுமக்கள் வீடுகளில் உள்ள நீரை மூடி வைக்க வேண்டும். அதேபோல, குளிக்கின்ற அறையில் இருக்கும் நீரை மூடி வைக்க வேண்டும். அதுபோல, குளிக்கின்ற நீர் வெளியேறுகின்ற பொழுது, அங்கே அது தேங்காமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். இப்படிப்பட்ட பகுதிகளில்தான் இந்தக் கொசு உற்பத்தியாகிறது. ஆகவே, நாம் கவனமோடு கையாள வேண்டும்! இந்தக் கொசு உற்பத்தியைத் தடுக்க வேண்டும், அப்போதுதான் இந்த 'டெங்கு'க் காய்ச்சலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமன்று, இந்தக் கொசு 21 நாள் உயிர் வாழும்! கிட்டத்தட்ட 500 மீட்டர் பறக்கக்கூடியது. இந்த ஒவ்வொரு கொசுவும் கிட்டத்தட்ட 1,500 முட்டையிடுகிறது. அந்த 21 நாளும், 1,500 முட்டையும், ஒவ்வொரு கொசுவும் அப்புறம் 1,500 முட்டையிடுகிறது. அப்படியென்றால், எந்த அளவிற்கு வேகமாக இந்தக் கொசு பரவியிருக்கிறது, உற்பத்தியாகின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, வந்திருக்கின்ற பொதுமக்கள், கழக நிருவாகிகள், தொண்டர்கள் ஆகியோர் இதுபற்றி அறியாத அனைவரிடத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆகவே, நன்னீராக இருந்தாலும், அதை மூடிவைக்க வேண்டும்! வெளியூர் சென்றால் அந்தத் தண்ணீரை அகற்றிவிட வேண்டும், அல்லது மூடிவைத்துச் செல்லவேண்டும் என்று இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமன்று; அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு 10,516 செவிலியர்கள் நியமித்திருக்கிறோம். அத்துடன் மேலும் 2,000 செவிலியர்கள் இந்த டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தேர்வு செய்ய இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமன்று; இன்றைக்கு அம்மாவின் அரசு ஏற்படுத்தப்பட்ட பிறகு, 1,113 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள், 650 சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மேலும் 744 சிறப்பு மருத்துவர்களை நியமிக்க இருக்கின்றோம். இப்படிப்பட்ட மருத்துவர்கள், செவிலியர்களெல்லாம் நியமிக்கப்பட்ட காரணத்தினாலே, இன்றைக்கு டெங்கு காய்ச்சலால் அல்லது வைரஸ் காய்ச்சலால் யார் பாதிக்கப்பட்டாலும், மருத்துவமனைக்குச் சென்றால், உடனடியாக சிகிச்சை பெறக்கூடிய அளவிற்கு அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த டெங்குக் காய்ச்சலைத் தவறாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அரசைப் பொறுத்தவரைக்கும், இந்தக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஊடக நண்பர்கள் வந்திருக்கிறார்கள், ‘டெங்கு’க் கொசு எப்படி உற்பத்தியாகிறது, அதை எவ்வாறு தடுப்பது என்பதைப்பற்றியெல்லாம் விழிப்புணர்வைக் குறும்படங்களின் மூலமாகத் தொலைக்காட்சியின் வழியாக அடிக்கடி ஒளிபரப்பி, டெங்கு காய்ச்சலைப் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு அவர்களை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், எல்லா மக்களும் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, ஊடக நண்பர்கள், இந்த டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்களும் அரசிற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே உங்களுடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் பல்வேறு கோரிக்கை வைத்தார்கள். இந்த மாவட்டம், பின்தங்கிய மாவட்டம், இந்த மாவட்டத்திற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், பின்தங்கிய மாவட்டத்திற்கென்று தனிக்கவனம் செலுத்தி, அந்த மாவட்டத்திற்குத் தேவையான அனைத்தும் செய்துதரப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அவர் ஏற்கெனவே உங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகளைப் பட்டியலிட்டு என்னிடத்தில் கொடுத்திருக்கின்றார். அரசு, அவர் கொடுத்த கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதிலே சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் கழகக் கண்மணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வாகனங்களில் பத்திரமாக ஊர் போய்ச் சேர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே!

நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

எண்ணேகொல் அணைக்கட்டில் இருந்து, 36 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்ல, புதிய கால்வாய் அமைத்தல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏற்கனவே அறிவித்துள்ளபடி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள எண்ணேகொல் அணைக்கட்டில் இருந்து ஒரு வழங்கு கால்வாய் அமைத்து தருமபுரி மாவட்டத்தில் உள்ள கேத்தனஹள்ளி ஏரி, முதலிபட்டி ஏரி, பொம்மனஹள்ளி ஏரி மற்றும் முக்குளம் ஏரி உட்பட 10 ஏரிகளுக்கும் தும்பலஹள்ளி அணைக்கும் நீர் வழங்க வழிவகை செய்யப்படும். இதன் மூலம், 1,103 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

தருமபுரி மாவட்டம், தூள்செட்டி ஏரிக்குத் தண்ணீர் எடுத்துச்செல்ல புதிய கால்வாய்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏற்கனவே அறிவித்துள்ளபடி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அலியாளம் அணைக்கட்டிலிருந்து, தருமபுரி மாவட்டம், தூள்செட்டி ஏரிக்கு நீர் வழங்குவதற்கு ஒரு புதிய பிரதான வழங்கு கால்வாய் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் 495 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

ஜெர்தலாவ் கால்வாயிலிருந்து, 14 ஏரிகள் பயன்பெறும் வகையில் ஒரு புதிய கால்வாய் அமைத்தல்

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், அஞ்சப்பள்ளி சின்னாறு அணையிலிருந்து வெளியேறும் உபரி நீர் தற்பொழுது ஜெர்தலாவ் கால்வாய் மூலம் வெளியேற்றப்பட்டு, பாசன வசதி செய்து தரப்படுகிறது. இந்த ஜெர்தலாவ் கால்வாயின் நெடுகை 5 ஆயிரம் மீட்டரிலிருந்து ஒரு புதிய வழங்கு கால்வாய் அமைப்பதன் மூலம் அதன் கீழுள்ள 14 ஏரிகளுக்கு நீர் வழங்கிட விரிவான ஆய்வு நடைபெற்று வருகிறது. ஆய்வு முடிவின்படி மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

நாகசமுத்திரம் கால்வாய் திட்டம்

★ கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புத் திட்டமான திண்டல் ஏரியின் உபரி நீர், கிரியானஹள்ளி அருகே நாகசமுத்திரம் அணைக்கட்டை அடைகிறது. இதிலிருந்து ஒரு புதிய கால்வாய் அமைத்து மொரப்பூர் பகுதியில் உள்ள 30 ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

★ தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூர் கிராமம், மாரியம்மன் கோவில் பள்ளம் அணைக்கட்டை புனரமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

தருமபுரி நகருக்குப் புதிய பேருந்து நிலையம்

★ தருமபுரி நகராட்சியில் தற்பொழுது இரண்டு பேருந்து நிலையங்கள் அருகருகே அமைந்துள்ளன. இப்பேருந்து நிலையத்துக்கு, நாளொன்றுக்கு

532 பேருந்துகள் வந்து செல்கின்றன. பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பேருந்துகளின் போக்குவரத்தால் ஏற்படும் இட நெருக்கடியைச் சமாளிக்க, ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டியுள்ளது. தருமபுரி நகருக்கு அருகில் ஏ.ரெட்டிஹள்ளி கிராமம் சோகத்தூர் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியில் 9 ஏக்கர் நிலத்தினைத் தானமாக வழங்கிட மேற்படி பகுதி மக்கள் முன்வந்துள்ளனர். மேற்படி 9 ஏக்கர் நிலத்தினை நகராட்சி ஏற்றுக் கொண்டு, அந்த இடத்தில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைத்திட தனியார் மற்றும் நகராட்சி பங்களிப்புடன் (PPP) படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, மாரண்டஅள்ளி, மகேந்திரமங்கலம், பஞ்சப்பள்ளி மற்றும் காரிமங்கலம் ஆகிய காவல் நிலையங்களை உள்ளடக்கி, பாலக்கோட்டினைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய காவல் உட்கோட்டத்தைத் தோற்றுவித்து, காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்று அமைக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு "பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம்" எனப் பெயர் சூட்டப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள பாலக்கோடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு, "பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" எனப் பெயர் சூட்டப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நல்லம்பள்ளி வட்டத்தில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு வட்ட மருத்துவமனையாகவும்,

★ காரிமங்கலம் வட்டத்தில் தற்போது இயங்கி வரும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அரசு வட்ட மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும்.

தேர்வு நிலை நகராட்சியாக உள்ள தருமபுரி நகராட்சி,
சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும்.

★ தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் இயங்கி வரும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் கீழ் நடைபெற்று வரும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அரசே ஏற்று நடத்தும்! இது அரசு, பலவகை தொழில்நுட்ப கல்லூரியாக மாற்றப்படும்!

★ தற்பொழுது தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள கல்வி மாவட்டத்தில் 287 அரசு பள்ளிகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நிர்வாக நலன் கருதி, ஒரு புதிய கல்வி மாவட்டம் அமைக்கப்படும்.

★ பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பஞ்சப்பள்ளியிலிருந்து தருமபுரி மாவட்ட எல்லை வரை செல்லும் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 3 கி.மீ. நீளமுடைய சாலையை பொதுமக்களின் போக்குவரத்து வசதி கருதி, நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்யப்படும்.

தருமபுரி மாவட்டத்திற்குப் பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்

★ சிவாடி மற்றும் தருமபுரி இரயில் நிலையங்களுக்கு இடையில், இரயில்வே கடவு எண்.38க்கு பதிலாக ஒரு புதிய சாலைக்கான மேம்பாலம் விரைவில் அமைக்கப்படும்.

★ சிவாடி மற்றும் தருமபுரி இரயில் நிலையங்களுக்கு இடையில், கடவு எண்.41க்கு பதிலாக ஒரு புதிய சாலைக்கான மேம்பாலம். சித்தேரி சாலையில் கி.மீ.1/2ல் ஒரு சிறு பாலம்.

★ பில்பருத்தி–குருபரஅள்ளிச் சாலையில் கி.மீ.12/4ல் ஒரு சிறுபாலம்.

★ அனுமன்தீர்த்தம்–பொய்யப்பட்டிச் சாலையில் கி.மீ.4/6ல் ஓர் உயர்மட்டப் பாலம்.

★ நவலை–பெரமாண்டப்பட்டிச் சாலையில் கி.மீ.4/6ல் ஓர் உயர்மட்டப் பாலம்.

★ பொம்மிடி ஆர்.எஸ். – தொப்பையாறு அணைச் சாலையில் கி.மீ.0/4ல், ஏற்கனவே உள்ள குழாய் தரைப்பாலத்திற்கு பதிலாக ஒரு புதிய பாலம்.

★ மல்லசமுத்திரம்–அனுமந்தபுரம் சாலை கி.மீ.2/10ல் ஒரு பாலம்.

அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் இடம் வழங்குதல்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரில் அமைந்துள்ள அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, தற்போது இரு வேறு இடங்களில் இயங்கி வருகிறது. மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகம் மற்றும் விளையாட்டு மைதானம் அமைக்க வனத்துறைக்கு சொந்தமான இடத்தை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம்

தருமபுரி மாவட்டத்தில் தற்போது அரசு கலைக் கல்லூரி கட்டடத்தில் இயங்கிவரும் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு, அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம், ஒரு கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும்.

வீரத் தொண்டைமான்கள் ஆண்ட புதுக்கோட்டையில்
தீரத்தமிழ் மக்களின் வீரமகன்
எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

அம்மாவினுடைய அரசே
மக்கள் பணி செய்கின்ற அரசு!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் தலைமை தாங்கி, தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே!

இந்த இனிய விழாவிலே சிறப்பான கருத்துக்களை வழங்கியுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே!

முன்னிலையுரை ஆற்றியுள்ள இந்த மாவட்டத்தின் மைந்தர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர், இந்த நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டத்தை, ஒரு மாநாடு போல் நடத்தி அனைவரது பாராட்டையும் பெற்றுவரும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே!

அவருக்கு உறுதுணையாக விளங்கியுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே. வைரமுத்து அவர்களே! வரவேற்புரை ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர், திரு. இரா. வெங்கடேசன் அவர்களே! திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ப. குமார் அவர்களே! இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எ. அன்வர்ராஜா அவர்களே! சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். செந்தில்நாதன் அவர்களே! கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. பா.ஆறுமுகம் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு. கணேஷ் அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, வருகை தந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக்கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! பரிசுகள் பெற வந்துள்ள மாணவச் செல்வங்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உங்கள் மாவட்ட அமைச்சர் திரு.விஜயபாஸ்கர் அவர்கள் அழகான பாடல் ஒன்றை பாடினார். எப்போது பார்த்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையை கிளப்பிப் பேசுவார். அதை யாரை மையமாக வைத்துப் பேசுவார் என்று சொன்னால் திரு.விஜயபாஸ்கர் அவர்களை பற்றித்தான் தான் அதிகமாக பேசுவார். அப்படிப் பேசுவருக்கு பதிலடி கொடுக்கின்ற வகையிலே அருமையான பாட்டைப் பாடினார்!

உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது என்று என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் கேட்பார். அதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், நிலைகெட்ட மனிதர்களின் நயவஞ்சக நாக்கு என்று பதில் கூறுவார். இது யாருக்கு பொருந்தும் என்பதை நீங்களே சிந்தித்து கொள்ளுங்கள்.

ஆகவே, அருமையான பாட்டை இங்கே பாடி யாருக்குப் பொருந்த வேண்டுமோ அவர்களுக்குப் பொருந்துவது மாதிரி இங்கே ஓர் அருமையான பாட்டை பாடியுள்ளார்!

கோட்டைக்கொத்தளங்கள், ஆன்மிகத்திருத்தலங்கள், சுற்றுலாத் தலங்கள் ஆகியவற்றை அதிகம் கொண்ட மாவட்டம் இந்த புதுக்கோட்டை மாவட்டமாகும்.

புதுக்கோட்டை என்றாலே, புதுக்கோட்டை சமஸ்தானமும் தொண்டைமான் பரம்பரையும்தான் இப்போதும் நம் நினைவுக்கு வருகிறது!

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 'அன்பில்' என்ற கிராமத்தில் வசித்த ஒரு பிரிவினர் குடிபெயர்ந்து வந்து, இங்குள்ள ஆலங்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியேறி வாழத்தொடங்கினர்.

அவர்கள் வீரத்திலும், கடின உழைப்பிலும் சிறந்து விளங்கியதால், அப்போது இப்பகுதியை ஆண்ட நாயக்க மன்னர்களின் படைகளில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

அவர்கள்தாம், நாளடைவில் கறம்பக்குடிப் பகுதியைத் தனித்து ஆளும் வல்லமை பெற்று, பிறகு தங்கள் ஆட்சிப் பகுதியை விரிவுப்படுத்தி, இந்த புதுக் கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆளும் தொண்டைமான்களாக உயர்ந்தார்கள்! இது தான் பிற்பாடு 'புதுக்கோட்டை சமஸ்தானம்' என்றானது.

17ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொண்டைமான் ரகுநாதா என்பவரால் ஒரு புதிய கோட்டை கட்டப்பட்டு, அதையே புதுக்கோட்டை எனப் பெயரிட்டு அழைத்து வந்தனர். பின்னாளில் அதுவே, மாவட்டத்தின் பெயராகவும் வழங்கத் தொடங்கியது.

சோழர், பாண்டியர், பல்லவர், நாயக்கர், முத்தரையர், வேளீர், தொண்டைமான், போன்ற புகழ்பெற்ற அரச பரம்பரையினர் ஆண்ட பூமி இது. 'பல்லவராயன் சீமை' என்று அழைக்கப்பட்ட கலச மங்கலம் பல்லவர்களின் ஆட்சிப்பீடமாக விளங்கியது.

புதுக்கோட்டைத் தொண்டைமான் மன்னர்கள், சொந்தமாக ஒரு நாணயத்தை வெளியிட்டார்கள். அதன் ஒருபுறத்தில் தொண்டைமான்களின் வழிபாட்டு தெய்வமாகிய அம்மன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அதுவே, புதுக்கோட்டை அம்மன் காசு என்று அழைக்கப்பட்டது.

ஆதிமனிதன் வாழ்ந்த மண் இது. அதிக அளவில் குகைக் கோயில்கள், ஆயிரத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள், தொல்லியல் பழமைச் சின்னங்கள், ரோம நாணயங்கள் போன்ற வரலாற்றுப் பின்னணி கொண்ட பழமையான மாவட்டம் இது.

பெருஞ்சாத்தன், பூதப் பாண்டியன், ஆவூர் கிழார், ஆவூர் முலம் கிழார், மதுரைக்குமரனார் முதலிய சங்கப் புலவர்கள் பிறந்து வாழ்ந்த தமிழ் மண் இந்த புதுக்கோட்டை மண்! பருத்தி, பட்டு, நல்லெண்ணெய் ஆகியவை பெருமளவில் இங்கிருந்துதான் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை வாணிக மையமாகத் திகழ்ந்ததை, டாலமி, பிலினி போன்ற மேலை நாட்டவரின் குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது.

விராலிமலை, ஆவுடையார் கோயில், திருமயம், நார்த்தாமலை, குடுமியான்மலை, திருக்கோகர்ணம், கல்யாண பிரசன்ன வெங்கடேசுவரர் ஆலயம், வேணுகோபால

சுவாமி ஆலயம், பேரையூர் பள்ளிவாசல் போன்ற இன்னும் பல வரலாற்று சிறப்பு மிக்க ஆன்மிகத் தலங்களையும், சுற்றுலா தலங்களையும் கொண்ட மாவட்டம் இது.

தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 38 பாரம்பரியமிக்க இடங்களில், ஓவியத்திற்கு புகழ் பெற்ற சித்தன்னவாசல் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது சிறப்பம்சம் ஆகும்.

1974ஆம் ஆண்டு திருச்சி மற்றும் தஞ்சை மாவட்டங்களில் சில பகுதிகளை இணைத்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், 1912ஆம் ஆண்டே புதுக்கோட்டை நகராட்சி உருவாக்கப்பட்டுவிட்டது.

முந்திரி மற்றும் கோடைகாலப் பயிர்கள் இங்கு அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமைக்குரிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களும், சுதந்திரப் போராட்ட வீரர் தீரர் சத்யமூர்த்தி அவர்களும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்தவர்கள் என்பது இந்த மாவட்டத்திற்கு கூடுதல் பெருமையாகும்.

இத்தனை சிறப்புகளையும் பெருமைகளையும் பெற்ற புதுக்கோட்டை மாவட்டத்தின் நிலை அறிந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இதை ஒரு சிறந்த மாவட்டமாக உருவாக்கியதோடு மட்டுமல்லாமல், இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோட்டையாக உருவாக்கும் பணியை எங்களிடம் ஒப்படைத்து சென்றிருக்கிறார்கள். அதனால் நாங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக் கொள்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 25.08.2015 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110இன்கீழ், அறிவித்து, ஆணையிட்டபடி, புதிய அரசு மருத்துவக் கல்லூரியினை இம்மாவட்டத்தில் திறப்பதற்காக, நான் கடந்த 09.06.2017 அன்று வருகை தந்த போது, இங்கு கடல் அலையெ மக்கள் கூடியிருந்தனர்.

சரியாக 4 மாதங்கள் கழித்து, தற்போது நிறுவனத்தலைவர், மக்கள்திலகம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கு இன்று வருகை தந்துள்ளேன். உண்மையைக் கூறவேண்டுமெனில், அப்பொழுது கூடிய கூட்டத்திற்குச் சிறிதும் குறையில்லாமல், இன்னும் சொல்லப்போனால், அதைவிட அதிகமாகவே நீங்கள் இங்கு கூடியுள்ளதைக் காணும் பொழுது, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆட்சிசெலுத்தும் எங்கள் மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை நாங்கள் உணர முடிகிறது.

இதனை நீங்கள் எங்கள் ஆட்சிக்குத் தரும் அங்கீகாரமாகவே பார்க்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், நாங்கள் தொடர்ந்து அடித்தட்டு மக்கள், நடுத்தர மக்கள் ஆகியோரின் நலன்களில் அக்கறை செலுத்தும் அரசாகவே தொடர்ந்து பாடுபடுவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இந்த மாவட்டத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமன்று; புதுக்கோட்டையை சுற்றியிருக்கும் அத்தனை பகுதி மக்களும் இதனால் பயனடைகிறார்கள். மருத்துவச் சேவையில் தமிழ்நாடு, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்கிறது!

இந்திய நாட்டிலேயே, முதன்முதலாக மாநிலத்தின் சுகாதாரத் துறைக்கெனத் தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான்.

இன்றையத் தேதிவரை, இந்த தேர்வு வாரியத்தின் மூலம் 10 ஆயிரத்து 93 மருத்துவர்கள், 9 ஆயிரத்து 190 செவிலியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பெருமையாக கூறிக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மகளிரின் சுகாதாரத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் "அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம்" என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 11 இலட்சத்து, 6 ஆயிரம் பச்சிளம் குழந்தைகள் பயனடைந்துள்ளார்கள்.

அதேபோன்று 'அம்மா மகப்பேறு சஞ்சீவித் திட்டம்', 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்', 'அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம்', ஆகியவை ஏழை, எளிய மக்களுக்கு சுகாதார சேவை வழங்கி வருவதை நாம் நன்கு அறிவோம்.

நாட்டில் சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 'தூய்மையான கிராம இயக்கம்' என்ற ஒரு மகத்தான திட்டத்தை தொடக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நோக்கம் வெற்றியடைய வேண்டுமானால், நாம் நம்முடைய கிராமத்தையும், நகரத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். இன்று, நாம் 'டெங்கு'க் காய்ச்சலின் தாக்கத்தை அனைத்து துறையினரின் கடும் உழைப்போடு முறியடித்து கொண்டு வருகிறோம்.

'டெங்கு'க் காய்ச்சல் பரவாமலிருக்க, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு விரைந்து செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், பணியாளர்கள், செவிலியர்கள் யாவரும் முனைப்புடன் அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறார்கள்.

'டெங்கு'க் காய்ச்சலை அரசு சவாலாக எடுத்து கட்டுப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்துத் துறை அலுவலர்களும், கூட்டாக ஆய்வுகள் செய்து வருகின்றனர். அரசு மருத்துவமனைகளில் கூடுதல்

மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இது மட்டுமின்றி கூடுதல் படுக்கை வசதிகள், உபகரணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசு எடுக்கும் இந்த முயற்சியும் உழைப்பும் மட்டும் போதுமானதா என்றால், அது போதாது என்றுதான் நான் கூறுவேன்! பொதுமக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்புதான் ‘டெங்கு’வை ஒழிக்கக் கூடுதல் பலத்தை அளிக்கும். அப்போதுதான், ‘டெங்கு’க் காய்ச்சலை வேகமாக ஒழிக்க முடியும்.

சுகாதாரத்திலும், கொசு ஒழிப்பிலும் பாமர மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கொசு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகளை எப்படி மேற்கொள்ளுவது என்று தெரிந்தவர்கள், தெரியாதவர்களுக்கு விளக்கி சொல்ல வேண்டும்.

தேவைப்பட்டால் இளைஞர்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், அரசு மருத்துவக் குழுவினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால், ‘டெங்கு’க் கொசுவை முற்றிலும் ஒழித்துவிட முடியும்.

எல்லாவற்றையும் அரசியலாக்கி ஆதாயம் தேடுபவர்கள், டெங்கு காய்ச்சலையும் அரசியல் ஆக்குவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை! மக்கள் சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள நாங்கள், அவர்களுக்குப் பதில் சொல்லி நேரத்தை வீணாக்காமல் விரைந்து செயல்பட்டு வருகின்றோம். அரசுக்கு ஏற்படும் பிரச்சினைகளை இரண்டு வகைகளாகப் பார்க்கலாம்.

ஒன்று இயற்கையாக ஏற்படும் பிரச்சினைகள். அதாவது திடீரென்று ஏற்படும் புயல், வெள்ளம், நில நடுக்கம், நோய் போன்ற இயற்கை இடர்பாடுகள். இரண்டாவது பிரச்சினை, அரசியல் காழ்ப்புணர்ச்சி, மக்கள் விரோத செயல்பாடுகள் போன்ற செயற்கை இடர்பாடுகள்.

இந்த இரண்டு வகைப் பிரச்சினைகளையும் சிறந்த முறையில் எதிர்கொண்டு அவற்றிலிருந்து மக்களை பத்திரமாகக் காப்பாற்றி, எந்தவித துன்பமும் ஏற்படாத அளவிற்கு ஆட்சி செய்யும் வல்லமையை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியால், சிலர் தேடித் தேடி குற்றச்சாட்டுகளை கண்டுபிடித்துக் கூறுகிறார்கள்.

மக்களுக்கு ஒரு பிரச்சினையென்றால், அதைத் தீர்க்கும் கடமையும், பொறுப்பும் எதிர்கட்சிகளுக்கும் உண்டு என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். அந்தப் பிரச்சினைகளிலிருந்து மக்களை விடுவிக்க, ஆட்சியாளர்களுக்குக் கருத்துக்களைக் கூறலாம். அதை விட்டுவிட்டு, அவதூறுகளையும், வதந்திகளையும் அள்ளிவீசி மக்களைக் குழப்பத்திலும், பீதியிலும் ஆழ்த்துகிற செயல்களைச் செய்து கொண்டிருப்பது மிகவும் தவறான செயலாகும்.

அப்படிப்பட்டவர்களை, மக்கள் புரிந்து கொள்வார்கள். தி.மு.க. மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோதெல்லாம், மக்களின் நலனைக் கருத்தில்

கொள்ளாமல், தொலைநோக்குச் சிந்தனையுமில்லாமல், மத்திய அரசின் கட்டளைக்கு எல்லாம் தலையை ஆட்டிக்கொண்டு, நீட்டுகிற கோப்புகளில் எல்லாம் கையெழுத்துப் போட்டதன் விளைவாகத்தான் இத்துணையளவு பிரச்சினைகள் இன்று இங்கே உருவாகியுள்ளன. ஆனால் இப்பொழுதுள்ள சிறு பிரச்சினைகளைக்கூட, போராட்டங்களாக வெடிக்கச் செய்து, போராட்டக்காரர்களோடு தாங்களும் சேர்ந்து பொய்யாக கோஷம் போடுவதை மக்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மக்களை ஏமாற்றி கோஷம் போட்டவர்களுக்கு ஒன்றினை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். புதுக்கோட்டை மக்கள் வாய்ப்புக் கிடைக்கும்போது, உங்கள் வாய்க்கு மட்டுமல்ல, செயலுக்கும் பூட்டுப் போடுவார்கள் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

“பொய்யும் புரட்டும் துணையாய்க்கொண்டு பிழைத்தவரெல்லாம் போனாங்க, மூலைக்கு மூலை தூக்கி எறிஞ்சோம் தலைகுனிவாக ஆனாங்க” என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தம் பாடலில் மக்கள் விரோத மனிதர்களைச் சாடியிருப்பார்கள்.

எதிர்க் கட்சிகளின் அராஜகப் போக்கை எப்படிச் சமாளிப்பது என்பதை அப்போதே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். அவர்களின் அடியைப் பின்பற்றும் எங்களுக்கும் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

அரசியல் களத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பயன்படுத்திய சமயோசித புத்திதான், அதிமுகவை இந்த அளவிற்கு வளர்த்திருக்கிறது. அதற்கு ஒரு சம்பவத்தை இங்கே நினைவுகூற விரும்புகின்றேன்.

தி.மு.க.விலிருந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நீக்கப்பட்ட போது, ரசிகர்களும், தொண்டர்களும் தமிழ் நாடு முழுவதும் கொந்தளித்தனர். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அறிவிப்பதற்கு முன்பே, தொண்டர்கள் ஆர்வமிகுதியால் மதுரையில் புதிய கட்சிக் கொடியை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் கட்சிக் கொடி என்று அறிமுகப்படுத்தி, கொடியை ஏற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் பல இடங்களிலும் அந்தக் கொடிகளை தொண்டர்கள் ஏற்றினார்கள். இது மாற்றுக் கட்சியினருக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. அந்தக் கொடிகளைக் கிழித்து எரிந்தனர். கொடிக் கம்பங்களை வெட்டிச் சாய்த்தனர். தொண்டர்களை அடித்துத் துன்புறுத்தினர். இவையெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களுக்கு மிகவும் வேதனையை அளித்தன. இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் எண்ணினார்கள்.

"எங்கள் புதிய கட்சியின் கொடியை இனிமேல் யாரும் கிழிக்கமாட்டார்கள்," என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் நம்பிக்கையோடு கூறியதற்கான காரணம், கட்சிக்கொடியை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் அறிமுகம் செய்தபோதுதான் அனைவருக்கும் தெரிந்தது.

அந்தக் கொடியின் நடுவில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த கொடி தமிழ்நாடு முழுவதும் ஏற்றப்பட்டபோது யாரும் அதை கிழிக்க துணியவில்லை. இப்படி ஒரு பிரச்சினையை எப்படி சுமூகமாகத் தீர்ப்பது என்பதை மாண்புமிகு புரட்சித்தலைவர் நன்கு அறிந்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் உடலளவில் மறைந்து 30 வருடங்கள் ஆனாலும், இன்றைக்கும் மக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறார் என்றால், அவர் தமது ரசிகர்களிடமும், தொண்டர்களிடமும், மக்களிடமும் காட்டிய அன்பும், பரிவும் தான் காரணம்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ரசிகர்கள் இருந்தார்கள் என்றால், அத்தனை ரசிகர்களையும் அவர் திருப்திபடுத்தினார்கள். சில நேரங்களில், தன்னையும் வருத்திக் கொண்டு ரசிகர்களை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறார்கள்.

இதுதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் பெற்ற வெற்றிக்குக் காரணம்! மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில். அமெரிக்காவிற்குச் சென்றிருந்தார்கள். அமெரிக்காவில், அவர் தங்கியிருந்த 'பால்டிமோர்' என்ற இடத்திலிருந்து, நியூயார்க் நகருக்கு இரயிலில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாண்புமிகு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்அவர்கள், இரயில் நிலையத்திற்குக் காரில் வந்து இறங்கிய போது , ஒரு பெண், தலைவரை நோக்கி கைக்குழந்தையுடன் வேகமாக வந்தார்.

அந்தப் பெண், எம்.ஜி.ஆர்அவர்களை வணங்கியபடி, "நீங்கள் இரயிலில் செல்ல இருப்பதை அறிந்து, உங்களைப் பார்ப்பதற்காக வெகு தொலைவில் இருந்து மூன்றரை மணி நேரம் காரை ஓட்டிக் கொண்டு வேகமாக வந்தேன். உங்களைப் பார்த்து விட்டேன். மிகவும் சந்தோஷமாக இருக்கிறது," என்று கண்களில் மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், அப்பெண்ணை அமைதிப்படுத்தி, அன்பாகப் பேசி அவரது குழந்தையை கொஞ்சியதுடன் அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டு, அப்புகைப்படத்தை அந்தப் பெண்ணின் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு புகைப்பட நிபுணரிடம் கூறி, பெண்ணையும் வாழ்த்தி அனுப்பினார்கள்.

அதற்குள் நியூயார்க் நகருக்கு செல்ல வேண்டிய இரயில் புறப்பட்டுச் சென்று விட்டது. "நீங்கள் அந்தப் பெண்ணிடம் நீண்ட நேரம் பேசியதால் இரயிலை தவறவிட்டு விட்டோம்", என்று உடன் வந்தவர் கூறினார்.

அவரைப் பார்த்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் சிரித்தபடியே, "இரயில் வரும், போகும். அந்த அம்மா என்னைப் பார்க்க, வெகு தூரத்திலிருந்து கைக்குழந்தையுடன் தனியாக மூன்றரை மணி நேரம் காரை ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவரைப் புறக்கணித்து விட்டு நான் இரயிலில் புறப்பட்டு இருந்தால், அந்த அம்மாவுக்கு பெரிய ஏமாற்றமாகியிருக்கும்! இப்போது பாருங்கள், அந்த அம்மா முகத்தில் எத்தனை சந்தோஷம்!

அமெரிக்கா வந்தும், என்னால் ஒருவரை சந்தோஷப்படுத்த முடிந்தது எவ்வளவு பெரிய விஷயம்," என்றார்கள். அத்தகைய மகத்தான தலைவர் வழியில் வந்தவர்கள்தான் நாம். எந்தப்பிரச்சினையை, யார் எழுப்பி அதை பூதாகரமாக்கினாலும், அதையெல்லாம் நாங்கள் எங்களுக்கான படிக்கட்டுகளாக மாற்றிக் கொண்டு மேலும் மேலும் மக்கள் பணிகளை தொடர்ந்து செய்வோம்.

ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை மட்டுமே கூறிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு, நாங்கள் பதில் கூறுவதில் காலத்தை வீணாக்க விரும்பவில்லை. பேச்சைக் குறைத்துக் கொண்டு, செயலில் அதிக கவனம் செலுத்துவதால்தான் நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல்வேறு திட்டங்களை அறிவிக்கவும், செயல்படுத்தவும் முடிகிறது.

நான் பதவியேற்ற நாளிலிருந்து இன்றுவரை ஒப்புதல் வழங்கிய கோப்புகளின் எண்ணிக்கையைக் கண்டு வாயடைத்து நிற்பவர்களுக்கு நான் ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றும் நூற்றுக்கணக்கான திட்டங்கள் வரிசையில் இருக்கின்றன அவையனைத்தும் விரைவில் செயல்வடிவம் பெறும் போது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நடக்கும் இந்த அரசு எத்தனை வலிமைமிக்க அரசு என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்!

கடந்த ஆறு ஆண்டுகளில், இந்த மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு செய்த சாதனைகள் ஏராளமானவை. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால், இன்றையதினம் எதிர்க்கட்சித்தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், "இந்த ஆட்சி என்ன செய்தது? ஒவ்வொரு மாவட்டத்திற்கும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறார்களே, அந்த மாவட்டத்திற்கு, இந்த அரசு என்ன சாதனை செய்தது" என்று கேள்வி கேட்கின்றார்கள். அவர்களுக்குப் பதிலளிக்கின்ற விதத்திலே, இந்த திட்டத்தை விளக்கமாக, அம்மாவினுடைய அரசு செய்த சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

105 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 78 ஆயிரத்து 28 மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கிய அரசு அம்மா அரசு. 1 இலட்சத்து, ஆயிரத்து 740 மாணாக்கர்களுக்கு, விலையில்லா மிதிவண்டிகள், திருமண உதவி திட்டத்தின்கீழ், 24 ஆயிரத்து 865 பெண்களுக்கு 84 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 99.47 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. ஏழை குடும்பத்துப் பெண்கள் உரிய நேரத்திலே திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் இந்த திட்டம்.

மேலும், 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட'த்தின்கீழ், 6 ஆயிரத்து 218 பயனாளிகளுக்கு 9 கோடியே 76 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்ட'தின்கீழ், 54 ஆயிரத்து 495 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 67 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

30 ஆயிரத்து 46 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு, 612 கோடியே 37 இலட்சம் ரூபாய் வங்கிகள் மூலம் நேரடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது!

கறம்பக்குடியில், புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கந்தர்வகோட்டையில் புதிய பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 44 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 411 குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 76 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 இடங்களில் புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 918 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 5 இடங்களில், புதிய துணை மின் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை 'நபார்டு' மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ், 24 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் 21 பாலங்கள், சாலைப் பணிகள், சிறு பாலப்பணிகள் மற்றும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவின்கீழ், 79 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 252 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 173 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழை எளிய குடும்பங்களுக்குச் சூரிய மின் சக்தியுடன் கூடிய 10 ஆயிரத்து 298 பசுமை வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

'தாய்' திட்டத்தின்கீழ், 497 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 4ஆயிரத்து 87 குக்கிராமங்களில் 161 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9 ஆயிரத்து 396 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணமாக, 89ஆயிரத்து 423 விவசாயிகளுக்கு 81 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

மேலும், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ், 82 ஆயிரத்து 525 விவசாயிகளின் 1 இலட்சத்து 67 ஆயிரத்து 82 ஏக்கர் நிலம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை பாதிப்படைந்த 57 ஆயிரத்து 793 விவசாயிகளுக்கு, 138 கோடியே 4 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 105 கோடி ரூபாய் விவசாயிகளின் பயிர்க் கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 34 ஆயிரத்து 904 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், 3 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் 113 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் 10 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ், 12 இலட்சத்து 80 ஆயிரத்து 205 கன மீட்டர் வண்டல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 11 ஆயிரத்து 260 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

‘பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட’த்தின்கீழ், 11ஆயிரத்து 675 வீடுகள் 128 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டது. ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2 ஆயிரத்து 503 பணிகள், 20 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கட்டுமான பணிகளுக்கென்று, 33 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை முடிந்த பணிகள். இதை எதற்காக சொல்கிறேனென்றால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சிகள் நம்முடைய அரசை விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார்கள். விமர்சனம் செய்கின்றவர்களுக்கு புள்ளிவிவரத்தோடு பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களது நூற்றாண்டு நிகழ்ச்சியின் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நான் குறிப்பிட்ட அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே,யார்கேட்டாலும்,இவற்றைச் சொல்லலாம், ஆகவே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கண்ட கனவை, புரட்சித்தலைவி அம்மா நிறைவேற்றினார்கள்! புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை அம்மாவினுடைய இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதற்கு இதுவே சாட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உங்கள் மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 616 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட குடிநீர் திட்டங்கள் உட்பட 646 கோடியே 26 இலட்சம் மதிப்பிலான 70 பணிகள் என்னால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் முடிவடையும் பொழுது, புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை முழுதுமாகத் தீர்க்கப்பட்டிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுத்துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 புதிய திட்டங்களுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். பல்வேறு துறைகளில் சார்பில் 189 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, 31 ஆயிரத்து 918 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 9ஆயிரத்து 802 கோடியே 27இலட்சம் ரூபாய் மதிப்பிலான 34ஆயிரத்து 710 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும் 3 ஆயிரத்து 511 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 736 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 13 ஆயிரத்து 313 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 41 ஆயிரத்து 446 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களில், ஆயிரக்கணக்கான திட்டங்களைத் தீட்டினாலும், அவற்றைப் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அரசுப் பணியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

அவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள சுமார் 12 இலட்சம் அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்கும் வகையில், ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு அவற்றை அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இது மட்டுமல்ல, ஏழை, எளிய மக்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்கள் கடினமாக உழைத்துச் சம்பாதித்து வாங்கியுள்ள வரன்முறைப்படுத்தாத மனைப் பிரிவுகள் / மனைகள் ஆகியவற்றை வரன்முறைப்படுத்த “அனுமதியற்ற மனைப் பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்தும்” ஒரு புதிய திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதற்கான அனுமதிக் கட்டணங்களும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது நிச்சயம் ஏழை, எளிய மக்களின் வயிற்றில் பால் வார்க்கும் என்பதில் சந்தேகமில்லை!

எதிர்கட்சிகள் என்றால், ஆளுங்கட்சியின் ஒவ்வொரு அசைவுகளையும் அரசியல் ஆக்கி குறை கூறிக்கொண்டே இருக்கவேண்டும்; அதுதான் எதிர்கட்சிகளின் இலக்கணம் என்ற மாய பிம்பத்தை உருவாக்கி விட்டார்கள்! எதிர்கட்சிக்காரர்களின் கண்களுக்கு ஆளுங்கட்சியின் ஆக்கப்பூர்வமான திட்டங்களும், செயல்களும் கூட கெட்டதாகவே தெரிகின்றன என்றால், குறைபாடு அவர்களின் கண்களில்தான் இருக்க வேண்டும் அல்லது அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியிடம் தான் இருக்கவேண்டும்!

கண்டதெற்கெல்லாம் ஆளுங்கட்சியை குறைகூறுபவர்கள், தாங்கள் ஆளுங்கட்சியாக இருந்த காலத்தில் செய்த தவறுகள்தாம், இப்போது அவர்களின் கண்களுக்கு முன்னால், அழுக்குக் கண்ணாடியாக இருந்து, நல்லவற்றைக்கூட அழுக்காகக் காட்டுகிறது!

முதலில் அழுக்கு எங்கே இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அதைச் சுத்தப்படுத்த வேண்டும். இதை கூறும்பொழுது எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. புதிதாகத் திருமணமான ஒரு தம்பதியினர் ஒரு நகரத்துக்கு குடியேறினார்கள்.

அடுத்த நாள் காலையில் இருவரும் அவர்களது வீட்டின் ஒரு அறையில் அமர்ந்து தேநீர் குடித்துக் கொண்டிருக்கும் போது, பக்கத்து வீட்டுப் பெண், துணிகளைத் துவைத்து காயப் போட்டுக்கொண்டிருப்பது ஜன்னல் வழியாக தெரிந்தது.

அதைப் பார்த்த மனைவி கணவனிடம், “அங்கே பாருங்கள் அந்த பொண்ணுக்கு துணி துவைக்கவே தெரியவில்லை. துணியெல்லாம் அழுக்காக கருப்பு புள்ளிகளாக இருக்கின்றன” என்று கூறினாள்!

ஜன்னல் வழியே பார்த்த கணவன், மனைவியிடம் ஒன்றுமே சொல்லவில்லை. இப்படியே, பக்கத்து வீட்டு பெண் துணிகளைத் துவைத்து காயப்போடுவதும், அதை ஜன்னல் வழியாக மனைவி பார்த்து அவளுக்கு துணி துவைக்கவே தெரியவில்லை

என்று சொல்வதும், அதற்கு கணவன் ஒன்றுமே சொல்லாமல் இருப்பதும் பல நாட்களாகவே நடந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் மனைவி மிகவும் ஆச்சரியமாகக் கணவனிடம் சொன்னாள், ''இங்க பாருங்க, பக்கத்து வீட்டு பொண்ணுக்கு இப்போதுதான் துணி துவைக்க தெரிந்து இருக்கிறது, ஒரு புள்ளிகூட இல்லாமல் துணிகளை சுத்தமாக துவைத்து காயப்போட்டிருக்கிறாள்'' என்றாள்.

அதற்கு கணவன், ''அது வேறு ஒன்றும் இல்லை இன்றைக்கு காலையில்தான் நம்ம வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை எல்லாம் நான் துடைத்தேன்,'' என்றான்.

இப்படித்தான் பலர் தங்கள் வீட்டு அழுக்குக் கண்ணாடியைத் துடைக்காமல், அடுத்தவீட்டில்இருக்கும்தூய்மையை 'அழுக்கு' என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்!

கருப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் பார்ப்பதெல்லாம் கருப்பாகத்தான் தெரியும். சிவப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்தால் பார்ப்பதெல்லாம் சிவப்பாகத்தான் தெரியும். நிறமில்லாத சாதாரண கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்த்தால்தான் பார்க்கும் காட்சிகள் உண்மையாகத் தெரியும்! குறை கூறுபவர்கள் இதை நன்கு புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.

எதிர்க்கட்சித்தலைவர் அடிக்கடி இப்பொழுது விமர்சனம் செய்து கொண்டிருக்கின்றார். இன்றைக்கு ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சி 'டெங்கு' ஆட்சி என்று சொன்னார். அதற்கு மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. ஓ.எஸ்.மணியன் அவர்கள் அவருடைய ஆட்சி என்ன ஆட்சி என்பதை அழகாகச் சொன்னார், அதை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த ஆட்சியைக் களங்கப்படுத்துவதற்காக இப்படிப்பட்ட கருத்தைச் சொல்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்கு மக்கள் பணி செய்வதிலே முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கின்றது.

டெங்குகாய்ச்சலைப்பொறுத்தவரைக்கும்,இன்றைக்கு'டெங்கு'கொசுவிலிலிந்து அந்தக் காய்ச்சல் ஏற்படுகின்றது. இந்த 'டெங்கு' கொசு நல்ல தண்ணீரில் வளருகிறது, உருவாகிறது. பொதுமக்கள் தங்கள் வீடுகளிலே சேமித்து வைக்கும் தண்ணீரை மூடி வைக்கவேண்டும். தண்ணீரை மூடிவைக்காவிட்டால், அல்லது சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைக்காவிட்டால், பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே தேங்கி நின்றால், அந்த 'டெங்கு' கொசு அங்கேயெல்லாம் முட்டையிட்டு, ஏடிஎஸ் என்ற புழு உற்பத்தியாகி, அதன் மூலமாக, கொசு அங்கே உருவாகின்றது. ஒரு கொசு 1,500 முட்டைகளையிடுகிறது. இப்படி ஒரு கொசு, 1,500 முட்டையிடும்பொழுது மீண்டும் அது கொசு உற்பத்தியானால், எவ்வளவு உற்பத்தியாகும் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சாக்கடை நீரிலிருந்தோ, அந்தக் குப்பையிலிருந்தோதான் அந்தக் கொசு

உருவாகிறது, அது கடித்துத்தான் இந்தக் காய்ச்சல் வருகிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நல்ல தண்ணீரிலிருந்துதான் இந்தக் கொசு உருவாகிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கினால்தான் கொசு ஒழிப்புத் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியும். அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு முழுமூச்சுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து எல்லா மாவட்டத்திற்கும் சென்று அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து, மாவட்ட நிருவாகத்தோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். காய்ச்சலில் யாராவது பாதிக்கப்பட்டால், சிகிச்சை அளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு, இந்தக் காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறது இந்த அம்மாவினுடைய அரசு. அதுமட்டுமல்ல. எந்தக் காய்ச்சல் வந்தாலும், அந்தக் காய்ச்சல் ஏற்பட்டவுடனேயே அருகாமையில் இருக்கின்ற மருத்துவர்களை அணுகி, இரத்தப்பரிசோதனை செய்து, என்ன காய்ச்சல் என்று கண்டறிந்து, அதற்கேற்றவாறு சிகிச்சை எடுத்துக் கொண்டால் நிச்சயமாக குணமடையலாம். அதுமட்டுமல்ல, இதைக் கட்டுப்படுத்துவதற்காக அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இன்றைக்கு ஆங்காங்கே கொசு மருந்துகள் அடிக்கப்பட்டு வருகின்றன. சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக, இன்றைக்கு ஆங்காங்கே விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு பல்வேறு இடங்களில், மருத்துவமனை, பள்ளிகள், பேருந்து நிலையம், இரயில் நிலையம் போன்ற மக்கள் அதிகமாக கூடுகின்ற பகுதிகளில் நிலவேம்புக் கஷாயம் அரசின் மூலமாக இலவசமாகக் கொடுக்கப்பட்டு, இந்த டெங்குக் காய்ச்சலைக் குணப்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு காய்ச்சலை ஒழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, சீதோஷ்ண நிலை மாறுபடுகின்றபொழுது, இப்படிப்பட்ட காய்ச்சல் ஏற்படுகின்றது. இதனை, பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்போடு அம்மாவினுடைய அரசால் இந்தக் கொசு ஒழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனை வைத்து பலபேர் அரசியலாக்கப் பார்க்கிறார்கள். இன்றைக்கு அரசியலாக்குவது இதனைத்தான்; வேறு ஒன்றுமே கிடைக்கவில்லை! அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே பருவமழை நன்றாக பெய்து கொண்டிருக்கிறது. 25 ஆண்டுகாலமாக பாலாற்றிலே தண்ணீர் வரவில்லை. இன்றைக்கு பாலாற்றில் தண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. தமிழ்நாடு முழுவதுமுள்ள விவசாயப் பெருங்குடிமக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். மேட்டூர் அணையின் நீர்மட்டம் 98 அடிக்கு வந்துவிட்டது. நான் வருகின்றபொழுது சொன்னார்கள், 24000 கனஅடி நீர், அணைக்கு வந்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஒரு நான்கைந்து நாட்களில் இதேபோல் தண்ணீர் வந்தால் அணை நிரம்பும்.

அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுடைய பிரச்சினைகள் முழுமையாக தீர்த்து வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள், விவசாயம் செய்வதற்கான பயிர்க்கடன் இன்றைக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்கப்படுகின்றது. விவசாயிகளுக்கு விதைகள், உரம் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. தகுந்த நேரத்திலே அனைத்து வசதிகளும் விவசாயப் பெருங்குடிமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் விவசாயிகள் பெரும்மகிழ்ச்சி அடைகிறார்கள்.

குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக, ஆங்காங்கே உள்ள ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல்மண்ணை, விவசாயிகள் இலவசமாக அள்ளிக் கொள்ளலாம் என்ற ஆணையை நாங்கள் வெளியிட்டோம். அதன் மூலமாக, ஏரிகள், குளங்களிலே விவசாயப் பெருமக்கள் வண்டல் மண்ணை அள்ளி, அவர்களது நிலத்திற்கு இயற்கை உரமாக இட்டிருக்கின்றார்கள். அவர்கள் வண்டல்மண் அள்ளிய காரணத்தினால், குளங்கள் ஆழப்பட்டன. இன்றைக்கு பருவமழை பெய்த காரணத்தினாலே, அந்தக் குளத்திலே அதிகமான நீர் இருப்பைப் பார்க்கின்றோம். ஆகவே, குடிமராமத்துத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தைத் தந்த அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த புதுக்கோட்டை மாவட்டம் வீர இளைஞர்கள் நிறைந்த மாவட்டம்! ஜல்லிக்கட்டு இந்த மாவட்டத்திலே சிறந்து விளங்குகின்ற ஒரு வீரவிளையாட்டு. இங்கே மாண்புமிகு அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த புதுக்கோட்டை மாவட்டத்திலே, 80 இடங்களிலே ஜல்லிக்கட்டு விளையாட்டு நடைபெற்றது. இந்த வீரவிளையாட்டினை விளையாடி வரும் வீரர்கள் நிறைந்த மாவட்டம் இந்த மாவட்டம். இந்த மாவட்டத்தில், சித்தன்னவாசல், திருமயிலம் கோட்டை, கடற்கரை ஓரமாக மீனவர்கள் வசிக்கின்ற பிரசித்தி பெற்ற இந்த இடங்களிலெல்லாம் வீரவிளையாட்டான, இந்த ஜல்லிக்கட்டு விளையாட்டு மிக பிரம்மாண்டமாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

நாங்கள் இந்த அரங்கங்களை எல்லாம் பார்த்தோம். இந்த அரங்கங்கள் எல்லாம் எதற்காக அமைந்திருக்கின்றன என்று சொன்னால், எதிர்க்கட்சியெல்லாம், இன்றைக்கு இந்த ஆட்சி என்ன சாதனை செய்தது என்று கேள்வி கேட்கிறார்கள், அவர்களுக்கு பதில் சொல்கின்ற விதத்திலே, 23 அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த 23 அரங்குகளிலும், அம்மாவினுடைய அரசு என்ன சாதனை செய்திருக்கின்றது என்பதை நிரூபித்துக் காண்பித்துக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு துறையிலும் என்னென்ன சாதனை செய்திருக்கின்றோம் என்பதை இந்த அரங்கத்திலேயிருந்து பார்த்துக் கொள்ளலாம். இங்கே ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்திருக்கிறீர்கள். அத்தனை பேரும் அம்மாவினுடைய அரசு ஒவ்வொரு துறையிலும்

என்ன சாதனை படைத்திருக்கிறது என்பதை இந்த அரங்குகள் வாயிலாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, எதிர்க்கட்சிகள் சொல்வது அத்தனையும் பொய். அம்மாவினுடைய அரசு ஒன்றுதான் மக்கள் பணி செய்கின்ற அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களைக் கொடுக்கின்ற அரசு, எந்தத் திட்டங்கள் மக்களுக்கு நன்மை பயக்கின்றதோ அவற்றை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உங்கள் மாவட்ட அமைச்சரோடு சென்று பார்க்கின்றபொழுது, புதுக்கோட்டை பாஸ்கரன் அவர்களது காளையைப் பார்த்தோம். மிகச் சிறப்பாக ஒரு நல்ல உறுதியோடு, பார்ப்பதற்கு அழகாக ஜல்லிக்கட்டு நடக்கின்றபொழுது அந்தக் காளைக்கென்று தனிப் பெருமை இருப்பதாக அவர் குறிப்பிட்டார். என்றைக்கும் இந்த மண்ணிலே ஜல்லிக்கட்டு நிலைத்து நிற்கும், அந்த விளையாட்டு வீரர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் விஜயபாஸ்கர் அவர்களும், உங்கள் மாவட்டச் செயலாளர், வீட்டுவசதியுனுடைய தலைவரும், சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். ஒருசில கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்ற செய்தியைத் தெரிவித்து, அவை எவைஎவை என்பதை உங்களிடத்திலே வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. இதுவரை 18 கூட்டங்கள் முடிவுற்றுள்ளன. 19ஆவது கூட்டம் நடைபெற்று வருகிறது.

விழா முடிந்து பொதுமக்களும், தொண்டர்களும், மகளிரும், இளைஞர்களும், பத்திரமாக வீடுபோய்ச் சேரவேண்டும். வாகனத்தில் செல்பவர்கள் கவனமாகச் செல்லவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்!

இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே!

இன்றும் நமதே!

நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

திருவெப்பூரில் சாலை மேம்பாலம்

முசிறி – குளித்தலை – சேதுபாவசத்திரம் சாலையில் இரயில்வே கடவு எண் 376க்கு பதிலாக வெள்ளனூர் மற்றும் புதுக்கோட்டை இரயில் நிலையங்களுக்கு இடையில் திருவெப்பூரில் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.இப்பணியை இரயில்வே துறையின் பங்களிப்புடன் செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி விரைவில் கோரப்படும்.

கருவேப்பிலான் பகுதியில் சாலை மேம்பாலம்

திருச்சி – புதுக்கோட்டை – இராமநாதபுரம் சாலையில் இரயில்வே கடவு எண் 372க்குப் பதிலாக வெள்ளனூர் மற்றும் புதுக்கோட்டை இரயில் நிலையங்களுக்கு இடையில் கருவேப்பிலான் பகுதியில் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இப்பணியை இரயில்வே துறையின் பங்களிப்புடன் செயல்படுத்த, மத்திய அரசின் அனுமதி விரைவில் கோரப்படும்.

புதிய நகராட்சிகள்

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி மற்றும் இலுப்பூர் பேரூராட்சிகளை விதிமுறைகளுக்கு உட்பட்டு, நகராட்சிகளாகத் தரம் உயர்த்திட, பரிசீலனை செய்யப்படும்.

புதுக்கோட்டையில் உள்ள அரசு கலைக் கல்லூரிகளுக்குப் புதிய வகுப்பறைகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை நகரில் இயங்கிவரும் அரசு மகளிர் கலைக் கல்லூரியில், தற்போது படிக்கும் மாணவிகள் வசதிக்காக, புதியதாக 10 வகுப்பறை கட்டடங்களும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்டித் தரப்படும். மேலும், மாமன்னர் கலைக்கல்லூரிக்கு, 16 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வுக் கூடங்களும், அரசு கல்வியியல் கல்லூரிக்கு, 5 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வுக் கூடங்களும் இந்த ஆண்டே கட்டித் தரப்படும்.

விராலிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ஒரு புதிய மலைப்பாதை அமைத்துத் தரப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு புண்ணியத் தலமாகும். பொதுமக்களும் ஆன்மிக அன்பர்களும் சுவாமியைத் தரிசனம் செய்ய கோயில் படிகளையே பயன்படுத்த வேண்டியுள்ளது. வயதானவர்களுக்கும் சிறுவர்களுக்கும் படியேறிச் சென்று சுவாமியைத் தரிசனம் செய்வது மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, மக்கள் நலன் கருதி வாகனங்களில் எளிதாக இந்தத் திருக்கோயிலுக்குச் சென்றுவர, ஒரு புதிய மலைப்பாதை அமைத்துத் தரப்படும்.

புதிய துணைக்கோள் நகரம்

புதுக்கோட்டை மாவட்டம், முள்ளூர் ஊராட்சிப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், ஒரு புதிய துணைக்கோள் நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய நடவடிக்கை எடுக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கீழ்க்கண்ட
புதிய பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் அமைக்கப்படும்

- ★ வனியம்பட்டி – மணியம்பள்ளம் சாலையில் ஒரு புதிய உயர்மட்ட பாலம்
- ★ திருநல்லூர் – விராலிமலை சாலையில் ஒரு புதிய உயர்மட்ட பாலம்
- ★ தேசிய நெடுஞ்சாலை 210–லிருந்து மாத்தூர் சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ வைத்தூர் சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ பெருமநாடு – கோனையூர் சாலையிலிருந்து அத்தங்காடு – திருநாட்டம்பட்டி செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ ஆவுடையார்கோவில் – ஒக்கூர் சாலையில் 2 புதிய பாலங்கள் கட்டப்படும்.
- ★ முத்துவலக்குடி – பட்டமுடையான் சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ ஆவுடையார்கோவில் – கோட்டைப்பட்டினம் சாலை முதல், உடையார் கோயில் வரை செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ திருக்காட்டுப்பள்ளி – செங்கிப்பட்டி சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ வல்லாத்திரக்கோட்டை – வண்டார்கோட்டை சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ கீழநிலைக்கோட்டை – உசிலம்பட்டி சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ பொன்னமராவதி – உலகம்பட்டி சாலை முதல் முருகப்பட்டி வரை செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம் கோட்டைக்காடு சாலையில் ஒரு புதிய பாலம்
- ★ நிலையூர் – ஏரிப்புரக்கரை சாலையில் ஒரு புதிய பாலம் ஆகியவை கட்டப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
14.10.2017 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

வியாபாரம் செழிக்கும் வணிகநகர் விருதுநகரில், திரைத்துறையின் உயர் நாயகன் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

மக்களுக்கு நாளைய தேவையை நேற்றே முடித்தவர்கள் நாங்கள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு ஆர். வெங்கடேசன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ராதாகிருஷ்ணன் அவர்களே! திரு. ஆ. அன்வர் ராஜா அவர்களே! திருமதி மு. வசந்தி அவர்களே! சட்டமன்ற உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நன்றியுரை ஆற்ற உள்ள விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ. சிவஞானம் அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உழைப்பாளிகள் நகரம் என்றும், ‘குட்டி ஜப்பான்’ என்றும் அழைக்கப்படும் சிவகாசி நகரில் நடைபெறும் மாண்புமிகு புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏனெனில், படத்தில் மட்டுமின்றி, நிஜ வாழ்க்கையிலும் தொழிலாளர்களின் முன்னேற்றத்தையே பெரிதும் போற்றியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

அப்படிப்பட்ட உழைப்பாளிகள் நிறைந்த ஊரான சிவகாசி என்றாலே நம் நினைவிற்கு வருவது பட்டாசுகள். வருடம் முழுவதும் அயராது பாடுபட்டு, தீபாவளி அன்று நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் தீபாவளி பண்டிகையைக் கொண்டாட தங்களது முழு உழைப்பையும் நல்கும் தொழிலாளர் நண்பர்களை நான் பாராட்டுகிறேன்!

இதனால் உங்களது உடல் நலம் பாதிக்கப்படும். எதிர்பாராத விதமாக ஏதேனும் விபத்து ஏற்பட்டால், தங்களது இன்னுயிரையே இழக்க நேரிடும் என்பதை உணர்ந்திருந்தாலும், வருடம் முழுவதும் உழைத்து, பட்டாசுகள் தயாரித்து, அப்பட்டாசுகளை நாடு முழுவதும் உள்ள சிறுவர் சிறுமியர்கள் வெடித்து மகிழும்போது, தாமும் மகிழ்பவர்கள்தான் சிவகாசித் தொழிலாளர்கள்!

அதுபோலவே, சிவகாசி என்றால் நம் நினைவிற்கு வருவது பட்டாசுகளுடன், காலண்டர், டைரியும் ஆகும். இந்தியாவிலேயே, அச்சுத் தொழிலில், பல புதுமைகளைப் புகுத்தி, வண்ண வண்ணக் காலண்டர்கள், அனைத்து விலைகளிலும் டைரிகள், தேர்தல் காலத்தில் தேவைப்படும் வண்ண வண்ண ‘போஸ்டர்கள்’, வியாபாரப் போஸ்டர்கள் என நம் அனைவருக்கும் தேவைப்படும் நாட்காட்டிகள், மாத காலண்டர்கள், டைரிகள் போன்றவற்றை மிக நேர்த்தியாக அச்சிட்டு வழங்கும் நகரம் நமது சிவகாசி ஆகும்.

‘ஆஃப்செட்’ எனப்படும் புதுவகையான தொழில்நுட்பத்தை – அச்சுத்தொழிலில் புகுத்தி பல சாதனைகளைப் படைத்தவர்கள் நமது சிவகாசி தொழிலாளர்கள். இம்மாவட்டத்தில் உள்ள, குறிப்பாக சிவகாசியில் உள்ள பட்டாசு தயாரிக்கும் தொழிலாளர் தோழர்களுக்கும், அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் தோழர்களுக்கும், இந்நேரத்தில் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘தொழிலாளர் நகரம்’ சிவகாசி என்றால், ‘வியாபார நகரம்’ – விருதுநகர் ஆகும். வெளியூர் வணிகர்கள் தங்குமிடமாகவும், வியாபாரப் பேட்டையாகவும் இருந்த விருதுபட்டி என்ற ஒரு சிறிய கிராமம்தான் 18ஆம் நூற்றாண்டில் விருதுநகர் என்ற ஒரு நகரமாக உருவெடுத்தது என்பார்கள்.

கடந்த 2015ஆம் ஆண்டு விருதுநகர் நகராட்சி தனது நூற்றாண்டைக் கொண்டாடி பெருமையடைந்திருக்கிறது. இந்தியா மற்றும் மேலை நாடுகளுக்கு விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் சந்தையாகவும், வியாபாரத் தலைநகரமாகவும் விருதுநகர் இருந்த போது, பஞ்சு, பாக்கு, புகையிலை, காபி, தேயிலை, ஏலக்காய், சிக்கரி, மிளகாய், மல்லி, எண்ணெய் வித்துகள், தானிய வகைகள் என அனைத்து வகை வியாபாரத் தொழில்களும் சிறப்பாக நடைபெற்றன.

நூற்றாண்டுகள் கடந்தும், இப்போதும் இப்பெருமை தொடர்கிறது. விருதுநகர் வியாபாரிகள் நேர்மையானவர்கள் என்று புகழப்படுபவர்கள். “மக்களைப் பெற்ற மகராசி” என்ற படத்தில் வரும் மணப்பாறை மாடு கட்டி, மாயவரம் ஏருபூட்டி என்ற பாட்டில் வரும் “பொதிய ஏத்தி வண்டியிலே, பொள்ளாச்சி சந்தையிலே, விருதுநகர் வியாபாரிக்கு செல்லக்கண்ணு, நீ வித்து போட்டுப் பணத்தை எண்ணு செல்லக்கண்ணு” என்ற கவிஞர் மருதகாசியின் பாடல் விருதுநகர் வியாபாரிகளை நேர்மையானவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

விருதுநகர் மாவட்டத்தில், விவசாயம், பட்டாசு, தீப்பெட்டி, அச்சு, ஸ்பின்னிங் மற்றும் விசைத்தறித் தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பொதுவாக விருதுநகர் மாவட்டம் புராதன பெருமையும், ஆன்மிகப் புனிதமும், அரசியல் வரலாறும் கொண்ட மாவட்டமாகும்.

மூன்று தமிழ்ச்சங்கங்களிலும் இடம் பெற்ற புலவர்களான முடக்கோரனார், பொற்கொல்லன் வெண்ணகனார், ஆதிரேயன் ஆகியோர் விருதுநகரில் உள்ள திருத்தங்கலில் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது. பகவான் ஸ்ரீரமண மகரிஷி அவதரித்த திருச்சுழி, விருதுநகர் மாவட்டத்தில்தான் உள்ளது.

விருதுநகர் மாவட்டம் பெருந்தலைவர் காமராஜரை இந்த உலகுக்குத் தந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பல பிரதமர்களை இந்தியாவுக்குத் தந்து ‘கிங்மேக்கர்’ என்று புகழப் பெற்றார்.

‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்ட வேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் இந்த விருதுநகர் மாவட்டத்தின் மைந்தராவார்!

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், திருச்சுழி திருமேனிநாதர் திருக்கோயில், சாத்தூர் இருக்கன்குடி மாரியம்மன் கோயில், இராஜபாளையம் அய்யனார் ஆலயம், திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் கோயில் போன்ற புகழ்பெற்ற திருக்கோயில்களும், மதநல்லிணக்கத்தை வலியுறுத்தும் சவேரியார் தேவாலயம் போன்ற ஆன்மிகத் திருத்தலங்களும் விருதுநகருக்கு புனிதத்தன்மையைத் தருகின்றன.

பிளவக்கல் அணை, சதுரகிரி சஞ்சீவிமலை, செண்பகத்தோப்பு காட்டு அணில் சரணாலயம், தேவதானம் அணைக்கட்டு, அய்யனார் அருவி போன்ற சுற்றுலாத் தலங்களையும் கொண்டது விருதுநகர்.

நாட்டில் எந்த நீர்த்தேக்கம் வற்றினாலும் – வற்றாமல், எப்போதும் நீர் நிறைந்திருக்கும் விருதுநகரில் அமைந்திருக்கும் தெப்பக்குளம் மேலும் விருதுநகருக்குப் புகழை சேர்க்கிறது.

‘ஊர்கூடித் தேர் இழுக்க வேண்டும்’ என்பார்கள்.. இந்த விருதுநகரில் வீட்டுக்கு ஒருவர் என்ற கணக்கில் ஊர்கூடி, இந்தத் தெப்பக்குளத்தை வெட்டியிருக்கிறார்கள்.

இவ்வளவு பெருமை பெற்ற இந்த விருதுநகர் மண்ணில், பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதிலும், இந்த விழாவில் கலந்துக்கொள்வதிலும் நான் எல்லையற்ற மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

அரசியல் வரலாறும், தியாக வரலாறும் கொண்ட இந்த மண்ணில் சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

சமீபத்தில் தொலைக்காட்சிகளிலும், செய்தித்தாள்களிலும் பலருடைய குரலும் முகமும் அடிக்கடித் தெரிய ஆரம்பித்திருக்கின்றன. ஆளும் கட்சியை பொத்தாம் பொதுவாகக் குறைகூறி, பேட்டி கொடுத்து – தம்மை மக்கள் செல்வாக்குள்ள ஒருவராகக் காட்டிக் கொள்ளப் பலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறை கூறுகிற அளவிற்கு நாங்கள் ஒரு காலமும் நடந்து கொள்வதில்லை. மக்களுக்கு நாளைக்கு என்ன தேவையோ, அதனை நேற்றே முடித்து வைப்பவர்கள் நாங்கள். அவர்களுக்கு பேட்டி கொடுக்க மட்டும்தான் தெரியும். மக்கள் மன்றத்திற்கு வந்து செயலாற்ற முடியாது என்பது மக்களுக்கு தெரியும்.

அவர்கள் அளிக்கும் பேட்டிகளை, மக்கள் வெறும் பொழுது போக்காகக் கருதித்தான் பார்க்கிறார்கள். அவர்கள் கடந்து வந்த பாதையை நினைத்து மக்கள் எள்ளி நகையாடுகிறார்கள்.

“ஆட்சியைக் கலைத்துவிடுவோம்! நாளை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம் முடிந்தது அதிமுக ஆட்சி” என்று மைக் கிடைத்தால் புலம்பிக் கொண்டிருப்பவர்கள் அதிமுகவின் வரலாறு தெரியாதவர்கள்.

நீங்கள் கலைப்பதற்கும், வீட்டுக்கு அனுப்புவதற்கும் எங்கள் இயக்கம் ஒன்றும் நேற்று பெய்த மழையில், இன்று முளைத்த காளான் அன்று; புயலாலும் அசைக்கமுடியாத ஆலமரம்! தாங்கிப்பிடிக்க விழுதுகளாக, ஒன்றரைக்கோடிக் தொண்டர்கள் இருக்கிறார்கள்!

பெரிய ஆபத்துக்களையும், அச்சுறுத்தல்களையும் சந்தித்துச் சந்தித்து, வைரம் பாய்ந்த மரமாக இது நிற்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எண்ணற்ற தொண்டர்களின் இரத்தமும், உயிரும் இந்த மரம் வளர, உரமாகப் போடப்பட்டிருக்கிறது.

1977ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியை அமைக்கும் வரை, கழகத்தினர் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் வாழ வேண்டியதாயிற்று. பலபேர் தங்கள் இன்னுயிரைத் தந்தும், பல பேர் தங்கள் கண்களை, கரங்களை, கால்களை இழந்தும், இந்த இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள்!

அத்தனை எதிர்ப்புகளையும் இழப்புகளையும் தாங்கி, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பின்னால், இரும்பு மனிதர்களாக அணிவகுத்து நின்று, கழகத்தைக் காத்தவர்கள் அந்த இளைஞர்கள்.

“நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற –
இந்த நாட்டில் உள்ள
ஏழைகளின் வாழ்வு முன்னேற!
என்றும் நல்லவங்க எல்லோரும்
உங்க பின்னாலே – நீங்க
நெனைச்சதெல்லாம் நடக்கும்
உங்க கண்ணு முன்னால”

– என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் எண்ணங்களை வெற்றியடையச் செய்தவர்கள் நம் இளைஞர்கள் / கழகத் தொண்டர்கள்.

அந்த வீரம் மிக்க இளைஞர்கள் மறையவில்லை; வாழையடி வாழையாக இன்றைக்கும் மறு அவதாரம் எடுத்து, கழகத்தில் மக்கள் பணி ஆற்றி வருகிறார்கள். நான் உட்பட, இங்கே அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அனைவரும் அப்படி வந்தவர்கள்தான். திடீரென்று வந்துவிடவில்லை.

"உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள்!
உலகம் நமது என்று சிந்து பாடுங்கள்!
மேடு பள்ளம் இல்லாத சமுதாயம் காண
என்ன வழி என்று எண்ணிப் பாருங்கள்!
அண்ணா சொன்னவழி கண்டு
நன்மை தேடுங்கள்!",

– என்ற புரட்சித்தலைவர் அவர்களின் பாடலையே கட்டளையாக ஏற்று கட்சியை வளர்த்தவர்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப்படத்தைப்போல் அவருடைய கட்சியும் 100 நாட்கள்தான் ஓடும் என்று கிண்டலும் கேலியும் பேசியவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

அப்படிச் சொன்னவர்களில், தம்முடைய முகங்களையும், முகவரிகளையும் இழந்து விட்டவர்கள் ஏராளமானவர்கள்! எங்களை விமர்சிப்பவர்களுக்கும் அதே கதிதான் ஏற்படும்!

தமக்குப் பிறகும் இந்த இயக்கம் நூற்றாண்டுக்காலம் வாழும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கணக்கு ஒருபோதும் தப்பாது. உங்கள் கணக்குதான் வெல்லாது, செல்லாது! மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உடலளவில் மறைந்த 1987 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள்வரை எதிர்க்கட்சிகளால் ஆட்சி பொறுப்பை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவிற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மக்கள் செல்வாக்கைப் பெற்றிருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவருக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க கட்சி முடிந்துவிட்டது என்று மீண்டும் கொக்கரித்தார்கள்.

அந்த எண்ணமும் தவிடுபொடியாகியது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கழகத்திற்குத் தலைமையேற்று, கழகத்தை இன்னும் வீறுகொண்டு வளரச் செய்தார்கள். ஏழை எளிய மக்களை உயர்த்தும் அரசாக, பயங்கரவாதம் – பிரிவினைவாதம் – தலைதூக்காவண்ணம், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி, வறட்சி, புயல், பெருமழை போன்ற இயற்கை இடர்ப்பாடுகளிலிருந்து தமிழ் நாட்டை விரைந்து காப்பாற்றி, பொற்கால ஆட்சியைக் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு, இந்த இயக்கம் அவ்வளவுதான் என்று நினைத்தவர்கள், இன்று வாயடைத்துப் போய் நிற்கிறார்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வளர்க்கப்பட்ட நாங்கள் – எத்தனை தியாகங்களைச் செய்தேனும் இந்தக் கழகத்தைக் காப்பாற்றுவோம்!

‘ஆட்சியைக் கலைப்போம், வீட்டுக்கு அனுப்புவோம்’ என்ற உங்கள் கனவு ஒருக்காலும் பலிக்காது. அது கனவாகவேதான் தொடரும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, – ஊட்டியில், அரசு விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார்கள். அதைக் காரணம் காட்டி, அங்குள்ள அரசுக்குச் சொந்தமான பூங்காவில் ஒரு படத்தின் படப்பிடிப்பை நடத்துவதற்கு, அங்குள்ள அதிகாரிகள் அனுமதி தர மறுத்தனர்.

இதனை கேள்விப்பட்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அந்தப் படப்பிடிப்பை அரசு பூங்காவில் நடத்த ஆணையிட்டார்கள். மேலும் படப்பிடிப்பைக் காணவும் நேரில் வந்து விட்டார்கள். படப்பிடிப்பின் போது தொழில் நுட்பக் கலைஞர்கள் இரண்டு பேர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை பார்ப்பதை தவிர்த்துக் கொண்டே இருந்தனர்.

இதனைக் கவனித்து, அவர்களைப் பற்றி விசாரித்து, இருவரும் தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் என்பதையும், அவர்களது பெயர்களையும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கேட்டு அறிந்து கொண்டார்கள்.

பின்னர் படப்பிடிப்புக் குழுவினர் அனைவருக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது சொந்தச் செலவிலேயே மதிய விருந்து அளித்தார்கள்! சுற்றி வந்து எல்லோரையும் உபசரித்தார்கள். அந்தத் தொழில் நுட்பக் கலைஞர்கள் இரண்டு பேரும், ஒரு மூலையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அளிக்கும் விருந்தைச் சாப்பிடுவதில் அவர்களுக்குத் தயக்கம். அதேநேரம் விருந்தை புறக்கணிக்கவும் முடியாத நிலைமை. இந்த தர்மச்சங்கடத்தாலும், குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த தொழில் நுட்பக் கலைஞர்களின் அருகில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சென்றபோது அவர்களது தலைகள் இன்னும் குனிந்தன. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சத்தமாக அந்த இருவரின் பெயர்களைச் சொல்லி அழைத்தார். அதிர்ச்சியுடன் இருவரும் நிமிர்ந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்த்தனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிரித்துக் கொண்டே அவர்களது தோளைத் தட்டி “நல்லா சாப்பிடுங்க” என்று சொன்னதோடு மட்டுமில்லாமல் ‘இதை சாப்பிடுங்கள், நல்லா இருக்கும்’ என்று சொல்லி சில பதார்த்தங்களை அவர்களது இலையில் வைத்து உபசரித்தார்கள்.

ஒரு முதலமைச்சர் தங்கள் மீது இவ்வளவு அன்பு காட்டி உபசரித்ததில், இருவரின் கண்களும் கலங்கி விட்டன. அதற்கு மறுநாள் அந்தத் தொழில்நுட்பக் கலைஞர்கள் இருவரும் அதிமுகவில் இணைந்தனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இப்படிப்பட்ட அணுகுமுறைதான், தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அவருக்கென்று ஒரு தனி முத்திரையைப் பதித்தது! தன்னை மக்களிடம் நெருக்கமாக்கிய திரையுலகுக்கும், கலைஞர்களுக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் எவ்வளவோ உதவிகள் செய்துள்ளார்கள்!

திரையரங்கு உரிமையாளர்களுக்குச் சுமையாக இருந்த விற்பனை வரி செலுத்தும் முறையை நீக்கி, ஒரு காட்சி நடந்தால், இவ்வளவு வரி கட்ட வேண்டும் என்ற அடிப்படையில் “காம்பவுண்டிங் டாக்ஸ்” என்ற ஒரு முறையை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை, மாண்புமிகு புரட்சித் தலைவரின்பால் அதிகப் பற்றும் பாசமும் வைத்திருந்தார்கள். குறிப்பாக, பெண்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களை தங்கள் வீட்டுப் பிள்ளையாகக் கருதினார்கள்! அதற்குச் சான்றாக ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்மிகு புரட்சித்தலைவர் அவர்கள் நடித்த மாட்டுக்கார வேலன் படத்தின் ஒரு பாடல் காட்சி வைகை அணையில் படமாக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை பார்க்கத் திரண்டனர். பயங்கர கூட்டம் – எந்தப் பக்கம் திரும்பினாலும் மக்கள் தலைகள். பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் போடப்பட்டிருந்த பாதுகாப்பு வளையத்தையும் தாண்டி ஒரு மூதாட்டி, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருக்கும் இடத்துக்கே சென்று விட்டார். காவலர்கள் கோபமுற்றபோதும், மூதாட்டியிடம் பரிவோடு பேசிய பொன்னமனச் செம்மல், அந்த மூதாட்டியின் குடும்பம் குறித்து விசாரித்தார்கள்.

“உங்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா ?” என்றார். அதற்கு ‘இருக்காங்க அய்யா’ என்று பதிலளித்த மூதாட்டியிடம் ‘என்ன பண்றாங்க ?’ என்று அடுத்த கேள்வியை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கேட்டார்கள்.

அதற்கு “ஒரு புள்ள பட்டாளத்துல இருக்கு, இன்னொரு புள்ள சினிமாவுல இருக்கு” என்று மூதாட்டி சொன்னார்.

மூதாட்டியின் இந்தப் பதிலால் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வியப்பு! சினிமாவில் இருக்கிறார் என்றால் நிச்சயம் தனக்குத் தெரிந்திருக்குமே என்று எண்ணியபடியே “சினிமாவில் இருக்கும் உங்கள் பிள்ளையின் பெயர் என்ன ?” என்று அந்த மூதாட்டியிடம் கேட்டார்கள்.

“நான் பெறாத அந்தப் புள்ள நீதாம்பா!” என்று கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடியச் சொன்ன தாயை அணைத்துக் கொண்ட மக்கள் திலகத்தின் கண்களிலும், கண்ணீர் தாரை தாரையாக ஓடியது!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் எண்ணமெல்லாம் மக்களைச் சுற்றியே இருந்தது. எனவே, அவர் எண்ணங்கள் எவையோ அவற்றையே கதையாகவும், வசனமாகவும், பாடல்களாகவும் அமைத்தார்கள்.

“இல்லாமை நீக்க வேண்டும்
தொழில் ஆக்க வேண்டும் – இங்கு
எல்லோரும் வாழ வேண்டும்”

– என்ற தமது விருப்பத்தைத் திரையின் மூலம் ஒரு செய்தியாக, அறிவிப்பாக தம் தொண்டர்களுக்குக் கூறி, அவர்களை மக்கள் பணி ஆற்றச் செய்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்! கதையின்படி திரையில் வள்ளலாக நடித்துவிட்டு, பொது வாழ்விலும் அவர் வள்ளலாகத்தான் வாழ்ந்தார்! திரையில் வீரனாக நடித்தார். சொந்த வாழ்விலும் அவர் வீரனாகத்தான் இருந்தார். அதனால்தான், மக்கள் அவரை ஒரு நடிகராகப் பார்ப்பதைவிட, ஒரு மாபெரும் தலைவராகப் பார்த்தார்கள். அந்த அளவிற்கு அவருடைய பொது வாழ்க்கை திரைவாழ்க்கையை வென்றது.

“சத்தியம் தான் – நான் படித்த புத்தகமம்மா –
சமுத்துவம்தான் நான் அறிந்த – தத்துவமம்மா”

– என்று தத்துவத்தைக் கூறி, தன்னுடைய பொது வாழ்க்கை எப்படி அமையவேண்டும் என்பதைத் திரைவழியாக மக்களுக்கு முதன்முதலாகக் கூறிய முதல் நடிகர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தாம்!

பொழுதுபோக்காக இருந்த திரைப்படங்களை, முதன் முதலில் மக்கள் விழிப்புணர்வு சாதனமாக்கிய பெருமை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையே சாரும். தாம் நடிகராக இருந்தபோது, புதியவர்களிடம் தன்னை

அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது ‘நான் நடிகர் இராமச்சந்திரன்’ என்றுதான் அறிமுகப்படுத்திக் கொள்வார்கள்.

அந்த அளவிற்குத் தம் தொழிலை மதித்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். தாம் தலைவரான பிறகு, தம்மை ஒரு மக்கள் சேவகன், மக்களின் பிரதிநிதி, மக்களின் காவல்காரன் என்று நினைத்துத்தான் செயல்பட்டார்கள். பதவியை கிரீடமாக அவர் ஒரு நாளும் சூட்டிக் கொள்ளவில்லை; பதவியை ஒரு மக்கள் கட்டளையாக ஏற்று, – உழைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இந்தத் தமிழ் மண்ணில் அவர் நட்ட அஇஅதிமுக என்கிற விதையானது, நூற்றுக்கணக்கான ஆண்டுகளானாலும் நிலைத்து நிற்கும்! எந்தப் புயலாலும், எந்த வெள்ளத்தாலும், எந்த சக்தியாலும், இந்த அஇஅதிமுகவை வீழ்த்த முடியாது! காரணம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆன்மாவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்ஆன்மாவும் அஇஅதிமுகவை வழி நடத்திச் செல்லும்.

நாங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வழியிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியாலும் வந்தவர்கள்.

பேசுவதைக் குறைத்துக் கொண்டு, திட்டங்களைச் செயல்படுத்துவதில் முனைப்பாக இருக்கிறோம் என்பதை நிரூபிக்கத்தான், இன்று விருதுநகர் மாவட்டத்திற்குப் பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம்.

“மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா தேவையா?” என்று விதண்டாவாதம் பேசுபவர்களுக்கு, இன்று அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களும், தொடங்கி வைக்கப்பட்ட திட்டங்களும், நான் அறிவிக்க இருக்கிற திட்டங்களும் தான் பதிலாக இருக்கும்.

விருதுநகர் மாவட்டத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் அம்மாவின் அரசு செய்த சாதனைகளில் ஒரு சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதனை எதற்காகச் சொல்கின்றேன் என்று சொன்னால், வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள், “மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே என்னென்ன திட்டங்கள் போடப்பட்டது, மக்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கின்றது?” என்று எப்பொழுது பார்த்தாலும் கேள்வி கேட்கின்றார். அதற்குப் பதில் சொல்கின்ற விதமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே விருதுநகர் மாவட்டத்தில் கொண்டு வந்த திட்டங்கள், இந்த மாவட்ட மக்கள் பெற்றிட்ட நன்மைகளை இந்த நேரத்திலே புள்ளி விவரத்தோடு அவருக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 55 கோடியே 12 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 68 ஆயிரத்து 981 விவசாயப் பெருமக்கள் பயன் பெற்றுள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 10 ஆயிரத்து 468 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை, 43 கோடியே 4 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு, விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ், 390 கண்மாய்கள் மூலம் 8 இலட்சத்து 6 ஆயிரத்து 928 கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 10 ஆயிரத்து 626 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், விருதுநகர் மாவட்டத்தில் 22 கண்மாய்களில் வரத்துக் கால்வாய் மற்றும் கரைகள் 2 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டன.

இதன்மூலம், 3ஆயிரத்து 790 ஹெக்டேர் பாசன பரப்பு பயன் பெற்றுள்ளது. நடப்பு நிதியாண்டில் 85 பணிகளுக்கு, 22 கோடியே 11 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 164 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாணாக்கர்களுக்கு 1 இலட்சத்து 93 ஆயிரத்து 99 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 39 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மிதிவண்டிகள் வாங்கப்பட்டு, பள்ளி மாணவ–மாணவியருக்கு வழங்கப்பட்டுள்ளன. விருதுநகர் கிராமம் நிறைந்த மாவட்டம். கிராமத்திலே இருக்கின்ற மாணவ, மாணவியர்கள் உரிய நேரத்திலே பள்ளிக்குச் செல்வதற்கும், பள்ளியிருந்து வீட்டிற்குச் திரும்புவதற்கும் புரட்சித்தலைவி அம்மாவினுடைய சிந்தனையிலே உதித்த சிறப்பான திட்டமே இந்த மிதிவண்டி வழங்குகின்ற திட்டம்! அந்தத் திட்டத்தின் வாயிலாக, நம்முடைய மாணவச் செல்வங்கள் சிறந்த கல்வியை பயிலக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இந்த மாவட்டத்தில் மட்டும் 1 இலட்சத்து 7 ஆயிரத்து 424 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கியிருக்கிறோம். இதெல்லாம் சாதனையல்லவா ?

‘படித்த பெண்கள் திருமண உதவி திட்டத்தின்கீழ், 22,611 பெண்களுக்கு, 78 கோடியே 54 இலட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 90.44 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

தங்கம் விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். ஆகவே, ஒரு குண்டுமணி தங்கம் கூட இல்லாத ஏழைப் பெண்கள் கூட இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே ‘தாலிக்குத் தங்கம்’ அரை பவுன் என்பதை ஒரு பவுனாகக் கொடுத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 38 ஆயிரத்து 304 பயனாளிகளுக்கு 66 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் 'உழவர் பாதுகாப்புத் திட்ட'த்தின்கீழ், 39 ஆயிரத்து 792 விவசாயிகளுக்கு 25 கோடியே 74 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், 162 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏழை எளிய குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய 9 ஆயிரத்து 658 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 11 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 659 பசுமை வீடுகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'தாய்' திட்டத்தின்கீழ், 450 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 1745 குக்கிராமங்களில் 107 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6041 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 19 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 175 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுப் பணிகள் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட'த்தின்கீழ், 8,660 வீடுகள் 95 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 32 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில், 1,902 வீடுகள் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22,423 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு, வங்கிகளின் மூலம் 529 கோடியே 78 இலட்சம் ரூபாய் நேரடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சாத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில், பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சிவகாசியில் அரசு கலை – அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூரில், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ், 1 இலட்சத்து 1 ஆயிரத்து 670 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 96 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

பள்ளிகள் கட்டுமானப் பணிகளுக்கென்று, 32 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகத்தின் சார்பில் 129 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 15 புதிய மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அருப்புக்கோட்டை வட்டத்தில் 47 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் சிவகாசி வட்டத்தில் 15 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும் 46 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் துணை மின் நிலையங்கள் மற்றும் கூடுதல் திறன் கொண்ட புதிய மின்மாற்றிகள் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

நெடுஞ்சாலைத்துறை – நபார்டு கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், 96 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 51 பாலங்கள் மற்றும் 81.49 கி.மீ சாலைப் பணிகள் மற்றும் சிறுபாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பிரிவின்கீழ், 598 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,364.71 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 6 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 6 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பிற்கிணங்க, பட்டாசுத் தொழிற்சாலைக்களுக்கான 34.44 கி.மீ. சாலைகள், 13 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய நெடுஞ்சாலைத்துறையின்கீழ், 73 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், 127.63 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம், 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதியதாகக் கட்டப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள சிவகாசி, வெம்பக்கோட்டை, சாத்தூர், விருதுநகர் ஒன்றியங்களைச் சார்ந்த, 755 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள், 234 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

விருதுநகர் மாவட்டத்திலுள்ள ராஜபாளையம் நகராட்சி, சிவகாசி நகராட்சி திருத்தங்கல் நகராட்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தை உள்ளடக்கிய நகராட்சிகளுக்கு தாமிரபரணி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு, 543 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறை சார்பில், 35 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் உள்பட, 48 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்த 146 பணிகளை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

பொதுப்பணித்துறை சார்பில் 6 கோடியே 38 இலட்சங்கள் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள கட்டடங்கள் உட்பட, 13 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 6 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில், 54 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, 21 ஆயிரத்து 733 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை மாநிலம் முழுவதும் 10 ஆயிரத்து 448 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 34,780 திட்டப் பணிகளைத் தொடக்கி வைத்தும், 3 ஆயிரத்து 516 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 760 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 13 ஆயிரத்து 964 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 41 ஆயிரத்து 540 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் மக்களுக்காக வழங்கப்படும் திட்டங்கள். மக்களுக்காக வாழ்பவர்களைப் பார்த்து, உழைக்காமல், வீண்பொழுது கழிப்பவர்கள் வாய்க்கு வந்தபடி பேசுவார்கள். அவர்களுக்குக் காலம்தான் பதில் சொல்லும்! இதைச் சொல்கிறபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் ஆற்றில் நண்பர்கள் பலர் குளித்து கொண்டிருந்தனர். திடீரென்று, ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தவர்களில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர்! கரையோரம் இருந்த பலரது பொருட்களும் அடித்துச் செல்லப்பட்டன. இதைக் கண்ட, ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த நண்பர்கள் தங்களால் இயன்ற அளவு ஆற்றில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களையும், அவர்களது உடைமைகளையும் காப்பாற்றினர்.

அந்நண்பர்கள் குழுவைச் சேர்ந்த, பேராசை கொண்ட ஒருவன் மட்டும் தத்தளித்தவர்களைக் காப்பாற்றாமல், கேட்பாரற்று மிதந்து வந்த பொருட்களையே குறிவைத்து, கொக்கிபோட்டுகரைக்குஇழுத்துவந்து, தனதாக்கிக்கொண்டிருந்தான்!

இதைப்பார்த்த மற்றநண்பர்கள், "இது தவறு, மற்றவர் பொருளுக்கு ஆசைபடாதே! பேராசை பெரு நஷ்டம்!" என்றும் அறிவுரை செய்தனர். ஆனால் பேராசை கொண்ட நண்பன் மட்டும் தனது பணியிலேயே குறியாக இருந்து வந்தான்.

அச்சமயத்தில், ஆற்றில் கம்பளி மூட்டை போன்ற ஒரு பொருள் மிதந்து வந்ததை அவன் கண்டான். கொக்கியினை கொண்டு இழுத்து பார்த்த பொழுது, அப்பொருளை அவனால் இழுக்க முடியவில்லை. எனவே, அக்கம்பளி மூட்டையை இழுத்துக் கரைசேர்க்க, தானே ஆற்றில் குதித்தான்!

இதைக் கண்ட அவனது நண்பர்கள் "வேண்டாம்!" என்று கூறினர். ஆனால், "அக்கம்பளி மூட்டையைக் கரைக்குக் கொண்டுவந்து, அம்மூட்டையிலுள்ள

பொருட்களை கொண்டு நான் பெரிய செல்வந்தன் ஆவேன்!'' என்று கூறியவாறே அவன் ஆற்றில் குதித்தான்.

அவ்வாறு குதித்து கம்பளி மூட்டையையும் கட்டிபிடித்துக் கரைக்குக் கொண்டுவர முழு முயற்சி செய்தான். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் அவன் கரை திரும்பவில்லை. நடு ஆற்றிலேயே போராடிக் கொண்டிருந்தான். இதை கண்ட கரையில் நின்று கொண்டிருந்த அவனது நண்பர்கள் கத்துகிறார்கள் – ''நண்பா, கம்பளி மூட்டையை கொண்டு வரமுடியாவிட்டாலும் பரவாயில்லை – அதை விட்டு விட்டு கரைக்கு வந்து விடு'' என்றார்கள்.

அதற்கு அவன் ''நான் எப்பவோ கம்பளி மூட்டையை விட்டுவிட்டேன். இப்ப இதுதான் என்னை விடமாட்டேங்குது – ஏனென்றால் இது கம்பளி மூட்டை இல்லை. இது கரடிக் குட்டி'' என்றான்.

இப்படிதான் பலர் ஆசைப்பட்டு, தவறான இடத்திற்குச் சென்றுவிட்டு, இப்போது அதை விட்டுவிட்டு வர முயன்றாலும் அவர்களால் முடியவில்லை. தவறானவர்கள் அவர்களை பிடித்துக்கொண்டு விட மறுக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் புதிது புதிதாகக் கண்டு பிடித்திருக்கின்றார். அரசியல் ரீதியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க தில் இல்லாத அவர், 'டெங்கு'க் காய்ச்சலை பிடித்துக் கொண்டார். எப்படி, கரடியை பிடித்தார்களோ அதைப்போல இவர் 'டெங்கு'க் காய்ச்சலை பிடித்துக் கொண்டு, அதை வைத்து அரசியலாக்கப் பார்க்கின்றார். அது ஒருக்காலும் முடியாது. டெங்கு காய்ச்சல், சீதோஷ்ணநிலை மாறுபடுகின்றபொழுது வருகின்ற ஒரு காய்ச்சல். மழைக்காலத்தில் இப்படிப்பட்ட காய்ச்சல் எல்லாம் வருகின்றது. அது அரசால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு முற்றிலும் ஒழிக்கப்படுகின்றது. ஆனால் அவர் இந்த ஆட்சிக்கு 'டெங்கு ஆட்சி' என்று ஒரு பெயரும் சூட்டிவிட்டார். அதற்கு மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அண்ணன் ஓ.எஸ். மணியன் அவர்கள் அழகாக அவருடைய ஆட்சி பற்றி குறிப்பிட்டார். என்ன ஆட்சி என்று அப்பொழுதே குறிப்பிட்டார். ஆகவே, அப்படிப்பட்ட ஆட்சி திமுக ஆட்சி. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி மக்கள் ஆட்சி. மக்களுக்குச் சேவை செய்கின்ற இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். நீங்கள் எந்தப் பெயரை வேண்டுமானாலும் வைக்கலாம்; அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஆகவே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் கண்ட கனவை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செயலாற்றக் கூடிய ஆட்சி, அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆகவே, நீங்கள் எந்த சூழ்ச்சி செய்தாலும், எத்தகைய தில்லுமுல்லு செய்தாலும் இந்த ஆட்சியை கலைத்து விடுவோம் என்று மட்டும் நினைத்து விடாதீர்கள்.

ஏனென்று சொன்னால் பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய கூட்டம் பெரிய கூட்டம். ஆகவே, 20 மாவட்டத்தில் நாங்கள் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை சிறப்புற நடத்தி வந்துள்ளோம்! அத்தனை நூற்றாண்டு விழாவிலுமே இலட்சத்திற்கு மேற்பட்ட தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு, இந்த இயக்கத்திற்கு நாங்கள் இருக்கின்றோம், துணை இருக்கின்றோம் என்று மக்கள் எங்களுக்குத் துணையாக நிற்கின்றார்கள். ஆகவே, இந்த பொது மக்கள் தான் எஜமானர்கள். இந்த பொதுமக்கள் தான் நீதிபதிகள். இவர்கள் தாம் ஆட்சிக்கும், கட்சிக்கும் துணை நிற்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதேபோல, எவ்வளவோ பொய்யான குற்றச்சாட்டுக்களை, மூட்டை, மூட்டையாக அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்! எவ்வளவு பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டாலும் இந்த ஆட்சியை தொட்டுக்கூட உங்களால் பார்க்க முடியாது! ஏனென்றால், நான் சொன்ன திட்டங்கள், இந்த விருதுநகர் மாவட்டத்திற்கு மட்டும் அம்மாவினுடைய ஆட்சி. அம்மாவினுடைய அரசு கொடுத்திருக்கின்றது என்பதை உங்களுக்கு நன்கு உணர்த்தும்! இந்த மாவட்டத்தினுடைய மக்கள் நன்மைகளை பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, அம்மாவினுடைய அரசு இவ்வளவு நன்மையை இந்த மாவட்ட மக்களுக்கு செய்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடுமையான வறட்சி, 140 ஆண்டு காலம் இல்லாத வறட்சியை நாம் சந்தித்தோம். இப்படிப்பட்ட வறட்சியான காலத்திலும்கூட விலைவாசி உயராமல் நாங்கள் பார்த்துக் கொண்டோம். அதுமட்டுமல்ல, இந்தக் கடுமையான வறட்சியால், குடி தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டது. அந்த குடி தண்ணீர்ப் பிரச்சினையையுங்கூட நாங்கள் முழுமையாகச் சமாளித்து மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கினோம். இன்றைக்கு இயற்கையே எங்களுக்கு உதவிட, நல்ல மழை பொழிகின்றது. நாங்கள் வருகின்றபொழுது பார்க்கின்றோம், எங்கு பார்த்தாலும், பசுமையாகக் காணப்படுகின்றது. எங்கு பார்த்தாலும் குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய இந்த அரசு மக்களுடைய அரசு! மக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்யும்; மக்களுக்குத் துணை நிற்கும் அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கடுமையான வறட்சியின் காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, 2,247 கோடி வறட்சி நிவாரணத் தொகையாக வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இது விவசாயிகளுடைய அரசு என்பதையும் இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்றைக்குக் கல்வியிலே ஒரு புரட்சியை மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்திருக்கின்றோம். இன்றைக்கு பள்ளிக்கல்வித்துறைக்கு மட்டும், கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்த அரசு

அம்மாவினுடைய அரசு. 2017–2018ஆம் ஆண்டு மட்டும் 26,932 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாணவர்களுக்குச் சிறந்த கல்வி வழங்க வேண்டும் என்பதற்காக இவ்வளவு தொகை கல்வித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. வேறு எந்தத் துறைக்கும் இவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது கிடையாது! கல்வித் துறைக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற மாணவச் செல்வங்களுக்கு, கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக, அந்தந்தப் பகுதியிலே 227 தொடக்கப்பள்ளிகளை நாங்கள் துவக்கியிருக்கின்றோம். 116 தொடக்கப்பள்ளிகளை, நடுநிலைப்பள்ளிகளாக நாங்கள் தரம் உயர்த்தியிருக்கின்றோம். 829 நடுநிலைப்பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியிருக்கின்றோம். 401 உயர்நிலைப்பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியிருக்கின்றோம்!

ஆகவே, இன்றைக்கு மாணவர்களுடைய சேர்க்கை, பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, இன்றைக்கு உயர்ந்திருக்கின்றது. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அந்தந்தப் பகுதியிலேயே கல்வி கற்க வேண்டும் என்பதற்காக, இந்த கல்விக்கூடங்களையெல்லாம் நம்முடைய அரசு திறந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்றைக்கு இப்படிப்பட்ட பள்ளிகள் தொடங்கப்பட்டதன் விளைவாகத் தொடக்கக் கல்வியிலே படிக்கின்ற மாணவர்களுடைய சேர்க்கை 99.85 விழுக்காடு உயர்ந்திருக்கிறது, நடுநிலைப் பள்ளி மாணவர்கள் சேர்க்கை 99.20 விழுக்காடாகவும் உயர்ந்திருக்கின்றது. கிராமத்திலிருந்து நகரம் வரை எங்கெல்லாம் பள்ளிகள் தேவையோ, அங்கெல்லாம் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டு மாணவர்களுடைய சேர்க்கை உயர்ந்திருக்கின்ற காட்சியை அம்மாவினுடைய அரசில்தான் பார்க்க முடிகிறது. அதேபோல, இன்றைக்கு அதிக அளவிலே உயர்கல்வியில் படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதற்கு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே, ஐந்தாண்டுகளிலே 65 கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றோம்.

இதன்மூலமாக, இன்றைக்கு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்கல்வியைக் குறைந்த கட்டணத்திலேயே கற்கக்கூடிய சூழலை, அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. அதுமட்டுமன்று, அம்மா வழியிலே வந்த இந்த அம்மாவினுடைய அரசும், இந்த ஆண்டு 8 கலை மற்றும் அறிவியில் கல்லூரிகள், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 3, என்று உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. ஆகவே, இதன்மூலம், ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவியர்கள் குறைந்த கட்டணத்திலேயே உயர்கல்வி கற்க முடியும் என்ற சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைத்

தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, அம்மாவினுடைய ஆட்சி தான் கல்வியிலே சிறந்த ஆட்சி என்று மக்கள் போற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, 'பாலிடெக்னிக்' கல்லூரி என்று பல்வேறு கல்லூரிகள் அம்மாவினுடைய ஆட்சியில் தான்திறக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இங்கே கூட, 21 அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம், "இந்த அரசு என்ன சாதனை படைத்திருக்கிறது, என்ன திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது, என்ன மக்களுக்கு நன்மை செய்திருக்கிறது ?" என்றெல்லாம் கேள்வி கேட்கின்றார்கள். அவர்களெல்லாம் கொஞ்சம் வந்து பார்த்துவிட்டு போகட்டுமே!.

விழா முடிந்து பொதுமக்களும், தொண்டர்களும், மகளிரும், இளைஞர்களும், பத்திரமாக வீடுபோய்ச் சேரவேண்டும். குறிப்பாக வாகனத்தில் செல்பவர்கள் கவனமாகச் செல்லவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு, உங்களின் சேவகனாக தொடர்ந்து என்றென்றும் பணியாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே!

இன்றும் நமதே!

நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

சிவகாசி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்துதல்

சிவகாசி நகராட்சி, 2013 ஆம் ஆண்டு முதல், சிறப்பு நிலை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. இந்த நகராட்சியோடு, திருத்தங்கல் நகராட்சி மற்றும் சித்துராஜபுரம், விஸ்வநத்தம், நாரணாபுரம், பள்ளப்பட்டி, அனுப்பன்குளம், தேவர்குளம், ஆனையூர், செங்கமலநாச்சியார்புரம், சாமிநத்தம் ஆகிய ஒன்பது ஊராட்சிகளையும் இணைத்து, மாநகராட்சியாகத் தரம் உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

சிவகாசி நகரத்திற்கு புறவழிச்சாலை

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரத்திற்கு 33.48 கி.மீ. நீளத்திற்கு சுற்றுச்சாலை அமைக்கப்படும். இதற்கான நில எடுப்புப் பணிகள், 82 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு, புறவழிச்சாலை அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

★ சிவகாசி நகரத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் பார்த்திபனூர் சாலை, கி.மீ. 23/6–இல் கடவு எண் 424 – க்குப் பதிலாக சிவகாசி மற்றும் திருத்தங்கல் இரயில் நிலையங்களுக்கு இடையில் புதிய இரயில்வே மேம்பாலம் கட்ட, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

★ சிவகாசி நகரத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் – சிவகாசி – பார்த்திபனூர் சாலை கி.மீ. 18/4–இல் கடவு எண் 427 – க்குப் பதிலாக ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி இரயில் நிலையங்களுக்கு இடையில், இரயில்வே மேம்பாலம் கட்ட, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கையின் அடிப்படையில், ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

★ இராஜபாளையம் இரயில்வே நிலையத்திற்கு அருகில் இராஜபாளையம் – வெம்பக்கோட்டை சாலையில் இரயில்வே கடவு எண் 449–க்குப் பதிலாக, ஒரு புதிய இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

★ சாத்தூர் நகரத்தில், சாத்தூர் – இருக்கன்குடி – நென்மேனி சாலையில் உள்ள இரயில்வே கடவு எண் 424–க்குப் பதிலாக, ஒரு புதிய இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

அருப்புக்கோட்டை நகராட்சிக்குப் புறவழிச்சாலை

விருதுநகர்மாவட்டம்தேசியநெடுஞ்சாலை45B–யிலிருந்துஅருப்புக்கோட்டை நகருக்கு மேற்கு புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 35 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில், நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு புறவழிச்சாலை அமைக்கப்படும்.

விருதுநகர் மாவட்டத்திற்கான புதிய பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள்

★ சித்துராஜபுரம் – விளாம்பட்டி சாலை கி.மீ.2/4–இல் ஒரு பாலம்

★ ஆமத்தூர் – இலட்சுமியாபுரம் சாலை கி.மீ. 13/6–இல் ஒரு பாலம்

★ வத்ராப் – மகாராஜபுரம் சாலை முதல், தாணிப்பாறை சாலை வரை, கி.மீ.2/6–இல் ஒரு சிறு பாலம்

★ இ.டி. ரெட்டியபட்டி – சித்துராஜபுரம் சாலை கி.மீ. 3/6–இல் ஒரு சிறு பாலம்

★ ஆமத்தூரிலிருந்து அழகாபுரி – விருதுநகர் சந்திக்கும் சாலையில் (வழி) மூளிப்பட்டி சாலை கி.மீ.2/6–இல் ஒரு சிறு பாலம்

★ அருப்புக்கோட்டை – குறுந்தமடம் சாலை கி.மீ. 10/4–இல் ஒரு பாலம்

★ மீனாட்சிபுரம் – ஏ.முக்குளம் சாலை கி.மீ.7/8–இல் ஒரு சிறு பாலம்

★ இராஜபாளையம் – அய்யனார் கோயில் சாலையிலிருந்து செண்பகத்தோப்பு சாலை கி.மீ.4/8–இல் ஒரு புதிய பாலம்

வடபட்டியில் ஒரு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வடபட்டி கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும்.

அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக, தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் திட்ட மதிப்பீடு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் இவ்வாண்டில் இறுதி செய்யப்பட்டு, அதனடிப்படையில் வருகின்ற நிதியாண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சிவகாசி மற்றும் திருத்தங்கலில் காவல் நிலையக் கட்டடங்கள்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரக் காவல் நிலையம் மற்றும் திருத்தங்கல் காவல் நிலையம் ஆகியவை தற்பொழுது பழுதடைந்த நிலையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, காவலர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக, புதிய காவல் நிலையக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

வத்திராயிருப்பைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம்

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், தற்பொழுது 6 குறுவட்டங்கள், 49 வருவாய் கிராமங்களைக் கொண்டுள்ளது. வத்திராயிருப்புப் பகுதியில் உள்ள மக்களுக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது சிரமமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, வத்திராயிருப்பைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் வட்டம் உருவாக்க பரிசீலனை செய்யப்படும்.

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்குதல்

தமிழ்நாட்டில் 1,185 பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் மிக ஆபத்தான வெடிபொருட்களைக் கையாண்டு வருவதால், அவ்வப்போது ஏற்படும் விபத்துகளில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இவ்வாறு உயிரிழப்பவர்களின் குடும்பத்திற்குப் பொருளாதார ரீதியாக பாதுகாப்பு அளிக்கும் விதமாக, தற்போது பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களுக்கு அந்தந்த நிருவாகத்தினரால், தனி நபர் ஒருவருக்கு, ஐம்பதாயிரம் ரூபாய்க்கான, காப்பீட்டுத் தொகைக்கு, குழுக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த காப்பீட்டுத் தொகை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்! இந்த உயர்வு 1.9.2018 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம், சுமார் 1.2 லட்சம் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள்!

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள்

★ விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு புதிய எம்.ஆர்.ஐ கருவி, மூப்பியல் பிரிவு, சிறுநீரகப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சை பிரிவு, மருந்துக் கிடங்கு கட்டிட விரிவாக்கம், நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை வசதி, கட்டணமில்லா நோய்க் குறியியல் பரிசோதனை வசதி, ஆய்வகக் கருவி, 'எக்கோ கார்டியோகிராம்', 'டயாலிசிஸ்' கருவி ஆகியன 9 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தப்படும்.

★ மேலும், டிப்ளோமேட் ஆப் நேஷனல் போர்டு (Diplomate of National Board) மருத்துவ பட்ட மேற்படிப்புத் தொடங்கப்படும்.

★ இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு விபத்துக் காய சிகிச்சை மையம், சி.டி ஸ்கேன், அறுவை அரங்கம் மற்றும் டயாலிசிஸ் பிரிவுகளும், அருப்புக் கோட்டை, சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைகளுக்கு தலா ஒரு டயாலிஸ் பிரிவும், பந்தல்குடி அரசு மருத்துவமனைக்கு நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையமும், சாத்தூர் மற்றும் நரிக்குடி அரசு மருத்துவமனைகளில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகளும் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
23.10.2017 அன்று விருதுநகரில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

சிறுவயதில் தான்பெற்ற பசித்துன்பத்தை எதிர்கால சந்ததியினர் சந்திக்காமல் இருக்க சிறுவர்களுக்குச் சத்துணவு தந்த, அ.தி.மு.க. வள்ளலார் எம்.ஜி.ஆருக்கு திருச்சியில் நூற்றாண்டு விழா

‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்ற நோக்கோடு பணி ஆற்றுங்கள்!

இதயதெய்வம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் தலைமையுரை ஆற்றியுள்ள, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி அவர்களே!

வரவேற்புரையாற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. வெங்கடேசன் அவர்களே!

மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ரத்தினவேல் அவர்களே! திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ப.குமார் அவர்களே! பெரம்பலூர்

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆர்.பி.மருதராஜா அவர்களே! மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்களே! முசிறி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்களே! மணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி எம்.பரமேஸ்வரி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கு. ராஜாமணி அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஆர். வைத்தியலிங்கம் அவர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்!

கல்வி, கலை, விவசாயம், தொழில், ஆன்மிகம், சுற்றுலா எனப் பன்முகச் சிறப்புகள் கொண்ட ஒரு முன்னோடி மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம். திருச்சி மலைக்கோட்டை குகையில் 'சிரா' என்ற சமணத்துறவி தங்கி, தவமிருந்ததால் இது 'திரு – சிராப் – பள்ளி' எனப் பெயராகி.. அது காலப்போக்கில் திருச்சிராப்பள்ளி என்று மருவியது என்பர்.

சேரர், சோழர், பாண்டியர்களாலும், விஜயநகர பேரரசர்களாலும், பாளையக்காரர்களாலும் ஆளப்பட்டு, அடிக்கடி போர்கள் நடந்த இடமாகவும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் விளங்கியிருக்கிறது.

திருச்சி மாவட்டத்திலுள்ள கல்லணை, முதலாம் நூற்றாண்டில் கரிகால் சோழனால் கட்டப்பட்டது. காவிரியில் பெருக்கெடுத்து ஓடும் நீர், வீணாகக் கடலில் சென்று கலப்பதைத் தடுத்து நிறுத்தி, அதைக் கழனிகளில் பாய்ச்சி, டெல்டா மாவட்டங்களை செழிப்படையச் செய்த பெருமை கரிகால்சோழனுக்கு உண்டு!

ஆற்றின் குறுக்கே, அணைகட்டி, நீரைத் தேக்கி, அதைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் தொழில் நுட்பத்தை, உலகிலேயே முதன்முதலாகக் கண்டுபிடித்து, அதனைச் செயலாக்கியவர் கரிகாலச் சோழன் என்ற தமிழன் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

இயற்பியலுக்காக நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் ‘சர்.சி.வி. இராமன் அவர்கள், திருவானைக்காவலில் பிறந்திருக்கிறார். மொழிஞாயிறு தேவநேயபாவாணர் அவர்களும், தமிழறிஞர் நா.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும், புத்தூர் பிஷப் ஹுபர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளனர்!

திருவாளர்கள் வ.வே.சு. அய்யர், டாக்டர் டி.வி.சுவாமிநாத சாஸ்திரி, தேச பக்தர் ஆங்கரை ஹாலாசியம், திவான்.பி. கலிபுல்லா சாகிம், டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், போன்ற இன்னும் பல விடுதலைப் போராட்டத் தியாகிகளை, தமிழ் மண்ணுக்கு வழங்கிய புனித பூமி திருச்சிராப்பள்ளி மாவட்டமாகும்!

திருவாளர்கள் கி.ஆ.பெ.விசுவநாதம், அய்யம் பெருமாள் கோனார், பொது உடைமை இயக்கத்தலைவர் தோழர் எம்.கல்யாண சுந்தரம், நடிகவேள் எம்.ஆர்.ராதா, வயலின் மேதை லால்குடி ஜெயராமன், கவிஞர் வாலி, கவிஞர் நா.காமராசன், பாடகர் திருச்சி லோகநாதன், எழுத்தாளர் சுஜாதா, போன்ற இன்னும் பல தலைவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும் பெற்ற மாவட்டம் இது.

1946ஆம் ஆண்டு, மகாத்மா காந்திஜி திருச்சிராப்பள்ளிக்கு விஜயம் செய்திருக்கிறார். ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோயில், மலைக் கோட்டை உச்சிப் பிள்ளையார் கோவில், அருள்மிகு தாயுமானவர் திருக்கோவில், உறையூர் வெக்காளியம்மன் கோயில், வயலூர் முருகன் கோயில், புனித சூசையப்பர் தேவாலயம், தூய வளனார் தேவாலயம், எடத்தெரு சகாயமாதா தேவாலயம், நத்தர்ஷா பள்ளிவாசல் போன்ற பல வழிபாட்டுத் தலங்களாலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆன்மிக மணம் கமழும் பூமியாகத் திகழ்கிறது!

இலண்டனில் உள்ள ‘வெஸ்ட் மினிஸ்டர்’ தேவாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு சின்னத்தில் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையின் படம் உள்ளது.

பச்சமலை, புளியஞ்சோலை, மேலணை, முக்கொம்பு, அறிஞர் அண்ணா கோளரங்கம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்ட மேலூர் வண்ணத்துப்பூச்சி பூங்கா, ராணி மங்கம்மாள் கொலு மண்டபம் போன்ற இன்னும் பல சுற்றுலாத் தலங்களைக் கொண்டது திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விவசாயமும், நெசவும் இம்மாவட்டத்தின் முதன்மையான தொழில்களாகும். குறிப்பாக, உறையூர் பழங்காலத்திருந்து, மஸ்லின் துணிக்கும், சேலைகளுக்கும் பெயர் பெற்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணப்பாறை மாடுகள் உழவுக்கு பெயர் பெற்றவையாகும்.

திருச்சிராப்பள்ளியில் இயங்கும் பொன்மலை ரயில்வே தொழிற்சாலை, பாரத மிகுமின் நிறுவனம், துப்பாக்கித் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை

போன்றவைகளால் திருச்சிராப்பள்ளி ஒரு தொழில் மாவட்டமாகவும் முன்னேறியிருக்கிறது.

திருச்சிராப்பள்ளியில் தங்கம், வெள்ளி, நவமணிகள் மற்றும் செயற்கைக் கல் ஆகியவற்றால் ஆபரணங்கள் செய்யும் தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

இங்குள்ள சர்க்கரை ஆலைகளும், இன்னும் பல சிறு தொழிற்கூடங்களும் போதுமான வேலை வாய்ப்புகளை வழங்கி வருகின்றன.

இன்னும் பல பழைமையும் பல்வகைப் பெருமையும் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரசியல் வரலாற்றிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது!

குறிப்பாக, உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் பொன்மனச் செம்மல், இன்று நூற்றாண்டு விழா காணும் மக்கள் நாயகன், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் பல பக்கங்களைப் பிடித்திருக்கும் மாவட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம்தாம்.

அதைப்போல, எங்கள் குல தெய்வம், தமிழ்நாட்டின் ஒளிவிளக்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வரலாற்றோடும் இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் நீக்கமுடியாத இடத்தைப் பிடித்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருப்பராயத்துறை ஸ்ரீராமகிருஷ்ண குடிலிற்கு நன்கொடை வழங்கும் பொருட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், கரூரில், தன் சொந்த செலவில் ஒரு மாபெரும் நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

அந்த நாட்டிய நிகழ்ச்சியை நடத்தியவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

நாட்டிய நிகழ்ச்சியில் வசூலான தொகை முழுவதையும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண குடிலிற்கு நன்கொடையாக வழங்குகிறார்கள்.

அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கொடை உள்ளத்தைப் பாராட்டி "பொன்மனச்செம்மல்" என்ற பட்டத்தை வழங்குகிறார்கள்.

அதே மேடையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் 'நாட்டியக் கலாமணி'என்ற பட்டத்தையும் வழங்கி, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சிறப்பிக்கிறார்கள்.

நமது கழகத்தின் இரு மாபெரும் தலைவர்களின் குணத்தையும் மனத்தையும் படம் பிடித்துக் காட்டுகிற பட்டங்களை வழங்கியது இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீராமகிருஷ்ண குடில்தாம் இந்த மாவட்டத்திற்கு கிடைத்த கூடுதல் பெருமையாகும்!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பின்னர் கட்சியின் முதல் பொதுக்குழுவும், முதல் மாநில மாநாடும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்தான் நடந்தது என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போதிய வருவாய் இல்லாத சிறு கோயில்களுக்கு, ஒரு கால பூஜைக்கு வகை செய்யும் புதிய திட்டத்தை, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சமயபுரத்தில்தான் தொடங்கியிருக்கிறார்கள்.

வறுமையின் காரணமாக, 2ஆம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாத நிலைமையில், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நாடகக் கம்பெனியில் சேர்ந்தார்கள். நாடகக் கம்பெனிக்குப் போனால் பிள்ளைகள் வயிறார சாப்பிடுவார்கள் என்ற எண்ணத்தில் அவரது தாயார், அவரையும், அவரது அண்ணனையும் நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டார்கள்.

அந்நாளில், நாடகத்தில் நடிப்பவர்களுக்கு மட்டுமே சாப்பாடு என்பது அங்குள்ள ஒரு விதிமுறை! அது தெரியாத சிறுவராக இருந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், குறிப்பிட்ட ஒரு நாளன்று மதியச் சாப்பாட்டிற்குப் பசியோடு மற்ற நடிகர்களோடு அமர்ந்து விடுகிறார்கள். அதனைக் கவனித்த நாடகக் கம்பெனி மேலாளர் "இன்றைய நாடகத்தில் நீ இல்லை. ஆகவே உனக்கு சாப்பாடு கிடையாது!" என்று சொல்லி, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை கையைப் பிடித்து இழுத்து வெளியே விட்டுவிடுகிறார்.

அன்று பசியுடன் வெளியேறிய அந்த கொடுமையான அனுபவம்தான், – சிறுவர் சிறுமிகள், பள்ளிக் குழந்தைகள் வயிறார, சத்தான உணவு சாப்பிட வேண்டும் என்ற

எண்ணத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் மனதில் ஆழப் பதியவைத்தது!

அதுவே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்தக் காரணமாகவும் விளங்கியது. அத்தகைய அரிய திட்டத்தை அமல்படுத்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தேர்ந்தெடுத்த இடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் காட்டூர் பாப்பாக்குறிச்சியாகும்.

1982ஆம் ஆண்டில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களே பாப்பாக்குறிச்சிக்கு நேரடியாக வருகை தந்து, சிறுவர்களோடு சிறுவராய் அமர்ந்து உணவு உண்ட காட்சி இன்று வரலாற்று சிறப்பு மிக்க காட்சியாக நிலைபெற்று விட்டது!

இது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மீது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டிருந்த பாசத்திற்கும், மரியாதைக்கும் மேலும் ஒரு சாட்சி.

1980ஆம் ஆண்டு தமிழ் நாட்டில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சி கலைக்கப்பட்ட போது, அதனைக் கண்டித்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், முதம்முதலில் 27.03.1980 அன்று ,திருச்சிராப்பள்ளி பொதுக்கூட்டத்தில்தான் மக்களிடத்தில் நேரிடையாக நியாயம் கேட்டார்!

தமிழறிஞர்கள் மீதும், தமிழ் மீதும் மிகப்பெரிய மரியாதை வைத்திருந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்பது தமிழ் கூறும் நல்லுலகம் அறிந்த ஒன்று.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், தமிழ் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம், இரண்டு கோரிக்கைகளை வைக்கிறார். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆரின் ஆட்சிக்காலத்தில் உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டும் மற்றும் தமிழுக்கென்று ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்பவைதாம் அந்த கோரிக்கைகள். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் முதலாவதாகச் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில், உலகத் தமிழ்மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியும், இரண்டாவதாக, சோழ மண்டலமாம் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவியும் அவ்விரு கோரிக்கைகளையும் நிறைவேற்றித்தந்தார்கள்!

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் மீது, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கொண்டிருந்த மரியாதை இதன்மூலம் புலப்படுகிறது.

ஆசியாவிலேயே உயரமான ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் மகாகும்பாபிஷேகத்தைத் தமது ஆட்சிக் காலத்தில் 25.03.1987இல் நடத்தி, தமது துணைவியாரோடு

அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டும் சிறப்பித்தார்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

1980இல் நடந்த சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் ஏரி தூர்வாராமல் உள்ளது என, அந்த ஊர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி சரோஜா அவர்கள் பேச, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அந்த ஏரியை நேரில் சென்று ஆய்வுசெய்து, ஏரியைத் தூர்வார நடவடிக்கை எடுத்தார்கள்! அதனால்தான், அந்த ஏரிக்கு 'எம்.ஜி.ஆர் ஏரி' என்று பெயர் வந்தது.

அதைப்போல.. அதே ஆண்டு நடந்த சம்பவம் இன்னொன்று அஃதாவது, மணச்சநல்லூர் அருகில் உள்ள தத்தமங்கலம் கிராமத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது, கிராமத்தின் உள்ளே செல்ல, சரியான சாலை வசதி இல்லை என்பதனை அறிந்து கொண்டு, சென்னை வந்ததும் அந்த கிராமத்திற்குச் செல்ல சாலை வசதி செய்து கொடுத்தார்கள். அதனால்தான், அந்த சாலைக்கு 'எம்.ஜி.ஆர் ரோடு' என்று பெயர் ஏற்பட்டது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, அதில் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டது இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பெருமைகளுக்கெல்லாம் கிரீடம் வைத்தது போல் ஆகிவிட்டது.

“தமிழ்நாட்டின் ஒவ்வொரு தொகுதியும் என்னுடைய தொகுதிதாம் என்றாலும், இது எனது சொந்த தொகுதியாகும்”, என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

“நான் சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்து ஆட்சி புரிந்தாலும், என்னுடைய எண்ணமெல்லாம் திருச்சி மலைக் கோட்டையைச் சுற்றிதான் இருக்கிறது!”, என்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குப் புகழாரம் சூட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு செய்திட்ட சாதனைகள் பலவற்றை உங்களுடைய மாவட்ட அமைச்சர், மரியாதைக்குரிய அண்ணன் வெல்லமண்டி நடராஜன் அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்லி அமர்ந்து இருக்கிறார்கள்!

அவற்றில் ஒரு சிலவற்றை, இந்த இனிய வேளையில், உங்களிடையே பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்! ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில், பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம். ஸ்ரீரங்கம் வெள்ளித் திருமுத்தம் கிராமத்தில், ஒரே நேரத்தில் 1,000 பக்தர்கள் தங்கும் யாத்ரி நிவாஸ் இவற்றை ஏற்படுத்தியதோடு, தமிழ்நாட்டில் முதன்முறையாக நவலூர் குட்டப்பட்டில்,

25 ஏக்கர் பரப்பளவில், ரூபாய் 100 கோடி மதிப்பில் தேசிய சட்டப்பள்ளி மற்றும் ரூபாய் 40 கோடி மதிப்பில் மகளிருக்கென தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பாலிடெக்னிக் கல்லூரி – இப்படி அதிகமான கல்லூரிகளையும் கொடுத்து ,இந்த மாவட்ட மக்கள் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்கள் குறைந்த செலவிலே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த ஒப்பற்ற தலைவி புரட்சித்தலைவி அம்மா தான் என்பதனை, நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கம்பரசம்பேட்டை அருகே, காவிரி ஆற்றின் குறுக்கே, ரூபாய் 32 கோடி மதிப்பில் தடுப்பணை. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மூலம் ரூபாய் 1,650 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது! இதனால், ஆயிரக்கணக்கான மக்கள், வேலைவாய்ப்பை இந்த மாவட்டத்தில் பெற்றிருக்கின்றார்கள்!

திருச்சிராப்பள்ளியில், ரூபாய் 100 கோடி மதிப்பில், 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' மருத்துவமனை, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ரூபாய் 75 கோடி மதிப்பில், நேப்பியர் பாலம் வடிவில், 4 வழிச்சாலை உயர்மட்டப் பாலம். அந்தநல்லூர், மணிகண்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட, 212 ஊரக குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் வகையில், ரூபாய் 49 கோடிமதிப்பீட்டில், காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம். கள்ளிக்குடி கிராமத்தில், ரூபாய் 77 கோடி மதிப்பில், காய்கனி மற்றும் மலர்களுக்கான மத்திய வணிக வளாகம். திருச்சிராப்பள்ளி ரயில்வே சந்திப்பு அருகே, ரூபாய் 82 கோடி மதிப்பில், உயர்மட்ட சுற்றுப்பாலம். காவிரி தென்கரை ஓயாமாரி அருகே ரூபாய் 53 கோடி மதிப்பில் ரயில்வே மேம்பாலம். இவைபோன்ற பல்வேறு திட்டங்கள், மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கோடை மழையாய்க் கொட்டித் தந்திருக்கும் நலத்திட்டங்கள்!

மடைதிறந்த வெள்ளமென வாரி வழங்கியிருக்கும் நலத்திட்ட உதவிகள், வற்றாத ஜீவ நதியாய் வழங்கியிருக்கும் வளர்ச்சித்திட்டங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளன. இப்போதும், அந்த தொலைநோக்குத் திட்டங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்களுக்குப் பெரும்பலனைத் தொடர்ந்து அளித்து வருகிறன்றன.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் முதல் அத்தியாயத்திலும், இரண்டாவது அத்தியாயத்திலும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அதிக இடத்தைப் பிடித்திருக்கிறது.

அந்த மகத்தான தலைவர்களின் வழியில், மூன்றாம் அத்தியாயமாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் நாங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு, அத்தலைவர்களின் எண்ணத்தையும் உங்கள் விருப்பத்தையும் மனதில் வைத்துத்தான் திட்டங்கள் வகுத்திருக்கிறோம்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கடந்த ஆறு ஆண்டுகளில் பல்வேறு அரசு திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன.

ஏனென்று சொன்னால், இதை இந்த நேரத்திலே சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகின்றேன். எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், "இந்த ஆட்சியிலே என்ன திட்டம் மக்களுக்கு கிடைத்திருக்கின்றது; என்ன நன்மை கிடைத்திருக்கின்றது!" என்று அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கின்றார். செய்தியாளர்களிடம் பேட்டி கொடுக்கின்றபோதெல்லாம் நம்முடைய கட்சி பற்றியும், ஆட்சி பற்றியும் விமர்சனம் செய்து கொண்டேயிருக்கின்றார். அதேபோல, எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் இதைப்பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் சொல்லும் விதமாக, இன்றைக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் நடைபெறுகின்ற பணிகளை, நாங்கள் புள்ளிவிவரத்தோடு எடுத்துவைத்து அவற்றை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று, இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறு, குறு விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள, விவசாயக் கடன் 279 கோடியே 87 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது! இதன்மூலம், 63 ஆயிரத்து 876 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ், 251 கோடி ரூபாய் செலவில், மாணாக்கர்களுக்கு 1 இலட்சத்து 79 ஆயிரத்து 242 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி வழங்கும் திட்டத்தின்கீழ், நிதி உதவியாக, 31 ஆயிரத்து 119 ஏழை பெண்களுக்கு, 110 கோடியே 10 இலட்சம் ரூபாயும், 124.45 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன.

250 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 12 ஆயிரத்து 693 சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

'தாய்' திட்டத்தின்கீழ், 2,210 குக்கிராமங்களில், 132 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 ஆயிரத்து 565 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்' தின்கீழ், 241 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 19 ஆயிரத்து 244 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

26 ஆயிரத்து 144 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 762 கோடி ரூபாய் நேரடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 77 கோடியே, 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 8 இடங்களில், புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புத் திட்டத்தின்கீழ், 528 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன.

கம்பரசம்பேட்டையில், மொழிப்போர் தியாகி கீழப்பளுவூர் சின்னசாமிக்கு சிலை அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால், 08.02.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

குடிமராமத்துப் பணிகள் திட்டத்தின்கீழ், 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 58 பணிகள் முடிவுற்றுள்ளன. நடப்பு ஆண்டில், 9 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 75 பணிகள் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ், 261 ஏரி மற்றும் குளங்களின் மூலம், 19 ஆயிரத்து 394 விவசாயிகளுக்கு, 9 இலட்சத்து 86 ஆயிரத்து 187 கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு, இடுபொருள் நிவாரணத் தொகையாக, 63 கோடியே 95 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 1 இலட்சத்து 4 ஆயிரத்து 82 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

இவை தவிர, இன்று, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 197 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 3 திட்டங்கள் உட்பட, 212 கோடி ரூபாய் மதிப்பிலான 13 பணிகள் என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில், 350 கோடி ரூபாய் செலவில், தார்ச்சாலை அமைக்கும் பணி உட்பட, 457 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 45 பணிகளுக்கு, இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் திட்டத்தின்கீழ்,

பல்வேறு துறைகளின் சார்பில், 32 ஆயிரத்து 361 பயனாளிகளுக்கு, 101 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள், இன்று வழங்கப்பட உள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல், இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 10 ஆயிரத்து 497 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 34 ஆயிரத்து 926 பணிகளைத் தொடங்கி வைத்தும் 3 ஆயிரத்து 529 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 766 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்!

ஆக மொத்தம். 14 ஆயிரத்து 26 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 41 ஆயிரத்து 692 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாசத்திற்குரிய மாவட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நேசத்திற்குரிய சொந்த மாவட்டம்; ஒட்டு மொத்தத்தில்,

ஆண்டாண்டுக் காலமாக, இங்கே அசைக்க முடியாத ஆன்மிகக் கோட்டையாக நிற்கும் மலை கோட்டையைப்போல, இனி எத்தனை காலமானாலும், அசைக்க முடியாத அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக கோட்டையாக இந்த திருச்சிராப்பள்ளி மாவட்டம் விளங்கும்!

இரு பெரும் தலைவர்களின் திட்டங்கள் அதற்கு வழிவகுக்கும். அவர்களுக்குப் பிறகு, அவர்களின் வழியில் வந்த இந்த அரசின் திட்டங்கள், திருச்சிராப்பள்ளியை மேலும் வளமாக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை!

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. மக்களுக்காக உருவான கட்சி! மக்களுக்காக உழைக்கும் கட்சி; மக்களுக்காகவே தியாகம் செய்யும் கட்சி.

உங்கள் காதுகளில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் எழுச்சிக் குரலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வீரக்குரலும்தான் எப்போதும் ஒலிக்க வேண்டும். உங்கள் கண்களுக்கு இந்த இருபெரும் தலைவர்களின் அன்பு முகங்கள்தாம் தெரிய வேண்டும்!

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது போல் எப்போதும் மக்கள் பணி ஆற்றுங்கள். "காட்டில் நிலவாய், கடலில் மழையாய், பிறந்தால் யாருக்கு லாபம்; பகையில் துணையாய், பசியில் உணவாய், இருந்தால் ஊருக்கு லாபம்" என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளை மனதில் ஏற்றுங்கள்.

கழகக் கண்மணிகளாகிய நீங்கள் ஒத்த கருத்துடன் ஒற்றுமையாகச் செயலாற்றுங்கள். உங்கள் ஒற்றுமைதான், இந்த கட்சியையும், ஆட்சியையும் வலிமைப்படுத்தும்!

"ஒருதாய் மக்கள் நாமென்போம்; ஒன்றே எங்கள் குலமென்போம்–தலைவன் ஒருவன்தான் என்போம்; சமரசம் எங்கள் வாழ்வென்போம்!" என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தம் பாடலின் மூலம் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், எஃகு கோட்டையாக இருக்கிறது என்றால், அதற்குத் தொண்டர்களின் ஒன்றுமைதான் முழுக் காரணம் என்பது மாற்றுக் கட்சிக்காரர்களுக்கும் தெரியும்.

நமக்குள் பிளவை உண்டாக்கும் மாற்று சக்திக்கு, ஒரு காலமும் இடம் கொடுக்காத அளவிற்கு, நாம் ஒற்றுமையாக மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுக் கட்சியினர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஆதாரம் இல்லாத குறைகளைக் கூறிக்கொண்டேயிருக்கிறார்கள்.

குறைகூறுபவர்கள் குறைகூறிக் கொண்டுதான் இருப்பார்கள். குறைகளுக்கு அவர்களால் என்றுமே தீர்வு சொல்லத் தெரியாது.

இதைக் கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நகரில், அவர் மிகப்பிரபலமான, அனுபவமிக்க ஓவியர். அவரிடம் ஓவியம் பயிலுவதற்கு அனைத்து இடங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து செல்வார்கள்.

ஒரு சிலர் அவரிடம் அங்கேயே தங்கியிருந்தும் ஓவியம் கற்றுச் செல்வார்கள். அவ்வாறு தங்கியிருந்து ஓவியம் பயின்ற ஒரு இளைஞன், பயிற்சி முடிந்ததும், தம் குருவான ஓவியரிடமிருந்து விடைப்பெற்றுக் கிளம்பினான்.

தாம் கற்றுக் கொண்ட ஓவியத் திறன் குறித்து சுய மதிப்பீடு செய்து பார்க்கும் ஆர்வம் அவனுக்கு ஏற்பட்டது.

எனவே கற்பனைத் திறனில் ஒரு காட்சியை உருவகம் செய்து அதை ஒரு ஓவியமாக வரைந்தார். இதுப்பற்றிப் பிறரின் கருத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவனுக்கு ஏற்பட்டது.

அதனால், அந்த ஓவியத்தை ஊரின் மையப் பகுதியில் அனைவரின் பார்வைக்கு வைத்தார்.

பிறகு, அவ்வோவியத்துக்கு அருகில், "இதனை பார்ப்பவர்கள் இதில் ஏதாவது தவறு கண்டீர்களானால் அந்த இடத்தில் (X) தப்பு என்று 'மார்க்' செய்யவும்" என்று எழுதி. அங்கே ஒரு பேனாவையும் கட்டித் தொங்க விட்டுச் சென்றான்.

பிறகு சிறிது நாள் கழித்து, தனது ஓவியத்தை பற்றி மக்கள் விமர்சனத்தை அறிய அந்த இளைஞன் அந்த இடத்திற்குச் சென்றான்.

ஓவியத்தில் அந்த தப்பு 'மார்க்' இல்லாத இடமே இல்லை என்ற அளவுக்கு எங்கு பார்த்தாலும் அந்த தப்பு மார்க் இருந்தது!

ஒரு சிலர். "இதெல்லாம் ஓவியமா ? இதை வைத்து அபிப்ராயத்தைக் கேட்க வந்து விட்டாய்!" என்று எழுதியிருந்தார்கள்.

அதைக் கண்டு ஓவியன் மிகவும் வருத்தமடைந்தான்.

தான் ஒரு திறமையான ஓவியன் அல்லன் என நினைந்து மனமுடைந்தான்.

அவன் உடனே அந்த ஓவியத்தை எடுத்துக் கொண்டு, தனது குருநாதரிடம் சென்று காண்பித்தான்.

உடனே, குரு, "நீ ஒரு சிறந்த ஓவியன்! மற்றவர்களால் குறை கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு உன்னால் ஓவியம் வரைய முடியும்" என ஊக்குவித்தார்.

பிறகு அந்த இளைஞனை மற்றொரு ஓவியம் வரையும்படிக் கூறி அவனை மேலும் ஊக்குவித்தார்.

அவனும் மற்றொரு ஓவியம் வரைந்தான். குரு கூறியபடியே, அந்த ஓவியத்தைப் பொது இடத்தில் வைத்தான்.

இப்பொழுது, அவன் அந்த ஓவியம் அருகில், "இந்த ஓவியத்தில், யாரேனும் ஏதேனும் தவறுகள் கண்டுபிடித்தால், இதனருகே உள்ள 'பிரஷ்' மூலம் சரி செய்யவும்!"

"இவ்வாறு ஓவியத்தில் குறைகளை கண்டுபிடித்து அதனை சரிசெய்பவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்!" என்று ஓர் அட்டையில் எழுதி, ஓவியத்தின் அருகில் தொங்கவிட்டான். மேலும், அருகிலேயே ஒரு தூரிகையையும், பெயிண்டையும் வைத்து விட்டுச் சென்றான்.

பிறகு சிறிது நாட்கள் கழித்து, அந்த இடத்திற்கு குருவுடன் அந்த இளைஞன் வருகிறான். ஒரே ஆச்சரியம், ஓவியம் எந்த இடத்திலும் திருத்தப்படவில்லை!

அப்பொழுது, அந்த குரு கூறுகிறார்! "உலகத்திலேயே ஒரு பணியைச் செய்வது கடினம்; ஆனால் விமர்சனம் செய்வது சுலபம்!

எனவே, நீ முதலில் வரைந்த ஓவியத்தைக் குறை கூறு என்றவுடன் அனைவரும் அதனை விமர்சனம் செய்தனர்.

ஆனால், ஓவியத்தில் உள்ள குறையைக் கண்டுபிடித்து நிவர்த்தி செய்யுங்கள் என்று தவறை கண்டுபிடிப்பவர்களையே தவறை சரிசெய்யும் பொறுப்பை ஒப்படைத்தவுடன், அனைவரும் அந்த ஓவியத்தில் எந்தக் குறையும் இல்லை என ஓவியத்தை ரசித்து விட்டுச் சென்றுவிட்டனர்.

எனவே, உன் திறமையில் முழு நம்பிக்கை வைத்துப் பணியாற்று!" என்று அறிவுரை கூறினார்.

அந்த இளைஞனும், "எனது திறமையில் முழு நம்பிக்கை வந்து விட்டது! உலகத்தையும் மக்களையும் புரிந்துக் கொண்டேன்; இனி அதற்கேற்றாற்போல் நடந்துக் கொள்வேன்!" என்றான்.

குறை சொல்பவர்கள் சொல்லிக்கிட்டே இருக்கட்டும். அவங்களால் அதை மட்டும் தான் செய்ய முடியும். நாம் செய்கின்ற வேலையில் நமக்கு மனநிறைவு இருந்தாலே போதுமானது.

இதனையே வள்ளுவர், "சொல்லுதல் யார்க்கும் எளியவாம், அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்," எனக் கூறியுள்ளார்.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய வழியில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், “நம் கடன் பணி செய்து கிடப்பதே!” என்று ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்த தொடர்ந்து பணியாற்றுவோம் என்று உறுதி கூறுகிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவர் நம் ஆட்சியைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டே இருக்கிறார். எப்பொழுது பார்த்தாலும், நம்முடைய ஆட்சியைக் குறை சொல்வது தான் வழக்கம். அவர் எப்பொழுது பார்த்தாலும், ஒரு வசனத்தை பேசுவார், இது குதிரைபேர அரசு என்று சொல்வார். யாரைச் சொல்வார் என்று நமக்குத் தெரியவில்லை. ஏனென்றால், விரைவிலே தீர்ப்பு வருவது உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அப்பொழுது யாருடைய ஆட்சியிலே குதிரைபேரம் நடந்தது என்று நாட்டு மக்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஸ்டாலின் புதியபுதிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்திருக்கின்றார். மழைக்காலங்களிலே சீதோஷ்ண நிலை மாறுகின்றது. அப்படி சீதோஷ்ணநிலை மாறுகின்றபொழுது, இன்றைக்கு பல்வேறு காய்ச்சல் பொதுமக்களுக்கு வருவது இயல்பு. பல ஆண்டுகளாக இப்படித்தான் வந்து கொண்டிருக்கின்றது, மக்களும் அதற்குத் தகுந்த சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இப்பொழுது ‘டெங்கு’க் காய்ச்சல் வந்திருக்கின்றது. அந்தக் காய்ச்சலை வைத்து அவர் பேட்டி கொடுக்கும்பொழுது, இந்த ஆட்சி ‘டெங்கு ஆட்சி’ என்று பெயர் சூட்டியிருக்கின்றார். ஆகவே, அவருக்கு அவ்வளவுதான் திறமை, அவ்வளவு தான் புத்திசாலித்தனம் என்றுதான் நான் நினைக்கின்றேன். ஏனென்றால், காய்ச்சல் வருவது இயற்கை, அதைக் குணப்படுத்துவதற்கு என்ன ஆலோசனை என்று சொன்னால், அது உண்மையிலேயே எதிர்க்கட்சித்தலைவருக்கு பாராட்டிற்குரியது. அதை விட்டுவிட்டு, வேண்டுமென்றே கிண்டல் செய்வது, கேலி செய்வது, எந்த விதத்திலே நியாயம் என்பதனை இந்த நேரத்திலே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு விழிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடைகின்ற சூழ்நிலையை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம், அதற்குத் தேவையான வசதியையும் நாம் செய்து கொடுத்திருக்கிறோம், போதிய மருத்துவர்கள், செவிலியர்களை நியமித்திருக்கின்றோம். ஆகவே, இந்த டெங்குக் கொசு கடித்துத்தாம் டெங்குக் காய்ச்சல் வருகிறது. டெங்குக் கொசு நல்ல தண்ணீரில் தான் உருவாகிறது, பகலிலே கடிக்கின்றது. காய்ச்சல் வந்தவுடன் நாம் அரசு மருத்துவமனைக்கோ, தனியார் மருத்துவமனைக்கோ சென்று இரத்த பரிசோதனை செய்து, என்ன காய்ச்சல் என்பதனைக் கண்டறிந்து, உடனடியாக, அதற்கு சிகிச்சை எடுத்துக் கொண்டால் குணமாகி விடும். இது இயல்பான ஒன்று. நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும், இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் உத்தரவு வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, துறை செயலாளர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமித்து, அந்த மாவட்டத்திலே

எங்கெங்கெல்லாம் டெங்கு பாதித்துள்ளது என்பதனையெல்லாம் கண்டறிந்து, அதற்குத் தீர்வு காணுகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம். டெங்குக் காய்ச்சல் இன்றைக்குப்படிப்படியாக குறைந்து கொண்டிருக்கின்றது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அம்மாவினுடைய அரசு விழிப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த காய்ச்சலுக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, இந்த 'டெங்குக் கொசு' நல்ல தண்ணீரில் உருவாகின்றது. ஆகவே, வருகை தந்திருக்கின்ற பொதுமக்கள், கழக நிருவாகிகள், தொண்டர்கள், நீங்கள் மக்களிடத்திலே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நீங்கள் சேமித்து வைக்கின்றதண்ணீரைமூடிவைக்கவேண்டும். இல்லாவிட்டால், டெங்குக்கொசு, அதில் முட்டையிட்டு அங்கே கொசு உற்பத்தியாகி இந்தக் காய்ச்சல் வருவதற்கு காரணமாகி விடும். ஆகவே, இதைத் தடுப்பதற்குப் பொதுமக்கள் முழுமையாக ஒத்துழைப்பு தரவேண்டும். பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல், எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற இயலாது. 'டெங்குக் கொசு' முற்றிலும் ஒழிக்கப்படவேண்டுமென்று சொன்னால், பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் அரசுக்குத் தேவை. டெங்கு கொசு அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன் டெங்குக் கொசு முற்றிலும் ஒழிப்போம், டெங்கு காய்ச்சலைத் தடுப்போம் என்று இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியிலும் சரி, புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலும் சரி, எண்ணற்ற திட்டங்களை நாம் செயல்படுத்தியிருக்கின்றோம். அதே நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன செய்தது என்று எண்ணிப் பாருங்கள்! அவர்கள் என்ன செய்தார்கள், நம்முடைய இருபெரும் தலைவர்கள் இந்த நாட்டிற்கு என்ன செய்தார்கள் என்று ஒப்பிட்டுப் பாருங்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு முன்னாலே பேசிய உங்கள் மாவட்ட அமைச்சர் கூறினார், அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள், அதனால் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் ஏராளம் என்று பட்டியலிட்டு சொன்னார்கள். திமுக ஆட்சியில் ஒன்றையாவது சொல்லமுடியுமா? எண்ணிப் பாருங்கள். ஆகவே, இருபெரும் தலைவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்களை கொடுத்ததின் மூலம் இந்த மாவட்டம் வளர்ச்சிப் பாதையிலே சென்று கொண்டிருக்கின்றது என்பதனை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்!

மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்திலே இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் அதில் பங்கு பெற்றது. அப்பொழுது காவிரி நதிநீர் பிரச்சினை வந்தது, அதற்காகக் குரல் கொடுத்தார்களா? காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? இல்லை. ஆட்சி அதிகாரத்திலே, பதவி சுகத்தைக் கண்டார்கள், இந்தெந்த இலாகா வேண்டுமென்று கேட்டு பெற்றார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்களைப் பற்றி எள்ளளவும் சிந்திக்கவில்லை. ஆனால். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி இன்றைக்குக் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை, உச்சநீதிமன்றத்தின் மூலமாக நமக்கு கிடைக்கச் செய்தார்கள்! ஆகவே, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. காவிரி நீர்ப் பாசனம் பெறுகின்ற பகுதியாக இருக்கின்றது. அந்த மக்களுக்கு உச்சநீதிமன்றத்தின் மூலமாக புரட்சித்தலைவி அம்மா சட்டப் போராட்டம் நடத்தி, நமக்கு தீர்வு தந்தார்கள் என்பதனை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விழா முடிந்து பொதுமக்களும், தொண்டர்களும், மகளிரும், இளைஞர்களும், பத்திரமாக வீடுபோய்ச் சேரவேண்டும். குறிப்பாக வாகனத்தில் செல்பவர்கள் கவனமாகச் செல்லவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா, சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும் இன்றைக்கு திருச்சிராப்பள்ளி நகரத்திலே, மிக விமரிசையாக, எழுச்சியாக நடைபெற உறுதுணையாக இருந்த மாவட்ட அமைச்சர்கள், மரியாதைக்குரிய அண்ணன் வெல்லமண்டி நடராஜன் அவர்களுக்கும், மரியாதைக்குரிய சகோதரி வளர்மதி அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது, உளமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், அவரோடு இணைந்து பணியாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆரம்பித்த உடனேயே, அருமைச் சகோதரர், முன்னாள் அமைச்சர் சிவபதி அவர்கள் எம்.ஜி.ஆர் அணி சார்பாக, அகில இந்திய கபடிப் போட்டியை இந்த திருச்சிராப்பள்ளி நகரத்திலே நடத்தி, இன்றைக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குப் பெருமை சேர்த்தார். அவருக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதனை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே!

இன்றும் நமதே!

நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

அறிவிப்புகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்

★ மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கொட்டப்பட்டு கிராமத்தில், ஒருங்கிணைந்த பேருந்துநிலையம் அமைக்க கலந்தாலோசகர் (Consultant) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை, தற்போது தொழில் நுட்ப மற்றும் நிதி மதிப்பீடு கூர்ந்தாய்வு செய்து, உரிய வணிக முறையை (Business Model) முடிவு செய்து செயல்படுத்தப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் கட்டப்படவிருக்கும் பாலங்கள்

★ திருச்சி–சிதம்பரம் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கல்லக்குடி – தாப்பாய் சாலையிலுள்ள காட்டாற்றின் குறுக்கே, ஒரு பாலம் கட்டப்படும்.

★ ஏரகுடி–மகாதேவி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். துலுக்கம்பட்டி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். தண்டலை–திருத்தலையூர் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். சமயபுரம் – கீழக்கண்ணுகுளம் (வழி) மண்ணச்சநல்லூர் – திருப்பஞ்சிலி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். துவரங்குறிச்சி–அடைக்கம்பட்டி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். இலுப்பூர்–வளநாடு சாலையில் ஒரு பாலம் புடலாத்தி–மாராடி–கோட்டப்பாளையம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். கொப்பம்பட்டி – விஸ்வாம்பாள் சமுத்திரம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். பைத்தம்பாறை–சேருகுடி சாலையில் ஒரு பாலம் கட்டப்படும். வாளவந்தி–துலையாநத்தம் (வழி) மங்களம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

காட்டூர்–இலால்குடி ரயில் நிலையங்களுக்கு இடையே சாலை மேம்பாலம்

★ சென்னை–திருச்சிராப்பள்ளி வழித்தடத்தில், காட்டூர் மற்றும் லால்குடி ரயில் நிலையங்களுக்கிடையே தற்போதுள்ள ரயில்வே கடவு எண்.226க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்டப்படும்.

திருவெறும்பூர் ரயில் நிலையம் அருகில் சாலை மேம்பாலம்

★ திருச்சிராப்பள்ளி – கீழ்கல்கண்டார்கோட்டை சாலையில், மஞ்சத்திடல்–திருவெறும்பூர் ரயில் நிலையங்களுக்கிடையே உள்ள கடவு எண்.323க்கு மாற்றாக, சாலை மேம்பாலம் கட்டப்படும்.

ஸ்ரீரங்கம் – திருச்சி டவுன் ரயில் நிலையங்களுக்கிடையே, சாலை மேம்பாலம்

★ காவேரி சாலையிலுள்ள ரயில்வே கடவு எண்.249க்கு பதிலாக, ஸ்ரீரங்கம் மற்றும் திருச்சி டவுன் ரயில் நிலையங்களுக்கிடையே, சாலை மேம்பாலம் கட்டப்படும்.

துறையூருக்கு புறவழிச்சாலை

★ துறையூர் நகரத்திற்கு இரண்டாம் கட்ட புறவழிச்சாலை அமைக்கப்படும்.

திருச்சி–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையை, நான்கு வழிச்சாலையாக மேம்படுத்துதல்

★ திருச்சி முதல் நாமக்கல் வரை, 77 கிலோ மீட்டர் நீளமுள்ள (மாநில நெடுஞ்சாலை எண்.25) சாலையினை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்த கொள்கை அளவில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் 12.05.2017இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இச்சாலையினை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்த தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் மீது தேசிய நெடுஞ்சாலை அலகு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மணப்பாறை தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பயணியர் விடுதியைப் புதுப்பித்தல்

★ மணப்பாறை தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பழமை வாய்ந்த பயணியர் விடுதி, பழுது நீக்கி புதுப்பிக்கப்படும்.

மக்கள் நல்வாழ்வுத்துறை முலம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட வுள்ள திட்டங்கள்

★ ‘கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை’ மற்றும் லால்குடி, முசிறி, மணப்பாறை, ஸ்ரீரங்கம் மற்றும் துறையூர் மருத்துவமனைகளில் மாரடைப்பு நோயை. ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதலுதவி அளிக்க ஏதுவாக மாரடைப்பு சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

★ ‘கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்’. மருந்து எதிர் வீரிய காச நோய் வார்டு ஏற்படுத்தப்படும். திருச்சிராப்பள்ளி நகரில் ஒரு புதிய மருந்து கிடங்கு அமைக்கப்படும்.

★ மணப்பாறை அரசு மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன், ஆய்வக கருவிகள், ‘டயாலிசிஸ்’ கருவி, ‘எண்டோஸ்கோப்’ கருவி, புற்றுநோய்சிகிச்சைக்கான கீமோதெரபி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ மணப்பாறை வட்டத்தில், ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார சேவைத் திட்டம் செயல்படுத்தப்படும். இனாம்குளத்தூர் வட்டத்தில், கண் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும். நாவல்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தில், புதிய பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

தேனி போல சுறுசுறுப்பான மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு, தேனியில் நூற்றாண்டு விழா

மக்கள் பிரச்சினைகளை, தமது சொந்தப் பிரச்சினையாகக் கருதி அதைத் தீர்த்து வைத்தவர்!

மகளிரின் நலன் காக்க,
உழவரின் தொழில் காக்க,
வறியவரின் வாழ்வு காக்க,
தமிழரின் பெருமை காக்க,

தர்மத்தின் மறு அவதாரமாகத் தரணியில் அவதரித்த தங்கத்தாரகை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், தலைமை பொறுப்பேற்றுள்ள, மிகச் சிறப்பாக எழுச்சியாக தலைமையுரை ஆற்றியுள்ள தேனி மாவட்டத்தின் மண்ணின் மைந்தரும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நம்பிக்கையை பெற்றவருமான, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களே!

வரவேற்புரையாற்றியுள்ள அரசு செயலாளர் திரு.வெங்கடேசன் அவர்களே! மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். பார்த்திபன் அவர்களே! கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி

ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ந. வெங்கடாசலம் அவர்களே! சிறப்பான இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற கழகத்தினுடைய அவைத் தலைவர் முன்னாள் அமைச்சர் திரு.மதுசூதனன் அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு. முனுசாமி அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களே, முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு. நத்தம் விசுவநாதம் அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே! தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்!

தேனி மாவட்டத்தைப் பற்றி ஒரு சில பெருமைகளை, இங்கே எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மலைகள், காடுகள், ஆறுகள், ஓடைகள், அருவிகள், அணைகள், குளங்கள், தோட்டங்கள், விளைநிலங்கள் என இயற்கை எழில் கொஞ்சும் பசுமை மாவட்டமாகத் திகழும் தேனி மாவட்டம், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், ஆர்க்காடு நவாப் மற்றும் நாயக்க மன்னர்களால் ஆளப்பட்டுள்ளது. டெல்லி மன்னன், மாலிக்காபூர் கடைசியாகப் போரிட்டு வென்ற பகுதி, இங்குள்ள கம்பம் பகுதியாகும். கள்வன் என குற்றம் சாட்டப்பட்டு பாண்டிய மன்னனால் கொலையுண்ட கோவலனின் மனைவி கண்ணகி, சினம் கொண்டு, நெறி தவறிய பாண்டிய மன்னனையும், மதுரை மாநகரையும், கற்பின் கனலால் எரித்து விட்டு, விண்ணோத்தி பாறைக்கு வந்தடைந்த பிறகுதான் சினம் தணிகிறாள்.

அப்போது, விண்ணிலிருந்து வந்த கோவலன் கைம்பெண்ணாக இருந்த கண்ணகிக்கு மாங்கல்யம் அணிவித்து புஷ்பக விமானம் மூலம் விண்ணுக்கு அழைத்துச் சென்றதாகவும் சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்தச் சம்பவம் நடந்த இடம் ''மங்கல தேவி'' என்று அழைக்கப்படுகிறது என்கிறார்கள். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணகியின் சினத்தை தணித்த, – விண்ணோத்தி பாறை தேனியில்தாம் இருக்கிறது. அதனால்தான் தேனி மாவட்டம், இன்றுவரை அமைதி நிறைந்த சமாதான பூமியாகவே இருக்கிறது!

தற்போது நேரு சிலை அமைந்திருக்கும் முக்கூட்டு சாலையில் நடைபெறும் வணிகச் சந்தையில் கூடும் மக்கள் கூட்டத்தை உயரத்தில் இருந்து பார்க்கும் போது, தேன் அடையில் மொய்க்கும் தேனீ கூட்டத்தைப்போல தோன்றியதால் இந்தப் பகுதிக்கு. 'தேனி' என்று சுவையான பெயர் ஏற்பட்டதாகவே நான் கருதுகிறேன்.

தமிழகத்தில், காவிரி டெல்டாவுக்கு அடுத்தபடியாக, நெல் விளையும் பகுதிகளாக கூடலூரிலிருந்து வீரபாண்டி வரை 6,100 ஹெக்டேர் பரப்பளவிலான பகுதிகள் முல்லைப் பெரியாறு பாசனத்தில், இருபோக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் தேனி மாவட்டம் வேளாண் சார்ந்த மாவட்டமாக அமைந்து, வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தைக் காத்து வருகிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற கணியன் பூங்குன்றனாரின் தத்துவ மொழிக்கு உயிர் கொடுத்தவர் ஜான் பென்னி குயிக். முல்லைப் பெரியாறு அணையைப் பல இடையூறுகளுக்கு நடுவில், தமது சொந்தப் பணத்தை செலவுச் செய்து கட்டிய கர்னல் ஜான் பென்னி குயிக் அவர்களை, இப்பகுதி மக்கள் தெய்வமாக வணங்கிப் போற்றி வருகிறார்கள்!

நாடு, மதம், மொழி, இனம் இவற்றைக் கடந்து முல்லை பெரியாறு அணையை கட்டி முடித்த கர்னல் ஜான் பென்னி குயிக் அவர்களின் பிறந்த நாளான 15.01.2013 அன்று முல்லைப் பெரியாறு படுகையில் அவருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

முல்லைப் பெரியாறு அணை, "சிறிய பிருந்தாவனம்" என்று அழைக்கப்படும் வைகை அணைப்பூங்கா, சோத்துப் பாறை அணை, கும்பக்கரை அருவி, சுருளி அருவி, தேக்கடி, மேகமலை, கொழுக்கு மலை, அகமலை என பல சுற்றுலாத் தலங்களை தம்னகத்தே கொண்டது தேனி மாவட்டம். தேனி மாவட்டம், இயற்கை எழில் நிறைந்த பூமி மட்டுமன்று; இறைவன் அருள் பாலிக்கும் ஆன்மிக பூமியாகவும் திகழ்கிறது! ஸ்ரீகௌமாரியம்மன் திருக்கோயில், பெரியகுளம் பாலசுப்பிரமணிய கோயில், மாவூற்று ஸ்ரீவேலப்பர் கோயில், தேவதானப்பட்டி மூங்கிலணை, ஸ்ரீகாமாட்சியம்மன் திருக்கோயில், குச்சனூர் சுயம்பு சனீசுவரன் திருக்கோயில், நவாப் பள்ளிவாசல், கம்பம் வாவேர் பள்ளிவாசல், ராயப்பன்பட்டி தேவாலயம் போன்ற பல பழைமையான அனைத்து மதங்களுக்குமான புனிதத் தலங்களைக் கொண்டது தேனி மாவட்டம்.

தேனி மாவட்டத்தைச் சார்ந்தவரும், நீதிக் கட்சித் தலைவருமான, திரு.பி.டி.ராஜன் அவர்கள், சென்னை மாகாண முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாட்டின் முதலமைச்சர்களாக பொறுப்பேற்றவர்கள்.

அதன் பிறகு, இந்தத் தேனி மாவட்ட மண்ணின் மைந்தரும், தற்போதைய துணை முதலமைச்சருமானஅண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவி வகித்திருக்கிறார்கள்.

ஆக, நான்கு முதலமைச்சர்களைக் கண்ட மாவட்டம் இந்த தேனி மாவட்டம் என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். இசைஞானி இளையராஜா, கவிஞர் நா. காமராசன், இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன், நகைச்சுவை நடிகர் சுருளிராஜன், நடிகர் மேஜர் சுந்தர்ராஜன், இயக்குநர் பாரதிராஜா போன்ற கலைஞர்கள் மற்றும் இப்போதும், கலை உலகிலும், இலக்கிய உலகிலும் கோலோச்சிக் கொண்டிருக்கின்ற பல பிரபலங்களைப் பெற்று, புகழ் பெற்ற மாவட்டம் தேனி மாவட்டமாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் கலை வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் முக்கியமான இடத்தைப் பிடித்தது இந்த அழகான தேனி மாவட்டமாகும். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் உடல் நலக்குறைவால் அமெரிக்காவில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்த நிலையில், 1984ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், ஆண்டிபட்டி தொகுதியில் போட்டியிட்டார்கள்.

தமிழக அரசியல் வரலாற்றிலேயே, ஏன் இந்திய அரசியல் வரலாற்றிலேயே, வெளிநாட்டில் இருந்துகொண்டு, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடாமலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மற்றும் முதலமைச்சர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தாம்!

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பும்போது மூன்றாவது முறையாக தமிழ் நாட்டின் முதலமைச்சராகத் தமிழ் மண்ணில் கால் பதிக்க முக்கியக் காரணம் ஆண்டிபட்டித் தொகுதி மக்கள்தாம்! இந்தப் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் தேனி மாவட்ட மக்களையே சாரும்.

தமிழ்நாட்டில் எத்தனையோ தொகுதிகள் இருக்கும்போது, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆண்டிபட்டித் தொகுதியை தேர்வு செய்யக் காரணம், ஆண்டிபட்டி மக்கள் தம்மீது அளவுகடந்த பாசமுள்ளவர்கள் என்பதனை அவர் மாட்டுக்காரவேலன் படப்பிடிப்பின் போது தெரிந்து கொண்டது தான்! வைகை அணைக்கட்டில் நடந்த மாட்டுக்காரவேலன் படப்பிடிப்பின்போது, சுற்று வட்டார கிராமங்களில் உள்ள மக்கள், அதிலும் குறிப்பாக. பெண்கள் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு வந்து காத்திருந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அன்பு முகத்தைப் பார்த்து பரவசப்படுவார்களாம்.

அப்படிப்பட்ட மக்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நல்ல பண்புக்காகவும், குணத்திற்காகவும், வள்ளல் தம்மைக்காகவும், அன்பு முகத்திற்காகவும் 67.40 சதவீத வாக்குகளை அளித்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். இது வரலாற்றுச் சாதனையாகும்!

தாய்மார்கள் எப்படி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது – பற்றும் பாசமும் வைத்திருந்தார்களோ, அந்த அளவிற்கு, தாய்க்குலத்தின் மீது மாண்புமிகு

புரட்சித்தலைவர் அவர்களும் தனி மரியாதையும், பாசமும் வைத்திருந்தார்கள். அதற்கு எத்தனையோ சம்பவங்களை உதாரணங்களாகச் சொல்லலாம். இங்கே ஒன்றிரண்டு சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கோடான கோடி தொண்டர்களில், ஆசிரியராகப் பணிபுரிந்த இஸ்லாமிய இளைஞரும் ஒருவர், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் மீது வைத்திருந்த அதீத பற்றினால், தன் வேலையையும் கூட உதறித்தள்ளி விட்டு, எம்.ஜி.ஆர்மன்றத்தின் முழுநேர ஊழியராக இணைந்து மக்களுக்குச் சேவை செய்தார்.

அந்தத் தொண்டரை ஈன்ற தாய் அதற்காக வருத்தப்படவில்லை. ஒருசமயம், அந்தத் தாய் மரணப் படுக்கையில் இருந்தார். கூடவே வறுமையும் அவர்களை வாட்டியது. இருப்பினும். அந்தத் தாய்க்கு ஒரு கடைசி ஆசை இருந்தது. தாம் இறப்பதற்கு முன் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை நேரில் பார்த்துவிட வேண்டும் என்பதுதாம் அந்த ஆசை.

நடக்கக்கூட முடியாமல், படுக்கையில் கிடக்கும் இந்த வயோதிகத் தாய்க்கு இப்படி ஒரு பேராசையா ? என்று உறவினர்கள் கிண்டலடித்தார்கள். மகனிடம் தன் ஆசையை நிறைவேற்ற அந்த தாய் கெஞ்சினாள்.

மாண்புமிகு எம்.ஜி.ஆர்அவர்களோடு தொடர்பில் இருக்கும் பலரிடம், தம் தாயின் ஆசையைக் கூறுகிறார் அந்த இளைஞர். பலன் ஒன்றுமில்லை. கடைசி முயற்சியாக, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு இதுகுறித்து கடிதம் அனுப்பினார். அந்தக் கடிதம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குக் கிடைத்தது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அக்கடிதத்தை படித்துப் பார்த்து அந்தத் தாயின் கடைசி ஆசையை அறிகிறார்.

அந்த தாய் தம் மீது கொண்டிருந்த பாசத்தை நினைத்துக் கண்ணீர் வடிக்கிறார் ! ‘‘அழைத்தவர் குரலுக்கு வருவேன்’’, என்றான் கீதையில் கண்ணன். ‘‘தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்’’, என்றார் ஏசுபிரான். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், தம்மை அந்தத் தாய் அழைத்ததாகவே கருதி, அந்தத் தாயை சென்று பார்க்க முடிவு செய்கிறார்.

திண்டிவனத்தில் ஒரு திருமண விழாவை முடித்துக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் பாண்டிச்சேரியில் இருக்கும் அந்த தாயின் இருப்பிடத்திற்கு ரகசியமாக விரைகிறார். இஸ்லாமிய குடும்பங்கள் வசிக்கும் அந்த தெருவில் ஓர் ஓலைக் குடிசையின் முன் மாண்புமிகு புரட்சித் தலைவருடைய கார் நிற்கிறது.

அங்கு அந்தத் தொண்டனை காணவில்லை. வீட்டின் கதவு திறந்து கிடக்கிறது. அவ்வீட்டின் உள்ளே நுழைந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்,

அந்த தாயை மெல்ல எழுப்புகிறார். கண்களை மெல்லத் திறந்த அந்த தாய்க்கு இன்ப அதிர்ச்சி. அருகில் இருந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்த்ததும் அந்த தாயால் நம்ப முடியவில்லை. தமது பார்வை மங்கிய கண்களினால் உற்று உற்றுப் பார்க்கிறார் அந்தத் தாய்! மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கரங்களை பற்றிக் கொள்கிறார். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 'அம்மா' என்று கனிவான குரலில் அழைக்கிறார். அந்தத் தாய் எழுந்து உட்கார முயற்சிக்கிறார். அதைத் தடுத்து, அவரை நலம் விசாரித்து விட்டு அவர்களுடைய கரங்களில் பண முடிப்பை மெல்லத் திணித்து விட்டு அங்கிருந்து விடைபெறும் போது, அந்த மூதாட்டி "இனி எனக்கு இந்த கண்கள் வேண்டாம். உங்களைப் பார்த்து விட்டேன், இனி என் உயிர் போனாலும் போகட்டும்"!, என்று கண்ணீர் விடுகிறார் அந்த தாய்! அன்று ஒலித்த அந்தத் தாயின் குரல்தான், தலைமுறை தலைமுறையாய் பெண்களின் ஒருமித்தக் குரலாய் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர்கள் ஆயிரம் பேர் உருவாகலாம். ஆனால் மக்கள் தலைவர் எப்போதாவது தாம் தோன்றுவார்கள். அப்படி மக்கள் திலகமாகத் தோன்றியவர்தாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், அந்த நாட்டில் உள்ள பெண்கள் தன்னிறைவோடும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும். பெண்கள் நிம்மதியாக இருந்தால்தான், ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருக்கும். ஒவ்வொரு குடும்பமும் நன்றாக இருந்தால் தான், ஒவ்வொரு ஊரும் நன்றாக இருக்கும். ஒவ்வொரு ஊரும் நன்றாக இருந்தால் தான், ஒவ்வொரு நாடும் நன்றாக இருக்கும்! இதைத் தீர்க்கமாகப் புரிந்துகொண்டதால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மகளிர் நலத் திட்டங்களில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

தன் தாய் மீது, பெரும் பாசமும் பக்தியும் கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள்! அதனால்தான் தாய்க் குலத்தின் மீதும் மிகுந்த அக்கறையுடன் இருந்தார்கள். மகளிருக்காக, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தீட்டிய திட்டங்கள்தான் காலகாலமாக மகளிர் பட்ட தும்பங்களுக்கும், துயரங்களுக்கும் தீர்வாக இருந்தன. ஆதரவற்ற விதவைத் தாய்மார்களின் மகள்களுக்குத் திருமண உதவிகள், பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு மகளிர் விடுதிகள் என பல்வேறு மகத்தான திட்டங்களின் மூலம், ஏழைப் பெண்களின் இதயத்தில் குடிகொண்டார்கள்.

"தெருவெல்லாம் பள்ளிகள் கட்டுவோம்
கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம் ஊரில்

கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப் போக்குவோம்" – என்ற வைர வரிகளே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஏழை மக்களின்பால் கொண்டிருந்த

அக்கறையைக் காட்டுகிறது. குழந்தைகளைப் படிக்க வைக்க முடியவில்லையே என்று ஏங்கிய பெண்களின் துயரங்களைப் போக்கத்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அடுக்கடுக்காகக் குழந்தைகள் நலத்திட்டங்களையும், மகளிர் நல திட்டங்களையும் கொண்டு வந்தார்கள்.

"பொருள் கொண்ட பேர்கள் – மனம் கொண்டதில்லை
தரும் கைகள் தேடி – பொருள் வந்ததில்லை –
மனம் என்ற கோவில் திறக்கின்ற நேரம்
அழைக்காமல் அங்கே தெய்வம் வந்து சேரும்" –என்ற பாட்டுக்கேற்ப

பொருள் இருப்பவர்களிடம் மனம் இல்லை, மனம் இருப்பவர்களிடம் பொருள் இருப்பதில்லை. இந்த இரண்டும் ஒரே மனிதனிடம் இருந்தது என்றால் அது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் தான் இருந்தது. மக்கள் பிரச்சினைகளை, தம் சொந்த பிரச்சினையாகக் கருதி, அவற்றைத் தீர்த்து வைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள். மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர ஏதாவது ஒரு திட்டத்தையாவது இதற்கு முன் ஆண்ட தி.மு.க.வினர் கொண்டு வந்தனரா ?

தமிழ்நாட்டின் நலனுக்காக, அவர்கள் மத்திய அரசிடம் வாதிட்டுப் பெற்று வந்த திட்டங்கள் எவை எவை என்பதனை அவர்கள் கூறமுடியுமா ? நீங்கள் நடுநிலையோடு எண்ணிப் பார்க்க வேண்டும் !

அவர்களுடைய ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தாரையும் வளப்படுத்த மட்டுமே பயன்பட்டனவே தவிர, ஏழைகளுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒரு காலமும் அவை பயன்பட்டது கிடையாது !

"குடும்பத்தில் ஆளுக்கொரு பதவி! முதலமைச்சர், மத்திய அமைச்சர், மாநில அமைச்சர் மற்றும் மாவட்டத்திற்கு மாவட்டம் குறுநில மன்னர்கள் என்று ஒரு குடும்பமே அதிகார மையமாக இருந்த அவல நிலையை, உலகில் வேறு எந்த நாட்டிலாவது நாம் பார்த்ததுண்டா ?" என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கேட்டிருந்தார்கள்.

அறிவியல் பூர்வமான மற்றும் நுணுக்கமான ஊழலை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தி, செயல்படுத்திக் காட்டியவர்கள், இன்றைக்கு வீதிக்கு வந்து, ஊழலுக்கு எதிரான போராட்டம், ஊழலுக்கு எதிரான நடைப் பயணம், ஊழலுக்கு எதிரான பேரணி, ஊழலுக்கு எதிரான உண்ணாவிரதம் என்று பல வேஷங்கள் போட்டு, மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள் !

நீங்கள் எத்தனை வேஷம் போட்டாலும், மக்களின் 'எக்ஸ்ரே' கண்களுக்கு உங்களின் உண்மையான முகம் தெரிந்துவிடும் !

“நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும்
நாள் வரும் போது
அன்று சிரிப்பவர் யார்?
அழுபவர் யார் ?
தெரியும் அப்போது”

– என்று அன்றைக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் பாடியிருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள், தீயவற்றை உடனே மறந்து விடுவார்கள், நல்லவற்றை காலம் முழுவதும் நினைவில் வைத்துக் கொள்வார்கள். நீங்கள் நினைவுப்படுத்த விரும்பினால், உங்கள் ஊழல்கள்தாம் மக்களின் நினைவுக்குவரும். அது உங்களுக்கு எதிர்வினைகளைத்தான் உருவாக்கும்! எத்தனை பொய் மூட்டைகளை நீங்கள் அவிழ்த்து விட்டாலும், இனி ஒரு காலமும் உங்களால் மக்கள் மனதில் இடம் பிடித்து, ஆட்சி அமைக்க முடியாது என்பதனைப் புரிந்து கொள்ளுங்கள்!

நாங்கள் இந்த மக்களுக்கு நல்லவற்றை மட்டுமே செய்து வந்திருக்கிறோம். எங்களை மட்டுமே, மக்கள் மனதில் நிறுத்தியிருக்கிறார்கள்! மக்களுக்காக, இன்னும் பல நூற்றாண்டுகள் இந்த இயக்கம் பாடுபடும். எங்களுக்கு எப்போதும் தோல்வியே கிடையாது. காரணம், எங்கள் மகத்தான தலைவர்கள், எங்களை வளர்த்த விதம் அப்படி. “அண்ணன் அன்று நல்ல நல்ல கருத்து, அழகு தமிழில் சொல்லி சொல்லிக் கொடுத்து வளர்த்த பிள்ளையடா! அதனால் தோல்வி இல்லையடா” –

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் பாடலையே உங்களுக்கு நாங்கள் பதிலாகக் கூறுகின்றோம். 2002ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆண்டிபட்டித் தொகுதியில் நின்று வெற்றி பெற்று முதலமைச்சரானார்கள். அதற்கு நன்றி கூறும் விதமாக 15.04.2002 அன்று, தேனியில் நடந்த ஒரு அரசு விழாவில் பேசும்போது,

“ஆண்டிபட்டி என்னை சட்டமன்ற உறுப்பினராக்கியது,
தமிழகம் என்னை முதலமைச்சராக்கியது,
நான் முதலமைச்சராக
ஆண்டிபட்டி முன்மொழிந்தது,
தமிழகம், அதை வழி மொழிந்தது!”

என்று பெருமையாகப் பேசினார்கள்.

தேர்தல் நேரத்தில், வாக்கு சேகரிக்க நடக்கும் கூட்டங்களில் எல்லாம், தி.மு.க.–வினர், “இவர்களால் செய்ய முடியாததையெல்லாம் செய்வோம்!” என்று பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். வெற்றி பெற்றால், வாக்குறுதிகளை எளிதாக மறந்துவிடுவதும், தோற்றுப் போனால் ஆளுங்கட்சியை எளிதாகக் குறைகூறுவதுமே இவர்களுடைய பண்பாடாகிவிட்டது! ஆனால், அ.இ.அ.தி.மு.க. மக்களைச் சந்திக்கின்ற

ஒவ்வொரு நாளும் மக்களுக்கு என்ன தேவையோ, அதை அறிந்து, அவற்றையெல்லாம் விரைந்து செய்து கொடுப்பதில் முனைப்பாக இருக்கின்ற பேரியக்கம். எங்கள் “சொல் – வாக்கு” சுத்தமாக இருக்கிறது. அதனால் மக்களிடையே எங்களுக்கு “செல்வாக்கு” பெருகி இருக்கிறது.

எனவேதான், மக்கள் தங்கள் “நல்–வாக்குகளை” எங்களுக்கு அளிக்கிறார்கள். ‘பாரத ரத்னா’ டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா என்ற பெயரில் அரசுப் பணத்தை விரயம் செய்வதாக இவர்கள் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் நடக்கும் நூற்றாண்டு விழாவிற்கும் பெரிய மாநாடு போலக் கூடும் மக்களின் எழுச்சியைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சியில் அவிழ்த்து விடும் பொய்ப் பிரச்சாரம் இது என்பதனை ... இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கும் பொதுமக்களும், இங்கு வழங்கப்படும் நலத் திட்டங்களால் பயன்பெறும் பயனாளிகளும், தமிழக அரசினால் கோடிக்கணக்கிலான ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களினால் பயனடையும் தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவர்!

15.04.2002 அன்று தேனியில் நடந்த கூட்டத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடன் தமிழ்நாடு அமைச்சரவையே மேடையில் இருந்தது! அதை நினைவுபடுத்தும் வகையில்தான், இன்று இந்த மேடையில் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள் முன்னிலையில், மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றைத் தொடங்கி வைப்பதிலும், அறிவிப்பதிலும் நான் பெருமைப்படுகின்றேன்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில், 9 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் உட்பட, 19 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 25 பணிகளை, நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன்.

பொதுப்பணித் துறையின் சார்பில், 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்பட உள்ள தடுப்புச் சுவர் மற்றும் வாய்க்கால் புனரமைத்தல் பணிகள் உட்பட, 65 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 35 பணிகளுக்கு, நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்! பல்வேறு துறைகளின் சார்பில், 20 ஆயிரத்து 456 பயனாளிகளுக்கு, 99 கோடியே 47 இலட்சம் ரூபாய் வழங்க உள்ளேன்!

இந்த அரசு, பொறுப்பேற்றது முதல், இன்று வரை, 11 ஆயிரத்து 16 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 35 ஆயிரத்து 108 பணிகளைத் தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 991 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6,813 பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம், 15 ஆயிரத்து 7 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 41 ஆயிரத்து 921 பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர, குறிப்பாக,

கடந்த ஆறு ஆண்டுகளில், தேனி மாவட்டத்திற்கென அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய ,நிலுவையிலுள்ள விவசாயக் கடன்கள் 85 கோடியே 46 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், 12 ஆயிரத்து 484 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 61 ஆயிரத்து 364 மாணாக்கர்களுக்கு, 70 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன! மேலும், விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

படித்த ஏழைப் பெண்களின் திருமண உதவிதிட்டத்தின்கீழ், 15 ஆயிரத்து 532 பெண்களுக்கு, 53 கோடியே 55 இலட்சம் ரூபாய் திருமண உதவி நிதியும், 62.06 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், நிறைய பயனாளிகளுக்கு அம்மாவினுடைய அரசு 36 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை அளித்துள்ளது. முதலமைச்சரின் 'சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ்,' 2 ஆயிரத்து 789 வீடுகள், 71 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின்கீழ், 36 கோடியே 88 இலட்சம் ரூபாய் செவில், 2 ஆயிரத்து 615 பணிகள் எடுக்கப்பட்டு, 2 ஆயிரத்து 437 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில், நகராட்சிப் பகுதிகளில், 39 கோடி ரூபாய் செலவில், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு, 8702.438 மீட்டர் நீளம் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளன. 17 ஆயிரத்து 333 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிகள் மூலம், 571 கோடி ரூபாய் மூலம் நேரடிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையின் மூலம், 2 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒரு செவிலியர் கல்லூரியும் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில், 48 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 8 புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 35 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிய மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பிரிவின்கீழ், 342 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் 837.41 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 96 சிறு பாலப் பணிகள், 78 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டப்பட்டுள்ளன.

மகசூல் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரண உதவித் தொகையாக, 15 கோடியே 19 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதம்மூலம், 18,159 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 பணிகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. மேலும் 1 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 14 பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. விவசாயிகளுக்கு, விலையில்லா வண்டல்மண் வழங்கும் திட்டத்தின்கீழ், 173 குளங்கள் மற்றும் கண்மாய்களின் மூலம், 9,30,196 கியூபிக் மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 13,941 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் எதிர்க் கட்சிகள் பாராட்டமாட்டார்கள். மாறாக, இந்தத் திட்டங்களையெல்லாம் குறைகூறுவதையே வழக்கமாகவும், பழக்கமாகவும் கொண்டுள்ளார்கள். ஆனால், எங்களைப் பொறுத்தவரை மக்கள் பாராட்டினாலே போதும்.

எதற்கெடுத்தாலும் குறைகூறுவது என்பது, நீங்கள் சார்ந்த இயக்கத்தின் கொள்கை கோட்பாடாகிவிட்டது! இனிமேல், அதை மாற்ற முடியாது என்பது மக்களுக்குத் தெரியும்! ஒரே தாயின் குழந்தைகளான இரண்டு பச்சைக் கிளிகள் இருவேறு சூழ்நிலையில் வளர்க்கப்படுகின்றன. ஒரு கிளி முரடர்களால் வளர்க்கப்படுகிறது. மற்றொரு கிளி சான்றோர்களால் வளர்க்கப்படுகிறது. முரடர்கள் வளர்க்கும் கிளி எப்போதும் வெட்டு, குத்து என்றே பேசுகின்றது. சான்றோர்கள் வளர்க்கும் கிளி, “வாருங்கள் உட்காருங்கள்” என்று பேசுகின்றது. காரணம், அவை தினந்தோறும் காதுகளில் கேட்ட வார்த்தைகளைப் பொறுத்து அவற்றின் பேச்சுகள் அமைந்திருந்தன. அப்படித்தாம் சான்றோர்களால் வளர்க்கப்பட்ட நம் இயக்கத்தினர் நல்லவற்றைப் பேசவும் நல்லவற்றைச் செய்யவும், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களாலும் பயிற்சி பெற்றவர்கள். இதனைக் கூறுகின்ற போது, எனக்கு ஒரு குட்டிக் கதை நினைவுக்கு வருகிறது.

ஓர் ஊரில் ஒரு சிறுவன் மரத்தில் ஏறி, கிளையில் அமர்ந்து கொண்டு அந்தக் கிளையின் அடிப்பாகத்தை வெட்டிக் கொண்டிருந்தான். கிளை முறிந்தால், தான்

விழுந்து விடுவோம் என்று அவனுக்கு தெரியவில்லை! ஒரு சில நிமிடங்களில், அந்தக் கிளை முறியும் நிலையில் இருந்தது. உயரத்திலிருந்து விழுந்தால், அந்த சிறுவனின் உயிருக்கு ஆபத்து நேரிடும்! இதை மேலோகத்திலிருந்து பார்த்துவிட்ட பார்வதிதேவி, சிவ பெருமானிடம் ‘‘எம்பெருமானே! அதோ அந்த சிறுவன் தனக்கு ஆபத்து ஏற்படப்போகிறது என்பது கூடத் தெரியாமல், கிளையை வேகமாக வெட்டிக் கொண்டிருக்கிறான். சில நிமிடங்களில் கிளை முறியப் போகிறது, அவனை ஆபத்திலிருந்து காப்பாற்றுங்கள்!’’ என்று கேட்கிறார்.

அதற்கு சிவபெருமான், ‘‘விழட்டும் பார்க்கலாம், பொறுமையாக இரு’’ என்கிறார். ‘உயரத்திலிருந்து விழுந்த பிறகு என்ன செய்யமுடியும், அனைத்து உயிர்களுக்கும் தாய், தந்தையாக நாம் இரண்டு பேரும் இருக்கும் போது அச்சிறுவனுக்கு ஆபத்து ஏதும் ஏற்படாமல் பாதுகாப்பது நமது கடமையல்லவா?’ என்று பார்வதி தேவி கேட்கிறார்.

அதற்கு சிவபெருமான் ‘‘பார்வதிதேவி, அவனுக்கு ஆபத்து ஏற்படாது! மரம் ஒடிந்து, அவன் கீழே விழும்போது ‘‘அம்மா’’ என்று அலறினால் இங்கிருந்தபடியே அவனை நீ தாங்கிப் பிடி, ‘‘அப்பா’’ என்று அலறினால் நான் தூக்கிப்பிடித்து காப்பாற்றி விடுகிறேன்’’ என்கிறார். அந்த நொடியே கிளை ஒடிந்து, சிறுவன் விழுந்து கொண்டிருந்தான்! அப்போது அவன் ‘அம்மா’ என்றோ, ‘அப்பா’ என்றோ, அழைக்கவில்லை. மாறாக ‘‘ஐயோ’’ என்று அலறினான்! அதனால், சிவபெருமான், பார்வதி தேவி இருவரும் அவனைக் காப்பாற்ற முயலவில்லை. அவன் கீழே விழுந்து விட்டான். ‘‘பார்வதி பார்த்தாயா? அவன் நாக்குக்கு நல்லவற்றைப் பேசப் பயிற்சி கொடுக்கவில்லை. அதனால்தான், அவன் ‘‘ஐயோ’’ என்று அலறி, ஆபத்தைத் தேடிக் கொண்டான்’’ என்று சிவபெருமான் கூறினார்.

எனவே, நல்லவற்றைப் பேசிப் பயிற்சி பெறாதவர்கள், மிக உயரத்தில் இருந்து விழுந்ததைப்போல், நீங்கள் மக்கள் மனதிலிருந்து கீழே விழுந்து விட்டீர்கள். இது நிதர்சனம்!

எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சென்னையிலே மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகின்றேன் என்று சொல்லி, ஒரு சில இடங்களுச் சென்று பார்த்துவிட்டு பேட்டி கொடுக்கிறார். அவர், ‘‘தாழ்வான பகுதிகளிலெல்லாம் மழைநீர் தேங்கியிருக்கின்றது. இந்தத் தண்ணீரை அகற்றமுடியாத அரசு!’’ தேவைதானா? இது செயலிழந்த அரசு என்று அரசைப்பற்றி விமர்சனம் செய்கின்றார். நாங்கள் கேட்கின்றோம். இவர் ஐந்தாண்டு காலம் சென்னையினுடைய மேயராகவும் இருந்தார், ஐந்தாண்டு காலம் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், துணை முதலமைச்சராகவும், ஆக, 10 ஆண்டுக்காலம் சென்னை மாநகரத்தில் எதுவுமே செய்யவில்லை. ஆனால், இரண்டு பொறுப்புகளுமே, பதவிகளுமே உள்ளாட்சி அமைப்பின்கீழ் வருகின்ற பதவிகள். இந்த உள்ளாட்சி அமைப்பின் மூலம், நிறைய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சொன்னால்,

இந்த இரண்டு பொறுப்புகளையும் அவர் வைத்திருந்தாரே, ஏன் அப்பொழுதெல்லாம் இந்த சென்னை மாநகரத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லையா? இப்பொழுதுதான் ஞானம் வந்ததா? இன்றைக்கு, இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு விரைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு, சென்னை மாநகரத்தில் மழைக்காலங்களில்தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பது மாநகராட்சி ஊழியர்களால் உடனுக்குடன் அகற்றப்பட்டு வருகின்றது. ஆனால், இவர் மேயராக இருந்த காலத்தில், வாரத்திற்கு ஒரு முறைதாம் சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கே சென்றதாகச் சொல்கின்றார்கள், அப்போதெல்லாம் சென்னை மாநகரத்தைச் சுற்றிப் பார்க்கவில்லை. இப்பொழுது மட்டும் நாள்தோறும் கொளத்தூர் பகுதிக்குச் செல்கிறார். அப்பொழுதுபோய் பார்த்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காதே? இப்பொழுது செல்வதைப்போல, இவர் மேயராக இருந்தபொழுதும், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுதும், சென்னை மாநகராட்சிப் பகுதியை எல்லாம் சுற்றிச் சுற்றி வலம் வந்திருந்தால் இந்தத் தண்ணீர் தேங்கியிருக்கும் நிலை ஏற்பட்டிருக்காது! அப்பொழுதெல்லாம் கோட்டை விட்டுவிட்டார்! இவருக்கு மக்கள் பதவி கொடுத்தபொழுது அந்தப் பதவியை சரியாகச் செய்ய தவறிவிட்ட காரணத்தினால், மக்கள் அவரை மறந்தார்கள்! இன்றைக்கு எதிர்க்கட்சியாகித் தலைவராகிவிட்டார்.

ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், அம்மா அவர்கள் இருந்தபொழுது, சென்னை மாநகர மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, வடிகால் வசதி செய்து தரவேண்டும் என்பதற்காக மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்காமல் அகற்றப்படவேண்டுமென்பதற்காக, சென்னை மாநகர மக்களுக்கு பாதிப்பில்லாமல் உருவாக வேண்டுமென்பதற்காக, சட்டப்பேரவை விதி 110இன்கீழ், கிட்டத்தட்ட, ரூபாய் 4,034 கோடி ஒதுக்கீடு செய்து முதற்கட்டமாக ரூபாய் 1,101 கோடி மதிப்பீட்டிலே திட்டம் தீட்டப்பட்டுப் பணிகள் தொடங்கப்பட்டன. கிட்டத்தட்ட 386 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, இப்பொழுது 300 கி.மீ. வரைபணி முடிந்து, எஞ்சியுள்ள பணிகளும் விரைவாக முடிக்கப்படும் நிலையில் உள்ளன.

அதேபோல, மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. இரண்டாம் கட்டம் ரூபாய் 1,800 கோடி மதிப்பீட்டில், ‘JAICA’ நிதியுதவித் திட்டத்தின்கீழ், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்தப் பணியும் விரைந்து முடிக்கப்பட்டு, கொசஸ்தலை ஆற்றின் வடிநிலப் பகுதிகளில். வடிகால் வசதி செய்து கொடுக்கின்ற பணி. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன், தொடங்கப்பட்டு விடும்.

அதுபோன்றே, கூவம் மற்றும் அடையாறு வடிநிலப் பகுதிகளில், வெள்ள பாதிப்புகளைத் தடுக்க, உலக வங்கி நிதியுதவி ஆதாரத்தில், நிதிகளைப் பெற்று

அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது! அம்மாவினுடைய அரசு தொடர்ந்து மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல 'KSW' என்ற திட்டத்தின்கீழ் தேவையான நிதியை, வெளிநாட்டிலிருந்து பெற்று அந்த நிதியின் வாயிலாக வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டு இன்றைக்கு சென்னை மாநகரத்திலே எப்பொழுது மழை வெள்ளம் வந்தாலும், தாழ்வான பகுதியிலே தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு, அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றது என்பதனை. இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆகவே, இவர்களுடைய ஆட்சிகாலத்தில் எதையுமே செய்யாமல் தவற விட்டுவிட்டார்கள். அம்மாவினுடைய ஆட்சியில்தான் திட்டம் தீட்டப்பட்டுச் செயலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றே வறட்சி வந்தாலும், வெள்ளம் வந்தாலும் அரசைக் குறை கூறுவது என்பதனை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமன்று, ஆட்சி அதிகாரத்திலே கிட்டத்தட்ட 14 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தார் இருந்தார்கள். மத்தியிலே காங்கிரஸ் தலைமையிலே ஆட்சி நடைபெற்றபொழுதும், பாரதீய ஜனதா ஆட்சி நடைபெற்றபொழுதும், நாடாளுமன்ற அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால், தமிழ்நாட்டிற்கு என்ன நன்மை செய்தார்கள் என்பதனை மட்டும் மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்போராட்டம் நடத்தி, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை, 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி, இந்த மக்களுடைய ஜீவாதார உரிமையைக் காத்து, இந்த மாவட்ட மக்களுடைய வயிற்றில் பால்வார்த்தவர்கள். தி.மு.க.வினர் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது இதனை எளிதாக நிறைவேற்றியிருக்கலாம். அப்பொழுதெல்லாம் சிந்திக்கவேயில்லை!

அதுமட்டுமன்று, காவிரி நதிநீர் மேலாண்மை வாரியம் அமைத்தார்களா என்றால், அதனையும் அமைக்கவில்லை! ஆகவே, அவர்கள் தங்கள் சுகத்திற்காகவும், தங்கள் அதிகாரத்திற்காகவும், தாங்கள் பணம் சம்பாதிப்பதற்காகவும்தான் மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இடம்பெற்றார்களேயொழிய, மக்களுக்காக அல்ல என்பதனை இந்த நேரத்திலே, தெள்ளத் தெளிவாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இருபெரும் தலைவர்கள், என்னென்ன திட்டங்கள் கொண்டு வரவேண்டுமோ, அத்தனை

திட்டங்களையும் நம்முடைய மக்களுக்குக் கொண்டுவந்து வழங்கியிருக்கின்றார்கள் என்பதனை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்டவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோன்று, உள்ளாட்சி மன்றத் தேர்தலை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தவில்லை என்று சொல்கின்றார். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே, உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்பு வெளியிட்டார்கள். தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவித்தார்கள். தி.மு.க.வினர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றார்கள். நாங்கள் தடுக்கவில்லை! திமுக–வினர் தாம் தடுத்தார்கள். நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன், உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசைக் குறை கூறுகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் வேண்டுமென்றே குறை சொல்ல முயன்று கொண்டு வருகிறார்கள் என்பதனை, மக்கள் நன்கு அறிவர்! இருபெரும் தலைவர்களுடைய திட்டங்கள், இன்றைக்கும் உயிர்நாடியாக இருந்து கொண்டிருக்கின்றன, நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசாக, அம்மாவினுடைய அரசு இருக்கின்றது என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சரும், நானும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல் செயல்படுவோம், எங்கள் ஆட்சியிலும், கட்சியிலும் எதிர்கட்சியினரான நீங்கள் எதையெதையோ எதிர்பார்த்துக் காத்திருந்தீர்கள்! மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் மறைவிற்குப் பிறகு இந்த இயக்கமே இருக்காது என்றுகூட நினைத்தீர்கள்! இறைவனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த இயக்கத்திற்குக் கொடையாக அளிக்கப்பட்டு இருந்ததால், இந்த இயக்கத்தைக் கட்டிக்காத்து, மீண்டும் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சியை நிலைநாட்டினார்கள்! அதுபோன்றே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை இறைவன் நம்மிடத்திலிருந்து பறித்துக் கொண்டாலும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே, “எனக்குப் பின்னாலும் இந்த ஆட்சி 100 ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்திலே, அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும்!” என்று இலட்சிய நோக்கோடு குறிப்பிட்டார்கள். அதன் தொடர்ச்சியாக, எனக்கு முன்னாலே மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு தொண்டன்கூட இந்த இயக்கத்திலிருந்து விலகவில்லை! தொட்டுக்கூட யாராலும் பார்க்க முடியவில்லை!

ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனுடைய உடலிலே ஓடுகின்ற இரத்தம் விசுவாசமுள்ள இரத்தமாக இருக்கின்ற

காரணத்தினாலே, ஒரு தொண்டனைக்கூட, நீங்கள், எங்கள் இயக்கத்திலிருந்து அசைத்துப் பார்க்கக்கூட முடியாது. ஆகவே, விசுவாசமுள்ள தொண்டர்களும், பொதுமக்களும் இருக்கின்றவரை, இந்த இயக்கத்தை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது என்பதனைத் திட்டவட்டமாக இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்!

அதுபோன்றே, பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். குடிமராமத்துத் திட்டம். தேனி மாவட்டம், விவசாய நிலம் நிறைந்த பகுதி. மழைக்காலங்களில் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக அங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களை ஆழப்படுத்தி, கிடைக்கும் வண்டல்மண்ணை விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரங்களாக இட்டுப் பயன்படுத்துகின்றார்கள். பருவமழை பொழிவதால், குளங்களை ஆழப்படுத்துவதன் மூலமாக நீர் அதிகமாகச் சேமிக்கப்படுகிறது. இதனால், நிலத்தடி நீர் உயருகிறது. விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிநீருக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. அற்புதமான ஒரு திட்டத்தை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். முதற்கட்டமாக, ரூபாய் 100 கோடி ஒதுக்கி, 519 ஏரிகளை தூர்வாரியிருக்கின்றோம். மேற்கொண்டு ரூபாய் 300 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கினோம், பருவமழை தவறிய காரணத்தினாலே, நிறுத்தி வைத்திருக்கின்றோம். எதிர்க்கட்சித்தலைவர், எங்கே ரூபாய் 400 கோடி என்று கேட்கின்றார். நாங்கள் ரூபாய் 100 கோடிதாம் செலவு செய்திருக்கின்றோம். ரூபாய் 300 கோடிக்கான பணி இன்னும் தோடவங்கப்படவில்லை என்பதனையும் உங்களிடத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதுகூடத் தெரியாமல் அவர் சொல்லிக் கொண்டிருக்கின்றார்!

அதுமட்டுமன்று, அவருடைய திட்டமெல்லாம், நம்மோடு இருக்கின்ற ஒருவரோடு சேர்ந்துகொண்டு, இந்த ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்பதுதான்! எப்பொழுது பார்த்தாலும், எதற்கெடுத்தாலும் வழக்குப் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். வழக்கு நடைபெறாத நாளே இருக்காது. அத்தனை வழக்குகளையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ற தெய்வத்தின் துணைகொண்டு முறியடித்து வெற்றி பெறுவோம்! நியாயத்தின் அடிப்படையில் செயல்பட்டுவரும் எங்களுக்கு உரிய நீதி கிடைக்கும். அந்த நீதி கிடைக்கும்போது, துணை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இரட்டை இலையும் எங்களுக்குக் கிடைக்கும்! ஆகவே, இரட்டை இலை கிடைக்கின்றபோது, இந்த நாட்டு மக்களிடையே, இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை நாங்கள் தொடர்ந்து நனவாக்குவோம் என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

பருவமழையின்போது, பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் அனைத்தையும் தேக்கி வைக்கவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே, இந்த மாவட்டத்திற்கு, 11 தடுப்பணைகள் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் வழிவந்த இந்த அரசில்தான், இவ்வளவு திட்டங்களை, மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழாவை, நாம் அத்தனைபேரும் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்ற நிகழ்ச்சியாகக் கருதுகின்றோம் என்பதனை எடுத்துச்சொல்லி, இன்றையதினம், இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற அத்தனைபேரும் பத்திரமாக வீடு திரும்ப வேண்டுமென்று அன்போடு கேட்டு, இந்த விழா சீரும், சிறப்போடும் நடைபெறுவதற்கு உறுதுணையாக விளங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அவரோடு உறுதுணையாக இருந்த கட்சியின் நிருவாகிகள் அத்தனைபேருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜக்கையன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

நேற்றும் நமதே!

இன்றும் நமதே!

நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி! என்று சொல்லி உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

அறிவிப்புகள்

தடுப்பணைகள் அமைத்தல் (11 தடுப்பணைகள்)

- போடிநாயக்கனூர் வட்டம், பூதிபுரம் கிராமம், வலையாற்றின் குறுக்கே, மாமரத்து வயல் அருகிலும், நாட்டாமைதோப்பு அருகிலும் இரண்டு தடுப்பணைகள் அமைக்கப்படும்.
- உத்தமபாளையம் வட்டம், தேவாரம் கிராமத்தில், பிள்ளையார் ஊத்து ஓடையின் குறுக்கே, ஒரு தடுப்பணை அமைக்கப்படும்
- ஆண்டிபட்டி வட்டம், கடமலைகுண்டு கிராமத்தின் அருகே, வைகை ஆற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.

- ❖ ஆண்டிபட்டி வட்டம், வள்ளல்நதி கிராமத்தின் அருகே வைகை ஆற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ❖ ஆண்டிபட்டி வட்டம், எஸ்.எஸ்.புரம் கிராமத்தில் நாகலார் ஓடையின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ❖ போடிநாயக்கனூர் வட்டம், மதுரை வீரன் கோவில் அருகே அணைக்கரைப்பட்டி கிராமத்தில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ❖ போடிநாயக்கனூர் வட்டம், போடி கிராமத்தில் புல எண்.683/2 அருகே கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ❖ போடிநாயக்கனூர் வட்டம், போடி கிராமத்தில் புல எண்.1218 அருகே சின்னாற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ❖ போடிநாயக்கனூர் வட்டம், மாணிக்கபுரம் அருகே சுத்த கங்கை ஓடையின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- ❖ பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் விநாயகர் கோவில் அருகே மஞ்சளாற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.

கால்வாய் நவீனப்படுத்துதல்

❖ பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள புது அணைக்கட்டுக் கால்வாய் தூர் வாரப்பட்டு, மதகுகள் புதியதாகக் கட்டப்பட்டு, மஞ்சளாற்றில் வரும் தண்ணீர் எவ்விதத் தடையுமின்றி மத்துவார்குளம் கண்மாயைச் சென்று அடையும் வகையில், ‘சிமெண்ட்’ வாய்க்காலாக மாற்றப்படும். இத்திட்டத்தின் மூலம், 474 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதி செய்யப்படும்.

கண்மாயினை ஆழப்படுத்துதல்

❖ தேனி வட்டத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு அல்லிநகரம் – மீறுசமுத்திரம் கண்மாயை ஆழப்படுத்தி, அதன் கொள்ளளவு உயர்த்தப்படும்.

சாலைகள் வலுப்படுத்துதல்.

❖ தேசிய நெடுஞ்சாலை 49–இல், கி.மீ.50/6–58/0 அதாவது ஆண்டிபட்டிக் கணவாய் முதல், தி.சுப்புலாபுரம் வரை உள்ள சாலை வலுப்படுத்தப்படும்.

❖ தேசிய நெடுஞ்சாலை 49–இல், கி.மீ.74/0–76/450 மற்றும் 77/6–80/0 அதாவது தேனி நகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பகுதியிலிருந்து, போடிவிலக்கு வரை, உள்ள சாலை வலுப்படுத்தப்படும்.

பாலங்கள் அமைத்தல்

❖ ஆண்டிபட்டி – மயிலாடும் பாறை – தங்கம்மாள்புரம் சாலை வழி வாய்கால்ப் பாறை மூலக்கடை சாலையில், கிமீ. 7 / 2 மற்றும் கிமீ. 1 / 10 ஆகிய இடங்களில், இரண்டு உயர்மட்டப் பாலங்கள் கட்டப்படும்.

❖ போடி – தேவாரம் – லட்சுமி நாயக்கன்பட்டி வழியாகச் செல்லும் திம்மிநாயக்கன்பட்டி சாலையில், கி.மீ. 4 / 6 (i) மற்றும் 4 / 6 (ii) ஆகிய இடங்களில், இரண்டு சிறுபாலங்கள் கட்டப்படும்.

மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல்

❖ தேனி மாவட்டம், அணைப்பூங்கா மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், JICA நிதி உதவியுடன், அதிநவீன உபகரணங்களோடு கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் டயாலிசிஸ், 'எண்டோஸ்கோப்', மன நல சிறப்புப் பிரிவு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

❖ தேனி மாவட்டத்தில் உள்ள மருந்துக் கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும்.

❖ தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 'மேமோகிராம்' அமைக்கப்படும்; மூப்பியல் பிரிவு ஏற்படுத்தப்படும்.

❖ தேனி மாவட்டத்தில் பணியாற்றும் 162 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு, மருத்துவப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட, கையடக்கக் கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

❖ கம்பம் அரசு மருத்துவமனைக்கு, 'டயாலிசிஸ்' உள்ளிட்ட நவீன ஆய்வகக் கருவிகள் வழங்கப்படும்.

❖ வீரபாண்டி அரசு மருத்துவமனையில், நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

❖ வீரபாண்டி கிராம சுகாதார செவிலியர் பயிற்சிப் பள்ளி மேம்படுத்தப்படும்.

❖ மயிலாடும்பாறை மற்றும் கடமலைக்குன்று வட்டாரங்களில் விரிவான, ஆரம்ப நல்வாழ்வுச் சேவைகள் வழங்கப்படும்.

நெல்லைக்காக்கும் வேலிபோல் நல்லாட்சி மூலம் மக்களைக் காத்த எம்.ஜி.ஆருக்குத் திருநெல்வேலியில் நூற்றாண்டு விழா

கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றியுள்ள 100 கிராமங்களுக்கு ரூ.118 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

திரும்பும் திசையெல்லாம் தெய்வமாய்க் காட்சிதரும் கருணைத்தாய் !

மனித சக்தி கடந்த மகா சக்தி !

தாய்த் திருநாட்டின் மணிமகுடம் !

துணிவின் சிகரம்!

அறிவின் பேரொளி!

பொன்மனச் செல்வி

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலெட்சுமி அவர்களே!

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. இரா.வெங்கடேசன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.முத்துக்கருப்பன் அவர்களே! திரு. கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்களே!

தெம்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி வசந்தி முருகேசன் அவர்களே!

அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். முருகைய பாண்டியன் அவர்களே!

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்களே!

இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்களே!

வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. மனோகரன் அவர்களே!

நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. **H.**வசந்தகுமார் அவர்களே! (இ.தே.கா)

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே!

அரசு தலைமைக் கொறடா திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே. வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! தலைமைக் கழக நிருவாகிகளே, கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

'தென் பாண்டி நகர்' என்ற திருப்பெயரைப் பெற்று, பாண்டிய நாட்டின் பழம்பெருமை மிக்க பகுதியாக விளங்கும் இந்த திருநெல்வேலி சீமை தமிழும், தெய்வீகமும் மணக்கும் இயற்கை எழில் கொஞ்சும் அறிவு மாவட்டமாகும்! தனது பக்தன் காயப்போட்டிருந்த நெல்மணிகள் மழையில் நனைந்து போகாதபடி, சிவபெருமான் வேலி அமைத்து பாதுகாத்தார் என்பதால் இவ்வூருக்கு திரு–நெல்–வேலி என்ற பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள். பொருநை நதிக்கரையில் உணவுக்கு நெல்லும், பொதிகை மலைச் சாரலில் தமிழுக்கு இலக்கியமும் விளையும் புனித பூமி இது. இறையனார் அகப்பொருள், திருவிளையாடற் புராணம், மதுரைக் காஞ்சி, குற்றாலக் குறவஞ்சி போன்ற சங்க இலக்கியங்களும், ராபர்ட் கால்டுவெல் என்ற ஆங்கிலேய கிறிஸ்துவ பாதிரியாரின் "திருநெல்வேலிச் சீமை வரலாறு" என்ற ஆராய்ச்சி நூலும், ரோமாபுரி நாணயங்களும் திருநெல்வேலியின் பழமையைப் பறைசாற்றுகின்றன. நடராஜப் பெருமான் திருநடனம் புரியும் பஞ்ச சபைகளில் இரண்டு சபைகள், திருநெல்வேலியில் உள்ளன.

இந்தியாவில் உள்ள பெரிய கோயில்களில் ஒன்றான, நெல்லையப்பர் திருக்கோயில் தாமிர சபை என்றும், திருக்குற்றாலம்–சித்திர சபை என்றும் அழைக்கப்படுகின்றன. இதைத் தவிர, சங்கர நாராயணர் கோயில், தென்காசி காசி விசுவநாதர் கோயில், குறுக்குத் துறை முருகன் கோயில், பாபநாசம் அகத்தியர் கோயில், திருப்புடைமருதூர் கோயில், கப்பல் மாதா தேவாலயம், ஆத்தங்கரைப் பள்ளிவாசல் போன்ற பல ஆன்மிகத் திருத்தலங்களையும், தன்னகத்தே கொண்டது திருநெல்வேலி மாவட்டமாகும்!

தமிழ்நாட்டு சிற்பக் கலையின் நுணுக்கத்திற்கு நெல்லையப்பர் திருக்கோயில் இசைத் தூண்களும், கிருஷ்ணாபுரம் கோயில் சிற்பங்களும் சான்றுகளாக விளங்குகின்றன.

திருநெல்வேலியிலுள்ள இரண்டடுக்குப் பாலம், இந்தியாவிலேயே முதன்முதலாகக் கட்டப்பட்ட இரண்டடுக்குப் பாலமாகும்! ஆதித் தமிழுக்கும், வீசும் தென்றலுக்கும் பிறப்பிடம் பொதிகை மலையாகும்! தமிழ் முனிவர் அகத்தியர், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சேனாவரையர், மாங்குடி மருதனார், திரிகூட ராசப்பக் கவிராயர், பழந்தமிழ்ப் புலவர் நப்பசலையார், திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், தமிழ் அறிஞர் டாக்டர். ரா.பி.சேது பிள்ளை, முதம் முதல் எம்.எல். பட்டம் பெற்ற தமிழறிஞர் கா. சுப்பிரமணியம் பிள்ளை, மொழி ஞாயிறு தேவ நேயப் பாவாணர், ரசிகமணி டி.கே.சி, தமிழ்தாய் வாழ்த்துப் பாடல் எழுதிய மனோன்மணியம் சுந்தரனார், திராவிட மகாமுனிவர் மாதவ சிவஞான முனிவர், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.யு. போப், ரேனியஸ் அய்யர் போன்ற இன்னும் பல தமிழ் அறிஞர்கள் இம்மண்ணிலிருந்து தமிழ் வளர்த்தார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்கள் பூலித் தேவன், ஒண்டி வீரன், வீர வாஞ்சிநாதன் ஆகியோர் பிறந்த வீரமண் இது.

சங்கப் புலவர்கள் வகுத்த, ஐவகை நிலங்களையும் ஒருங்கே பெற்ற மாவட்டம் திருநெல்வேலி மாவட்டமாகும். சுவாமி சிவானந்தர் அவதரித்ததும், பாய் நெசவுக்குப் புகழ் பெற்றதுமான பத்தமடையும், கட்டபொம்மன் – ஜாக்ஸன் துரையுடன் வார்த்தைகளால் மோதிக்கொண்டதும், சுதந்திரப் போராட்ட வீரர்களை அடைக்கும் சிறைச்சாலையைக் கொண்டதும், பார்க்கும் இடமெல்லாம் நிறைந்திருக்கும் கல்வி நிறுவனங்களைக் கொண்டதுமான பழமையான ஊர், பாளையங்கோட்டையாகும்,! தேசியக் கவி பாரதியார் கல்வி பயின்ற நெல்லை ம.தி.தா. இந்து மேல் நிலைப் பள்ளியும், பாரதியார் பல காலம் வாழ்ந்த கடையம் பகுதியும், பேசப் பேசத் திகட்டாத நெல்லைத் தமிழும், தின்னத் தின்னத் திகட்டாத திருநெல்வேலி அல்வாவும், தெய்வத் திருவிளக்குகளை உற்பத்தி செய்யும் வாகைக்குளமும், திருநெல்வேலி மாவட்டத்திற்கு மேலும் புகழைச் சேர்த்துவருகின்றன.

நூற்றாண்டு விழா நாயகர் ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், தமிழ்நாட்டின் ஒளிவிளக்காகத் தோன்றிய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மிகவும் பிடித்த மாவட்டம் இந்த திருநெல்வேலி மாவட்டமாகும்!

அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் இருபெரும் தலைவர்களின் கலைவாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் தொடர்புடையது இந்த நெல்லை மாவட்டம். அதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் அ.இ.அ.தி.மு.க.வைத் தொடங்கியதிலிருந்து, இந்த நெல்லை மாவட்ட மக்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு பேராதரவு தந்து உள்ளனர்.

அ.இ.அ.தி.மு.க. சார்பில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இங்கே யாரை சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தினாலும், அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதனை, அ.இ.அ.தி.மு.க. எதிர்கொண்ட பல சட்டசபைத்

தேர்தல்களில் நிரூபித்துக் காட்டியவர்கள் இந்த மாவட்ட மக்கள். ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் மீது கொண்ட அபிமானத்தை, தங்கள் வாக்குகள் மூலமாக நிரூபித்துக் காட்டியவர்கள் இந்த திருநெல்வேலி மாவட்ட மக்கள் என்பதனை யாராலும் மறுக்க முடியாது. அதற்கு உதாரணமாக திரு. ஜி.ஆர்.எட்மண்ட், திரு. நாவலர் நெடுஞ்செழியன், திரு. நாஞ்சில் மனோகரன் மற்றும் திரு. ஒய்.எஸ்.எம்.யூசுப் ஆகியோரைக் கூறலாம். இவர்கள் பிற மாவட்டங்களிலிருந்து இந்த நெல்லை மாவட்டத்தில் போட்டியிட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் மக்கள் செல்வாக்கால் வெற்றி பெற்றவர்கள்.

இந்த வெற்றிகள் அன்று பலரை வியக்க வைத்தன. இந்த அபரிமிதமான வெற்றிக்கெல்லாம் நெல்லைச் சீமையைச் சேர்ந்த மக்களாகிய நீங்களும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையும் தான் காரணம். நல்லவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வல்லமை வாய்ந்தவர்கள் நீங்கள் என்பதால்தான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசியல் வாழ்க்கை உதயமாவதற்கு இந்த திருநெல்வேலி மாவட்டம் கீழ்த் திசையாக அமைந்திருந்தது.

1968ஆம் ஆண்டு, இதே திருநெல்வேலி பாளையங்கோட்டையில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மாபெரும் நடன நிகழ்ச்சியை நடத்தினார்கள். திருநெல்வேலி நகரமே ஸ்தம்பிக்கும் அளவிற்கு, மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள்.

நடன நிகழ்ச்சியின் நிறைவில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்திப் பேசும் போது, மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அம்மா அவர்கள், அற்புதமான நடனக் கலைஞர், அழகாகப் பாடவும் கூடியவர் என்பதனை 'அடிமைப்பெண்' படம் நிரூபித்ததுக் காட்டியது என்று கூறினார்!

நடிப்பில், நடனத்தில் மட்டுமல்லாமல் எல்லாத் துறைகளைப் பற்றியும், எல்லாமும் அறிந்தவர் என்றுமாண்புமிகு அம்மா அவர்களின் பெயரைச் சொல்லிக் குறிப்பிட்டார், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். சமூகப் பணியில் ஈடுபட்டு நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காவும் பாடுபடத் தொடங்கினால், நாடே வியக்கும் அளவிற்குத் தம்னிகரற்ற தலைவியாக அவர்கள் திகழ்வார்கள்!'' என்று பாராட்டிப் பேசினார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இந்தப் பாராட்டே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் விழுந்த பொது வாழ்க்கைக்கான முதல் படியாகும். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாக்கு பலித்தது என்பது உலகமே அறிந்த உண்மை!

பாளையங்கோட்டையில் இந்த சம்பவம் நடந்த போதே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஞானக் கண்களுக்கு மட்டும், ஒரு மாபெரும் தலைவி வளர்ந்து கொண்டிருப்பது தெரிந்திருக்கிறது. அதை உறுதிப்படுத்துவது போல்

''ராமன் தேடிய சீதை'' என்ற படத்தில்,
''திருவளர்ச் செல்வியோ நான் தேடிய தலைவியோ'' –என்று பாடியிருப்பார்கள்.

அப்போது அந்தப் படத்தையும் பாடலையும் மக்கள் திரைப்படமாகத்தான் ரசித்திருப்பார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அவற்றைத் தகவல்களாக இந்தத் தமிழ் உலகுக்குக் கூறியிருக்கிறார்கள் என நினைக்கத் தோன்றுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தீர்க்க தரிசனமும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எதிர்காலமும் அந்தப் பாடலில் இருந்தன என்பதனை, நாம் பின்னாளில்தான் தெரிந்து கொண்டோம்! பாளையங்கோட்டை சம்பவத்திற்குப் பிறகு, 1972ஆம் ஆண்டு, கருநாடகாவில் நடந்த 'அன்னமிட்டகை' படப்பிடிப்பிற்கு குறிப்பிட்ட நேரத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வரவில்லை. நேரம் தவறாமையில் கண்டிப்பாக உள்ள புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வராதது, அனைவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் படப்பிடிப்பிற்கு வரும் வழியில், ஒரு விபத்தைக் காண நேரிட, அதில் சிக்கிய ஒரு பாட்டியையும், அவரது பேரனையும் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்ததால்தான், படப்பிடிப்பிற்கு வர தாமதமானது என்ற செய்தி, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உள்ளிட்ட பலருக்கும் கடைசியில்தான் தெரிந்தது.

முகம் தெரியாத ஒரு பெண்மணிக்கு உதவிய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாராட்டி, ''கலைச்செல்வியின் துணிவையும், அறிவாற்றலையும், மனிதாபிமானத்தையும், உணர்வையும் கண்டு அசந்துபோய் நிற்கிறேன். அவர் எதிர்காலத்தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்ல முறையில் பணிபுரிவார்'' என்று பாராட்டினார்கள்!

“நதியைப் போல நாமும் நடந்து
பயன்தர வேண்டும்

கடலைப் போலே விரிந்த இதயம்
இருந்திட வேண்டும்

வானம் போலே பிறருக்காக
அழுதிட வேண்டும்

வாழும் வாழ்க்கை – உலகில் என்றும்
விளங்கிட வேண்டும்” என்ற

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் படப்பாடலைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரக்க குணமுடையவராகத் திகழ்ந்தார்கள். “ஒரு திரைப்படம் என்பதும் திரைப்பாடல் என்பதும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே இல்லாமல், அதற்கும் மேலே, விழிப்புணர்வை, மக்கள் உள்ளத்தில் விதைக்க வேண்டும்!” என்ற கொள்கையைக் கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். “படம் பார்த்து விட்டு ரசிகர்கள் தியேட்டரை விட்டுச் செல்லும் போது, புதிய பாடம் கற்க வேண்டும்” என்றார்கள் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பின்பற்றினார்கள். அதனால்தான், மக்கள் மனதோடு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் மனமும் இணைந்திருந்தது. ஒரு நடிகருக்கும், பொதுமக்களுக்குமான இடைவெளியை, முற்றிலுமாக குறைத்துக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இதே பாணியைத்தான்,

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்அரசியலிலும் பின்பற்றினார்கள். அதனால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகி, சிறப்பான முறையில் மக்களுக்குக் கடமையாற்ற முடிந்தது!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒருமுறை ''நான் நினைத்திருந்தால், கோடிக் கணக்கில் பணம் சேர்த்திருக்கலாம், பணத்தைச் சேர்க்கவில்லை, ஆனால், கோடிக்கணக்கான இதயங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறேன்''! என்று உருக்கமாகப் பேசினார்கள்! இன்றைக்கும் கோடிக் கணக்கான இதயங்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருப்பதை, உலகம் முழுவதும் பார்க்க முடிகிறது! காலத்தால், எத்தனையோ நடிகர்களும், தலைவர்களும் மக்களால் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் இருக்கும்போது, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மறைந்து 30 ஆண்டு காலம் ஆகியும், மக்களோடு மக்களாக, மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும், மக்கள் உதடுகள் உச்சரித்துக் கொண்டிருக்கும் ஒரே தலைவராக விளங்கி வந்துகொண்டிருக்கிறார். அதனால்தான், அவரை 'மக்கள் திலகம்' என்று நாம் போற்றுகின்றோம்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எத்தனையோ பட்டங்களும் விருதுகளும் கிடைத்திருக்கலாம். அத்தனையிலும், சிறந்ததாகவும், வெகுஜன மக்களின் இதயங்களில் ஒட்டிக் கொண்டதுமானதாகவுமுள்ள ஒரு பட்டம்தான். 'வாத்தியார்' பட்டம் என்பதாகும். அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டதும், அறியப்பட்டதுமான இந்த 'வாத்தியார்' பட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு 1960ஆம் ஆண்டு வழங்கியது இதே திருநெல்வேலி மாவட்ட நகராட்சி மன்றம்தான் என்பதனைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதனால்தான், 1969ஆம் ஆண்டு, தமது 105ஆவது படமான 'நம்நாடு' என்ற படத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நடிக்க,

''வாங்கய்யா வாத்தியாரய்யா,
வரவேற்க வந்தோமைய்யா,
ஏழைகள் – உங்களை நம்பி
எதிர்பார்த்து நின்றோமய்யா,

அண்ணன், தம்பி, உண்மையின் தோழன்,
ஏழைக்குத் தலைவன் நீங்களய்யா,
சமயம் வந்தது, தருமம் வென்றது,
நல்லதை நினைச்சோம் – நடந்ததைய்யா''

என்று ஓர் அருமையான பாடலை இடம் பெற வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைத் தமிழ்நாட்டிற்குத் தலைமையேற்க, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், பொதுமக்களும் அழைப்பு விடுப்பது போலவே இந்தப் பாடல் அமைந்தது. 'வாத்தியார்'என்று நீங்கள் வைத்த பட்டத்தைக் கொண்டே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை வரவேற்றதால் அந்தப் பெருமையும் உங்கள் மாவட்டத்திற்குத் தான் சாரும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, திருநெல்வேலி மண்ணில்தான், **1968**ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு, பொதுவாழ்க்கைக்கு அழைப்பு விடுத்தார்கள்!

1969ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், நீங்கள் வழங்கிய 'வாத்தியார்' பட்டத்தைக் கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை தமிழ்நாட்டை ஆள அழைப்பு விடுத்தார்கள் – மக்கள். வரலாற்றில் பதிவாகி உள்ள இந்த இரண்டு சம்பவங்களிலும் திருநெல்வேலி மக்களாகிய உங்களுக்குப் பங்கு இருக்கிறது என்பதனைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். எனவேதான், என்னைப் போன்றவர்கள், இந்த மண்ணில் கால் வைப்பதையே புனிதமாகக் கருதுகின்றோம். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ஏற்படுத்தியிருக்கிற பாதையில்தான் இப்போதும் அனைந்திந்திய அண்ணா தி.மு.க. பயணித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய கொள்கைகளில் இருந்து சிறிதும் பிறழாமல் அவர்கள் விருப்பத்தையே வாக்குறுதியாக ஏற்று, நாங்கள் பல்வேறு கடமைகளை ஆற்றி வருகின்றோம்.

எங்களை, நாங்கள் தலைவர்களாக ஒரு காலமும் நினைத்துக் கொண்டதேயில்லை. தொண்டர்களாகவே நினைத்துத்தான் அல்லும் பகலும் மக்கள் பணியாற்றி வருகிறோம். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தமது இறுதிக் காலம் வரை இந்த கழகத்திற்காக உழைத்தவர்! உடல் நலம் குன்றி, அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த போதுகூட, கட்சியின் வளர்ச்சிக்கான சிந்தனையில்தான் மூழ்கியிருந்தார்கள்! சிகிச்சை முடிந்து, அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பும் போது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கழகத்தினரிடையே பேசிய ஒரு வார்த்தை இப்போதும் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

'நான் அமெரிக்காவிலிருந்து இலாபத்தோடுதான் திரும்பி வந்திருக்கிறேன். அதாவது, அங்கு பலரை அண்ணா தி.மு.க.வுக்கு உறுப்பினர்களாகச் சேர்த்து விட்டு வந்திருக்கிறேன்' என்று பெருமையோடு சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது இறுதிக் காலத்திலும், அ.இ.அ.தி.மு.க.வுக்கு உறுப்பினர்களை சேர்த்து ஆட்சியையும், கட்சியையும் பலப்படுத்தினார் என்பதனைத் தொண்டர்கள் உணர வேண்டும். நாம் அனைவரும் எப்பொழுதும் அனைத்து நேரங்களிலும் உற்சாகமான நிலையில் இருப்போம் என்று கூறமுடியாது.அத்தகைய நேரங்களில் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல்களைக் கேட்டாலே போதும் – நம்மையும் அறியாமல்

அப்பாடல்களின் இசையும், பொருளும் நமது இரத்த நாளங்களில் புகுந்து ஒரு புத்துணர்ச்சியை நமக்கு அளிக்கும் பாருங்கள், அதை உணர்ந்தவர்களுக்குத்தான் புரியும்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சூளுரையான ‘அனைத்திந்திய அண்ணா தி.மு.க. இன்னும் நூறாண்டுகள் வாழும்’ என்பதனை நடத்திக் காட்ட வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், மக்களுக்கு வழங்கிய திட்டங்களால் ஏற்பட்ட பயன்களைப் பற்றி விளக்கமாக மக்களிடம் எடுத்துக் கூறுவோம்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாஅவர்களின் வழியில் நடக்கும் இந்த அரசு, பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை, தொடங்கிய திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்வதில் அரசு அலுவலர்களுக்கு உற்ற தோழர்களாக இருந்து உதவி செய்யும். இப்போது நடந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு. பொது சுகாதாரத்திற்கும், கல்வி மேம்பாட்டிற்கும், மகளிருக்கும், விவசாயத்திற்கும், இளைஞர்களுக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இயற்கை இடர்பாடுகளிலிருந்து மக்களைக் காக்க, போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்படுகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையெல்லாம் எடுத்த காரணத்தால்தான், வரலாறு காணாத வறட்சியின் போது தமிழகத்தில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படாமல் காத்தும், தற்போது, தமிழ்நாட்டில் தொடர்ந்து பெய்யும் வடகிழக்குப் பருவ மழையினால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்காமல், உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டும் இந்த அரசு செயலாற்றி வருகிறது.

அனைத்துத் துறைகளும் முடுக்கி விடப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் தலைமையில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு குழு அனுப்பப்பட்டு நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதை மக்கள் அறிவார்கள். குறை கூறுபவர்கள் – குறை கூறிக் கொண்டுதான் இருப்பார்கள்! நல்லது எது செய்தாலும் அதிலும் ஒரு குற்றம் கண்டுபிடித்துக் குறை சொல்வதையே தி.மு.க. அதிகமாகச் செய்து வருகிறது. பாவம், இதன் மூலமாகத்தான் தங்கள் இருப்பை அவர்கள் காட்டிக் கொள்ள வேண்டிய அவல நிலை உருவாகியுள்ளது.

> “நெஞ்சம் உண்டு, நேர்மை உண்டு, ஓடு ராஜா
> நேரம் வரும் காத்திருந்து பாரு ராஜா”

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடலையே, கட்டளையாக ஏற்றுச் செயல்படுவோம்! “யாருடைய கட்சி பெரிது என்று கணக்குப் போட்டு, அதற்காகப் போராடாமல், யாருடைய உழைப்பு, இந்த நாட்டின் நலத்திற்குப் பயன்படுகிறது என்பதில் போட்டியிடுவோம்!”– என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதுவே நமது இருபெரும் தலைவர்களும் நமக்கு சொல்லிச் சென்ற பாடம்; அதையே நாம் பின்பற்றி நடப்போம்!

எதிர்கட்சிகளால் ஏற்படும் தடைகளையெல்லாம் தகர்த்து எறிந்து விட்டு, எப்போதும் நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்களைத் தீட்டுவதிலும், அவற்றை விரைந்து செயல்படுத்துவதிலும்தாம் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம்.

'பாரத ரத்னா,' புரட்சித்தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் மூலம், எத்தனை மகத்தான திட்டங்கள் மக்களுக்காக தொடங்கப்பட்டுள்ளன, எத்தனை புதிய திட்டங்களுக்கு அறிவிப்புகள் வெளி வந்திருக்கின்றன என்பதனைப் பற்றியெல்லாம் மக்கள் அறிவார்கள். அதுதான் நமக்கு பலம். மக்கள் பலம் இருக்கும் வரை, எந்த சக்தியாலும் நம்மை வீழ்த்திவிட முடியாது என்ற உறுதிப்பாட்டோடு, திருநெல்வேலிச் சீமைக்கு, பல கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களைத் தொடங்கி வைப்பதிலும், அடிக்கல் நாட்டுவதிலும், புதிய திட்டங்களை அறிவிப்பதிலும், பெருமிதம் கொள்கின்றேன். 68 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், முடிக்கப்பட்டுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றியுள்ள 100 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் உட்பட, 118 கோடிரூபாய் மதிப்பீட்டிலான 192 பணிகளை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

திருநெல்வேலி மாநகராட்சியில், 'அம்ருத்' திட்டத்தின்கீழ், 289 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாதாளச் சாக்கடை அமைப்பு செயல்படுத்துதல் திட்டம் உட்பட, 528 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 142 பணிகளுக்கு, நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். பல்வேறு துறைகளின்சார்பில் 34 ஆயிரத்து 655 பயனாளிகளுக்கு, 87 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், இன்று வரை, 11 ஆயிரத்து 112 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 35 ஆயிரத்து 157 பணிகளைத் தொடங்கி வைத்தும் 4 ஆயிரத்து 84 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 852 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்!

ஆக மொத்தம், 15 ஆயிரத்து 196 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான,42 ஆயிரத்து 9 பணிகள் நடைபெற்று வருகின்றன. அம்மாவின் அரசு மக்களின் நன்மைக்காகப் பல்வேறு திட்டங்களை, கடந்த ஆறு ஆண்டுகளில் இந்த மாவட்டத்தில் செயல்படுத்தியுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை பற்றி மட்டும், இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், எதிர்கட்சிகள் தொடர்ந்து, "இந்த அரசு நாட்டு மக்களுக்கு என்ன திட்டங்களைச் செய்தன என்பதனைத் தினந்தோறும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும் போதும், அந்த மாவட்டத்தில் அம்மாவுடைய அரசு அந்த மாவட்ட மக்களுக்கு என்ன திட்டங்களைக் கொடுத்தது, என்ன நன்மை கொடுத்தது என்பதனைப் பட்டியலிட்டு, நாங்கள் விவரமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதன் அடிப்படையில், திருநெல்வேலி மாவட்டத்திலும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்ன திட்டங்களை,

இந்த மக்களுக்கு வழங்கியிருக்கிறது, மக்கள் எவ்வளவு நன்மை பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள கடன், 160 கோடியே 95 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 19 ஆயிரத்து 696 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். படித்த ஏழைப் பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின்கீழ், 38 ஆயிரத்து 440 பெண்களுக்கு, 132 கோடியே 44 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் 485.80 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன!

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ், 149 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில், 79 ஆயிரத்து 269 பயனாளிகள் சிசிக்சை பெற்றுள்ளனர். ‘உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ்,’ 233 கோடியே 28 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 10 இலட்சத்து 72 ஆயிரத்து 713 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். ‘விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ்’ 220 கோடி ரூபாய் செலவில், மாணாக்கர்களுக்கு 1 இலட்சத்து 44 ஆயிரத்து 713 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 114 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1 இலட்சத்து 79 ஆயிரத்து 865 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 48 ஆயிரத்து 932 சுய உதவிக் குழுக்களுக்கு 1,351 கோடியே 49 இலட்சம் ரூபாய் வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு, இடுபொருள் நிவாரணத் தொகையாக’ 32 கோடியே 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 42 ஆயிரத்து 300 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், 6 கோடியே 19 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 103 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ‘விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ்’, ஆயிரத்து 658 குளங்களிலிருந்து, 16 இலட்சத்து 93 ஆயிரத்து 566 கன மீட்டர் அளவிற்கு வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 9 ஆயிரத்து 53 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

‘தன்னிறைவுத் திட்டத்தின்கீழ்,’ பொதுமக்கள் பங்களிப்புடன், 41 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 358 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சிறப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ், 188 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில், 499 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

‘பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ்,’ 298 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 22 ஆயிரத்து 595 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 7 நகராட்சிகளிலும், 581 சாலைப் பணிகள், 103 கோடியே 25 இலட்சம் ரூபாய்மதிப்பீட்டில், முடிக்கப்பட்டுள்ளன. 38 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 390 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 36 கோடி ரூபாய் செலவில், 8 துணை மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 61 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 287 மொகாவாட் திறன் கொண்ட 13 துணை மின் நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வீரவாஞ்சிநாதம் மற்றும் மாவீரன் ஒண்டிவீரன் ஆகியோருக்குத் தமிழக அரசின் சார்பில், புதிதாக நினைவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைத்தவிர, மருத்துவத் துறைக்காக, 73 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 304 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆயிரத்து 154 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–2 கீழ், நாங்குநேரி–பரதர் உவரிச் சாலை (SH– 89) கிழக்குக் கடற்கரைச் சாலை, கி.மீ.0/0 முதல் 35/200 வரை தரம் உயர்த்தும் பணிகள் 154 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நடைபெற்று வருகின்றன.

இராஜபாளையம்–சங்கரன் கோவில் திருநெல்வேலி சாலை, கி.மீ. 1/800 முதல் ,28/000 வரை மற்றும் கி.மீ. 33/800 முதல் 82/800 வரை தரம் உயர்த்தும் பணிகள் 357 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நடைபெற்று வருகின்றன. திருநெல்வேலி–செங்கோட்டை–கொல்லம்சாலை (SH – 39) கி.மீ. 5/000 முதல் 50/600 வரை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் பணி, 480 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நடைபெற்று வருகிறது.

இத்தகைய ஆக்கப்பூர்வமான திட்டங்களைப் பற்றி எப்போதாவது எதிர்கட்சிகள் பேசியிருக்கிறார்களா ? இவ்வளவு திட்டங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த மாவட்டத்திற்கு நிறைவேற்றித் தந்துள்ள பணிகள் என்பதனைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுதான் திட்டம், இதுதான் மக்களுக்கு நன்மை செய்கின்ற திட்டம். உண்மையிலேயே மக்கள் மீது அக்கறை கொண்டவர்களாக இருந்தால், குறைகூறுவதை நிறுத்திக் கொண்டு, களத்தில் இறங்கி மக்கள் பணி ஆற்றுங்கள்! இதைக் கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. காட்டில், பார்க்கின்ற எல்லா மிருகங்களையும் குறை கூறுவதையே பிழைப்பாகக் கொண்ட ஒட்டகம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு யானையைப் பார்த்து, “சிறு பையன்கள் சுவரில் கிறுக்கி வைத்ததைப்போல் உன் கண்கள் உள்ளன. சாப்பிட்டு, சாப்பிட்டு குண்டாகப் பெருத்துள்ள உன் உடலுக்கு ஏற்ற கண்களா உனக்கு இருக்கின்றன ?” என்று யானையைக் கிண்டலடித்தது. ஒரு பசுமாட்டைப் பார்த்து “மாடே! உன் முகம் செவ்வகமாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் கொம்புகள் வேறு அவலட்சணமாக

இருக்கின்றன!'' என்று கேலி பேசியது. சிங்கத்தைப் பார்த்து ''சிங்கமே! ஒரு ராஜாவுக்கு உரிய அழகு உன்னிடம் இருக்கிறதா? நீ சடாமுடியுடன் முனிவரைப் போல் இருக்கிறாய்! இந்தக் கூத்தில், பெரிய வாய்வேறு; அதில் கர்ஜனை வேறு!'' என்று சிங்கத்தைக் குறை கூறியது.

இவ்வாறு, காட்டில் உள்ள மான், முயல், கழுகு, காகம், என்று எதனையும் அந்த ஒட்டகம் விட்டுவைக்கவில்லை! அதனால், அந்த ஒட்டகத்தைப் பார்க்கும்போதெல்லாம் எல்லா மிருகங்களும், பறவைகளும் போய், ஒளிந்து கொண்டன. இதை பார்த்த ஒட்டகம் ''இந்த பயந்தாங்கொள்ளி விலங்குகள், எனக்கு பதில் சொல்ல முடியாமல் பயந்து ஒளிந்து கொள்கின்றன!'' என்ற மமதையில், காடு முழுவதும் வீர நடைபோட்டு நடந்து வந்தது.

ஒரு நாள், ஒரு நரி ஒட்டகத்தைப் பார்த்தது. ஒட்டகம் குறைசொல்ல ஆரம்பிப்பதற்கு முன்பே நரி சுதாரித்துக் கொண்டு, ஒட்டகத்தை அருகில் உள்ள நீர்நிலைக்கு அழைத்துச் சென்று நீரில் தெரியும் உருவத்தைப் பார்க்கச் சொன்னது.

கரையிலிருந்தபடி நீரை எட்டிப் பார்த்த ஒட்டகம் ''நரியே இப்படிப்பட்ட அருவருப்பான மிருகத்தை இது வரை நான் பார்த்ததே இல்லை. நீளமான முகம், வளைந்த கொம்பு போன்ற கால்கள், கூன் விழுந்த முதுகு, அசிங்கமான கண்களை உடைய இந்த மிருகத்தை எங்கிருந்து கண்டுபிடித்தாய்'' என்று ஒட்டகம் சிரித்தது!

''நீரில் தெரியும் அந்த அசிங்கமான விலங்கு நீயே தான்! – உன்னுடைய உருவம் தான் உயரமே தவிர, உனக்கு அறிவு துளியும் கிடையாது! –உன் முதுகின் லட்சணமே உனக்குத் தெரியாமல், அடுத்தவன் முதுகைப் பற்றி இனிமேல் நீ போசாதே'' என்றது நரி. ஒட்டகம் தன் தவறை உணர்ந்து தலை குனிந்தது! இப்படித்தான் பலர், தமது குறைகளை மறைப்பதற்கு, மற்றவர்களை எப்போது பார்த்தாலும் குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். தாங்கள் ஆட்சி செய்த காலத்தில், ஆற்றிய பணி என்ன, நாட்டு மக்களுக்கு பொது நலத்தோடு செய்த நல்லவை என்ன, சுயநலத்தோடு தாங்கள் செய்து கொண்டது என்ன என்பதனை நாட்டு மக்கள் நன்கறிவார்கள். இந்த ஒட்டகக் கதையைக் கேட்ட பிறகாவது, அவர்கள் திருந்த வேண்டும்!

பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா தேனி மாவட்டத்தில் நடைபெற்றபொழுது, நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல் செயல்படுவோம் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன். ஆகவே நாங்கள்இணைந்து செயல்படுவோம் என்ற கருத்தை மக்களிடையே எடுத்து வைத்தோம். இதில் என்ன குறைகண்டு பிடித்தார் என்று தெரியவில்லை. அவர் பேட்டி கொடுக்கும்பொழுது, உள்ளக்குமுறலோடு அவர் வெளிப்படுத்திய கருத்து என்னவென்று ஊடகங்கள், பத்திரிகை வாயிலாக நாம் பார்த்தோம், உங்களுக்கும் தெரியும். எந்தளவிற்கு அவர் விமர்சனம்

செய்துள்ளார், எந்தளவிற்கு எங்கள் மீது கோபம் கொண்டுள்ளார் என்பது அவருடைய உள்ளக்குமுறலில் இருந்து நாங்கள் பார்க்க முடிகிறது. ஆகவே, நாம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். ஏனென்று சொன்னால், இந்த இயக்கம் ஒன்றாக இருக்கக்கூடாது, இந்த இயக்கத்தை உடைக்க வேண்டும், இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று, பலரின் துணையோடு, அவர் கனவு கண்டு கொண்டிருக்கின்றார். அவர் கனவு கானல்நீராகத்தான் போகும் என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகின்றேன். எவ்வளவு இன்னல்கள், தடைகள் ஏற்படினும், நாங்கள் இணைந்து செயல்பட்டு, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நூற்றாண்டு விழாவிலே, இருபெரும் தலைவர்களுடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதே எங்களது தலையாய பணி என்று சூளுரைத்து எங்கள் உழைப்பை உங்களுக்குத் தொய்வின்றித் தொடர்வோம் என்பதனை இந்த நேரத்தில் குறிப்பிட விழைகின்றேன்!

அதேபோல புயல், வெள்ளம், வறட்சி என்று எது வந்தாலும் சரி, மக்கள் பாதிக்கப்பட்டால், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திலும் சரி, மக்களுக்கு ஓடோடிப் போய் உதவி செய்கின்ற ஆட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதனை மக்கள் உணருவார்கள்! ஆகவே, இந்த இயக்கம் மக்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம். மக்களுக்குச் சேவை செய்கின்ற இயக்கம். இவர்களைப்போன்று, ஒரு குடும்பத்திற்காக ஆட்சி செய்கின்ற ஆட்சி இந்த ஆட்சி அல்ல. நாட்டு மக்களுக்கு நன்மை செய்கின்ற ஆட்சி இந்த ஆட்சி. அதற்காக, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக்காத்து வந்துள்ள மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்த இருபெரும் தலைவர்கள் வகுத்த பாதையில் நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், இருபெரும் தலைவர்கள் எப்படி கடைக்கோடியில் இருக்கின்ற மக்களுக்கும் திட்டப்பணிகளை எடுத்துச் சென்றார்களோ, அதேபோல மாண்புமிகு அம்மாவினுடைய அரசும், கடைக்கோடியில் இருக்கின்ற மக்களுக்கு திட்டப்பணிகளை எடுத்துச் செல்வதில், இரவு பகல் பாராமல் உழைத்து, முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அரசு என்பதனையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்!

இன்றைக்குத் தமிழகத்தில், சட்டம், ஒழுங்கு சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில், எந்த மாநிலமும் இந்த அளவிற்கு அமைதிபூங்காவாகத் திகழமுடியாது தமிழ்நாடு விளங்கி வருகிறது என்பதனை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு

அம்மாவினுடைய அரசிற்கு மக்களுடைய பேராதரவு இருக்கின்றது! அதன் காரணமாகத்ததான், தமிழ்நாடு அமைதிப்பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கின்றது!

விவாசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக, நீண்ட நாட்களாக, விவசாயிகள் அரசுக்கு விடுத்த கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக குடிமராமத்து என்னும் அற்புதமான திட்டத்தை, அம்மாவினுடைய அரசு தொடக்கி, முதற்கட்டமாக, ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, 1,519 ஏரிகளில் பணிகள் தொடங்கப்பட்டு இன்றைக்கு நிறைவடைந்திருக்கின்றன. அடுத்தக்கட்டமாக, ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு, குடிமராமத்துப் பணிகளுக்காகச் செய்யப்படவுள்ளது. அதன்மூலம், பல்லாயிரக்கணக்கான ஏரிகள் தூர்வாரப்படும். அதுமட்டுமல்லாமல், சமூக ஆர்வலர்கள், நாட்டின் மீது அக்கறை கொண்டவர்கள் எல்லாம் குடிமராமத்துத் திட்டத்தில் பங்குபெற்று, அவர்களும் தன் சொந்த செலவிலே ஏரி, குளங்களில் வண்டல் மண்ணை அள்ளுவதற்கு உதவி செய்தார்கள். விவசாயப் பெருங்குடிமக்களும், விவசாயப் பிரதிநிதிகளும் ஆங்காங்கே ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு எருவாக இட்டார்கள். ஆகவே, இந்தத் திட்டம் ஒரு பிரம்மாண்டமான திட்டம். விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக விளங்குகின்ற திட்டம்! இத்திட்டத்தின் மூலமாக, பருவமழை பொழிகின்றபொழுது, கிட்டத்தட்ட 30 சதவீதம் நீர் தேங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித்தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதனை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு மனிதனுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ, அந்தளவிற்கு, விவசாயிகளுக்கு உயிராக இருப்பது நீர்! அந்த நீரைச் செறிவூட்டுவதற்காக, கிட்டத்தட்ட ரூபாய் 1,000 கோடி அம்மாவினுடைய அரசால் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, மூன்றாண்டுகளில் தடுப்பணை கட்டும் பணி தொடங்கப்படும். முதற்கட்டமாக, இந்த ஆண்டு ரூபாய் 350 கோடி, தடுப்பணை கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலமாக, ஓடைகள், ஆங்காங்கே இருக்கின்ற நதிகளின் குறுக்கே, தடுப்பணைகள் கட்டப்பட்டு பருவமழைப் பொழிவில் கிடைக்கின்ற நீரைத் தேக்கி வைத்து, நிலத்தடி நீரை உயரச் செய்வதற்கு அம்மாவினுடைய அரசு திட்டங்கள் தீட்டி, செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அதேபோன்று, கல்வியிலே அம்மாவினுடைய அரசு புரட்சி கண்டுள்ளது. கடந்த ஆறாண்டுகளில், எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமாகக் கல்லூரிகளை தொடங்கியுள்ள ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம் அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில்தான், கிட்டத்தட்ட, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 65 தமிழ்நாட்டில் உருவாயின! ஏழை, எளிய மாணவர்கள் தங்கள் பகுதியிலேயே குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையைப் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள்! அம்மாவினுடைய அரசும் இந்த

ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றது. ஆக, அம்மாவினுடைய அரசு, கடந்த ஆறாண்டுகளில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்து கல்வித்தரத்தை உயர்த்தியிருக்கின்றது. கிட்டத்தட்ட ஆறாண்டுகால ஆட்சியில், 31 இலட்சம் பேருக்கு, மடிக்கணினிகள் வழங்கியதின் விளைவாக, குக்கிராமத்தில் குடிசைகளில் வாழ்கின்ற மாணவ, மாணவிகள்கூட உலகப் பொது அறிவு பெறக்கூடிய விஞ்ஞானக் கல்வியை கொடுத்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. இன்றைக்கு உயர்கல்வி படிப்பவர்கள் 44.3 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

சுகாதாரத் துறை, இந்தியாவிலேயே முதம்மை வகிக்கின்ற துறையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. கிராமப்புறத்தில் வசிக்கின்ற மக்களுக்கு, அங்கேயே சிகிச்சை அளிக்கக்கூடியவகையில் ஒவ்வொரு ஒன்றியத்திலும், தரம்உயர்த்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கின்றது. சுகாதாரத் துறையில், இந்தியாவிலேயே முதம்மையாக விளங்குகின்ற மாநிலம் தமிழ்நாடு!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றரைக் கோடி தொண்டர்களால் கட்டப்பட்ட எஃகுக் கோட்டை, மாபெரும் இயக்கம் என்பதனைக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்! இதிலிருந்து, ஒரு கல்லைக்கூட உங்களால் அசைக்க முடியாது என்பதனை கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்.

பிற கட்சிகளில் எல்லாம் தலைவர்தான் உயர்ந்த பதவிக்கு வரமுடியும். ஆனால், ஒரு தொண்டன்கூட, தமிழகத்தில் முதலமைச்சராக வரமுடியும் என்றால், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இருக்கமுடியும்! உழைப்பாலும், விசுவாசத்தாலும் சாதாரணத் தொண்டன்கூட, உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்ற நிலைப்பாடுள்ள இயக்கம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதனைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு! ஏழை, எளிய மக்களுக்கு உழைக்கக்கூடிய அரசு! எந்தத் தும்பம் வந்தாலும் அதிலிருந்து விடுபடக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகின்ற அரசு!

பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை, மாநாடு போல் நடத்தியக்காட்டிய இந்த மாவட்டத்தின் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிருவாகிகள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அறிவிப்புகள்

- திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.
- “அனைவருக்கும் வீடு” என்ற திட்டத்தின்கீழ், ஏழை, எளிய மக்களுக்கு திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நகர், வாகைக்குளம் திட்டப் பகுதியில் 240 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்படும்.
- கீழப்பாவூர் ஒன்றியம், பெத்தநாடார்பட்டியில் அரசு கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.
- ராணி அண்ணா கல்லூரி மாணவிகள் கல்லூரிக்குச் சென்று வர ஏதுவாக, கீழப்பாவூரிலிருந்து ஆலங்குளம் வழியாக, திருநெல்வேலி செல்லப் பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும்.
- மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இராமநதி, ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டப் பணிகளுக்கு, விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- 4,943 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன உறுதி பெறும் பொருட்டு, கடையம் ஒன்றியம், இராம நதி அணை தூர்வாரப்படும்.
- நம்பியாற்றின் குறுக்கே, கண்ணநல்லூர் பகுதியில், ஒரு தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே, படுகை அணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், அகரம் கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே, தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் அனுமாநதி சிற்றாற்றில் கலக்கும் இடத்திற்கு மேற்புறம் தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில் அனுமாநதியில் அருந்தவபிராட்டி அணைக்கட்டிற்கு கீழ்புறம் தடுப்பணை கட்டப்படும்.
- திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், சிந்தாமணி கிராமத்தில் கோட்டமலையாற்றின் அச்சந்திகுளம் பிரியும் இடத்தில், படுகை அணை கட்டப்படும்.

- திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமத்தில் நிசபநதியின் குறுக்கே, தடுப்பணை கட்டப்படும்.

- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, அதிநவீன உபகரணங்கள், சி.ஆர்ம் கருவி, தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள் வழங்கப்பட்டு மாரடைப்பு சிகிச்சைப் பிரிவும் அமைக்கப்படும்.

- கண்டிகைப்பேரி மருத்துவமனையில், அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, அம்பாசமுத்திரம், கோவில்பட்டி, செங்கோட்டை மருத்துவமனைகளில் மாரடைப்புச் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.

- திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக ஒரு மருந்துக் கிடங்கு கட்டப்படும்.

- திருநெல்வேலி மாவட்டத்தில் பணியாற்றும் 379 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு, மருத்துவப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட, கையடக்கக் கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

- மேலநீலிதநல்லூர் மற்றும் இராதாபுரம் வட்டாரங்களில் விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

- சொக்கம்பட்டி மற்றும் வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ‘‘டயாலிசிஸ்’’, எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். புற்றுநோயாளிகளுக்கான, வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம்,

கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்படுத்தப்படும். மாரடைப்பு நோயை, ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

- ✶ சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில், ‘சி.டி.ஸ்கேன்‘, ‘டயாலிசிஸ்’ உள்ளிட்ட கருவிகள் வழங்கப்பட்டு தடுப்பூசி சேமிப்புக் கிடங்கும் அமைக்கப்படும். மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.
- ✶ ரெட்டியார்பட்டி அரசு மருத்துவமனையில் நவீன, கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.
- ✶ கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு ‘டயாலிசிஸ்’ கருவி வழங்கப்படும்.
- ✶ கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெத்தநாடார்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.
- ✶ பாளையங்கோட்டை ஒன்றியம், முத்தூர் ஊராட்சி, காமராஜ் நகர் பகுதியில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்கப்படும்.
- ✶ திசையன்விளையில், ஊரக வளர்ச்சித் துறை சார்பில், பன்னோக்கு சமுதாய நலக் கூடம் கட்டப்படும்.

சாலை மேம்பாட்டுப் பணிகள்

- ✶ தாழையூத்து முதல், டக்கரம்மாள்புரம் வரை, மதுரை – கன்னியாகுமரி சாலையில் கி.மீ.142/0 – 146/2 மற்றும் கி.மீ.156/0 – 160/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.
- ✶ திருநெல்வேலி புறவழிச்சாலை, கி.மீ.0/0 – 3/510 மற்றும் கி.மீ.3/920 – 7/6 வரை, நான்கு வழிச் சாலையாக மத்தியத் தடுப்புடன் (குறுக்கு வடிகால் உட்பட) அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.
- ✶ இடைகால் – சேர்ந்தமரம் சாலை, கி.மீ.0/0–13/8 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.
- ✶ சங்கரன்கோவில் – வாசுதேவநல்லூர் சாலை, கி.மீ.0/0 – 18/120 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.
- ✶ இராதாபுரம் – இடையன்குடி சாலை, கி.மீ.0/0 – 17/0 வரை ஒரு வழித்தடத்திலிருந்து, இடைவழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.

- சாம்பவர் வடகரை சாலை, கி.மீ.0/0 – 8/6 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

- திருநெல்வேலி – செங்கோட்டை – கொல்லம், கி.மீ.5/0 முதல் 50/6 வரை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

ரயில்வே மேம்பாலங்கள்

- மதுரை –கன்னியாகுமரி சாலை, கி.மீ.153/10–இல் கடவு எண் 4–க்கு மாற்றாக ரயில்வே கி.மீ.4/8–9–இல், திருநெல்வேலி செய்துங்கநல்லூர் ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில் வே மேம்பாலம் கட்டப்படும்.

- நாங்குநேரி – ஏர்வாடி – வள்ளியூர் – விஜயாபதி சாலை, கி.மீ.14/6–9–இல் கடவு எண் 82 பி – க்குப் பதிலாக, (ரயில்வே கி.மீ.322/9–இல் 323/0) நாங்குநேரி – வள்ளியூர் ரயில்வே நிலையங்களுக்கு இடையில், ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

- காவல் கிணறு – இராதாபுரம் சாலை, கி.மீ.0/6–இல் ரயில்வே கடவு எண் 74பி–க்குப் பதிலாக, ரயில்வே கி.மீ.310/0 – 310/100 – இல், வடக்கு பணங்குடி மற்றும் ஆரல்வாய்மொழி ரயில்வே நிலையங்களுக்கு இடையே, ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

புறவழிச்சாலைகள்

- அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சங்கரன்கோவிலில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படும்.

உயர்மட்டப் பாலங்கள்

- திருநெல்வேலி – மதுரை – கன்னியாகுமரி சாலை, கி.மீ.150/2–இல் பழைய ஆற்றுப் பாலத்திற்கு இணையாக, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே, உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- கரம்பை – பொட்டல் சாலை, கி.மீ. 3/4 –இல், ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- வாசுதேவநல்லூர் – பூலாங்குளம் சாலை, கி.மீ.1/2 – இல், ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- செண்பகபுரம் – மீனாட்சிபுரம் சாலையில் கி.மீ. 1/6–இல், ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- கோதைச்சேரி சாலையில், கி.மீ.1/2–இல், ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- ✶ ரெட்டியார்பட்டி – விஜயநாராயணம் சாலை, கி.மீ.9/8–இல், ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- ✶ குற்றாலம் – மத்தளம்பாறை சாலை, கி.மீ.0/10–இல், ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- ✶ திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, கோவிந்தபேரி கிராமத்தில் உள்ள மனோ கல்லூரியில், முதல் மாடியில், கட்டட பராமரிப்புப் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டித்தரப்படும்.

- ✶ திருநெல்வேலி மாவட்டம், இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி மற்றும் சுரண்டை காமராசர் அரசு கலைக் கல்லூரி ஆகியவற்றிற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தரப்படும்.

இது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள் பத்திரமாக வீடுபோய்ச் சேர வேண்டும். தொண்டர்களும் பொது மக்களும் வாகனத்தில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும்!

இந்த விழா நடைபெறுவதற்கு இடம் வழங்கிய பள்ளி நிருவாகத்திற்கு எனது இதயபூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதனைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்!

நேற்றும் நமதே!

இன்றும் நமதே!

நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

12.11.2017 அன்று, திருநெல்வேலியில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

விடுதலை வீரர்களின் இரத்தத்தால் சிவந்தமண் சிவகங்கையில் வீரத்தின் விளைநிலம் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

தமிழகம் அமைதிப் பூங்காவாக தொடர்ந்து விளங்கி வருகிறது!

பாரதி கண்ட புதுமைப் பெண்!

தாள் பதிக்கும் இடமெல்லாம் தடம் பதித்த தாய்!

தனித்து நின்று களம் கண்ட புறநானூற்றுக் காவியம்!

வீரத்தின் விளைநிலம்!

வெற்றியின் பிறப்பிடம்!

கழகத்தைக் காக்கும் காவல் தெய்வம் !

ஏழைகளின் இதய தெய்வம் !

பொன்மனச் செல்வி !

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில், பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பி துரை அவர்களே!

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. க.பாஸ்கரன் அவர்களே!

வரவேற்புரையாற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.இரா. வெங்கடேசன் அவர்களே!

சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். செந்தில்நாதன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.லதா அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, வருகை தந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“தென்பாண்டி நாட்டினிலே சேதுபதி பூமியிலே
பொன்பூத்த சீமை இது! புகழ் பாடும் சீமை இது!”

என்ற சிவகங்கை மண்ணின் மைந்தர் கவியரசர் கண்ணதாசனின் பாடல் வரிகளுக்கு ஏற்றாற்போல், வீர வரலாறுகளை நினைவுபடுத்தும் சிவகங்கை சமஸ்தானமும், இலக்கியச் செழுமை கொண்டு, கலைவளம் குவித்து, தமிழறிஞர்களின் பட்டியலில் பெரும்பாலோர்களின் பெயர்களை இடம்பெறச் செய்து, கலை நேர்த்தியுடன் கம்பீர அரண்மனைகளைப் போன்று தோற்றமளிக்கும் இல்லங்களை உடையதாய் விளங்கி வந்ததுடன், தொடர்ந்து சமையற்கலை, இறைவழிபாடு, பழைமையைச் சிதைக்காது ஆலயங்களைப் பேணி வருதல் இவற்றிலெல்லாம் தனித்த முத்திரை பதித்துக் கொண்டு வருகிறது!

சிவகங்கையின் முதல் மன்னரான சசிவர்ணப் பெரிய உடையத்தேவர், இராமநாதபுரம் பவானி சங்கர சேதுபதியை வென்று, 27.01.1730 இல், இந்த சிவகங்கை நகரை உருவாக்கினார். அப்போது இங்கிருந்த சிவகங்கை என்னும் நீர் ஊற்றை தெப்பக்குளமாக விரிவுபடுத்தி, அதன் அருகில் பெரிய அரண்மனையைக் கட்டினார். சிவகங்கை என்ற அந்த நீர் ஊற்றின் பெயரையே நகருக்கும் சூட்டினார். சிவகங்கைச் சீமை, நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது!

சிவகங்கைச் சீமையின் இரண்டாவது மன்னராக முடிசூடிக் கொண்ட முத்து வடுகநாதத் தேவர், வீரமங்கை வேலுநாச்சியாரை மணம் முடிக்கிறார். ஆங்கிலேயர்களுடன் நடந்த போரில், முத்து வடுக நாத தேவர் கொல்லப்பட்டார். சிவகங்கை ஆங்கிலேயர்களின் ஆளுகைக்குச் சென்றது. தியாகத் திருமகள் குயிலி, மருது சகோதரர்கள் போன்ற வீரர்களின் உதவியுடன் வீரமங்கை வேலு நாச்சியார், மீண்டும் சிவகங்கையைக் கைப்பற்றி மூன்றாவது மன்னராக முடிசூடிக் கொண்டார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான வீரவேள்வியில், வீரத்தாய் குயிலி தன் உடலில் நெய்யை ஊற்றி தீ வைத்துக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆயுதக் கிடங்கில் குதித்து, ஆயிரக்கணக்கான துப்பாக்கிகளையும், வெடிமருந்துகளையும், அழித்து விட்டு, தானும் எரிந்து சாம்பலானாள். வேலு நாச்சியாரைக் காட்டிக் கொடுக்காத குற்றத்திற்காக இரு துண்டங்களாக வெட்டப்பட்டவள் உடையாள் காளி. வேலு நாச்சியாரின் இரண்டு கரங்களாக இருந்து, ஆங்கிலேயர்களிடம் கடைசி வரை போர்புரிந்து, வீரமரணம் எய்தார்கள் மருது சகோதரர்கள்.

இந்த நான்கு பெரும் தியாகச் சீலர்களை, சிவகங்கை மக்கள் இன்றளவும் தெய்வங்களாக வணங்கிப் போற்றி வருகிறார்கள். வேலு நாச்சியாரின் வெற்றிகளுக்குக் காரணமாக இருந்து, நாட்டிற்காக இன்னுயிர் நீத்த மருது சகோதரர்களின் தியாகத்தைச் சிறப்பிக்கும் வகையில், இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது.

சோழ நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்த கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்கு ஆதரவளித்த நாட்டரசன் கோட்டையும், நகரத்தார்கள் காவிரி பூம்பட்டினத்திலிருந்து வெளியேறி இங்கு வந்த போது, அவர்களுக்குப் பாண்டிய மன்னரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இளையாத்தங்குடி என்ற ஊரும், சோழநாடு தருமபுரம் ஆதீன இளவரசராக இங்கு வந்து, மகா சந்நிதானமாக விளங்கிய குன்றக்குடி அடிகளாரின் பெயரோடு இணைந்துவிட்ட குன்றக்குடியும் சிவகங்கைக்குக் கூடுதல் பெருமையைச் சேர்க்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையில் பொறிக்கப்பட்டிருக்கும் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உலகளாவிய தத்துவ மொழிக்குச் சொந்தக்காரராக விளங்கும் கணியன் பூங்குன்றனார் இங்குள்ள மகிபாலன்பட்டியில் பிறந்தவர் என்பது சிவகங்கை மாவட்டத்திற்கு சூட்டப்பட்ட புகழ் மகுடம் அல்லவா ?

சிவகங்கை மாவட்டத்திலுள்ள திருக்கோஷ்டியூர் கோயிலில் இருந்தபடிதான், வைணவ புரட்சித் துறவி இராமானுஜர் “திருமந்திரத்தை” அனைத்து மக்களுக்கும் உபதேசம் செய்தார்! சங்க இலக்கியத்தால் புகழப்படும் பாரிவள்ளல் ஆட்சி செய்ததாகக் கூறப்படும் பிரான்மலையும், அங்கு 12 வருடங்களுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலரும், இந்த மாவட்டத்திற்கு மேலும் அணி சேர்க்கின்றன!

கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன் இறுதிக் காலத்தில் இங்கு வந்து வாழ்ந்ததால், சிவகங்கை மாவட்டத்தில் இன்றளவும் தமிழ் மணப்பதை, இங்கு தோன்றிய தமிழ் அறிஞர்களின் பட்டியலைக் கொண்டு அறிந்து கொள்ளமுடிகிறது. சங்க கால பெண்பாற் புலவர் ஒக்கூர் மாசாத்தியார்,

மாசாத்துவான், இளையான்குடி மாறநாயனார். கவியோகி சுத்தானந்த பாரதி, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், தமிழக மாவட்டங்களைப் பற்றி பல நூல்கள் எழுதிய சோம. லெக்குமணச் செட்டியார், எழுத்தாளர் தமிழ்வாணன்,

இசைமேதை இராமானுஜ அய்யங்கார், தமிழிசையை வளர்த்த செட்டி நாட்டரசர் ராஜா சர்அண்ணாமலை செட்டியார், குன்னக்குடி வைத்தியநாதன், வள்ளல் அழகப்பச் செட்டியார், ஏ.எம்.எம். முருகப்பச் செட்டியார், டி.ஐ.சைக்கிள் கம்பெனி அதிபர் எ.எம்.எம். அருணாசலம் செட்டியார், திரைப்படத் தயாரிப்பாளர் ஏ.வி.எம். மெய்யப்ப செட்டியார், திரைப்பட இயக்குநர்கள் கொத்தமங்கலம் சுப்பு, எஸ்.பி.முத்துராமன் என்று இந்த பட்டியல் முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகின்றது.

கண்ணாத்தாள் கோயில், காளையார்கோயில், காளீஸ்வரர் கோயில், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயில், குன்றக்குடி முருகன் கோயில், கண்டதேவி கோயில், இடைகாட்டூர் தேவாலயம், இளையான்குடி பள்ளிவாசல் போன்ற இறை திருத்தலங்களைக் கொண்ட மாவட்டம் சிவகங்கை மாவட்டமாகும்.

காரைக்குடி செட்டிநாடு அரண்மனைகள், வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் போன்ற சுற்றுலாத் தலங்களையும் உள்ளடக்கியது, இந்த சிவகங்கை மாவட்டமாகும். மதுரை தமுக்கம் மைதானத்தில் இருக்கும் தமிழ்த்தாய் சிலை, காரைக்குடியிலிருந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பெற்றது. சிவகங்கை, 'வானம் பார்த்த பூமி'யாக இருந்தாலும், மானம் காத்த பூமியாகும். சிவகங்கை வீரர்களுக்கு நீர்தாகத்தை விட சுதந்திர தாகம் அதிகமாக இருந்தது. போர் மேகம் எப்போது மூளும், எப்போது கலையும் என்று யாருக்கும் தெரியாது. மணலூர்ப் போர், திருப்புவனம் போர், காளையார்கோயில் போர், மானாமதுரைப்போர், திருப்பத்தூர்ப்போர், என்று ஊருக்கு ஊர் போர்கள் நடந்திருக்கின்றன. இந்தப் போர்களால் சிவகங்கை வரலாற்று ஏட்டில் பக்கத்துக்குப் பக்கம் வீரம் செறிந்து காணப்படுகிறது. வீரம் விளைந்த இந்த பூமியில், வீரத்தின் இலக்கணமாகத் திகழ்ந்த, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது பொருத்தமாக அமைந்துள்ளது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தங்கள் திரைப்படங்களில் மட்டுமல்ல, யதார்த்த வாழ்க்கையிலும் வீரமும் துணிவும் மிக்கவர் என்பதற்கு, நான் இங்கே சில சம்பவங்களை குறிப்பிட விரும்புகின்றேன். வட இந்தியாவில் தாராசிங் என்ற மல்யுத்த வீரர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு முறை தமிழ் நாட்டிற்கு வந்தபோது "தமிழ்நாட்டில் என்னை எதிர்த்து மல்யுத்தம் செய்து, வெல்ல யார் இருக்கிறார்கள் ?" என்று சவால் விட்டார்.

இதனைத் தமிழ் நாட்டின் மானப் பிரச்சினையாக எடுத்துக் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் "நான் தயார்" என்றார்கள். தாராசிங்குடன் மோதப் போகும் நேரம், இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு செய்தித் தாள்களில் அறிக்கை வெளியிட்டார்கள்.

இந்தச் செய்தி இந்தியா முழுவதும் வேகமாகப் பற்றிக்கொண்டு அப்போது பரபரப்பாகப் பேசப்பட்டது. அதே நேரம், இது ஒரு பெரிய பிரச்சினையாகி விட்டதால் மத்திய அரசு தலையிட்டு தாராசிங்கின் சவாலை வாபஸ் பெற வைத்தது.

அதைப் போல, இன்னொரு சம்பவத்தையும் நினைவுகூர விரும்புகின்றேன். "தாயைக் காத்த தனயன்" என்ற படத்திற்காக மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் புலியுடன் மோதும் காட்சி படமாக்கப்பட்டது.

பாதுகாப்பிற்காக புலியின் வாய் தைக்கப்பட்டிருந்தது. அதனால் கோபமடைந்த புலி, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களைத் தன் கால்களால் தாக்க, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் சுதாரித்துக் கொண்டு புலியுடன் நிஜ சண்டையில் இறங்கினார்கள்.

படப்பிடிப்புக் குழுவினர் செய்வதறியாது திகைத்து நின்றனர். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் புலியை அடக்கி, எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்கள்! இப்படி எந்தச் சவாலாக இருந்தாலும், தான் நேரில் சந்தித்து அதனை வெல்லக் கூடிய வீரராகத் திகழ்ந்தவர் நம் கழகத்தின் பிரம்மா, பிதாமகர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதைப்போல, வாளெடுத்து, போர்க் களம் கண்டு, எதிரிகளை ஓடஓட விரட்டிய தென்னகத்தின் ஜான்சிராணி வீரமங்கை வேலு நாச்சியாரின் மறு அவதாரமாகத் திகழ்ந்த நமது கழகத்தின் வீரத்தாய், வெற்றித் திருமகள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அரசியல் களத்தில் தனி ஒரு பெண்ணாக நின்று, எதிரிகளை வென்று காட்டியவர் என்பதை யாராலும் மறுக்கமுடியாது! இருபெரும் தலைவர்களும், எதிரிகளுக்கு இரும்பு மனிதர்களாகவும், எளியவர்களுக்கு இளகும் மனிதர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அன்புக்காகக் கண்கலங்கி இருப்பாரே தவிர, ஒரு காலமும் தனக்கு நேர்ந்த ஆபத்திற்காகக் கண்கலங்கியிருக்க மாட்டார்கள்! அவர் நடித்த படங்களில் கூட, அவர் அழுது நாம் அதிகமாக பார்த்திருக்க முடியாது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், நாடக உலகில் காலடி எடுத்து வைத்து நடித்த முதல் நாடகம், மகாபாரதமாகும். அர்ச்சுனனுக்கு வில்வித்தையில் அம்புகளை எடுத்துக் கொடுக்கும் இளவரசன்

உத்திரன் என்ற வீரனாக அறிமுகமாகி, மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனாக தனது திரைவாழ்க்கையை நிறைவு செய்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். எனவே, வீரம் என்பது அவர் இரத்தத்தில் கலந்திருந்தது. அவருக்கு எப்படிக் கண்ணீர் வரும் ?.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் இரண்டாவது நாடகமான நல்ல தங்காளில், வறுமையில் வாடும் தாயின் ஏழாவது குழந்தையாக மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்தார்கள். ஆறு குழந்தைகளைக் கிணற்றில் தூக்கிப்போட்ட பின்பு, ஏழாவது குழந்தையான மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை தூக்கிப் போடப்போகும் போது, தன் தாயாரைப் பார்த்து "அம்மா, தப்பிப் பிழைத்தால், தகப்பன் பேரைச் சொல்லுவேன், ஓடிப் பிழைத்தால் உன் பேரைச் சொல்லுவேன், அதனால் என்னை மட்டுமாவது உயிரோடு இருக்க விடும்மா!" என்ற சோகமான வசனத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் சரியாகப் பேசினார்கள். அந்த சோகமான வசனத்தை அழுது கொண்டே சோகத்துடன் பேசி இருக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அழுகையே வரவில்லை!

அழுவதுபோல் முகத்தை மறைத்துக் கொண்டார்கள். நாடகக் கம்பெனியினர் அழுகையை வரவழைக்க எவ்வளவோ முயன்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை அழவைக்க முடியவில்லை. அன்று அவர் நடித்து சம்பாதிக்கும் கூலியைக் கொண்டுதான் சாப்பிட வேண்டும் என்ற வறுமை நிலையில் இருந்த போதும் அவரால் அப்படி நடிக்க முடியவில்லை. "சிரித்து வாழ வேண்டும், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே! உழைத்து வாழ வேண்டும், பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே!" என்று சிரிப்புக்கு புதிய இலக்கணம் வகுத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதைப்போல, முற்போக்குச் சிந்தனை கொண்ட புரட்சிப் பெண்ணுக்கான பாத்திரங்களையே விரும்பி ஏற்று நடித்தவர், நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! இருபெரும் தலைவர்களின் வீர வாழ்க்கையே தொண்டர்களாகிய நமக்கு செய்தியாக இருக்க வேண்டும். வீரம் செறிந்த கழகத்தின் பாசறையிலிருந்து உருவானவர்கள் நாம்!

எத்தனை காலமானாலும், அ.இ.அ.தி.மு.க.தான் தமிழ்நாட்டை நிரந்தரமாக ஆளும்! மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆசிபெற்ற தொண்டர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிவந்த தொண்டர்களும்தாம் தமிழ்நாட்டை ஆளுவார்கள்!

எனக்கு முன்னாலே, உங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்கள் திரு.பாஸ்கரன் அவர்கள் குறிப்பிட்டார், நானும் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவன், அவரும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர், துணை முதலமைச்சர் அவர்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆகவே, இங்கே மேடையிலே வீற்றிருக்கின்ற 100க்கு 90 பேர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதேபோல், அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களும் 100க்கு 90 பேர் விவசாயத்தை நம்பி வாழக்கூடிய விசுவாசம் மிக்கவர்கள். எனவே, அப்படிப்பட்டவர்கள் நாங்கள் அத்தனை பேருமே. ஆகவே, அவர்கள் சொல்கின்றபொழுது, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்மிடத்திலே இல்லை, இறைவன் அம்மாவை எடுத்துக் கொண்டார். அவருக்குப் பின்பு, நீங்கள் இருவரும் பொறுப்பேற்றிருக்கிறீர்கள், உங்களை நம்பி நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னீர்கள். நிச்சயமாக, நீங்கள் எண்ணுகின்ற எண்ணப்படி இந்த அரசும், ஆட்சியும், கட்சியும் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டுகின்றேன். ஏனென்று சொன்னால், ஒரு விவசாயி எப்படி நிலத்தில் உழுது, நிலத்தைப் பண்படுத்தி, பயிர்கள் நடவு செய்து விளைச்சலைப் பெறுகின்றானோ, அதேபோல, மேடையிலே வீற்றிருக்கின்ற நானும், அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கழகத்தினுடைய அனைத்து மட்டத் தொண்டர்களோடு இணைந்து பணியாற்றி, இந்த அரசுக்கு, ஆட்சிக்கு நற்பெயரை ஏற்படுத்துவோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் எப்படிக் கட்சியை வழிநடத்தினார்களோ, அதேபோல் அத்தனை பேருடைய ஒத்துழைப்போடு, சிறப்பாகக் கட்சியை வழிநடத்திச் செல்வோம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் 1974இல் இந்த இயக்கத்தில் இணைந்தேன். கிட்டத்தட்ட 43 ஆண்டுகாலம் சிந்தாமல், சிதறாமல், எந்தவித சறுக்கலுக்கும் ஆளாகாமல் நிலைத்து நின்று பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்திலேயிருந்து, இன்றுவரை கழகத்திற்கு விசுவாசமாகவும், உண்மையாகவும், நேர்மையாகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, உங்களால் இந்த உயர்ந்த பதவி எனக்கு கிடைத்திருக்கிறது என்பதனை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 43 ஆண்டுக்காலம் உழைத்திருக்கின்றோம், ஆறு முறை சிறை சென்றிருக்கின்றேன்; நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றேன், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கின்றேன்; அமைச்சராக இருந்திருக்கின்றேன், அதற்குப் பிறகுதான், முதலமைச்சர் பதவி உங்கள் மூலம் எனக்கு கிடைத்திருக்கின்றது. எனவே, தொண்டர்களுடைய எண்ணப்படி ஆட்சியும், கட்சியும் நடக்கும் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே, தமிழ்நாட்டின் முதலமைச்சராகி விட்டார்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நடித்து வெளிவந்த கடைசித் திரைப்படமும் அதுதான். அந்தப் திரைப்படத்தில் அமைந்த ஒரு பாடல் அ.இ.அ.தி.மு.க. செயின்ட் ஜார்ஜ் கோட்டையைப் பிடிக்கப்போகிறது என்பதைத் தீர்க்க தரிசனமாகக் கூறியது.

“தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை” – என்ற அந்த பாடலில்

“ கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்,
கொள்கை வீரர் தியாகங்களை ஏற்றிட வேண்டும்.
புரட்சியிலே சரித்திரத்தை மாற்றிட வேண்டும்,
பொது உடமை சமுதாயம் மலர்ந்திட வேண்டும்”

என்று எழுதப்பெற்ற வரிகளை, அப்போது கழகத்தொண்டர்கள் திரைப்பாடலாக மட்டுமே ரசிக்காமல், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தங்களுக்கு இட்ட கட்டளையாக ஏற்றுக் கொண்டு உழைத்தார்கள். அதன் விளைவாகத்தான், அன்றிலிருந்து இன்று வரை, நம் கழகம் கோட்டையில் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் உள்ளத்தில் உதித்த எண்ணங்களை எழுத்தாக்கி, பாடலாகப் பதியச் செய்தவர் இந்த மண்ணின் மைந்தராகிய கவிஞர் முத்துலிங்கம் என்பது சிவகங்கை மாவட்டத்திற்குக் கிடைத்த பெருமையல்லவா ? மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் திரையோடும், கழகத்தோடும் சேர்த்து வளர்க்கப்பட்டவர்களில் கவிஞர் முத்துலிங்கமும் ஒருவர். அதனால் தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் நியமிக்கப்பட்ட மூன்று அரசவைக் கவிஞர்களில், இவர் ஒருவர், மற்றவர் கவிஞர் கண்ணதாசன் ஆகிய இருவரும் – இந்த சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இதிலிருந்தே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தின் மீது வைத்திருந்த மரியாதை நமக்குத் தெரிகிறது!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முதல் வருடத்திலேயே, சிவகங்கை மாவட்டத்திலுள்ள பையூர் பிள்ளை வயல் கிராமத்தில் ஏழை நரிகுறவர்களுக்காகக் குடியிருப்புகளைக் கட்டித்தந்தார்கள். அதைப்போல, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 1980ஆம் ஆண்டு காரைக்குடியில் இருந்த நெசவாளர்களுக்கு “நெசவாளர் நகர்” என்ற குடியிருப்புகளை உருவாக்கினார்கள்.

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து, சிவகங்கையைத் தனி மாவட்டமாக உருவாக்கியது, மானாமதுரையில் சிப்காட் தொழிற்சாலையை உருவாக்கியது, மன்னர் துரைசிங்கம் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றியது, இணைப்புப் பாலங்களைக் கட்டியது, காரைக்குடியில் ஆவின் நிறுவனத்தைத் தொடங்கியது, காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகத்தை உருவாக்கியது, மருது சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கியது – இப்படிப் பலவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், சிவகங்கைக்குச் செய்ய வேண்டுமென்று விரும்பிய அனைத்தையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தாம் ஆட்சிக்கு வந்தபிறகு, தொடர்ந்து செய்தார்கள்! மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நடைபெறும் கழக ஆட்சியில், சிவகங்கைக்கு ஏராளமான திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இருபெரும் தலைவர்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றும் தொண்டர்களாக நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், 24 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 117 கண்மாய்கள் புதுப்பிக்கும் பணி உட்பட, 34 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 127 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பொதுப்பணித்துறையின் மூலம் நிறைவேற்றப்பட்ட 32 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் உட்பட, 44 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 88 பணிகளை நான் இன்று தொடக்கி வைத்துள்ளேன். சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில், 15 ஆயிரத்து 689 பயனாளிக்களுக்கு 39 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திடஉதவிகளை வழங்க உள்ளேன்!

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், இன்று வரை, 11 ஆயிரத்து 367 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 35 ஆயிரத்து 483 பணிகளைத் தொடக்கி வைத்தும், 4 ஆயிரத்து 838 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 994 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம், 16 ஆயிரத்து 206 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 42ஆயிரத்து 477 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆகவே, எதிர்கட்சியைச் சேர்ந்த மு.க.ஸ்டாலின், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்து, இன்றையதினம் எதிர்க்கட்சியினுடைய தி.மு.க. சட்டமன்றத் துணைத்தலைவராக இருக்கின்ற துரைமுருகன் அவர்கள், என்ன செய்தீர்கள் என்று கேட்டார். இவ்வளவும் நாம் செய்திருக்கின்றோம் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சிவகங்கை மாவட்டத்தில், கடந்த ஆறு ஆண்டுகளாக அம்மாவினுடைய ஆட்சியில் நடைபெற்ற பணிகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். படித்த ஏழை பெண்களுக்கான திருமண உதவித் திட்டத்தின்கீழ், 20 ஆயிரத்து 711 படித்த ஏழைப் பெண்களுக்கு, 67 கோடியே 26 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் 785.38 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. 29 ஆயிரத்து 781 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 592 கோடியே 91 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மாணாக்கர்களுக்கு 71 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 47 ஆயிரத்து 747 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின்கீழ்

70 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில், 36 ஆயிரத்து 589 பேர் பயன் அடைந்துள்ளனர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின்கீழ், 74 ஆயிரத்து 619 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, 77 கோடியே 9 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்துப் பணிகள் திட்டத்தின்கீழ், 3 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 39 பாசன கண்மாய்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ், 2 ஆயிரத்து 240 கண்மாய்கள் தூர்வாரப்பட்டு 3 இலட்சத்து 23 ஆயிரத்து 549 கன மீட்டர் வண்டல் மண், 8 ஆயிரத்து 773 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரணமாக, 149 கோடியே 78 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 2 இலட்சத்து 48 ஆயிரத்து 965 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். டெல்டா மாவட்டங்களில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், 'பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்' சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் மட்டும், இத்திட்டத்தின்கீழ், 236 கோடியே 49 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 64 ஆயிரத்து 675 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 96 கோடியே 54 இலட்சம் ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 30 ஆயிரத்து 317 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

தூய்மை பாரத இயக்கத் திட்டத்தின்கீழ், 65 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 56 ஆயிரத்து 575 தனிநபர் கழிப்பறைகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 30 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 துணை மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைத்துறை 'நபார்டு' மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ், 42 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் 21 பாலங்கள், 14 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 78 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புப்பிரிவின்கீழ், 253 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,545.78 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாவட்டத்தில், பாசன கண்மாய்கள் பழுதுபார்க்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்படுதல் திட்டத்தின்கீழ், 7 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 19 பாசனக் கண்மாய்களில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம், வீரத்தாய் குயிலி நினைவு சின்னம், கவியரசு கண்ணதாசன் மணி மண்டபம், தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டபம், மருது பாண்டியர்கள் நினைவு மண்டபம் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. திருப்புவனம் பேரூராட்சி அருகில், வைகை ஆற்றின் குறுக்கே, 10 கோடி ரூபாய் செலவில், தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிலர்

மக்களுக்காகத் தொண்டு செய்வதாகவும், அவர்கள் நலன்களுக்காகவே தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்யதாகவும் கூறுவதை நம்பாதீர்கள்.

உண்மையில், அப்பாவிப் பாமர மக்களை வஞ்சித்து அவர்களைச் சுரண்டி சுகபோக வாழ்வு வாழ்பவர்கள் அத்தகையவர் என்பதை நாம் கடந்த காலத்தில் தெரிந்து கொண்டோம். இதைக் கூறுகிறபோது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு சேவல், மரத்தின் மீது உட்கார்ந்துக் கொண்டு இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்ததால், ஆனந்தமாகக் கூவியது. அந்த சமயம் அங்கு வந்த நரிக்கு நல்ல பசி. அதற்கு சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது. அது மரத்தின் மீது இருந்ததால் அதனால் அதை பிடிக்க முடியவில்லை. ஒரு தந்திரம் செய்தது. ''சகோதரனே வணக்கம். ஒரு நல்ல செய்தி,. பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. அன்பாக நடந்துக் கொள்ள வேண்டும். சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறியது. அதனால் கொஞ்சம் கீழே வா நாம் இருவரும் இதுப்பற்றி பேசுவாம்'' என்றது.

ஆனால் நரியின் தந்திரப் பேச்சை சேவல் புரிந்துக் கொண்டது. தூரத்தில் எதையோ பார்ப்பது போல் தலையை தூக்கிப் பார்த்தது. உடனே நரி தலையைத் தூக்கி தொலைவில் என்ன பார்க்கிறாய் என்று கேட்டது. அதற்கு சேவல், அங்கே சில வேட்டை நாய்கள் வருவது போல் தெரிகிறது. அவை வேட்டை நாய்கள் தானா என்று பார்க்கிறேன் என்று கூறியது. அதைக் கேட்ட நரி பயந்துக் கொண்டு உடனே அங்கிருந்து ஓடிவிட்டது. உடனே சேவல், ''நானும் கிழே வருகிறேன். நாயை கண்டு ஏன் பயப்படுகிறாய். இப்பொழுதுதான் நீ சொன்னாய் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது'' என்று கேட்டது

அதற்கு நரி ''அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேகபேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். நாய்களுக்கு தெரிந்திருக்காவிட்டால் என் கதி என்னாவது'' என்று ஓட்டம் பிடித்தது. உடனே சேவல் ''யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய் உனது கெட்டிக்காரப் பொய்கள் என்னிடம் பலிக்காது'' என்று நரியிடம் கூறியது.

இவ்வாறுதான் பல பேர் துணிந்து மக்களிடம் புழுகு மூட்டைகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கின்றனர். உண்மை தெரிந்தால், மக்களின் முகத்தில் எப்படி விழிப்போம் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், பொய் மூட்டைகளைத் தினமும் அவிழ்த்து விடுவதே சிலரது வாடிக்கையாக உள்ளது என்பதை மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் வழியில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியில் நடைபெற்று வரும் இந்த அம்மாவின் அரசு, வறட்சி காலங்களின் போதும் சரி, மழைக்காலங்களிலும் சரி, நிவாரணப் பணிகளை மக்களே பாராட்டும் வகையில் சிறப்பாகச் செய்துக் கொண்டிருக்கிறது. மக்கள் இந்த அரசின்

நடவடிக்கைகளைப் பாராட்டுகிறார்கள். இந்தக் கதையில் வரும் நரியைப் போல், ஒரு சிலர் என்ன முயற்சி செய்தாலும் அது தோல்வியில்தான் போய் முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்!

இன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவர்களும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களும் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டதைப் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு, உண்மையிலேயே புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின்போதும் சரி, மாண்புமிகு புரட்சித்தலைவி மறைவிற்குப் பிறகு இந்த அம்மாவினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கும்போதும் சரி, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழகம், இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாக நிலவிக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஓராண்டுக் காலமாக, மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் செயல்பட்டு வரும் இவ்வரசைப் பற்றிக் குறை கூற ஏதும் இல்லாததால், திமுக, இந்த மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என பொய்யான குற்றச்சாட்டினை தினந்தோறும் ஊடகங்களில், திரும்பத்திரும்ப கூறி அதனை உண்மையாக்க முயன்று வருகின்றனர். ஆனால், உண்மை என்னவெனில், அவர்கள் ஆட்சியின்போது, சட்டம், ஒழுங்கு எவ்வாறு சீர்குலைந்திருந்தது என்பது பொதுமக்களுக்கு நன்கு தெரியும்! இங்கு கூடியுள்ளவர்களில் பலர் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் இருப்பீர்கள்; அதனால் தான், நீங்கள், கடந்த 2011ஆம் ஆண்டு ஆட்சிக்கட்டிலில் இருந்த அவர்களைத் தூக்கி எறிந்தீர்கள்! இதற்கு நேர்மாறாக, அனைத்திந்திய அண்ணா திராவிட ஆட்சியின் போது சட்டம், ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டதனால், அம்மாவினுடைய ஆட்சி, 2016இல் மீண்டும் அமைக்கப்பட்டது. இன்றைக்கு, சட்டம், ஒழுங்கு தமிழ்நாட்டிலே சீர்குலைந்து விட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிக்கு, நான் சில குறிப்புகளைத் தர விரும்புகின்றேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சி எவ்வாறு நடைபெற்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2010ஆம் ஆண்டு வரை, கொலை வழக்குகள், ஆதாயக் கொலைகள், கொள்ளைகள், களவு வழக்குகள், இப்படி பல்வேறு வழக்குகள் 14,583 பதியப்பட்டன. ஆனால், புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆறாண்டுகால ஆட்சியில், இந்தச் சம்பங்கள் 12,128 ஆகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கின்றது என்பதற்கு இதுவே ஒரு உதாரணம். அதேபோல், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், இன்றைக்கு வரதட்சணைக் கொலைகள், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆறாண்டுகால ஆட்சியில் இந்த சம்பவங்கள் 12,128 ஆகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவேதமிழகத்தில்சட்டம்,ஒழுங்குசிறப்பாகஇருக்கிறது

என்பதற்கு இதுவே ஒரு உதாரணம். அதேபோல பெண்களுக்கு எதிரான குற்றங்கள், வரதட்சணைக் கொலைகள், பாலியல் கொடுமை வழக்குகள், மானபங்க வழக்குகள், கணவர் மற்றும் அவரது உறவினரால் துன்புறுத்தப்படும் வழக்குகள், கடத்தல் வழக்குகள், இப்படி பல வழக்குகள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே பதியப்பட்டன. அந்த வழக்குகளை விட, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தவரை குறைந்த வழக்குகள் தான் பதியப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன். ஆக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட, அம்மாவினுடைய அரசால்தான் இன்றைக்கு சட்டம், ஒழுங்கு சீர் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, நடைபெற்ற சில நிகழ்வுகளை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். கடந்த 2006ஆம் ஆண்டு, தென்காசியில் குமாரபாண்டியன் கொலை செய்யப்பட்டார், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. 2000இல், இதே சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை நகரமன்றத்தலைவர் வாகனத்தில் செல்கின்றபொழுது, சினிமாவில் வருகின்ற காட்சி போல் குண்டு வைத்து, அதை ‘ரிமோட் கண்ட்ரோல்’ மூலம் வெடிக்கச் செய்து, படுகொலை செய்த ஆட்சி தி.மு.க. ஆட்சி என்பதை நினைவுகூற விரும்புகின்றேன். அதே ஆண்டில், தி.மு.க. மாவட்டச் செயலாளர் பூண்டி கலைச்செல்வன் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி துணைத்தலைவர் குமார் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். 2008இல் பா.ஜ.க. திருவாரூர் மாவட்டச் செயலாளர் மாணிக்கம் மற்றும் அவர் தந்தை ஆகியோர் கூலிப்படையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டனர். 2010இல் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டார். 2007ஆம் ஆண்டு, “யார் பெரியவர்கள்?” என்ற சண்டை வருகின்றபொழுது அரசியல் வாரிசு யார் என்பதை வெளிப்படுத்துகின்ற அந்த கருத்துக்கணிப்பைத் தொடர்ந்து திமுக ஆட்சியின் ஒரு கும்பல் நடத்திய வெறியாட்டத்தால், மதுரையில் பத்திரிகை அலுவலகம் சூறையாடப்பட்டது! தீக்கிரையாக்கப்பட்டு மூன்று அப்பாவிகள் உயிர்கள் தீக்கிரையாக்கப்பட்டனர்! அதே ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில், இரு மதத்தினரிடையே ஏற்பட்ட மோதலில், 6 பேர் கொல்லப்பட்டனர்!

திருவாரூர் மாவட்டம், குடவாசல் பகுதியில் இரு கோஷ்டியினரிடையே நடந்த துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். 2008ஆம் ஆண்டு, எழும்பூர் நீதிமன்றத்தில், வழக்கறிஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அதே ஆண்டில் அதியமான்கோட்டை காவல் நிலையத்தில் இருந்த துப்பாக்கிகள் மாயமாகின. ஆகவே, இவர்கள் ஆட்சியில், சட்டம், ஒழுங்கு எவ்வாறு இருந்தது என்பதனை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டுகிறேன். ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவியினுடைய அரசு, கவனமாக சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கின்றது. அதனால், தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்பதனை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதேபோல, இன்றையதினம், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர், இன்றைக்கு தி.மு.க.வினுடைய எதிர்க்கட்சித்

துணைத்தலைவராக இருக்கின்ற துரைமுருகன் அவர்கள் பொதுப்பணித்துறையிலே ஆயிரக்கணக்கான கோடிகள் மாயமாகிவிட்டதென்று குற்றம் சாட்டியுள்ளார். மாண்புமிகு துணை முதலமைச்சர் இருந்த காலத்திலும், நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த காலத்திலும், ரூ.5,000 கோடி எங்கே போய்விட்டதென்று ஒரு குற்றச்சாட்டை சொன்னார். எங்கேயும் போகவில்லை, தமிழகத்தில் தான் இருக்கின்றது. அத்தனையும் கட்டடங்களாக இருக்கின்றன, பாசன மேம்பாட்டுத் திட்டங்களாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. அதெல்லாம் அவர்களுக்கு கண்ணுக்குத் தெரியாது. எப்பொழுதும் அவர்கள் நினைவில் இருப்பது ஊழல் தான். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் என்ன என்பது ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். பாசனத் திட்டத்தின் வாயிலாக 2011–2012 நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ், ரூ.116 கோடி பணி முடிவடைந்தது. 2011–2012இல் காவிரி டெல்டாவில், மதகுகள் சீரமைக்கும் பணி ரூ.960.66 கோடியில் நடைபெற்று வருகின்றது. 2011–2012 அனைத்து மாவட்டங்களிலும் ஏரிகள், குளங்கள் சீரமைக்கும் பணி ரூ.258.72 கோடியில் பணி நிறைவு பெற்றது. 2011–2012 பெரம்பலூர் மாவட்டம் மருதையாறு நீர்தேக்கம் கட்டும் பணி ரூ.124.20 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. 2011–2012 சென்னையில் நீர்சேமிப்பு அணையை உயர்த்தி அமைக்கும் பணி ரூ.495 கோடிக்கான பணி நடைபெற்று வருகிறது. 2011–2012 நீர்வள, நிலவளத் திட்டம் ரூ.128.33 கோடிக்கான பணி முடிந்துள்ளது. 2012–2013 தாமிரபரணி கருமேனியாறு நம்பியாறு இணைப்புத் திட்டம் 371 கோடிக்கான பணி நடைபெற்று வருகிறது. 2012–2013 நிதி பராமரிப்பு நீர்நிலைகள் பராமரித்தல் ரூ.199.99 கோடிக்கான பணி நிறைவு பெற்றுள்ளது. 2012–2013 'நபார்டு' ஆளியாறுத் திட்டம் கால்வாய் ரூ.221.15 கோடி பணி நிறைவு பெற்றது. 122 அணைகள் புனரமைக்கும் மேம்பாட்டுத் திட்டம் 469 கோடி பணி நிறைவு பெற்று வருகிறது. 2013–2014 காவிரிப் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.960.66 கோடிக்கான பணி நடைபெற்று வருகிறது. 2015–2016 நபார்டு பராமரிப்பு, நீர்நிலைகளை பராமரிக்கும் திட்டம் ரூ.260.19 கோடியில் பணிகள் நடைபெறுகின்றன. 2016–2017 உலகவங்கி நிதியுதவி பாசன விவசாயம் மேம்படுத்தல் 29 மாவட்டங்களில் ரூ.289.20 கோடியில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2016–2017 குடிமராமத்துத் திட்டப்பணி, ரூ.100 கோடியில் 1,519 ஏரிகளில் பணி நிறைவு பெறும் நிலையில் உள்ளது. 2016–2017 நபார்டு திட்டத்தில், கடலூர் மாவட்டத்தில் நிரந்தர வெள்ளத்தடுப்பு பணி ரூ.140 கோடி, பணி முன்னேற்றத்தில் உள்ளது. 2016–2017 மாநில நதிநீர் இணைப்புத் திட்டம் ரூ.625.15 கோடியில் முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2011 முதல் 2016 வரை, ரூ.10,295 கோடி அறிவிக்கப்பட்டுள்ள 242 பெரிய திட்டங்களில், 200 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, ரூபாய் 7,128.19 கோடி செலவிடப்பட்டுள்ளது. 42 திட்டங்கள் முன்னேற்றத்தில் உள்ளன. ஆகவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகும் சரி, இந்தத்துறை விரைவாக, மக்களுக்கு நன்மை செய்கின்ற துறை என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைய தினம் எல்லா

துறைகளிலுமே சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. எந்தக் குறையும் காண முடியவில்லை. ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி, வேண்டுமென்றே ஊடகங்களிலும், செய்தித் தாள்களிலும் அன்றாடச் செய்தியாக வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவரும், அதனைச் சார்ந்தவர்களும். எந்த சதித்திட்டங்களை தீட்டினாலும், எந்தப் பொய் மூட்டையை அவிழ்த்து விட்டாலும், உண்மையை யாராலும் மறைக்க முடியாது! ஏனென்றால், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய வழியில் வந்து, புரட்சித்தலைவி அம்மாவால் கட்டிக் காத்த ஆட்சி மக்களால் போற்றப்படுகின்ற ஆட்சி என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாவட்ட அமைச்சர் கொடுத்திருக்கின்றார், சிவகங்கையைச் சேர்ந்த தி.மு.க. முன்னாள் அமைச்சர் தா.கிருட்டிணன், நடுரோட்டில் வெட்டிக் கொல்லப்பட்டார்! இப்படிப்பட்ட சம்பவங்களெல்லாம் உங்களுடைய ஆட்சியிலே அரங்கேறியிருக்கின்றன.

இன்றைக்கு, சுகாதாரத்துறையிலே முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு. புரட்சித்தலைவி அம்மா எடுத்துவரும் தொடர்நடவடிக்கையால், சுகாதாரத்துறையில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபொழுது, தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, ‘அனைவருக்கும் மருத்துவ சேவை’ என்ற உயர்வான நிலையை அடைந்தது. மேலும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சிறப்பான செயல்பாட்டினால், பேறுகாலத்தில், தமிழ்நாட்டில் குறைந்த இறப்பு விகிதமானது இந்தியாவில் சராசரி அளவைவிட பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, தாய் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டு, இந்திய அளவில் முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மேலும், விபத்துகாய சிசிக்சை மையங்கள் மற்றும் உடல் உறுப்பு தானத்திலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. மக்கள் நல்வாழ்வுத்துறையின் இந்தச் சாதனையை, மத்திய அரசு மற்றும் உலக சுகாதார நிறுவனமும் வெகுவாகப் பாராட்டியுள்ளது. ஜப்பான் நாட்டு முகமை JICA மூலம், 1,636 கோடி ரூபாய் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை நிதி ஒதுக்கீடு செய்யபட்டு பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறையின் மிகச் சிறப்பான செயல்பாடுகளினால், முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மருத்துவமனை கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நவீன உபகரணங்களுக்கு, மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்திற்கு, உலக வங்கி ரூ.2,685 கோடி வழங்கிட முதல் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமன்று! இன்றைக்கு ஏழை, எளிய, சாதாரண மக்கள் நோய்வாய்ப்பட்டால் இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவை செய்யவேண்டுமென்று சொன்னால், பல இலட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட ஏழை மக்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக, அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு,

இருதய அறுவை சிகிச்சை, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலே, ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளிக்கு செய்யப்பட்டு அவர் நலமோடு இருக்கின்றார். ஆகவே, இன்றைக்கு, மருத்துவத்துறையிலே ஒரு மைல்கல்லை நாம் அடைந்திருக்கிறோம். இது ஒரு சாதனை. தனியார் மருத்துவமனையில்தான், இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், இன்றைக்கு அரசு மருத்துவமனையிலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையினால், மருத்துவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்ததன் விளைவாக, இன்றைக்கு, செருப்புத் தைக்கும் ஏழைத் தொழிலாளி உயிரோடு பாதுகாக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னால், அம்மா அரசு எந்த அளவிற்கு மருத்துவ சேவை செய்து கொண்டிருக்கிறது என்பதனை நாட்டு மக்கள் நன்கறிவர்!

இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அரசு உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி! நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

பேருந்து நிலையம்

- திருப்பத்தூர் பேரூராட்சியில் பொதுமக்கள் வசதிக்காகப் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

தெப்பக்குளம் சீரமைப்பு

- காளையார்கோவில் மையப்பகுதியில், மக்களின் நீர் ஆதாரமாக அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தெப்பக்குளத்தின் சுற்றுச்சுவர், படித்துறை, நீர்வரத்துக் கால்வாய் மற்றும் சுற்றுப்பாதை சீரமைக்கப்படும்.

அரசு கலைக் கல்லூரி கலையரங்கம்

- சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியின் கலையரங்கம் மற்றும் சீரணி அரங்கம் புதுப்பிக்கப்படும். இந்தக் கல்லூரியைச் சுற்றிலும் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

புறவழிச்சாலை

- சிவகங்கை நகருக்கு, 10.60 கி.மீ. நீளத்திற்கு, புறவழிச்சாலை அமைக்கப்படும்.

பாலங்கள்

- பெரம்பலூர் – மானாமதுரை சாலையிலிருந்து, வேலூார் செல்லும் சாலையில் கி.மீ 4/2இல் ஒரு பாலம் கட்டப்படும்.
- உருவட்டி – மேலவாய்க்கோட்டை சாலையில், கி.மீ 1 /2இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- கப்பலூர் – ஏம்பல் சாலையில், கி.மீ 5 / 10இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- சாந்தரசன்கோட்டை – சூரணம் சாலையில், கி.மீ 5/6இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- மாத்தூர் – முலைக்குளம் சாலையில், கி.மீ. 1/4இல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.
- ஆண்டிச்சி ஊரணி – ஒட்டாணம் சாலையில், கி.மீ. 0 / 4இல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.
- மல்லாக்கோட்டை– நைனாபட்டி சாலையில், கி.மீ. 3/2இல் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.
- திருப்பத்தூர் – ஆலங்குடி சாலையில், கி.மீ. 9 / 6–8இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.
- கண்ணங்குடி – கூக்குடி சாலை கி.மீ.2/8இல், விருசுழி ஆற்றின் குறுக்கே, ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

மருத்துவ வசதிகள்

- சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சி.ஆர்ம். கருவி மற்றும் தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீனக் கருவிகள் ஆகியன வழங்கப்படும். இங்கு மூப்பியல் பிரிவு ஏற்படுத்தப்படும்.
- சிவகங்கை மாவட்டத்தில் மருந்துக் கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும்.
- சிவகங்கை மாவட்டத்தில் பணியாற்றும் 275 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு, மருத்துவப் புள்ளி விபரங்களைப் பதிவு செய்திட, கையடக்கக் கணினிகள் (Tablets) வழங்கப்படும்.
- காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், சி.டி.ஸ்கேன், டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். விபத்து காய சிகிச்சை மையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

அணைக்கட்டுகள் கட்டுதல்

- ❖ காரைக்குடி வட்டம், குறுந்தம்பட்டு கிராமத்தில் உள்ள எஸ்.ஆர்.பட்டினம் கண்மாய் மற்றும் அதன்கீழ் உள்ள கண்மாய்களுக்குத் தண்ணீர் வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே, 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் அணை கட்டப்படும்.

தடுப்பணை கட்டுதல்

- ❖ சிங்கம்புணரி வட்டம், காளாப்பூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படும்.

படுகை அணை கட்டுதல்

- ❖ சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கானூர் கால்வாய் மற்றும் பழையனூர் கால்வாய் மூலம் பாசனம் பெறும் கண்மாய்களுக்காக, வைகை ஆற்றில், திருப்புவனம் அருகில் படுகை அணை கட்ட விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

ஆற்றினைச் சீரமைத்தல்

- ❖ சருகணி ஆற்றின் குறுக்கே உள்ள அணைக்கட்டு மற்றும் ஆறுகளில் உள்ள மணல் திட்டுகளை அகற்றி, இரு கரைகளையும் பலப்படுத்திச் சீரமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மின் வசதிகள்

- ❖ சிவகங்கை மாவட்டத்தில், கீழச்சீவல்பட்டியில் புதிய 33/11 கி.வோ. துணை மின்நிலையம் ரூ.4.43 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.
- ❖ சிவகங்கை மாவட்டம், தெக்கூர் 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில், 16 எம்.வி.ஏ. திறனுடன் கூடிய புதிய மின்மாற்றி நிறுவப்படும்.
- ❖ சிவகங்கை மாவட்டம், இடையமேலூரில் புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம், ரூபாய் 11.70 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.
- ❖ சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலுள்ள சாலை கிராமம், 110/22 கி.வோ துணை மின்நிலையத்தில் புதிய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்படும்.
- ❖ சிவகங்கை மின்பகிர்மான வட்டத்தில், புதியதாகக் கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse Off Call Centre) ரூ.18.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.
- ❖ சிவகங்கை மாவட்டம், பொட்டப்பாளையம் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தில், கூடுதலாக 8 எம்.வி.ஏ. திறனுடன் கூடிய புதிய மின்மாற்றி நிறுவப்படும்.

சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று

- இப்பகுதியில் உள்ள மானாவாரி நிலங்களில், வறட்சியைத் தாங்கி நன்கு வளரக் கூடிய, தைலம், சவுக்கு, மலைவேம்பு மற்றும் சூபாபுல் போன்ற கூழ் மரங்களைக் காகித உற்பத்திக்கு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சென்ற ஆண்டு டன் ஒன்றுக்கு ரூ.2.700 வீதம், தைலக் கூழ்மரங்களை விவசாயிகளின் நிலத்தில் இருந்து அறுவடை செய்து கொள்முதல் செய்தது.

- கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியைக் கருத்தில் கொண்டு, 01.12.2017 முதல் அறுவடை செய்யப்படும் தைல கூழ் மரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,750 வீதம் விவசாயிகளுக்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மேலும், இந்த ஆண்டு முதல், தைல மரம் நடவு (சாகுபடி) செய்யும் விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச ஆதார விலையாக, விவசாய நிலங்களிலிருந்து அறுவடை செய்யப்படும் கூழ் மரங்களுக்கு, டன் ஒன்றுக்கு ரூ.4,000ஆக நிர்ணயித்துள்ளது.

- இவ்வாறு சாகுபடி செய்த தைலக் கூழ் மரங்களை, ஐந்து வருடங்களுக்குப் பின் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் போது, இந்த குறைந்த பட்ச ஆதார விலையான ரூ.4,000–மோ, அல்லது அறுவடை செய்யும்போது உள்ள சந்தை விலையோ, இவ்விரண்டில் எது அதிகமோ அந்த விலைக்கே விவசாய நிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும்!

- இத்திட்டம், மானாவாரி நிலங்கள் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நிரந்திர வருவாய் ஈட்டப் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
18.11.2017 அன்று, சிவகங்கையில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

தூத்துக்குடி முத்துக்கள்' பாண்டியநாட்டின் பெருமை- "உலகம் சுற்றும் வாலிபன்" திரைப்பட வெற்றிக்குப் பெருமை தந்த தூத்துக்குடியில் உலகம் சுற்றிய வாலிபன் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

மக்கள் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், நாம் அவர்களது நலனில் கொண்டுள்ள உண்மையான அக்கறையும்தான் ஒரு நல்ல தலைமையை நாம் கொண்டுள்ளோமென பறைசாற்றும்!

மீனவ மக்களின் காவல் தெய்வம் வல்லரசும் வந்து வாழ்த்தும் வல்லமை கொண்ட ஞானி, பகுத்தறிவுப் பெரியாரின் துணிவு, பேரறிஞர் அண்ணாவின் கொள்கை முழக்கம் புரட்சித்தலைவர் கண்ட பொன்மனச்செல்வி இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றியயுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவைத் துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

வரவேற்புரை ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜெ. ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி அவர்களே! ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.பி. சண்முகநாதன் அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. எஸ். இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. என். வெங்கடேஷ் அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! மலேசியாவாழ் தமிழ் அன்பர்களே, கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் நிறைந்த நிலத்தைத் தூர்த்து, அதில் துறைமுகத்தையும், குடியிருப்புகளையும் உருவாக்கிய ஊர் தூத்துக்குடி என அழைக்கப்படுகின்றது. கிரேக்கப் பயணி தாலமி – தூத்துக்குடியை “முத்துக்குளிக்கரை” என்றும் ஜேம்ஸ் கர்னல் “தோத்துக்கரை” என்றும் குறிப்பிட்டுள்ளனர். தூத்துக்குடி கடல் வாணிபத்திலும், முத்துக்குளிப்பதிலும் உலக மையமாகத் திகழ்வதால் இதனை “முத்து நகர்” என்றும் அழைக்கிறார்கள்.

தூத்துக்குடியில் முத்துக்குளித்தல், மீன்பிடித்தல், சங்கு எடுத்தல், உப்பு உற்பத்தி செய்தல் போன்ற தொழில்கள் நடைபெறுகின்றன. இங்கு பருத்தியும், மிளகாயும் அதிகளவில் விளைகின்றன. தாமிரபரணி ஆறு, திருநெல்வேலியை வளப்படுத்திவிட்டுக் கடைசியில் தூத்துக்குடிக் கடலில் வந்து சங்கமம் ஆகிறது! பாண்டியர்கள், சோழர்கள், முகமதியர்கள், நாயக்கர்கள், ஆங்கிலேயர்கள், போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் என தூத்துக்குடி பலரின் ஆளுகையிலும், அடக்குமுறையிலும் இருந்திருக்கின்றது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் தோன்றிய இசைக்குரிய மண்ணாகவும் தூத்துக்குடி மாவட்டம் பொலிவுறுகிறது!

“சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து

தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம் –
கங்கை நதி புறத்து கோதுமை பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்து தந்தங்கள் பரிசளிப்போம்'' என்று

தீர்க்க தரிசனமாகப் பாடி, தேசிய ஒருமைப்பாட்டிற்கு வித்திட்ட தேசியக்கவி பாரதியாரைப் பெற்ற எட்டையபுரம் தூத்துக்குடி மாவட்டத்திற்கு அழியாப் புகழைத் தந்திருக்கிறது. இந்திய சுதந்திரப்போரில் தூத்துக்குடி மாவட்டத்திற்குப் பெரும் பங்கு இருக்கின்றது. தற்கொலைப் படையாக மாறி, ஆங்கிலேயர்களின் வெடி மருந்துக் கிடங்கைத் தகர்த்து எறிந்த தியாகத் திருமகன், வீரன் சுந்தரலிங்கம் பிறந்த வீரமண் இது!

ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் படைதிரட்டிய குற்றத்திற்காக, பீரங்கி வாயிலில் கட்டி வைத்துச் சுட்டுத் தள்ளப்பட்டு வீரமரணமடைந்த வீரன் அழகு முத்துக்கோன் தோன்றிய மாவட்டம் இது! ஆங்கிலேயருக்குத் தலை வணங்காததால், நாட்டின் பொது எதிரி எனக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கிலிடப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் வீர நடை பயின்ற தியாக பூமி இது.

இருபதாம் நூற்றாண்டில் வ.உ.சிதம்பரம் பிள்ளை திருச்சியில் பிளீடர் பட்டம் பெற்று, தூத்துக்குடிக்குத் திரும்பிய பிறகு சுதந்திரப்போர் மீண்டும் பற்றிக் கொண்டது. வ.உ.சிதம்பரனார் அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இரண்டு கப்பல்களை வாங்கினார். அதனால், ஆங்கிலேயர்களால் பல துன்பங்களுக்கு ஆளானார். தேசியவாதி சுப்பிரமணிய சிவா, பத்மநாப அய்யங்கார் ஆகியோரின் உதவியுடன் 'தூத்துக்குடி மக்கள் சங்கத்தை' உருவாக்கி ஆங்கிலேயர்களை எதிர்த்தார். அதனால், வ.உ.சிதம்பரனாரை 'தேசத்துரோகி' எனச் குற்றம்சாட்டி, ஆங்கிலேயர்கள் அவரைச் சிறையில் அடைத்து, சித்திரவதை செய்தார்கள். செக்கிழுக்க வைத்தார்கள். இறுதியில் வ.உ.சி. நமது தாய் நாட்டுக்காகத் தம் இன்னுயிர் நீத்தார்.

சுதந்திரத்திற்குப் பின், வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், அவருடைய பெயரில் சுதேசி நீராவிக் கப்பல் போக்குவரத்தை அப்போதைய

இந்திய கவர்னர் ஜெனரல் திரு. இராஜாஜி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மேலும், தூத்துக்குடி துறை முகத்திற்கு 'வ.உ.சி. துறைமுகம்' என்றும் பெயர் சூட்டப்பட்டது.

முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர், பழமையான பனிமய மாதா தேவாலயம், கழுகுமலை, நவதிருப்பதிகள், குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோயில், மெய்ஞ்ஞானபுரம் தேவாலயம், சித்தலங்கரை – தேவி வெட்ட காளியம்மன் கோயில், வனதிருப்பதி போன்ற ஆன்மிகத் திருத்தலங்களையும், மணப்பாடு சின்ன நெடுசேலம், வல்லநாடு வெளிமான் சரணாலயம், கொற்கை, பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் கோட்டை, புரட்சிக் கவிஞர் பாரதியார் பிறந்த எட்டையபுரம், மாவீரன் கட்டபொம்மன் ஆங்கிலேயர்களால் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்ட கயத்தாறு, ஆதிச்சநல்லூர், அய்யனார் சுனை, மாவீரன் வாஞ்சி நாதனால் ஆஷ் துரை சுட்டுக்கொல்லப்பட்ட வாஞ்சி மணியாச்சி, எட்டையபுரத்தில் பாரதியார் இல்லம், பாரதியார் மணிமண்டபம், வ.உ.சிதம்பரனார் பிறந்த இல்லம், வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம், வீரன் சுந்தரலிங்கம் நினைவகம், வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம், அமுதகவி உமறுப்புலவர் நினைவகம், வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் போன்று பார்க்கவேண்டிய பல வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளன.

1866ஆம் ஆண்டு, நவம்பர் ஒன்றாம் தேதி உருவாக்கப்பட்ட தூத்துக்குடி நகராட்சி, தமிழகத்திலுள்ள பழைமையான நகராட்சிகளில் ஒன்று. 1986ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் உத்தரவின் பேரில் தூத்துக்குடி புதிய மாவட்டமாக உருவானது.

வீரமும் தேசப்பற்றும் மனிதாபிமானமும் மிக்க மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழாவைத் தங்கள் வீட்டுத் திருவிழாவாகத் தூத்துக்குடி மக்கள் கொண்டாடிக் கொண்டிருப்பது, உண்மையிலேயே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கிறது. இப்போது மட்டுமன்று! தொடக்க காலத்திலிருந்தே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது அளவுகடந்த மரியாதையும், அன்பும் வைத்திருந்தவர்கள் தூத்துக்குடி மாவட்ட மக்கள்.

மாண்புமிகுபுரட்சித்தலைவர்எம்.ஜி.ஆர் அவர்களின்படங்கள்வெளியிடப்படுகிறது என்றால், அன்றைக்கு தூத்துக்குடி மாவட்டமே விழாக்கோலம் பூண்டிருக்கும். எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் ஏற்படும். அதற்கு எத்தனையோ சம்பவங்களை இங்கே உதாரணமாகக் கூறமுடியும். அந்தக் காலகட்டத்தில் மதுரை தங்கம் தியேட்டருக்கு அடுத்தபடியாக பெரிய திரையரங்கம் தூத்துக்குடி சார்லஸ் திரையரங்கம்தான். இத்திரையரங்கில் 1973, மே 11ஆம் தேதி 'உலகம் சுற்றும் வாலிபன்' படம் திரையிடப்பட இருந்தது. இதற்கு முந்தைய வருடம்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், அ.இ.அ.தி.மு.க.வை தொடங்கி இருந்தார்கள். அதனால், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜிஆர். அவர்களை ஒழித்துக்கட்ட

வேண்டும். அ.இ.அ.தி.மு.க.வை தலைதூக்க விடக்கூடாது என்று எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டிக் கொண்டு எத்தனை தொந்தரவுகள் கொடுக்க வேண்டுமோ, அத்தனை தொந்தரவுகளையும் கொடுத்தார்கள்.

தமிழ்நாடு முழுவதும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பழைய படங்களைக்கூடத் திரையிட முடியாத அளவுக்கு அச்சுறுத்தல்கள் இருந்தன. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தீவிர ரசிகர்களுக்கும் மிரட்டல்கள் விடப்பட்டன. எனவே, குறிப்பிட்ட நாளில் ‘உலகம் சுற்றும் வாலிபன்’ படத்தை தூத்துக்குடியில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால், யாருடைய மிரட்டலுக்கும் அஞ்சாத, தூத்துக்குடி ரசிகர்கள் மூன்று நாள் கழித்து சார்லஸ் தியேட்டரில் படம் வெளிவர களத்தில் இறங்கினார்கள். படச்சுருள் தியேட்டருக்குள் போகமுடியாத அளவிற்கு எதிரிகள் பலர் தியேட்டர் வாசலில் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

திரையரங்கு முன் கூட்டம் அலை மோதியது. படச்சுருள் வராமலேயே, கவுண்டரில் டிக்கெட் வழங்கப்பட்டது! சிறிது நேரத்தில், வெண் திரையில் ‘உலகம் சுற்றும் வாலிபன்’ படம் ஓட ஆரம்பித்தது தொண்டர்களின் ஆரவாரத்திற்கிடையே, சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் கணீர் என்ற வெங்கலக் குரலில்‘நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும், இப்படை தோற்கின் எப்படை வெல்லும்’ என்ற பாடல் தியேட்டரையே அதிர வைத்தது. இத்தனை பாதுகாப்பையும் மீறி படச்சுருள் எப்படி திரையரங்கிற்குள் சென்றது ? என்று வெளியே காவல் காத்துக் கொண்டிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.. போஸ்டரே ஒட்டாமல் வெளிவந்து வெற்றி பெற்ற ஒரே திரைப்படம் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்த “உலகம் சுற்றும் வாலிபன்” என்பது திரைஉலக வரலாறு!

இப்படி அந்தக் காலத்திலேயே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு பல எதிர்ப்புகளையும் மீறி, ஆதரவளித்த மக்கள் நீங்கள். இப்போதும் அதே உள்ளத்தோடும், உற்சாகத்தோடும்தான் நீங்கள் ஆதரவளித்துக்கொண்டு இருக்கிறீர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியோடு, இப்போது அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களான நாங்கள் மக்கள் பணியாற்றிக்

கொண்டு இருக்கிறோம். கழகத்தின் இருபெரும் தலைவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகத்தான், நாங்கள் இங்கே வருகை தந்திருக்கின்றோம். காரணம், நீங்கள் எங்கள் மீது அசைக்க முடியாத அன்பும், மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது வைத்திருந்த அன்பிற்கு தூத்துக்குடி மக்கள், மற்ற மாவட்ட மக்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தவர்கள். அதனால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், முதலமைச்சர் ஆனவுடன், தூத்துக்குடி மக்களைச் சந்திக்க விரும்பினார்கள். தூத்துக்குடி தருவை மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் கூட்டத்திற்கு வருகை தந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பேச்சை கேட்பதற்கும், அவரை நேரில் பார்ப்பதற்கும் கூட்டம் பெருங்கடலென அலை மோதியது. எல்லோருக்கும் மைதானத்தில் இடம் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. பலர் மைதானத்தின் சுற்றுச்சுவருக்கு வெளியிலேயே நிறுத்தப்பட்டார்கள். வெளியூரிலிருந்து வந்த பல தாய்மார்கள் காவலர்களின் கட்டுப்பாட்டையும் மீறி மைதானத்தின் சுவர்மீது ஏறிக்குதித்து மைதானத்திற்குள் நுழைந்தார்கள். கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேறு வழியில்லாமல் காவலர்கள் லத்தியை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதைத் தெரிந்து கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து காவலர்களிடமிருந்த லத்திகள் அனைத்தையும் மேடைக்கு கொண்டுவரச் செய்தார்கள். நிகழ்ச்சி முடியும் வரை லத்திகளை காவலர்களிடம் ஒப்படைக்கவில்லை. நிகழ்ச்சி முடிந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தாய்மார்களைப் பார்த்து அன்போடு கையசைத்துவிட்டுக் காரில் ஏறிய பிறகுதான், லத்திகள் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

தாய்மார்கள் எப்போதும் துன்புறக்கூடாது என்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கண்டிப்புடன் இருந்தார்கள். தாய்மார்களுக்கு, எப்போதும் எந்த இடத்திலும், அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதனால்தான் தனக்குப்பிறகு அ.இ.அ.தி.மு.க.வை வழிநடத்துவதற்கு மிகவும் தகுதியானவராகக் கருதி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு அரசியல் பயிற்சி அளித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தாய்க்குலத்தின் மீது எத்தனை ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதற்கு இங்கே நான் ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகின்றேன். 1962ஆம் வருடம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் படப்பிடிப்பிற்காக பெங்களூர் அருகில் காரில் தன் உதவியாளர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

கிராமப்பகுதியில் ஒரு இரயில்வே கேட்டில் வண்டி நின்றது. இரயில்வே கேட் திறக்கப்படும் வரை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காரில் காத்துக்

கொண்டிருந்த நிலையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களை அந்த கிராமத்து மக்கள் பார்த்துவிட்டார்கள். சாலை ஓரத்திலிருந்த ஒரு குடிசையில் இருந்த மூதாட்டி காருக்கு அருகில் வந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைத் தன் குடிசைக்கு வரவேண்டும் என்று அழைத்தார். மூதாட்டியின் அன்புக்காகப் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காரிலிருந்து இறங்கி மூதாட்டியின் குடிசைக்குச் சென்றார். கூடவே உதவியாளர்களும் தொடர்ந்தார்கள், "அய்யா, நீங்க எங்க குடிசைக்கு வருவதற்கு நாங்கள் என்ன புண்ணியம் செய்தோமோ ? சூடா பசும்பால் இருக்கிறது – கொஞ்சம் சாப்பிடுங்க அய்யா" என்ற வேண்டுகோளுடன் பசும் பாலை எடுக்க ஓடினாள். பசும்பாலை ஆற்றிக் கொடுத்த போது, அதை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் உதவியாளர்கள் முதலில் வாங்கி குடித்துப் பார்த்தார்கள். பிறகுதான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். பிறகு இரயில்வே கேட் திறந்ததும் வண்டி புறப்பட்டது. காரில் அமர்ந்ததும், உதவியாளரிடம் "தம்பி உனக்கு ரொம்ப பசியா ? பசும் பாலைப் பிடுங்கி முதலில் குடித்தாயே" என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிரித்துக் கொண்டே அந்த உதவியாளரிடம் கேட்டார்கள். "யார் எதைக் கொடுத்தாலும் குடித்து விடுகிறீர்கள்! அவங்க ஏதாவது கலந்து கொடுத்திருந்தால் என்ன ஆவது ? அதனால்தான், நாங்கள் குடிச்சிப் பார்த்தோம் மன்னிச்சிடுங்க அய்யா" என்றார் அந்த உதவியாளர்.

இதைக் கேட்டதும் கோபமடைந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், "மூதாட்டி எனக்கு ஏன் விஷம் கொடுக்க வேண்டும், ஒரு நல்ல தலைவனுக்கு அஸ்திவாரம் என்ன தெரியுமா ? மக்கள் நம் பேரில் வைத்திருக்கின்ற மதிப்பும், நாம் அவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் தான்" – என்றார்கள். இந்த உணர்வுதான், தலைவர் மறைந்து 30 வருடங்கள் கழித்தும், அத்தகைய மாபெரும் தலைவரை, நாம் அனைவரும் மறவாமல் நூற்றாண்டு விழா கொண்டாட வைக்கத் தூண்டி வருகிறது!

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள், உங்கள் மீது வைத்திருந்த அதே பாசத்தில், சிறிதும் குறைவில்லாமல் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் உங்கள் மீது அக்கறை கொண்டிருந்தார்கள். 14.03.2003 அன்று தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த சாத்தான்குளத்தில் நடந்த அரசு விழாவில் கலந்து கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பேசியது இப்போது என் நினைவுக்கு வருகிறது. " 26.02.2003ஆம் ஆண்டு, நான் இதே சாத்தான் குளம் இடைத்தேர்தலுக்காக உங்களிடம் வாக்கு கேட்டு நேரில் வந்திருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று நீங்கள் மகத்தான வெற்றியை எங்களுக்குத் தந்தீர்கள். அது என் மீது நீங்கள் வைத்திருந்த அன்புக்கும் நம்பிக்கைக்கும் அடையாளம். தேர்தல் முடிவு தெரிந்தது 01.03.2003இல் தான். அதன் பின்னர் சரியாக 13 நாட்கள் கழித்து, இன்றைக்கு நான் தூத்துக்குடி மாவட்டத்தின் அரசு விழாவை இந்த சாத்தான் குளத்திலேயே நடத்தி, 163 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் வழங்குவதற்காக

இங்கு வந்திருக்கின்றேன் என்றால் இது நான் உங்கள் மீது வைத்திருக்கும் அன்பின் அடையாளம்'' என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருக்கமாகப் பேசினார்கள். தேர்தல் முடிந்து 13 நாட்களுக்குள்ளேயே, தொகுதி மக்களைச் சந்தித்து கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிய வரலாற்றுச் சாதனை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் போட்டிபோட்டுக் கொண்டு தூத்துக்குடியை நேசித்தார்கள். இருபெரும் தலைவர்களின் ஆசியால், அவர்களின் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டு இருக்கின்றோம்.மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாகப் பணி நிறைவு பெற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். தூத்துக்குடி மநாகராட்சியின் சார்பில் நிறைவேற்றப்பட்ட 285 கோடி மதிப்பிலான பணிகள் உட்பட, 467 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, 138 பணிகளை துவக்கி வைத்துள்ளேன்.

இதில் தூத்துக்குடி மாநகராட்சி மக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் தேர்தலின்போது, இந்த தூத்துக்குடி மாநகராட்சி மக்களுக்கு நிலையான தண்ணீர் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் பொருட்டு ரூ.282 கோடி மதிப்பீட்டில், 2013இல் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்ப்பணிகள் நிறைவு பெற்று இந்த தூத்துக்குடி மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் சுற்றுப்பயணம் மேற்கொண்டபொழுது, இந்த தூத்துக்குடியில் பேசினார்கள். அப்பொழுது, இந்த தூத்துக்குடி மக்களின் நீண்டகால கனவு, இங்கே குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடாது, நிலையான, குடிநீர் பிரச்சினை இல்லாத நிலையை உருவாக்கித் தரவேண்டும், தினந்தோறும், தங்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கோரிக்கையாக வைத்தார்கள். அம்மா அவர்களால், அந்த கோரிக்கை ஏற்கப்பட்டு 2013இல் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. இன்றைக்கு மாநகராட்சியின் பரப்பளவு 90.66 சதுர கிலோ மீட்டர். 2011ஆம் ஆண்டு மக்கள் தொகையின்படி, கிட்டத்தட்ட 3.72 இலட்சம் மக்கள் இந்த மாநகரத்திலே வசிக்கின்றார்கள். இந்தத் திட்டத்தினுடைய இன்றைய மதிப்பீடு ரூ.282.44 கோடி. இந்தத் திட்டத்தின் வாயிலாக, தாமிரபரணி ஆற்றின் மருதூர் அணைக்கட்டுப் பகுதியிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, தூத்துக்குடி நகராட்சி மற்றும் பல்வேறு பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கப்படுகின்றது. இதிலே, 20 புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட, 502 கி.மீ. தூரத்திற்கு குழாய்கள் அமைக்கப்பட்டு, 98 சதவீத பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. இந்தத் திட்டம் வருவதற்கு முன்பு, தூத்துக்குடி மாநகராட்சியில் வசித்துக் கொண்டிருந்த மக்களுக்கு, எட்டு நாட்களுக்கு ஒரு முறை தான் குடிநீர் கிடைத்துக் கொண்டிருந்தது.

மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின் வாயிலாக, விரைவாக தினந்தோறும் தூத்துக்குடி மாநகராட்சியில் வசிக்கின்ற மக்களுக்கு நிலையான, பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் திட்டத்தின் மூலமாக, 60 ஆயிரம் புதிய இணைப்புகள் கொடுக்கப்படும். தற்போது 10,000 இணைப்புகள் கொடுக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 50,000 இணைப்புகள், 6 மாத காலத்திற்குள் மக்கள் தேவைக்கேற்ப வழங்கப்படும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் புதிய திட்டத்தின் உயர்ந்தபட்ச செயல்திறனான 86 MLT தண்ணீர் வழங்கக்கூடிய திட்டமாக, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, 6 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகங்களில் கட்டடம் கட்டுதல் உட்பட, 8 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 8 பணிகளுக்கு, நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். பல்வேறு துறைகளின் சார்பில், 24 ஆயிரத்து 300 பயனாளிகளுக்கு, 154 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும், இந்த அரசு பொறுப்பேற்றது முதல், இன்று வரை, 11 ஆயிரத்து 412 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 35 ஆயிரத்து 571 பணிகளை தொடக்கி வைத்தும், 4 ஆயிரத்து 872 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 7 ஆயிரத்து 121 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம், 16 ஆயிரத்து 285 கோடி மதிப்பிலான, 42 ஆயிரத்து 692 பணிகள் நடைபெறுகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளில் தூத்துக்குடி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில், ஒரு சிலவற்றை தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சித்தலைவர், இந்த அரசு இந்த நாட்டு மக்களுக்கு எந்தத் திட்டங்களை வழங்கியிருக்கிறது என்று ஒவ்வொரு கூட்டத்திலும் கேட்டுக் கொண்டிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்லாமல், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கையையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த மாவட்ட மக்களுக்கு அளித்த திட்டங்களை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

படித்த, ஏழைப் பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின்கீழ், 26 ஆயிரத்து 480 பெண்களுக்கு 95 கோடியே 78 இலட்சம் ரூபாய் திருமண நிதி உதவியும், 107.52 கிலோ தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரணமாக 90 கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 1 இலட்சத்து 14 ஆயிரத்து 516 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம், 38 கோடியே 72 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்துப் பணிகள் திட்டத்தின் கீழ், 2 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 28 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ், 13 இலட்சத்து 70 ஆயிரத்து 580 கன மீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 10 ஆயிரத்து 950 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். 34 ஆயிரத்து 164 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சுமார் 842 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மாணாக்கர்களுக்கு 89 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 63 ஆயிரம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், 44 கோடியே 61 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 49 ஆயிரத்து 100 கர்ப்பிணிப் பெண்கள் பயன் அடைந்துள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 72 ஆயிரத்து 610 பயனாளிகளுக்கு, 104 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 490 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 51 பாலங்கள், சிறு பாலம், மேம்பாலங்கள் மற்றும் 849.77 கி.மீ நீளச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிசைமாற்று வாரியத்தின் மூலம், 29 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 444 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்டத்தில், 204 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1 இலட்சத்து 70 ஆயிரத்து 8 தனி நபர் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத முதல் மாவட்டமாக தூத்துக்குடி மாவட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில், பல்வேறு குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பணிகள், 171 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 105 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 99 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், 140 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 8,522 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

'பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ்', 120 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 11 ஆயிரத்து 346 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 'ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்', 507 ஊரகப் பள்ளிகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 484 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்காக 784 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சியின் மூலம் கடந்த ஆறு ஆண்டுகளில், 616 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில், 922 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பிற திட்ட நிதிகள் மற்றும் பொது நிதியின்கீழ், பொதுமக்கள் அனைவருக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு 81 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடியுடன் இணைக்கப்பட்ட 5 பஞ்சாயத்துப் பகுதிகளை இணைத்து, 282 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள தூத்துக்குடி குடிநீர் திட்டப் பணிகள் நிறைவு பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அல்லும் பகலும் ஓய்வில்லாமல் உழைத்தும் மாவட்டங்கள் தோறும் பலகோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்தும், அறிவித்தும் வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். வேகமாகச் சுழலும் வண்டிச் சக்கரங்கள் சுழலாதது போல்தான் தெரியும். எங்கள் உழைப்பையும், நாட்டின் வளர்ச்சியையும் கண்டாவது, எதிர்க் கட்சியினர் வெற்று அறிக்கைகளை வெளியிடுவதை விட்டுவிட்டு, மக்களுக்காக உழைக்கத் தொடங்குதல் நலம்! இதனை ஒரு கதையின் மூலம் மக்களுக்குச் சொன்னால், நன்றாகப் புரியும் என்று நினைக்கிறேன்.

ஒரு நரிக்கு, காட்டுக்கே தான் தலைவனாக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதற்கு காட்டில் உள்ள எல்லா விலங்குகளிடமும் நல்ல பெயர் எடுக்க வேண்டும்; அதற்கு என்ன செய்வது என்று யோசித்தது. தன் சொந்த அறிவுக்கு உருப்படியான யோசனை ஒன்றும் தோன்றவில்லை. எனவே, அது ஒரு கரடியிடம் சென்று யோசனை கேட்டது. உடனே கரடி சொன்னது, “நரியே, நீயும் உன் கும்பலும் இந்தக் காட்டுக்கே யோசனை சொல்லக் கூடியவர்கள், அறிவாளிகள் என்று பெயர் எடுத்திருக்கிறீர்கள். அப்படியிருக்க, நீ வந்து என்னிடம் யோசனை கேட்கலாமா ?” என்றது.

“நான் உடனே தலைவனாக வேண்டும். அவசரமாக யோசனை சொல்” என்றது நரி. கரடி யோசனை சொன்னது. “முதலில் உன் வாயைப் பொத்திக் கொண்டு இரு. அடிக்கடி ஊளையிடாதே! அது போதும், உன்னை எல்லோரும் புகழ்வார்கள்” என்றது. “அது என் குணம், அதை எப்படி நிறுத்துவது.. வேறு ஏதாவது உருப்படியான யோசனை சொல்!” என்றது நரி. “இப்படி ஊளையிட்டுக் கொண்டு அலையாமல், பசியாயிருக்கும் காட்டு மிருகங்களுக்கு இரைகளைக் கொடு. அவையெல்லாம் உன்னை வாழ்த்தும். நீ தலைவனாகிவிடலாம்” என்றது கரடி. இந்த யோசனையை அற்புதமான யோசனை என்றபடி நரி செயலில் இறங்கியது. சிறிது நேரத்தில், இரைகளை முதுகில் சுமந்துகொண்டு, நரி காட்டில் பயணத்தைத் தொடங்கியது. எதிரே ஒரு காண்டாமிருகம் வந்தது. “காண்டா மிருகமே! இதோ உனக்காக உணவு கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடு! என்றது. “வேண்டாம் எனக்குப் பசிக்கவில்லை. உடல்நிலை வேறு சரியில்லை”, என்று காண்டாமிருகம் மறுத்தது.

நரி விடுவதாக இல்லை. ‘‘முடியாது, சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்’’ என்று அதனை எதிரே நின்று தடுத்தது. காண்டா மிருகம் மீண்டும் மீண்டும் சாப்பிட மறுத்தது. மீண்டும் நரி உணவை காண்டாமிருகத்திடம் திணித்து சாப்பிட வற்புறுத்தியது. காண்டா மிருகத்திற்கு கோபம் வந்துவிட்டது. ‘‘எனக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லியும் கேட்காமல் தொந்தரவு செய்கிறாயே! ஓடிவிடு!’’ என்று தன் கொம்புகளால் நரியைத் தூக்கி எறிந்தது.

தூக்கி எறியப்பட்ட நரிக்கு மீண்டும் எழுந்திருக்க முடியாத அளவிற்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. காண்டா மிருகம் அந்த இடத்தை விட்டு அகன்றது. அந்த நேரம் பார்த்து யோசனை சொன்ன கரடி அந்தப் பக்கம் வரவே, ‘‘கரடியாரே! உங்கள் யோசனை கேட்ட என் நிலையைப் பார்த்தீர்களா!’’ என்றது.

‘‘பசிக்கின்ற விலங்குகளுக்கு உணவு கொடு என்று உன்னிடம் யோசனை கூறினால், வயிற்று வலியோடு உடல்நிலை சரியில்லாத விலங்குக்கு உணவு கொடுக்கிறாயே! சொந்த அறிவும் கிடையாது, கேள்வி அறிவும் கிடையாது. உன்னால் ஒருக்காலும் தலைவனாக முடியாது!’’ என்று சொல்லிவிட்டு கரடியும் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது.

இப்படித்தான் பலர், உடனே தலைவனாக வேண்டும், முதலமைச்சர் ஆக வேண்டும் போன்ற கனவில், தவறானவர்களிடம் யோசனை கேட்டு, தவறான வழியில் சென்றுகொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, இந்தக் கதையில் வரும் நரியின் நிலைமை தான் ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு நடைபெறும் அம்மாவினுடைய அரசு, திட்டங்களை விரைந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு, வரலாறு காணாத வறட்சியைச் சந்திக்கும் நேரத்தில், குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. தற்போது பெய்த மழை வெள்ள பாதிப்புகளைச் சீர்செய்ய, அனைத்து இடங்களுக்கும் அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் நேரடியாக மக்களைச் சந்தித்து, உடனுக்குடன் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் பேசுகிறார், வேடிக்கையாக இருக்கிறது. தமிழகம் இன்றைக்கு அமைதிப்பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தியாவிலேயே சட்டம், ஒழுங்கு சிறப்பாகப் பேணிக் காக்கப்படுகின்ற மாநிலம், தமிழ்நாடு என்பது மக்களுக்குத் தெரியும். ஆனால், இவர்கள் நினைத்தார்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் மறைந்துவிட்டார்கள், இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும், இந்த கட்சி உடைந்துவிடும் என்றெல்லாம் எண்ணினார்கள். ஆனால், அது ஒன்றுமே நடக்கவில்லை. அதனால், தினந்தோறும் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லியே பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். பத்திரிகைகளில் எல்லாம் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்!

பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவிலே, நான் ஒரு கருத்தைச் சொன்னேன். நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இரட்டைக்குழல் துப்பாக்கியைப் போல் செயல்படுவோம் என்று ஒரு கருத்தைச் சொன்னேன். எங்களுக்குத் தோன்றும் கருத்தை நாங்கள் சொல்கின்றோம். நாங்கள் இணைந்து செயல்படுவோம் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொன்னேன், இவர்களுக்கு என்ன கோபம் வருகின்றது என்றுதான் தெரியவில்லை. அருகில் இருக்கின்ற நெல்லை மாவட்டத்திலே எதிர்க்கட்சித்தலைவர் ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபொழுது இதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார். எந்த அளவுக்கு மனக்குமுறல் இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய கருத்தைச் சொல்கின்றோம், இவருக்கு ஏன் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது ?

ஆகவே, நாம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். இவருடைய எண்ணமெல்லாம் நிறைவேறவில்லை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவு, “எனக்கு பின்னாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 100 ஆண்டுக்காலம் ஆட்சி அதிகாரத்திலே இருக்கும்!” என்ற கருத்தை, சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதேபோல் கட்சி வலிமை அடையும் என்று சொன்னார்கள். இவர்கள் கண்ட கனவு, புரட்சித்தலைவி “அம்மா மறைவிற்குப் பிறகு இந்த இயக்கம் இருக்காது, இந்த இயக்கம் அழிந்துவிடும், இந்த ஆட்சி போய்விடும்! நாம் ஆட்சிக்கு வந்துவிடுவோம்!” என்று பகல்கனவு கண்டார்கள். அந்த கனவு பலிக்காத காரணத்தினாலே, தினந்தோறும் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

நம்முடைய எண்ணமெல்லாம், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கண்ட கனவை நனவாக்குவது தான்! அதுவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஒவ்வொரு தொண்டனுடைய எண்ணம் என்பதனை இந்த நேரத்திலே ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எவ்வளவு பொய்களை அள்ளி வீசினாலும், பொய்மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும் ஒரு தொண்டனைக்கூட நீங்கள் தொட்டுப் பார்க்க முடியாது என்பதனை இந்த நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, உங்களுடைய ஆட்சியிலே, எவ்வளவு தூரம் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருந்தது என்பதனை நான் ஏற்கெனவே பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன், எனினும், ஒரு சிலவற்றை மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

2006ஆம் ஆண்டு தென்காசியில் இந்து முன்னணி அமைப்பாளர் குமாரபாண்டியன் கொலை செய்யப்பட்டார். 2000இல் சிவகங்கை நகரமன்றத் தலைவர் குண்டு வைத்துக் கொலை செய்யப்பட்டார். அதே ஆண்டில், தி.மு.க. மாவட்ட செயலாளர் பூண்டி கலைச்செல்வன் மற்றும் செங்கல்பட்டு நகராட்சி துணைத்தலைவர் குமார் ஆகியோர் கொலை செய்யப்பட்டனர். 2008இல் பா.ஜ.க. திருவாரூர் மாவட்ட செயலாளர் மாணிக்கம் மற்றும் அவர் தந்தை ஆகியோர் கூலிப்படையால் தஞ்சாவூர்

மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டனர். 2010இல், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டார். 2007இல், தினகரன் நாளிதழ், அடுத்த அரசியல் வாரிசு யார் என்ற கருத்துக்கணிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து தி.மு.க.வைச் சேர்ந்த ரவுடிக் கும்பல் நடத்திய வெறியாட்டத்தால், மதுரையில் அப்பத்திரிக்கை அலுவலகம் சூறையிடப்பட்டு, தீ வைக்கப்பட்டதுடன், மூன்ற அப்பாவிகளும் கொல்லப்பட்டனர்! இவ்வளவு பேர் இறந்திருக்கின்றார்கள், சட்டம் ஒழுங்கு உங்கள் ஆட்சியில் எப்படி இருந்தது என்பது நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தெரியும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு பள்ளிக்கல்வித்துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். கல்வி தமிழகத்தில் சிறந்து விளங்க வேண்டும். எந்தவொரு நாடு, எந்தவொரு மாநிலம் கல்வியிலே சிறந்து விளங்குகின்றதோ அந்த நாடு எல்லா வளங்களையும் பெறும் என்ற தொலைநோக்குச் சிந்தனையோடு, அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அதனால் தமிழகம் இன்றைக்கு வளர்ந்து நிற்கின்றது. கல்வியிலே, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கக்கூடிய அளவிற்கு, வளர்ச்சியைப் பார்க்க முடிகின்றது! அதன் அடிப்படையில், பள்ளிக்கல்வித் துறைக்கு ரூபாய் 26,932 கோடியே 31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு!

மேலும், வரும் கல்வியாண்டு முதல் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்களுடைய எதிர்காலம் காக்கப்படும். நடப்பாண்டில், ரூ.391 கோடி செலவில் பள்ளிகளில் முழு கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். மாணவர்களுக்கு, 6 ஆண்டுகளில் மட்டும் சுமார் 37 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது, இந்திய வரலாற்றிலேயே, எந்த மாநிலத்திலும் இதுபோன்ற நிகழ்வு இல்லை! இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு நம்முடைய மாணவ, மாணவியர், எதிர்காலத்திலே சிறந்தவர்களாக, வல்லவர்களாக உருவாக வேண்டுமென்பதற்காக மடிக்கணினியை வழங்கினார்கள். இன்றைக்கு வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்கள், ரூ.14,000 மதிப்பில் மடிக்கணினி வாங்கி, பயன்படுத்தி, வேலைவாய்ப்பைப் பெறமுடியும். ஆனால், வசதியில்லாத ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியருக்கும் விஞ்ஞானப் பூர்வமான கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காக சுமார் 37 இலட்சம் மாணவ, மாணவியருக்குத் தலா ரூ.14,000 மதிப்புள்ள மடிக்கணினிகளை வழங்கி, இந்தியாவிலேயே தமிழகம் விஞ்ஞான வளர்ச்சியைப் பயன்படுத்திக் கல்வி கற்குமளவுக்குப் பள்ளி மாணவர்களை உருவாக்கிய பெருமை, அம்மாவையே சாரும் என்பதை இந்த நிகழ்ச்சி வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எத்தனை ஆண்டுகாலமானாலும், இத்திட்டம் அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது என்பதை நம்முடைய மாணவ, மாணவியர் பெருமையுடன் நினைவு கூர்வர் என்பதனை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பள்ளிக் கல்வித்துறையில் கடந்த 6 ஆண்டுகளில் சுமார் 41,000 ஆசிரியர்கள், 4,400 ஆய்வக உதவியாளர்கள் மற்றும் 15,000 பகுதிநேர ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, தரமான கல்வி மாணவர்களுக்கு கிடைத்திருக்கின்றது.

அதேபோல, 227 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் நம்முடைய இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

கடந்த 5 ஆண்டுகளில், மாண்புமிகு அம்மா அவர்கள் 65 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய இந்த அரசும், 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியிருக்கின்றது. மொத்தம், 6 ஆண்டுகளில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழக மாணவ, மாணவியருக்கு அளித்திருக்கின்றோம். இதன் மூலமாகக் கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. ஏழை, எளிய, சமூகத்திலே பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்ப மாணவ, மாணவிகள், குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்பதற்குச் சிறந்த வசதியை அம்மா அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதன் காரணத்தாலே, 2011ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் முதலமைச்சராக பொறுப்பேற்கின்றபொழுது, உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 21 சதவீதமாகத்தான் இருந்தது. இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, சட்டக்கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி போன்றவற்றை உருவாக்கியதன் மூலம், மாணவச் செல்வங்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 21 சதவீதத்திலிருந்து, 44.32 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் உயர்ந்திருக்கின்றது! மருத்துவத் துறையிலும் இன்றைக்கு சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றோம்!

குடிமராமத்து என்னும் அற்புதமான திட்டத்தின் மூலம், கிராமத்தில் வாழுகின்ற விவசாய மக்களுக்கு, நீர் ஆதாரம் வேண்டுமென்பதற்காக, 1,519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.100 கோடி ஒதுக்கப்பட்டு, விவசாயிகளின் பங்களிப்போடு, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகளில் இருந்து விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற வண்டல் மண் அள்ளப்பட்டு ,நிலத்திற்கு அடிஉரமாக இடப்பட்டதோடு, வண்டல் மண் எடுத்த காரணத்தினால், பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் அதிகமான அளவில் தேக்கப்பட்டு, நிலத்தடி நீரும் உயர்ந்திருக்கின்றது.

அது மட்டுமன்று, புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, மூன்றாண்டுகளிலே 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், எங்கெங்கல்லாம் தடுப்பணை வேண்டுமோ,

அங்கங்கெல்லாம் தடுப்பணை கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நதியின் குறுக்கே, ஓடையின் குறுக்கே, பருவமழைக் காலங்களிலே மழைநீரைச் சேமித்து வைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்காக இந்தத் தடுப்பணை கட்டுகின்ற திட்டத்தை இந்த அரசு தொடங்கியிருக்கின்றது. இதனால், பெய்கின்ற மழைநீர் தேங்கி, நிலத்தடி நீர் உயர்ந்து, விவசாயத்துக்குத் தேவையான நீரும், குடிப்பதற்குத் தேவையான நீரும் இந்தத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித்தலைவர் ஸ்டாலின் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்சத்துணவுத் திட்டத்தின்கீழ், உண்மைக்கு மாறாக எதிர்க்கட்சித்தலைவர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்சத்துணவுத் திட்டத்தின்கீழ் 69.3 இலட்சம் குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக முட்டை வழங்கப்பட்டு வருகிறது. 16 இலட்சம் அங்கன்வாடி குழந்தைகளுக்கு, வாரம் இருமுறை முட்டை வழங்கப்பட்டு வருகிறது. 53.3 இலட்சம் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு, வாரம் 5 முறை முட்டை வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம், 2012 முதல் சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை கொள்முதல் செய்து வழங்கப்பட பயன்பட்டு வருகின்றது. இரண்டு நாட்களுக்கு முன்பு, எதிர்க்கட்சித்தலைவர் ஸ்டாலின் ஓர் அறிக்கை வெளியிட்டார், “இந்தத் திட்டத்தை கிடப்பிலே போட்டுவிட்டார்கள். முட்டைவிலை உயர்ந்த காரணத்தினாலே, முட்டை சாப்பிடுகின்ற சத்துணவுக் குழந்தைகளுக்கு முட்டை வழங்கவில்லை!” என்ற கருத்தை சொல்லியிருக்கின்றார். அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு ஏழை, எளிய மக்களை காக்கக்கூடிய அரசு, அந்த ஏழை, எளிய மக்கள் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு முட்டை வழங்குவதை ஒருபோதும் நிறுத்திவிடமாட்டோம், எவ்வளவு பிரச்சினை வந்தாலும் அதற்கு இடம் கொடுக்காமல், அந்த குழந்தைகளுக்கு முட்டைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்ற கருத்தை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அவர் கருத்து தவறானது, வேண்டுமென்றே, இந்த அரசின் மீது பழி சுமத்திக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, உங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளைக் கொடுத்தார்.

இது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் நீங்கள் அனைவரும் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இருக்கின்றீர்கள். இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் பத்திரமாக வீடுபோய் சேர்ந்தால்தான் நான் திருப்தியும், மனநிறைவும் அடைவேன். ஆகவே, நீங்கள் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும்.

இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு இந்த அரசு, உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித் தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

★ ஏரல்–ஐ தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய் வட்டம் தோற்றுவிக்கப்படும்.

★ கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில், பெரியசாமிபுரம் மற்றும் அகிலாண்டபுரம் ஆகிய இடங்களில், புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.

★ அரசு மற்றும் தனியார் பங்களிப்பு முறையில், தூத்துக்குடி வ.உ.சி. சந்தையினை நவீனப்படுத்தி, வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன், புதிய வணிக வளாகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

★ தூத்துக்குடி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான சங்கரப்பேரி, மீளவிட்டான், தூத்துக்குடி ரூரல், முத்தையாபுரம் மற்றும் அத்திமரப்பட்டி ஆகிய பகுதிகளில் சாலைப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

★ தூத்துக்குடி மாநகராட்சியின் அவசர மற்றும் அத்தியாவசியப் பணிகளுக்காக உரிய பணியாளர்கள் படிப்படியாக நியமிக்கப்படுவார்கள்.

★ தூத்துக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு மற்றும் புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், ரூ.6.25 கோடி மதிப்பீட்டில், 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும் ஏற்படுத்தப்படும்.

★ தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் திரு. சி.பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும். இதற்கான பணி, 2018–2019ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.

★ மணப்பாடு கடற்கரைப் பகுதியில், சாலை மேம்பாட்டுப் பணிகள், குடிநீர் வசதி, கழிவறை வசதிகள், வாகன நிறுத்துமிடம், கண்காணிப்பு கேமரா, வழிகாட்டிப்

பலகைகள், மீட்புப் படகுகள், கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் சாதனங்கள் போன்றவற்றை வழங்கி அப்பகுதி சுற்றுலாத் தலமாகத் தரம் உயர்த்தப்படும்.

★ தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில், இந்திய மருத்துவக் கழகம் உரிய அனுமதி வழங்கியதும், மருத்துவப் பட்ட மேற்படிப்புகள் துவக்கப்படும்.

★ விளாத்திகுளம் தாலுகா, சிவஞானபுரம் கிராமத்திலும், கயத்தாறு ஊராட்சி ஒன்றியம், வானரமுட்டி கிராமத்திலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

★ தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். மூப்பியல் பிரிவு மற்றும் நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உயர்தர மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு, ‘டயாலிசிஸ்’ கருவிகள், ‘எண்டோஸ்கோப்’ ஆய்வக உபகரணங்கள் வழங்கப்படும்.

★ ஏரல் அரசு மருத்துவமனையில், நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ திருச்செந்தூர் சமுதாய சுகாதார மையத்தில், கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

★ கருங்குளம் மற்றும் ஓட்டப்பிடாரம் வட்டாரங்களில், விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

★ விளாத்திகுளம் வட்டம், பெரியசாமிபுரம் கிராமம் மற்றும் வேம்பாறு கிராமத்தில், வேம்பாற்றின் குறுக்கே, இரண்டு தடுப்பணைகள் கட்டப்படும்.

★ ஸ்ரீவைகுண்டம் வட்டம், அகரம் குடியிருப்பு அருகே வல்லநாடு கிராமத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ சாத்தான்குளம் வட்டம், பள்ளக்குறிச்சி கிராமத்தில் கருமேனி ஆற்றின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ கோவில்பட்டி வட்டம், ஆவுடையம்மாள்புரம் கிராமத்தில், உப்போடையின் குறுக்கே, ஒரு சிறிய தடுப்பணை கட்டப்படும்.

★ கோவில்பட்டி வட்டம், சிதம்பரம்பட்டி கிராமத்தில் உப்போடையின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ கோவில்பட்டி வட்டம், சீவலப்பேரி கிராமத்தில் உப்போடையின் குறுக்கே, ஒரு தடுப்பணை கட்டப்படும்.

★ உடன்குடி, செட்டிக்குறிச்சி, அரசரி கிராமம் மற்றும் தூத்துக்குடி கடற்கரைச் சாலை ஆகிய 4 இடங்களில், புதிய துணை மின்நிலையம் அமைக்கப்படும்.

★ பொட்டலூரரணி – சேக்காரக்குடி – பேரூரணி – மங்களகிரி சாலையில் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

★ மீனாட்சிபுரம் – வெங்கடாச்சலபுரம் சாலையில் ஒரு சிறு பாலம் கட்டப்படும்.

★ கோவில்பட்டி – கடலையூர் – முத்தாலபுரம் – பெரிலோவன்பட்டி – பிள்ளையார்நத்தம் சாலையில் ஒரு பாலம் கட்டப்படும்.

★ திசையன்விளை – உடன்குடி சாலையில், ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ கயத்தாறு – கழுகுமலை சாலையில், ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ புதூர் – பரளச்சி சாலையில், ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

★ மீளவிட்டான் – தூத்துக்குடி இரயில்வே நிலையங்களுக்கு இடையே,

- இரயில்வே கடவு எண் 486இல் சாலை மேம்பாலம் மற்றும் 487இல் அளவான பயன்பாட்டு சுரங்கப்பாதை கட்டப்படும்.
- தூத்துக்குடி – கொல்லம் சாலையில் கூடுதல் சாலை மேம்பாலம் கட்டப்படும். இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ படர்ந்தபுளி அருகில் பாலப் பணி மேற்கொள்ளப்படும்.

★ கோவில்பட்டி – குமாரபுரம் – கோபாலபுரம் – செட்டிக்குறிச்சி சாலையில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ கோவில்பட்டி இரயில்வே நிலையம் முதல் லெட்சுமி மில் மேம்பாலம் வரையிலான சாலையானது நான்கு வழித்தட சாலையாக அகலப்படுத்தப்படும்.

★ மணியாச்சி வழியாக வடக்கு நோக்கிச் செல்லும் 15க்கும் மேற்பட்ட இரயில்களின் பயண வசதியைத் தூத்துக்குடி நகர மக்கள் பயன்படுத்திடும் வகையில் மீளவிட்டான் முதல் மணியாச்சி வரை, இரயில் பாதையை ஒட்டி வாகனங்கள் செல்லும் வகையில், புதிய சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

22.11.2017 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

இராமன் பூஜித்த இராமநாதபுரத்தில், திரை உலகிலும், அரசியலிலும் தாயைப் பூஜித்த எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

ஏழைகளைக் காக்கின்ற தெய்வம்! இல்லாதவரை வாழவைக்கும் இறைவன்!

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே!

இங்கு பல சிறப்பான கருத்துக்களை எடுத்துரைத்து, தொண்டர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கி நாம் எப்படி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை காட்டும் விதமாக நல்ல கருத்துக்களை எடுத்துரைத்து அமர்ந்திருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், மாண்புமிகு அம்மாவினுடைய நன்மதிப்பை பெற்றவர், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவா, பொதுக்கூட்டமா அல்லது மாநாடா என்று சொல்லுகின்ற அளவிற்கு, இராமநாதபுரமே குலுங்குகின்ற அளவிற்கு, மக்கள் வெள்ளம் நிரம்பி வழிகின்ற கண்கொள்ளாக் காட்சியை உருவாக்கித் தந்த, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன் அவர்களே!

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு.எஸ்.இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச. நடராஜன் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே! தலைமைக்கழக நிருவாகிகளே, வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

அழகிய கடற்கரை மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் தென்தமிழகத்தின் கடைக்கோடியில் அமைந்திருந்தாலும் புகழில் முதல் இடத்தில் இருக்கிறது. இராமபிரான் சீதையை மீட்பதற்காக இலங்கைக்குச் செல்ல அமைக்கப்பட்ட பாலத்தின் பெயர் “சேது” என்று குறிப்பிடப்படுகிறது. இந்த சேது பாலத்தைச் சுற்றியிருக்கும் கடல்பகுதியைக் காக்கும் பொறுப்பில் இருந்த மன்னர்கள், “சேது மன்னர்கள்” என்று அழைக்கப்பட்டார்கள். சேது மன்னர்கள் ஆண்ட பகுதி “சேது நாடு” என்றும், “இராம நாடு” என்றும் அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் இராமநாதபுரம் சீமை என்றும் “இராமநாதபுரம்” என்றும் புழக்கத்தில் வந்தது. சுமார் 1100 ஆண்டுகளுக்கு முன்பே, நதிகளை இணைத்து, நீர் மேலாண்மையில் பாண்டிய மன்னர்களும், சேதுபதி மன்னர்களும் சிறந்து விளங்கியுள்ளனர்!

இம்மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கண்மாய்கள், குளங்கள், குட்டைகள், குட்டங்கள், ஊரணிகள், ஏந்தல்கள் போன்ற நீர் சேகரிப்பு அமைப்பினை அனைத்து ஊர்களிலும் ஏற்படுத்தியும், வைகை நதியிலிருந்து பெறப்படும் நீரினையும், மழை நீரையும் உபயோகித்து விவசாயம் மற்றும் குடிநீருக்காக பயன்படுத்தி வந்தனர்.

இராமநாதபுரத்து சேதுபதி மன்னர்கள் சமயத்தையும், தமிழையும் இரு கண்களாக வளர்த்தவர்கள். தேவாரத்தில் இடம் பெற்றுள்ள, சைவத் திருத்தலங்களான இராமேஸ்வரம், திருவாடனை, உத்திரகோசமங்கை போன்ற பல திருக்கோயில்கள் இம்மாவட்டத்தில் ஆன்மிக மணத்தை பரப்புகின்றன.

இராமநாதசுவாமி திருக்கோயில் இம்மாவட்டத்தை உலகம் அறியச் செய்திருக்கிறது. இத்திருக்கோயிலில் அமைந்திருக்கும் தூண்களின் நேர்த்தி உலகப் புகழ் பெற்றதாகும். இது தமிழர்களின் கட்டிடக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோயில் சைவமும், வைணவமும் கலந்த சிறப்பிற்குரிய புனித தலமாக விளங்கி, உலகம் முழுவதிலுமிருந்து பக்தர்களை கவர்ந்திழுக்கிறது.

தேவிப்பட்டினம் நவபாசான நவக்கிரகங்கள், இராமன் நீராடியதாகக் கருதப்படும் தனுஷ்கோடி, ஏர்வாடி தர்கா, ஓரியூர் புனித அருளானந்தர் தேவாலயம், கோதண்டராமர் கோயில், ஐந்துமுக ஆஞ்சநேயர் கோயில், உப்பூர் போன்ற தெய்வீக திருத்தலங்கள் இம்மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கின்றன.

சமய நல்லிணக்கத்தைப் பறைசாற்றும் வகையில், இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும், இந்துக்களும் கலந்து ஒற்றுமையாக வாழ்கிறார்கள். அவரவர்களுக்கான வழிபாட்டுத் தலங்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவின் சிகாக்கோ மாநாட்டுக்கு செல்ல முழு நிதியுதவி அளித்து, அதற்கான காரணியாக இருந்தவர் இராமநாதபுரத்து மன்னர் பாஸ்கர சேதுபதி என்பது நமக்கெல்லாம் பெருமை!

அத்துடன் நின்று விடாமல், சாதாரணத் துறவியாகச் சென்ற விவேகானந்தர், ஞானியாக மாறி நாடு திரும்பும்போது, அவரது பாதங்கள் தன் தலையில் பட்டபிறகே, தரையைத் தொட வேண்டும் என்று முழங்காலிட்டு அமர்ந்தார் சேதுபதி மன்னர்! அவ்வாறு அவர் அமர்ந்து, விவேகானந்தரை வரவேற்ற இடம் தான் பாம்பன் அருகில் குந்துக்கால் என்று அழைக்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவேகானந்தருக்கு அதே இடத்தில், ஒரு நினைவிடம் அமைத்து, அது தற்போது சுற்றுலாத் தலமாக இருந்து வருகிறது.

பாண்டியர்கள், சோழர்கள், விஜயநகர மன்னர்கள், சேதுபதிகள், நாயக்கர்கள், மராட்டியர்கள், நிஜாம்கள், ஆங்கிலேயர்கள் என்று இப்பகுதி பலரால் மாறிமாறி ஆளப்பட்டுள்ளது. உழைப்புக்கு உதாரணமாகத் திகழ்வது இராமநாதபுரம் மாவட்டமாகும். வானம் பார்த்த பூமியாக இருந்த மேட்டு மண்ணைச் செப்பனிட்டு, நெல், மிளகாய், கடலை, பருத்தி, கரும்பு, கேழ்வரகு என உணவு வகைகளை உற்பத்தி செய்யும் பூமியாக மாற்றிய உழைப்பாளிகள் நீங்கள்.

“தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் வர்க்கமாகிய நீங்கள், வருடத்திற்கு ஒரு இலட்சம் டன்னிற்கும் அதிகமாக மீன்பிடித்து, சாதனை நிகழ்த்தி இருக்கிறீர்கள்!

தமிழகத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்களில் 26 சதவிகிதம் இந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் தான் பிடிக்கின்ற மீன்கள் என்பதனை, இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமன்று வருடத்திற்கு 3,600 கோடி ரூபாய் மதிப்பிலான மீன்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதும் இந்த மாவட்டம் என்பது குறிப்பிடத்தக்கது!

உங்களது உழைப்பிற்கு ஊக்கமளிக்கும் விதத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, ஆழ்கடலில் மீன்பிடிக்க புதிய தூண்டில் முறை சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு, அதிகபட்சம் 30 இலட்சம் ரூபாய் வரை, மானியமாக அளிக்கும் திட்டத்தினை கொண்டு வந்தார்கள்.

இந்தியாவின் முதல் “கடல் பாலம்” என புகழப்படும் பாம்பன் பாலம் “இந்திய பாலங்களின் இராணி” என்று அழைக்கப்படுகிறது.

ஆன்மிகத்தையும், அரசியலையும் தமது இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இந்த மாவட்டத்திலுள்ள பசும்பொன்னில் பிறந்தவர்!

“செத்தும் கொடுத்தான் சீதக்காதி” என வரலாற்றில் புகழ் பெற்ற சீதக்காதி வள்ளல் தோன்றியதும் இந்த மண்ணில் தான்! தாயுமானவர் தம் இறுதிக் காலத்தில் இராமநாதபுரத்தில் வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

நிருவாகக் காரணத்திற்காக, சுமார் 75 வருடங்கள் இராமநாதபுரத்தின் தலைநகர் மதுரையில் இருந்தது. 1985ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைநகரை இராமநாதபுரத்திற்கே மாற்றி உத்தரவிட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய தீபகற்பத்தின் தென்கிழக்கு ஓரத்தில் அமைந்துள்ள குட்டி தீபகற்பம் இராமேசுவரம். ஆன்மிகத்தாலும் அறிவாலும் உலகப் புகழ்பெற்றது. இந்தியாவிலுள்ள 12 ஜோதிர்லிங்கஸ்தலங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இராமநாதசுவாமி திருக்கோயில், இராமாயணத்தோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. இராவணனைக் கொன்ற பாவம் தீர, இராமன் இங்கு வந்து வழிபட்டார் என்பது தொன்மையான நம்பிக்கை.

அதைப்போல் இந்தியாவின் கடைக்கோடி ஏழைக் குடிமகனாகப் பிறந்து, பல கோடி மக்களில் முதல் குடிமகனாக உயர்ந்த ஏவுகணை நாயகன், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள் பிறந்த சரித்திர மண் இது. அவரது புகழை உலகறியச் செய்ய, அவர் பிறந்த ஊரான பேய்க்கரும்பில் ஒரு நினைவகம் மத்திய அரசால் கட்டப்பட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது.

இம்மாமனிதரின் நினைவிடத்திற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 1.30 ஏக்கர் நிலத்தை வழங்கி கௌரவித்துள்ளார்கள். இதிகாச இராமச்சந்திரப் பெருமான் பாதம் பட்டதால், இது புனித மண்ணாக மாறியது! எங்கள் தலைவர் பொன்மனச் செம்மல் திரு. இராமச்சந்திரன் அவர்களின் பார்வை பட்டதால் 75 வருடங்கள் மதுரையில் இருந்த மாவட்டத் தலைநகர் இராமநாதபுரத்திற்கே வந்தது!

இராமாயணக் கதாநாயகனான இராமச்சந்திரனின் பெயரைக் கொண்ட இந்த புண்ணிய பூமியில், திரையிலும், அரசியலிலும் கதாநாயகனாக ஒளிர்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதைத்தான் மிகச் சிறப்பாக நான் கருதுகிறேன்.

முஸ்லிம் மதத்தில் நான்கு வேதங்களில் “தௌராத்” ஒன்று. அதில், ஒரு பகுதியில், இறைவனுடன் நேருக்கு நேர் பேசும் வல்லமை படைத்த மூசா நபி, “இறைவா, உன்னோடு பேசுகிறேன்; உன்னருகில் இருக்கவும் விரும்புகின்றேன்; அனுமதிப்பாயா!”

என்று கேட்டார். ''தேவையில்லை, நல்லவர் பக்கத்தில் இருந்தால் போதும்!'' என்று இறைவன் சொன்னார். ''நல்லவர் யார் ? என்று எப்படித் தெரிந்து கொள்வது ?'' என்று மூசா நபி கேட்டபோது, ''எவர் ஒருவர் தனக்கென்று இருப்பதைப் பிறருக்காக விட்டுக் கொடுக்கிறார்களோ, அவர்களே நல்லவர்கள்'' என்று இறைவன் கூறினார்.

அந்த இறைவன் சொன்ன மாபெரும் நல்லவர்களில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரும் ஒருவர். அவர் மக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து, எட்டாவது வள்ளலாகத் திகழ்ந்தவர் என்பதால், அவர்களின் பக்கம் தமிழ்நாடே இருக்கிறது! அத்தகைய மாபெரும் தலைவர் உருவாக்கிய கழகத்தின் பக்கம், இன்றைக்கு மக்கள் அனைவரும் இருக்கிறார்கள். குறிப்பாக, மீனவப் பெருமக்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் பக்கம் இருக்கிறார்கள்; இப்போதும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் பக்கம் தான் இருக்கிறீர்கள் என்பதைப் பல சந்தர்ப்பங்களில் நீங்கள் நிரூபித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் வள்ளல் தன்மையைப் பற்றி, அந்தக் காலத்தில் கல்லூரி மாணவர்கள் எப்படி கணித்து வைத்திருந்தார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு நிகழ்வைச் சொல்ல விரும்புகிறேன்.

1968ஆம் ஆண்டு தி.மு.க.வின் வெற்றிக்காக கடுமையாக உழைத்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்க அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள். ஆனால், அதைப் புரட்சித்தலைவர் அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

புரட்சித்தலைவர் அவர்கள், மக்களின் மகிழ்ச்சிக்காக, திரைக்கலைஞனாக நடிப்பதையும் உழைப்பதையுமே அதிகம் விரும்பினார்கள். கடைசியில் அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ''சிறு சேமிப்புக் குழு தலைவர்'' பதவியை வழங்கினார்கள். அதை ஏற்றுக்கொண்ட புரட்சித்தலைவர் அவர்கள் அந்தப் பதவிக்கான பணிகளைச் சிறப்பாக செய்தார்கள்.

அப்போது, சிறு சேமிப்புத் துறை சார்பில், மாநில அளவிலான கல்லூரிகளுக்கான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. தமிழ்நாடு அரசு சிறு சேமிப்புத் துறைத் தலைவராக இருந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில், அந்த விழா நடைபெற்றது.

முதல் பரிசு பெற்ற மாணவனை மட்டும் மேடையில் பேச அனுமதித்து இருந்தார்கள். அந்த மாணவர் பேசும்போது, ''தமிழ்நாட்டில் அதிக செலவாளி என்று பெயரெடுத்தவரான மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சிறு சேமிப்புத் துறையின் தலைவராக நியமித்திருப்பது முரண்பாடான விஷயம்'' என்று ஒரு கருத்தை பேச்சிற்கு இடையே கூறிவிட்டார். கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும், அந்த மாணவனை அதிகப்பிரசங்கித் தனமாக பேசிவிட்டான் என நினைத்தார்கள்.

பரிசுகள் எல்லாம் கொடுத்துவிட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது, "வாழ்க்கையைத் தொலைத்து விட்ட அருணகிரிநாதர்தான், வாழ்க்கையைப் பற்றி உபதேசிக்கத் தகுதியானவர். அதே போல், அதிக செலவாளியான நான்தான் இத்துறைக்குப் பொருத்தமானவன்'' என்று எடுத்த எடுப்பிலேயே பேசியதும் அனைவரும் ஆரவாரத்துடன் கைதட்டினார்கள்.

ஒரு மாணவனின் சந்தேகத்தை மேடையிலேயே தீர்த்து வைத்த பெருந்தன்மை நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு இருந்தது!

தமிழ்நாட்டு மக்கள், தங்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது எத்தனை பாசம் வைத்திருந்தார்கள் என்பதனை பல கட்டங்களில் நாம் பார்த்திருந்தாலும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான் பாசம் வைத்திருந்த அன்பு மக்களிடமிருந்து பிரியாவிடை பெற்ற இறுதி ஊர்வலத்தில் கூடிய மக்களின் கூட்டத்தையும், அவர்களுடைய பாசத்தையும் இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை.

எத்தனை ஏழைப் பெண்கள், எத்தனை மாற்றுத் திறனாளிகள், எத்தனை முதியோர்கள்! வெளியூர்களில் இருந்து நகரமே திணறும் அளவிற்கு வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள். "நாங்கள் தவமிருந்து பெற்ற தலைப்பிள்ளையை இழந்து தவிக்கிறோம்'' என்றும் "தலைவனை இழந்ததால் நாங்கள் அனாதை ஆகிவிட்டோம்'' என்றும் கதறினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் மறைவோடு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசியல் வாழ்க்கையும் முடிந்து விட்டது என்று தப்புக் கணக்கு போட்டார்கள்.

புரட்சித்தலைவருக்குப் பிறகு, தங்களை எதிர்க்கும் சக்தி யாருக்கும் இல்லை என்று நினைத்தார்கள். இனி அ.இ.அ.தி.மு.க. இருக்காது என சிலர் அ.இ.அ.தி.மு.க.விலிருந்து விலகி எதிரணியில் போய்த் தஞ்சம் புகுந்தார்கள்.

ஆனால் நடந்தது என்ன ? அவமானங்களை மலர் மாலையாகச் சூட்டிக்கொண்டு, அ.தி.மு.க.வை பீனிக்ஸ் பறவை போல வெற்றி வானில் பறக்கவிட புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அரசியலில் விசுவரூபம் எடுப்பார் என்று எதிரிகள் யாரும் எதிர்பார்க்கவில்லை!

உலகத்திலேயே "அம்மா'' என்ற ஒரு வார்த்தைக்கு அடையாளமாகவும், முழுப் பொருளாகவும் திகழ்ந்தவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இந்த "அம்மா" என்ற ஆளுமை மிக எளிதாகத் தோன்றிவிடவில்லை. பலருடைய உதாசீனத்தால், துரோகத்தால் உருவான ஆளுமை.

ஆண் வர்க்கத்தினர் மட்டுமே நடமாடும் அரசியல் காட்டுக்குள், ஒற்றைப் பெண் சிங்கமாய் உள்ளே நுழைந்து தனியொரு பெண்மணியாய்ப் பல ஆண்டுகள் ஆட்சி செய்தவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

அவர்களுடைய வழியில் வந்த நாங்கள், எதையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். இதை நான் இங்கே ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் மீனவர்களைப் பற்றி பேசத் தகுதியில்லாதவர்கள் எல்லாம், இப்போது மீனவர்களிடையே வந்து தங்களை நல்லவர்களாக காட்டிக் கொள்கிறார்கள்.

மீனவர்களுக்கு அவர்கள் இழைத்த துரோகத்தை யாரும் மறந்து விட முடியாது. அதையெல்லாம் மீனவர்கள் மறந்து விடுவார்கள் என்ற தைரியத்தில், எங்கள் மீது, ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதிலேயே நேரத்தைச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உங்கள் முன்னிலையில் விளக்கம் கொடுக்கலாம் என்று இருக்கின்றேன்.

காலம் காலமாக தீர்க்கப்படாமல் இருந்து வரும் கச்சத்தீவுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். கச்சத்தீவு பிரச்சினை, தும்பை விட்டு வாலை பிடிக்கும் கதையாகத்தான் இருக்கிறது. முந்தைய தி.மு.க. அரசு தன் கையிலிருந்த தும்பை விட்டுவிட்டு, தனக்குப் பிறகு வருகிறவர்கள் வாலைப் பிடிக்கட்டும் என்று இருந்து விட்டார்கள்.

கச்சத்தீவு, இலங்கை நாட்டிற்குத் தாரை வார்க்கப்படுவதற்கு முன்பே, அப்போதைய தி.மு.க. முதலமைச்சரிடம், மத்திய அரசு இரண்டுமுறை ஆலோசனை நடத்தியிருக்கிறது. அதைச் சரியான வாய்ப்பாகக் கருதி, கச்சத்தீவு இலங்கைக்கு செல்வதைத் தடுக்க முட்டுக்கட்டை போட்டிருக்கலாம், அல்லது மத்திய அரசுக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இருக்கிறது என்பதனை மக்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கலாம். இந்த இரண்டையும் தி.மு.க. அரசு செய்யாமல், தமிழக மீனவர்களுக்கு துரோகம் இழைத்தது.

கச்சத்தீவை, இலங்கைக்குத் தாரைவார்க்கும் எண்ணம் மத்திய அரசுக்கு இருந்தது தி.மு.க. அரசுக்கு தெரியாதா? மீனவ நலன் காக்கும் உண்மையான அரசாக இருந்திருந்தால், உடனே மக்களைக் கூட்டி மிகப்பெரிய போராட்டத்தை நடத்தியிருக்கலாம். ஒரு சிறு துரும்பு அளவுக்கு கூட தி.மு.க. அரசு தன் எதிர்ப்பைக் காட்டவில்லை. எல்லாம் பறிபோன பிறகு சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள்! அன்றைக்கு ஆரம்பித்த நாடகம் தான், அன்றைக்கு போட்ட வேஷம் தான் இன்று வரை தந்தை, மகன் என்று தொடர்கிறது.

இவர்கள் செய்த தவறுக்கெல்லாம், 1991ஆம் ஆண்டு, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிராயசித்தம் தேடினார்கள். பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். 2008ஆம் ஆண்டு

அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள்.

ஆனால், அப்போது தி.மு.க. ஆதரவுடன் ஆட்சி நடத்தி வந்த காங்கிரஸ் அரசு பல காரணங்களைக் கூறி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மனுவைத் தள்ளுபடி செய்ய, உச்சநீதிமன்றத்தில் எதிர் உறுதி ஆவணத்தை தாக்கல் செய்தது. அப்போதும் இதை தி.மு.க. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

மீனவர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த துரோகத்தை எல்லாம் நீங்கள் மறந்து விடக்கூடாது! இவர்கள் செய்த தவறால் இன்றைக்கு நம் மீனவ நண்பர்கள் இலங்கைக் கடற்படையால் துன்புறுத்தப்படுவதும், தாக்கப்படுவதும், சிறைபிடிக்கப்படுவதும் தொடர்ந்து வாடிக்கையாக நடந்து வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அன்புக்குப் பாத்திரமான மீனவத் தாய்மார்கள், தினம் தினம் அழுது, கண்ணீரோடு வாழ்க்கை நடத்துவதை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பார்த்து வேதனைப்பட்டார்கள். மீனவர்களின் துயரைத் தம் துயராக எண்ணி, உடனடியாக தன் எதிர்ப்புக் குரலை இலங்கைக்கும், மத்திய அரசுக்கும் தெரிவித்து வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு செயல்படும் இந்த அம்மா அரசும், அந்த நெறிமுறைகளையே தொடர்ந்து பின்பற்றிச் செயல்படுத்துகிறது. இது சம்மந்தமாக, 27.02.2017, 17.03.2017 மற்றும் 07.04.2017 ஆகிய நாட்களில் நடைபெற்ற மத்திய அரசுடனான கூட்டங்களிலும் நேரிடையாகக் கலந்துகொண்டு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மிகவிரைவில், கச்சத்தீவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். உறுதியாகக் கூறுகின்றேன், மீனவக் குடும்பங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு காப்பாற்றும்!

“இந்த மாவட்ட மக்களின் பேராண்மை, வேளாண்மை, தோழமை ஆகியவை இன்றும் போற்றிப் புகழப்படும் பெருமை உடையவை” என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மாவட்டத்தைப் புகழ்ந்துள்ளார்கள்.

உலகிலேயே, மிகப்பெரிய கோயில் பிரகாரத்தைக் கொண்ட இராமேசுவரம் திருக்கோயிலில், 125 வருடங்களாகப் பாழடைந்து கிடந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதி புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் செப்பனிடப்பட்டது.

1984ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமது சொந்த செலவில், தமது தாயாரின் நினைவாக இந்த மாவட்டத்தில் உள்ள தேவிப்பட்டினத்தில் “அன்னை சந்தியா சத்துணவுக் கூடத்தை” திறந்து வைத்து, மழலைக் குழந்தைகளுடன் ஒன்றாகக் கூடி உணவருந்தி மகிழ்ந்தது, இந்த மாவட்டத்தின் மீது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இருந்த நன்மதிப்பைக் காட்டுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 75 கோடி ரூபாய் செலவில், ஒருங்கிணைந்த தூர்வாரும் திட்டம், 10 கோடி ரூபாய் செலவில், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் போன்ற பல திட்டங்களால், இந்த மாவட்ட மக்களின் மனதைக் குளிர வைத்திருக்கிறார்கள்.

உங்கள் மீது அதிக பாசம் வைத்ததால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், எப்போதும் மீனவர்களின் அன்புக் குரலைக் கேட்டுக்கொண்டே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில், துயில் கொண்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

இராமநாதபுரத்து மக்கள், தங்கள் வீட்டுச் செல்லப் பிள்ளைக்கு எடுக்கும் நூற்றாண்டு விழாவில், நாங்கள் அ.இ.அ.தி.மு.க.வின் தொண்டர்களாக வந்து கலந்து கொண்டிருக்கிறோம். அ.இ.அ.தி.மு.க.வின் இருபெரும் தலைவர்களும் உங்களை எந்த அளவிற்கு நேசித்தார்களோ, அதில் சிறிதும் குறைவில்லாமல் நாங்களும் நேசிக்கின்றோம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சி முகமைத் திட்டத்தின்கீழ், நிறைவேற்றப்பட்டுள்ள 22 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மற்றும் 10 கோடி ரூபாயில் மிளகாய் பயிருக்கான குளிர்பதனக் கிடங்கு, உலர் களம் உட்பட, 81 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை நான் தொடக்கி வைத்துள்ளேன்.

வருவாய்த்துறையின் மூலம் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழக்கரையில் கட்டப்பட உள்ள வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் மூலம், 26 ஆயிரத்து 849 பயனாளிகளுக்கு, 161 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

இவை தவிர, இம்மாவட்டத்தில் வறட்சியை தாங்கி நன்கு வளரக்கூடிய மரங்களான தைலம், சவுக்கு, மலைவேம்பு போன்ற கூழ் மரங்களை, செய்தித் தாள் காகித நிறுவனம் டன் ஒன்றுக்கு 2,700 ரூபாய் என இதுவரை கொள்முதல் செய்து வந்திருந்தது.

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வறட்சியைக் கருத்தில் கொண்டு, இவ்வாண்டு 01.12.2017 முதல், அறுவடை செய்யப்படும் கூழ் மரங்கள், டன் ஒன்றுக்கு 3,750 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு முதல் தைல மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குக் குறைந்த பட்ச ஆதார விலையாக, டன் ஒன்றுக்கு 4,000 ரூபாயாக நிர்ணயம் செய்யவும் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும், இந்த அரசு பதவியேற்றது முதல், இன்று வரை, 14 ஆயிரத்து 427 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 35 ஆயிரத்து 751 பணிகளைத் தொடக்கி

வைத்தும், 4ஆயிரத்து 881 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 7 ஆயிரத்து 129 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம், 19 ஆயிரத்து 308 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 42ஆயிரத்து 880 பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிகழ்த்தப்பட்டுள்ள சாதனைகளில், ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

படித்த ஏழைப் பெண்களின் திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ், சுமார் 24 ஆயிரம் ஏழை பெண்களுக்கு 76 கோடியே 85 இலட்சம் ரூபாய் திருமண நிதி உதவியும் 95.78 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், மாணாக்கர்களுக்கு 93 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 62 ஆயிரம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 702 கோடி ரூபாய் நேரடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய விவசாயக் கடன், 45 கோடியே 43 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 16 ஆயிரத்து 904 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். மகசூல் பாதித்த 1 இலட்சத்து 40 ஆயிரத்து 636 விவசாயிகளுக்கு, 146 கோடியே 28 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ், 1,526 நீர்நிலைகளிலிருந்து, சுமார் 51 இலட்சம் கன மீட்டர் வண்டல் மண் மற்றும் கரம்பை மண் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், 36 ஆயிரத்து 162 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 1 இலட்சத்து 28 ஆயிரம் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து 446 கோடியே 60 இலட்சம் ரூபாய் பயிர் காப்பீட்டுத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. சுமார் 1 இலட்சத்து 15 ஆயிரம் மீனவர்களுக்கு, ரூ.158 கோடி மீன்பிடி தடைக்கால உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மீன் பிடிப்புக்குப் பயன்படும் துணைப் பொருட்கள் மீது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டுவரி முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், மீனவர்களுக்கு ரூ.148 கோடி அளவிற்கு செலவு குறைக்கப்பட்டுள்ளது. 14 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2 அரசு கலைக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், 248 கோடி ரூபாய் செலவில் 18 ஆயிரத்து 280 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், 530 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில், 1,009.82 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பொதுப்பணித் துறையின் சார்பில், கமுதக்குடி, தெளிச்சாத்த நல்லூர், வளசை மற்றும் குணப்பனேந்தல் ஆகிய கிராமங்களில், 78 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் 100 கண்மாய்களுக்கு, 20 ஆயிரத்து 876 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், நான்கு படுகை அணைகள் கட்டப்பட்டுள்ளன. குடிமராமத்து பணிகள் திட்டத்தின்கீழ், 58 பணிகள், 20 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 21.09.2016 அன்று, 4,536 கோடி ரூபாய் முதலீட்டில் இம்மாவட்டத்தில் நிறுவப்பட்ட 648 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையத்தைக் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

'பசுமை இராமேஸ்வரம் திட்டம்', முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்களால் 2014ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதி, மிகப்பெரிய அளவில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம், இராமேஸ்வரம் தீவில் நீர்மேலாண்மை, கழிவுகள் மேலாண்மை, சமூக மூலதன வளர்ச்சி, நிலத்திருத்தம் மற்றும் அழகுபடுத்துதல், முறைசாரா எரிசக்தி போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், பழங்கால தீர்த்தங்கள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், தனுஷ்கோடி மற்றும் அரிச்சல்முனை பகுதிகளில் ஒரு இலட்சம் பனை விதைகள் நடப்பட்டு வருகின்றன. பசுமை இராமேஸ்வரத்தின் மூன்றாண்டுக்கானத் திட்ட வரைவினை, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் 27.07.2017 அன்று, தொடங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில், அதிக அளவில் தொழில் முதலீடுகளை ஈர்த்திடுவதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, "தமிழ்நாடு வர்த்தக எளிதாக்கல் சட்டம் மற்றும் விதிகள் 2017ஐ வெளியிட்டும், "இணையம் அடிப்படையிலான ஒற்றைச் சாளரத் தகவைத்" துவக்கி வைத்தும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்காக, வழிமுறைகள் மேலும் எளிதாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, தொழில் வளர்ச்சியிலும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதிலும், தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

சமீபத்தில் கூட, ஜோன்ஸ் லேங் லாசலே (Jones Lang Lasalle) என்ற பன்னாட்டு நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது எனவும், இதனால் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிட்டும் எனவும் கூறியுள்ளது. இந்த செய்தி, 23.11.2017 அன்று வெளிவந்த "டைம்ஸ் ஆப் இந்தியா" என்ற நாளிதழில் வெளியாகி உள்ளது.

ஆனால், எதிர்க்கட்சியினர், தமிழ்நாட்டில் எதுவும் நடைபெறவில்லை என்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். ஆனால், உண்மை நிலை என்னவென்று மக்களுக்கு நன்றாகத் தெரியும். இதைக் கூறுகின்ற போது கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் முயல்களும் ஆமைகளும் வாழ்ந்து வந்தன. தினமும் காலை, மாலை நேரங்களில், முயல்கள் அங்கும் இங்கும் ஓடியாடி நன்றாக விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றோடு ஆமைகளும் விளையாடிக் கொண்டு இருந்தன. ஆமைகள் மெதுவாக வருவதைக் கண்ட முயல், “உங்கள் முதுகில் உள்ள ஓடுகள் மிகவும் கனமாக இருக்கின்றன; எனவே, உங்களால் ஓடியாடி விளையாட முடியவில்லை. எங்களுக்கு அது போல் ஓடுகள் இல்லை. ஆகையால், உங்கள் முதுகில் உள்ள ஓடுகளை நீக்கினால், எங்களைப் போல் நீங்களும் வேகமாக ஓடியாடி மகிழ்ச்சியாக இருக்கலாம்” என்று கூறியது. இதை நம்பிய ஆமைகள் தங்கள் முதுகின் மேல் உள்ள ஓடுகள்தான் நமக்கு பாதுகாப்பு என்பதை மறந்து, முயல் சொன்னதை நம்பி தங்கள் முதுகின் மேல் உள்ள ஓடுகளை நீக்கிக் கொண்டு விளையாடச் சென்றன.

இப்போது தான் நன்றாக இருக்கிறது, வேகமாக ஓடியாடி விளையாட முடிகிறது என்று ஆமைகள் நினைத்து விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில், ஓடுகள் நீக்கப்பட்ட நிலையில் உள்ள ஆமைகளைக் கண்ட வேட்டைக்காரர்கள், இந்த விலங்குகள் வித்தியாசமாக இருக்கிறதே என்றெண்ணி, அந்த ஆமைகளுக்கு நேராக தங்களது அம்புகளைக் குறிபார்த்து எய்தார்கள். பாதுகாப்பாக இருந்த ஓடுகள், அப்போது இல்லாததால் வேட்டைக்காரர்கள் எய்த அம்பானது, அந்த ஆமைகளின் முதுகைத் துளைத்தன. ஆமைகள் அனைத்தும் இறந்தன.

அதுபோன்று, எதிர்கட்சிகாரர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில், மக்களுக்குப் பயனுள்ள எந்த திட்டங்களையும் போடாமல், ஓடுகள் நீங்கிய ஆமைகள் போல் பாதுகாப்பற்ற ஆட்சியைச் செய்ததால் மக்கள் துன்பத்திற்கு ஆளானார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சியில், எண்ணற்ற திட்டங்கள் இந்த நாட்டு மக்களுக்கு வாரிவாரி வழங்கப்பட்டன. இன்றைக்கு, என்றைக்கும் இல்லாத மகிழ்ச்சி! இதுவரை, 25 மாவட்டங்களில் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவை, நாம் சிறப்பாகக் கொண்டாடி, 26 மாவட்டங்களில் ஒன்றான இராமநாதபுரம் மாவட்டத்தில், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். 25 மாவட்டங்களிலும் நாம் சிறப்பாகக் கொண்டாடினோம், ஆனால், 26ஆவது மாவட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் கொண்டாடுவது மிகச் சிறப்பானது என்று நான் எண்ணுகின்றேன். ஏனென்றால், 25 மாவட்டங்களிலும், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடும் பொழுது, நமக்கு இரட்டை இலை இல்லை, அது தேர்தல் ஆணையத்தால் தடைசெய்யப்பட்டிருந்தது! எனக்கு முன்னால் இந்த மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் திரு. மணிகண்டன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த மாவட்டம் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் ராசியான மாவட்டம் தான்! அந்த அடிப்படையில், அந்த இருபெரும் தலைவர்களுடைய ராசியான மாவட்டத்திலே நாங்கள் வருகின்ற பொழுது, இரட்டை இலை சின்னத்தைப் பெற்று இந்த ராசி தெளிவுபடுத்தியிருக்கிறது.

நாங்கள், கடந்த 25 மாவட்டத்திற்கும் செல்கின்ற பொழுது, இந்த இரட்டை இலையைக் காணமுடியவில்லை, காட்டக்கூடாது என்று தேர்தல் ஆணையம் தடை விதித்திருந்தது. இப்போது, வருகின்ற வழிநெடுகிலும் கழகத் தொண்டர்களும், பொதுமக்களும் இரட்டை இலைக் கொடிதனை ஏற்றி முகம் மலர்ச்சியைக் காட்டி, இந்த இரட்டை இலையை, எந்தக் கொம்பனாலும் தடுத்து நிறுத்தமுடியாது; பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்கண்டெடுத்த இரட்டை இலை, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கட்டிக்காத்த இரட்டை இலை, ஒன்றரை கோடி அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தொண்டர்களுடைய உயிர்மூச்சாக விளங்கக்கூடிய இரட்டை இலை நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதனை இந்த மாவட்ட மக்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள்.

இன்னும் சிலர் தெரிவிக்கின்றார்கள், இந்த இரட்டை இலை போனாலும் பரவாயில்லை, அதை நம்பி நாங்கள் இருக்கவில்லை என்று சொல்கிறார்கள், பிறகு ஏன் இவர்கள் போராட்டம் செய்யவேண்டும், விட்டு விடுங்களேன்! ஆனால், அதற்கு மனமில்லை. வேண்டுமென்றே திட்டமிட்டு, சதி செய்து, இந்த இரட்டை இலையை முடக்க வேண்டும் என்று நம்முடைய எதிரிகளோடு கூட்டுச் சேர்ந்து, சதி செய்து, கழகத்தை அழிக்கப் பார்த்தார்கள், இந்த இரட்டை இலையை முடக்கப் பார்த்தார்கள். ஆனால், எல்லாம் வல்ல இறைவன் அருளால், மேலே இருந்து, இருபெரும் தெய்வங்கள் நமக்கு அருளாசியோடு, நல்ல தீர்ப்பை தேர்தல் ஆணையம் வழங்கி நமக்கு இரட்டை இலையை தந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே பேசுகின்றபொழுது, எனக்குப் பின்னாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பல நூற்றாண்டுக் காலம் இந்த ஆட்சி அதிகாரத்திலே நிலைத்து நிற்கும் என்ற இலட்சிய வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அதை நிரூபிக்கின்ற விதத்திலே, இன்றையதினம், தர்மத்திற்குக் கிடைத்த இந்த வெற்றி, நீதிக்கு கிடைத்த இந்த வெற்றி, இதன்மூலம், நமக்கு இரட்டை இலை கிடைக்கப் பெற்றிருக்கிறது. விரைவில், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. புரட்சித்தலைவி அம்மாவினுடைய கோட்டையாக விளங்குகின்ற இந்தத் தொகுதிக்கு வரவிருக்கும் இடைத்தேர்தலின் மூலமாக, இந்த இரட்டை இலைக்கு, எவ்வளவு சக்தி இருக்கின்றது என்று நாம் நிரூபித்துக் காட்டுவோம்!

இருபெரும் தலைவர்களுடைய இலட்சியத்தை நாம் செயல்படுத்துவோம்; இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை நனவாக்குவோம்; எதிரிகளைக் களத்திலே வீழ்த்துவோம்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் தமிழகத்திலே, என்றைக்கும் ஆட்சி அதிகாரத்திலே இருக்கும் என்பதைத் தேர்தல் மூலமாக நிரூபித்துக் காட்டுவோம் என்பதனை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தேர்தல் மட்டுமல்ல, இதற்குப் பிறகு வருகின்ற உள்ளாட்சி தேர்தலானாலும் சரி, நாடாளுமன்ற தேர்தலானாலும் சரி, எந்த தேர்தல் வந்தாலும் ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்

தொண்டர்களோடு உழைத்து, பொதுமக்களுடைய ஆதரவோடு, நாம் வெற்றிப் பாதையிலே செல்வோம், செல்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டதாக, எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகின்றார். எங்கே சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது? இந்தியாவிலேயே, அமைதிப் பூங்காவாக விளங்குகின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்! இன்றைக்கு, சரியான முறையில் நிருவாகம் செய்கின்ற காரணத்தினாலே சட்டம், ஒழுங்கு பேணிக் காக்கப்படுகிறது, மக்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்கள், சுபிட்சமாக மக்கள் இருக்கின்றார்கள். சட்டம், ஒழுங்கு தமிழகத்திலே பேணிக் காக்கப்படுகிறது என்பதனை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, வேளாண்துறையிலும் தமிழ்நாடு சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. வேளாண் உற்பத்தியிலே, தமிழ்நாடு முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. உணவுதானிய உற்பத்தியிலே, கடந்த ஆறாண்டுகளிலே, இந்தியாவிலேயே உயர்ந்த விருதுகளைப் பெற்று, உணவுதானியம் அதிகம் உற்பத்தி செய்யப்பட்ட மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது!

இன்றைக்கு மத்திய அரசோடு இணக்கமான சூழ்நிலை இருந்த காரணத்தினாலே, இரண்டு நாட்களுக்கு முன்பு, மாண்புமிகு மத்திய தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு. நிதின் கட்கரி அவர்கள் சென்னைக்கு வந்தபோது, அவரிடத்திலே சென்று தமிழ்நாட்டிற்கு என்னென்ன தேவை என்ற பட்டியலை அளித்தோம், ஏற்கெனவே, கோரிக்கை மனுவும் கொடுத்திருந்தோம். மத்திய அரசோடு இணக்கமாக இருந்த காரணத்தினாலே, சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபாய், நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார். இன்றைக்கு எதிர்க்கட்சியை சேர்ந்தவர்களெல்லாம், மத்திய அரசுக்குக் காவடி எடுக்கின்றாகள், மத்திய அரசுக்கு அடிபணிந்து போகின்றார்கள் என்று சொல்கிறார்களே, அவர்களுடைய ஆட்சியிலே என்ன திட்டத்தை கொண்டு வந்தார்கள்? இந்த தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன செய்தார்கள்? 14 ஆண்டுக் காலம் மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இருந்த தி.மு.க., காங்கிரஸ் மந்திரிசபையிலே இடம் பெற்றிருந்தது தி.மு.க., இந்த தமிழ்நாட்டுக்கென்று என்ன திட்டத்தை கொண்டுவந்தது தி.மு.க.? உருப்படியான எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, இன்றைக்குப் பல்வேறு சாலைகளைச் சீர்செய்வதற்கு, தரம் உயர்த்துவதற்கு, அகலப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கின்றது. தூத்துக்குடித் துறைமுகத்தை விரிவுபடுத்த, சீர்செய்ய ரூ.900 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று சென்னை–பெங்களூரு எக்ஸ்பிரஸ் சாலை, 20 ஆயிரம் கோடியில் நிறைவேற்றப்படும் என்ற அறிவிப்பையும் தந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்காக, சீர் செய்வதற்காக தேவையான நிதி ஒதுக்கீடு

செய்யப்படும் என்ற அறிவிப்பை தந்திருக்கின்றார். ஆகவே, மத்திய அரசோடு இணக்கமாக இருந்த காரணத்தினாலே, மத்திய அரசு, மாநில அரசுக்குத் தேவையான நிதியுதவி அளித்து, பல்வேறு திட்டங்கள் நிறைவேறுவதற்கு உறுதுணையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களைப்போல ஆட்சி அதிகாரத்தை, சொந்த நலனுக்காகப் பயன்படுத்தவில்லை, மக்கள் நலனுக்காக நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதனைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு கல்வியிலே, புரட்சி, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம். என்றைக்கும் இல்லாத அளவிற்கு, கல்விக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்த அரசு அம்மாவினுடைய அரசு! நம்முடைய மாணவர்களுக்குக் கிட்டத்தட்ட ஆறாண்டுகளிலே, 37 இலட்சம் மடிக்கணினியை வழங்கி, விஞ்ஞான கல்வியை, இந்தியாவிலேயே தமிழக மாணவர்களுக்கு வழங்கியது அம்மாவினுடைய அரசு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் ஒரு பத்தாண்டுக்காலம் கழித்துப் பார்த்தால், இந்தியாவிலேயே, விஞ்ஞான கல்வி படித்த மாணவ, மாணவியர் தமிழ்நாட்டில் தான் அதிகம் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு வல்லரசு நாட்டில் கூட விலையில்லா மடிக்கணினிகள் வழங்குவதில்லை! ஆனால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, 14,000 ரூபாய் திட்டத்திலே ஒரு மடிக்கணினி என்ற முறையில் 37 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அரசு எவ்வளவு துரிதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றதுஎன்று எண்ணிப்பார்க்கவெண்டும்! ஆகவே, நம்முடைய மாணவ, மாணவியர் எதிர்காலத்தில் நாட்டை ஆளக்கூடியவர்கள். ஒரு சமூகம், பொருளாதார மேம்பாடு அடையவேண்டுமென்றால், கல்வியிலே ஒரு நாடு சிறக்கவேண்டும். கல்வியிலே சிறக்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு, 37 இலட்சம் விலையில்லா மடிக்கணினியை, மாணவ மாணவியர்களுக்கு அள்ளிக்கொடுத்திருக்கிறார்கள்!

அதேபோல, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக, 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். அதே வழியில் வந்த அம்மாவினுடைய இந்தஅரசும் 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றது. சுமார் 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்து, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலே, 76 கல்லூரிகளை கொடுத்த அரசு இந்த அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். அவற்றின் அடிப்படையிலே, இந்த மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அறிவிக்க உள்ளேன்.

இது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொதுமக்கள் ஆகிய நீங்கள் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய்ச் சேரவேண்டும். வாகன ஓட்டிகள், நம் தொண்டர்களையும், மக்களையும் விழிப்புடன் இருந்து பாதுகாப்பாக கொண்டு சேர்க்க வேண்டும். இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவினைச் சிறப்பாக நடத்திட ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சியருக்கும், அரசு அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்திலே, இந்த விழாவிற்கு வந்து பெருமை சேர்த்ததற்கு இராமநாதபுர இராஜமன்னர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

சிறப்பு அறிவிப்புகள்

- ✶ பட்டிணம்–காத்தான், சக்கரக்கோட்டை, அச்சுதன்வயல் மற்றும் சூரன்கோட்டை ஆகிய ஊராட்சிகளை இணைத்து, இராமநாதபுரம் நகராட்சியானது, சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்படும்.
- ✶ R.S. மங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.
- ✶ மிளகாய்ப் பயிருக்காக, பரமக்குடி முதுகுளத்தூர் மற்றும் கமுதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் முறையே, அனைத்து வசதிகளுடன் கூடிய முதல்நிலை சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்படும்.
- ✶ இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தின்கீழ், மிளகாய் மற்றும் பருத்தி வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், கணினி வசதிகள், தரம் பிரிக்கும் அறைகள் உள்ளிட்டவை ரூ.1.33 கோடி மதிப்பீட்டில், மத்திய அரசின் வேளாண் தொழில் நுட்ப உட்கட்டமைப்பு நிதி மற்றும் 'நபார்டு' வங்கியின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்டு, பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ✶ இராமநாதபுரம் மாவட்டத்தில், நிலத்தடி நீரில், உப்புத்தன்மை அதிகமாக உள்ள 50 இடங்களில், ரூ.7.75 கோடி செலவில், R.O பிளாண்ட்டுகள்– குடிநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் ஊரக வளர்ச்சித்துறை மூலம் அமைக்கப்படும்.

* ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், கற்காத்தகுடி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும்.

* இராமநாதபுரம் மாவட்டம், பட்டணம் காத்தான், உப்பூர், மற்றும் கீழக்கரை ஆகிய 3 இடங்களில் புதிய துணை மின்நிலையங்கள் அமைக்கப்படும்.

* இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், அபிராமம், கமுதி, கடலாடி, பரமக்குடி மற்றும் பெருங்குளம் ஆகிய 6 இடங்களில் உள்ள துணை மின்நிலையங்களில், புதிய மின்மாற்றிகள் நிறுவப்படும்.

* மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வேதாளை ஊராட்சியில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

* இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு மருத்துவ பட்ட மேற்படிப்பு படிக்கவும், மேலும், 'எம்.ஆர்.ஐ. ஸ்கேன்,' 'சி.டி. ஸ்கேன்,' 'டயாலிசிஸ்,' 'எக்கோ கார்டியோகிராம்' உள்ளிட்ட மருத்துவக் கருவிகள் வாங்கவும், விபத்து காய சிகிச்சை மையம் மற்றும் மூப்பியல் பிரிவு அமைக்கப்படும்.

* பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு நவீன மருத்துவக் கருவிகள் மற்றும் அறுவை அரங்கு அமைத்துத் தரப்படும்.

* தேவிப்பட்டினம் அரசு மருத்துவமனையில், நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

* பார்த்திபானூர், கமுதி மற்றும் முதுகுளத்தூரில், புறவழிச்சாலைகள் அமைக்கப்படும்.

* இராமநாதபுரம் – கீழக்கரை சாலையில், இராமநாதபுரம் – உச்சிப்புளி இரயில்வே நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும்.

* புத்தேந்தல் – ஏர்வாடி சாலையில் ஒரு பாலமும், இராமநாதபுரம் – எமனேஸ்வரம் சாலை முதல், P.கொடிகுளம் சாலையில் ஒரு பாலமும், முதுகுளத்தூர் – உத்தரகோசமங்கை சாலையில் ஒரு பாலமும், நத்தம் – நெடியமாணிக்கம் சாலையில் ஒரு பாலமும் கட்டப்படும்.

* கிழக்குக் கடற்கரைச் சாலையான நாகூர்– நாகப்பட்டினம் – இராமநாதபுரம் – தூத்துக்குடி சாலையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட 120 கி.மீ. நீளமுள்ள சாலையினை, ஆக்கம் மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்தத் திட்டத்தின் (OPRC) கீழ், சாலை மேம்பாடு செய்ய பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை, 56 கி.மீ. நீளத்திற்கு ரூ.19.04 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 64 கி.மீ. நீளமுள்ள சாலையில் ரூ.21.76 கோடி மதிப்பில், மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ பரமக்குடி வட்டம், மேலப்பார்த்திபனூர் கிராமத்தில் பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி, கீழச்சிவன்குளம் கண்மாய் மற்றும் இதரக் கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படும்.
- ✶ கமுதி வட்டம், பெரிய–யானைக்குளம் கிராமத்தில் பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டிக் பெரியயானைக்குளம் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படும்.
- ✶ திருவாடானை வட்டம், கட்டியவயல் கிராமத்தில், விருசுழி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி, மல்லனூர் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படும்.
- ✶ கமுதி வட்டம், காக்குடி கிராமம் மற்றும் கடலாடி வட்டம், சாயல்குடி கிராமம் அருகே குண்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கப்படும்.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் நெற்களஞ்சியமாம் தஞ்சாவூரில் கருணைக் களஞ்சியம் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா.

தமிழை உயிராகவும், உணர்வாகவும் மதித்த ஒரே தலைவர்!

காவிரி தந்த கலைச்செல்வி, காவிரியை மதி கொண்டு மீட்டெடுத்த முழுமதி, முல்லைப் பெரியாற்றில் முடிசூடிய முத்தமிழ் தமிழினத்தின் தன்னிகரில்லாத் தலைவி, ஒன்றறைக் கோடித் தொண்டர்களின் உயிர் மூச்சு, பொன்மனச் செல்வி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி. பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் சிறப்பான அற்புதமான கருத்துகளை நம்மிடத்திலே எடுத்துரைத்து இந்த விழாவில் தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே, எழுச்சியான உரையாற்றி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களே! இந்த மண்ணின் மைந்தர், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்களே! மாண்புமிகு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களே! வரவேற்புரை ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. ரா. வெங்கடேசன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கு. பரசுராமன் அவர்களே! மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களே! பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. C.V.சேகர் அவர்களே! பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் திரு. மா.கோவிந்தராசு அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. A. அண்ணாதுரை அவர்களே! மற்றும் இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பித்து கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே! வருகை தந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், தஞ்சாவூர் மாவட்டம் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் மட்டுமன்று; சொற்களஞ்சியமாகவும் திகழ்கிறது! நெல்லும், சொல்லும் இங்குதான் அதிகமாக விளைகின்றன. கழனியின் சேறும், கலை, இலக்கியச் சாறும் கலந்த ஒரு தெய்வீக பூமி இந்த பூமி!

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானைகட்டிப் போரடித்த சோழவள நாடு என்றும், சோழ நாடு சோறுடைத்து என்றும், குபேரனின் அளகாபுரி என்றும் பலவாறாகப் புகழப்படும் தஞ்சாவூர் மாவட்டம், தமிழன்னைக்கு நெற்றித் திலகமாகத்



திகழ்கிறது. எட்டாம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட தனஞ்செய முத்தரையரின் பெயரையே தன் பெயராகக் கொண்டு உருவானது தஞ்சை என்றும், தனஞ்செய ஊர் என்பது மருவி “தஞ்சாவூர்” என மாறியது என்றும் கூறப்படுகிறது. சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள், முத்தரையர்கள், நாயக்க மன்னர்கள், மராட்டியர்கள், ஆங்கிலேயர்கள் என தஞ்சாவூர் பலரால் ஆளப்பட்டுள்ளது என்றாலும், ராஜராஜ சோழன் காலத்தில் தான், தஞ்சாவூர் கலை, இலக்கியம், விவசாயம் என அனைத்திலும் மேலோங்கி திகழ்ந்தது. உலக பிரசித்திப்பெற்ற இடங்களுள் ஒன்றாகத், திகழும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. ராஜராஜ சோழன் தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக, தமிழ் உயிர்மெய் எழுத்துக்கள் 216–ஐ நினைவுபடுத்துவதுபோல் இந்தக் கோவிலின் விமானத்தை, 216 அடி உயரத்தில் அமைத்திருக்கிறாரோ என எண்ணத் தோன்றுகிறது!

தமிழ் உயிர் எழுத்துக்களில் ஆயுத எழுத்தையும் சேர்த்து கோயிலின் நுழைவாயிலில் உள்ள நந்தி சிலையின் உயரத்தை 13 அடியாக அமைத்திருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. புவி அதிர்வுகளாலோ, இடி மின்னல்களாலோ பாதிப்பு ஏற்படாத அளவிற்கு, தொழில் நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ளதால், ஆயிரத்து 7 ஆண்டுகளாகியும் ராஜராஜ சோழனைப் போல், பெருவுடையார் கோயில் நிமிர்ந்து நிற்கிறது! மலைப்பகுதிகளே இல்லாத சோழநாட்டில், ஒரு இலட்சத்து 30ஆயிரம் டன் எடை கொண்ட கிரானைட் கற்களால், 7 ஆண்டுகளில் கோயிலைக் கட்டி, உலகையே வியக்க வைத்தவர் மன்னர் ராஜராஜன் என்பதற்காக ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டும்.

கோயிலின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றபோது அங்கு வேலை செய்துவந்த சிற்பிகளுக்கு, தினமும் தயிர், மோர் வழங்கி வந்தஅழகி என்னும் ஓர் இடையர்குல ஏழை மூதாட்டியின் சிவத்தொண்டை அனைவரும் அறியும் வண்ணம், 80 டன் எடை கொண்ட கல்லில் “அழகி” என்று பெயரைப் பொறித்து, அதனை ராஜகோபுரத்தின்

உச்சியில் இடம்பெறச் செய்தார் ராஜராஜ சோழன். அந்தக் கல் ''இடைச்சி கல்'' என்று இன்றும் அழைக்கப்படுகிறது. அந்த கல்லின் நிழல்தான், இறைவன் பிரகதீஸ்வரர் மேல் விழுகிறது. விஜய ராகவ நாயக்கரால் 110 ஏக்கர் பரப்பளவில் – கட்டப்பட்ட பெரிய கோட்டை அரண்மனையில் உள்ள அருங்காட்சியகம், கலைக்கூடம், சந்திர மௌலீஸ்வரர் ஆலயம், சதார்மகால் அரண்மனை, தர்பார் கூடம், சரஸ்வதி மகால், நூலகம் ஆகியவை, தமிழர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குகின்றன!

கரிகால் சோழனால் கட்டப்பட்ட, மிகப்பழமையான தொழில் நுட்பத்துடன் கூடிய கல்லணை, ராஜராஜன் மணிமண்டபம், மனோரா கோபுரம், ஷவார்ட்ஸ் தேவாலயம், சிவகங்கைப் பூங்கா என்று ஏராளமான கட்டடங்களைக் கொண்டுள்ள சுற்றுலா இடங்களால், தஞ்சை நகரம் மற்ற நகரங்களை மிஞ்சும் நகரமாகவே திகழ்கிறது. தாராசுரம் சிவன் கோவில், திருபுவனம் சரபேசுவரர் கோயில், திருவிடைமருதூர் சிவன்கோயில், முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை, கும்பகோணம் ராமசுவாமி திருக்கோயில், உப்பிலியப்பன் கோயில், புன்னை நல்லூர் மாரியம்மன் கோயில், திட்டை குரு ஸ்தலம், பூண்டி மாதா தேவாலயம், பண்டாரவாடை பெரியபள்ளி வாசல் போன்ற வழிபாட்டுத் தலங்களால், தஞ்சாவூர் ஆன்மிகம் தழைக்கும் பூமியாகவும் திகழ்கிறது!

சுவாமி மலைச் சிற்பம், திருபுவனம் பட்டு, தஞ்சாவூர் வீணை, தஞ்சாவூர் ஓவியம், தஞ்சாவூர் கலைத்தட்டு, தஞ்சாவூர் வெற்றிலை, தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை, நாச்சியார் கோயில் குத்துவிளக்கு போன்றவை, இன்றளவும் தஞ்சாவூர் மாவட்டத்தின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் தொழில் நுட்பத்துடன் காவிரிக்குக் குறுக்கே, கல்லணையைக் கட்டிய கரிகால் சோழன், எண்ணற்ற கோயில்களைப் புனரமைத்த ரகுநாத நாயக்கர், தஞ்சையின் கலை, இசை, நாட்டியத்தை உலகம் அறியச் செய்த மன்னர் இரண்டாம் சரபோஜி, மகாத்மா காந்திஜியின் உதவியாளராக இருந்த பொருளாதார மேதை ஜே.சி. குமரப்பா, சுதந்திரப் போராட்ட வீரர் சர். சிவசாமி அய்யர், கணித மேதை சீனிவாச ராமானுஜம், கரிகாலன் வரலாற்றை எழுதிய உலகநாதப் பிள்ளை, தமிழ் வரலாறு எழுதிய சீனிவாசம் பிள்ளை, கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ சுவாமிகள், மொழிப்போர் தியாகி பட்டுக்கோட்டை அழகிரி, கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் போன்ற எண்ணற்ற சரித்திரவான்களையும், சாதனையாளர்களையும் பெற்றுள்ள பூமி இது!

மாண்புமிகு பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர், 'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மாவட்டங்களிலும் கொண்டாடுவது என்பது ஒவ்வொரு விதத்தில் சிறப்பானதுதான் என்றாலும், இந்தத் தஞ்சை மாவட்டத்தில், நம் மகத்தான தலைவருக்கு விழா எடுப்பது மிகமிகச் சிறப்பானதாகவும், மிகவும் பொருத்தமானதாகவும் அமைந்திருக்கிறது என நாம் கருதுகிறோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இலங்கை கண்டியில், அன்னை சத்தியாவுக்கும் திரு.கோபால மேனனுக்கும் ஐந்தாவது மகனாகப் பிறந்தார்கள். தந்தை கோபால மேனன் திடீரென்று இறக்கவே, அந்தக் குடும்பம் திக்குத்தெரியாமல் கண்டியில் தவித்தது. வறுமையில் வாடியபோது, கண்டியிலேயே இரண்டு பெண் குழந்தைகளையும், ஒரு ஆண் மகனையும் இழந்து, எஞ்சியிருந்த திரு.எம்.ஜி.சக்ரபாணியுடனும், அப்போது ராமச்சந்திரராக இருந்த நமது தலைவருடனும் உயிர்பிழைக்க, உலகில் எந்தப் பகுதிக்குச் செல்வது என்று அன்னை சத்தியா யோசித்தபோது, அந்தத் தாயாரின் நினைவுக்கு வந்த ஊர்தான் இந்த தஞ்சை மாவட்டம் கும்பகோணமாகும். உலகில் எத்தனையோ ஊர்கள் இருக்கும்போது, தமிழ்நாட்டில் உள்ள இந்தக் கும்பகோணத்தைத் தேர்வு செய்தார். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கும்பகோணத்திற்கு வந்தது நாம் செய்த புண்ணியம் அல்லவா ?

எதிர்காலத் தமிழ்நாட்டை ஆளப்போகிற தவப்புதல்வனை, கும்பகோணம் இருகரம் கூப்பி வரவேற்றுச் சீராட்டியது என்பது தஞ்சைக்குக் கிடைத்த பெருமை அல்லவா ? கும்பகோணம் ஆனையடிப் பள்ளியில், 3ஆம் வகுப்பு வரை படித்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தம் குடும்பத்தைக் காப்பாற்ற, நாடக கம்பெனியில் சேர வேண்டிய நிலை ஏற்பட்டது.

‘கொடிது கொடிது இளமையில் வறுமை’ என்பார் அவ்வையார். இளமையில் வறுமையால் வாடிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கையின் தொடக்கப்புள்ளி தஞ்சைமண் என்பதால்தான் இந்த மண்ணில் அந்த மகத்தான தலைவனுக்கு விழா எடுப்பது என்பதை தஞ்சாவூர் மக்களின் தலைமகனுக்கு எடுக்கும் மாபெரும் விழாவாக, உணர்ச்சிப்பூர்வமான விழாவாக நான் கருதுகிறேன். இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிக் குழந்தைகள் பசியாறச் சத்துணவு சாப்பிடுகின்றார்கள் என்றால், அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இளமையில் பட்ட வறுமையின் எதிரொலிதான் காரணம்! இனி,

தமிழ்நாட்டில் எந்தக் குழந்தையும் பசியால் வாடக்கூடாது என்கிற வைராக்கியத்தை அவருக்கு உண்டாக்கியது, இந்த கும்பகோணம் வாழ்க்கை அனுபவம்தான்! எனவே, தஞ்சை மக்கள் தங்கள் மாவட்டத்துச் சாதனைகளில் சத்துணவையும் சேர்த்துக் கொள்ளலாம்.

தாய் சத்தியாவுக்கு, தன் குடும்பம் வசிக்கத் தகுந்த இடம் தஞ்சை மாவட்டம் என்று எப்படித் தோன்றியதோ, அப்படித்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றதும், தமிழன்னைக்கு மணிமகுடம் சூட்டி அழகு பார்க்கத் தமிழுக்கென்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் நிறுவ விரும்பியபோது அவருடைய எண்ணத்தில் முதலில் வந்து நின்றது இந்த தஞ்சாவூர் மாவட்டம்தான்! தஞ்சைக்குப் பெருமை சேர்த்த பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டிய முடியரசு மன்னர் ராஜ ராஜசோழனைப் போல், 972 ஏக்கர் பரப்பளவில், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவி, தஞ்சைக்கு மேலும் புகழைச் சேர்த்தவர் குடியரசு மன்னர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்! இந்த இரண்டு பேருமே இந்திய வரலாற்றில் மன்னாதி மன்னர்களாக இன்றைக்கும் போற்றப்படுகிறார்கள். தமிழ்நாட்டின் மீதும் தமிழ் மொழியின் மீதும் அளவு கடந்த பற்றுக் கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் என்பதற்கு ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கேரளாவில் மலையாள மக்கள் மட்டுமே கூடியிருந்த ஒரு விழாவில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கலந்து கொண்டு மலையாளத்தில் பேசாமல், தமிழில் பேசினார்கள். அங்கிருந்தவர்கள் மலையாளத்தில் பேச வற்புறுத்தினார்கள். அதை நமது தலைவர் செவிமடுக்காமல், “என் குடும்பம் கேரளத்தை சார்ந்தது என்றாலும், என்னையும், என் குடும்பத்தையும் வாழவைத்தது தமிழக மக்கள்தான். என்னுடைய இன்றைய வளர்ச்சி, புகழ், செல்வாக்கு, அத்தனைக்கும் காரணம் தமிழ்நாடு, அப்படியிருக்க “நான் எப்படி மலையாளத்தில் பேசுவது?” என்று நிகழ்ச்சியின் கடைசி வரை, தமிழிலேயே பேசி விட்டு வந்தார்கள்!

“பிறநாட்டு சாத்திரங்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்த்தல் வேண்டும்” என்ற மகாகவி பாரதியாரின் கனவை நனவாக்கப் பிற நாட்டு நூல்களைத் தமிழில் மொழி

பெயர்க்கச் செய்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் எழுத்து சீர்திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தம் படங்களில் தாய் நாட்டின் பற்றை வெளிப்படுத்துவதைப் போல, தாய்மொழியின் பெருமைகளை வசனங்கள் மூலமாகவும், பாடல்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினார்கள். 'கலங்கரை விளக்கம்' என்ற படத்தில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'சங்கே முழங்கு' என்ற பாடலைப் பயன்படுத்திக் கொண்டார்கள். 'தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை குருடர்கள் கண்ணைத் திறந்து வைப்பேன்' என்று 'நான் ஆணையிட்டால்' படத்தில் பாடினார்கள்.

'செந்தமிழா எழுந்து வாராயோ – உன் சிங்காரத் தாய்மொழியினைப் பாராயோ' என்று மதுரை வீரனில் பாடுவார்கள்.

'விழி போல எண்ணி – நம் மொழி காக்க வேண்டும்' என்று நம் நாடு என்ற படத்தின் மூலம் நமது குழந்தைகளுக்கு மொழியின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தனது கடைசிப் படமான மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படத்தில் ''எங்கள் சந்தனத் தமிழுக்கு வேறேது ஈடு'' என்று பாடி தமிழின் பெருமையை உலகம் அறியச் செய்து தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இப்படிப்பட்ட காட்சிகள் மூலம் அவர் தமிழ் மொழி மீது தனக்கிருந்த மரியாதையை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ் நூல்கள் மீது இருந்த மோகம் என்பது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு திடீரென்று ஏற்பட்டதல்ல. 1945ஆம் ஆண்டு முதல் சிறுக சிறுக தான் வாங்கி சேகரித்த புத்தகங்களை எல்லாம் கொண்டு 'காந்தி நூலகம்' என்ற நூலகத்தை தொடங்கினார்கள். தமிழ்நாட்டில் புதியதாக வெளிவரும் நூல்களை வாங்கி நூலகத்தில் வைத்து படித்தவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். தங்களால்தான் தமிழ் வளர்ந்தது, நாங்கள்தான் தமிழை வளர்த்தோம் என்று மார்தட்டிக் கொண்டவர்கள் தமிழை வளர்க்காமல், பல விதத்திலும் அவர்கள் வளர்ந்து கொண்டார்கள் என்பது உண்மை. அவர்கள் தமிழை ஒரு ஆயுதமாக பயன்படுத்தினார்களே தவிர.. . ... தமிழை உயிராகவும், உணர்வாகவும் மதிக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழுக்கு எப்படியெல்லாம் தொண்டு செய்ய நினைத்தார்களோ, அதையெல்லாம் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் செய்த ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும்தமிழுக்குச்செய்தமாபெரும்திட்டங்கள்சார்ந்தபணிகளையெல்லாம் மூடி மறைக்க, இவர்கள் எத்தனையோ சூழ்ச்சிகளைச் செய்து பார்த்தார்கள்! ஜப்பான் நாட்டிலிருந்து, 32 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்ட கப்பலுக்கு 'தமிழ் அண்ணா'

என்று பெயரிட்டார்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அந்தக் கப்பலுக்கு பெயர் சூட்டியபோது அத்தனை தமிழ் நெஞ்சங்களும் மகிழ்ச்சி அடைந்தன. தம்முடைய ஆட்சியில் தான், கவிஞர் புலமைப்பித்தன், கவியரசர் கண்ணதாசன், கவிஞர் முத்துலிங்கம் ஆகியோரை அரசவைக் கவிஞர்களாக நியமித்து தமிழுக்குப் பெருமை சேர்த்தார்கள்! 1982ஆம், ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, வானொலிக்கு அளித்த ஒரு பேட்டியில், 'எனது முதலமைச்சர் நாற்காலியின் மூன்று கால்கள் எவற்றால் ஆனவை என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான்காவது கால், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களால் ஆனது' என்றார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆழ்மனதில் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றிருந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இந்த மாவட்டத்தின் மைந்தர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டு முதலமைச்சர்களிலேயே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. 26.04.1982 அன்று அனைத்து நதிகளையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு முதன்முதலாகக் கடிதம் எழுதியவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். காவிரிப் பாசனத்தையே நம்பி இருக்கும் காவிரி டெல்டா விவசாயிகளின் கஷ்டங்களுக்குத் தீர்வுகாண, தொலை நோக்குச் சிந்தனையுடன் செயல்பட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்பது இதன் மூலம் நமக்கு விளங்கும். விவசாயப் பிரச்சனைகளைத் தமது திரைப்படங்களின் வாயிலாக வெளிப்படுத்தியவர் நமது தலைவர் அவர்கள். உழைப்பாளி, விவசாயி பாத்திரங்களைத்தான் தம் படங்களில் அதிகமாக ஏற்று நடித்திருக்கிறார்கள்.

"உரிமைக்குரல்" என்ற திரைப்படத்தில் வரும்

ஒரு வசனத்தை இங்கே கூறினால் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு இந்த விவசாய மண் மீது இருந்த பற்று வெளிப்படும்.

"என் தாய் எனக்கு பாலூட்டி வளர்த்தாங்க.
இந்த நிலத்தாய் எனக்கு சோறூட்டி வளர்த்தது"

என்று விளை நிலத்தின் மீது தாம் வைத்திருந்த உணர்வை வெளிப்படுத்தி இருப்பார்கள்.

அத்தகைய மாபெரும் தலைவரின் வழியில் வந்த இந்த அரசு, விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்குமே தவிர, விவசாயிகள் விரும்பாத எதையும், எந்தத் திட்டத்தையும் தமிழ் நாட்டில் அனுமதிக்காது என்று உறுதியாகக் கூறிக் கொள்கின்றேன்.

கடவுள் என்னும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி – விவசாயி என்று பாடியவர், பாடலோடு நிறுத்திக் கொள்ளாமல் முதன்முதலாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப்

பொறுப்பேற்றவுடன், 330 கோடி ரூபாய் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தார்கள். அதுமட்டுமல்ல, மின்சாரம் தட்டுப்பாடாக இருந்த அந்த காலக்கட்டத்தில்கூட, புதிதாக 3.30 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கி, பயிர்ப் பாதுகாப்பு காப்பீட்டு முறையைக் கொண்டு வந்தார்கள். அதேபோல, தமது ஆட்சிக் காலத்தில், மின் விளக்குகள் இல்லாத வீடுகளே இருக்கக் கூடாது என்று நினைத்து, 'வீட்டுக்கு ஒரு மின் விளக்கு' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, அனைத்து குடிசை வீடுகளுக்கும் மின் விளக்கு வசதியை ஏற்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தால், அதிகப் பலன் அடைந்தவர்கள் விவசாயப் பெருங்குடி மக்கள்தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குப் பிறகு, கட்சியையும் ஆட்சியையும் திறம்பட நடத்திய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களின் நலனில் பன்மடங்கு அக்கறை காட்டி, திட்டங்கள் போட்டதை யாரும் மறந்து விட முடியாது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததும், சென்னை கடற்கரையில் 84 மணி நேரம் உண்ணாவிரதம் மேற்கொண்டு, காவிரிப் பிரச்சனையில் உலகத்தின் கவனத்தைத் திருப்பினார்கள். பிறகுதான், இந்தப் பிரச்சனை தீர்வை நோக்கி நகர ஆரம்பித்தது. இதை யாராலும் மறுக்க முடியாது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தொடர்ந்து உச்ச நீதிமன்ற கதவுகளை தட்டியதன் விளைவாக, 19.02.2013 அன்று, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. எனினும், காவிரி நீரில் நமக்குரிய பங்கை கர்நாடகம் விடுவிக்க மறுக்கிறது. அதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் அம்மாவின் அரசு சட்டப் போராட்டம் நடத்தி வருகிறது. விரைவில், நமக்கு சாதகமானத் தீர்ப்பும், நிரந்தர தீர்வும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்குப் பல திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். குறிப்பாக, 700 கோடி ரூபாய் செலவில், பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, தஞ்சை நகரம் விரிவுபடுத்தப்பட்டது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தங்கள் ஆட்சிக் காலத்தில், ஒரத்தநாட்டில் கால்நடை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கலை அறிவியல் கல்லூரிக் கட்டடங்கள், பொறியியல் கல்லூரிக் கட்டடங்கள் போன்றவற்றைத் தொடங்கி, தஞ்சையின் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை பின்பற்றி அவர்கள் வழியில் நடக்கும் நாங்கள் கழகத்தின் ஆணிவேர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவருடைய அன்புக் குழந்தைகளான விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக வாழும் இந்தத் தரணி போற்றும் தஞ்சைக்குக்

கைநிறையத் திட்டங்களோடு வந்திருக்கிறோம். “மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா எதற்கு?” என்று கேட்கும் அரசியல் வித்தகர்களுக்கு, இந்தத் திட்டங்களின் மூலம் பதில் கூறுகின்றோம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் பேராவூரணி, அதிராமபட்டினம், பெருமகளூர் ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் 9 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆயிரத்து 153 ஊரகக் குடியிருப்புகள், கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, 495 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டம் உட்பட, 632 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 105 பணிகளை, இன்று நான் தொடக்கி வைத்துள்ளேன்.

பொதுப்பணித் துறை சார்பில் திருப்பனந்தாள் ஒன்றியம், மண்ணியாறு ஆறு நெடுகை 73/150 கி.மீ. முதல் – 121/500 கி.மீ. வரை, 46 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புனரமைத்து நவீனப்படுத்தும் பணி உட்பட 186 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 43 பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன். பல்வேறு துறைகளின் சார்பில் 40, ஆயிரத்து 101 பயனாளிகளுக்கு 271 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும் இந்த அரசு பொறுப்பேற்றது முதல், இதுவரை, 14 ஆயிரத்து 508 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 35 ஆயிரத்து 886 பணிகள் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன. சுமார் 4 ஆயிரத்து 884 கோடி மதிப்பீட்டில், 7,130 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆக மொத்தம், சுமார் 19 ஆயிரத்து 393 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 43 ஆயிரம் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளில் மட்டும், தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்தஅரசு செய்த சாதனைகளில் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சிகள், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி அமைந்த பிறகு, “மக்களுக்கு என்ன திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்?” என்று கேள்வி கேட்கிறார்கள். அவர்களது கேள்விக்கெல்லாம் பதில் கூறுகின்ற விதமாக சில திட்டங்களைக் கூற விரும்புகிறேன். இந்தத் தஞ்சை மாவட்டத்தில் மட்டும், கடந்த ஆறு ஆண்டுகளில் அம்மாவினுடைய அரசால் கொண்டுவரப்பட்ட சில திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய சுமார் 233 கோடி ரூபாய் விவசாயக் கடன், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 51 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு, வறட்சி நிவாரணமாக, சுமார் 108 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், சுமார் 93 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ், சுமார் 11 ஆயிரத்து 780 பெண்களுக்கு, 47 கோடி ரூபாய் நிதி உதவியும், 49 கிலோ தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், சுமார் 324 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 13 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

விலையில்லா மடிக்கணிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்குச் சுமார் 249 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 2 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின் கீழ், 1,202 ஏரிகள், குளங்கள் மற்றும் வாய்கால்களிலிருந்து, சுமார் 41 இலட்சம் கன மீட்டர் வண்டல் மண் மற்றும் சவடு மண், சுமார் 15 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

குடிமராமத்துப் பணிகள் திட்டத்தின்கீழ், சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 119 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பாசன வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. 29 ஆயிரத்து 359 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 732 கோடியே 94 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு சுமார் 240 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம், சுமார் 96 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், 233 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில், 13 ஆயிரத்து 842 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

‘பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ்’ 337 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பில், 25 ஆயிரத்து 30 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. ‘ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில்’, ஊரக வளர்ச்சித் துறையின்கீழ், சுமார் 2 லட்சத்து 22 ஆயிரம் பணிகள் எடுக்கப்பட்டு, சுமார் 1,700 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. உயர்கல்வித் துறையின் சார்பில் பாபநாசம் வட்டம் ரகுநாதபுரம் கிராமத்தில், அரசு பல்வகைத் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. பூதலூர் வட்டம் செங்கிபட்டி கிராமத்தில், புதிய அரசினர் பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 68 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில், 14 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

‘நெடுஞ்சாலைத் துறை’, நபார்டு கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ், 52 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில், 19 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் நகருக்கு, 14.26 கி.மீ. நீளத்திற்கு, புறவழிச் சாலை 94 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின்மூலம், 150 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணித் தொகுதிக்குட்பட்ட மல்லிப்பட்டினம் மீனவ கிராமத்தில், கடற்கரைப் பேரிடர் குறைப்புத் திட்டத்தின் கீழ், 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், துறைமுக மேம்பாட்டுப் பணி தொடங்கப்பட்டு, தற்போது அது நடைபெற்று வருகிறது. இப்பணியினை, எதிர்வரும் 2018 அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க நடிவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இரவு பகல் பாராமல் நாங்கள் தினம் தினம் மக்கள் பணி ஆற்றி வருவதைப் பலர் விமர்சிப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் முதல் தொண்டர்கள் வரை, எந்த வேறுபாடுகளும் இல்லாமல், நாங்கள் உழைப்பது அவர்களுடைய கண்களை உறுத்துகிறது. எங்கள் ஒற்றுமையைக் குலைப்பதற்கு, எப்படியெல்லாமோ சதித் திட்டங்கள் போடுகிறார்கள்! அம்மாவின் ஆட்சியை அழித்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறார்கள்! அது ஒருக் காலமும் நடக்காது! மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடவுளாக இருந்து நம்மை வழிநடத்துகிறார்கள். ஆதலால், இனி நமக்கு அனைத்துமே வெற்றிதான்! எதிர்ப்பவர்கள் அனைவருக்கும் தோல்வியே மிஞ்சும்!

ஒருவர் தாங்கள் ஏமாற்றுவது மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் செய்யும் தவறுகள் எப்படியாவது வெளிவந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாது. இதனைக் கூறுகிறபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நகரத்தின் போக்குவரத்து நெரிசல் மிகுந்த மையச் சாலையில், ஓர் இளைஞன் முட்டைகள் அடங்கிய தட்டுடன், தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தான். திடீரென்று ஏற்பட்ட தடுமாற்றத்தில், அவன் வண்டியுடன் கீழே சாய்ந்தான். வண்டி கீழே விழுந்த வேகத்தில், அவன் கொண்டு சென்ற அனைத்து முட்டைகளும் உடைந்து சிதறின. அவன் செய்வதறியாது கவலையுடன் அழத் தொடங்கினான்.

“எனது சம்பளமே மிகவும் குறைவு, அதையும் எனது முதலாளி உடைந்து போன முட்டைகளுக்காக பிடித்துக் கொள்வாரே” என்று புலம்பினான். எப்போதும் போல, வேடிக்கைப் பார்க்கவென்றே கூடும் கூட்டம் ஒன்று கூடியது. அவர்கள் அந்த இளைஞனின் புலம்பலைக் கேட்டு, தங்களுக்குள் பலவாறாக பேசிக் கொண்டனர். அதில் ஒருவன், “பாவம் இந்த இளைஞன், வீட்டு வாடகைக்கு என்ன செய்வானோ?” என்றும், மற்றொருவன் “அடுத்த மாத சாப்பாட்டிற்கு என்ன செய்வானோ?” என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அப்பொழுது வயது முதிர்ந்த ஒருவர் அங்கு வந்தார். இருசக்கர வாகனம் கீழே விழுந்து கிடப்பதையும், அருகில் ஒரு இளைஞன் புலம்பிக் கொண்டிருப்பதையும், அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தங்களுக்குள் பலவாறாக பேசிக் கொண்டிருப்பதையும் கண்டார். தமக்குள் ஒரு யோசனை செய்தார். உடனே கீழே விழுந்து கிடந்த அந்த இருசக்கர வாகனத்தை எடுத்து சாலையின் ஓரத்தில் நிறுத்தினார். பிறகு உடைந்த முட்டைகளைஅப்புறப்படுத்தினார். பிறகு அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து, “பாவம் இந்த இளைஞன், கடும் வெயிலில் முட்டைகளை எடுத்து வரும்போது எந்தப் பாவியோ இவன் வந்த வண்டியை தள்ளி, அனைத்து முட்டைகளும் உடையும்படிச் செய்துவிட்டான். இவனது

முதலாளியோ மிகவும் பொல்லாதவன். உடைந்து போன முட்டைகளுக்காக இவனது சம்பளத்தை மட்டுமல்ல, இருசக்கர வாகனத்தையும் உடைத்து விட்டாயே என்று அதற்கும் தண்டனை கொடுப்பான். எனவே நாம் அனைவரும் நம்மால் முடிந்த பண உதவி செய்து, இந்த இளைஞனிடம் கொடுத்தால், உடைந்த முட்டைகளுக்குப் பதில் நாம் வசூல் செய்து கொடுத்த பணத்தை முதலாளியுடம் கொடுத்து தண்டனையிலிருந்து தப்பித்து விடுவான்'' என்று கூறியபடி, அனைவரிடமும் பணம் வசூலிக்கத் தொடங்கினான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களும், சே, இந்த பெரியவர் எவ்வளவு நல்லவர் – தாமாக வந்து, இளைஞனின் கஷ்டத்தை நிவர்த்தி செய்கிறாரே என்று, பெரியவரிடம் தங்களால் முடிந்த அளவு பணத்தைத் கொடுத்தனர். பெரியவர், தாம் வசூல் செய்த பணத்தை அந்த இளைஞரிடம் அப்படியே கொடுத்து, ''நீ இப்பணம் முழுவதையும் உன் முதலாளியிடம் கொடுத்து, தண்டனையிலிருந்து தப்பிவிடு'' என்று சொல்லி அனைவருக்கும் நன்றி சொல்லி கிளம்பினார். வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கும்பலில் இருந்த ஒருவனுக்கு மட்டும் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. அந்த இளைஞன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் எந்த வாகனமும் மோதவில்லை, அவனே தடுமாறித்தானே விழுந்தான். அவன் விழுந்த போது அந்த முதியவரும் விபத்து நடந்த பகுதியிலேயே இல்லை. ஆனால், விபத்தை நேரில் கண்டது போல் வேறு வாகனம் மோதி அவன் விழுந்து விட்டானே என்று எப்படிக் கூறினார், என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. எனவே கீழே விழுந்த இளைஞன் எங்கே செல்கிறான், அவன் என்ன செய்கிறான் என்பதைக் கண்டறிய வேண்டும் என்று தனக்குள் பேசிக்கொண்டே, கீழே விழுந்த இளைஞனைப் பின்தொடர்ந்தான். கீழே விழுந்த இளைஞன் இரண்டு சாலைகள் தள்ளி, ஒரு முட்டைக் கடைக்குச் சென்றான். அங்கிருந்த பெரியவரிடம், வேடிக்கை பார்த்தவர்கள் தந்த பணத்தை அப்படியே கொடுத்தான். பின் தொடர்ந்து சென்றவன் அருகில் சென்று பார்த்தபொழுது தான் தெரிந்தது.

அந்த கடை முதலாளி வேறு யாரும் அல்ல – வேடிக்கை பார்த்தவர்களிடம் பணம் வசூல் செய்து கொடுத்த பெரியவர்தான் என்று! கடையினுள் சென்று, அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிய எண்ணி, முட்டை வாங்குபவன் போல், அந்த கடைக்குள் சென்றான். அப்போது அந்த பெரியவன், இளைஞனிடம், ''மகனே, பார்த்தாயா, கெட்டுப்போன முட்டைகளை நான் சொன்னபடி நீ எடுத்துச் சென்று கீழே விழுந்தாய். நானும் ஏதேச்சையாக அங்கே வந்தது போல் வந்து, யாரோ ஒரு ஏழை வேலைக்காரன், பாவம் கீழே விழுந்து புலம்பிக் கொண்டிருக்கின்றான் என்று கதையை மாற்றி, நமக்கு லாபகரமாக மாற்றிவிட்டேன். வேடிக்கை பார்த்தவர்களிடமே, பணத்தை வசூல் செய்து 1,500 ரூபாய் வசூலித்து விட்டேனே'' என்று கூறினார். முட்டை வாங்குவது போல் அவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த நமது ஆள், தந்தை மற்றும் மகனின் சாமர்த்தியத்தைப் பார்த்து மயங்கி விழுந்தான். இந்த கதையில் யார் மகன், யார் தந்தை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில், தஞ்சை மாவட்டத்தில், பல்வேறு திட்டப்பணிகளை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலமாக, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, இந்த ஆண்டு சுமார் 103 கோடி ரூபாய் செலவில், 26 பணிகள் மேற்கொண்டுள்ளது. இந்தப் பணிகளை எடுத்துக் கொள்வதன் மூலமாக, நீர்வரத்துக் கால்வாய்கள் இன்றைக்குச் சரி செய்யப்படுகின்றன. ஏரி, குள மதில்கள் சரி செய்யப்படுகின்றன. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலமாக, நீர் ஆதாரத்தைப் பெருக்கக்கூடிய திட்டம், இன்றைக்கு இந்த மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்! இதன் மூலமாக, நீர் ஆதாரம் வெகுவாக சேமிக்கப்படுகிறது என்பதனையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதேபோன்று, கல்லணைக் கால்வாய் புதுப்பித்தல் மற்றும் விரிவுபடுத்தல் என்னும் அந்தத் திட்டம் 2,298 கோடி ரூபாய் செலவில், விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் பாசனப் பரப்பு, தஞ்சை மாவட்டம் மற்றும் அருகாமையில் உள்ள புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும், 2 இலட்சத்து 27 ஆயிரம் ஏக்கர் பயனடையும் என்பதனையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏன் இதைச் சொல்கிறேனென்று சொன்னல், இன்றைக்கு எதிர்க்கட்சியினரெல்லாம், "விவசாயிகளுக்கு, என்ன சாதனை இந்த ஆட்சியிலே கிடைத்தது?" என்று ஒரு கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல, அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு எண்ணற்ற திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. எனக்கு முன்னாலே உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. துரைக்கண்ணு அவர்கள் வண்டல் மண்ணைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் என்று சொன்னால் நீர் ஆதாரம் வேண்டும். உடலுக்கு உயிர் எப்படி முக்கியமோ, அதைப்போல விவசாயிகளுக்கு உயிராக இருப்பது நீர்! அந்த நீரை அதிகப்படுத்த வேண்டும்! அதற்காக, கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலமாக தூர்வாரப்படாமல் இருந்த ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை, விவசாயிகள் துணைகொண்டே, அந்த வண்டல்மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு எருவாகக் கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அறிவிப்பை அறிவித்து, தமிழகத்தில் மட்டும் 1,519 ஏரிகள், 100 கோடி ரூபாய் திட்டத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் வாயிலாக குளங்கள், ஏரிகள் ஆகியவை ஆழப்படுகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான வண்டல்மண் இயற்கை உரமாக கிடைக்கின்றது. இதனால், பருவமழையில் பெய்கின்ற நீர் அதிக அளவிலே சேமித்து வைக்கப்படுகின்றது. ஆகவே, அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு, விவசாயிகளுக்குத் தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகிறேன். அதேபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை. அதேபோல பயிர் இழப்பு, இன்றைக்கு வறட்சிக் காலங்களிலே விவசாயிகளால் பயிரிடப்பட்ட அந்த பயிர்கள் காய்ந்து அவர்களுடைய வருமானம் குறைகின்றபொழுது, காப்பீடுத் திட்டத்தின் மூலமாக, அவர்களுக்கு நம்முடைய அரசு

உதவித் தொகையை பெற்றுத் தந்திருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவினுடைய அரசு, விவசாயிகளுக்காகப் பல்வேறு திட்டங்களை அளித்துக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, 14 ஆண்டுக்காலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்தது. இந்த தஞ்சைக்கு என்று எதனைச் செய்தார்கள் ? அவர்களது ஆட்சியிலே நினைத்திருந்தால், நிச்சயம் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கலாம், அந்த வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை, அவர்கள் காலத்திலே அதனைச் செய்யவில்லை. தனக்கு என்ன பதவி கிடைக்கிறது, என்ன அதிகாரம் கிடைக்கிறது என்ற நிலையிலேதான் இருந்தார்களே தவிர, நாட்டுமக்களைச் சிந்திக்கவில்லை. நம்முடைய ஜீவநதியாக இருப்பது காவிரி நதி. அப்படிப்பட்ட காவிரி நதிக்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்ட போராட்டம் நடத்தி, சட்டத்தின் வாயிலாக, நமக்கு உரிமையைப் பெற்றுத் தந்தார்கள். அதற்காக தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடிமக்கள், அவருக்கு பாராட்டு விழா எடுத்தார்கள். பாராட்டு விழாவிலே அம்மா பேசுகின்றபொழுது, நானும் விவசாயி என்று குறிப்பிட்டார், அந்தப் பெருமை தஞ்சை மாவட்டத்திற்குக் கிடைத்திருக்கின்றது. நானும் ஒரு விவசாயி, மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம் அவர்களும் ஒரு விவசாயி, உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. துரைக்கண்ணு அவர்களும் ஒரு விவசாயி, அது மட்டுமல்ல, புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுது, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்வருக்கு வேளாண்மைத்துறை அமைச்சராக திரு. வைத்திலிங்கம் அவர்களை நியமித்தார், அதற்குப் பிறகு திரு. துரைக்கண்ணு அவர்களையும் வேளாண்மைத் துறை அமைச்சராக நியமித்தார். இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக, நன்மைகள் பல இந்த விவசாயப் பெருங்குடிமக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக, அந்தத் துறையை இந்த இருவருக்கும் வழங்கி ஒரு வளமான மாவட்டமாக உருவாக்குவதற்கு அம்மா நடவடிக்கை எடுத்தார் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே திரு. வைத்திலிங்கம் அவர்கள் வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்தார். புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக்காலத்திலே, இன்றைக்கு இந்தியாவிலேயே உணவுதானிய உற்பத்தியில் தமிழகம் ஐந்தாண்டுகளில், நான்காண்டுகளாக தொடர்ந்து முதல் பரிசு பெற்ற மாநிலம் தமிழ்நாடு. அதற்காக அம்மாவினுடைய அரசுக்கு மத்திய அரசு, 'க்ரிஷ் கர்மான்' என்ற விருதை அளித்து, தமிழ்நாடு உணவுதானிய உற்பத்தியில், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கியது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு அளித்த பல்வேறு நலத்திட்ட உதவிகளின் காரணமாக விவசாயிகளுக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தி, தமிழகத்திலே வறட்சி நிலவினாலும் கூட, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவு இன்றைக்கு

இந்தியாவிலேயே நான்கு ஆண்டுகள் உணவுதானிய உற்பத்தியிலேயே அதிக உற்பத்தி செய்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்ற அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு உயர்கல்வித்துறையில், ஐந்தாண்டுகளில், அம்மாவினுடைய அரசு, 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்துள்ளது. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், கல்வி அறிவு தேவை. அப்படிப்பட்ட கல்வி அறிவை, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, குடிசையிலே வாழ்கின்ற தொழிலாளியினுடைய மகனும் பெறவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திலே, 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்தவர்கள் தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! அதே வழியில் வந்த, இந்த அம்மாவின் அரசு, 11 அரசு மற்றும் கலைக்கல்லூரிகளைக் கொடுத்து, 76 அரசு கலைக்கல்லூரிகளை, தமிழகத்திலே நிறுவி ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மக்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. ஆகவே தான், 2016ல் அம்மாவினுடைய ஆட்சி அமைகின்றபொழுது, இன்றைக்கு 21 சதவீதமாக இருந்த உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை, மாண்புமிகு அம்மா எடுத்த புரட்சியின் காரணமாக, 2016 ஆம் ஆண்டில், உயர்ந்தது, அதனால் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 44.32 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்துள்ள மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அம்மாவின் அரசு நிலைநாட்டியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கிராமத்திலிருந்து நகரம் வரை சாதாரண ஏழை, எளிய மக்கள் கல்வி அறிவு பெறவேண்டும் என்பதற்காக, 227 புதிய தொடக்கப்பள்ளிகள், 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. எந்த ஆட்சியில் இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்? ஒரு சாதாரண ஏழை குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவி கூட அந்தப் பகுதியிலே பள்ளி இருந்தால் கல்வி கற்க முடியும். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு திட்டத்தை தீட்டி ஏழை, எளிய மக்கள், குறைந்த கட்டணத்திலே அந்தப் பகுதியிலே கல்வி கற்க வேண்டும் என்ற அடிப்படையிலே இவ்வளவு பள்ளிகளைத் தரம் உயர்த்தி, புதிய பள்ளிகளைத் தொடங்கி சரித்திர சாதனை படைத்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக, தொடக்க நிலைக் கல்வி பயிலச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலை கல்வி பயிலச் சேர்ந்த மாணவர்களுடைய சேர்க்கை 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மருத்துவத் துறையிலே மிகப்பெரிய சாதனையை, நாம் படைத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலேயே, உடல் உறுப்பு மாற்று அறுவைச்

சிகிச்சையில், தமிழ்நாடுதான், முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது என்று, நேற்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் மத்திய அமைச்சரிடமிருந்து விருதைப் பெற்றிருக்கின்றார். எல்லா வகையிலும், சுகாதாரத் துறை தமிழகத்திலே சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆறாண்டுகளிலே, மருத்துவம் உட்பட மருத்துவம் சாராத் தொழில்களில், 1 இலட்சத்து 20 ஆயிரத்து 506 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை, இந்தியாவின் மருத்துவ நகரமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழகத்திலே அதிக அளவிலான மருத்துவ சாதனையைச் செய்ததன் விளைவாக, இன்றைக்கு நோயற்ற மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதனைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகம், தொழில் வளர்ச்சி கண்ட மாநிலமாக திகழ்வதற்காக அம்மா அவர்கள் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை, சென்னையிலே நடத்தி, கிட்டத்தட்ட 2 இலட்சத்து 42 ஆயிரத்து 170 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு கிடைத்திட, தொழில் முதலீட்டாளர்களை ஈர்த்திருக்கின்றார்கள், 99 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கையெழுத்திடப்பட்டிருக்கின்றது. இவற்றில் 62,732 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 61 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். 2018ஆம் ஆண்டில், இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டினை நடத்திட, அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தொழிற்சாலை மிகுந்த நகரமாக உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலமாகப் படித்து பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகி, பொருளாதாரம் மேம்பாடு அடையும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம் மணல் பிரச்சினை, இன்றைக்கு நான் வருகின்றபொழுது, தொலைக்காட்சியில், திரு.துரைமுருகன் பேட்டி பார்த்தேன், இந்த ஆட்சி, 24 மணிநேரமும் மணற்கொள்ளையில் ஈடுபடுவதாகச் சொன்னார், உண்மையில், அப்படி எதுவும் நடைபெறவில்லை. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நடந்தது. இவர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது நடைபெற்றது வேண்டுமானால் உண்மை. ஆனால், அம்மாவினுடைய அரசில் அப்படி நடைபெறவில்லை. இன்றைக்கு மணல் குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அரசே ஏற்று நடத்துவதாக அறிவித்து, அதற்கான ஏற்பாடுகளும் செய்வதாக அறிவித்து, நடத்திக் கொண்டிருந்தோம். ஒரு சிலர் நீதிமன்றத்தை நாடியதின் விளைவாக அது தடைபட்டது. அதனால் விலை உயர்ந்தது. இன்றைக்குக்கூட, மதுரை உயர்நீதிமன்றக் கிளை ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், ஏழை மக்களுக்கும், பொதுமக்களுக்கும், குறைந்த விலையில் கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் மணலை விற்பனையை அரசே ஏற்று நடத்தியது. அதுவும், மூத்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசித்து, இதை எப்படி நிறைவேற்ற

வேண்டுமென்று, ஒரு சில திட்டங்களின் மூலமாக நடைமுறைப்படுத்தினோம். ஆன்–லைன் மூலமாக மணல் விற்பனையைத் தொடங்கினோம். எந்த முறைகேடுக்கும் இடமளிக்காமல், 'ஆன்–லைன்' மூலம் மணல் விற்பனையைச் செய்தோம். மணல் அள்ளுகின்ற குவாரியிலே, சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. யாரும் தவறு செய்ய முடியாது. மணல் அள்ளுகின்ற லாரி, சிசிடிவி கேமரா மூலம் பதிவு செய்யப்படும். அதேபோல ஆன்–லைன் புக்கிங் செய்தால்தான் மணல் அள்ளமுடியும். ஆன்–லைனிலேயே, பணம் கட்டப்படும். இப்படிப்பட்ட முறைகளையெல்லாம் கையாண்டோம். இப்படிப்பட்ட முறைகளையெல்லாம் கையாளும்போது, தவறே ஏற்படாமல், உண்மையாக மணல் விற்பனையை அரசே ஏற்று நடத்தும் என்று அறிவித்து அதன்படி நாங்கள் செய்து வந்தோம். ஆனால், நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி செயல்படுகின்ற காரணத்தினால்தான் இன்றையதினம் மணல் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்பதனை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதில் எந்தத் தவறும் ஏற்படவில்லை, ஏற்பட நாங்கள் ஒருபோதும் துணைபோகவில்லை என்பதைத் திட்டவட்டமாக கூறிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இன்றையதினம், மு.க.ஸ்டாலின் எப்பொழுது பார்த்தாலும் நம்முடைய ஆட்சியைக் குறை சொல்வது அல்லது கட்சியைக் குறை சொல்வது இதைத்தான் வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றார். அவர் எவ்வளவு குறை சொன்னாலும் அதில் எள் முனை அளவுகூட உண்மையல்ல! அது நாட்டு மக்களுக்கும் தெரியும், கழகத்தைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் தெரியும். எதையெதையோ கதை கட்டிவிடுகின்றார், எவ்வளவோ பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகின்றார். அத்தனைக்கும் நாம் முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டிருக்கின்றோம். ஏனென்று சொன்னால், உழைப்பாளிகள் நிறைந்த இயக்கம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம்! நீங்கள் எவ்வளவு பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும் மக்கள் நம்பப்போவதில்லை. உழைப்பாளிகள் நிறைந்த தொண்டர்கள், பொதுமக்கள் ஆதரவு இருக்கின்றவரை இந்த இயக்கத்திற்கு எந்தவிதத் துன்பமும் நேரிடாது! அதுமட்டுமல்ல, இருபெரும் தலைவர்களும், எங்கள் பக்கம் தெய்வமாக இருந்து இந்த ஆட்சியையும், கட்சியையும் காத்து வருகின்றார்கள் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம், உங்களுடைய மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு.இரா. துரைக்கண்ணு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.ஆர். வைத்திலிங்கம் அவர்களும், அவரோடு சேர்ந்து, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், இந்தத் தஞ்சை மாவட்டத்திற்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த கோரிக்கை மனுவின் அடிப்படையில், ஒருசிலவற்றை இங்கே அறிவிக்க விரும்புகின்றேன். (துஞ்சாவூர் மாவட்டத்திற்கான அறிவிப்புகள்)

ஆகவே, இவ்வளவு பணிகளையும் அம்மாவினுடைய அரசு இந்த மாவட்டத்திற்குச் செய்யத் திட்டமிட்டுள்ளது என்பதனைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கின்றேன்.அதோடு மட்டுமல்ல, இங்கே உங்களுடைய மாவட்ட அமைச்சர், மரியாதைக்குரிய திரு.இரா.துரைக்கண்ணு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்களும் சொன்னார்கள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழா எடுக்கின்றபொழுது மழை கொட்டோ கொட்டென்று கொட்டுகின்றது. அவ்வளவு மழை பொழிந்தாலும், இங்கேயிருக்கின்ற தஞ்சை மாவட்ட மக்கள், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கோட்டையாக விளங்குகின்ற மாவட்டம் தஞ்சாவூர் மாவட்டம். வானமே இடிந்து விழுந்தாலும், விடாமல் மழை பொழிந்தாலும், மழையிலே நனைந்து, இங்கே அமர்ந்து, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கண்டு, களித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், நன்றியை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விழாவினைச் சீரும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக விளங்கிய மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அன்பைப் பெற்றவரும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மரியாதைக்குரிய கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்களுக்கும், அவரோடு துணை நின்று, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய எண்ணங்களைப் பிரதிபலித்துக் கொண்டு, அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே நல்ல பல கருத்துக்களைப் பாடலாகப் பாடி, அம்மா அவர்களின் மனதிலே இடம்பெற்று, வேளாண்மைத்துறை அமைச்சராக இடம்பெற்றுள்ள திரு.இரா.துரைக்கண்ணு அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றியுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், கழகத்தின் ஒட்டுமொத்தப் பணியாளர்களும் இணைந்து பணியாற்றி, தமிழகத்திலேயே எங்கும் இல்லாத அளவிற்கு மழை கொட்டினாலும், அதையும் பொருட்படுத்தாமல், மக்கள் வெள்ளம் அலைமோதி, இங்கே நூற்றாண்டு விழா நிகழ்ச்சி, சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்கு உறுதுணையாக விளங்கியுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவர்களுக்கும் மற்றுமுள்ள அனைவருக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும், வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித் தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி!

வணக்கம்!

அறிவிப்புகள்

நெல் ரகத்திற்குப் பெயரிடுதல்

* தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால், இந்த ஆண்டு புதியதாக வெளியிடப்பட்ட நெல் ரகத்திற்கு "எம்.ஜி.ஆர்100" எனச்சற்று முன்னர் பெயரிட்டு, அந்த ரக நெல்லை பயனாளிக்கும் வழங்கினேன்.

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

* கும்பகோணம் நகரத்தில், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் படித்த யானை அடி நகராட்சி தொடக்கப் பள்ளியானது, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும். மேலும் அப்பள்ளிக்கு, 'பாரத ரத்னா' புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவுப் பள்ளி என்றும் பெயர் சூட்டப்படும். அப்பள்ளியில் சத்துணவு வழங்கப்படவில்லை என்பதை அறிந்தவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு, சத்துணவு திட்டத்தின் பிதாமகன் புரட்சித்தலைவர் அவர்கள் படித்த பள்ளியில், உடனடியாக சத்துணவு மையம் தொடங்க ஆணையிடப்பட்டது. தற்பொழுது அந்தப் பள்ளியில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. அங்கேயே சத்துணவு சமைக்கத் தனி சமையலறை கட்டப்படும்.

புதிய கால்நடை கிளை நிலையம்

* திருப்பனந்தாள் ஒன்றியத்தில் திட்டச்சேரி, திருவோணம் ஒன்றியத்தில் கிழமங்கலம் ஆகிய கிராமங்களில் இரண்டு புதிய கால்நடை, கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

* கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில், விவசாயிகளின் நலன் கருதி, 2.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும், பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மற்றும் வல்லம் ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகங்களில், தலா 1.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுமாக ஐந்து கிடங்குகள் நபார்டு வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்படும்.

* பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், மின்னணு ஏலமுறை மென்பொருள் வசதி, மின்னணு ஏலக்கொட்டகை, பொதுவான வகைப்படுத்தும் கருவிகள் மற்றும் எடைமேடை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். (1.02 கோடி ரூபாய்)

மின் வசதிகள்

* தஞ்சாவூர் மாவட்டம், பந்தநல்லூரில் மின் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டு, பந்தநல்லூரில் புதிய துணை மின் நிலையம் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

* மின் நகரில் புதிய 110/11 கி.வோ. துணை மின்நிலையம் 5.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

* திருமலைச் சமுத்திரத்தில், புதிய 110/33–11 கி.வோ. துணை மின்நிலையம், 10.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

* 110/11 கி.வோ. பூண்டி துணை மின் நிலையம், 2.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 110/33–11 கி.வோ. துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படும்.

* 110/11 கி.வோ. ஊரணிபுரம் துணை மின் நிலையம், 2.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 110/33–11 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்.

* தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தில் புதியதாக, கணினி முறையில் மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse Off Call centre) 44.95 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

* பட்டுக்கோட்டைக்குட்பட்ட பேராவூரணி உப கோட்ட அலுவலகம், 35 இலட்சம் ரூபாய் செலவில் பேராவூரணிக் கோட்ட அலுவலகமாக மாற்றி அமைக்கப்படும்.

ரெகுலேட்டர் அமைத்தல்

* கும்பகோணம் வட்டம், கும்பகோணம் நகரத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே, மைல் 57/7–இல், நடைபாலத்துடன் கூடிய ரெகுலேட்டர் அமைப்பதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தளமட்டச் சுவர்கள் அமைத்தல்

* கும்பகோணம் வட்டம், சுந்தரப் பெருமாள் கோயில் கிராமத்தில், அரசலாற்றின் குறுக்கே, மைல் 52/3–4இல் தளமட்டச் சுவர் அமைக்கப்படும். (5.30 கோடி ரூபாய்)

* திருவிடைமருதூர் வட்டம், பவுண்டரிகாபுரம் கிராமத்தில், மாங்குடி வாய்க்காலுக்கு நீர் வழங்கும் பொருட்டு, கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே மைல் 63/1–2இல், தளமட்டச் சுவர் அமைக்கப்படும். (4 கோடி ரூபாய்)

தடுப்பணைகள் அமைத்தல்

- ஒரத்தநாடு வட்டம், தாலயமங்களம் கிராமத்தில், தாலயமங்களம் ஏரி வடிகாலின் குறுக்கே, எல்.எஸ்.1.60 கி.மீ.இல், தடுப்பணை அமைக்கப்படும். (50 இலட்சம் ரூபாய்)

- ஒரத்தநாடு வட்டம், வண்ணான்கொல்லைபட்டி கிராமத்தில், பனங்குளம் உபரி நீர்ப்போக்கின் குறுக்கே எல்.எஸ்.2.00 கி.மீ.இல் தடுப்பணை அமைக்கப்படும். (70 இலட்சம் ரூபாய்)

- ஒரத்தநாடு வட்டம், தோப்பு விடுதி கிராமத்தில் வண்ணான்வாரியின்குறுக்கே எல்.எஸ்.0.100 கி.மீ.இல் தடுப்பணை அமைக்கப்படும். (60 இலட்சம் ரூபாய்)

- ஒரத்தநாடு வட்டம், அருமலை கிராமத்தில் அருமலை வடிகாலின் குறுக்கே, எல்.எஸ்.1.250 கி.மீ.இல் தடுப்பணை அமைக்கப்படும். (50 இலட்சம் ரூபாய்)

- ஒரத்தநாடு வட்டம், வெள்ளூர் மற்றும் தொண்டாரம்பட்டு கிராமங்களில், பட்டுவானாச்சி வடிகாலின் குறுக்கே, முறையே எல்.எஸ்.6.50 கி.மீ மற்றும் எல்.எஸ்.11.00 கி.மீ.இல் தடுப்பணை அமைக்கப்படும். (95 இலட்சம் ரூபாய்)

மருத்துவ வசதிகள்

- JICA திட்டத்தின்கீழ், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3.28 கோடி ரூபாய் மதிப்பில், அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

- மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பில், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (HUB), அதனைச் சார்ந்த கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருவையாறு மருத்துவமனைகளில் (Spoke) மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.

- தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 16 கோடி ரூபாய் மதிப்பில் புற்று நோய்க்கான கதிரியக்க சிகிச்சைக் கருவி அமைக்கப்படும்.

- தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 12 கோடி ரூபாய் மதிப்பில் சீமாங்க் மையம் ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தப்படும்.

- அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனையில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டணமில்லாக் கருத்தரிப்பு மையம் அமைக்கப்படும்.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதியதாக மருந்துக் கிடங்கு அமைக்கப்படும்.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் பணியாற்றும் 309 கிராமப்புற சுகாதாரச் செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட 30.90 இலட்சம் ரூபாய் மதிப்பில் கையடக்க கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

✶ சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் 31.35 இலட்சம் ரூபாய் மதிப்பில் விரிவான ஆரம்ப நல்வாழ்வுச் சேவைகள் வழங்கப்படும்.

✶ பட்டுக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு அரசு மருத்துவமனைகளில் 4.20 கோடி ரூபாய் மதிப்பில், முதல்நிலைப் பரிந்துரை மையம் அமைக்கப்படும்.

✶ பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில், Diplomate of National Board (DNB) மருத்துவ பட்ட மேற்படிப்புடன், 1.49 கோடி ரூபாய் மதிப்பில் சீமாங் அறுவை அரங்கம் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பிரிவு ஏற்படுத்தப்படும்.

✶ கும்பகோணம் அரசு மருத்துவமனையில், 1.25 கோடி ரூபாய் மதிப்பில் ‘டயாலிசிஸ்’, ‘எண்டோஸ்கோப்’ உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள், பயன்படுத்தப்பட்ட மருத்துவ உபகரணங்களுக்கான தொற்று;க கிருமி நீக்குப் பிரிவு, புற்றுநோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

✶ வல்லம் அரசு மருத்துவமனையில், 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

புறவழிச்சாலை

✶ கும்பகோணம் நகருக்கான மூன்றாம் கட்ட புறவழிச்சாலை, 9.42.கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படும். இதற்கான நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. (28.00 கோடி ரூபாய்)

பாலங்கள்

✶ சின்னப்புலிக்காடு–ராகவாம்பாள்புரம் சாலையில், கி.மீ. 0/2–ல் பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

✶ சாலியமங்கலம் – சடையர்கோயில் சாலையில், கி.மீ. 7/4–ல் சிறு பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

✶ ஊரணிபுரம் – கரியவிடுதி சாலையில், கி.மீ. 0/8–ல் பாலம் கட்டப்படும். (1.60 கோடி ரூபாய்)

✶ இடையாத்தி கிராமத்தில், வெள்ளாளர் தெரு மற்றும் ஆதி திராவிடர் தெருவிற்கிடையே, G.A வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டப்படும். (1.75 கோடி ரூபாய்)

✶ திருநீலக்குடி – கடலங்குடி சாலையில், கி.மீ. 0/6–ல் பாலம் கட்டப்படும். (1.98 கோடி ரூபாய்)

✶ அய்யம்பேட்டை – கணபதி அக்ரஹாரம் சாலை கி.மீ.1/10ல் குறுக்கிடும் காவேரி ஆற்றின் குறுக்கே, கணபதி அக்ரஹாரத்தில் பாலம் கட்டப்படும். (10.80 கோடி ரூபாய்)

* திருவிசைநல்லூர் – திருபுவனம் சாலையில், கி.மீ.0/2ல் பாலம் கட்டப்படும். (2.60 கோடி ரூபாய்)
* புதுவிடுதி – வெட்டுவாக்கோட்டை – கறம்பக்குடி சாலையில், கி.மீ.3/6ல் பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)
* ரெட்டிப்பாளையம் கிராமத்தில் கொற்கை பஞ்சாயத்துக்கும் சேசம்பாடி பஞ்சாயத்துக்கும் இடையில், கி.மீ.0/4ல் பாலம் கட்டப்படும். (1.98 கோடி ரூபாய்)
* நெய்வாசல் – அரசப்பட்டு – ஊசிமதகு சாலையில், கி.மீ.4/6ல் பாலம் கட்டப்படும். (1.97 கோடி ரூபாய்)
* ஆலத்தூர் – புலவஞ்சி சாலையில், கி.மீ.1/2ல் பாலம் கட்டப்படும். (1.50 கோடி ரூபாய்)

திட்ட அறிக்கை

* திருவையாறு நகருக்கு புறவழிச்சாலை அமைக்க, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
* தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை – அறந்தாங்கி – சாயல்குடி மாநில நெடுஞ்சாலை எண்.29யினை, அதாவது தஞ்சாவூர் மாவட்ட சாலை பகுதி பட்டுக்கோட்டை முதல் ஆவணம் கைகாட்டிவரை, கிமீ 0/0–69/2 வரை 69.20 கி.மீ நீளம் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கு 3.2 கோடி ரூபாய் செலவில், தளஆய்வு மற்றும் சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
* அய்யம்பேட்டை – கணபதிஅக்ரஹாரம் சாலையில், கிமீ. 0/4 குறுக்கிடும் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே, அய்யம்பேட்டையில் உயர்மட்ட பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.
* திருக்காட்டுப்பள்ளி – செங்கிபட்டி – பட்டுக்கோட்டை சாலை (SH –99) கி.மீ. 5/10–6/2ல் வெண்ணாறு ஆற்றின் குறுக்கே, உயர்மட்ட பாலம் கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

தென்னிந்தியாவிலேயே "வெரைட்டி" என்னும் முதல் திரையரங்கம் கட்டப்பட்ட கோயம்புத்தூரில் திரைத்துறையில் முதன் முதல் அரசின் நாயகன் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

பேரறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கிய ஒரே தலைவர்!

பூமிக்கு வந்த புண்ணியம் ! ஏழைகளின் இல்லங்களில் விளக்கேற்றிய ஒளி விளக்கு ! தாய்மையின் உறைவிடம் ! தர்மத்தின் மறு உருவம் ! அன்னை தமிழ் பூமிக்கு வந்த 'அம்மா' என்னும் ஆலயம் ! இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர், எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில், தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே நல்ல பல கருத்துகளை வழங்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பி துரை அவர்களே!

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா ஒரு பொதுக்கூட்டம் அன்று; ஒரு மாநாடு என்று கோவை மாநகரமே குலுங்குகின்ற அளவிற்கு, எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம், கடல் போல காட்சியளிக்கின்ற நிகழ்வினை ஏற்படுத்திய, இம்மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களே!

அவருக்கு உறுதுணையாக இருந்து, முன்னாள் அமைச்சராகப் பணியாற்றி, இன்றைக்கு சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும் இருந்து பல்வேறு கருத்துக்களை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துரைத்து அவர் இருக்கின்ற போது என்னென்ன சாதனைகளை எல்லாம் செய்தோம் என்று பட்டியலிட்டு இந்த விழா சிறக்க மாண்புமிகு அமைச்சரோடு துணை நின்றுவரும் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களே!

வரவேற்புரை ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. ரா. வெங்கடேசன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.கே. செல்வராஜ் அவர்களே!

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களே! பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்களே!

நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. கோபாலகிருஷ்ணன் அவர்களே! கோயம்புத்தூர் (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்களே!

கோயம்புத்தூர் (தெற்கு) சட்டமன்ற உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன் அவர்களே!

மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களே! கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்களே!

கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் திரு. எட்டிமடை சண்முகம் அவர்களே!

சூலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கனகராஜ் அவர்களே! வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ. கஸ்தூரிவாசு அவர்களே!

அரசு தலைமைக் கொறடா திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே. வைரமுத்து அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள உள்ள கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த. ந. ஹரிஹரன் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில், பார்க்கும் இடமெல்லாம் மலைகளாகவும், காடுகளாகவும், நீர் நிலைகளாகவும் பசுமையாகக் காட்சி தரும் கோயம்புத்தூர் மாவட்டம் மனதுக்கும், உடலுக்கும் இதம் அளிக்கும் அழகு பூமியாகத் திகழ்கிறது. இந்த மாவட்டம், விவசாயம், தொழில், கல்வி, ஆன்மிகம், சுற்றுலா என அனைத்திலும் வேகமாக வளர்ந்து வரும் மாவட்டமாகும். கோயம்புத்தூர் மாவட்டம், பண்டைய காலம் முதலே பன்னாட்டு வணிக மையமாகவும், பருத்தி நெசவில் தென்னிந்தியாவின் மான்செஸ்டராகவும், திகழ்ந்து வருகிறது. கோயம்புத்தூர் பகுதியை, பண்டை காலத்தில் கோசர்கள் ஆண்டதால் 'கோசன்புத்தூர்' என்று அழைக்கப்பட்டு, பிற்காலத்தில் கோவன்புத்தூராகி அதன் பிறகு கோயம்புத்தூர் என்று மருவியதாகக் கருதப்படுகிறது.

சாளுக்கியர்கள், பாண்டியர்கள், சோழர்கள், கோசர்கள், தில்லி சுல்தான்கள், விஜய நகர மன்னர்கள், நாயக்கர்கள், மைசூர் மன்னர்கள், ஆங்கிலேயர்கள் என கோயம்புத்தூரை, பலர் மாறிமாறி ஆட்சி செய்திருக்கிறார்கள். தென்னிந்தியாவிலேயே, முதன்முதலாக 'வெரைட்டி ஹால்' என்னும் பெயரில் திரையரங்கம் கட்டப்பட்டது கோயம்புத்தூரில்தான்! அந்தத் திரையரங்கம், இப்போது 'டிலைட் திரையரங்கம்' என்று அழைக்கப்படுகின்றது. இதனை 1900 ஆம் ஆண்டு கட்டிய சாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர்தான், திரைப்படங்களை முதன்முதலில் ஊர் ஊராகச் சென்று, திரையில் காட்டியவர் ஆவார்!

சாமிக்கண்ணு வின்சென்ட்டின் மகன் பால்வின்சென்ட், ஜி.டி. நாயுடு, டி. பாலசுந்தரம் போன்ற வல்லுநர்களால் கோயம்புத்தூரில் பல தொழிற்சாலைகள் உருவாகின. இன்று, தமிழ் நாட்டின் இரண்டாவது பெரிய தகவல் தொழில் நுட்பப்

பூங்காவாகவும், நெசவு, தேயிலைத் தொழில், காய்கறி விளைச்சல், ஏற்றுமதி ரக ரோஜா மலர் சாகுபடி, மோட்டார் ‘பம்பு செட்டுகள்’, அரவைப்பொறி, வார்ப்பாலை மற்றும் பட்டறை தொழில்களின் மையமாகவும் கோயம்புத்தூர் விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனைமலை மாசானியம்மன் கோயில், புனித மிக்கேல் அதிதூதர் பேராலயம், பேரூர் பட்டீசுவரர் கோயில், மருதமலை முருகன் கோயில், ஈச்சனாரி விநாயகர் கோயில், கோனியம்மன் கோயில், லோக நாயக சனீஸ்வர பகவான் கோயில், அனுவாவி சுப்பிரமணியசாமி கோயில் போன்ற தெய்வீகத் திருத்தலங்களினால், ஆன்மிகம் கலந்த பூமியாக கோவை மாவட்டம் விளங்குகிறது.

வால்பாறைத் தேயிலைத் தோட்டங்கள், ஆனைமலை புலிகள் சரணாலயம், டாப் சிலிப், கோவைக் குற்றாலம், ஆழியாறு அணை, வேதாத்ரி மகரிஷி யோகா மையம், தாவரவியல் பூங்கா, வனக் கல்லூரி அருங்காட்சியகம், ஈஷா யோகா மையம் ஆகியவை பயணிகளைக் கவரும் சுற்றுலாத் தலங்களாக விளங்கி வருகின்றன. அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு, டெக்ஸ்டூல் பாலசுந்தரம், ஜி.கே. சுந்தரம், தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, முன்னாள் மத்திய நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம், விடுதலைப் போராட்ட வீரர்கள் வி.சி. வெள்ளிங்கிரி கவுண்டர், ரத்தின சபாபதி, கதர் அய்யாமுத்து, விவசாய சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு, திரைப்படப் பாடலாசிரியர் உடுமலை நாராயணன், எழுத்தாளர் ராஜேஷ்குமார் மற்றும் பிரபலமான தமிழ் நடிக, நடிகையர்கள் ஆகியோர் கோவை மாவட்டத்தின் புகழ் பெற்ற மண்ணின் மைந்தர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரை வாழ்க்கையில் இந்தக் கோயம்புத்தூர் முக்கியப் பங்கு வகித்துள்ளது. ‘சதி லீலாவதி’ என்ற திரைப்படத்தில்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதன்முதலில் நடித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ‘சதி லீலாவதி’ படத்தில் நடிக்க வாய்ப்பு வழங்கியவர் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த திரு. ஏ.என். மருதாச்சலம் அவர்கள் என்பார்கள், முதன்முதலாக, கதாநாயகனாக, ‘இராஜகுமாரி’ திரைப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுத்த ஜூபிட்டர் பிக்சர்ஸ், கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் தொடங்கப் பெற்றது என்பதும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கலை உலக வாழ்க்கையில், கோயம்புத்தூருக்கு இருந்த அதிமுக்கியத்துவத்தை பறைசாற்றுகின்றன.

அதைப்போல, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரை வாழ்க்கையில், திருப்பு முனையை ஏற்படுத்தி மக்கள் நாயகனாக ஆக்கிய ‘மலைக்கள்ளன்’ திரைப் படத்தை தயாரித்தது கோயம்புத்தூர் பட்சிராஜா ஸ்டுடியோ என்பதும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நெருங்கிய நண்பரும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்த பத்து படங்களைத் தயாரித்த படத்தயாரிப்பாளரும், நடிகருமான எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர் அவர்களும்

கோயம்புத்தூர் மண்ணின் மைந்தர் என்பதும், இந்த மாவட்டத்திற்கு கிடைத்த கூடுதல் பெருமையாகும்.

அதைப் போல ராஜா தியேட்டர் உரிமையாளர் பி.ஏ.ராஜ், பீளமேடு, த.மா. நாயுடு போன்ற கோயம்புத்தூரைச் சார்ந்த பலர், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் உயிர்த் தோழர்களாக இருந்தார்கள். 1962ஆம் ஆண்டு, மருதமலை கோயிலுக்கு, மின்சார விளக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, கோயம்புத்தூர் மக்களின் நாயகனாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதுமட்டுமல்ல, தாம் ஆட்சிக்கு வந்தபின்பு மருதமலை அடிவாரத்தில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில், பாரதியார் பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான். பத்து சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்பது தொகுதிகளையும் மூன்று மக்களவைத் தொகுதிகளில் மூன்று தொகுதிகளிலும் அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. வெற்றி பெற்று, அ.இ.அ.தி.மு.க.வின் கோட்டையாகத் திகழும் கோயம்புத்தூர் மாவட்டம். அப்போதும், இப்போதும், எப்போதும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் நம்பிக்கைக்குரிய மாவட்டம் கோவை மாவட்டம் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

தொழிலாளர்களும், தொழில் முனைவோர்களும் ஒற்றுமையாகவும், ஒத்துழைப்பாகவும் வாழ்ந்து, உலக வணிகத்தில், தமிழ்நாட்டுக்கென, தனி ஓர் இடத்தைப் பெற்றுத்தரும் விதத்தில் கோயம்புத்தூரை உருவாக்கியுள்ளனர். எனவே, தமிழ்நாட்டின் உழைக்கும் கரங்களாகத் திகழ்ந்து அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித்தரும் கொங்கு மண்டலத்தின் மையப் புள்ளியான கோயம்புத்தூரில், வரலாற்று நாயகன், மக்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது பொருத்தமாக இருக்கிறது.

கொங்கு என்றால் ‘மலர் கொத்து’ என்றும் ‘தேன்’ என்றும் பொருள் கூறப்படுகிறது. தமிழ்நாட்டின் மலர்க்கொத்தாக இருக்கும் நீங்கள் பேசும் கொங்குமொழி, தேனைவிட இனிமையானது என்பதால்தான்.. கோயம்புத்தூருக்குக் கொங்கு மண்டலம் என்ற பெயர் ஏற்பட்டிருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

1958இல் நடந்த ஒரு சம்பவத்தை, இங்கே நான் நினைவுகூர விரும்புகிறேன். கோயம்புத்தூர் காளீஸ்வரா மில் மூன்று ஆண்டுகளாகப் பல்வேறு பிரச்னைகளால் மூடிக்கிடந்தது. மில்லை நம்பியிருந்த தொழிலாளர்களுடைய குடும்பங்கள் வறுமையில் கஷ்டப்பட்டன. அந்த நேரம் கோயம்புத்தூரில் ‘நாடோடி மன்னன்’ படம் ஓடிக் கொண்டிருந்தது. கோயம்புத்தூரைச் சார்ந்த பொதுநலவாதி இரா.சுந்தரம் என்பவர் நாடோடி மன்னன் படம் ஓடும் ராஜா தியேட்டருக்குச் சென்று உண்டியல் குலுக்கி அந்த தொழிலாளர்களுக்கு உதவி செய்திருக்கிறார்.

படம் பார்க்க வந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ரசிகர்கள்.. தலைவர் வழியில் உண்டியலில் காணிக்கைகளை தாராளமாக வழங்கினார்கள். படத்தின் வெற்றி விழாவுக்கு கோயம்புத்தூருக்கு வந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் சுந்தரம் அவர்கள் தொழிலாளர் நிலை குறித்துக் கடிதம் கொடுத்தார். மேடையிலே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தொழிலாளர்களின் துன்பம் போக்க, பெருந்தொகையை வழங்கியிருக்கிறார்கள். சுந்தரம் அவர்கள் அந்தத் தொகையைக் கொண்டு அரிசி மூட்டைகள் வாங்கி தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கியிருக்கிறார். இப்படி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், அவர்களுடைய ரசிகர்களும் இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் வாரி வாரி வழங்கி, தொழிலாளர்களைக் காப்பாற்றியதும் இந்தக் கோயம்புத்தூரில்தான்.

தாம் அரசியலில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாவதற்கு முன்பே, மக்களிடமிருந்து, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் ஓடி ஓடி உதவி செய்தவர் நமது பொன்மனச் செம்மல் அவர்கள். ஏழைகள் எப்போது சிரிப்பார்கள் என்பது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வயிறு நிறைய சாப்பாட்டுடன், கடனில்லாமல் சொந்த வீடுகட்டி, நோய் நொடியில்லாமல் வாழ்ந்தால் நிச்சயம் ஏழைகள் சிரிப்பார்கள் என்ற சூட்சமத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நன்கு புரிந்து வைத்திருந்தார்கள். ஏழைகள் சந்தோஷமாக இருக்கத்தான், ஆளும் அரசாங்கம் திட்டம் போட வேண்டும் என்று தமது திரைப்படங்கள் மூலம் வலியுறுத்தி வந்தார்கள். ஆனால் இங்கு சிலர் முன்பு ஆட்சியில் இருந்தார்கள்; உங்களுக்கு தெரியும்!

பாட்டாளி ஏழை மக்களின் குரல், உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் குரல்.. அவர்களுடைய காதுகளில் விழவில்லை. ஆட்சி சுகத்தில் மக்கள் நலனை மறந்தார்கள். அப்படியிருந்த நிலையை முற்றிலும் மாற்றி, தனிக்கட்சி ஆரம்பித்து, ஆட்சியைப் பிடித்து, ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம், தொழில் தொடங்கி வருமானம் ஈட்ட, கடனுதவி, குறைந்த வட்டியில் வீடுகட்டக் கடனுதவி, இலவச மருத்துவ வசதி என

அனைத்தையும் வழங்கி, ஏழைகளின் சிரிப்பில் இறைவனை கண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்கிய ஒரே தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்! 1985ஆம் ஆண்டு, பொள்ளாச்சி தமிழ்ச் சங்கத்தில் நடந்த கவியரங்கத்தில், ஒரு கவிஞர் பாடியது என் நினைவுக்கு வருகிறது.

'வாத்தியாரு பாடி வச்ச பாட்டு, ரசிக மகாஜனங்கள் அதைக் கேட்டு, நாடாளப் போட்டார்கள் ஓட்டு' என்பதுதான் அந்தக் கவிதை. அந்தக் கவிஞனின் சொல் பலித்தது. 'சமயம் வந்தது, தருமம் வென்றது, 'நல்லது நினைச்சோம் நடந்ததய்யா!!, என்று மக்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியை வரவேற்றார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், அ.இ.அ.தி.மு.க.வைத் தொடங்கி, சட்டமன்ற இடைத் தேர்தலில், முதன்முதலில், இரட்டை இலைச் சின்னத்தில், தம் கட்சி சார்பில் வேட்பாளரை போட்டியிடச் செய்து, வெற்றி பெறச் செய்தது இதே கோயம்புத்தூர் மேற்கு சட்டமன்ற தொகுதிதான். 'இன்பக்கனவு' என்ற நாடகத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 'உலகில் புதுமையும் புரட்சியும் குடிசையில் பிறந்தவைதாம்' என்றும், 'நாம் ஏழைகள், கையோடும் காலோடும் பிறந்தவர்கள், அவர்கள் பணக்காரர்கள், வாயோடும் வயிற்றோடும் பிறந்தவர்கள்' என்றும் வசனம் பேசியது, ஏதோ ஒரு திரைப்படத்திற்காகவும், ரசிப்பதற்காகவும் அல்ல. உழைப்பாளர் பெருமக்களின்மீது அவருக்கு இருந்த அக்கறையும், ஈடுபாடும் அவரை அப்படிப் பேச வைத்தது. 'நான் மக்களின் கடைசித் தொண்டன். முதல் தொண்டனாக சேவை செய்யும் வாய்ப்புக் கிடைக்க வேண்டும்' என்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், அ.இ.அ.தி.மு.க.வின் முதல் தொண்டனாகவும், கடைக்கோடி தொண்டனாகவும் உழைத்து உருவாக்கிய இந்த அ.இ.அ.தி.மு.க. அப்போதும், இப்போதும், எப்போதும்

தொழிலாளர்கள் பக்கம்தான் இருக்கும் என்பதனை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 'நாட்டுக்காக வாழ்ந்த தலைவர் ஒட்டுக்காக நடிக்கத் தெரியாத தலைவர்! அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை, இனி எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மக்கள் மனதிலிருந்து பிரிக்க முடியாது! தமிழ்நாட்டின் வரலாற்றை, ஏன் இந்திய வரலாற்றையே எழுத நினைக்கும் எழுத்தாளர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத்தான் அதிக பக்கங்களை ஒதுக்க வேண்டும். அந்த அளவிற்கு, அரசியல் இலக்கணத்தையே மாற்றி எழுதியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை வஞ்சித்தவர்களை மக்கள் ஏற்றுக் கொண்டார்களா? எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! அரசியலுக்கு அப்பா வரலாம், மகன் வரலாம், பேரன் வரலாம், கொள்ளுப்பேரன் கூட வரலாம். ஆனால் ஆட்சிக்கு வரமுடியுமா என்றால், ஒரு காலமும் முடியாது! 20.06.2002 அன்று திருப்பூரில் நடந்த ஒரு அரசு விழாவில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசிய போது,

“எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். தி.மு.க.வுக்கு எதையும் தாங்காத இதயம்தான் உள்ளது! காரணம், அளவுக்கு மிஞ்சிய பதவி ஆசை. ஒன்று பதவி தனக்கு வேண்டும்; இல்லையென்றால் தன் குடும்பத்தார்க்கு வேண்டும். இதுவே, இந்த பதவி பகாசுரர்களின் அரசியல் சித்தாந்தம். இவர்களுடைய ஓயாத புலம்பலுக்கு மத்தியில்தான். இந்த அரசு ஒவ்வொரு துறையிலும் சாதனை சகாப்தத்தை உருவாக்கி வருகிறது” என்றார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறியதை நாங்களும் அப்படியே வழிமொழிகின்றோம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில்தான், சாதனை சகாப்தத்தை உருவாக்கி வருகிறோம் என்பதற்கு, இப்போது இங்கே எங்களால் தொடக்கி வைக்கப் படுகின்ற திட்டங்களும், அடிக்கல் நாட்டப்படுகின்ற புதிய திட்டங்களும், மக்கள் நலத்திட்டப் பணிகளுமே சான்றுகளாக இருக்கின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் அமைக்கப்பட்ட 506 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அணிக்கடவுத் துணை மின்நிலையம் உட்பட, 691 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 37 பணிகளை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இன்று தொடக்கி வைத்துள்ளேன். கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில், 556 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம், 442 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான, பாதாள சாக்கடை திட்டம் உட்பட ஆயிரத்து 328 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 39 பணிகளுக்கு, நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன். பல்வேறு துறைகளின் சார்பில், 36 ஆயிரத்து 650 பயனாளிகளுக்கு, 118 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை, நான் இன்று வழங்கி உள்ளேன்.

தமிழ்நாடு முழுவதும் இந்த அரசு பதவியேற்றது முதல், இன்று வரை 15 ஆயிரத்து 240 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 35 ஆயிரத்து 991 பணிகளைத் தொடக்கி வைத்தும் 5 ஆயிரத்து 70 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 7 ஆயிரத்து 173 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம், 20 ஆயிரத்து 211 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 43 ஆயிரத்து 164 பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளில் கோவை மாவட்டத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு செய்த சாதனைகளில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கோயம்புத்தூர் மாநகராட்சியில் 12 இடங்களில் அம்மா உணவகங்கள், 144 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சாலைகள் சீரமைப்பு மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளுக்காக, சுமார் 560 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சுமார் 7ஆயிரத்து 84 இளைஞர்களுக்குத் தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. 23 ஆயிரத்து 416 சிறு, குறு விவசாயிகளுக்கு, 123 கோடியே 65 இலட்சம் ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

குடிமராமத்துப் பணிகள் திட்டத்தின்கீழ், 2 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில், பாசனக் கால்வாய்களில், 333.84 கி.மீ தூரம் தூர் வாரப்பட்டுள்ளது. 91 ஆயிரத்து 785 விவசாயிகளுக்கு 192 கோடியே 41 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. 50 ஆயிரத்து 308 விவசாயிகளுக்கு, 47 இலட்சத்து 71 ஆயிரம் கனமீட்டர், விலையில்லா வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. படித்த, ஏழை பெண்களின் திருமண உதவி திட்டத்தின்கீழ், 26 ஆயிரத்து 318 படித்த ஏழைப் பெண்களுக்கு 101 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், 107.67 கிலோ தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. 136 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 90ஆயிரத்து 524 மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 43 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள், 1 இலட்சத்து 30 ஆயிரத்து 693 மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 34 ஆயிரத்து 581 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 762 கோடியே 5 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு, சுயமாக தொழில் தொடங்க அம்மாவின் அரசு வழிவகை செய்துள்ளது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தன்னிறைவு திட்டத்தின் கீழ் பொது மக்களின் பங்களிப்புடன், 58 கோடி ரூபாய் மதிப்பிலான 598 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 77 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 64 ஆயிரத்து 738 முழுமையான கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 165 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 9 ஆயிரத்து 693 சூரியமின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

தாய் திட்டத்தின் கீழ், 228 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த ஆயிரத்து 199 குக்கிராமங்களில், 80 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 4 ஆயிரத்து 390 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின்

கீழ் 171 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 15 ஆயிரத்து 98 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. 63 கோடி ரூபாய் செலவில், கோயம்புத்தூரில் 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில், 583 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரத்து 888 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 84 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் 928 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம், ஆயிரத்து 73 கோடி ரூபாய் செலவில், 1,836 கிலோ மீட்டர் சாலை மேம்படுத்தப்பட்டுள்ளது. 249 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில், 54 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 410 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில், 588.18 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாநகரில், காந்திபுரம் பகுதியில் டாக்டர் நஞ்சப்பா சாலையில் 194 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வரும் மேம்பாலத்தின் முதல் அடுக்கு முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டுள்ளது. சின்னச்சாமி சாலை 100 அடி சாலையில், கட்டப்பட்டு வரும் இரண்டாம் அடுக்கு மேம்பாலப்பணி, டிசம்பர் 2018 இல் முடிக்கப்பட்டு, விரைவில் திறக்கப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில், 191.40 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் 185.98 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட முக்கிய சாலைகள், 254 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாநகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் தீர்க்கும் வகையில், 'மெட்ரோ இரயில்' திட்டம் செயல்படுத்தப்படும் என்று 19.07.2017 அன்று சட்டமன்றத்தில் சட்டபேரவை விதி எண்.110இன்கீழ் அறிவித்தேன்!

இதன் தொடர்ச்சியாக இத்திட்டத்தினைச் செயல்படுத்த, விரிவான சாத்தியக் கூறு மற்றும் திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் ஆலோசகர் நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை 01.12.2017 அன்று, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் கோரப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் மிகப்பெரிய திட்டம். இந்தத் திட்டம் வருகின்றபோது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கும், கோயம்புத்தூர் நகரத்தில் வசிக்கின்ற மக்களுக்கும், முற்றிலும் போக்குவரத்து நெரிசல் இல்லாத பகுதியாக இது இருக்கும் என்பதனை, இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கோவை மாவட்டத்தில் உள்ள சிறு தொழில்கள் நன்றாக இருக்க வேண்டும், வணிகம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில், வரி விதிப்பைக் குறைக்க வலியுறுத்தியதன் காரணமாக, வியாபாரிகளுக்கு அந்த ஜி.எஸ்.டி. குறைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிபவர்களுக்கு, இந்த அரசு

துணை நிற்கும். அதேபோன்று, இன்றைய தினம் என்னைச் சந்தித்து, இங்கே சிறு தொழில் செய்கிறவர்கள் ஒரு கோரிக்கை மனுவினைக் கொடுத்திருக்கிறார்கள். ஜி.எஸ்.டி. வரியைக் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களது கோரிக்கையின் அடிப்படையில், வருகின்ற ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் அது வலியுறுத்தப்படும் என்பதனையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், 20.02.2016 அன்று நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், சட்டப்பேரவை விதி எண் 110இன்கீழ், உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களுக்குக் கோவை மாவட்டம் வையம்பாளையத்தில் உள்ள அவரது நினைவிடத்தில், அரசு சார்பில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இதனைச் செயல்படுத்தும் வகையில், வையம்பாளையம் கிராமத்தில் நிலம் ஒதுக்கப்பட்டு, அந்நிலத்தில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மணிமண்டபம் அமைக்க, அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் பணி தொடங்கப்பட்டு இம் மண்டபம் கட்டி முடிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருப்பூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த, 500 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 82 ஆயிரத்து 291 மக்கள் பயன் பெறும் வகையில், கூட்டுக் குடிநீர்த் திட்டம், நிதி ஆதாரம் பெற்று விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

இது தவிர, கோவை மாநகருக்கு 320 கோடி ரூபாய் செலவில் 32.40 கி.மீ. நீள மேற்கு வட்டச் சாலை அமைக்கவும், மேட்டுப்பாளையம் நகருக்கு 99.35 கோடி ரூபாய் செலவில், 7.25 கி.மீ. நீள புறவழிச் சாலை அமைக்கவும், பீளமேடு–கோவை வடக்கு இரயில் நிலையங்களுக்கு இடையே கடவு எண். 9–க்கு மாற்றாக கணபதி – ஆவாரம்பாளையம் சாலை கி.மீ.0/6ல் 54 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பில் இரயில்வே மேம்பாலம் கட்டவும் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான, ‘நீரா பானம்’ உற்பத்தி மற்றும் விற்பனையை அனுமதித்து, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இந்த அரசு வழங்கியுள்ளது. ஆகவே, இன்றைக்கு, தென்னைச் சாகுபடி செய்கின்ற விவசாயிகள் வருமானம் பெறுகின்ற ஒரு திட்டமான, ‘நீரா பானம் திட்டத்தை’ அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது! விரைவில், அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்து, விவசாயிகள் பெரும் லாபம் பெறுவார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக மாவட்ட அமைச்சர் அவர்களும், சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தென்னைச் சாகுபடி செய்கின்ற விவசாயிகளும் கோரிக்கை வைத்திருந்தார்கள்.

தென்னை விவசாயிகளுக்குப் போதிய வருமானம் இல்லை. ‘‘நீரா பானம் உருவாக்குகின்ற போது எங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை கொண்டு வாருங்கள்!’’ என்று சொன்னார்கள். அதற்கு சட்டம் இயற்றித் தாருங்கள் என்று சொன்னார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு சட்டத்தை நிறைவேற்றி, அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிய அரசு அம்மாவுடைய அரசு. தென்னைச் சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு, இது ஒரு பெரும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமையான தீர்ப்பால், உண்மையான அ.இ.அ.தி.மு.க விசுவாசிகளுக்கு ‘இரட்டை இலை சின்னம்’ கிடைத்திருக்கிறது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆன்மா நம் பக்கம் இருப்பது மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கழகக் கண்மணிகள் அனைவரும், ஓரணியில் நின்று எதிர்கொண்டால் R.K. நகர் இடைத்தேர்தல் என்ன? இன்னும் ஆயிரம் தேர்தல்களில் நாம் வெற்றியடைய முடியும். ‘‘எனக்குப் பிறகும் இன்னும் நூறாண்டுகளுக்கு மேல் அ.இ.அ.தி.மு.க அசைக்க முடியாத சக்தியாக விளங்கும்’’ என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் சூளுரைத்தார்கள். அதனை வருகின்ற தேர்தல் மூலம், அனைவரும் நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தீர்ப்புக்கு நாம் நன்றி செலுத்தும் வகையில், ஆர்.கே. நகர் தொகுதியின் வெற்றியை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்போம்! மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களாலும் அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களாலும், தீர்ப்பாலும் நிராகரிக்கப் பட்டவர்கள், தங்கள் இயலாமையால் எது எதனையோ பேசிச் சமாளிப்பார்கள்; அவர்களுடைய வாய்ஜாலம், இனி பலிக்காது! இதனை ஒரு கதையின் மூலம் கூறினால், உங்களுக்கு விளங்கும் என்று கருதுகிறேன்.

கப்பி சாலையில், கல்லோடு கல்லாகக் கிடந்த ஒரு கப்பிக் கல்லை, அந்த வழியாகப் போன ஒரு வண்டியின் சக்கரம் பெயர்த்து உருட்டி, சாலை ஓரத்தில் தனியாகப் போட்டுவிட்டு போய்விட்டது. அந்தக் கல், ‘‘என்னைப் போன்ற திறமைசாலி, மற்றவர்களுடன் பிணைக்கப்பட்டு ஏன் ஒரே இடத்தில் கிடக்க வேண்டும்? நான் தனியாக வாழ்ந்து பார்க்க விரும்பினேன். என் விருப்பப்படியே நடந்தது’’, என்றது. தெருவோடு போன ஒரு பையன், அந்தக் கல்லைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். கல் அவனுடைய கையில் இருந்து கொண்டே, ‘‘நான் பிரயாணம் செய்ய விரும்பினேன். அதுவும் நடந்து விட்டது’’, என்று பேசியது. அவன் அந்தக் கல்லை ஒரு வீட்டை நோக்கி எறிந்தான். அப்போதும் அந்தக் கல், ‘‘நான் பறக்க விரும்பினேன், அதுவும் நடந்து விட்டது’’, என்று பேசியது. அந்தக்கல் ஜன்னல் கண்ணாடியில் மோதி கண்ணாடியை உடைத்துக் கொண்டு அறையில் இருந்த பஞ்சு மெத்தையில் போய் விழுந்தது. ‘‘இவ்வளவு நேரம் பிரயாணம் செய்ததில் அலுத்துவிட்டது. சற்று ஓய்வு தேவை என்று நினைத்த பட்சத்திலேயே படுக்கை கிடைத்து விட்டதே’’, என்று மகிழ்வது

போல் நடித்தது. அவ்வீட்டு வேலைக்காரன் படுக்கையில் இருந்த கல்லை தூக்கி ஜன்னல் வழியாக சாலையில் எறிந்தான். அங்கு கிடந்த கப்பிக் கல்களுடன் அந்த கல் மீண்டும் வந்து சேர்ந்தது. அப்போது அந்தக் கல் சொன்னது "சகோதரர்களே, நான் பெரிய மனிதர்கள் வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்து விட்டு வந்திருக்கிறேன். அந்த பணக்கார வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. உங்களைப் போன்ற சாதாரண மக்களிடம் தான் எனக்கு பாசம் அதிகம். அதனால் நான் உங்களிடமே திரும்பி வந்து விட்டேன்", என்று சமாளித்தது. இப்படி சொல்லிக் கொண்டிருக்கும் போதே சரக்கு லாரி வந்து தனியாகக் கிடந்த அந்தக்கல் மேல் ஏறியது. "வாழ்க்கையில் இதெல்லாம் சகஜமப்பா" என்றபடியே அந்தக்கல் சுக்கு நூறாக சிதறிப்போனது.

இப்படித்தான், ஒரு சிலரது பேராசை சுக்குநூறாக உடைந்திருக்கிறது என்பதனை, நீங்கள் சமீபத்தில் நடந்த நிகழ்வுகளைப் பார்த்து தெரிந்து கொண்டிருப்பீர்கள். மக்கள் பணி ஆற்றாமல், வாய் ஜாலத்தை மட்டுமே நம்பி இருப்பவர்களுக்கு, இந்த நிலை தான் ஏற்படும். மக்கள் பணிக்குத் தடையாக நிற்பவர்களை, ஒன்று, இறைவன் தண்டிப்பான், அல்லது மக்கள் தண்டிப்பார்கள்! இப்போது, இறைவனும் சட்டமும் மட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவும் தண்டித்து விட்டது. தேர்தலில் மக்களும் தண்டிப்பார்கள்!

தென்மாவட்டங்களில், 7 மாவட்டங்கள் 'ஒகி' புயலால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டு, அதிகமாக சேதத்தைச் சந்தித்துள்ளது. கன்னியாகுமாரி மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட பகுதிகளை நிவர்த்தி செய்வதற்காக, அம்மாவினுடைய அரசு உடனடியாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்களை அனுப்பி, கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, அந்த மக்களுக்குத் தேவையான முதலுதவிகளைச் செய்து வந்தார். அவருக்குத் துணையாக, மாண்புமிகு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு பி.தங்கமணி அவர்களையும் அனுப்பி வைத்தோம்! அம்மாவட்டத்தில், புயலால் பல துணை மின்நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, 3,750 மின்கம்பங்கள் புயலால் சாய்ந்துள்ளன. அவற்றையெல்லாம் சரி செய்வதற்கு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உடனடியாக 2,000 பணியாளர்களை அனுப்பி வைத்து, அவர்களுடன் மேற்பார்வையிடுவதற்காக, தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வைப் பொறியாளர்கள், பொறியாளர்கள் ஆகியோரை அனுப்பி வைத்து, அந்தப் பணிகள் எல்லாம் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றது. இன்னும் ஓரிரு நாட்களில் முழுப் பணியும் நிறைவு பெற்று, கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்குத் தேவையான மின்சாரம் தடையில்லாமல் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மா அரசு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றது.

கனமழையால், தாழ்வான குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்கிய காரணத்தினால், அங்கிருக்கின்ற மக்களையெல்லாம் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று, தங்க வைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து

வருகின்றார்கள். அத்துடன், கனமழையால், நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்காக, அங்கே நடமாடும் மருத்துவக்குழு செயல்பட்டு வருகின்றது. அந்தப் பகுதியிலேயே, உடனுக்குடன் மருத்துவ சிகிச்சை அளித்து, நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடையக்கூடிய ஒரு சூழ்நிலையையும் அம்மா அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு, அங்கேயே மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, தொற்றுநோய் பரவாமல், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு, மருத்துவச் சேவை வழங்கிட, உடனடியாக மருத்துவர் குழுவையும் அம்மாவினுடைய அரசு அனுப்பி வைத்திருக்கின்றது.

அதுமட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகள் விரைந்து கிடைக்க வேண்டுமென்பதற்காக, IAS அதிகாரிகள் 4 பேர்கள், அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களும் பணிகளை விரைந்து மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அத்துடன், புயல் வருவதற்கு முன்பே, பலநாட்கள் கடலில் தங்கி, மீன் பிடிக்கச் சென்று, புயலில் சிக்கிக்கொண்ட மீனவர்களை மீட்பதற்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களிடத்திலும், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு தேவையான உதவிகளை செய்யக் கோரிக்கை வைத்ததின் விளைவாக, மத்திய அரசு நாம் வைத்த கோரிக்கையை ஏற்று மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை காப்பாற்றுவதற்காக இந்தியக் கப்பல் படை மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையின், 15 கப்பல்கள், 4 விமானங்கள், 5 ஹெலிகாப்டர்களைக்கொண்டு, மீனவர்களை தேடும் பணியில், ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இன்றைக்கு வருவாய்த்துறை, மீன்வளத்துறை ஆகிய இரண்டு துறைகளின் மூலம், 44 கிராம மக்களைச் சந்தித்து, யாரெல்லாம் மீன் பிடிக்கச் சென்றார்கள் என்று கணக்கெடுத்து, அதன்படி, அவர்களை மீட்கின்ற பணி தொடர்ந்து நடைபெறுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உடனடியாக, மீனவர்களை மீட்பதற்காக, மாண்புமிகு, மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களும், கன்னியாகுமரியிலேயே தங்கியிருந்து, கடலுக்குச் சென்ற மீனவர்களை மீட்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமின்றி, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், நேரடியாக, கன்னியாகுமரிக்குச் சென்று, பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல்கூறி, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அறிந்து, ஆலோசித்து, அதற்குத்தக்க நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியும் நடைபெற்று வருகின்றது. அரசைப் பொறுத்தவரைக்கும், அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்போடு செயல்படுத்தி வருகின்றோம் என்பதனை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

ஆகவே, வேண்டுமென்றே, திட்டமிட்டு, எதிர்க்கட்சி செயல்தலைவர் மு.க.ஸ்டாலினும், இன்னும் ஒரு சிலரும், கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீட்கப்படவில்லை என்ற ஒரு தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அம்மாவினுடைய அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அனைத்து உதவிகளையும் பெற்று, கப்பல்கள், விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மூலமாக, மீனவர்களை மீட்டெடுக்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். கடலில் மீன் பிடிக்கச்சென்ற அத்தனை மீனவர்களையும், அம்மாவினுடைய அரசு மீட்டெடுக்கும் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். மீனவ மக்கள் அச்சப்படத்தேவையில்லை. அம்மாவினுடைய அரசு, மீனவ நண்பர்கள், மீனவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் அதைத் தன் துன்பமாகக் கருதி செயல்படுகின்ற அரசு! ஆகவே, எந்தவொரு மீனவரும் பாதிக்கப்படாமல் பத்திரமாக மீட்கப்படுவதற்கு அம்மாவினுடைய அரசால், அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

அதுமட்டுமல்ல, மிகச் சிறப்பாக, எழுச்சியாக, பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். கிட்டத்தட்ட 27 இடங்களில் நிறைவுபெற்று, 28 ஆம் இடமான இம்மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இவ்விழா எந்த மாவட்டத்திலும் இல்லாத ஒரு எழுச்சியை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் நாம் பார்க்கமுடிகின்றது. இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத, எதிர்க்கட்சியைச் சேர்ந்த, செயல்தலைவர் ஸ்டாலின் அவர்கள், தூண்டுதலின்பேரில் ஒரு வழக்கைத் தொடர்கின்றார். இங்கே எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிற்கு அமைத்திருந்த அலங்கார வளைவு மோதி, ஒரு இளைஞர் இறந்துவிட்டதாகக் குறிப்பிட்டார். உண்மையிலேயே, ரகு என்ற பொறியாளர் இறந்த சம்பவம் மனவேதனை அளிக்கின்றது. ஆனால், அலங்கார வளைவில் மோதி அவர் இறக்கவில்லை. அவர் லாரி விபத்திலே சிக்கி இறந்திருக்கின்றார். நீதிமன்ற வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ‘சிசிடிவி கேமராவிலே’ பதிவான அந்த விபத்து நிகழ்வினை நீதிமன்றத்திலே வழங்கியிருக்கின்றோம். உண்மை இதுவாக இருக்க, மிகச் சிறப்பாக, எழுச்சியாக நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், அதனை வேண்டுமென்றே திட்டமிட்டு, தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்காகவே, பொய்யான ஒரு செய்தியைப் பரப்பி வருகின்றார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற குறுகிய மனப்பான்மையோடு, அவர் வழக்குத் தொடர்ந்திருக்கின்றார்! ’இந்த அலங்கார வளைவுகளெல்லாம் இருக்கக்கூடாது’ என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றார்! மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், இதே கோயம்புத்தூரில், திமுக ஆட்சியில் நடைபெற்ற செம்மொழி மாநாடு, எப்படியெல்லாம் நடைபெற்றது என்று விளக்கமாகச் சொன்னார். அப்பொழுது, எந்தளவிற்கு அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். நாம் வைத்தால் பொறுக்க முடியவில்லை, அவர்கள் வைத்தால். நாம்

பொறுத்துக்கொள்ளவேண்டும்! ஆகவே, வேண்டுமென்றே, நம்முடைய கட்சியின் மீது அவதூறு பரப்பி வருகின்றார்.

இன்றைக்கு மக்களும், தொண்டர்களும் எழுச்சியோடு இருக்கின்றார்கள். அவர்களின் எழுச்சியை, இந்த பேனர்கள் மூலமாகத்தான் காட்டமுடியும். ஆகவே, வருகின்ற வழியில், பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுக்குப் புகழ் சேர்க்கின்ற விதத்திலே, பெருமை சேர்க்கின்ற விதத்திலேதான் இந்த விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. செம்மொழி மாநாட்டில், இவர்கள் குடும்பமே கண்டு ரசிப்பதற்காக, ஒரு மாநாடு நடத்தியவர்கள் தி.மு.க.–கட்சிக்காரர்கள். நாம் அப்படியல்ல, நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இவர்களைப்போல, சுயநலத்திற்காக அல்ல; பொது நலத்திற்காக, நாம் இந்த விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். இந்த விழாவின் மூலமாக, எவ்வளவு திட்டங்களை கொடுத்திருக்கின்றோம் என்பதனை சுட்டிக்காட்டினேன். மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றதிலிருந்து எவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது, இந்த மாவட்டத்திற்கு, என்னென்ன சாதனைகள் செய்யப்பட்டுள்ளனவென்று பட்டியலிட்டுச் சொன்னேன். எல்லாத் திட்டங்களையும், நாங்கள் செய்திருக்கின்றோம். நீங்கள், உங்கள் ஆட்சிக்காலத்தில் ஏதாவது செய்தீர்களா? ஏதாவது சொல்ல முடிகின்றதா? எண்ணிப் பாருங்கள்!

அதுமட்டுமல்ல, செம்மொழி மாநாட்டிற்காக சுமார் ரூபாய் 262 கோடி செலவழித்தார்கள். நாங்கள் அப்படியா செலவழித்திருக்கின்றோம், இல்லையே! இன்றைக்கு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு, இந்த விழாவின் மூலமாக ஆயிரக்கணக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கின்றோம். பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். முடிந்த திட்டங்களின் உருவாக்கப் பணிகளைத் தொடங்கி வைத்துள்ளோம். ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்குத்தான் இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம் என்பதனை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். ஆகவே, கோயம்புத்தூர் மாவட்டம் அம்மாவினுடைய மாவட்டம், அம்மாவினுடைய கோட்டை என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

இந்த மாவட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தம்முடைய மாவட்டத்திற்குப் பல்வேறு திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்தப் நிகழ்ச்சி சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்கு துணை நின்ற மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழகத்தின்

அத்தனை நிர்வாகிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மனமார, உளமாற பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்மனச்செம்மம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு, செல்கின்ற கழகத் தொண்டர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் அனைவரும் பத்திரமாக வீடுபோய் சேரவேண்டுமென்று அன்போடு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித் தலைவர் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

வருவாய் வட்டம் அமைத்தல்

- பொள்ளாச்சி வருவாய் வட்டத்தைப் பிரித்து, ஆனைமலையைத் தலைமை இடமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் அமைக்கப்படும்.

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

- பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, குப்பிச்சிபாளையம் பகுதியில் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமாக உள்ள 18.74 ஏக்கர் இடத்தை குடிசை மாற்று வாரியத்திற்குச் நிலமாற்றம் செய்து, சுமார் 162 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,792 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

குடிநீர் திட்டங்கள்

- கோயம்புத்தூர் மாநகராட்சியில் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, கூடுதல் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (பில்லூர்–III) 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அம்ருத் மற்றும் ஆசியன் வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

- கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக்குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மூலம் கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய பகுதிகளுக்கு 23 MLD குடிநீர் வழங்க தற்போது செயல்பட்டு வரும் குடிநீர்த் திட்டத்தில்

புதிய அதிகத் திறன் மின் இணைப்பான் மாற்றுதல், செயல்பாட்டில் உள்ள கான்கிரீட் குழாய்களுக்குப் பதிலாக இரும்புக் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் அபிவிருத்தி செய்தல் முதலான பணிகள் 32.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பில்லூர்–III திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயல்படுத்தப்படும்.

- சிறுவாணி அணையின் கொள்ளளவினை உயர்த்தும் வகையில், கேரள அரசின் அனுமதி பெற்று, கோயம்புத்தூர் மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் கோவை ஈசா அறக்கட்டளையுடன் இணைந்து, தனியார் நிறுவன சமூகப் பொறுப்பு நிதி மூலம் நிதியாதாரம் பெற்று தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- 241 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1.92 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் மூப்பேரிபாளையம் பேரூராட்சிகள், திருப்பூர் மாவட்டம் அவிநாசி பேரூராட்சி, சூலூர் விமானப்படை தளம் மற்றும் திருப்பூர் மற்றும் பல்லடம் ஒன்றியங்களிலுள்ள 155 கிராம குடியிருப்புகளுக்கு, மொத்த ஒதுக்கீட்டுடன் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டு குடிநீர்த் திட்டம் ‘நபார்டு’ வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த, 212 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள 63,543 மக்கள் பயன்பெறும் வகையில் ஆழியாறு நீர் ஆதாரத்துடன் கூட்டு குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

காய்கறிச் சந்தை

- மேட்டுப்பாளையம் சாலையில், தற்போது இயங்கி வரும் காய்கறிச் சந்தையானது, அதே மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள 35 ஏக்கர் உரக்கிடங்கு வளாக நிலத்தில், 12 ஏக்கர் பரப்பளவில் கூடுதல் எண்ணிக்கையிலான கடைகள் மற்றும் கூடுதல் வாகனம் நிறுத்துமிட வசதிகளுடன் கோயம்புத்தூர் மாநகராட்சியால் பொலிவுறு நகரங்கள் (**Smart City**) திட்டத்தின்கீழ் புதியதாக அமைக்கப்படும்.

சுரங்க நடைபாதை அமைத்தல்

- கோயம்புத்தூர் மாநகராட்சி அவிலா பள்ளி அருகே, அதிக போக்குவரத்து உள்ள தடாகம் சாலை மற்றும் என்.எஸ்.ஆர். சாலை சந்திப்பை, பொதுமக்கள் எளிதாகக் கடக்க சுரங்க நடைபாதை அல்லது உயர்மட்ட நடைபாதை அமைக்க சாத்தியக் கூறு அறிக்கை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- கோயம்புத்தூர் மாநகராட்சி, வ.உ.சிதம்பரம் பூங்கா வளாகத்தில் செயல்பட்டு வரும் மிருகக்காட்சி சாலை, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்திற்கு

மேம்படுத்தி பொது மக்களுக்கு பயன்படும் வகையில், சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களுடன் புனரமைக்கப்படும்.

- கோயம்புத்தூர் காந்திபுரம் பகுதியில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள முதல் அடுக்கு மேம்பாலத்திற்கு ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயர் சூட்டப்படும்.

- கோயம்புத்தூர் மாநகராட்சியுடன், புதியதாக இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், வெள்ளைக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் ஆகிய பகுதிகளுக்கு, பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் செயல்படுத்திட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்படும்.

முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள்

- சிக்கதாசன்பாளையம், சூலூர், வடக்கிபாளையம், பூலுவப்பட்டி, பிச்சனூர், ஆனைமலை மற்றும் பொள்ளாச்சி ஆகிய ஏழு இடங்களில், முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், சிப்பம் கட்டும் கூடம், ஏல மையம், குளிர்பதனக் கிடங்கு, பழுக்க வைக்கும் கூடம், விவசாயிகள் பயிற்சி மையம், கடைகள், தரக்கட்டுப்பாடு வசதிகள், அலுவலகம் மற்றும் எடைமேடை போன்றவை வசதிகளுடன் 27.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக, அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் 60 மெட்ரிக் டன் கணினி எடைமேடை ஏலக்கூடத்தை மின்னணுமயமாக்கல், பருத்தி தரம் பிரிக்கும் இயந்திரம், கணினி மற்றும் ஜெனரேட்டர் போன்றவை வசதிகள் இவற்றை ஏற்படுத்தி, மத்திய அரசு வேளாண் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிதி மற்றும் ‘நபார்டு’ வங்கி நிதியுதவியுடன் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய கால்நடை கிளை நிலையம்

- கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேவம்பாடி, ஆவாலப்பம்பட்டி, காரமடை ஊராட்சி ஒன்றியத்திற்குற்பட்ட இலுப்பநத்தம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோலார்பட்டி ஆகிய 4 கிராமங்களில், புதிய கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கப்படும்.

தடுப்பணைகள் கட்டுதல்

- கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், மண்ணூர் கிராமம், கொரையூர் ஆற்றின் குறுக்கே, 1.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

- மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமம் பெரியபள்ளத்தின் குறுக்கே, 1.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

- மேட்டுப்பாளையம் வட்டம், கெம்மராம்பாளையம் கிராமம் பெரிய பள்ளத்தின் குறுக்கே, 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

- மதுக்கரை வட்டம், திருமலையம்பாளையம் கிராமம் 364, குமிட்டிபதி ஆற்றின் குறுக்கே, 62.70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

- மருத்துவ வசதிகள்

- கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியம், வடசித்தூர் கிராமத்தில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

- JICA திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 286.68 கோடி ரூபாய் மதிப்பில், அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பில், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அதனைச் சார்ந்த மேட்டுப்பாளையம், பல்லடம், பொள்ளாச்சி, வால்பாறை மருத்துவமனைகளில், மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படும்.

- கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், 8.41 கோடி ரூபாய் மதிப்பில் தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள், தீக்காய சிகிச்சை மையம், புற்று நோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம், கட்டணமில்லா கருத்தரிப்பு மையம், டிஜிட்டல் சப்ஸ்டிராக்சன் ஆன்ஜியோகிராபி வசதி இவையாவும் ஏற்படுத்தப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில், 75 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதியதாக மருந்து கிடங்கு அமைக்கப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டத்தில் பணியாற்றும் 328 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு, மருத்துவ புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட 32.80 இலட்சம் ரூபாய் மதிப்பில் கையடக்க கணினிகள் (Tablets) வழங்கப்படும்.

- ஆனைமலை வட்டாரத்தில், 101 இலட்சம் ரூபாய் மதிப்பில், விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

- பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், 7.65 கோடி ரூபாய் மதிப்பில் ‘டயாலிசிஸ்’, ‘எண்டோஸ்கோப்’ உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள், இவற்றை வழங்கி சீமாங் அறுவை அரங்கம், சீமாங் பிரிவு மேம்படுத்துதல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

- காரமடை சமுதாய வட்டார மருத்துவமனையில், 16 இலட்சம் ரூபாய் மதிப்பில், நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

- மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில், 8.22 இலட்சம் ரூபாய் மதிப்பில் டயாலிசிஸ் கருவி நிறுவப்படும்.

- வால்பாறை அரசு மருத்துவமனையில், 8.22 இலட்சம் ரூபாய் மதிப்பில் ‘டயாலிசிஸ்’ கருவி நிறுவப்படும்.

மின் வசதிகள்

- கோவை மாவட்டம் சரவணம்பட்டி அலையன்ஸ் வணிக வளாகத்தில், 33/11 கி.வோ. புதிய துணைமின் நிலையம், 10.78 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- கோவை மாவட்டம் தேவனம்பாளையம் 110/22 கி.வோ. புதிய துணைமின் நிலையம்,11.37 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- கோவை மாவட்டம் பாப்பநாயக்கன்பாளையம் 110/11 கி.வோ. புதிய துணைமின் நிலையம், 9.64 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- கோவை மாவட்டம் பட்டணம் 110/11 கி.வோ. புதிய துணைமின் நிலையம், 22.34 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- கோவை மாவட்டம் சமத்தூர் 110/22 கி.வோ. புதிய துணைமின் நிலையம் 8.5 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- கோவை மண்டலத்தில் நான்கு புதிய கணினி முறையில் மின் தடை பழுதுநீக்கும் மையங்கள் 56 லட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

உயர்மட்டப் பாலங்கள்

- கோவையில் உக்கடம் – ஆத்துப்பாலம் மேம்பாலப் பணி 121.82 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

- துடியலூர் – சின்னத்தடாகம் சாலையில் கி.மீ. 9/4–ல் பழுதடைந்த தரைப் பாலத்திற்கு பதிலாக, உயர்மட்டப் பாலம் 2.75 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

- ஊட்டி – கோத்தகிரி – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு – S.புங்கம்பாளையம் சாலையில், கி.மீ. 0/4 முதல் 69/6 வரை, 1.25 கோடி ரூபாய் மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- போத்தனுார் – வெள்ளலுார் சாலையில், கி.மீ. 0/8–ல் பிரிந்து இடையர்பாளையம் செல்லும் சாலையில், கி.மீ. 4/8–ல் ஒரு கோடி ரூபாய் மதிப்பில், உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- பொள்ளாச்சி – வால்பாறை சாலையில், கி.மீ. 10/0–ல் பிரிந்து ஆனைமலை – பூலாங்கிணர் சாலையில், கி.மீ.11/4–ல் சேரும் சாலையில், கி.மீ.2/2–ல் ரூ.1.00 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

- செடிமுத்தூர் – கோபாலபுரம் சாலையில் கி.மீ.0/4–ல் பிரிந்து கேரள எல்லை – தப்பட்டை கிழவன்புதுார் செல்லும் சாலையில், கி.மீ.1/0–ல் 2.50 கோடி ரூபாய் மதிப்பில், உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- கோயம்புத்தூர் – தொண்டாமுத்தூர் – நரசிபுரம் சாலையில், கி.மீ.7/10–ல் 2.10 கோடி ரூபாய் மதிப்பில், உயர் மட்டப்பாலம் கட்டப்படும்.

- சிந்தாமணிபுதுாரிலிருந்து – நடுப்பாளையம் வழியாக பாப்பம்பட்டி செல்லும் சாலையில், கி.மீ.0/10–ல் 3.50 கோடி ரூபாய் மதிப்பில், உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

- கணபதி – அத்திப்பாளையம் சாலையில், கி.மீ.8/10–ல் 2.00 கோடி ரூபாய் மதிப்பில், உயர் மட்டப்பாலம் கட்டப்படும்.

பாலங்கள்

- காமநாயக்கன்பாளையம்– நெகமம்–செட்டிபாளையம் சாலையில், கி.மீ. 15/8–ல் 1.50 கோடி ரூபாய் மதிப்பில், பாலம் கட்டப்படும்.

- பேரூர் – வேடபட்டி சாலையில், கி.மீ. 0/6–ல் 3.50 கோடி ரூபாய் மதிப்பில், நொய்யல் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

- மேட்டுப்பாளையம் – கிச்சகத்துார் சாலையில் கி.மீ. 2/4–ல் 1.10 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படும்.

இரயில்வே மேம்பாலங்கள்

- சிங்காநல்லுார் – பீளமேடு இரயில் நிலையங்களுக்கிடையே, தண்ணீர்ப் பந்தல் சாலையில் கி.மீ. 0/6–ல் கடவு எண் 6க்கு பதிலாக இரயில்வே மேம்பாலம் 12.65 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

- கோயம்புத்தூர் இரயில் நிலையத்திற்கு அருகில் நகரும் படிகளுடன் நடைமேம்பாலம் 8.09 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- இரயில்வே கி.மீ. 13/25–27ல் பீளமேடு – கோயமுத்தூர் வடக்கு இரயில் நிலையங்களுக்கிடையே, கடவு எண்.13க்கு மாற்றாக காந்திஜி சாலை (துயிரிட்டரி – கண்ணப்பன் நகர்) கி.மீ. 0/2ல் 14 கோடி ரூபாய் மதிப்பில், இரயில்வே கீழ்பாலம் அமைக்கப்படும்.

- ராமசந்திர நாயுடு தெருவில் (மாநகராட்சி சாலை) கி.மீ. 0/4–ல் உள்ள இரயில்வே கி.மீ. 2/9–11–ல் உள்ள கடவு எண் 3க்கு மாற்றாக கோயம்புத்தூர் மற்றும் இருகூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையே, இரயில்வே மேம்பாலம் 26.70 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

- நீலிகோணாம்பாளையம் SIHS காலனி சாலை கி.மீ. 1/6–ல் கடவு எண் 5–க்கு மாற்றாக இருகூர் – பீளமேடு இரயில்வே நிலையங்களுக்கிடையே, இரயில்வே கிமீ 3/21–23–ல் 58.52 கோடி ரூபாய் மதிப்பில், இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

இரயில்வே மேம்பாலங்களுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

- துடியலூர் சரவணம்பட்டி சாலை கிமீ. 0/10ல் இரயில்வே கி.மீ. 6/12–13ல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 4க்கு பதிலாக, கோவை வடக்கு மற்றும் துடியலூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- துடியலூர் கோவில்பாளையம் சாலை கி.மீ. 1/6ல், இரயில்வே கி.மீ.8/000–100ல் உள்ள இருப்புப்பாதை கடவு எண்.5க்கு பதிலாக கோவை வடக்கு காரமடை இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம் மற்றும் குறைந்த பயன்பாட்டு சுரங்கப்பாதை,

- பொள்ளாச்சி பாலக்காடு கி.மீ. 1/8 ல் சாலையில், இரயில்வே கி.மீ. 123/1–2ல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 122க்கு பதிலாக பொள்ளாச்சி கிணத்துக்கடவு இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- காமநாயக்கன்பாளையம் அன்னூர் சாலை கி.மீ. 20/6ல், பிரிந்து வடுகன்காளி பாளையம் செல்லும் சாலையில், கி.மீ. 8/4ல் இரயில்வே கிமீ.453/11–13 உள்ள இருப்புப்பாதை கடவு எண் 135க்குப் பதிலாக இரயில்வே கி.மீ. 453/7–9ல் வஞ்சிபாளையம் சோமனூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- சேடர்பாளையம் வாய்க்கால்பாளையம் டவுன் பஞ்சாயத்து சாலை கி.மீ. 2/6ல் பிரிந்து வடுகன்காளிபாளையம் செல்லும் சாலையில் கடவு எண் 137க்குப்

பதிலாக இரயில்வே கி.மீ. 457/9–11ல் வஞ்சிபாளையம் சோமனூர் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே மேம்பாலம்,

- கரவளி மாதப்பூர் (வழி) கணியூர் செல்லும் சாலையில், கி.மீ.3/2ல் உள்ள இருப்புப் பாதை கடவு எண் 141க்குப் பதிலாக இரயில்வே கி.மீ. 463/23–25ல் சோமனூர் சூலூர் இரயில் நிலையங்களுக்கிடையே, இரயில்வே மேம்பாலம்,
- இரத்தினபுரி தில்லை நகர் பீளமேடு மற்றும் வடகோவை இரயில் நிலையங்களுக்கு இடையே, இரத்தினபுரியில் சாலை கீழ்பாலம்,
- கி.மீ. 0/2ல், ராசிபாளையம் தென்னம்பாளையம் சாலையில், இரயில்வே கி.மீ.466/21–23ல் இரயில்வே கடவு எண் 142Aக்குப் பதிலாக, இரயில்வே மேம்பாலம்,
- காரமடை–மேட்டுப்பாளையம் இரயில் நிலையங்களுக்கு இடையே காரமடை–தோலாம்பாளையம் சாலையில், இரயில்வே கி.மீ. 26/1–2ல் உள்ள கடவு எண்.11க்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் ஆகிய பணிகளுக்கு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

- மேலும், அன்னூர் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கவும்,
- காரமடை நகருக்கு, 13.20 கி.மீ. நீள கிழக்குப் புறவழிச்சாலை அமைக்கவும்,
- பொள்ளாச்சி நகருக்கு, 9.50 கி.மீ. நீள மேற்கு புறவழிச்சாலை அமைக்கவும்,
- பொள்ளாச்சி–கோவை சாலைக்கு, செட்டிபாளையம் வழியாக 23.70 கி.மீ. நீள மாற்றுப்பாதை அமைக்கவும்,
- கோவை மாநகரில், உப்பிலிபாளையம் முதல், சின்னியம்பாளையம் காளப்பட்டி விமான நிலையம் வரை (சேலம் – கொச்சின் சாலை S.H.U. 52) உயர்மட்டச் சாலை அமைக்கவும்,
- கோவை விமான நிலையத்திலிருந்து, மேட்டுப்பாளையம் நகரை சித்ரா – குரும்பபாளையம் வழியாக இணைக்கும் 8.60 கி.மீ. நீள சாலையை மேம்படுத்தவும்,
- விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆனைமலையாறு, நல்லாறு தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்த வல்லுநர் குழு அமைத்தல்:

ஆழியாறுத் திட்டத்தினை, இறுதியாகச் செயல்படுத்த, ஆனைமலையாறு திட்டத்தைச், கடந்த 27 ஆண்டுகளாகச் செயல்படுத்த பல முயற்சிகள்

மேற்கொள்ளப்பட்டு, பல இடர்ப்பாடுகளால் நிறைவேற்றப்படவில்லை. தற்போது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இத்திட்டங்களைச் செயல்படுத்த, அனுபவம் வாய்ந்த, மூத்த அதிகாரிகள், மூத்த பொறியாளர்கள் அடங்கிய வல்லுநர்கள் குழு விரைவில் அமைக்கப்படும்

இத்திட்டத்தில் நன்மை பெறும் 4 மாவட்டங்களான, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்டங்களில் உள்ள, லட்சோபலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, நீர்த்தேக்கம் கட்டுவதன் மூலமாக, வெள்ளக் காலங்களில் கடலில் கலக்கின்ற உபரிநீரைத் தேக்கவும், அடிப்படை ஆதாரமான நீர் தங்குதடையின்றிக் கிடைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதோடு, சொட்டுநீர்ப்பாசன வசதி ஏற்படுத்த வேண்டும், அதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் அரசு ஆய்வு செய்யும்.

அதேபோல, அத்திக்கடவு–அவினாசித் திட்டத்தில், ஒருசில பகுதிகள் விடுபட்டுப் போயுள்ளன. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்ற கோரிக்கையை மாவட்ட அமைச்சர் அவர்களும், சட்டப்பேரவைத் துணைத்தலைவர் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு.செல்வராஜ் அவர்களும் இங்கே வைத்தார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்று, காரமடை ஒன்றியம், பெரியநாயக்கன்பாளையம் ஆகிய ஒன்றியத்திலுள்ள விடுபட்டப் பகுதிகளைச் சேர்த்து, புதிதாக ஒரு திட்டம் வகுக்கவிருக்கின்றது. அதற்காக ஆய்வு மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்!

அதுமட்டுமல்ல, நம்முடைய விமான நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று எல்லோராலும் வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக, விரைவில் அதற்குத் தேவையான நிலத்தைப் பெற்றுத்தந்து, விமான நிலையத்தை விரிவிபடுத்த தேவையான நடவடிக்கையை இந்த அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதனையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழகத்திலேயே, தொழில்கள் நிறைந்த பகுதி கோவை மாவட்டம். இங்கு இன்னும் பல தொழில்கள் வருவதற்கும், IT Park வருவதற்கும் தேவையான நடவடிக்கையை, இந்த அம்மாவினுடைய அரசு எடுக்கும்; அதற்குத் துணை நிற்கும் என்றும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
03.12.2017 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

மலைகளின் ராணி - உதகையில்
மக்களின் ராஜா எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

நேற்றைய தலைமுறை மட்டுமல்ல,
இன்றைய தலைமுறை மட்டுமல்ல,
நாளைய தலைமுறையும் ஏற்றுக்கொள்ளும் ஒரே தலைவர்!

பாரதி கண்ட புதுமைப் பெண்
பாரதம் கண்ட புரட்சிப் பெண்
வள்ளுவன் வழியில் வாழ்ந்த பெண்
வரலாறு போற்றும் வெற்றி பெண்
தமிழ்நாட்டின் தவப்புதல்வி, தங்கத் தாரகை
இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
என்னும் தெய்வத்தை வணங்கி.

பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, இந்த எழுச்சியான நிகழ்ச்சியில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில், எதிரிகளுடைய சூழ்ச்சிகளை எல்லாம் எப்படி வெல்ல வேண்டும் என்பதையும் கடந்த வரலாற்றைப் பற்றியும் மிகத் தெளிவாக,

சிறப்பாக எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களே!

வரவேற்புரை ஆற்றியுள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சங்கர் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். அர்ஜுனன் அவர்களே! நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. கோபாலகிருஷ்ணன் அவர்களே! குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராமு அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணைத் தலைவர் முன்னாள் அமைச்சர் திரு.மில்லர் அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத் திட்ட உதவி பெறுகின்ற பயனாளிகளே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள், நீலகிரி மாவட்டத்திலே நடைபெற்று கொண்டிருக்கின்ற மிகச் சிறப்பான, எழுச்சியான பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் நூற்றாண்டு விழாவிலே மக்கள் கடல் போல் கலந்து கொண்டுள்ள காட்சியை பார்க்கின்ற போது இதுவரை ஊட்டியில் இந்த அளவிற்கு கூட்டம் கூடியது இல்லை என்ற ஒரு வரலாற்றைச் சொன்னார்கள். அந்த வரலாற்றைப் படைத்திருக்கின்றார்கள் இந்த நீலகிரி மாவட்ட மக்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம். அந்த அளவிற்குக் கழகத்தின் மீதும் இந்த இயக்கத்தின் மீதும் பாசம் வைத்திருக்கிறார்கள். இந்த அரசின் மீது இந்த மாவட்ட மக்கள் பாசம் வைத்திருப்பது இந்த கூட்டம் நிரூபித்து காட்டியிருக்கின்றது.

இந்த நீலகிரி மாவட்டத்தில், மலைகளும், ஆறுகளும், அணைகளும், பள்ளத்தாக்குகளும், மரங்களும், மலர்களும், செடிகளும் நிறைந்து, நீல வண்ண மேகத்தோடு, பச்சை வண்ண புல் தரைகள் கொஞ்சி குலாவும் நீலகிரி மாவட்டம் ராயர்கள், நாயக்கர்கள், மைசூர் அரசர்கள், கேரளவர்மா, ஆங்கிலேயர்கள் ஆகியோர் நீலகிரிப் பகுதிகளை ஆண்டிருக்கிறார்கள்.

இம்மண்ணின் மைந்தர்களான படுகர், இருளர், குறும்பர், பணியர், தோடர், கோத்தர் மற்றும் காட்டு நாயக்கர் ஆகியோர் இம்மாவட்டத்தில் ஒற்றுமையுடன் வாழ்ந்து, இம்மாவட்டத்தின் தொன்மை காத்து வருகின்றனர். இம்மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வருகின்றனர்.

மேலும், இம்மாவட்டத்தில் பெருவாரியாக வசிக்கும் படுகர் மற்றும் பழங்குடி இன மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீது, அளவு கடந்த பாசமும், அன்பும், அக்கறையும் கொண்டவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்போதெல்லாம் நீலகிரி மாவட்டத்திற்கு வருகிறார்களோ, அப்போதெல்லாம் ஒரு தாயைப் பார்க்க வரும் குழந்தைகளைப் போல், பெருந்திரளாகக் கூடிவந்து மாண்புமிகு அம்மா அவர்களிடம் அன்பு மழை பொழிவார்கள்.

நீலகிரியை “உயிர்ச் சூழல் மண்டலமாகவும்” இந்தியாவின் முதல் “உயிர்க் கோள் காப்பகமாகவும்” ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, மலை ரயில், ஊட்டி ஏரி, அணைகள், சுற்றுலா செல்பவர்களின் சொர்க்கமாகத் திகழும் தொட்டபெட்டா, அவலாஞ்சி, முதுமலை வனவிலங்கு சரணாலயம், சிம்ஸ் பார்க், குன்னூர் கல்லட்டி நீர் வீழ்ச்சி, கோத்தகிரி போன்ற ஏராளமான சுற்றுலா மையங்களைக் கொண்டது நீலகிரி மாவட்டமாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், சுற்றுலா செல்பவர்களின் சொர்க்கமாக நீலகிரி மாவட்டம் திகழ்கிறது.

தேயிலை, காப்பி, உருளை, கேரட், முட்டைகோஸ், முள்ளங்கி, பீட்ரூட், மிளகு, டர்னிப், வெங்காயம், பூண்டு, அவரை, பட்டாணி, கேழ்வரகு, சாமை, வாழை, தென்னை, நெல், இஞ்சி என பலவகை விளைச்சலுக்கு ஏற்ற வளமான மண்ணாகவும் நீலகிரி மாவட்டம் திகழ்கிறது.

பைகாரா, மரவகண்டி, மாயார், குந்தா போன்ற நீர்மின் நிலையங்களால் நீலகிரி ஒளிர்வதுடன் மற்ற மாவட்டங்களுக்கும் வெளிச்சம் கொடுக்கிறது.

150 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 06.09.2005 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

தேயிலை, ஜெரேனியம், வாசனைத் திரவியம், தைலம் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தன்னகத்தே கொண்டது நீலகிரி மாவட்டமாகும். மேலும், ஏற்றுமதித் தரம் கொண்ட ஆர்கிட் வண்ணப் பூக்கள், வீட்டில் தயாரிக்கப்படும் தரம் வாய்ந்த சாக்லேட்டுகள், வர்கி ஆகியவை ஊட்டிக்குத் தனி பெருமை சேர்க்கின்றன.

கோத்தகிரி அருகே உள்ள கரிக்கையூர் பகுதியில் 4500 ஆண்டுகளுக்கு முன்பே, கற்கால மனிதன் கால்நடைகளுடன் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் பாறை ஓவியங்களாக சித்தரிக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்

அவர்களின் திரைவாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் நீலகிரி முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது.

‘அன்பே வா’ மற்றும் ‘மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்’ போன்ற திரைப்படங்களின் பெரும்பாலான காட்சிகள், நீலகிரியில் படமாக்கப்பட்டவை. அதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப்பாடல்கள் பெரும்பாலும் உதகையில் படமாக்கப்பட்டவையே.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோதுதான், சத்துணவுத் திட்டத்தின் விரிவாக்கத்தை அறிவித்து அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் முயற்சியால், உதகையில் உள்ள பார்சன்ஸ் Valley அணை மேம்படுத்தப்பட்டு தூர்வாரப்பட்டது. அதன் காரணமாகத்தான் இன்றைக்கும் உதகை மக்களுக்கு இந்த அணை, நீர்ஆதாரமாக விளங்கி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் மலைகளையும் மலை வாழ் மக்களையும் மிகவும் நேசித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மலைவாழ் மக்களுக்கு ஒரு துன்பம் என்றால் ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டி அவர்களின் துயர் துடைப்பவர்.

சாதாரண மனிதனாக இருந்து கொண்டே மக்கள் பணி ஆற்றலாம் என்ற இலக்கணத்துடன் நடிகரான காலத்திலிருந்தே மக்களுக்குத் தொண்டு செய்து வந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

ஒருமுறை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நேர்காணல் செய்தார்கள். அப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் “நீங்கள் திரையுலகில் சாதிக்க விரும்புவது எது ?” என்று கேட்டார்கள். அதற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அளித்த பதில் அவர்களின் ஆழமான உள்ளத்திலிருந்து வந்தது.

“நமது பண்பாட்டை, கலாச்சாரத்தின் தனித்தன்மையை, பிற மொழியினரும், பிற நாட்டினரும் உணர்ந்து மதிக்கும் வகையில், சினிமாக் கலையின் மூலமாக தொண்டு செய்ய வேண்டும்”, என்பதுதான் புரட்சித்தலைவர் அவர்களின் பதில்.

நேர்காணலுக்காக ஒரு பேச்சும், சொந்த வாழ்க்கையில் ஒரு பேச்சும் என்ற நிலையில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒருக்காலமும் நடந்து கொள்ளவில்லை.

தமிழர்களுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தை, நீதியை, பழைமையை, பறைசாற்றுவதாகவே மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அனைத்துப் படங்களும் அமைந்திருந்தன.

‘பிறந்த நாடே சிறந்த கோயில்
பேசும் மொழியே தெய்வம்; இதை
மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்
கோபுரமாகும் கொள்கை’

என்று கொள்கைக் குன்றாக வாழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

தாய் நாட்டையும், தாய் மொழியையும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அதிகமாக நேசித்தார்கள் என்பதனை அவர்கள் நடித்த படங்களைக் கொண்டே நாம் தெரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “பொம்மை” என்ற சினிமா இதழுக்காக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களை பேட்டி கண்டபோது ‘உங்கள் வீட்டில் பூஜை அறைகள் உண்டா? எந்தக் கடவுளை நீங்கள் வணங்குகிறீர்கள்? என்று கேள்வி கேட்டார்.

“என் பூஜை அறையில் என் தாய், தந்தை, என் மனைவியின் தாய், தந்தை மற்றும் மகாத்மா காந்தி ஆகியோரின் படங்கள் உள்ளன. கூடவே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியும் உள்ளது. இவர்கள் தான் நான் வணங்கும் தெய்வங்கள்” என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அம்மா அவர்களின் கேள்விக்கு பதில் அளித்தார். இந்தப் பதிலில் எத்தனை ஆழமான தத்துவம் பொதிந்து கிடக்கிறது பாருங்கள்.

நாட்டை நேசிக்க வேண்டும். நாட்டை தெய்வத்திற்கு நிகராக வணங்க வேண்டும் என்ற கோட்பாட்டோடு, பூஜை அறையில் இந்தியாவின் தந்தையான மகாத்மா காந்தியின் படத்தையும் வைத்து வணங்குவது நமக்கு மகிழ்ச்சியை தருகிறது! மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காந்திஜியை தெய்வமாக மதிப்பதின் மூலம், நாட்டையே புனிதமாகக் கருதினார் என்பதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

தம் தாய், தந்தை, மாமனார், மாமியார் ஆகியோரின் படங்களை பூஜை அறையில் வைத்து வணங்கும் இல்லற மாண்பை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இந்த உலகுக்குச் சொன்ன விதம் மிகவும் அருமையானது!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வழியில், மனைவி வீட்டாரையும் மதிக்கும் பண்பாடு வளருமேயானால் எந்தக் குடும்பத்திலும் குழப்பங்கள், சண்டை சச்சரவுகள் வராது; குடும்பம் மகிழ்ச்சியாக நடக்கும் என்று அறிகிறோம்! இதனை அனைத்துத் தலைமுறைக்கும் சொன்னவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

பூஜை அறையில் முகம் பார்க்கும் கண்ணாடி ஏன்? என்ற கேள்வி எழலாம். ‘உன்னையே நீ மதிக்க தெரிந்து கொள்’ என்பதுதான் அதன் தத்துவம். எனவே, தன் வீட்டுப்பூஜை அறையையே, மிகப்பெரிய தத்துவத்தோடு அமைத்திருந்தவர்,

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தாம்.

அதனால்தான் எம்.ஜி.ஆர்அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் மனதை கவர முடிந்தது. தமிழ்நாட்டைத் தொடர்ந்து 11 ஆண்டுகள் ஆளமுடிந்தது. மறைந்து 30 ஆண்டுக்காலம் ஆகியும், மக்கள் மனதில் நிரந்தரமாக வாழ கூடிய ஒரே தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான்.

நேற்றைய தலைமுறை மட்டுமன்று; இன்றைய தலைமுறை மட்டுமன்று; நாளைய தலைமுறையும் வாழையடி வாழையாக, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை தங்கள் வீட்டு பிள்ளையாக, தங்கள் தலைவராக, தங்கள் வீட்டுப் பெரியவராக மதிக்கும் உலகத்தில், வேறு எந்த தலைவனுக்கும் வாய்க்காத பெரும்பேறாக இதை கருத வேண்டும்.

‘என் வாழ்க்கையே என் செய்தி’ என்றார் மகாத்மா காந்திஜி அவர்கள்.

மகாத்மா காந்திஜியின் வாழ்க்கை, எப்படி மக்களை வழிநடத்தும் ஒரு வழிகாட்டியாக இருக்கிறதோ, அப்படித்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கையும் மக்களை உயர்த்தும் ஒரு நல்ல முன்மாதிரியாக இன்றைக்கும் நிலவுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தம் வாழ்க்கையில் கடைபிடித்த நல்ல நெறிமுறைகள், பள்ளிப்பாட நூலில் சேர்க்க வேண்டியவையாகவே அமைந்திருக்கின்றன. அதற்கு ஒரு சம்பவத்தை இங்கே நான் நினைவுகூர விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வீட்டில் ‘குறள் உண்டியல்’ என்று ஒன்றை வைத்திருந்தார்கள். தினமும் காலையில் கவியரசர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் போன்ற பிரபலங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் வீட்டுக்கு வந்து விடுவார்கள். அறிஞர்களிடையே ‘குறள் பந்தயம்’ நடக்கும். அதாவது 10 குறள்களைத் தங்குதடையின்றி சீர்பிரித்து உச்சரிப்புப் பிழையின்றி மனப்பாடமாகச் சொல்ல வேண்டும் என்பதுதான் போட்டி. குறளைக்கூறும் போது தவறு செய்பவர்கள், அந்த உண்டியலில் ஒரு ரூபாய் போட வேண்டும். அந்த உண்டியலில், அதிகமாக ஒரு ரூபாயை போட்டவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான். ஒருபக்க வசனத்தை ஒரே மூச்சில் மனப்பாடம் செய்யும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் இருபது வரிகளை உடைய 10 குறள்களை மனப்பாடமாக சொல்ல முடியவில்லையே, ஏன் ? என்று அவருடைய நண்பர் ஒருமுறை மனம் திறந்து கேட்டுவிட்டார். அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சிரித்துக் கொண்டே.. “இந்த உண்டியல் பணத்தில்தான் ‘தமிழ் கலைக் களஞ்சியம்’ வாங்க இருக்கிறோம், அதற்குப் பணம் வேண்டாமா ? அதற்குத்தான் விட்டுக் கொடுக்கிறேன்” என்றார்கள்.

அந்த அறிஞர்கள், குறளைச் சரியாகச் சொல்வதால், குறள் உண்டியலில் காசே

சேருவதில்லை! அதனால் 'தமிழ் கலைக் களஞ்சியம்' வாங்க முடியாமல் போய்விடுமோ என்று பயந்துதான், உண்டியலில் பணத்தைப் போட்டு, தமிழ் மீது இருந்த பற்றைக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்! ஒரு படத்தின் சம்பளத்தையே இந்திய எல்லைப் போர் நிதிக்காக கொடுத்தவர்; தேசப்பற்று உள்ளவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதுபோன்றே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பாகிஸ்தான் போர் நிதிக்காக அப்போதைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியிடம் தான் அணிந்திருந்த தங்க நகைகள் அனைத்தையும் கழட்டிக் கொடுத்து தேசப்பற்று மிகுந்த தலைவர் என்று பெயர் பெற்றவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தர்ம சிந்தனையும் நமது இருபெரும் தலைவர்களுக்கும் இயற்கையாகவே அமைந்திருந்தது. அதுவே அவர்களுக்கு பலமாக அமைந்தது. மக்களை கவரும் மகாசக்தியாக அவை விளங்கின. இன்னும் நூறாண்டுகள் ஆனாலும் அழிக்க முடியாத ஒரு பேரியக்கத்தை தொடங்கவும், காக்கவும் அவர்களால் முடிந்தது.

'தாய் தந்தை வைக்கும் இயற்பெயருக்கு நாம் பொறுப்பல்ல – நாட்டில் நாம் எடுக்கின்ற நல்ல பெயருக்கு நாம்தான் பொறுப்பு' என்ற தத்துவத்திற்கு நமது இருபெரும் தலைவர்களும் உதாரணமாகத் திகழ்ந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரே மறக்கும் அளவிற்கு, அவருக்கு மக்கள் வைத்த 'மக்கள் திலகம், புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல்' என்ற பெயர்கள்தாம் அதிகமாக பேசப்பட்டன.

அதைப்போல.. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இயற்பெயரே மறக்கும் அளவிற்கு, 'புரட்சித்தலைவி' 'பொன்மனச் செல்வி' என்ற பெயர்கள் மக்கள் மனதில் பதிந்தன. அதையெல்லாம் மிஞ்சும் அளவிற்கு 'அம்மா' என்ற ஒற்றைச் சொல் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு மிகச் சிறந்த அடையாளமாகத் தமிழகத்திலே திகழ்கிறது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு ஆற்றிய உரை ஒன்றில்,

"என் பெற்றோர் வைத்த பெயரே மறந்து போகும் அளவிற்கு, நீங்கள் அழைக்கின்ற 'அம்மா' என்கின்ற ஒரு சொல்லுக்காகவே, என் வாழ்நாட்களை உங்களுக்காக அர்ப்பணித்து உழைத்துக் கொண்டிருக்கிறேன்!" என்று மனம் உருகப் பேசியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கலை உலகில் காலடி எடுத்து வைத்து பேசிய முதல் வசனமே 'அம்மா....அம்மா.....' என்று அழைப்பதுதான். அவர் அழைத்த அந்த அம்மா என்கின்ற வார்த்தைதான், பின்னாளில் உலகையே அவரை 'அம்மா' என்று அழைக்க வைத்ததோ? என்று நாம் நினைக்கின்றோம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்கின்ற மிகச்சிறந்த சாதனைப் பெண்மணி

வாழ்ந்த சம காலத்தில் நாமும் வாழ்ந்திருக்கிறோம் என்ற பெருமை நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைப்போல் துணிச்சலும், வீரமும், அறிவும் மிக்க ஒரு பெண்மணியை, நம் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறோமா என்றால் ‘இல்லை’ என்ற பதில்தான் வரும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் துணிச்சலையும் வீரத்தையும் எடைபோட்டுத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை அரசியல் களத்தில் இறக்கி எதிரிகளை பந்தாட வைத்தார்கள்.

ஒற்றைப் பெண்மணியாக இருந்து, எதிரே இருந்த பெரிய கூட்டத்தையே கதிகலங்க வைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! கடந்த பாராளுமன்றத் தேர்தலில், 39க்கு 37 இடங்களைப் பெற்று, இந்தியாவிலேயே நாடாளுமன்றத்தில் மிகப்பெரிய மூன்றாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்தை உருவாக்கியவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

‘சவாலே, சமாளி’ என்ற படத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாடலை நாம் உற்றுக் கவனித்தால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் குணம் எப்படிப்பட்டது என்பது நமக்கு விளங்கும்.

“சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு
தென்றலே உனக்கேது சொந்த வீடு” என்ற பாடலில்

“வளரும் தென்னை மரமே –
நீ வளர்ந்ததைப்போல் நான் நிமிர்ந்து நிற்பேன்

வணங்கி வளையும் நாணல் –
நீ வளைவதைப்போல் நான் தலை குனிவதில்லை”.

என்று கடைசிவரை யாருக்கும், தலைகுனியாமல் நிமிர்ந்து வாழ்ந்த ஒரே தலைவர் நமது மாண்புமிகு ‘புரட்சித் தலைவி அம்மா’ அவர்கள்.

தம் வழியில்தான் தம் தொண்டர்களையும் அவர்கள் வழி நடத்தினார்கள். நமது கட்சியை ராணுவக் கட்டுப்பாட்டோடு முதன்முதலில் நடத்தியது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்.

ஒருமுறை நேர்காணலில் ஒரு பத்திரிகையாளர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் “உங்களுக்குப் பிறகு அதிமுகவின் தலைமைப் பொறுப்பை ஏற்க தகுதியுடையவர் யார் ?” என்று கேட்டார்.

‘தகுதியுடையவர் யார் என்பதை கழக உடன்பிறப்புகளே முடிவு செய்வார்கள்’

என்ற ஒரு பதிலை பதிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப்பிறகு கழகத்தொண்டர்கள் அனைவரும் சேர்ந்துதான் கழகத்தை காப்பாற்றி வருகிறோம். ஒவ்வொருவரும் ஒரு தூணாக நின்று, இன்றும் கழகத்தை நிலைநிறுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டிற்கு வழங்கிய திட்டங்கள்தாம் நமக்கு மிகப்பெரிய பலமாக இருக்கிறது. ஏழை, எளிய மக்களுக்காகத் திட்டங்களைத் தொடர்ந்து நாம் நடைமுறைப்படுத்திவந்தாலே.. மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல இன்னும் நூறாண்டுகள், கழகம் வேர் ஊன்றி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

நாங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் திட்டங்கள் போடுவதிலும், அதை விரைந்து செயல்படுத்துவதிலும் சிறந்தவர்கள் என்பதை இங்கு நாங்கள் அறிவிக்கின்ற திட்டங்களைக் கொண்டே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

உதகை நகராட்சிக்கான 27 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் 5 கோடி ரூபாய் செலவில் நஞ்சநாடு இன்ட்கோ கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை உட்பட, 57 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 258 பணிகளை, இந்த நிகழ்ச்சியின் வாயிலாகத் தொடக்கி வைத்துள்ளேன்.

நீலகிரி மாவட்டத்தில் 95 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய 2 பணிகள் உட்பட, 272 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஆயிரத்து 88 பணிகளுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த 19 ஆயிரத்து 79 பயனாளிகளுக்கு, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 81 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், இன்று வரை தமிழ்நாடு முழுவதும் 15 ஆயிரத்து 832 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 36 ஆயிரத்து 28 பணிகளை தொடக்கி வைத்தும், 6 ஆயிரத்து 399 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 7 ஆயிரத்து 212 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம் 22 ஆயிரத்து 232 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 43 ஆயிரத்து 240 பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்திற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளில், ஒரு சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

சுமார் 37 ஆயிரத்து 500 சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய சுமார் 152 கோடி ரூபாய் விவசாயக் கடன், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம், சுமார் 1 இலட்சத்து 13 ஆயிரம் விவசாயிகளுக்கு சுமார் 610 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில், சுமார் 45 ஆயிரம் பயனாளிகளுக்கு, 28 கோடியே 48 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

49 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 32 ஆயிரத்து 330 மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் இந்த நீலகிரி மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

படித்த ஏழைப் பெண்களின் திருமண உதவி திட்டத்தின் கீழ், சுமார் 9,500 பெண்களுக்கு, சுமார் 23 கோடி ரூபாய் நிதி உதவியும், 15.15 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டிலேயே இப்படிப்பட்ட திட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தாம் கொண்டு வந்தார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிகள் மூலம், சுமார் 439 கோடி ரூபாய் நேரடி வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

8 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம், 1,464 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின்கீழ் 73 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு சுமார் 25 கோடி ரூபாய் உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் சுமார் 47 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2 ஆயிரத்து 790 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தனிநபர் இல்லக் கழிவறைகள் திட்டத்தின்கீழ் 38 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 32 ஆயிரத்து 771 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையின் 'தாய் திட்டம்' உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 1,300 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சுமார் 103 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 17 ஆயிரம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டப் பேரூராட்சிகளில், பல்வேறு திட்டங்களின்கீழ் சுமார் 91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 1,500 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில், உதகை, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் நகராட்சிகளில் பல்வேறு திட்டங்களின்கீழ் சுமார் 128 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரத்து 156 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நீலகிரிமாவட்டத்தில்உதகை,குன்னூர்,கூடலூர்ஆகியசட்டமன்றத்தொகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் சுமார் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 180 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், கூடலூரில் சுமார் 204 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 66/11 KV துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மின் பகிர்மான வட்டத்தில் சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 1,350 கிலோ மீட்டர் புதிய தாழ்வழுத்த மின் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித் துறையின் சார்பில், மொத்தம் 32 பணிகள், 77 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம், கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 316 கோடி ரூபாய் செலவில் சுமார் 640 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் திட்டங்களாலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களாலும், தமிழ்நாட்டு மக்கள் இன்னும் பல நூறாண்டுகள் நற்பலன்களை அனுபவிப்பார்கள். எனவே, தமிழ்நாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இன்னும் பல நூறாண்டுகள் ஆட்சி செய்யும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்து, அதனைத் தமிழ் மக்களின் மனதில் வேரூன்ற வைத்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயர், காலம் காலத்திற்கும் இந்த மண்ணில் நிலைத்து நிற்கும்!

‘எம்.ஜி.ஆர்’ என்ற பெயர் – எங்களுக்கு மந்திரம்! அவருடைய பெயரைச் சொல்லியே நாங்கள் எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்வோம்! அவருடைய பெயருக்கு அத்தனை மகிமை இருக்கிறது. எங்களை உருவாக்கிய மாண்புமிகு தலைவர்களின் ஆசி எங்களுக்கு இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் ‘ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டிய கதையாக ஒரு சிலர் கூடா நட்புக் கொண்டு இந்த மகத்தான இயக்கத்திற்குக் களங்கம் விளைவிக்க முயற்சி செய்கிறார்கள். அவர்களின் கனவும், முயற்சியும் ஒரு காலமும் வெற்றி பெறாது’ இதனை ஒரு கதையின் மூலம் கூறினால் உங்களுக்கு நன்கு புரியும்’

ஒரு ஏரிக்கரையில் எலியும், ஆமையும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஆமை, ஏரி நீருக்குள் மூழ்கி, சில மணி நேரங்கள் நீந்திவிட்டு கரைக்கு வரும். இதனைக் கரையிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் எலிக்குத் தானும் ஆமையைப்போல், நீருக்குள் மூழ்கி நீந்த வேண்டுமென்று ஆசை வந்தது. ஒரு நாள் தன் ஆசையை தனது நண்பனான ஆமையிடம் சொன்னது. ‘நீ – நீருக்குள் மூழ்கினால், உனக்கு நீந்தத் தெரியாது. எனவே, நான் நீரில் நீந்தும்போது, நீ எனது முதுகில் உட்கார்ந்து கொள். உன்னை நீருக்குள் கொண்டு சென்று சுற்றிக் காட்டுகிறேன்’, என்று ஆமை சொன்னது. அதன்படியே, ஒரு நாள், ஆமை ஒரு கயிற்றின் ஒரு முனையை எலியின் காலிலும், மறுமுனையை தன் காலிலும் கட்டியது. ‘ஏன் இப்படி கட்டுகிறாய்?’ என்று எலி கேட்டது. ‘ஒரு தற்காப்புக்குத்தான், நான் நீந்தும்போது – நீ நீரில் விழுந்தாலும் உன்னை நான் காப்பாற்றுவதற்கு எளிதாக இருக்குமல்லவா? – அதற்காகத்தான்’.

‘நாம் நீருக்குள் நீந்தும் போது, உனக்கு மூச்சு முட்டினால், என் கழுத்தைத்தட்டு, நான் நீருக்கு வெளியே வந்து விடுவேன். மூச்சு விட்டுக்கொண்ட பிறகு மீண்டும் நீருக்குள் போய் நீந்தலாம்’ என்று ஆமை கூறியது. ஆமையின் அறிவையும், அன்பையும் கண்டு எலி மகிழ்ச்சியடைந்தது. ஆமை, எலியை முதுகில் ஏற்றிக்கொண்டு நீருக்குள் மூழ்கி நீந்த ஆரம்பித்தது. எலிக்கு மூச்சு திணறும்போது ஆமையின் கழுத்தை தட்டவே, ஆமை நீருக்கு வெளியே வந்தது. இப்படியே இரண்டும் வெகுநேரம் நீருக்குள் போவதும் வெளியே வருவதுமாக இருந்தன.

இதை வானத்தில் வட்டமடித்துக்கொண்டிருந்த ஒரு கழுகு பார்த்து, அவற்றை இரையாக்கிக் கொள்ள நினைத்தது. கழுகு வானத்திலிருந்து தங்களைப் பார்ப்பதை ஆமை கவனித்து விட்டது. எனவே, முதுகில் எலி இருப்பதைக்கூட மறந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நீருக்குள் மூழ்கி மிகவும் ஆழத்திற்கு சென்றது. எனவே, எலி மூச்சுத்திணறி இறந்து போனது. இறந்த பின் எலி நீருக்கு வெளியே வந்து மிதந்தது.

இதைப் பார்த்த கழுகு, எலியைக் கொத்தித் தூக்கிக்கொண்டு பறந்தது. எலி, ஆமையுடன் கயிற்றால் கட்டப்பட்டிருந்ததால், எலியுடன் ஆமையையும் தூக்கிக்கொண்டு, கழுகு பக்கத்திலிருந்த மலைக்குள் சென்று அந்த இரண்டையும் இரையாக்கிக் கொண்டது. அப்போது, உயிர் போகும் தருவாயில் ஆமை கழுகிடம் சொன்னது,

‘கழுகே, நாங்கள் கூடா நட்புக் கொண்டிருந்ததால் எங்களுக்கு இந்த ஆபத்து வந்தது. கூடா நட்பு கேடாய் விளையும் என்ற பழமொழிக்கு நாங்கள் தான் உதாரணம்’ என்று அழுதபடியே உயிரை விட்டது.

எனவே. பலர் கழகத்தின் கொள்கையை மறந்து , கூடா நட்புக் கொண்டு, எதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் தனியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை நிறுவி வெற்றிகரமாக நடத்தி காட்டினார்களோ, அக்கழகத்தினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து உலகமே வியக்கும் வண்ணம் மாபெரும் வெற்றி இயக்கமாக, தொடர்ந்து இரண்டாம் முறை கழகத்தினை வெற்றிபெற வைத்து தமிழகத்தின் ஆட்சிக்கட்டிலில் அமர்த்தினார்களோ, அதை எல்லாம் மறந்து விட்டு, எதிரிகளுடன் கூடா நட்பு கொண்டு, தனியாக சாதித்துவிட்டதாக கருதி, அகம் பாவத்துடன், பேசி திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்கள் நட்பு தங்களுக்கே ஆபத்தானது என்பதனை அவர்களுக்குக் காலம் கட்டாயம் உணரவைக்கும்! அவர்களை, உண்மையான தொண்டர்கள் உற்று கவனித்துக் கொண்டுதானிருக்கிறார்கள், காலம் என்கிற கழுகு அவர்களை அழித்துவிடும் என்பதனை இந்த தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நீலகிரி மாவட்டத்தில், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவை நாம் காண முடிந்தது. நான் இந்த மேடைக்கு வந்தபொழுது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகைப்படத்தை இங்கே பார்த்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தலையிலே ஒரு துண்டைக் கட்டியிருக்கின்ற ஒரு காட்சியைப் பார்த்தேன். அப்பொழுது எங்களுக்கெல்லாம் நினைவு வந்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இங்கே மலர்க்கண்காட்சியை தொடக்கி வைக்க வந்த நேரத்தில், இங்கே, ஒரு பகுதியிலே படுகர் இனப் பெண்களோடு ஆடி மகிழ்ந்த காட்சியை நாம் நினைவில் பார்க்கின்றபொழுது, இன்னும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மாவட்ட மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று தான் நமக்குத் தோன்றுகின்றது. அவர், இந்த மண்ணில் இருந்து மறைந்திருக்கலாம், ஆனால் இந்த மாவட்ட மக்கள் மனதிலே இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் தெய்வமாக இருக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே நாம் எண்ணுகின்றோம்!

அதைப்போன்றே, ஊட்டி பகுதியிலே ரோஜா மலர்களைக் காணுகின்றபொழுது, இன்றைக்கும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நினைவு வருகின்றது! 1995ஆம் ஆண்டு, உதகையில் ரோஜாத் தோட்டம், அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டது. கிட்டத்தட்ட 4000 ரோஜா ரகங்கள் கொண்ட மலர்களை, மொத்தம் 30,000 ரோஜாச் செடிகள் மூலமாக, நாம் காணுகின்ற காட்சியை உருவாக்கிக் காட்டியவர் நம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே, அப்படிப்பட்ட உன்னதத் தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

உருவாக்கிச் சென்றது, இன்றைக்கும் நம்முடைய மனதிலே நினைவாக நினைத்துக் கொண்டிருக்கின்ற அளவிற்கு அவர்களுடைய பங்கு இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதேபோன்று, எனக்கு முன்னாள் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். நாம் ஒன்றை நினைத்துப் பார்க்கவேண்டும். நடைபெற்று முடிந்த தேர்தல், ஒரு வித்தியாசமான தேர்தல். மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன் இருக்கின்ற கழகத்தினுடைய நிர்வாகிகளும் சரி, இங்கே வந்திருக்கின்ற பொதுமக்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலிருக்கின்ற மக்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலிருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, அல்லது இந்தியாவில் இருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, உலகத்தில் இருக்கின்ற எந்தவொரு அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் வராத எண்ணம் கொண்ட ஒரு வித்தியாசமான தேர்தல்தான் இந்த ஆர்.கே. நகர் தேர்தல்! ஆகவே, இதற்கு முன்பு 'திருமங்கலம் பார்முலா' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதை விஞ்சி, இப்பொழுது 'ஆர்.கே.நகர் பார்முலா' என்ற ஒரு 'பார்முலாவைக்' கண்டுபிடித்து தில்லுமுல்லு செய்து வெற்றி பெற்றிருக்கின்றார். அந்த பார்முலா ஹவாலா பார்முலா. இதுவரைக்கும் யாரும் சிந்தித்ததுகூடக் கிடையாது. எவ்வளவோ அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள், எவ்வளவோ சிந்தனையாளர்கள் இருக்கின்றார்கள். எவருடைய எண்ணத்திற்கும் எட்டாதது ஒரு நபருக்கு எட்டியது என்று சொன்னால், அவர் எப்படிப்பட்ட கிரிமினலாக இருப்பார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 'ஹவாலா பார்முலா' மூலம் வெற்றி பெற்று, எங்களைத் துரோகி என்று சொல்கின்றார். யார் துரோகி என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆக, இப்படிப்பட்ட 'பார்முலாவைக்' கொண்டு வந்தவர்தான் துரோகி என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுகாட்ட விழைகின்றேன்.

எனக்கு முன்னாலே அண்ணன் அவர்கள் சொன்னார்கள், மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன்னால் வீற்றிருப்பவர்களும் சரி, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் முன்னோடிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் கட்சியிலே இணைகின்றபொழுது உழைத்துத்தான் முன்னுக்கு வருவார்கள். உழைக்காமலேயே முன்னுக்கு வந்தவர் என்று சொன்னால், அது டிடிவி தினகரன் ஒருவர் தாம். அதைத்தான் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அவருடைய உழைப்பு என்ன? எந்த உழைப்பும் கிடையாது. அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், அம்மா வீட்டிலே தங்கியிருந்து அம்மாவிற்கு உதவி செய்தார். அந்த உதவியின் மூலமாக, கொல்லைப்புறத்தின் வாயிலாக உள்ளே புகுந்தவர்தான் இந்த டிடிவி தினகரன். இவர் முதல் முறை வெற்றி பெற்ற இடத்தில், அடுத்தமுறை போட்டியிட்டுத் தோற்றார். எங்கே மக்கள் செல்வாக்கு இவருக்கு இருக்கின்றது? இப்பொழுது ஹவாலா பார்முலாவை வைத்து நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். மக்களை நேரடியாகச் சந்தித்து, அதன் மூலமாக நீங்கள் வெற்றி பெற்றவர்கள் அல்ல.

இந்த நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தெரியும். ஆகவே, துரோகிகள் நாங்கள் அல்ல, நாங்கள் அத்தனைபேரும் உழைத்தவர்கள், உழைத்து முன்னுக்கு வந்தவர்கள். மேடையிலே வீற்றிருப்பவர்களும் சரி, மேடைக்கு முன்னால் வீற்றிருப்பவர்களும் சரி, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் தொண்டர்களும் நிர்வாகிகளும் உழைத்துத்தான் இந்தப் பதவிக்கு வந்திருக்கின்றோம்.

மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்கள் எப்படி அவர் உயர்ந்தார் என்பதனைக் கோடிட்டுக் காட்டினார்கள். 1972இல் பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் அப்பொழுது அண்ணா திமுக என்ற இயக்கத்தை உருவாக்கினார்கள். அப்பொழுது கழகத்திலே நான் இணைந்தேன். என்னுடைய சிலுவம்பாளையம் என்ற சிறு கிராமத்திலே கிளைக் கழகச் செயலாளராக நான் பொறுப்பை முதலில் தொடங்கினேன். அப்பொழுது, படிப்படியாக ஒன்றிய எம்.ஜி.ஆர்அமைப்புப் பொறுப்பாளராக, அதற்குப் பிறகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவோடு இணைந்தபிறகு மாவட்ட கழகத்தின் இணைச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று பல்வேறு பொறுப்புகளை எனக்குத் தந்தார்கள். கழக அமைப்புச் செயலாளர், கழக கொள்கை பரப்புச் செயலாளர், அதற்குப் பிறகு அம்மா மறைவிற்குப் பிறகு தலைமை நிலையச் செயலாளர் என்று பல்வேறு பொறுப்புகளை எங்களுக்கு வழங்கினார்கள். எங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு விசுவாசமாக, இந்த இயக்கத்திற்கு விசுவாசமாக உழைத்த காரணத்தினாலே, இருபெரும் தெய்வங்கள் ஆசியோடு, நிர்வாகிகள் துணையோடு, மக்கள் துணையோடு இந்தப் பதவியை எங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். ஆனால், உங்களுக்கு அப்படிப்பட்ட பதவி வழங்கப்படவில்லை! நாங்கள் துரோகிகள் இல்லை! உழைத்தவர்கள்! மக்களால் போற்றப்படுகின்றவர்கள். துரோகிகள் என்பார் யார்? அவர்களை தாம்! கொல்லைப்புறத்தின் வழியாக வந்து, இந்தக் கட்சியை அபகரிக்கப் பார்க்கின்றார்கள். இந்த ஆட்சியைக் கவிழ்க்கப் பார்க்கின்றார்கள். அதற்குத் தக்க பாடத்தை, மக்களும் கழகத் தொண்டர்களும் புகட்டுவார்கள் என்பதை இந்த நிகழ்ச்சியின்வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோன்று, எப்பொழுது பார்த்தாலும் ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார், இதற்கு முன்னால், யாருமே கண்டுபிடிக்கவில்லை. இவர்கள் எப்பொழுது வந்தார்களோ அதற்குப்பிறகு புதுப்புது பெயர்கள் வைத்திருக்கின்றார்கள். இந்த இயக்கத்தை இருபெரும் தலைவர்கள் உருவாக்கினார்கள். இந்த இயக்கத்தில் இருக்கின்ற அத்தனைபேரும், இந்த இயக்கம் உண்மையாக வளர வேண்டும், இந்த ஆட்சி உண்மையாக தொடர வேண்டுமென்று, மனசாட்சியோடு இருக்கின்றவர்களாகவே இந்த இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். உங்களிடத்திலே இருப்பவர்கள் வேண்டுமானால் 'ஸ்லீப்பர் செல்களாக' இருக்கலாம். எங்களிடத்திலே இருக்கின்ற அத்தனைபேரும் பத்தரைமாற்றுத் தங்கமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால், எங்களிடத்தில் இருக்கின்ற அத்தனைபேரும்,

உழைப்பால் பொறுப்பாளர்களாக வந்தவர்கள். மக்களுக்குத் தொண்டாற்றி பெயரும், புகழும் பெற்றவர்கள் எங்களிடத்திலே இருக்கின்றார்கள். உங்களைப் போல் குறுக்கு வழியில் வந்தவர்கள் அல்லர் அவர்கள்! அவரிடத்திலே யார் இருக்கின்றார்கள். பல கட்சிக்குப் போய்வந்தவர்கள்தான் அவரிடத்திலே இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட எண்ணம்தான் அவர்களிடத்தில் வரும், நல்ல எண்ணமே வராது. எங்களுக்கு இதுவரை எத்தனையோ முறை சோதனை வந்திருக்கின்றது. சோதனை வந்தபொழுதெல்லாம் 'ஸ்லீப்பர் செல்' என்று இப்படிப்பட்ட பெயர் வைத்திருக்கின்றார்களா? எப்பவும் வைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு வீரமணி அவர்கள் சொல்கிறார், கிரிமினல் கண்டுபிடித்தது, அப்படிப்பட்ட சொல்லை. ஏனென்றால் அவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட நிலைமையெல்லாம் வரும். அப்படிப்பட்ட புத்தி கொண்டவர்கள்தாம் அவர்கள் எல்லோரும்! அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், கொஞ்சநாளைக்குத்தான், அந்தப் பதவியை அவர்கள் அனுபவிக்க முடியும். அதற்குமேல் ஆண்டவன் பார்த்துக் கொள்வான். அது எப்படியென்று உங்களுக்குத் தெரியும்.

அதேபோல, இன்றைக்கு இந்த ஆட்சியையும், கட்சியையும் அழிக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர். அவரோடு துணைபோய்க் கொண்டிருக்கின்றார் இந்த டிடிவி தினகரன். இருவரும் கூட்டு சேர்ந்துதான் நடைபெற்ற ஆர்.கே.நகர் தேர்தலில் போட்டியிட்டார்கள்! கதை என்னவானது, எங்களை வீழ்த்த வேண்டுமென்று நினைத்தார்கள், அவர்களை மக்கள் வீழ்த்திவிட்டார்கள். பத்து கட்சி ஒன்றாகச் சேர்ந்து கூட்டணி வைத்தும்கூட பெற்ற ஓட்டு சொற்ப ஓட்டு, டெபாசிட்கூட பெறமுடியவில்லை. அதற்குமேல் நான் விட்டுவிடுகின்றேன். ஏனென்றால், இது பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா. "இது நூற்றாண்டு விழாவா, கட்சிக்கூட்டமா?" என்று போனவுடன் கருத்துச் சொல்வார்கள். இருந்தாலும் கட்சி இருந்தால்தான், ஆட்சிக்கு வரமுடியும், ஆட்சியிலிருந்தால்தான், நூற்றாண்டு விழாவைக் கொண்டாட முடியும்! இன்றைக்கு அவர்களெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களுக்குப் பிறகு, இந்த கட்சி இருக்காது என்று நினைத்தார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்து இந்தக் கட்சியைக் காப்பாற்றி, இன்றைக்கு இந்திய நாடே உற்று நோக்குகின்ற அளவிற்கு ஒரு சிறந்த ஆட்சியை, நாட்டு மக்களுக்குத் தந்த தலைவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! அம்மா மறைவிற்குப் பிறகு இந்த கட்சி அழிந்துவிடும், ஆட்சி கவிழ்ந்துவிடுமென்று கற்பனை கனவு கண்டவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு சாவு மணி அடிக்கப்பட்டுவிட்டது. இந்த ஆட்சியும் கலையாது, இந்த ஆட்சியை கவிழ்க்கவும் முடியாது, இந்த கட்சியையும் உடைக்க முடியாதென்று, இந்த பத்தரை மாதகாலத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிரூபித்துக் காட்டிவிட்டது!

எதிர்க்கட்சித் தலைவர் இதற்கு முன் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார். "இந்த ஆட்சி பட்ஜெட் போடும்வரை தாக்குப்பிடிக்குமா?" மானியக் கோரிக்கை

முடியும்வரை இந்த ஆட்சி தாக்குப்பிடிக்குமா? என்று தாக்கு பிடித்துவிட்டது. அதோடு அவர் அப்படி சொல்வதை விட்டுவிட்டார். இப்பொழுது புதிதாக ஒரு ஆள் ஆரம்பித்துவிட்டார், 'ஹவாலா பார்முலா' மூலம் வெற்றி பெற்ற ஒரு ஆள்! "இந்த ஆட்சியை மார்ச் மாதத்திற்குள் கலைப்பேன் என்று!" நீ இருந்தால்தானே கலைப்பாய், எங்கிருப்பாய் என்று பார்த்துக்கொள்ளலாம். ஆண்டவன் ஒருவன் இருக்கின்றார். நல்லது நினைத்தால் நல்லது நடக்கும், கெட்டது நினைத்தால் கெட்டுத்தான் போவார்கள். யார் கெடுதல் நினைத்தாலும் கெட்டுத்தான் போவார்கள். ஏனென்றால் இந்த இயக்கம் சாதாரண இயக்கமல்ல. எனக்கு முன்னால் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களும் குறிப்பிட்டார்கள், எத்தனைபேர் உயிர்த் தியாகம் செய்திருக்கின்றார்கள், எத்தனைபேர் போராட்டத்தில் கலந்து சிறை சென்றிருக்கின்றார்கள். கொஞ்சநஞ்சமல்ல! 1972–லிருந்து, 2017 வரை, எவ்வளவு சிரமப்பட்டு இந்த இயக்கத்தை கட்டிக்காத்திருக்கின்றார்கள். ஆகவே, அப்படி கட்டிக்காத்த இயக்கத்தை உடைக்க நினைக்கின்றார்கள், அழிக்க நினைக்கின்றார்கள். அவர்கள் எப்படி வாழ்வார்கள் என்பதனை இறைவன் பார்த்துக்கொள்வான் என்று இந்த நேரத்திலே தெரிவிப்பதுடன், இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதனையும் இங்கே நான் பதிவு செய்ய விழைகிறேன்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது படித்த இளம்பெண்களுக்கு, 'அம்மா இருசக்கர வாகனம்' வழங்கப்படும் என்ற செய்தியைச் சொன்னார்கள். அம்மா பிறந்தநாளான பிப்ரவரி 24, 2018 அன்று, "அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின்கீழ்', பாதி விலை மானியத்தில், அதாவது ஒரு ஸ்கூட்டர் ரூபாய் 50,000 என்றால், ரூபாய் 25,000 மானியமாக வழங்கப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். முதலில், ஒரு லட்சம் பெண்களுக்கு, 'அம்மா இருசக்கர வாகனம்' வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்தகாலத்திலே, தைத்திருநாளன்று, நம் தமிழ்நாட்டு மக்கள் தைப்பொங்கலை மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டுமென்பதற்காக தைப்பொங்கல் பரிசு வழங்குவார்கள். அதனையும் அம்மாவினுடைய இந்த அரசு அறிவித்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று காலை, அன்புமணி ராமதாஸ் சொல்லியிருக்கின்றார், ICU–ல் இருப்பதுபோல சொல்கிறார். அவர் டாக்டர், அப்படித்தான் அவர் கண்ணுக்குத் தெரியும், சிந்தனை அப்படித்தான் வரும்! 2018இல், ஊழலற்ற நிர்வாகமாகக் கொண்டுவரவேண்டுமென்று ஒரு செய்தி வந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இவர்கள் மேலிருக்கின்ற சிபிஐ வழக்கு முடியட்டும்; ஊழலை ஒழிப்போம் என்று

சொல்பவர், தன் மீது இருக்கும் ஊழலை நிரூபித்துக்காட்டவேண்டும், அதற்குப்பின் சொன்னால் சரியாக இருக்கும்! முதலில் அவர்கள் திருந்தட்டும், பிறகு மற்றவர்களை திருத்தப்பார்க்கட்டும்.

இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கின்றது என்பதற்கு ஒரு சான்று, தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டு இருக்கும் ஒரு செய்தி. அந்த அறிக்கையில், இந்தியாவிலுள்ள, ஆறு 'மெட்ரோ' நகரங்களில், பெண்கள், பாதுகாப்பாக வாழ்வதற்கு உகந்த முதல் பெருநகரமாக இருப்பது தமிழ்நாட்டினுடைய சென்னை மாநகரமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள பெண்களுக்கு எதிரான குற்றங்கள், டெல்லியில், 25.7 சதவீதம், மும்பையில், 6.4 சதவீதம், கொல்கத்தாவில் 3.5 சதவீதம் உள்ளது. இதுவே சென்னையில் 2 சதவீதமாக உள்ளது. அதுபோலவே அகில இந்திய அளவில் உள்ள பெரிய மாநிலங்களில், தமிழ்நாட்டு பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் மாநிலம், தமிழ்நாடு என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. ஆகவே, சட்டம், ஒழுங்கு எந்தளவிற்கு பேணிக்காக்கப்படுகின்றது என்பதற்கு, இதுவே சான்று என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

இது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் நீங்கள் அனைவரும், மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இருக்கின்றீர்கள். இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் பத்திரமாக வீடுபோய் சேர்ந்தால்தான், நாங்களும் மனநிறைவு அடைவோம்! ஆகவே, நீங்கள் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா, சீரும் சிறப்போடும் என்றைக்கும் இல்லாத அளவிற்கு, இன்றைக்கு நீலகிரி மாவட்டத்திலே அதிக மக்கள் கொண்ட பொது நிகழ்ச்சி இதுதான் என்று நிரூபிக்கின்ற அளவிற்கு, இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, அதற்கு துணையாக விளங்கியுள்ள மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். அர்ஜுனன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி. கோபாலகிருஷ்ணன், குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. ராமு, மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஏ.கே. செல்வராஜ், முன்னாள் அமைச்சர் வாரியத்தலைவர் திரு.மில்லர், முன்னாள் அமைச்சர் திரு.புத்தி சந்திரன், இந்த நிகழ்ச்சி, செம்மையுற நடைபெற உறுதுணையாக விளங்கியுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அரசு அலுவலர்கள், வருகை புரிந்துள்ள பொதுமக்கள் ஆகியோர் அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து கொண்டு, இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்கு வருகின்றபோது, மேட்டுப்பாளையத்திலே மிகச் சிறப்பான எழுச்சியான வரவேற்பு நிகழ்ச்சியை

நடத்தியுள்ள மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஏ.கே. செல்வராஜ் அவர்களுக்கும், நகரச் செயலாளர் அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

நீலகிரி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்

அறிவிப்புகள்

★ இம்மாவட்டத்தில் வசித்து வரும் பழங்குடியினரான தோடர், கோத்தர், இருளர், காட்டுநாயக்கர், குறும்பர் மற்றும் பனியர் ஆகியோரின் 500 குடியிருப்புகள், மிகவும் பழுதடைந்து உள்ளதால் அவை, 5 கோடி ரூபாய் செலவில் பழங்குடியினர் நலத்துறை மூலம் பழுதுபார்க்கப்படும்.

★ குன்னூர் நகராட்சி பேருந்து நிலையம், 44 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

★ கூடலூர் பேருந்து நிலையம், அதிக பேருந்துகளை நிறுத்தும் வகையில், 4.75 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும்.

★ இந்த மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.

★ உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட சாலைகள், 2.73 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

★ சுற்றுலாத் தலமான உதகையில், வாகனங்கள் நிறுத்தும் வசதியை மேம்படுத்த, ரோஜா பூங்காவில், பல்வகை அடுக்கு வாகன நிறுத்துமிடம், தனியார் பங்களிப்புடன் 3 கோடி ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்படும்.

★ உதகமண்டல வட்டாட்சியர் அலுவலகம் புதியதாகக் கட்டப்படும்.

★ உதகை நகராட்சியில் உள்ள கோடப்மந்து கால்வாயில் உள்ள பழுதுகள் நீக்கப்படும்.

★ இம்மாவட்டத்தில் உள்ள, பழங்குடியின மாணவர்களின் உயர் கல்வி கற்றல் விகிதத்தை அதிகரிக்க ஏதுவாக, கோத்தகிரியில், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையம் ஒன்று, 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

மருத்துவ வசதிகள்

★ உயர்தர மருத்துவ வசதிகளுடன் கூடிய, நான்கு ‘108 அவசர ஊர்திகள்’ வழங்கப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில், 1.09 கோடி ரூபாய் மதிப்பில், காசநோய் ஒழிப்பு சிறப்பு திட்டம் தொடங்கப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில், 67.5 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிய மருந்து கிடங்கு வசதி ஏற்படுத்தப்படும்.

- ★ நீலகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், 1.50 கோடி ரூபாய் மதிப்பில், 'எக்கோகார்டியாகிராம்' கருவி, வழங்கப்பட்டு மூப்பியல் பிரிவு, நுரையீரல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, உயர்தர மருத்துவ சிகிச்சை வசதி ஏற்படுத்தப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றும் 194 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு, மருத்துவப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்திட, 19.40 இலட்சம் மதிப்பில் கையடக்கக் கணினி (Tablets) வழங்கப்படும்.

- ★ உதகமண்டலம் அரசு மருத்துவமனையில், 64.70 இலட்சம் ரூபாய் மதிப்பில், 'டயாலிசிஸ்', 'எண்டோஸ்கோப்', நவீன ஆய்வக உபகரணங்கள் தடுப்பூசி மருந்து சேமிப்புக் கிடங்கும் அமைக்கப்படும்.

- ★ குன்னூர் அரசு மருத்துவமனையில், 64.50 இலட்சம் மதிப்பில், விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

- ★ நெலாக்கோட்டை அரசு மருத்துவமனையில், 16 இலட்சம் ரூபாய் மதிப்பில் நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

மின் வசதிகள்

- ★ நீலகிரி மாவட்டம், கோத்தகிரி கெரடாமட்டம், குன்னூர் சிம்ஸ்பார்க் மற்றும் கோத்தகிரி அரவேனுவில், புதிய 33/11 கே.வி. துணை மின் நிலையங்கள், ரூ.24.55 கோடி செலவில் அமைக்கப்படும்.

- ★ நீலகிரி மாவட்டம், கொடநாடு பஞ்சாயத்தில், புதிய 110/11 கி.வோ. மலர்பெட்டு துணை மின் நிலையம், 4.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில், 110/11 கி.வோ. கட்டபெட்டு துணை மின் நிலையத்தில் 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றி 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில், 110/11 கி.வோ. ஜெகதளா துணை மின் நிலையத்தில் 1.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகள் தரம் உயர்த்தப்படும்.

- ★ நீலகிரி மாவட்டத்தில், 110/11 கி.வோ. உதகை துணை மின் நிலையத்தில் 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 x 10 எம்.வி.ஏ. மின் மாற்றிகள், 2 x 16 எம்.வி.ஏ. மின் மாற்றிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

★ நீலகிரி மின் பகிர்மான வட்டத்தில் புதியதாகக் கணினி முறையில், மின்தடை பழுது நீக்கும் மையம் (Fuse off call centre) 19.50 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.

சாலை மேம்பாட்டு வசதிகள்

★ கொதுமுடி எப்பநாடு சாலையில், 4.40 கி.மீ நீளச் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி, மத்திய சாலை நிதி திட்டத்தின்கீழ், 4.75 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

★ ஹெலன் எல்லமலை பெரிய சோலை சாலையில், 6.30 கி.மீ நீள சாலையை மேம்பாடு செய்யும், பணி மத்திய சாலை நிதி திட்டத்தின்கீழ், 5.35 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

அதேபோல, மேடையில் வீற்றிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர் பெருமக்கள், பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

நீலகிரி மாவட்டத்தில், சிறு தேயிலை விவசாயிகளுக்கு பசுந்தேயிலை மானியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை இந்த அரசு கவனத்தோடு பரிசீலித்து அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், உறுப்பினர்களாக இருக்கும் சிறு தேயிலை விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று, அவர்களது நலன் காக்கும் பொருட்டு, 2017–2018ஆம் ஆண்டில், பசுந்தேயிலை, கிலோ ஒன்றிற்கு, ரூ.2/– வீதம், மானியம் அளிக்க உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காகக் கூடுதலாக 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்பதனையும், இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனைப்போன்றே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக, 58 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், உதகமண்டலம் நகராட்சி, குன்னூர் நகராட்சி, நெல்லியாளம் நகராட்சியிலும் மற்றும் அவலாஞ்சியிலும், 1,480 பயனாளிகளுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டித்தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும், இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

30.12.2017 அன்று, நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

நாடாளுமன்ற தேர்தலில் நாடாள முதல் வெற்றிக்கொடியுடன் தொடர் வெற்றியினை வழங்கி வரலாறு படைத்த திண்டுக்கல்லில் எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழா

மனிதராய் பிறந்து, இன்று தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நம் புரட்சித்தலைவர்!

உழைக்கும் மக்களின் ஒப்பற்ற தாய், ஏழைகளின் துன்பங்களை ஏந்தி நின்ற எங்கள் குல தெய்வம், சரித்திரம் பேசும் சாதனைத் தலைவி, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி.

பொன்மனச் செம்மல் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப.தனபால் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே, சிறப்பான கருத்துக்களை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே, சிறப்பான கருத்துக்களை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு.தம்பி துரை அவர்களே!

இந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் விளங்குவதற்கு உறுதுணையாக விளங்கி, இந்த மாவட்டமே குலுங்குகின்ற அளவிற்கு, எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம் குழுமிய இக்காட்சி, கண்கொள்ளாக் காட்சியாக, விளங்குவதற்கு அடித்தளமிட்ட மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!

வரவேற்புரை ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு. ரா. வெங்கடேசன் அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். உதயகுமார் அவர்களே! வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.ஞு.ஞு.பரமசிவம் அவர்களே! முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு.நத்தம் விஸ்வநாதன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. எஸ்.இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என்.தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி.ஜி. வினய் அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! வருகை தந்துள்ள நலத் திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்த காலத்திலேதான் இந்த திண்டுக்கல் மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது. அந்தப் பெருமை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையே சாரும்.

அதேபோல, வீரம், தியாகம், வளம், ஈகை நிறைந்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க மாவட்டம் திண்டுக்கல் மாவட்டமாகும்.

ஒரே கல்லால் ஆன மலை, காண்பதற்கு திண்டு, அதாவது தலையணை போன்று தோற்றமளிப்பதால், இது திண்டுக்கல் என்று அழைக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. திண்டுக்கல் மலை மீது, 900 அடி உயரத்தில் அமைந்திருக்கும் கோட்டை, அப்பகுதியில் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும்படி உள்ளது இந்தக் கோட்டையானது, இரட்டைச்

சுவர்களுடன், கனரக பீரங்கிகளின் தாக்குதலையும் சமாளிக்கும் அளவிற்குப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் கோட்டை, 1605ஆம் ஆண்டு, மதுரை நாயக்கர் வம்சத்தின் மன்னரான, முத்து கிருஷ்ணப்ப நாயக்கரால் கட்டப்பட்டது. இந்த கோட்டையைக் கைப்பற்ற, பாண்டியர்கள், விஜய நகர மன்னர்கள், நாயக்கர்கள், மைசூர் மன்னர்கள், ஆங்கிலேயர்கள் என பலர் போரிட்டிருக்கிறார்கள். திண்டுக்கல் சிறந்த ராணுவத் தளமாகவும் விளங்கியிருக்கிறது.

அதன் பிறகு, இக்கோட்டையில் இருந்தபடியே, மைசூர் உடையார் வம்சம், ஹைதர்அலி, திப்பு சுல்தான், ஆங்கிலேயர்கள் ஆகியோர் ஆண்டிருக்கிறார்கள். கர்நாடகப் படைகள் தங்கள் எல்லைக்குள் நுழைவதைக் கண்காணித்துத் தடுப்பதற்காக, மதுரை நாயக்கர்கள், இந்த உயர்ந்த மலையின் மேல் கோட்டையை நிர்மாணித்ததாக கூறப்படுகிறது. திண்டுக்கல் கோட்டை, வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையாகும். ஆங்கிலேயர்களால், கணவனையும், நாட்டையும் இழந்த பிறகு, சிவகங்கை ராணி வீரமங்கை வேலு நாச்சியார், இந்தக் கோட்டையில் தான் எட்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், இந்த மாவட்டத்தில் தான் உள்ளது.

'ஊர்க் கோயில்' என்று அழைக்கப்படும் பெரிய நாயகி அம்மன் கோயில், பாலசமுத்திரம் வரதராஜ பெருமாள் கோயில், தாடிக் கொம்பு சௌந்தரராச பெருமாள் கோயில், நடுப்பட்டி ஆஞ்சநேயர் கோயில், மல்லீஸ்வரர் கோயில், கோபிநாத சுவாமி கோயில், கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயில், மற்றும் புகழ்பெற்ற பல திருக்கோயில்களும், பேகம்பூர் பள்ளி வாசல், புனித மரியம்மை தேவாலயம் போன்ற அனைத்துமத புனிதத்தலங்களால் சூழப்பட்ட ஆன்மிக பூமியாக, திண்டுக்கல் மாவட்டம் திகழ்கிறது.

'மலைகளின் இளவரசி' என்று அழைக்கப்படும் கொடைக்கானல், திண்டுக்கல் மலைக்கோட்டை, திருமலைக்கேணி, நிலக்கோட்டை, விருப்பாட்சி கோபால நாயக்கர் மற்றும் திப்பு சுல்தான் மணி மண்டபங்கள், சிறுமலை, பன்றி மலை போன்ற பல சுற்றுலாத் தலங்களைக் கொண்டது, திண்டுக்கல் மாவட்டமாகும்.

கொடைக்கானலுக்கு, கோடைக் காலத்தில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பாக, ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில், கோடைவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது! மேலும், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலர், உலகப் புகழ் பெற்றதாகும்.

'பல பல ரகமா இருக்குது பூட்டு' என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் திண்டுக்கல் பூட்டை, மனதில் வைத்துத் தான் பாடியிருப்பாரோ என்று

எண்ணும் அளவிற்கு பல்வேறு ரகங்களில் உற்பத்தியாகும் பூட்டுகளால் திண்டுக்கல் மிகவும் பெருமையடைகிறது!

இந்த மாவட்டத்திலுள்ள வத்தலகுண்டு, தரமான அரிசிக்கும் சின்னாளப்பட்டி நார்ப் பட்டு சேலைகளுக்கும் புகழ் பெற்றுள்ளது. காப்பிக் கொட்டை வறுக்கும் தொழில், தோல் பதனிடும் தொழில், தோல் செருப்பு தயாரிக்கும் தொழில், இரும்புப் பெட்டிகள் தயாரிக்கும் தொழில், சுருட்டு சுற்றும் தொழில், பட்டுத் தொழில், உண்டியல்கள், சேப்டி லாக்கர் தயாரிக்கும் தொழில் முதலியன முக்கியத் தொழில்களாக இப்பகுதியில் நடைபெறுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில், சுமார் **3,500** சிறுதொழில் கூடங்களும் **50**க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளும் உள்ளன. வைகை மற்றும் முல்லை ஆற்று நீர் பாசனங்கள், திண்டுக்கல் மாவட்ட விவசாயத்திற்கு நீராதாரமாக விளங்குகின்றன.

நெல், கரும்பு, வாழை, காய்கறிகள், பழவகைகள், மிளகு, பூண்டு, நிலக்கடலை, தக்காளி, ஏலக்காய், காப்பி, திராட்சை ஆகியவை இங்கு அதிகளவு பயிரிடப்படுகின்றன. ஒட்டன்சத்திரம் சந்தையிலிருந்து, மற்ற மாநிலங்களுக்கு பெருவாரியான காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் மலர்களில், பெருமளவு திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து கிடைக்கின்றன. இம்மலர்கள், இந்தியா முழுவதிற்கும் அனுப்பப்படுகின்றன.

இவற்றுக்கெல்லாம் மேலாக, பழனி பஞ்சாமிர்தமும், திருநீறும் உலகம் முழுதும் இனிய ஆன்மிக மணம் பரப்புகின்றன. புகழ் பெற்ற சித்தரான போகர், பழநி தண்டாயுதபாணி சுவாமியின் சிலையை நவபாசானங்களால் உருவாக்கினார் என்றும், பின்னாளில், அவர் பழனி கோவில் வளாகத்திலேயே சமாதி அடைந்தார் என்பதும் வரலாறு. ‘பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது’ என்னும் சிற்றிலக்கியத்தை எழுதிய, பலபட்டடை சொக்கநாதர் என்ற புலவரும், ஓதச் சாமியார் என்னும் சித்தரும் வாழ்ந்த மண், இந்த திண்டுக்கல் மாவட்டம்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் திரு. சுப்பிரமணிய சிவா, விருப்பாட்சி கோபால் நாயக்கர் போன்ற தியாகச் சீலர்களைப் பெற்றதால், இந்த மண் வள்ளல் தன்மையுடன், வீரமும், தியாகமும் மிகுந்த பூமியாகவும் திகழ்கிறது!

முருகப் பெருமான் குடிகொண்ட திருஆவினன்குடியில், குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தம் பட்டு பீதாம்பரத்தைப் போர்த்திய கடைஏழு வள்ளல்களில் ஒருவரான, பேகன் இருந்தார் என்று புறநானூறு கூறுகிறது. குமண வள்ளல் அருளாட்சி கொண்டது பழனி எனவும் அறிய முடிகிறது. வள்ளல்களால் புகழப் பெற்ற திண்டுக்கல் மாவட்டத்தில், இன்று நம்முடைய சமகாலத்தில், நம் கண்முன்னே வள்ளலாக வாழ்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது மிகச்சிறப்பானதாக நான் கருதுகிறேன்.

மக்கள் திலகம், பொன்மனச் செம்மல், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 1972ஆம் ஆண்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து, 1973ஆம் ஆண்டு, திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் திரு. மாயத்தேவரை இரட்டை இலைச் சின்னத்தில் வேட்பாளராக நிறுத்தி, அமோக வெற்றி பெறச் செய்தார்கள். இந்த வெற்றி, அ.தி.மு.க.வின் வளர்ச்சிக்கு பலமான அஸ்திவாரமாக அமைந்தது. அதன் காரணமாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் சக்தியாக உருவெடுத்தது.

எனவே, அ.இ.அ.தி.மு.க. வின் வளர்ச்சிக்குத் தொடக்கப் புள்ளியாகத் திகழ்ந்தது திண்டுக்கல் மாவட்டம்தான் என்பதில், உங்களோடு சேர்ந்து நானும் பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது திண்டுக்கல் மக்கள் எத்தனை ஆழமான பாசம் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாக ஒன்றை கூற ஆசைப்படுகின்றேன்.

இங்குள்ள எம்.எஸ்.பி. சோலை நாடார் நினைவு மேல்நிலைப் பள்ளி ஆரம்பித்து, சுமார் 51 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. ஆரம்பித்தது முதல், இன்று வரை, சுமார் 51 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பள்ளியில் தினமும் காலையில் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்த ‘ஆனந்த ஜோதி’ படத்தில் இடம் பெற்ற

‘ஒரு தாய் மக்கள் நாமென்போம்
ஒன்றே எங்கள் குலமென்போம்’

என்ற பாடல் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்தப் பள்ளியில் படித்த பல மாணவர்கள் இன்று அரசுப் பணிகளில் உயரதிகாரிகளாகவும், சிறந்த மருத்துவர்களாகவும், தொழிலதிபர்களாகவும், அறிஞர்களாகவும், எல்லாவற்றையும் விட, நல்ல ஒழுக்கமிக்க மனிதர்களாகவும் வாழ்ந்து வருவதைக் கேள்விப்பட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப் பாடல்கள், பல தலைமுறையினரிடையே எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல்கள், பள்ளிக் குழந்தைகளை நெறிப்படுத்தும் கருத்துக்கள் நிறைந்து எழுதப்பெற்றவை. மக்களுக்கும், தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் எப்படிப்பட்ட கருத்துக்களை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறாரோ, அவற்றைக் கவிஞர்களைக் கொண்டு எழுத வைத்து, எளிதாக மக்களிடம் போய் சேரும் அளவிற்கு, இசையால் அவற்றை மெருகூட்டி, பட்டிதொட்டியெல்லாம் கொண்டு சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் படங்களில் உள்ள கதை அமைப்பு, வசனம், சண்டைக் காட்சிகள் அனைத்தையும் எல்லாத்தரப்பு மக்களும்

ஏற்றுக் கொள்ளும் படி அவரே உருவாக்குவார்! அதிலும் குறிப்பாக, பாடல்களில் அதிக கவனம் எடுத்துக்கொள்வார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல் வெளியிடப்பட்டால், அப்பாடல்களை தமிழ்நாடே தலையாட்டி ரசித்துக்கேட்கும். அந்த அளவிற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தமிழ் மக்கள் அனைவரின் நெஞ்சங்களிலும் தம் பாடல்களைப் பதித்திருந்தார்கள்!

அர்ச்சுனனுக்கு நிகரான அறப்போர் வீரர், மூதறிஞர் ராஜாஜி என்பார்கள். விரிந்து, பரந்த மனம் கொண்டவர் தந்தை பெரியார் என்பார்கள். அமைதியான அழகும், ஆழ்ந்த உணர்ச்சியும், அலைபுரளும் கவிதையின் வடிவம் பேரறிஞர் அண்ணா என்பார்கள். பல்கலைக் கழகங்களும் போற்றிப் பாராட்டும் மனித உருவிலான பல்கலைக் கழகம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்பார்கள். இவை அத்தனையும் உண்மைதான் என்று காலம் நமக்குக் கணித்து சொன்னது! எவர் ஒருவர் தம் கருத்துகளை, படித்த இளைஞர்களிடம் கொண்டு சென்று வெற்றியடைகிறாரோ, அவர் ஒரு பல்கலைக்கழகம் தானே?

“எதை கொண்டு வந்தோம், கொண்டு செல்வதற்கு?” என்ற கீதையின் வைர வரிகளுக்கு ஏற்றாற்போல்... தாம் மறையும் போது, தமது சொத்துக்கள், உடைமைகள் அனைத்தையும் மக்களுக்காகவும், வாய்பேசாத, காதுகேளாத, மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கிவிட்டு, இறப்பில் கூட வெற்றி கண்டு, கோடிக் கணக்கான உள்ளங்களில் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். மனிதனாகப் பிறந்தவர், இன்று தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்! இந்தத் தலைமுறை மக்களாகிய நாம், நமக்கு பின் வரும் தலைமுறைக்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றிய உயர்ந்த எண்ணங்களையும், கருத்துக்களையும் சொல்ல வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய எண்ணம், எழுத்து, நேர்மை, எளிமை, அறிவுக்கூர்மை அனைத்தும், தம் குணங்களோடு ஒத்துப்போனதால்தான், அறிஞர் அண்ணா அவர்களை, தம் அரசியல் வழிகாட்டியாக்கிக் கொண்டார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

‘சாதி சமயமற்ற பகுத்தறிவுச் சமுதாயத்தை, ஜனநாயக வழியில் உருவாக்க உழைப்பதுதான் அ.இ.அ.தி.மு.க வின் கொள்கையென்றும் பறைசாற்றியவர் மக்கள் திலகம், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இதைத்தான் தம் படங்களில் பயன்படுத்தி, மக்கள் மனதில் விதைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். ‘அறிவூட்டும் தந்தை, நல் வழி காட்டும் தலைவன்’ என்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் படத்தில் ஒலிக்கும் வைர வரியாகும்!

அந்தப் பாடலில் உள்ள தந்தையும், தலைவனுமாக இருந்து தமிழ் இனத்துக்கே, ஏன்? உலகில் வாழும் அத்தனை இளைஞர்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

‘நாளை நமதே! இந்த நாளும் நமதே!
தாய் வழிவந்த, தங்கங்கள் எல்லாம்,
ஓர் வழி நின்று, நேர்வழிச் சென்றால், நாளை நமதே!
காலங்கள் என்னும், சோலைகள் மலர்ந்து,
காய்கனியாகும், நமக்கென வளர்ந்து, நாளை நமதே!’

என்ற பாடல் மூலம் இளைஞர்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டினார்கள்.

‘கருணை இருந்தால் வள்ளலாகலாம்,
கடமை இருந்தால் வீரனாகலாம்,
பொறுமை இருந்தால் மனிதனாகலாம்
இந்த மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்’

என்ற பாடலின் மூலம் ஒருவன் எப்படி தலைவனாக உயர முடியும் என்ற வழியை மிக எளிமையாக நாம் புரிந்து கொள்ளச் செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

நீதி இலக்கியத்தின் தந்தை, தெய்வப் புலவர் திருவள்ளுவர், கன்பியூசியஸ், சாக்ரடீஸ் போன்ற உலக தத்துவ மேதைகள் சொன்ன கருத்துக்களை, கலையுடனும், இசையுடனும் கலந்து, எளிதில் மாணவர்கள் மனதில் பதிய வைத்தர், நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

‘ஊருக்கு உழைச்சாலே,
ஏழை உரிமையை மதிச்சாலே
பெருமைகள் தேடி வரும்,
தானே பதவிகள் நாடி வரும்’

என்ற பாடலின் மூலம் இந்த நாட்டுக்காக இளைஞர்களை உழைக்கச் சொன்னவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

கவிஞர்கள் தாமே இந்த பாடல்களை எழுதினார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். எழுது கோல்கள்தாம் கவிஞர்களுடையது. ஆனால், அதில் இருந்த ‘மை’ எம்.ஜி.ஆர் அவர்களின் எண்ணங்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். வசனம், பாடல், கதை என்று எதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் எதிர்மறையான கருத்துக்களை மக்களிடம் கூறியதே இல்லை!

குறிப்பாக இளைஞர்களுக்கு எதனைக் கூறினால் அதனை அவர்கள் உந்து சக்தியாகக் கொண்டு முன்னேறுவார்கள் என்பதனை நன்கு ஆய்ந்த பின்பு, அதை கலைவடிவமாக்கி, திரையின் மூலம் கூறும் மிகப்பெரிய மேதையாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அவருடைய படத் தலைப்புகளே அதற்கு உதாரணங்களாக விளங்குகின்றன.படத் தலைப்புகள் மூலமாகவே படத்தின் கதையை, தத்துவத்தை, நீதியை, கொள்கையை சொன்னவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

நீதிக்கு தலை வணங்கு!
சிரித்து வாழ வேண்டும்!
தர்மம் தலைகாக்கும்!
தாய் சொல்லைத் தட்டாதே!
திருடாதே!

என்று இளம் தலைமுறையினருக்குத் தாம் கூற நினைக்கும் அறிவுரையை படத் தலைப்பின் மூலம் சொன்ன ஒரே நடிகர், ஒப்பற்ற மக்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

இந்தியில், தேவ் ஆனந்த் நடித்த 'பாக்கெட் மார்' என்ற பெயரில் வந்த படத்தின் கதையைக் கூறி, அதற்கு தமிழில் நல்ல தலைப்பு சொல்பவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். படத்திற்கு வசனம் எழுதுவதாக இருந்த கலைமாமணி மா. லட்சுணன் அவர்கள், " நல்லதுக்குக் காலமில்லை" என்ற தலைப்பைக் கூறினார்.

இந்தக் கதைக்கு இந்தத் தலைப்பு மிகவும் பொருத்தமானதுதான், ஆனால், "படங்களுக்குத் தலைப்பு வைக்கும் விஷயத்தில் ரொம்ப கவனமாக இருக்க வேண்டும்.

'நல்லதுக்கு காலமில்லை' என்று தலைப்பு வைத்தால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களே இப்படிச் சொல்லிவிட்டார்கள். அப்புறம் நாம் எதுக்கு நல்லது செய்ய வேண்டும் என மக்கள் நினைத்து விடுவார்கள். எனவே, இன்னொரு தலைப்புச் சொல்லுங்கள்", என்றதும், திரு மா. லட்சுமணன் 'திருடாதே' என்ற தலைப்பைக் கூறவே, அதையே படத்திற்கு தலைப்பாக வைத்தார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். ஒரு படத்திற்கு தலைப்பு வைப்பதைக் கூட சமூக அக்கறையோடு, நுணுக்கமாகத் தேர்வு செய்தவர் தலைவர் அவர்கள்.

‘உன்னையறிந்தால் நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்’ – என்றும்

‘தூங்காதே தம்பி தூங்காதே’ – என்றும்
‘திருடாதே பாப்பா திருடாதே’ – என்றும்
‘ஏமாற்றாதே ஏமாறாதே’ – என்றும்

‘அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்’ – என்றும்

‘ஒருதாய் மக்கள் நாமென்போம்’ – என்றும்

‘நாளை உலகை ஆள வேண்டும்

உழைக்கும் கரங்களே!’ என்றும்,

‘நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே!’ என்றும்

‘ஓடி ஓடி உழைக்கணும்’ – என்றும்

‘ஒன்றே குலம் என்று பாடுவோம்,
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்’–

என்று பல பாடல்கள் மூலம் இளம் தலைமுறையினருக்கு அறிவுரையும் நெறிமுறையும் கூறியவர்கள் நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

நம் தாயைப்போல, தந்தையைப் போல, ஆசிரியரைப் போல, நமக்கு அறிவுரை கூறிய ஒரு மாபெரும் தலைவரை இனி இந்த உலகம் காணப்போகிறதா என்பது சந்தேகமே! பெண்களுக்காகத் தனி பல்கலைக் கழகம் அமைக்க மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் முடிவு செய்தார்கள். அதன்படி, 1984ஆம் ஆண்டு கொடைக்கானலில், பெண்களுக்கான தனிப் பல்கலைக் கழகம் உருவானது. அந்த விழாவில், அன்னை தெரசா கலந்து கொண்டார். அப்போது காஷ்மீர் முதலமைச்சராக இருந்த திரு. பரூக் அப்துல்லா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தமது தொண்டால் பெண் இனத்துக்கு பெருமை தேடித் தந்த அன்னை தெரசாவின் பெயர், பெண்கள் பல்கலைக் கழகத்துக்குச் சூட்டப்படுவதாக, விழா மேடையில் பலத்த கரகோஷத்திற்கு இடையில், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அதனைக் கேட்ட அன்னை தெரசா அவர்கள் நெகிழ்ந்து போனார்கள்!

ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள், ‘எம்.ஜி.ஆரை, எம்.ஜி.ஆரால்தான் வெல்ல முடியும்’ என்றார்கள். திரைத்துறையிலும் சரி, அரசியலிலும் சரி, அவரை, அவர் காலத்தில் யாராலும் வெல்ல முடியவில்லை! ஒருவர் அழகாக, வசீகரமாகச் சென்றால், அவரை ‘இவருக்கு எம்.ஜி.ஆர் என்று நினைப்பா?’– என்றும் ‘மற்றவர்களுக்கு ஒருவர் ஓடி ஓடி சென்று உதவி செய்தால்’, ‘அவருக்கு எம்.ஜி.ஆர் என்று நினைப்பா?”–

என்றும், ஒருவர் நியாயத்தைத் தட்டிக் கேட்டாலும், தர்மம் செய்தாலும், அவரைப் பார்த்து 'இவருக்கு எம்.ஜி.ஆர் என்ற நினைப்பா?'', என்றும் கேட்கும் அளவிற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், மக்களின் அன்றாட வாழ்க்கையிலும், வாக்கிலும் கலந்திருந்தார்கள். அந்த அளவிற்கு, நற்பண்புகளின் குறியீடாக வாழ்ந்து காட்டியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதனைப்போன்றே தமது திரைப்படங்களில் ஏழைகள், உழைப்பாளர்கள், தொழிலாளர்கள் கதாபாத்திரங்களையே அதிகமாக ஏற்று நடித்தார்கள். அந்தப் பாத்திரங்களையே படத்தின் பெயராகவும் வைத்தார்கள்.

'ஊருக்கு உழைப்பவன்',

'எங்க வீட்டுப் பிள்ளை',

'காவல்காரன்',

'பட்டிக்காட்டுப் பொன்னையா',

'படகோட்டி',

'மீனவ நண்பன்',

'மாட்டுக்கார வேலன்',

'விவசாயி',

'வேட்டைக்காரன்',

'ரிக்ஷாக்காரன்'

என்று, இன்னும் பல படங்களுக்குப் பெயர் சூட்டியது, தொழிலாளர்கள் மேல் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு இருந்த அன்பைக் காட்டுகின்றது.

எதனைப் பாடினாரோ, அதுவாகவே வாழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

தம் மகன் படித்து பட்டதாரியாகவும், மருத்துவராகவும் பொறியாளராகவும், விஞ்ஞானியாகவும் உயர வேண்டும் என்று தான் பெற்றோர்கள் நினைப்பார்கள். எந்தப் பெற்றோரும், தம் மகன் அரசியல்வாதியாக வேண்டும் என்று நினைப்பதில்லை.

ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் படங்களைப் பார்த்த, பாடல்களைக் கேட்ட அவருடைய அரசியல் நடவடிக்கைகளைப் பார்த்த பிறகு, தன் மகனும் அரசியலுக்கு வரவேண்டும் என்று நினைத்தார்கள் பெற்றோர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை, மானசீகமாகத் தம் வழிகாட்டியாகக் கொண்டு அரசியலுக்கு வந்த பலர், இன்று அரசியல் வானில் நட்சத்திரங்களாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற நடிகர்களின் படங்களைப் பார்த்து மக்கள் ரசித்தார்கள், சிரித்தார்கள். ஆனால், நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் படங்களோடுதாம் மக்கள் வாழ்ந்தார்கள்.

அந்தப் படங்களில் வரும் கதாபாத்திரங்களைப்போல, தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயற்சித்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு, மக்களிடையே இருந்த செல்வாக்கை கண்டு, உலகத் தலைவர்களும், கலைஞர்களும் வியந்தார்கள்!

சாமானியன் கூட, அரசியலில் பதவிக்கு வர முடியும் என நிரூபித்துக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

உதாரணத்திற்கு..

செய்யாறு இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்படுகிறது. வேட்பாளர் நேர் காணலுக்கு வந்த செய்யாறு திரு. வே. குப்புசாமியைப் பார்த்து புரட்சித்தலைவர் “என்னய்யா தேர்தலில் நிற்கிறேன் என்று சொல்கிறாயே, உன்னிடத்தில் எவ்வளவு சொத்து இருக்கிறது ?” என்றுகேட்டார்கள்.

இதற்கு குப்புசாமி, “அண்ணே நான் தையல்கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் இருந்த சொத்துக்களை எல்லாம் விற்று எனது மகள்களுக்கு திருமணம் செய்து வைத்து விட்டேன். என்னிடம் உள்ள ஒரே ஒரு சொத்து என் தையற்கடையில் மாட்டி வைத்திருக்கும் உங்கள் புகைப்படம்தான்” என புரட்சித் தலைவரிடம் சொன்னார்.

இதைக் கேட்ட பொன்மனச் செம்மல் அவர்கள் மனம் நெகிழ்ந்து, செய்யாறு இடைத்தேர்தலில், வே.குப்புசாமியையே வேட்பாளராக அறிவித்து, தேர்தல் செலவுகளைத் தலைமைக் கழகமே ஏற்கும் என்று அறிவித்தார். அந்த தேர்தலில் அவர் சுமார் 26 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

திறமை இருப்பவர்கள், யாராக இருந்தாலும், வசதி மற்றும் வயது பார்க்காமல் அவர்களுக்கு சிறப்பு செய்தவர், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

திரு. மாண்டலின் சீனிவாசனுக்கு 12 வயதிருக்கும் போதே, அவரை அரசின் ஆஸ்தான கலைஞராக நியமித்ததன் மூலம், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பரந்த மனதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்!

திரு.சரண்சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபோது, திரு. பாலாபழனூர், திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோரை மத்திய அமைச்சர்களாக்கினார், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

நம் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்தியில், அமைச்சர்களாக இருந்தால், நம் மாநிலத்திற்கு வேண்டிய திட்டங்களை எளிதாக கேட்டுப் பெறலாம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால், எந்தவித கொள்கை கோட்பாடும் இல்லாமல், சுயநலம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, மத்திய அரசோடு கைகோர்த்து, ஒரு கட்சி, மாநிலத்தில் உள்ள காவிரி, கச்சத்தீவு, முல்லைப் பெரியாறு, இலங்கை பிரச்சனை என்று எந்தப் பிரச்சனைக்கும் டெல்லிக்கு செல்லாத அப்போதைய முதலமைச்சர், தம் பிள்ளைக்கு மத்திய மந்திரி பதவி வாங்குவதற்காக மட்டும் டெல்லிக்குப் பலமுறை படை எடுத்து, வேண்டிய துறைகளையெல்லாம் கெஞ்சிக் கூத்தாடி பெற்று வந்துவிட்டார்!

தீர்ப்பு என்பது வாதத்தின் திறமையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் மக்கள் தீர்ப்பு, உண்மையை அடிப்படையாகக் கொண்டது. இறுதியில், மக்கள் தீர்ப்புதான் வெல்லும். செய்துள்ள விஞ்ஞான முறைப்படியான ஊழல்களிலிருந்து இன்று வேண்டுமானால் இவர்கள் தற்காலிகமாக தப்பியிருக்கலாம். ஆனால், அதுவே இறுதி தீர்ப்பன்று என்பதனை உணர வேண்டும்! அதை மக்கள் உணர்த்த ஆரம்பித்து விட்டார்கள்!

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா மூலம், ஏதாவது மக்களுக்கு நன்மை ஏற்பட்டு, அதன் மூலம், மாண்புமிகு அம்மாவின் அரசு மேலும் பல மடங்கு வலிமை பெற்றுவிடப்போகிறதோ என்று பயந்துதான், “இந்த நூற்றாண்டு விழா ஏன் ?” என்ற கேள்வியை எழுப்புகிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்வதற்காகத்தான், இங்கே மக்களுக்காகப் பல திட்டங்களை நாங்கள் அறிவிக்கின்றோம்.

திண்டுக்கல் மாவட்டத்தில், காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, 636 கோடி ரூபாய் செலவில், நிறைவேற்றப்பட்ட நத்தம், நிலக்கோட்டை, அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிகள் மற்றும் 1,276 ஊரக குடியிருப்புக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் உட்பட, 681 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 115 பணிகளை இன்று தொடக்கி வைத்துள்ளேன்.

பழநியில், பக்தர்கள் வசதிக்காக, 71 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன வசதியுடன் கூடிய, இரண்டாவது கம்பிவட ஊர்தி அமைக்கும் பணி உட்பட, 187 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 105 பணிகளுக்கு, நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்!

பல்வேறு துறைகளின் சார்பில், 24 ஆயிரத்து 521 பயனாளிகளுக்கு, 63 கோடியே 76 இலட்சம் ரூபாய் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல், இன்று வரை, தமிழ்நாடு முழுவதும் 15 ஆயிரத்து 890 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 36 ஆயிரத்து 286 பணிகளை நான் தொடக்கி வைத்துள்ளேன்.

6 ஆயிரத்து 671 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 8 ஆயிரத்து 300 பணிகளுக்கு, நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

ஆக மொத்தம், 22 ஆயிரத்து 562 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 44 ஆயிரத்து 586 பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளில், திண்டுக்கல் மாவட்டத்தில், பல்வேறு பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசு செய்துள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மகசூல் பாதித்த சுமார் 1 இலட்சத்து 47 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, இடு பொருள் மானியமாக, சுமார் 74 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

குடிமராமத்துப் பணிகள் திட்டத்தின்கீழ், 84 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில், 44 நீர்நிலைகளில் தூர்வாரப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில், 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 50 பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

‘விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ்,’ சுமார், 870 குளங்களில் 17 இலட்சம் கனமீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டு, சுமார், 17,500 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

சுமார் 26 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 149 கோடி ரூபாய் பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 16 ஆயிரம் விவசாயிகளுக்கு, சுமார் 156 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், சுமார் 143 கோடி ரூபாய் செலவில், மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

‘படித்த ஏழைப் பெண்களின் திருமண உதவி திட்டத்தின்கீழ்,’ சுமார், 25 ஆயிரம் பெண்களுக்கு, சுமார் 83 கோடி ரூபாய் நிதி உதவியும், சுமார் 100.80 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன.

‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்,’ சுமார், 60 ஆயிரம் விவசாயிகளுக்கு, சுமார் 45 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையின் மூலம், ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மற்றும் ஒரு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

சுமார் 22 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சுமார் 582 கோடியே 50 இலட்சம் ரூபாய், நேரடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

‘மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ்,’ 52 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில், சூரிய மின்சக்தியுடன் கூடிய, சுமார் 22 ஆயிரத்து 600 பசுமை வீடுகள் கட்டிமுடித்து வழங்கப்பட்டுள்ளன.

‘தாய்’ திட்டத்தின்கீழ், 306 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 3,084 குக்கிராமங்களில், 100 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 11 ஆயிரத்து 830 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

‘பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 344 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 31 ஆயிரத்து 12 வீடுகள் கட்டிமுடித்து வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ், ‘நபார்டு’ திட்டத்தில், 52 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 107 கிராமச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்,’ 614 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 67 ஆயிரத்து 327 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 54 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 இடங்களில் புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம், 704 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1346.51 கி.மீ. சாலை மேம்படுத்தப்பட்டுள்ளது. 312 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 80 பாலங்கள் கட்டப் பட்டுள்ளன.

கடந்த 30.06.2017லிருந்து, இன்று வரை, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் மூலம், 30 மாவட்டங்களுக்குச் சென்று, மக்களைச் சந்தித்து, பலகோடி ரூபாய் மதிப்பிலான மக்கள் நலத் திட்டங்களை நான் அறிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களது நூற்றாண்டு விழாவினை, 30 மாவட்டங்களில் சீரும் சிறப்புமாக நடத்தி, மாவட்ட மக்களை நேரில் சந்தித்து, அம்மாவட்டங்களின் வளர்ச்சிக்காகப் பலகோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை அறிவித்து, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல் ஆசியுடன், அவர்களது வழியில் நலத்திட்டங்களை தொடர்ந்து செயல் படுத்தி வருகிறோம் என்பதனை, இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். 30.06.2017 அன்று, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை, முதலில் மதுரையில் நடத்தி வெற்றி கண்டோம்!

அதன் பிறகு 6 மாத காலத்தில், 30 மாவட்டங்களிலும், இலட்சக்கணக்கான மக்களை நேரில் சந்தித்து, இரு பெரும் தலைவர்கள் வழியில், பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை அளித்து, வரலாற்றுச் சாதனை படைத்த அரசு, அம்மாவின் அரசு என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோட்டையிலே எந்த கோப்புகளும் தேங்காதவாறு, அலுவலகப் பணியிலும், மக்கள் நலப் பணியிலும் ஓய்வில்லாமல் நானும், துணை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் உழைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக, மத்திய அரசிடம் கேட்டு பல்வேறு நிதி உதவிகளைப் பெற்று மக்கள் நலப் பணிகளை நிறைவேற்றி வருகின்றேன். இதனை எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன.

"வீடு இருந்தால்தான் ஓடு மாற்றலாம்"

என்பதைப் போல, நாங்கள் நாடு நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றோம். நாங்கள் செய்கின்ற நலப்பணிகளிளெல்லாம் தேடிதேடிக் குற்றம் கண்டுபிடித்து, ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் அப்படி பேசுவது பற்றி, எங்களுக்குக் கவலை இல்லை! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மை விசுவாசிகள் என்று வேஷம் போட்டு நடிப்பவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவிற்குக் களங்கம் விளைவிக்க முயற்சிக்கிறார்கள். அது ஒரு போதும் நடக்காது!

இதனை ஒரு கதையின் மூலம் விளக்கினால் நன்றாகயிருக்கும் என்று நினைக்கிறேன்.

ஒரு மலைக் கிராமத்தில், ஞானி ஒருவர் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தார். அவர் தன்னுடன் ஒரு பசுவையும் வளர்ந்து வந்தார். அந்த கிராமத்து மலைவாழ் மக்களுக்கு வேண்டிய ஆலோசனைகள், மருத்துவ உதவிகள் என்று மக்களுக்குத் தொண்டு செய்து வந்ததால், அவரை மக்கள் தெய்வமாகவே மதித்தார்கள்!

ஒரு நாள் அந்த ஞானி சமாதி அடைந்தார். அந்த கிராமமே சோகத்தில் ஆழ்ந்தது. ஞானியுடன் இருந்த அந்த பசுவும் அனாதையானது. பசுவை ஞானியின் ஆன்மாவாகக் கருதி, அதை மக்கள் பாதுகாக்க விரும்பினார்கள்.

இந்த நிலையில், ஞானியின் உண்மை சீடர் என்று பொய் சொல்லி, ஆசிரமத்தில் சில காலம் தங்கி, ஞானியை ஏமாற்றி சுகபோகமாக வாழ்ந்து, பிறகு உண்மை தெரிந்து ஞானியால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒருவர், ஞானியின் மறைவின்போது திடீரென்று ஆசிரமத்திற்கு வந்தார். ஆசிரமத்தையும், பசுமாட்டையும் தன்னிடம்தான் ஒப்படைக்க வேண்டும், அவை தமக்கே சொந்தம் என்று வாதிட்டார். தம்மை, ஞானியின் நம்பிக்கைக்குரியவன், நேர்மையானவன் என்று இனிக்க இனிக்கப் பேசி மக்களை நம்ப வைத்தார். அவருடைய வேஷத்தையும், நடிப்பையும் மக்கள் பொய் என்று அறியாமல், ஆசிரமத்தையும், பசுவையும் அவரிடமே ஒப்படைக்க முடிவு செய்தார்கள்.

ஆனால், ஞானியின் மீது, உண்மையான மரியாதை வைத்திருந்த சீடர்கள் மட்டும், அந்த ஏமாற்றுக் காரனால் மக்களுக்குத் தீங்குதான் வருமே தவிர, எந்த பயனும் இல்லை என்று மக்களின் முடிவை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்தார்கள்! கடைசியில், இது வழக்காகி நீதிமன்றத்திற்குச் சென்றது. வழக்கை விசாரித்த நீதிபதி, அந்த ஏமாற்று நபரை பார்த்து, “நீங்கள் எந்த உரிமையில் பசுவையும், ஆசிரமத்தையும் சொந்தம் கொண்டாடுகிறீர்கள் ?” என்று கேட்டார்.

“ஞானிக்கு காட்டு மிருகங்களால் ஆபத்து ஏற்படும்போது நான் தான் அவரைக் காப்பாற்றினேன். எனக்கு பயந்துதான் இதுவரை எந்த மிருகமும் அவரை நெருங்காமல் இருக்கின்றது. நான் அவரைக் காப்பாற்றியதால்தான், இன்று, இவர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்கள். எனவே, அவருக்குப் பிறகு அவருடைய உடைமைகள் அனைத்தும் எனக்குத்தான் சொந்தம்” என்று அவர் வாதிட்டார். “சரி, அப்படி என்றால், இந்தப் பசுவையும், ஆசிரமத்தையும் ஏலம் விட்டு, அதில் வரும் பணத்தை, இருவரும் பிரித்துக் கொள்கிறீர்களா ?” என்று கேட்டார் நீதிபதி. அந்த ஏமாற்று நபர் பணத்திற்கு ஆசைப்பட்டு அதற்குச் சம்மதித்தார்.

ஆனால், அதை ஞானியின் உண்மை விசுவாசிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஞானியின் உண்மை விசுவாசிகளாகிய தங்களிடம் தான் ஆசிரமத்தையும், பசுவையும் ஒப்படைக்க வேண்டும். நாங்கள் ஞானியைப்போலவே மக்கள் பணி ஆற்றுவோம் என்றார்கள். அதைக் கேட்ட நீதிபதி ஒரு முடிவுக்கு வந்தார்.

ஒரு பக்கம் அந்த ஏமாற்றுக்காரரையும், ஒரு பக்கம் சீடர்களையும் நிற்க வைத்து, நடுவில் அந்தப் பசுவை நிற்க வைத்து, இருவரையும் அந்த பசுவை அழைக்க வைத்தார். முதலில் அந்த ஏமாற்றுக்காரர் பசுவை தன் பக்கம் அழைத்தார். பசு அவரிடம் செல்ல மறுத்தது. பின் ஞானியின் உண்மை விசுவாசிகளான சீடர்கள் பசுவைத் தம் பக்கம் அழைத்தார்கள். பசு மகிழ்ச்சியாக, துள்ளிக் குதித்துக் அவர்கள் பக்கம் ஓடியது. ஏமாற்றுக் காரனை நம்பிய மக்கள் தங்கள் தவறை உணர்ந்து கொண்டார்கள். ஞானியின் ஆன்மா, உண்மை விசுவாசிகள் பக்கம் சென்று விட்டதாகவே கருதினார்கள். எனவே, நீதிபதி பசுவையும், ஆசிரமத்தையும் உண்மை விசுவாசிகளான சீடர்களிடம் ஒப்படைத்தார்.

எனவே, மக்களை ஏமாற்றுவதற்காக வேஷம் போட்டு நடிப்பவர்களையும், அந்த நடிப்பின் மூலம் தற்காலிக வெற்றியடைந்தவர்களையும் மக்கள் நம்பவேண்டாம்! விரைவிலேயே, அவர்களுடைய வேஷம் கலையும்! அப்போது, அந்த ஏமாற்றுப் பேர்வழிகளுடைய உண்மை முகம் மக்களுக்குத் தெரியும்! கடைசியில் தர்மம் தான் வெல்லும்! இதை மக்கள் போகபோக உணர்வார்கள்!

‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்பதைப்போல, எங்கள் பணி, மக்கள் பணி ஒன்றேதான். தற்போது நாங்கள் மக்கள் நலத்திட்டங்களை விரைவாகவும், செம்மையாகவும் நிறைவேற்றுவதில் முனைப்பாக இருக்கின்றோம்.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மாவினுடைய ஆட்சி, ஒரு பொற்கால ஆட்சி! மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, பல்வேறு திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்காக வழங்கியிருக்கின்றார். அதுப்பற்றித்தான், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அழகாகக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், தொலைநோக்குச் சிந்தனையோடு சிந்தித்து, கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படவேண்டுமென்று, கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தார்கள்.

அதுமட்டுமன்று, கல்வியிலே ஒரு பெரும் புரட்சியைச் செய்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நம்முடைய மாணவர்களுடைய எதிர்காலம் சிறக்க, ஒரு திறமையான விஞ்ஞான மாணவனாக தமிழகத்திலே உருவாகவேண்டும் என்பதற்காகத் தமிழகத்திலே மடிக்கணினியை கொண்டு வரவேண்டுமென்று எண்ணி, 37 இலட்சம் மடிக்கணினிகளை, தமிழக மாணவ, மாணவியர்களுக்கு அளித்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்களே! ஒரு மடிக்கணினியின் விலை சுமார் 14,000 ரூபாய், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இதுபோன்று வழங்கப்படவில்லை.

ஆகவே, ஒரு நாடு வளர வேண்டுமென்று சொன்னால், அங்கே கல்வி சிறக்க வேண்டும், அப்படி அங்கே கல்வி சிறக்க வேண்டுமென்று சொன்னால், தேவையான வசதிகளை, கல்வியிலே செய்து கொடுக்க வேண்டுமென்று எண்ணி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்த மடிக்கணினித் திட்டத்தை தமிழகத்திலே தொடங்கி, 37 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு அறிவுபூர்வமான கல்வியைத் தந்தார்கள். அதுமட்டுமன்று; பள்ளிக் கல்வித்துறையிலே, கடந்த ஆறு ஆண்டுகளில், 40,433 ஆசிரியர்கள், 4,322 ஆய்வக உதவியாளர்கள் மற்றும் 15,169 பகுதி நேர ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். இவ்வளவு ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியதன் காரணமாக, தமிழகம், கல்வியிலே சிறந்து விளங்குகின்ற மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது! அது மட்டுமன்று; மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி

அம்மாவினுடைய ஆட்சியில், இதுவரை 227 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன, 829 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 402 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

ஆகவே, இப்படி, பள்ளிகள் தொடக்கப்பட்டதன் விளைவாக கல்வி பயிலுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, தமிழகத்திலே இன்றைக்கு உயர்ந்திருக்கின்றது. இவையாவும் சாதனைகளல்லவா ? ஆகவே, இப்படிப்பட்ட பள்ளிகள் தொடங்கியதன் விளைவாக, தொடக்க நிலைக் கல்வியில், மாணவர் சேர்க்கை 99.85 விழுக்காடு இன்றைக்கு இருக்கின்றது. நடுநிலைக் கல்வியில், மாணவர் சேர்க்கை 99.2 விழுக்காடு, இன்றைக்கு தமிழகத்திலே உயர்ந்து காணப்படுகிறது. அதுபோன்றே இன்றைக்கு, இந்தியாவிலேயே, தமிழகம் உயர்கல்வித்துறையில், முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது! மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி, இன்றுவரை, 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றது. ஆகவே, உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது! இன்றைக்கு, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவன் குறைந்த செலவிலே உயர்கல்வி படிக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, அம்மா தாம் வாழ்ந்து வந்த காலத்திலே, 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். அதன் வழியிலே நடைபெறுகின்ற அம்மாவினுடைய, இந்த அரசும், இந்த ஆண்டு 11 அரசு மற்றும் கலைக் கல்லூரிகளைக் கொடுத்து, ஆகமொத்தம், 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் வழங்கி, தமிழகத்திலே உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டியிருக்கிறது என்பதனைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நேரத்தில் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 2011ஆம் ஆண்டு, இதயதெய்வம் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது 21 சதவீதமாக இருந்த கல்வி வளர்ச்சி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே எடுத்த நடவடிக்கையின் மூலமாகவும், பல்வேறு திட்டங்கள் மாணவர்களுக்கு வழங்கியதன் மூலமாகவும், 2016ஆம் ஆண்டு, நூற்றுக்கு 44.32 சதவீதமாக உயர்ந்து, இன்று தமிழகத்தில் கல்வி உயர்ந்து நிலைத்து நிற்கின்றது என்ற நிலைமை உருவாகியுள்ளது!

அதேபோல, இன்றைக்கு சுகாதாரத் துறையில், பல்வேறு சிறப்புத் திட்டங்கள், ஆறு ஆண்டுகள் மருத்துவம் உட்பட, மருத்துவம் சாரா தொழிலாளர்கள் 1,20,506 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ‘டெங்கு’ நோயைக் கட்டுப்படுத்தியதன்மூலம் சென்னை, இந்தியாவின் மருத்துவ நகரமாக திகழ்கிறது.

அதேபோல, வேளாண்மையிலே இன்றைக்குத் தமிழகம் முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டபொழுது,

அந்த விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் தொகை 2,538 ரூபாய் பெற்றுக் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு. இந்தியாவிலேயே அதிகமாக இன்சூரன்ஸ் தொகை விவசாயிகளுக்கு பெற்றுத் தந்த அரசு, அம்மாவினுடைய அரசு என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, குடிமராமத்துத் திட்டம். ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், அணைகளிலிருந்து வண்டல் மண்ணை விவசாயிகளே அள்ளி எடுத்துச் செல்வதற்காக இந்தத் திட்டம் துவங்கப்பட்டது. முதற்கட்டமாக 1,519 ஏரிகள், 100 கோடி ரூபாய் திட்டத்தில் உருவாக்கப்பட்டது. இந்த வண்டல்மண் அள்ளுவதால் அந்த ஏரிகள், குளங்கள், அணைகள் ஆழமாகின்றன. இந்த வண்டல்மண் விவசாயிகளுக்கு எருவாகப் பயன்படுகிறது. இந்த அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு கொண்டுவந்து, இன்றைக்கு விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்துள்ளது என்பதனையும் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்தத்திட்டம் நீடிக்கவேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, இன்றைக்கு 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,065 ஏரிகளைச் சீரமைப்பதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, பருவமழைக் காலங்களிலே பெய்கின்ற நீர், ஓடைகளையும், நதிகளையும் தாண்டி வீணாக கடலிலே கலப்பதைத் தடுப்பதற்காக, தடுப்பணை கட்டுவதற்கு, மூன்றாண்டுகள் திட்டத்தின்கீழ், 1,000 கோடி ரூபாய் அம்மாவினுடைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி, தடுப்பணை கட்டுவதன் மூலமாக, பெய்கின்ற மழைநீர் அங்கேயே சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்கின்றது. விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கிறது, குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. இப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தைக் கொண்டு வந்த அரசு, அம்மாவினுடைய அரசு என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம், அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு, அதிகமாக கவனம் செலுத்தி கடந்த ஐந்தாண்டுகளிலே நான்கு முறை ‘க்ரிஷ் கர்மாண்’ விருது பெற்றிருக்கிறது! ஆகவே, இப்படி விவசாயத் துறையிலே சிறந்து விளங்கும் அரசு, தமிழ்நாடு அரசு என்றும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்! அதேபோல, தென்னை விவசாயிகளுடைய நலன் கருதி, அவர்களுக்கு ‘நீராபானம்’ எடுக்க அரசு உத்தரவிட்டிருக்கின்றது.

இன்றைக்குத் தமிழகத்தை, மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கித் தந்த பெருமை, அம்மாவைச் சாரும் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்! அதுபோல, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, தொழிற்சாலையைப் பொறுத்து இருக்கின்றது. பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டுமென்றால், அந்த நாட்டிலே தொழில் முன்னேற்றம் உருவாக வேண்டும். அதற்காக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்கள், சென்னையில் 2013ஆம் ஆண்டு, செப்டம்பர் 9 மற்றும் 10 தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, அதில் வெற்றி கண்டார்கள். அதில் மட்டும், 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் மதிப்பான, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இந்த 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 62 ஆயிரத்து 838 கோடி ரூபாய் மதிப்பில் 61 திட்டங்கள், பல்வேறு கட்டங்களில் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 71 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள், நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர். 2018ஆம் ஆண்டில், இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்திட 73 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில், ஜப்பான் நாட்டின் உதவியுடன் தொழிலகம் அமைத்தல் என்ற அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, காவலர் தேர்வு வாரியம் மூலம், 1991 முதல், இதுவரை, சுமார் 1 இலட்சத்து 18 ஆயிரம் சீருடைப் பணியாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆகவே, இன்றைக்கு தமிழகத்தில்தான் அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன!

இன்றைக்கு மு.க.ஸ்டாலின் ஒரு கருத்தை சொல்லியிருக்கின்றார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு பாஜக–வினுடைய கிளையாகச் செயல்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார். எதனை வைத்து இப்படிச் சொன்னார் என்று தெரியவில்லை! ஆனால், அவர் வேண்டுமென்றால் அப்படி இருக்கலாம், நேரத்திற்கு நேரம், பச்சோந்தி எப்படி நிறத்தை மாற்றிக் கொள்கின்தோ, அதைப்போல, சமயத்திற்குத் தக்கவாறு, கொள்கைகளை மாற்றி, கூட்டணி அமைப்பார்! நாங்கள் அப்படியல்ல! முதலிலே, மத்தியிலே பாரதிய ஜனதாவோடு, ஆட்சியிலே கூட்டு வைத்தார்கள். பிறகு காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்தார்கள்! ஆக, பாரதிய ஜனதாவோடும் கூட்டு வைத்தார்கள், காங்கிரசுடனும் கூட்டு வைத்தார்கள். இதைப்போல் நடக்கின்ற கட்சி திமுக தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கட்சி அப்பேற்பட்ட கட்சியன்று! இன்றைக்கு, கொள்கை பிடிப்போடு இருக்கக்கூடிய ஓர் இயக்கம் என்று சொன்னால், இந்தியாவிலேயே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆட்சி அதிகாரத்திலே இருப்பதற்காக, என்றைக்கும் கொள்கையை விட்டுக் கொடுப்பது கிடையாது! ஆனால், திமுகவோ, குடும்பம் நலம் பெற வேண்டும், குடும்பத்தில் இருப்பவர்கள் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற நோக்கில், கொள்கை எப்படி இருந்தாலும் பரவாயில்லை அதற்கு ஏற்றாற்போல் எந்தக் கட்சியோடு வேண்டுமென்றாலும் கூட்டணி வைப்பார்கள். ஆகவே, அவர் பாரதீய ஜனதா கட்சியில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கிளைக் கழகமாக இருப்பது போல் என்று கூறுவது ஏற்புடையதல்ல. அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகம், தன்னிச்சையாக ஆட்சி அதிகாரத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நினைவு கூற விரும்புகிறேன். அதேபோல இவர்கள் மத்தியிலே ஆட்சி செய்தார்கள். கிட்டத்தட்ட 14 ஆண்டுக்காலம் ஆட்சி செய்தார்கள். பாரதிய ஜனதாவோடு, ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள், காங்கிரஸ் தலைமையிலே, ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள், அப்பொழுது தமிழ்நாட்டிற்கு என்ன திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்? என்னைப் பொறுத்தவரைக்கும், மத்தியில் ஓர் இணக்கமான உறவு இருந்தால்தான், பல்வேறு கட்டங்களில் தேவையான நிதியினைப் பெறுவதற்கு எளிதாக இருக்கும்! ஆகவே, மத்திய அரசோடு ஒத்துப்போனால்தான் திட்டங்களுக்கான நிதியுதவியைப் பெறமுடியும், அப்போது தான் தமிழகம் வளர்ச்சி பெறும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா.

இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள், தொண்டர்கள், பொது மக்கள் ஆகிய அனைவரும் பத்திரமாக வீடுபோய் சேர்ந்தால்தான், நாங்கள் மனநிறைவு அடைவோம். ஆகவே, நீங்கள் அனைவரும் வாகனங்களில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய்ச் சேரவேண்டும்.

எனது இனிய மனமார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளை, உங்கள் அனைவருக்கும், இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழா, சீரும், சிறப்போடு நடப்பதற்கு அடித்தளமாக விளங்கிய இந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தர், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களுக்கும், அவரோடு துணை நின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஒன்றிய, நகரச் செயலாளர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் எனக்கு உறுதுணையாக இருந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு,

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி! வணக்கம்!

திண்டுக்கல் மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகளை அறிவித்தார்கள்.

அறிவிப்புகள்

புதிய வருவாய் வட்டம் உருவாக்குதல்

★ திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வருவாய் வட்டத்தைப் பிரித்து குஜிலியம்பாறையைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.

குடிநீர்

★ திண்டுக்கல் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை, திண்டுக்கல் மாநகராட்சி உட்பட, 7 பேரூராட்சிகள் மற்றும் 816 ஊரகக் குடியிருப்புகளுக்கு விரிவாக்கம் செய்யும் பொருட்டு, விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வடிகால்கள் அமைத்தல்

★ வேடசந்தூர் பேரூராட்சியில், 1.5 கோடி ரூபாய் மதிப்பில், வடிகால்கள் அமைக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டு, மூலதன மான்ய நிதியின்கீழ், ஒதுக்கீடு பெறப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்படும். இதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

புதிய கால்நடை கிளை நிலையங்கள்

★ குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர்.பில்லமநாயக்கன்பட்டியிலும், வடமதுரை ஒன்றியம், புத்தூரிலும் புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும்.

சித்த மருத்துவக் கல்லூரி

★ சித்த மருத்துவ படிப்பிற்கு உள்ள கூடுதல் தேவையைக் கருத்திற்கொண்டு, 60 மாணவர்கள் படிக்கும் வகையில், பழநியில் ஒரு புதிய சித்த மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்

ஆரம்ப சுகாதார நிலையம்

★ வேடசந்தூர் ஒன்றியம், ரெங்கநாதபுரத்தில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

மருத்துவ வசதிகள்

★ JICA திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 11.68 கோடி ரூபாய் மதிப்பில், அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும்.

★ திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், 28.5 கோடி ரூபாய் மதிப்பில், Diplomate of National Board (DNB) மருத்துவ பட்ட மேற்படிப்பு தொடங்குவதுடன், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

★ திண்டுக்கல் மாவட்டம் கஸ்தூரிபாய் மருத்துவமனையில், ஒரு கோடி ரூபாய் மதிப்பில், புதிய கிராம சுகாதார செவிலியர் பயிற்சி பள்ளி அமைக்கப்படும்.

★ 82.5 இலட்சம் ரூபாய் மதிப்பில், வளரிளம் பருவத்தினர் பாதுகாப்புத் திட்டம், மருந்துக் கிடங்கு விரிவாக்கம் செய்யப்படும்.

★ நிலக்கோட்டை மற்றும் வடமதுரை வட்டாரங்களில், விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

★ அம்மையநாயக்கனூர் சமுதாய சுகாதார நிலையத்தில், நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.

★ கொடைக்கானல் அரசு மருத்துவமனையில், ‘சி.டி. ஸ்கேன்’ அமைக்கப்படும்.

★ பழனி அரசு மருத்துவமனைக்கு, நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

★ ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு, 8.22 இலட்சம் ரூபாய் மதிப்பில், ‘டயாலிசிஸ்’ கருவி வழங்கப்படும்.

தடுப்பணைகள் கட்டுதல்

★ நத்தம் கிராமத்தில், திருமணி முத்தாற்றின் குறுக்கே அமைந்துள்ள காட்டுப் பெரிய குளம் அணைக்கட்டினை, 3 கோடி ரூபாய் மதிப்பில் திரும்பக் கட்டப்படும்.

★ நத்தம் வட்டம், கோசுகுறிச்சி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே, அமைந்துள்ள பாலூத்துகுளம் அணைக்கட்டினை, 2.72 கோடி ரூபாய் மதிப்பில் திரும்பக் கட்டப்படும்.

★ ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாச்சி கிராமத்தில், நங்காஞ்சியார் ஆற்றின் குறுக்கே, 1.33 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.

★ நிலக்கோட்டை வட்டம், சித்தர்கள் நத்தம் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே, எல்.எஸ்.35.05 கி.மீ–ல் 12.5 கோடி ரூபாய் மதிப்பில், தடுப்பணை கட்டப்படும்.

★ நிலக்கோட்டை வட்டம், குன்னவராயன்கோட்டை கிராமத்தில் உச்சப்பட்டியின் அருகே, மஞ்சளாறு ஆற்றின் குறுக்கே, 2.5 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.

★ நிலக்கோட்டை வட்டம், கனவாய்பட்டி கிராமத்தில், நெடுகை மஞ்சளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.

★ நத்தம் வட்டம், முளையூர் கிராமத்திற்கு அருகே, திருமணிமுத்தாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும்.

- ★ நத்தம் வட்டம், புன்னப்பட்டி கிராமத்திற்கு அருகே காட்டுப் பெரியகுளம் அணைக்கட்டிற்குக் கீழ்புறத்தில், திருமணிமுத்தாற்றின் குறுக்கே, தடுப்பணை கட்டப்படும்.
- ★ நிலக்கோட்டை வட்டம், கொன்னம்பட்டி கிராமத்தில், இராவுத்தர் தோட்டத்திற்கு அருகே, மருதாநதி ஆற்றின் குறுக்கே, தடுப்பணை கட்டப்படும்.
- ★ ஒட்டன்சத்திரம் வட்டம், ஜவ்வாதுப்பட்டி கிராமத்தில், நங்காஞ்சியாற்றின் குறுக்கே, தடுப்பணை கட்டப்படும்.
- ★ ஆத்தூர் வட்டம், வேலகவுண்டன்பட்டி அருகே சீவல்சரகு கிராமத்தில், குடகனாற்றின் குறுக்கே, தடுப்பணை கட்டப்படும்.
- ★ வேடசந்தூர் வட்டம், மாரம்பாடி கிராமத்தில், வேலம்பாடி குடியிருப்பு அருகே, சந்தானவர்தினி ஆற்றின் குறுக்கே, 4.5 கோடி ரூபாய் மதிப்பில் தடுப்பணை கட்டப்படும்.

பாலங்கள்

- ★ மோர்பட்டி–சித்துவார்பட்டி சாலையில் சிறுபாலம் கட்டப்படும்.
- ★ வடமதுரை–வேலாயுதம் பாளையம் செங்குறிச்சி சாலையில் பாலம் கட்டப்படும்.
- ★ பழனி–கொழுமம் சாலையில் பிரிந்து, சின்னகாந்திபுரம் வழியாக செல்லும் சண்முகம்பாறை சாலையில், பாலம் கட்டப்படும்.
- ★ அம்பிளிக்கை–குத்திலுப்பை சாலையில் பாலம் கட்டப்படும்.
- ★ சக்கையநாயக்கனுார் – ஜங்கில்பட்டி வழியிலுள்ள, அழகம்பட்டி சாலையில், பாலம் கட்டப்படும்.
- ★ கள்ளிமந்தையம்–ஒடைப்பட்டி சாலையில், 3 கோடி ரூபாய் மதிப்பில் பாலம் கட்டப்படும்.
- ★ அய்யலுார்–ஆலம்பட்டி சாலை, கிமீ 7/2–ல், 2.5 கோடி ரூபாய் மதிப்பில், பாலம் கட்டப்படும்.

சுரங்கப்பாதை

- ★ திண்டுக்கல்–குஜிலியம்பாறை–கரூர் சாலையில் உள்ள இரயில்வே கடவு எண்.6க்கு மாற்றாக வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை, 16.18 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும்.

திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

- ★ திண்டுக்கல் நகருக்கு, புறவழிச்சாலை 19.25கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படும். இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான

நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

★ பழனி தாராபுரம் சாலையில், உடுமலைப்பேட்டை இரயில் நிலையங்களுக்கிடையே உள்ள கடவு எண்.63க்குப் பதிலாக, இரயில்வே மேம்பாலம் கட்டப்படும். இப்பணிக்கு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

மின் வசதிகள்

★ திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தில், புதிய நத்தம் உதவி மின் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் மின் கட்டண வசூல் மையம் அமைக்கப்படும்.

★ திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம் சின்னலூப்பை, சின்னாளப்பட்டி, மற்றும் லட்சுமணப்பட்டியில், புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும்.

★ வாகரை, கோவிலூர், எரியோடு, அய்யலூர், இராமராஜபுரம், மற்றும் அய்யம்பாளையம் ஆகிய துணை மின் நிலையங்களில், திறன் உயர்த்தப்பட்ட மின் மாற்றிகள் அமைக்கப்படும்.

★ சித்தர்கள் நத்தம் துணை மின் நிலையம், 2.49 கோடி ரூபாய் செலவில், திறன் உயர்த்தப்படும்.

★ திண்டுக்கல் மின் பகிர்மான வட்டத்தில், புதிதாகக் கணினி முறையில், மின் தடை பழுது நீக்கும் மையம் (Fuse off call centre) ஒன்று நிறுவப்படும்.

நீண்ட நாட்களாக, பொதுமக்கள், முக்கியமான கோரிக்கையை அரசுக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். “பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக, 30 மாவட்டங்களில் நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்! இந்தச் சூழ்நிலையில், தமிழகச் சிறையில், ஆயுள் தண்டனை பெற்று, பத்து ஆண்டுகள் வரை சிறைவாசம் அனுபவித்து வந்துள்ள சிறைக் கைதிகளை, சட்டத்திற்கு உட்பட்டு மற்றும் சிறை விதிகளுக்கு உட்பட்டு, மனிதாபிமான அடிப்படையில், முன்விடுதலை செய்ய, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அம்மாவின் அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்!” என்று அவர்கள் விடுத்துள்ள அக்கோரிக்கைதனை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*

31.12.2017 அன்று, திண்டுக்கல்லில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

நேற்று, இன்று, நாளை என்ற முக்காலத்திலும் நின்று நிலைக்கும் முதன்மை நாயகன் எம்.ஜி.ஆருக்கு முக்கடல் சங்கமிக்கும் குமரி மாவட்டம் நாகர்கோவிலில் நூற்றாண்டு விழா.

எங்கள் ஆட்சி என்றும் வாழும் இந்த மண்ணிலே!

மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், தலைமையுரை ஆற்றியுள்ள, மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே!

இந்த விழாவிலே, சிறப்பாக எழுச்சியுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே!

இந்த மாவட்டத்தில், இன்னென்ன பணிகள் நிறைவேற்ற வேண்டும் என்று கோடிட்டு காட்டி அமர்ந்திருக்கின்ற, மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும் கன்னியாகுமரி மாவட்டம் அம்மாவுடைய கோட்டை என்று நிரூபித்து காட்டிடும் விதத்தில் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திட, அடித்தளமாக விளங்கிய தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.விஜயகுமார் அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்களே! கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆஸ்டின் அவர்களே! நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்களே! குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜி.பிரின்ஸ் அவர்களே! பத்மனாபபுரம் சட்டமன்ற உறுப்பினர்

திரு.டி.மனோதங்கராஜ் அவர்களே! விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.விஜயதாரணி அவர்களே! கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.ராஜேஷ் குமார் அவர்களே! வரவேற்புரையாற்றியுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு.வெங்கடேசன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் வடநேரே அவர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் முன்னாள் தலைவர் திரு.ஏ.தமிழ்மகன் உசேன் அவர்களே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! நலத்திட்டப் பயனாளிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கடலும் சங்கமிக்கும் புண்ணிய பூமி கன்னியாகுமரி. சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த குமரிக் கண்டத்தைக் கடல் கொண்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள்.

குமரி அன்னை தவக்கோலத்தில் இருக்கிறாள் என்பதை "நீலத்திரைக் கடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி" என அழகுறப் பாடினார் மகாகவி பாரதியார் அவர்கள். அந்த அன்னையின் திருப்பெயரால் அழைக்கப்படுகின்ற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்!

பார்வதி தேவி எடுத்த ஒரு அவதாரத்தில், சிவனைத் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையில், கன்னியாகவே தவம் இருந்ததால், இந்த இடம் கன்னியாகுமரி என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

சிறப்பு வாய்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும், மாண்புமிகு, 'பாரத ரத்னா', புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில், மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மொழியால், பண்பாட்டால் தமிழர்களாக வாழ்ந்து வந்த நாஞ்சில் நாடு மற்றும் எடநாட்டு மக்கள், தாய்த் தமிழகத்தோடு இணையப் பாடுபட்டனர்!

தமிழ்நாட்டுடன் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற போராட்டத்தில், மார்ஷல் நேசமணியுடன், குஞ்சன் நாடார், சிதம்பரம் பிள்ளை, சிவதாணுப் பிள்ளை, நத்தானியேல், அப்துல் ரசாக், சிதம்பரநாதன் நாடார், தாணுலிங்க நாடார், பொன்னப்ப நாடார், ராமசாமி பிள்ளை என இன்னும் பலர் இப்போராட்டத்திற்குத் துணை நின்றனர்!

இந்தத் தியாகச் செம்மல்களின் அரும் போராட்டத்தால்தான், 1956ஆம் ஆண்டு, நவம்பர் 1ஆம் நாள், கன்னியாகுமரி மாவட்டம் உதயமானது. குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக, 1983ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், நாகர்கோவிலைத் தலைமையிடமாக கொண்ட நேசமணி போக்குவரத்துக் கழகத்தினை ஏற்படுத்தினார்கள். இங்கு மூன்று கடல்கள்

மட்டுமல்ல, மூன்று மதங்களும் சங்கமிக்கின்றன. மும்மதங்களைச் சார்ந்த புராதன மிக்க வழிபாட்டுத் தலங்களும், இங்கு சிறப்புடன் விளங்குகின்றன.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில், மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில், கொல்லங்கோடு பகவதி அம்மன் கோவில், சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோவில், கேரளபுரம் அதிசய விநாயகர் கோவில், பறக்கை மதுசூதனப் பெருமாள் கோவில், பத்மநாபபுரம் ராமசுவாமி குமார கோவில், வெள்ளிமலை முருகன் கோவில், சிதரால் ஜெயின் மலைக்கோயில் என எண்ணற்ற திருத்தலங்களால் ஆன்மிக பூமியாக விளங்குவது குமரி மாவட்டம்.

புனித சவேரியார் வருகையின் நினைவாகக் கட்டப்பட்ட, கோட்டாறு சவேரியார் ஆலயம், கன்னியாகுமரி அலங்கார உபகார அன்னை ஆலயம், ராஜாவூர் அதிதூதர் புனித மைக்கேல் ஆலயம், முட்டம் சகல புனிதர்கள் ஆலயம் ஆகிய பழைமை வாய்ந்த கிறிஸ்துவ வழிபாட்டுத் தலங்கள், இம்மாவட்டத்திற்கு சிறப்புச் சேர்க்கின்றன.

இளங்கடையில் உள்ள மிகப் பழமை வாய்ந்த பெருநாள் தொழுகை நடத்தும் இடம் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படும் தக்கலை பீர் முகமது சமாதி அடைந்த தர்கா, திருவிதாங்கோடு முகமது சாகிப் தர்கா ஆகிய இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களும் மிகவும் பிரபலமானவை.

மாத்தூர் தொட்டிப் பாலம், மருத்துவமலை, முக்கூடல், முருகன் குன்றம், முட்டம் கடற்கரை, சங்குத்துறை கடற்கரை, தேங்காய்ப்பட்டினம் கடற்கரை, பத்மநாபபுரம் அரண்மனை, சுசீந்திரம், திற்பரப்பு அருவி, திருவட்டாறு, உலக்கை அருவி, உதயகிரி கோட்டை போன்ற ஏராளமான சுற்றுலாத் தலங்கள், குமரி மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கின்றன!

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமயமான அய்யாவழி எனும் வைகுண்ட சாமி இயக்கத்தின் பிறப்பிடம், கன்னியாகுமரி மாவட்டமாகும். சமூக மாற்றத்திற்கு வித்திட்ட அய்யா வழி வைகுண்ட சாமி கோயில், சாமித் தோப்பில் உள்ளது.

இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள கன்னியாகுமரியில், காலையில் சூரியன் உதயமாவதையும், மாலையில் சூரியன் மறைவதையும், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்றனர்.

1892ஆம் ஆண்டு, சுவாமி விவேகானந்தர் இங்கு வந்து, ஸ்ரீபாத பாறையில், அறிவு விளக்கம் பெற்றுச் சென்றதை நினைவு கூறும் வகையில், இங்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டது. மகாத்மா அவர்களின் அஸ்தி கரைக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில், இங்கு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அண்ணலின் பிறந்த நாளான அக்டோபர் 2ந்தேதி, சூரிய ஒளி இங்குள்ள மண்டபத்தில் விழும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில், கடந்த ஆண்டே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், எதிர்பாராமல் இம்மாவட்டம் ''ஒகி'' புயலினால் பாதிக்கப்பட்டதால், இவ்விழா நடைபெற முடியாமல் போய்விட்டது.

தற்போது கன்னியாகுமரி மாவட்ட மக்களின் பேராதரவோடு, சீரோடும், சிறப்போடும் இவ்விழா இப்பொழுது நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த இயக்கத்தின் ஆணிவேரான மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், இம்மாவட்ட மண்ணின் மைந்தர் கலைவாணருக்கும் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குமான தொடர்பைப் பற்றி இங்கு நினைவு கூறுவது பொருத்தமாக இருக்கும்!

ஏற்கெனவே நம்முடைய சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதைத் தொடர்ந்து, நானும் இங்கே சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன். திரைப்படத் துறையில், தாம் சம்பாதித்த பணத்தை ஏழைகளுக்கும், தம்மிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், வாரி வழங்கிய கொடையாளி, திரைப்படைத் துறையின் மூலம் சமுதாய மாறுதலுக்கான கருத்துகளை வழங்கியவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள்!

இந்த வள்ளலைப் பற்றி, இன்னொரு வள்ளலான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தாம் எழுதிய "நான் ஏன் பிறந்தேன்" புத்தகத்தில் பெருமையுடன் கூறியதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

"கடந்த வாரத்தில் ஒரு நாள், எனது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஒரு மகிழ்ச்சியான நாளாக அமைந்தது. 1972ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 14ஆம் தேதிதான் அந்த நன்னாள் ஆகும். ஏனென்றால், மறைந்த கலைமேதை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் உருவச்சிலையைத் திறந்து வைக்கும் நற்பேற்றை நான் பெற்றேன்," என்று புரட்சித்தலைவர் பெருமையுடன் அந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைவாணரின் சிலையைத் திறந்து வைத்தார்கள். அறிஞர் அண்ணாவின் கரத்தால் திறக்கப்பட்டதால், கலைவாணர் அவர்கள் உயர்ந்தார்கள்! மேலும் கலைவாணர் அவர்களின் சிலையினை, இன்று திறந்ததால் நான் உயர்த்தப்பட்டேன்!

இதுதான் ஒருவரின் தகுதி விளக்கத்திற்கு எடுத்துக்காட்டு. நான் என் வாழ்நாளில், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில், இவ்வளவு மிகப்பெரிய மக்கள் கூட்டத்தைக் கண்டிருந்தால், அவற்றில் இது முதன்மையானது என்று கூறுவது மிகப் பொருத்தமுடையது என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"நகைச்சுவை நடிகன் என்றால், கூத்தடிப்பவன், கோமாளி என்றெல்லாம் பன்னெடுங்காலமாக நம்பப்பட்டு வந்த இலக்கணத்தையே மாற்றி, மக்களைச் சிரிக்க வைக்கும் போதே, சிந்திக்க வைக்கும் பொறுப்பும் நகைச்சுவை நடிகனுக்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தியவர் கலைவாணர் அவர்கள்," என்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பத்திரிகைக்கு அளித்த கேள்வி பதில் நிகழ்ச்சியில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. "உங்கள் வாழ்க்கையில் எப்போதும் நினைத்து, சிரித்து மகிழும்படி நடந்த நிகழ்ச்சியைக் கூற முடியுமா ?" என்று.

அதற்கு புரட்சித்தலைவர் அவர்கள் “கலைவாணர் அவர்களுடைய சில செயல்கள் ஆச்சரியப்பட வைக்கும். ஒரு முறை நாதசுவர மேதை திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, இசை நிகழ்ச்சிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார். பொதுவாக இசை வித்வான்கள் யாராக இருந்தாலும் பெரும்பாலும் வீட்டில் சிறிது நேரம் சாதகம் செய்துவிட்டுத்தான் புறப்படுவார்கள். அங்கிருந்த கலைவாணர் “என்னய்யா புறப்படுங்க” என்றார். அதற்கு திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் கலைவாணரைப் பார்த்து, “நாதசுவரம் வாசிப்பது என்ன, விளையாட்டு என்று நினைச்சீங்களா! எவ்வளவு கஷ்டம் தெரியுமா? வாசித்துப் பார்த்து விட்டு புறப்பட்டால் நல்லது” என்றார்.

“ஆமா பெரிய வாத்தியம்” என்றார் கலைவாணர். “இப்படி சொல்கிறீர்களே, உங்களால் வாசிக்க முடியுமா?” என்றார் ராஜரத்தினம் பிள்ளை கடுமையாக. உடனே, கலைவாணர் அந்த நாதசுவரத்தை வாங்கி, சுகஜீவனா என்ற பாடலை, ஆனந்த பைரவி ராகத்தில் இனிமையாக வாசித்தார்.

நாங்கள் ஆச்சரியத்தாலும், அதிசயத்தாலும் அப்படியே மலைத்துப் போனோம்! இசை மேதை திருவாவடுதுரை ராஜரத்தினம் பிள்ளையிடம் இவ்வளவு துணிவோடு, கலைவாணரைப்போல் யாரால் கேட்க முடியும்? கேட்டதோடு மட்டுமின்றி, இனிமையாக வாசித்து முடிப்பதும் என்றால், அது அதிசயம் அன்றோ? இதுபோலப் பல நிகழ்ச்சிகள்,” என்றார், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

புரட்சித்தலைவர் அவர்களின் அரசியல் வாரிசு, நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தமது ஆசானின் வழியிலேயே, அழகு மிளிரும் புதிய கலைவாணர் அரங்கத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கட்டி முடித்து, தமது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள்.

“திருவளர் செல்வியோ, நான் தேடிய தலைவியோ” என்ற பாடல் வரிகள் மூலம், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், தமது அரசியல் வாரிசு மாண்புமிகு அம்மா அவர்கள் தாம் என்பதைத் தீர்க்கதரிசனமாக அன்றே கூறிவிட்டார்கள்.

அதனைச் செயல்படுத்தும் விதமாக, அவரை, கடலூர் மாநாட்டில் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்தார் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள். அதுமட்டுமின்றி 1984இல், மாநிலங்களவை உறுப்பினராகவும் ஆக்கினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாநிலங்களவையில், தமது கன்னிப் பேச்சில், தமிழ்நாட்டில் மின்சாரம் பற்றியும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது பற்றியும் பேசினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், மாநிலங்கள் அவையில் தமது கன்னிப் பேச்சில் இதே பொருள் பற்றித்தான் பேசினார்கள். அண்ணாவுக்கு வழங்கப்பட்ட இருக்கை எண்.185 என்ற அதே இருக்கைதான் மாண்புமிகு அம்மாவுக்கும் வழங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு முழுவதும் கட்சிக் கொள்கையைப் பரப்ப சுற்றுப்பயணம் செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் செல்லும் அனைத்துப் பொதுக் கூட்டங்களிலும், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். இதைக் கேட்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மிகவும்

சந்தோஷப்பட்டார்கள். தமக்குப் பிறகு, இந்த இயக்கம் எந்த தொய்வும் இல்லாமல் பல ஆண்டுகள் தொடர்ந்து இயங்கும் என்ற நம்பிக்கை அவருக்கு அன்றே வந்தது!

1984ஆம் ஆண்டு, புரட்சித்தலைவர் அவர்கள் சிகிச்சை பெற அமெரிக்காவிற்குச் சென்றார். அந்த நேரத்தில், சட்டமன்றத்திற்கான தேர்தல் வந்தது. அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்பதற்காக, புரட்சித் தலைவரின் வாரிசாக தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தார் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர் தமது முதல் பொதுக் கூட்டத்தை புரட்சித்தலைவர் போட்டியிட்ட ஆண்டிப்பட்டியில்தான் தொடங்கினார். அவரது பிரச்சாரத்திற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. இதே தொகுதியில்தான், பிற்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களும் போட்டியிட்டு முதலமைச்சரானார்கள் என்பது வரலாறு.

“மக்கள் கொடுக்கும் வரிப்பணம், மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்பட வேண்டும். மக்களுடன் கூடி இரு; மக்களுடன் பழகு, அவர்களுடன் வாழ்; அவர்களுக்காகத் திட்டம் தீட்டிச் செயல்படு; மக்களிடம் நீ போ – செய்!” என்றெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் நான் செய்கிறேன். அப்படி பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை எந்தெந்த வகையில் நிறைவேற்ற வேண்டுமோ, அந்தந்த வகையில் நிறைவேற்றி வருகிறோம்” என்றார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

மேற்கூறிய கூற்றின்படி, மாண்புமிகு அம்மா அவர்கள், எப்படி ஆட்சி புரிந்தாரோ அந்த வழியிலேயே இந்த அரசும் செயல்பட்டு வருகிறது.

“ஆதி அந்தமும் அவள்தான், நம்மை ஆளும் நீதியும் அவள்தான், அகந்தையை அழிப்பாள், ஆற்றலைக் கொடுப்பாள் அவள் தான், அன்னை மகா சக்தி” என்ற புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளின்படி, நம்மையெல்லாம் இன்றும் வழிநடத்தி காத்துக் கொண்டிருப்பவர், மகாசக்தியாக திகழும் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான் என்பதை நான் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன்!

கடந்த ஆண்டு ஏற்பட்ட, ‘ஒகி’ புயலினால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்ப மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை, இங்கே உங்கள் முன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மூத்த அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள் என பலரும் உடனடியாக கன்னியாகுமரிக்கு வந்து மீட்புப் பணிகளைப்

போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டார்கள். நானும், 12.12.2017 அன்று, நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டு, நிவாரண உதவிகளை அன்றே அறிவித்தேன்.

- 'ஒகி' புயலால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு, வாழ்வாதார உதவியாக, 30 ஆயிரத்து 756 மீனவக் குடும்பங்களுக்கு, தலா 5,000 ரூபாய் வீதம், 15 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

- மீனவர்களுக்காக, கம்பியில்லா தொலைத் தொடர்பு சாதனங்கள், (Wireless sets) 62 கோடியே 14 இலட்சம் ரூபாய்க்கு வழங்கிடத் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. தற்போது கன்னியாகுமரியில் மட்டும், 2,150 மீனவர்களுக்கு கம்பியில்லா தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 'ஒகி' புயலினால், ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கும், அவர்களது படகுகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மீனவ மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசு பல்வேறு மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- தொலைதூர மாநிலங்களின் கடற்கரைகளில் ஒதுங்கிய மீனவர்களைப் பாதுகாப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்களை பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கு, விசைப் படகு ஒன்றிற்கு, அதிகபட்சமாக 1,000 லிட்டர் டீசல் வழங்கப்பட்டது.

- 'ஒகி' புயலில் மரணமடைந்த 24 மீனவர்களின் குடும்பத்தினருக்கு, குடும்பம் ஒன்றிற்கு, 20 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை வீதம், 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- காணாமல் போன மீனவர்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, விதிகளைத் தளர்த்தி, காணாமல்போன 138 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு, 27 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில், தலா 10 இலட்சம் ரூபாய் வீதம், காசோலையும், 6 மாத கால அவகாசத்தில் பெற்றிடும் வகையில், 10 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியும் மாண்புமிகு அம்மாவின் அரசால் 14.03.2018 அன்று வழங்கப்பட்டது.

- இறந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பும் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, 136 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு, 27.08.2018 அன்று, என்னால் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு, அம்மாவின் அரசு காப்பாற்றி இருக்கிறது.

- மீனவர்களின் சேதமடைந்த படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணமாக, 8.44 கோடி ரூபாய் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- 'ஒகி' புயலினால் ஏற்பட்ட பல்வேறு நிகழ்வுகளினால் உயிரிழந்த 15 மீனவர் அல்லாத நபர்களின் குடும்பத்தினருக்கு, தலா, 10 இலட்சம் ரூபாய் நிவாரண உதவியாக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- ‘ஒகி’ புயலால் பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு, வாழை, ரப்பர், கிராம்பு மற்றும் பிற பயிர் சேதத்திற்கென, 36 கோடியே 95 இலட்சம் ரூபாய் இந்த மாண்புமிகு அம்மாவின் அரசு நிவாரணமாக வழங்க ஆணையிட்டது.

- தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறை பணியாளர்களின் இடைவிடாத உழைப்பின் காரணமாக, சாலையில் விழுந்த மரங்கள் அகற்றப்பட்டு, விரைவாக, போக்குவரத்து மற்றும் குடிநீர் வழங்கல் சீர் செய்யப்பட்டன.

- இவற்றிக்கெல்லாம் மேலாக, மின் தேவையின் அவசர, அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர்கள், அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களைப் பல குழுக்களாகப் பிரித்து, பகுதி வாரியாக அனுப்பி, அவர்கள் ஆற்றிய அயராத பணியின் காரணமாக, வெகு குறுகிய காலத்தில், மின்சாரம் தடையின்றி அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்பட்டது.

- பலத்த புயலின் காரணமாகச் சிதைந்த 15,858 மின் கம்பங்கள், புதிதாக நடப்பட்டன.

- 1,085 கிலோ மீட்டருக்கு, மின் கம்பிகள் புதிதாக நிறுவப்பட்டன.

- கிட்டத்தட்ட, 100 பழுதடைந்த மின் மாற்றிகள் நீக்கப்பட்டு, புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டன. இதன் காரணமாக, ஒரே நாளில், அரசு மருத்துவமனை மற்றும் முக்கிய இடங்களில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து நகராட்சிப் பகுதிகளுக்கு 3வது நாளிலும், மற்ற இடங்களில் 5வது நாளிலும் மின்சார இணைப்பு வழங்கி நடவடிக்கை எடுத்த அரசு அம்மாவின் அரசு என்பதனை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

- இதன் காரணமாக, பிற சீரமைப்புப் பணிகளையும் விரைந்து முடிக்கப்பெற்று, மாவட்டம் குறுகிய காலத்தில் இயல்பு நிலைக்கு திரும்பியது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில், மீனவர்கள் கடலுக்குள் சென்று காணாமல் போகும் தருணத்தில், அவர்களை மீட்கும் பொருட்டு, ‘ஹெலிகாப்டர் தளம் அடங்கிய இந்திய கடலோர காவல்படை நிலையம் ஒன்று’ (Indian Coast Guard Station) அமைப்பதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளேன்.

மக்களின் நலனில் எப்போதுமே அக்கறை கொண்ட அரசு இந்த அம்மாவின் அரசு. மக்களை நாடி, நேரடியாக செல்லும் அரசு, அம்மாவின் அரசு என்பது இதன் மூலம் தெள்ளத் தெளிவாக மக்களுக்கு விளங்கும் என்று நம்புகின்றேன்.

இந்த அரசு, பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், மாண்புமிகு அம்மா ஆகியோரின் கொள்கை வழி நின்று, அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களுக்காக பணியாற்றும் அரசு.

''கல்விக்குச் சாலை உண்டு, நூலுக்கு ஆலையுண்டு நாட்டுக்குத் தேவையெல்லாம் நாம் தேடலாம்; தோளுக்கு வீரம் உண்டு; தோற்காத ஞானம் உண்டு, நீதிக்கு நெஞ்சம் உண்டு, நாம் வாழலாம். சிரிக்கும் ஏழை முகம் பார்க்கலாம் சிந்தும் கண்ணீர்தனை மாற்றலாம் வாருங்கள் தோழர்களே, ஒன்றாய்ச் சேருங்கள் தோழர்களே'' என்ற புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் இந்த அரசாலும், இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு துறையிலும் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு விஞ்ஞானக் கல்வியை, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திற்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்தியாவில், எத்தனையோ மாநிலங்கள் இருக்கின்றன. எந்த மாநிலத்திலும், நம்முடைய குழந்தைகள் விஞ்ஞானக் கல்வி, அறிவுபூர்வமான கல்வி, உலகத்தரத்திற்கேற்ற கல்வி கிடைக்க வேண்டும் என்று சொன்னால், அப்படிப்பட்ட கல்வியானது, எந்த மாநிலத்திலும் கிடைக்கவில்லை. ஆனால், இதய தெய்வம், புரட்சித்தலைவி ஆண்ட தமிழகத்தில், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள், குழந்தைகளுடைய எதிர்காலத்தை எண்ணி, விஞ்ஞானபூர்வ கல்வி, இன்றைக்கு உலக நாடுகளில் இருக்கின்ற கல்விக்கு இணையான கல்வி, தமிழகத்திலே கிடைக்க வேண்டும் என்பதற்காகவோ அம்மா அவர்கள் ஆட்சியில், விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இந்த மாவட்டத்தில், 118 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன என்ற செய்தியை பெருமையுடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மடிக்கணினியின் விலை, சுமார் 14 ஆயிரம் ரூபாய் ஆகின்றது. இந்த பணத்தைக் கொடுத்து வாங்கி, படிப்பதற்கு இயலாத சூழலில், பல குடும்பங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட குடும்பங்களில் பிறந்த மாணவ, மாணவிகள் எல்லாம் அறிவுத்திறன் மிகுந்தவர்களாக இருப்பார்கள்; ஆனால், பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாக மடிக்கணினி வாங்க முடியாத நிலை! அப்படிப்பட்ட மாணவச் செல்வங்களுக்கு, அறிவுத்திறனை வளர்ப்பதற்கு, உலகத்தரத்திற்கு ஏற்ற விஞ்ஞானக் கல்வி கொடுப்பதற்கு அம்மா அவர்கள் புதிய சாதனை படைத்திருக்கின்றார்கள். நம்முடைய மாணவச் செல்வங்கள் எதிர்காலத்திலே மிகச் சிறந்த கல்வியாளர்களாக விளங்க வேண்டும் என்பதற்காக, இந்த மடிக்கணினியை, இந்த மாணவச் செல்வங்களுக்குக் கொடுத்து அழகு பார்த்த தலைவி, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்பதைப் பெருமையுடம் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

‘விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின்கீழ்,’ 5 இலட்சத்து 27 ஆயிரத்து 164 குடும்ப அட்டைதாரர்களுக்கு, மாதந்தோறும் 10 ஆயிரத்து 450 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, 821 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 24,987 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், இன்றைக்குப் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு வீடு இல்லை என்ற நிலையை அம்மாவுடைய அரசு போக்கிக் கொண்டிருக்கிறது என்பதை இதன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு, பாதுகாப்பான மீன்பிடி உள்கட்டமைப்புகளை உருவாக்கிடும் வகையில், குளச்சலில் 96.72 கோடி ரூபாய் செலவில், புதியதாக மீன்பிடி துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டும், சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் 81.22 கோடி ரூபாய் செலவில், மேம்படுத்தப்பட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் மக்களின் பயன்பாட்டிற்கும் கொண்டு வரப்பட்டுள்ளது!

மேலும், தேங்காய்ப்பட்டினத்தில், 97.4 கோடி ரூபாய் செலவில், புதியதாக மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணி, நிறைவடையும் தருவாயில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்களுக்கு, மீன்பிடி குறைந்த கால நிவாரணமாக, 14 கோடியே 32 இலட்சம் ரூபாயும், மீன்பிடி இடைக்கால நிவாரணமாக, 14 கோடியே 64 இலட்சம் ரூபாயும், மற்றும் மீனவர் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரண திட்டத்தின்கீழ், 27 கோடியே 94 இலட்சம் ரூபாயும் என, மொத்தம் ஆண்டொன்றுக்கு, 56 கோடியே 88 இலட்சம் ரூபாய் அளவுக்கு, நிவாரணம் அம்மாவுடைய அரசால் வழங்கப்படுகிறது.

தோவாளையில், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ‘பாரத ரத்னா’, டாக்டர் எம்.ஜி.ஆர் மலர் வணிக வளாகமும், பூதப்பாண்டியில் 1.50 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையமும் என்னால் திறந்து வைக்கப்பட்டன.

இன்னமும் சொல்லிக்கொண்டே போகலாம். காலத்தின் அருமை கருதி சுருக்கமாக, இங்கே சிவற்றை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.

சீரோடும் சிறப்போடும் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டுள்ள, எனது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய உங்கள் அனைவரையும், காண்பதிலும், எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதிலும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவேற்றப்பட்ட திட்டங்களை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப்பணித்துறையின் மூலம், 6 கோடி ரூபாய் மதிப்பில், நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலக கட்டடம், பளுகல் அரசு உயர்நிலைப் பள்ளியில் வகுப்பறை கட்டுதல் உட்பட, அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், வாரியூரில் கால்நடை மருந்தக கட்டடம் உட்பட, 13 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கட்டடங்களை, நான் இன்று திறந்து வைத்துள்ளேன். மீன்பிடி துறைமுக திட்டக் கோட்டம், நாகர்கோவில், சார்பில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பொழிக்கரை கிராமம்,

கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளம்துறை கிராமங்களில் கட்டப்படவுள்ள மீன் இறங்குதளம் உட்பட, 31 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு, நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பல்வேறு துறைகளின் சார்பில், 67 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, 14 ஆயிரத்து 911 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்ற குறுகிய காலத்திலேயே, பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், நீர்நிலைகளின் கொள்ளளவை அதிகரிக்க குடிமராமத்துத் திட்டம், விவசாயிகளின் உரத்திற்கு தேவையான, ‘வண்டல் மண்ணை விலையில்லாமல் வழங்கும் திட்டம்’ போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

மக்கள் இந்த ஆட்சியின் சாதனைகளை நன்கு உணர்ந்துள்ளனர். ஆனால், ஒரு சிலர் மட்டுமே, இந்த ஆட்சியைக் குறை சொல்லியும், தேவையற்ற சவால்களை விடுத்தும் வருகிறார்கள். இதனை நினைக்கும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

பகவான் புத்தர், அறநெறிக் கொள்கைகளைப் பரப்பினார். அவற்றைச் சிலர் ஏற்று, அவரைப் போற்றினர்; வேறு சிலர் ஏற்காமல் தூற்றினர்; கடுமையான சொற்களால் தாக்கியும் பேசினர்; இந்நிலையில் ஒரு நாள், புத்தர் ஓர் ஊருக்குச் சென்றார். அங்கு ஒருவன் புத்தரைக் கடுமையான சொற்களால் ஏசினான். ஆனால் புத்தர் முகத்திலோ, புன்னகை தவழ்ந்தது. புத்தர் அவனிடம் ‘நண்பரே அருகில் வந்து அமருங்கள்’ என்று அழைத்தார். அவனும் அவர் அருகில் சென்று அமர்ந்தான். புத்தர் ‘நண்பரே, நீங்கள் மற்றவர்களை பார்க்கச் செல்லும்போது, கையில் ஏதாவது எடுத்துச் செல்வதுண்டா ?’ என்று கேட்டார்.

‘ஆம் பழங்களை எடுத்துச்செல்வேன்,’ என்று அவர் கூறினார். ‘நீங்கள் அளிக்கும் பழங்களை நீங்கள் காணச் சென்றவர் ஏற்க மறுத்தால், நீங்கள் அவற்றை என்ன செய்வீர்கள் ?’ என்று புத்தர் கேட்டார். அதற்கு அவர் ‘பழங்களை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு திரும்புவேன்’ என்றார். உடனே புத்தர் ‘அதைத்தான் நீங்கள் இப்போது செய்யப் போகிறீர்கள். திட்டுவது உங்கள் சுதந்திரம். அதை ஏற்பதும், ஏற்காததும் எனது சுதந்திரம். நீங்கள் என்னை அவமதித்துப் பேசிய பேச்சுக்களை நான் ஏற்கவில்லை. பழங்களை திரும்ப எடுத்துச் செல்வதுபோல், ஏச்சுக்களையும் எடுத்துச் செல்லுங்கள்,’

என்றார். அதுவரையில் புத்தரை அவமதித்துப் பேசிய அந்த மனிதன், தனது தவறை உணர்ந்து, புத்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி, அவரிடம் மன்னிக்க வேண்டினான்! நாளடைவில், அவன் புத்தரின் சீடனாகவும் மாறினான்!

இதேபோன்றே, மாண்புமிகு அம்மாவின் ஆட்சியின் மீது எழுப்பப்படும் விமர்சனங்கள் எதற்கும், அடிப்படை ஆதாரம் கிடையாது. எனவே, பகவான் புத்தர் அவர்கள் கூறியது போல், அனைத்து விமர்சனங்களும் அவர்களிடமே திரும்பச் செல்லும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது எதிர்க்கட்சித் தலைவருக்கு முற்றிலும் பொருந்தும்.

கன்னியாகுமரி மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மரியாதைக்குரிய அண்ணன் இராதாகிருஷ்ணன் அவர்களும், நம்முடைய முன்னாள் அமைச்சர் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.தளவாய் சுந்தரம் அவர்களும், நம்முடைய இரண்டு மாவட்டச் செயலாளர் அவர்களும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கழகத்தினுடைய நிருவாகிகளுமான பலர் கன்னியாகுமரிக்கு வருகின்றீர்கள். வருகின்ற போது, பல்வேறு திட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். நான் சொன்னேன், தமிழகம் முழுவதும் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். கன்னியாகுமரியில்தான் கிடைக்கவில்லை. அதற்கு அவர்கள் சொன்னார்கள். என்னைச் சந்தித்து, எனக்கு அழைப்பிதழ் கொடுகின்ற போது, கன்னியாகுமரிக்கு வந்து பாருங்கள்! அப்பொழுது கன்னியாகுமரி மாவட்டம், அம்மாவுடைய கோட்டை என்று உங்கள் வாயால் சொல்ல வைப்பேன் என்று சொன்னார்கள். அவர் சொன்னதை, இந்த நிகழ்ச்சியின் வாயிலாகக் காண்பித்திருக்கின்றார்கள்! அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டம் மற்ற மாவட்டத்திற்கு இளைத்தது அல்ல என்பதனை, இந்த நிகழ்ச்சியின் வாயிலாகக் கன்னியாகுமரி மாவட்ட கழக நிருவாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் ஆகிய நீங்கள் அனைவருமே நிரூபித்து காட்டியிருக்கின்றீர்கள். (கன்னியாகுமரி மாவட்டத்திற்கான சிறப்பு அறிவிப்புகள்)

இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான், பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். இன்றைக்கு, வேண்டுமென்றே திட்டமிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக புதிதாக பொறுப்பேற்றிருப்பதுடன், எதிர்க்கட்சியின் தலைவராகவும் இருக்கின்றார். ஸ்டாலின் அவர்கள் பேசுவதெல்லாம் அத்தனையும் பொய்! பொய் பேசுவதில், ஒரு டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அது ஸ்டாலினுக்குப் பொருந்தும்! ‘மைக்’ கிடைத்தால் போதும், உடனே அ.இ.அ.தி.மு.க. அரசின் மீது பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுவதே இவருக்கு வாடிக்கையாகிவிட்டது. அவர் சொல்வது ஒன்று கூட, உண்மையில்லை! இன்றைக்கு, அண்மையிலே பல்வேறு பிரச்சினைகள் குறித்துச் சொன்னார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி மறைவிற்குப் பிறகும் சரி, அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, தமிழகம், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்குவதற்கு, இரவு, பகல் பாராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்!

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், 50 ஆண்டுக்காலமாக நாம் போராடிக் கொண்டிருந்தோம். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் ஆட்சியிலே தொடங்கப்பட்டு, இதயதெயவம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, இன்றைக்கு அம்மா வழியில் வந்த, அம்மாவின் அரசு உச்சநீதிமன்றத்தின் வாயிலாக, 50 ஆண்டுகாலப் போராட்டத்திற்கு, விடிவுகாலம் பிறப்பித்த அரசு, அம்மாவினுடைய அரசு என்பதனைத் தெரிவிக்க விரும்புகின்றேன். நல்ல தீர்ப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இன்றைக்கு, டெல்டா பாசன விவசாயிகள் வயிற்றிலே பால்வார்த்திருக்கின்றோம்! ஆகவே, இன்றைக்கு, அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, உச்சநீதிமன்றத்தின் மூலமாக நல்ல தீர்ப்பை சட்டரீதியாகப் பெற்றிருக்கின்றோம் என்பதனை, இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை, நாம் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம்!

சிறு நகரங்களுக்கு, விமானப் போக்குவரத்து வழங்கப்படும் மத்திய அரசின், ‘உதான் திட்டத்தை’, இன்றைக்குச் சேர்த்து, பல்வேறு இடங்களிலே விமான நிலையத்தை அமைப்பதற்கு, மத்திய அரசோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

அதேபோன்று, தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட, ‘நீரா பான’ உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு வேளாண் பெருமக்கள், பல்வேறு பகுதிகளில், தென்னை மரங்கள் வளர்க்கின்றார்கள். அவர்களுக்குப் போதுமான வருமானம் இல்லையென்று கோரிக்கை வைத்தார்கள். எங்களுக்கு ‘நீராபானம்’ உற்பத்தி செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு ‘நீராபானம்’ உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளுக்கு உரிமம் வழங்கி, கொடுத்து அவர்களுடைய வருமானத்தை இரட்டிப்பாக்கியிருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோன்று, வேளாண் பெருமக்களுக்கு, பல்வேறு மானியத் திட்டங்கள் அளித்துள்ளோம். மண் வளத்தினைப் பாதுகாப்பதற்கும், நீர்நிலைகளைப் பராமரிப்பதற்குமான குடிமராமத்துத் திட்டத்தை அறிமுகப்படுத்தினோம். எங்கெங்கெல்லாம் ஏரிகள், குளங்கள் இருக்கின்றதோ, அங்கெல்லாம், விவசாயப் பெருங்குடி மக்கள் இலவசமாக வண்டல்மண்ணை அள்ளிக் கொள்ளலாம். அந்த அறிவிப்பை, அம்மாவினுடைய இந்த அரசுதான் தந்தது. ஒரு டிராக்டர் மண்கூட அள்ளமுடியாத நிலையை மாற்றி, இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அடி உரமாக, இயற்கை உரமாகப் பயன்படுத்துவதற்கு, ஆங்காங்கே காணப்படும் ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல்மண்ணை, இலவசமாக அவர்களுடைய நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்துகின்றார்கள். இரண்டு வழியிலே நன்மை பெறுகின்றார்கள், ஒன்று, ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளுகின்றபொழுது, ஏரி ஆழமாகின்றது, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்படுகின்றது. அதேபோன்று, இந்த வண்டல்மண்

விவசாயிகளின் நிலத்திற்கு உரமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை, இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திலே எங்கு பார்த்தாலும் அதிகளவில், சாலைகளை போட்டுக் கொண்டிருக்கின்றோம். என்றைக்கும் இல்லாத அளவிற்கு, எங்கெங்கெல்லாம் மக்கள் பாலங்கள் வேண்டுமென்று கேட்டார்களோ, அத்தகைய இடங்களில் பெரும்பான்மையானவற்றில், பாலங்களை அம்மாவின் அரசு கட்டித் தந்து, போக்குவரத்து நெரிசல் இல்லாத மாநிலமாக, தமிழ்நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதனையும் சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விதமாக சூழியல் சுற்றுலாக் கொள்கை மற்றும் மாநில சுற்றுலாக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளன.

'பிளாஸ்டிக்' ஒழிப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, நடைமுறைக்கு வரவுள்ளது. ஏனென்றால், இதினால்தான் சுகாதாரச் சீர்கேடு விளைகின்றது. சுகாதாரச் சீர்கேட்டை விளைவிக்கின்ற இந்த பிளாஸ்டிக்கை முற்றிலும் ஒழிக்க வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து கோரிக்கை வந்து கொண்டிருந்தது. கோரிக்கையை ஏற்று, 2019 ஜனவரி முதல், தமிழகத்திலே, ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறியப்படுகின்ற பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தக்கூடாது என்ற ஆணையை, அம்மாவின் அரசு பிறப்பித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விபத்து மற்றும் எதிர்பாராத உயிரிழப்புகளுக்கு, இந்த அரசு உடனடியாக நிவாரணம் வழங்கி வருவது, மக்களுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதனை இங்கே மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு 1,511 ஏரிகள் எடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு, முன்னேற்றம் கண்டு வருகின்றன என்பதனை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோன்று பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூடக் கடலில் கலக்காமல் தடுப்பதற்கு, ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவின் அரசு, மூன்றாண்டு காலத் திட்டம் என்ற அந்தத் திட்டத்தை வகுத்து, 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு, செய்து இந்த தடுப்பணைகளுக்காக, 350 கோடி ரூபாய், இந்த வருடம் செலவிட இருக்கிறது. அதற்காக, 75 தடுப்பணைகள், 7 அணைக்கட்டுகள் அமைக்கும் பணி, இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களை மேம்படுத்த, புதிய திட்டங்களை அரசுக்கு வகுத்துக் கொடுக்க, பொதுப்பணித் துறையில் ஒரு மிகப் பெரிய திட்டத்தை வகுத்திருக்கின்றோம். தமிழகத்திலே ஒவ்வொரு முறையும், விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைப்பதில்லை; குடிப்பதற்கான நீரும் கிடைப்பதில்லை! ஆகவே, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர், முழுமையாக சேமித்து வைக்கப்பட வேண்டும், அதற்கு ஒரு திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்பதற்காக ஓய்வு பெற்ற பொறியாளர்கள் கொண்ட குழுவை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு அமைத்திருக்கின்றது. அந்தக் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்கே எந்தெந்த வகையிலே தடுப்பணை கட்டவேண்டும்; எந்த வகையிலே ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும்; பலப்படுத்த வேண்டும் அந்த அமைப்புகள் என்று எல்லாவற்றையும் தயார் செய்து,

அறிக்கையாக அரசுக்குத் தர இருக்கின்றார்கள். அவர்கள் தருகின்ற அறிக்கையின் அடிப்படையிலே, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீரை, வீணாகாமல் தடுப்பதற்கு, தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், எங்கெங்கு ஏரிகள், குளங்கள் இருக்கின்றதோ, எதையெதையெல்லாம் ஆழப்படுத்த வேண்டுமோ, அவற்றையெல்லாம் ஆழப்படுத்துவற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, ஆங்காங்கே இருக்கின்ற ஆறுகளை இணைக்கின்ற திட்டத்தையும், இந்தக் குழு அரசுக்கு பரிந்துரை செய்யும்! ஆகவே, இந்தக் குழு தெரிவிப்பதுடன் மூலமாக, பெய்கின்ற மழைநீரை வீணாகாமல் நாம் பயன்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு நீர் ஆதார மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டு, பணிகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருக்கின்றன என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, டெல்டா பாசன விவசாயப் பெருங்குடிமக்கள் ஒவ்வொரு முறையும், கடைக்கோட்டுப் பகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற விதமாக, இன்றைக்கு, தனியாக டெல்டா பாசனம் பெறுகின்ற, அந்த மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் பயன்பெறுவதற்காக, அங்கே ஒரு I.A.S. அந்தஸ்தில், ஒரு இணைச் செயலாளர் அந்தஸ்தில், ஒருவரை நியமித்து, அவர் மூலமாக நிரந்தரமாக இந்தப் பணி வழங்கப்பட்டிருக்கின்றது. அவர், ஒவ்வொரு டெல்டா மாவட்டப் பகுதிக்கும் சென்று, என்ன நிலவரம் என்று அறிந்து, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுத்து, கடைக்கோட்டில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்வார் என்று கோடிட்டு காட்ட விரும்புகின்றேன்.

அதுபோன்று, கல்வி நிறைந்த மாவட்டம் இந்த மாவட்டம். தமிழகத்திலே அதிகமாகப் படித்தவர்கள் கொண்ட மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இந்த இடத்தில் சொல்வது சாலச் சிறந்தது என்று கருதுகிறேன். வசதி படைத்தவர்கள் தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படித்து விடுகிறார்கள். வசதியில்லாத மாணவ, மாணவிகள் பொருளாதாரம் இல்லாததால், தனியார் கல்லூரியில் படிக்க முடியாத சூழ்நிலை. அப்படிப்பட்ட மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும், பட்டப் படிப்பு படிக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு **65** கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்தது. அம்மாவினுடைய இந்த அரசும், அம்மாவினுடைய வழியில் நின்று, **11** அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியைக் கொடுத்து **76** அரசு மற்றும் கலைக்கல்லூரியைக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், **41** பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், அரசு கல்லூரிகளாக தரம் உயர்த்தப்பட்டன. தேசிய சேர்க்கை விகிதம், உயர்கல்வியில் பார்த்தால் இந்திய அளவில், **25.8** சதவீதம். ஆனால், தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வியில் ஏற்படுத்திய புரட்சி, மறுமலர்ச்சியின் காரணமாக, புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியதன் விளைவாக, இன்னும் பல கல்லூரிகள், என்ஜினியரிங் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி என்று பல்வேறு கல்லூரிகள், அரசின் சார்பாக தொடங்கப்பட்டதன் விளைவாக, இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை, தமிழகத்திலே **48.60** சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்ற பெருமையை, அம்மாவினுடைய அரசு பெற்றிருக்கின்றது என்பதனைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு பள்ளியே இல்லாத பகுதிகள் இருக்கக்கூடாது என்பதற்காக, அம்மாவின் அரசு, இந்த ஆண்டு, கிராமங்கள் மற்றும் மலைப்பாங்கான இடங்களில் 20 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கியுள்ளது. மேலும், 100 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அம்மாவின் அரசு, மாணவர்கள் அவர்களிலிருந்துவரும், பகுதியிலே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது என்று தெரிவிக்க விரும்புகிறேன். கல்வித் துறையிலே, அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்த துறை, பள்ளிக் கல்வித் துறை. பள்ளிக் கல்வித் துறைக்காக, முன் எப்போதும் இல்லாத வகையில், இந்த ஆண்டில், 27 ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, தரமான, உயர்தரக் கல்வியை, தமிழக மாணவ, மாணவியர்களுக்கு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியான, 2 நிமிடங்களுக்குள் குறுஞ்செய்தி மூலம் மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அனுப்பப்படுகின்றன! இது ஒரு வரலாற்றுச் சாதனை!

- ❖ அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 14 வகையான, விலையில்லா நலத் திட்டங்களைக் கொடுத்தார்கள். மேலும், மாணவர்கள் கல்வி கற்றலில், களைப்பு ஏற்படாமல் இருக்க, சத்துணவுத் திட்டத்தில் கலவைச் சாதம் அளித்தார்கள்.
- ❖ ஆசிரியர் பணி நியமன வகையில், 4,362 ஆய்வக உதவியாளர்களும், 2,373 முதுகலை மற்றும் சிறப்பாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ கடந்த 6 ஆண்டுகளில், 40 ஆயிரத்து 430 ஆசிரியர்களும், 15 ஆயிரத்து 169 பகுதி நேர ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆகவே, எதிர்க்கட்சித்தலைவர், மு.க.ஸ்டாலின் இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் படிப்பதும் இல்லை; நாம் சொல்வதை கேட்பதும் இல்லை. அவர் கட்சிக்காரர் எழுதிக்கொடுத்தால், அதனைப்பற்றித்தான் பேசுகிறார். இங்கே இருக்கும் அமைச்சர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் உட்பட, அனைவரும் அவர்கள் துறையிலே பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கின்றோம். இன்றைக்கு வேளாண்மைத் துறை, உள்ளாட்சித் துறை, மின்சாரத் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றில் விருதுகளை பெற்றிருக்கின்றோம். ஒவ்வொரு துறை வாரியாக, தேசிய அளவில், இன்றைக்கு விருதுகளைப் பெறுகிறோம் என்று சொன்னால், நிருவாகத் திறமை, எந்த அளவிற்குத் தமிழகத்தில் இருக்கின்றது என்பதனை, எதிர்க்கட்சித் தலைவர் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய விருது பெறுவது சாதரண விஷயமல்ல. இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களைக் காட்டிலும், சிறந்த முறையில் பணியாற்றி, திறம்படப் பணியாற்றியதன் காரணமாக, ஒவ்வொரு துறைக்கும் இன்றைக்கு விருது கிடைத்திருக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு துறையிலும் இன்றைக்கு விருதுகளை நாம் குவித்துக் கொண்டிருக்கின்றோம். எதிர்க்கட்சிக்கு மட்டும் கண்ணுக்குத் தெரியவில்லை. நாம் இவ்வளவு விருதுகளைப் பெறுவதற்குக் காரணம், இந்தத் துறைகளில் சிறந்த முறையில்

பணியாற்றியதுதான்! விருதுகள் பெற்றது மட்டுமல்ல, திறம்பட செயல்பட்டதன் காரணமாக, இந்தத் துறைகளின் மூலமாக, மக்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்பவற்றை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

- கடந்த 7 ஆண்டுகளில், 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள், ரூபாய் 221.30 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. ஏனென்றால், ஆங்காங்கே இருக்கும் கிராம மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காகவும் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்குத் தகுந்த சிகிச்சை, அரசின் மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவிட, 221.30 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதனை எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

- கடந்த 7 ஆண்டுகளில், 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள், ரூபாய் 190.37 கோடி செலவில், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேம்படுத்தும் பொழுது, அங்கேயே சிறு சிறு அறுவைச் சிகிச்சைகள் செய்யும் சூழ்நிலையை, அம்மாவின் அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்பதனைச் சுட்டிக் காட்ட விழைகின்றேன்.

மருத்துவர் தேர்வு வாரியம் மூலம், இதுவரை, மருத்துவர்கள், செவிலியர்கள், இதரப் பணியாளர்கள் என்று, 23 ஆயிரத்து 882 பேர் தேர்வு செய்யப்பட்டு, மருத்துவப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியினையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- தமிழக அரசின், மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம், தாய்மார்கள் மற்றும் சிசு இறப்பு விகிதம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2030ஆம் ஆண்டில் அடையவேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகளை, (Sustainable Development Goal) தமிழகம் 14 ஆண்டுகளுக்கு முன்பே இன்றைக்கு அடைந்து, இமாலயச் சாதனை புரிந்துள்ளது! இவையனைத்தும் சாதனைகள் இல்லையா?

- இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை, மிகச் சிறப்பாக மேற்கொள்வதில், இந்திய நாட்டிலேயே, முதன்மை மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதினை, தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாடு பெற்று, மகத்தான சாதனை படைத்துள்ளது! அதற்காக மருத்துவர்களை வெகுவாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

- தமிழகத்தில் இதுவரை, 6,708 உறுப்புகள், 1,171 கொடையாளர்களிடமிருந்து, தானமாக பெறப்பட்டுள்ளன!

 2015ஆம் ஆண்டு, மின்சார விபத்தினால் இரு கைகளையும் இழந்த திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த, 29 வயதுள்ள திரு.நாராயணசாமி என்பவருக்கு, மூளைச்சாவு அடைந்தவரின் கைகளைத் தானமாக பெறப்பட்டு இரு கைகளையும் பொருத்திடும் விதத்தில், சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு

இவர் தற்போது மாற்றுக் கைகளுடன் நலமாக உள்ளார். இன்றைக்கு, இந்தியாவிலேயே, அரசு மருத்துவமனையில், இரண்டு கையும் இல்லாத ஒருவருக்கு, இறந்தவர் உடலில் இருந்து இரண்டு கைகளையும் எடுத்துப் பொருத்தி சாதனை படைத்த அரசு இந்த அம்மாவினுடைய அரசு! இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான், மருத்துவச் சேவை தழைத்துச் செழித்து ஓங்கியிருக்கின்றது. அப்படிப்பட்ட சாதனை படைத்த அரசைப் பற்றி, எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கின்றார், இந்த ஆட்சியில் எதுவும் நடைபெறவில்லை என்று. இதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பெங்களூருவைச் "பொது விவகாரங்கள் மையம்" என்ற ஓர் அமைப்பு, சமூக–பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுமையில், இதில் 2018ஆம் ஆண்டிற்கான இரண்டாவது சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, பல்வேறு சாதனைகளை, அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து நிகழ்த்தி வருகிறது.

இவையனைத்தையும் எல்லாம் இங்குள்ள எதிர்க்கட்சிகள் யாரும் ஏற்றுக் கொள்ளவோ, பாராட்டவோ மாட்டார்கள். இருந்தபோதும், மாண்புமிகு அம்மாவின் இந்த அரசு, தமிழ்நாட்டு மக்களுக்காக எப்பொழுதும் தன்னுடைய கடமையை முன்னின்று நிறைவேற்றும்.

தற்போதுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசுமீது, அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகள்தாம் எழுகிறதே தவிர, திட்டப் பணிகள் யாவும் விறுவிறுவென்று நடந்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சில சட்டப் பேரவை உறுப்பினர்கள், பல கோரிக்கை மனுக்களை, என்னிடத்திலே நேற்று நேரிலே அளித்தார்கள். அந்தக் கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத்துடன், மிகச் சிறப்பாக, எழுச்சியாக பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில், சிறப்பாக நடைபெறுவதற்கு அடித்தளமாக விளங்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் மீண்டும், மீண்டும் நன்றியைத் தெரிவித்து,

எங்கள் ஆட்சி
என்றும் வாழும்
இந்த மண்ணிலே

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரி ஒன்றினை, இங்கே பெருமிதத்துடன் கூறி அண்ணா நாமம் வாழ்க! வளர்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

* * * * *

அறிவிப்புகள்

- கன்னியாகுமரிக்கு மட்டும், வருடந்தோரும் 75 இலட்சம் உள்ளூர், வெளியூர் மற்றும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்களில், சுமார் 22 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் மட்டுமே, தற்போது விவேகானந்தர் பாறையிலுள்ள நினைவு மண்டபத்திற்கு படகின் மூலம் செல்ல வாய்ப்புள்ளது. மீதமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, சுமார் 6 கோடி ரூபாய் செலவில், புதியதாக 2 படகுகள் வாங்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- மேலும், ஒரே சமயத்தில், 3 படகுகள் விவேகானந்தர் பாறைக்குச் செல்வதற்கு ஏதுவாக, கூடுதலாக 2 படகு அணையும் தளங்கள், 20 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- கூடுதலாக, கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் பாறை செல்ல, 'ரோப் கார் (Rope Car) வசதியும், விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைந்துள்ள பாறையிலிருந்து, திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறைக்குச் செல்ல, ஒரு கடல் வழிப் பாலம் (Marine Bridge) ஆகியவை, அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன், சுமார், 120 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம், சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணம் நிறைவேறும். இந்த கன்னியாகுமரி மாவட்ட மக்களின், குறிப்பாக கன்னியாகுமரியில் இருக்கின்ற மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

- விளவங்கோடு வட்டத்தினைப் பிரித்து, கிள்ளியூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய கிள்ளியூர் வருவாய் வட்டம் அமைக்கப்படும்.

- கல்குளம் வட்டத்தினைப் பிரித்து, செருப்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய திருவட்டார் வருவாய் வட்டம் அமைக்கப்படும்.

எரிசக்தித் துறை

- கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு, தடையில்லா மின்சாரம் வழங்க ஏதுவாகவும் மற்றும் செண்பகராமன்புதூர் துணை மின் நிலையத்தின் மின்பளுவைக் குறைக்கும் வகையிலும் ஒரு புதிய 230/ 110 கி.வோ. வளிம காப்புத் துணை மின் நிலையம் ஒன்று 368 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில், தக்கலையில் அமைக்கப்படும்.

நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை

✶ எல்லைகள் மறுசீரமைப்பு குழுவின் பணி நிறைவடைந்தவுடன் நாகர்கோயில் நகராட்சியை, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தி அறிவிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ உங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் திரு.பொன். இராதாகிருஷ்ணன் அவர்களும், டெல்லி சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் அமைச்சர் திரு.தளவாய் சுந்தரம் அவர்களும், கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினுடைய அனைத்து நிருவாகிகள், பொதுமக்களும் வைத்த கோரிக்கையுடன், நாகர்கோயில் மக்களுடைய கோரிக்கையையும் ஏற்று, இந்த நாகர்கோயில் நகராட்சியை, மாநகராட்சியாக உயர்த்த, அரசு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

✶ அழகியபாண்டிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம், 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் கன்னியாகுமரி வரை நீட்டிக்கப்படும்.

பொதுப்பணித்துறை

✶ அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில், பழையாற்றின் குறுக்கே, 5 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் தடுப்பணை ஒன்று கட்டப்படும்.

✶ அகஸ்தீஸ்வரம் வட்டம், கோவளம் கிராமத்தில், 12 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலும், அழிக்கல் கிராமத்தில் 10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலும், பெரியநாயகித் தெருவில், 7 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் தூண்டில் வளைவுகள், 2019–2020ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

✶ விளவங்கோடு வட்டம், மேல்மிடாலம் கிராமத்தில், 10 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பில், ஒரு தூண்டில் வளைவு 2019–2020ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

✶ கிள்ளியூர் ஒன்றியம், இணையம்புத்தன்துறை ஊராட்சிக்குட்பட்ட இணையம் கிராமத்தின் கிழக்கே தேவாலயம் இருக்கும் பகுதியில், 9 கோடி ரூபாய் மதிப்பில், ஒரு தூண்டில் வளைவு 2019–2020ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

✶ விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் துறை கிராமத்தில், சர்ச்சுக்கு முன்னால் இடதுபக்கம் மற்றும் வலதுபக்கம் உள்ள வீடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு, 80 இலட்சம் ரூபாய் மதிப்பில், கடலரிப்பு தடுப்புச் சுவர் 2019–2020ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

- ✶ தோவாளை, தாடிக்காரன்கோணம், கீரிப்பாறை லேபர் காலனி சாலையில் 0/2 கி.மீட்டரில், கீரிப்பாறை ஆற்றின் குறுக்கே, 4 கோடி ரூபாய் மதிப்பில், ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

- ✶ திருவட்டார், பேச்சிப்பாறை, குட்டியூர் தச்சமலை சாலையில், 0/2 கி.மீட்டரில், கிழவியூர் ஆற்றின் அருகில், 4 கோடி ரூபாய் மதிப்பில், ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

- ✶ தோவாளை, திடல் ஊராட்சிப் பகுதியில், காடுகரை–இறைவிபுதூர் சாலையில், 0/2 கி.மீட்டரில் கஞ்சியாற்றின் குறுக்கே, தற்போதுள்ள பழுதடைந்த குறுகிய பாலத்திற்குப் பதிலாக, 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில், ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

- ✶ குருந்தன்கோடு, தல்லாக்குளம், இரணியல்–முட்டம் சாலை முதல் தல்லாக்குளம் சாலையில், 0/2 கி.மீட்டரில், வள்ளியூர் ஆற்றின் குறுக்கே, 2 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய உயர்மட்டப் பாலம் 2019–2020ஆம் ஆண்டில் கட்டப்படும்.

நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை

- ✶ விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர், ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவருடைய பகுதியிலே, பல்வேறு சாலைகளை அமைக்க வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். அந்தச் சாலையெல்லாம், இன்றைக்குப் படிப்படியாக CRF மூலமாக எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

- ✶ பெருஞ்சால்விளை சாலையில், கிமீ.1/6ல், ஒரு கோடி ரூபாய் மதிப்பில் சிறுபாலம் கட்டப்படும்.

- ✶ வட்டக்கோட்டை –அம்சி சாலையில், கிமீ.6/6ல், 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறு பாலம் கட்டப்படும்.

- ✶ குஞ்சிருப்புவிளை – மாதாபுரம் சாலையில், கிமீ.0/6ல், 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் சிறுபாலம் கட்டப்படும்.

- ✶ தேசிய நெடுஞ்சாலை எண். 47இல் கோட்டார் – செட்டிகுளம் பகுதியில், சுமார் 340 கோடி ரூபாய் மதிப்பில், மேம்பாலம் கட்டப்படும். இதற்கு நில எடுப்புப் பணிக்காக, அம்மாவுடைய அரசு 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

- ✶ தேசிய நெடுஞ்சாலை எண்.47–B வடசேரி – ஒழுகினசேரி பகுதிகளில் ஓர் உயர் மட்டப் பாலம் அமைக்க, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி

89 இலட்சம் ரூபாய் மதிப்பில் நடைபெற்று வருகிறது. விரிவான திட்ட அறிக்கை கிடைத்தப் பின், உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின்கீழ், CRIDP 2018–2019 திட்டத்தில், 8 சிறுபாலங்கள் 159 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

- ✶ மார்த்தாண்டம் – கருங்கல் சாலை கி.மீ. 1/8இல், இரயில்வே கி.மீ. 259/500–600இல், குழித்துறை மற்றும் இரணியல் இரயில் நிலையங்களுக்கிடையே கடவு எண்.15B-க்கு மாற்றாக, சாலை மேம்பாலம் கட்டப்படும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

- ✶ கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரியில், தற்போதுள்ள 100 MBBS மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இதை அதிகரிக்க வேண்டுமென்று இந்த மாவட்டத்தில் இருக்கின்ற பலபேர் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே, 100 MBBS சேர்க்கை இருந்த மாவட்டத்தில், சேர்க்கை அதிகரித்து, 150 இடங்களாக உயர்த்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- ✶ கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, 8 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில், அதிநவீன உபகரணங்கள், 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிதாக கேத் லேப் (Cath Lab) கருவி மற்றும் 42 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 5 புதிய அதிநவீன டயாலிசிஸ் கருவிகளும் நிறுவப்படும்.

- ✶ கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில், 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில், 20 சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் அமைக்கப்படும்.

- ✶ விளவங்கோடு அரசு மருத்துவமனைக்கு, எண்ணியல் ஊடுகதிர் கருவி, மீயொலி பரிசோதனைக் கருவி போன்ற மருத்துவக் கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும். உருவாக்கப்படும்.

"எம்.ஜி.ஆர்" எனும் தாரகமந்திர தமிழ்த்தாயின் திருமகனும், தமிழ்த்தாயின் திருமகளும் வழங்கிய ஆட்சி நூறாண்டுகள் தொடர தன்னிகரில்லாத் தலைவர் எம்.ஜி.ஆருக்கு சென்னையில் மக்களின் அன்போடு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருமையுடன் வழங்கிய நூற்றாண்டு நிறைவு விழா

ஒரு நடிகருக்கும், ரசிகர்களுக்குமான இடைவெளியை எப்படி குறைத்துக் காட்டினாரோ, அப்படித்தான் ஒரு ஆட்சியாளருக்கும், பொதுமக்களுக்குமான இடைவெளியையும் குறைத்துக் காட்டினார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்

அறிவும் அழகும் கலந்த அதிசயமாகவும், கனிவும் கண்டிப்பும் கலந்த ஆளுமையாகவும், கலையும் கவிதையும் நிறைந்த இலக்கியமாகவும், காலமும் நேரமும் சொல்லும் வரலாறாகவும், தொடக்கமும் முடிவும் இல்லாத அண்டமாகவும், உறக்கமும் ஓய்வும் இல்லாத உழைப்பாகவும், தமிழ்நாட்டை இயக்கும் சக்தியாகவும், உலகத் தமிழர்களின் உன்னதத் தலைவியாகவும், எங்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தெய்வமாகவும் திகழும் மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

'பாரத ரத்னா', புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தமிழ்நாடு 50ஆம் ஆண்டு பொன் விழா என கொண்டாடப்படும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவில், உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த அருமையான நிகழ்ச்சியில், சிறப்பான கருத்துக்களை வழங்கிட அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.தனபால் அவர்களே! இந்த மகத்தான விழாவிற்கு சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே! மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே! வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர், முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே!

அரசு தலைமைக் கொறடா திரு.எஸ்.ராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு.இரா.வெங்கடேசன் அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தலைமைக் கழக நிர்வாகிகளே! கூட்டுறவு சங்க நிர்வாகிகளே, முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

வருகை தந்திருக்கின்ற, இந்த நிகழ்ச்சியை சீரோடும் சிறப்போடும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பு செய்கின்ற விதத்திலே, மேடையிலே வீற்றிருக்கின்ற கலைத்துறையினரே, கழகத்தின் பல்வேறு நிலைகளில் சிறப்பாகப் பணியாற்றிடும் கழகச் செயல் வீரர்களே, கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகத் தொண்டர்களே! அரசு உயர் அதிகாரிகளே, அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத் திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படும் என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அவர்களின் அறிவிப்பைச் செயலாக்கும் விதத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு, 30.06.2017 அன்று மதுரை மாநகரில் தொடங்கி, 31 மாவட்டங்களிலும் பாரத ரத்னாபுரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சீரும் சிறப்புமாக கொண்டாடிய அரசு நமது அம்மாவுடைய அரசு என்பதனை, இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விழாக்களில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது கொண்டுள்ள அன்பினைவெளிப்படுத்தும் விதமாக, லட்சோபலட்சம் மக்கள் உணர்ச்சிபூர்வமாகக் கலந்து கொண்டு பெருமை சேர்த்துள்ளனர். இவ்விழாக்களின் மூலம், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான, மக்கள் பயன் பெறும் முத்தான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அரசாணைகள் வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

> ‘‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்’’ என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப,

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், இம்மண்ணை விட்டு மறைந்து, 30 ஆண்டுகள் ஆனாலும்,மக்களின் மனதை விட்டு மறையாமல் இருக்கிறார் என்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில், இன்று மிகச் சிறப்பாக, சென்னையில் புரட்சித்தலைவரின் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடிக் கொண்டிருப்பதை, நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த விழாவின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், புரட்சித்தலைவரின் ஆசான் பேறறிஞர் அண்ணா அவர்கள்

ஆட்சியில் இருந்தபோது, 1968ஆம் ஆண்டு, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் செய்து இந்த ஆண்டோடு, 50 ஆண்டுக்காலம் ஆகிறது!

இந்த 50 ஆண்டுக்காலப் பொன் விழாவின் மூலம், தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடத்தப்படும் என சட்டப் பேரவையில் நான் அறிவித்தேன்.

அதன்படி, பல்வேறு போட்டிகள் மாவட்ட வாரியாக நடத்தப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகப் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று, மாநில அளவில், பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்கள் 36 பேர்களுக்கு இன்று இக்கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. அது தவிர, இளந்தமிழ் ஆய்வாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு, ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் இன்று வழங்கப்பட உள்ளன என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாவட்டம் தோறும், புரட்சித்தலைவரின் வரலாற்றுச் சாதனைகளை மாணவ, மாணவிகள் அறிந்திடும் வகையில், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பட்டிமன்றங்கள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அத்துடன், புரட்சித்தலைவரின் சிறப்பினைப் போற்றிடும் வகையில், கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய நடனங்களும் நடைபெற்றன. இவை தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசின் திட்டங்களை, மக்கள் அறிந்து பயன் பெறும் வகையில், அனைத்துத் துறைகளின் சார்பில், கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. 380 வயதுடைய சென்னை, தன் செல்ல மகன் புரட்சித்தலைவரின் நூற்றாண்டு விழாவை, 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் பொன்விழா ஆண்டுடன் இணைத்து இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவரின் வாழ்க்கை வரலாறு எத்தனை சுவை மிகுந்ததோ, அதே அளவிற்கு, சென்னையின் வளர்ச்சியும், வரலாறும் சுவை மிக்கவை!

380 ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு வங்கக் கடலோரம் இருந்த மைலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவான்மியூர், திருவொற்றியூர் போன்ற சிறு குறு கிராமங்களை உள்ளடக்கி இருந்த மதராஸப் பட்டினம்தான், சென்னைப் பட்டினமாக மாறி, இப்போது சென்னையாகி, தமிழ்நாட்டின் தலைநகராக விளங்கி வருகிறது. 1653ஆம் ஆண்டு, சென்னைப் பட்டினம் – சென்னை மாகாணமாக மாறியது. சென்னை நகரம், சென்னைப் பெருநகரமாகி, பிறகு சென்னை மாநகராட்சியாகி, இப்போது பெருநகர சென்னை மாநகராட்சியாக வளர்ந்து, 426 சதுர கிலோ மீட்டர் சுற்றளவுக்கு விரிவடைந்துள்ளது. 1688ஆம் ஆண்டு, சென்னைதான், முதல் மாநகராட்சியாக உதயமானது. இந்தியாவின் முதல் இருப்புப் பாதை, 1856ஆம் ஆண்டு சென்னை ராயபுரத்தில்தான் அமைந்தது!

1823ஆம் ஆண்டு, சென்னையின் பெயரைத் தாங்கி வந்த “மதராஸ் மெயில்”தான் முதல் நாளிதழாக விளங்கியது. இந்தியாவிலேயே முதன்முதலில் ஒளிபரப்பு நிலையம் அமைக்கப்பட்டது சென்னையில் தான். 150 அடி உயரம் கொண்ட மிக உயரமான கொடிமரம் நமது புனித ஜார்ஜ் கோட்டையில்தான் உள்ளது! சுமார், 13 கி.மீ. நீளமுள்ள சென்னை மெரினா கடற்கரைதான், உலகில் இரண்டாவது மிக நீளமான கடற்கரையாகத் திகழ்கிறது. தென்னக மாநிலங்களின் படப்பிடிப்பு மையமாக கோடம்பாக்கம் விளங்குவதால், இதை “கோலிவுட்” என்கிறார்கள். மிகப்பெரிய வர்த்தகத் துறைமுகமான சென்னைத் துறைமுகத்தில் ஆண்டுக்கு 5.2 கோடி டன் சரக்கு கையாளப்பட்டு வருகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி என்ற பெருமை பெற்ற மாநிலக் கல்லூரியும், அதன் பின்னர், 1857 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகமும் மிகப்பழமையான கல்வி நிறுவனங்களாகக் கருதப்படுகிறது. சென்னை ஓர் சிறந்த உயர் கல்வி மையம் மட்டுமன்று; இந்தியாவின் முக்கியத் தொழில் மையங்களில் ஒன்றாகவும் அது திகழ்கிறது! 2015ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால், சென்னையில் நடத்தப்பெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், மிக அதிக அளவிலான முதலீடுகள் கவரப் பெற்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இதற்கு முக்கியக் காரணம், கடந்த ஏழு ஆண்டுகளில் விரிவான திட்டங்கள் மூலமாக, மாண்புமிகு அம்மா அவர்களும், தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியது தான். மேலும், எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, 11,400 மெ.வா. மின் உற்பத்தித் திட்டங்களுக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு அம்மாவின் இந்த அரசு, சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019இல் நடத்த முடிவு செய்து, பல்வேறு முன்னேற்பாடுகளை துரிதமாக எடுத்து வருகிறது.

இம்முயற்சிகளால், கண்டிப்பாக, பல சர்வேதேச நிறுவனங்கள் சென்னையில் தொழில் முதலீடுகள் செய்ய முன்வருவார்கள் என உறுதியாக நம்புகிறேன். இதன்மூலம், தமிழ்நாட்டில், குறிப்பாக, சென்னையில் தொழில் வளம் மேலும் பெருகும் என்பது உறுதி.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள், பிற சேவைத் துறைகளான உணவு, மருத்துவ சேவை, அழைப்பு மையங்கள் (BPO) ஆகியவற்றின் முக்கிய இடமாக சென்னை விளங்குவதால், தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக இங்கு நாளுக்கு நாள் குவிந்து வருகிறார்கள். அனைவருக்கும் வேலையையும், வாழ்வையும் தந்து வருகிறது சென்னை. இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய ‘மெட்ரோ’ நகரங்களில் சென்னை முதலிடம் பிடித்திருக்கிறது.

பெண்கள் பாதுகாப்பு மட்டுமன்றி, தொழில் பாதுகாப்பு, தொழில் வளர்ச்சிக்கான சூழல், தொழில் முன்னேற்றத்திற்கான அரசு உதவிகள், இரண்டு துறைமுகங்கள், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விமான நிலையங்கள் மற்றும் மிதமான தட்பவெட்ப நிலை கொண்ட மாவட்டமாக சென்னை விளங்குவதால், உலக முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க, சென்னைக்குத் தான் முதலிடம் கொடுக்கிறார்கள்.

நம் இருபெரும் தலைவர்களைப் பெருமைப்படுத்தும் விதத்தில், 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு நினைவு வளைவு மற்றும் 50 கோடி ரூபாய் செலவில், மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடம் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு, “புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்” என்று பெயர் சூட்ட மத்திய அரசுக்கு

மாண்புமிகு அம்மாவின் அரசுபரிந்துரை செய்துள்ளது என்பதனை, இவ்விழாவில்மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.ஏனென்று சொன்னால், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழா, சீரோடும் சிறப்போடும் தமிழ்நாட்டில் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு, பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று மத்திய அரசிடம் வேண்டுகோள் வைத்திருக்கிறோம்.

மேலும், தமிழக மக்கள் அனைவரின் அன்பைப் பெற்ற அறிஞர் அண்ணா, மற்றும் புரட்சித்தலைவி அம்மா ஆகியோருக்குநாட்டின் உயரியவிருதான, ‘பாரதரத்னா’ விருது வழங்க மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு கோரிக்கை விடுத்துள்ளது என்ற செய்தியினையும் இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தலைநகராக இருப்பதால், பல தலைவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும், பல அரசியல் நிகழ்வுகளையும் கண்டது சென்னை. பலருடைய சாதனைகளின் களமாக இருப்பதும் சென்னையாகும்!

சென்னைக்குப் பல அடையாளங்கள் இருந்தாலும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் என்கிற ஓர் அடையாளம்தான், உலகளவில் சென்னைக்கு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டுக்கே தனிச் செல்வாக்கை ஏற்படுத்தியது என்பதனை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து நிற்கக் காரணமாக இருந்த தலைவர்களில் மிகவும் முக்கியமானவராகத் திகழ்ந்தவர் புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்கள். அரசியல் களத்திலிருந்து வந்தவர்களை மட்டும் முதலமைச்சராக ஏற்றுக் கொண்டிருந்த தமிழ்நாடு, கலை உலகத்திலிருந்து வந்த ஒரு நடிகரை, முதன்முதலில், முதலமைச்சராக ஏற்றுக்கொண்டது, நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைத்தான் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்!

அதற்குக் காரணம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது தமிழ்நாட்டு மக்கள் கொண்டிருந்த பேரன்பும், நம்பிக்கையும் – திரையிலும், பொது வாழ்விலும் மக்கள் நாயகனாக அவர் வாழ்ந்ததும் தான்! எம்.ஜி. ராமச்சந்திரன் – எம்.ஜி.ஆராகி, அதன்பிறகு, நாடக நடிகராகி, திரைப்படங்களில்தம் புரட்சி நடிப்பாலும், வள்ளல் குணத்தாலும், மக்களைக் கவர்ந்து புரட்சித்தலைவராக உயர்ந்து, நடிப்பால் ஈட்டிய செல்வத்தை, இல்லாதவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து, மக்கள் திலகமாக வளர்ந்து, தமிழ்த் தாயின் திருமுகத்தில் நெற்றித் திலகமாக மாறி, தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றியமைத்தவர்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், முதலமைச்சராக 1977 முதல் 1987ஆம் ஆண்டு வரை, கோட்டையில் வீற்றிருந்து கோலோச்சினார். தமிழ்த்தாய் தத்து எடுத்துக் கொண்ட தமிழர்களின் தவப்புதல்வன் எம்.ஜி.ஆர் அவர்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருப்பதுதான் சென்னையின் வரலாறும், முன்னேற்றமும் என்பதால், ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை சென்னையில் நடத்துவது என்றமுடிவு மிகவும் பொருத்தமாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் கொடுத்த சில திட்டங்களைக்குறிப்பிட நான் கடமைப்பட்டுள்ளேன்.

தமது இளம் வயதில், வறுமை மற்றும் பசியின் கொடுமையை உணர்ந்த காரணத்தால், பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவுத் திட்டம் வழங்கினார். தற்போது இந்த மகத்தான திட்டத்தில், 51 இலட்சம் மாணாக்கர்கள் தினமும் பயனடைந்து வருகின்றனர். இந்தத் திட்டத்தை, மத்திய அரசும், தமிழ்நாட்டைப் பின்பற்றி இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் சரித்திரம் படைத்த திட்டம் என்பதனை இன்றைக்கு நாடு போற்றிக் கொண்டிருக்கிறது. போதிய வருவாய் இல்லாத சிறு கோயில்களில், ஒரு கால பூஜைக்கு வழி வகை செய்யும் புதிய திட்டத்தைக் கொண்டு வந்தார்.

சென்னை மக்களின் தாகத்தைத் தீர்க்க கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை, நடைமுறைபடுத்தி காட்டியவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். 1981இல், உலகத் தமிழ் மாநாடு நடத்தினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தினார். “கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி, விவசாயி!” என்று பாடியவர், பாட்டோடு நிறுத்திக் கொள்ளாமல், முதன் முதலாக, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 330 கோடி ரூபாய் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தார். அது மட்டுமன்று, 3.30 இலட்சம் பம்ப்–செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கி, பயிர் பாதுகாப்புக் காப்பீடு முறையைக் கொண்டு வந்தவர் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்! அனைத்து குடிசை வீடுகளுக்கும், மின் விளக்கு வசதியை ஏற்படுத்தினார்!

இறப்பைக் கூட வென்றி கண்டு, கோடிக் கணக்கான உள்ளங்களில் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தாம் வாழ்ந்த ராமாவரம் தோட்டத்தைக் கூட, வாய் பேசாத, காது கேளாத, கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உயிருடன் இருந்த போதும், ஏழை எளியவருக்கு வாரி வழங்கும் வள்ளலாக இருந்தார்! இறந்த போதும், தமது சொத்துக்களை மாற்றுத் திறனாளிகளுக்காகவும், கல்விக்காகவும் எழுதி வைத்த தன்னலமற்ற தலைவர். ஒரு தலைவர், எப்படி உண்மையான தலைவனாக, தன்னலமற்று இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்!

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில், அவரது அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. அவரது உருவம் பொறித்த நாணயமும் வெளியிடப்பட உள்ளது. 'புரட்சித்தலைவர்' என்ற ஒரு மாபெரும் சக்தி தமிழ்நாட்டில் தோன்றியிருக்காவிட்டால், தமிழ்நாட்டின் நிலைமை நிர்கதி ஆகியிருக்கும்! திரு.எம்.ஜி.ஆர் அவர்கள், புரட்சி நடிகராக இருந்தபோது, அவரை உயிரென நினைத்த ரசிகர்கள், அவர் புரட்சித்தலைவர் அவதாரம் எடுத்த பிறகு, தொண்டர்களாக மாறினார்கள்.புரட்சித்தலைவர் முதலமைச்சராக அவதாரம் எடுத்தபோது, தொண்டர்கள் பக்தர்களாகவே மாறினார்கள்! தொண்டர்களின் இன்பத்திலும், துன்பத்திலும்பங்கெடுத்துக் கொண்ட மாபெரும் மக்கள் தலைவராக புரட்சித்தலைவர் திகழ்ந்ததால்தான், இன்றைக்கும், யாராலும் அசைக்க முடியாத எஃகு கோட்டையாக அ.இ.அ.தி.மு.க. நிலைத்து நிற்கிறது!

இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ரசிகர்கள் இருந்தார்கள் என்றால், அத்தனை ரசிகர்களையும் அவர் திருப்திப்படுத்தினார். சில நேரங்களில், தம்மையும் வருத்திக் கொண்டு ரசிகர்களை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறார். எண்ணற்ற தொண்டர்களின் தியாகமும், உழைப்பும் இந்த அ.இ.அ.தி.மு.க. என்ற ஆலமரத்திற்கு உரமாக போடப்பட்டிருக்கிறது.

1977ஆம் ஆண்டு, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை அமைக்கும் வரை, கழகத்தினர் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான், வாழ வேண்டியதாயிற்று. அப்படிப்பட்டவர்கள்தாம், இந்த மாபெரும் இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள்! அவர்களை எல்லாம் நாம் இந்த நேரத்தில் நினைத்துப் பார்த்து மரியாதை செலுத்த வேண்டும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் எண்ணங்களைவெற்றியடையச் செய்த அந்த வீரம் மிக்க இளைஞர்கள், மறைந்து விடவில்லை! அவர்கள் வாழையடி வாழையாக இன்றைக்கும் கழகத்தில் மக்கள் பணியாற்றி வருகிறார்கள். நான் உட்பட இங்கே அமர்ந்திருக்கின்றஅனைவரும் அப்படி வந்தவர்கள் தாம்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உடல் அளவில் மறைந்த 1987ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் வரை, எதிர்க்கட்சிகளால் ஆட்சிப் பொறுப்பை நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மக்கள் செல்வாக்கை பெற்றிருந்தார்கள்!

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப்படத்தைப் போல், அவருடைய கட்சியும் 100 நாட்கள் தான் ஓடும் என்று கேலியும், கிண்டலும் பேசியவர்கள்,

புரட்சித்தலைவர் உயிரோடு இருக்கிற வரையில், கோட்டை பக்கம் திரும்பவே முடியவில்லை? மாண்புமிகு புரட்சித்தலைவருக்குப் பிறகு, அஇஅதிமுக கட்சி முடிந்துவிட்டது என்று மீண்டும் கொக்கரித்தார்கள். அவமானங்களை, மலர் மாலையாக சூட்டிக் கொண்டு, அ.இ.அ.தி.மு.க.வை, ஒரு ‘பீனிக்ஸ் பறவை’யைப் போல வெற்றி வானில் பறக்க விட்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அரசியலில் விஸ்வரூபம் எடுப்பார் என்று எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கவில்லை! மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கழகத்திற்குத் தலைமையேற்று, கழகத்தை இன்னும் வீறு கொண்டு வளரச் செய்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்செய்த சில சாதனைகளை, இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உயர் கல்வித் துறையில், புதிதாக 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை, மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கினார்கள். அதன்பின், மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடக்கியுள்ளது.

இதன் விளைவாக, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011இல், ஆட்சி பொறுப்பேற்றபொழுது, உயர்கல்வியில் 21 சதவீதமாக இருந்த மாணவர் சேர்க்கை, இன்று 48.6 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக முன்னேறியுள்ளது என்பதனைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மக்களின் தாகம் தணிக்க, புரட்சித்தலைவர் கொண்டு வந்த கிருஷ்ணா நதிநீர் திட்டத்தைப் போல, மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தை கொண்டு வந்தார்கள். சென்னை மாநகர மக்களின் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த, நெம்மேலியில், 1,259 கோடி ரூபாய் செலவில், 150 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு, ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் நிலையில் உள்ளது. 6 ஆயிரத்து 78 கோடி ரூபாய் செலவில், போரூரில், நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரை, குடிநீராக்கும் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோர, ஆயத்தப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமத்தில், கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய் கண்டிகை ஏரிகளை இணைத்து சென்னைமாநகரின் குடிநீர்த் தேவைக்காக ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி, 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது. மேற்கண்ட இந்த 3 திட்டங்களினால், சென்னையின் குடிநீர் பிரச்சனை, பெருமளவில் தீர்க்கப்படும் என்பதில் ஐயமில்லை!

நடப்பாண்டில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஏரிகள், கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளில் 28 முன்னெச்சரிக்கைப் பணிகள், 6 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளன. சென்னையில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் உள்ள அடையாறு, கொசஸ்தலையாறு, கூவம், ஆரணியாறு மற்றும் கோவளம் வடிநிலங்கள் மற்றும் பங்கிங்காம் கால்வாயில், பொதுப் பணித் துறை மூலமாக, நிரந்தர வெள்ள தடுப்புப் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை, 2 ஆயிரத்து 790 கோடி ரூபாய் மதிப்பில், தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

கோவளம் வடிநிலப் பகுதியில், 1,243 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 326 கி.மீ. நீளத்திற்கும், 2,518 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் 765 கி.மீ. நீளத்திற்கும், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க, திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் பணிகள் உள்ளன. சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், மழைநீர் தேங்குவதை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு, சுவிட்சர்லாந்து, பின்லாந்து போன்ற வெளி நாடுகளிலிருந்து, 24 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு, நீர்வழிக் கால்வாய்களில், தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடையும்போது, சென்னை மற்றும் புறநகர் பகுதியின் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகாமல் தடுக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் 2011ஐ அறிவித்து, விரிவாக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதிகளில், சென்னைக்கு நிகரான

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த, ஆயிரத்து 488 கோடி ரூபாய் சென்னை மாநகராட்சிக்கு வழங்கினார்கள்.

இதன்மூலம், உட்புறச்சாலைகள், மழைநீர் வடிகால்வாய், நடைபாதைகள், எல்.ஈ.டி தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டில், 298 கோடி ரூபாய் செலவில், 624 கி.மீ. மொத்த நீளத்திற்கு, 3 ஆயிரத்து 823 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. சென்னை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில், குப்பைப் பிரச்சனைக்கு, நிரந்தரத் தீர்வாக, விஞ்ஞான ரீதியான குப்பை கொட்டும் வளாகமும், குப்பையிலிருந்து 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கவும் திட்ட அறிக்கை ஒன்று, அண்ணா பல்கலைக் கழகம், ஐ.ஐ.டி. கல்வி நிறுவனம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உள்ளடக்கிய குழுவின் மூலம், பல்வேறு நிலைகளில் பரிசீலனை செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

சீர்மிகு நகர (Smart City)த் திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியில் மொத்தம் 953 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நடைபாதை வளாகம், பன்னடுக்கு வாகன நிறுத்தம், வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டம், மிதிவண்டி பகிர்மான சேவை, மேம்பாலம் அமைத்தல், மழைநீர் வடிகால் இணைத்தல், ஏரி புனரமைத்தல், எல்.ஈ.டி. விளக்குகள் அமைத்தல் போன்ற 37 திட்டப் பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றில் 15.60 கோடி ரூபாயில் 5 பணிகள் முடிக்கப்பட்டும், 345 கோடி ரூபாயில், 18 திட்டங்கள் செயலாக்கத்திலும் உள்ளன.மீதமுள்ள 14 திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் கண்டுவருகின்றன.

‘அம்ருத்’ திட்டத்தின்கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில், 51 பூங்காக்கள் 35 கோடி ரூபாய் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 30 பணிகள் முடிக்கப்பட்டும், 21 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கடந்த 7 ஆண்டுகளில்,

- ✶ 470 கோடி ரூபாய் மதிப்பில், 6 ஆற்றுப் பாலங்களும், 5 சாலை மேம்பாலங்களும், 3 இரயில்வே மேம்பாலங்களும் மற்றும் 5 இடங்களில் நகரும் படிக்கட்டுகளுடன் நடை மேம்பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.
- ✶ தற்போது 745 கோடி ரூபாய் மதிப்பில், 6 இடங்களில், சாலை மேம்பாலங்களும், ஒரு இரயில்வே மேம்பாலமும், பக்கிங்காம் கால்வாயில் ஒரு உயர்மட்ட மேம்பாலமும் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ✶ ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 154 கோடி ரூபாய் மதிப்பிலான, 27 கி.மீ. நீளத்திற்கு, சாலை மற்றும் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ✶ சென்னைத் துறைமுகம் முதல், மதுரவாயல் வரை, உயர்மட்டச் சாலை அமைக்கும் பணிக்கான, திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படும்.

- ✶ சென்னை எண்ணூர் துறைமுகத்தை, தச்சூர், திருவள்ளூர், திருப்பெரும்புதூர் மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் வழியாக மாமல்லபுரத்துடன் இணைக்கும் 134 கி.மீ. நீள சுற்றுச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.
- ✶ சாலைப் பணிகளுக்கான நில எடுப்புப் பணிகள், 3 ஆயிரத்து 554 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ✶ ‘கிரீன்வேஸ்’ சாலை மற்றும் துர்காபாய் தேஷ்முக் சாலைகளை, தமிழ்நாடு இசைக் கல்லூரி வழியாக இணைக்கும் வகையில், 650 மீட்டர் நீளத்திற்கு, 30 கோடி ரூபாய் மதிப்பில், இணைப்புச் சாலை அமைக்கப்படும்.

மேற்சொன்ன திட்டங்களால், சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறைக்கப்பட்டு, சீரான மற்றும் விரைவான போக்குவரத்திற்கு வழிவகை செய்யப்படும்.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில், ஆழ்கடல் மீன்களைக் கையாள்வதற்கு ஏற்ற வகையில், தரமான உட்கட்டமைப்பு வசதிகளுடன், சூரை மீன்பிடி துறைமுகம் 200 கோடி ரூபாய் செலவில், அமைக்கப்பட்டு வருகிறது. காசிமேடு மீன்பிடி துறைமுகம் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் புனரமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை உட்பட நகர் ஊரமைப்புத் துறை பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், 2016க்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட, அனுமதியற்ற, மனைப்பிரிவு மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்த, புதிதாக ஒரு திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம், சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.

சென்னை கோயம்பேடு பேருந்து முனையத்தில், போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், சென்னையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக, மாதவரத்தில், 95 கோடி ரூபாய் செலவில், ஒரு பேருந்து முனையம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட உள்ளது. இது தமிழ்நாட்டிலேயே முதன்முதலாகக் கட்டப்பட்ட இரண்டடுக்குப் பேருந்து முனையமாகும். இது தவிர, தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக, கிளாம்பாக்கத்தில், சுமார் 417 கோடி ரூபாய் செலவில், ஒரே நேரத்தில் 250 பேருந்துகள் நிறுத்தக்கூடிய அளவிலான, துணை மின் நிலையம் உட்பட, அனைத்து வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

சென்னை ‘மெட்ரோ’ இரயில் சேவையின், இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. அதன்படி, மாதவரம் முதல், சிறுசேரி வரையில், ஒரு வழித்தடமும், சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல், கலங்கரை விளக்கம் வரையிலான ஒரு வழித்தடமும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை, ஒரு வழித்தடமும், என மொத்தம் 107.55 கி.மீ. நீளத்திற்கான 3 வழித்தடங்கள் 79 ஆயிரத்து 961 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

பெருகிவரும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய, மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, முதற்கட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். குடியிருப்பு மற்றும் வணிகத் திட்டங்களில் வாங்குபவர்களுக்கும், மேம்பாட்டாளர்களுக்கும் இடையே உள்ள விற்றல்–வாங்கல் நடைமுறைகளைஒழுங்குபடுத்துவதற்காக, நிரந்தரக் கட்டட, மனை விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை நிறுவிய முதல் மாநிலம், தமிழ்நாடு தான்!

கடந்த 7 ஆண்டுகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், மொத்தம் 6 ஆயிரத்து 135 குடியிருப்புகள், 2 ஆயிரத்து 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. இவை தவிர, தற்போது 5,998 அலகு எண்ணிக்கையில், 1,591 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்கள், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வருகின்றன. மேலும், 12 ஆயிரத்து 308 வீடுகள், 3,408 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. குடிசைப் பகுதிகளற்ற சென்னையை உருவாக்கும் நோக்கில், சென்னையில் கடந்த 7 ஆண்டுகளில், 46 ஆயிரத்து 641 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 934 குடியிருப்புகள் கட்டப்பட்டுத் தயார் நிலையிலும், 18 ஆயிரத்து 67 குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன.

பொதுமக்கள், அரசின் பல்வேறு சேவைகளை அலைச்சல் இன்றிப் பெறுவதற்கு வசதியாக, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்த சில வருவாய் கிராமங்களை, சென்னை மாநகராட்சி எல்லைக்கு இணையாக விரிவாக்கம் செய்யப்பட்ட, சென்னை வருவாய் மாவட்டம் உருவாக்கப்பட்டு, 04.01.2018 அன்று நான் துவக்கி வைத்துள்ளேன். சென்னையில் ஏழை, எளிய மக்கள் பசியோடு இருக்கக்கூடாது என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உயரிய சிந்தனையின் விளைவாக, சென்னை முழுவதும், பல்வேறு இடங்களில், ‘அம்மா உணவகங்கள்’ இயங்கி வருகின்றன.

கடந்த 7 ஆண்டுகளில், மகளிர் திருமண உதவித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில், 10 இலட்சத்து 21 ஆயிரத்து 499 பயனாளிகளுக்கு, 4,704 கோடி ரூபாய் அளவிற்கும், சென்னையில் மட்டும் 28 ஆயிரத்து 664 பயனாளிகளுக்கு 149 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவியும் மற்றும் தாலிக்குத் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில், 5,532 கோடி ரூபாய் மதிப்பில், 37 இலட்சத்து 72 ஆயிரம் மாணாக்கர்களுக்கும்,சென்னையில் மட்டும் ஒரு இலட்சத்து 53 ஆயிரம் மாணாக்கர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில், 47 இலட்சத்து 82 ஆயிரம் தாய்மார்களுக்கு, 4,401 கோடி ரூபாய் நிதி உதவியும்,சென்னையில் மட்டும், 2 இலட்சத்து 97 ஆயிரம் தாய்மார்களுக்கு, 278 கோடி ரூபாய் நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில், 25 இலட்சத்து 8 ஆயிரம் பயனாளிகளுக்கு 4,757 கோடி ரூபாய் அளவிற்கும்,சென்னையில் மட்டும் ஒரு இலட்சத்து 96 ஆயிரம் பயனாளிகளுக்கு 328 கோடி ரூபாய் அளவிற்கும் மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளன.

நம் இயக்கத்தின் இருபெரும் தலைவர்களும்முதலமைச்சர் பதவியை, கிரீடமாகச் சூட்டிக் கொள்ளவில்லை. பதவியை, ஒரு மக்கள் கட்டளையாக ஏற்று உழைத்தவர்கள். இந்தத் தமிழ் மண்ணில் பேரறிஞர் அண்ணாவின் பெயரில் புரட்சித்தலைவர் அவர்கள் விதைத்த அஇஅதிமுக என்கிற விதையானது வளர்ந்து, இன்னும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆனாலும், யாராலும் அசைக்க முடியாத சக்தியாகத் திகழும். அஇஅதிமுக, மக்களுக்காக உருவான கட்சி! மக்களுக்காகவே தியாகம் செய்யும் கட்சி! அஇஅதிமுக இத்தனை வலிமையாக இருப்பதற்குக் காரணம்,

"ஒரு தாய் மக்கள் நாமென்போம்,
ஒன்றே எங்கள் குலமென்போம்"

என்று ஒற்றுமையை வலியுறுத்தி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாடியதே!

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒரு நடிகருக்கும், ரசிகர்களுக்குமான இடைவெளியைஎப்படி குறைத்துக் காட்டினாரோ – அப்படித்தான் ஒரு அரசியல் தலைவருக்கும், தொண்டனுக்குமான இடைவெளியை மட்டுமல்லாமல், ஒரு ஆட்சியாளருக்கும் பொது மக்களுக்குமான இடைவெளியையும் குறைத்துக் காட்டினார்! அதனால்தான், ஒரு முறை புரட்சித்தலைவர் அவர்கள், "நான் நினைத்திருந்தால், கோடிக் கணக்கில் பணம் சேர்த்திருக்கலாம், பணத்தை சேர்க்கவில்லை. ஆனால் கோடிக்கணக்கான இதயங்களை சேர்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று உருக்கமாகப் பேசினார்கள்!

தாம் அரசியலில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாவதற்கு முன்பே, மக்களிடமிருந்து எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஓடி ஓடி உதவி செய்தவர் நமது பொன்மனச் செம்மல் அவர்கள். அதனால் தான்,

"வாத்தியாரு பாடி வச்ச பாட்டு,
ரசிக மகாஜனங்கள் அதைக் கேட்டு,
நாடாளப் போட்டார்கள் ஓட்டு"

என்று எம்.ஜி.ஆர் மற்றும் அவர் தொடங்கிய இயக்கத்தாலும் தான், மக்களுக்கு நன்மை செய்ய முடியும் எனத் தீர்மானித்து, அவரை முதலமைச்சராக்கி மக்கள் அழகு பார்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்தொலைநோக்குத் திட்டங்களால், தமிழ்நாட்டு மக்கள்இன்னும் பல நூறாண்டுகள் நற்பலன்களை அனுபவிப்பார்கள். எம்.ஜி.ஆர் என்ற பெயரே எங்களுக்கு ஒரு மந்திரச் சொல்.

இம்மந்திரத்தின் துணை கொண்டே, இன்னும் பல நூறாண்டுகள் அ.இ.அ.தி.மு.க. தமிழ்நாட்டை ஆளும் என்று உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்!

தமிழ்நாட்டை ஆண்ட முப்பெரும் தலைவர்களின் ஆசியும், அருளும் இருந்த காரணத்தால்தான், அத்தகைய மகத்தான மக்கள் தலைவரின் நூற்றாண்டு விழாவைத் தலைமையேற்று, ஒரு வருட விழாவாக, சீரும் சிறப்புமாக கொண்டாடும் வாய்ப்பு, ஒரு சாதாரண கழகத் தொண்டனாகிய எனக்குக் கிடைத்தது. இறைவனுடைய அருள் ஆசியோடும், என்னை இந்த நிலைக்கு உயர்த்திவிட்ட புரட்சித்தலைவி அம்மா என்ற தெய்வத்தினுடைய நல்லாசியோடும், மற்றும் உங்கள் அனைவரது ஆதரவோடும் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது என்றால், அது மிகையாகாது! இத்தருணத்தில், பொது மக்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவருக்கும் நான் என்றென்றும் விசுவாசமாக இருப்பேன் என்று கூறிக்கொள்கிறேன். கழகத்தின் முப்பெரும் தலைவர்களும் ஒன்றாகச் சங்கமித்திருக்கும் வங்கக்கடல் ஓரம்தான், நான் வணங்கும் தெய்வத் திருக்கோயில்கள் இருக்குமிடம்.

ஆங்கிலேயர்களுக்குப் பிறகு, சுதந்திர இந்தியாவில் அதிக ஆண்டுகள் ஜார்ஜ் கோட்டையை ஆண்ட கட்சி அ.இ.அ.தி.மு.க. தான். இன்னும் பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து ஆளப்போவதும், அ.இ.அ.தி.மு.க. தான் என்பதனை இந்த நேரத்தில் நான் உறுதியாகக் குறிப்பிடுகிறேன். அதற்குக் காரணம், தமிழ்நாட்டிலுள்ள 31 மாவட்டங்களிலும் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது, மக்களின் எழுச்சியையும், மலர்ச்சியையும் கண்ணாறக் கண்டவன் நான். ஊருக்கு தம்பட்டம் அடிக்க, பேருக்கு விழா நடத்துபவர்கள் அல்லர் நாங்கள்! நாங்கள் நடத்தும் ஒவ்வொரு விழாவையும், மக்கள் பணியை மையமாக வைத்தே நடத்தி வருகிறோம்!

'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாக்களின் மூலம், ஒரே வருடத்தில் 31 மாவட்டங்களுக்கும் சென்று, அங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்றாற்போல், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியது மாண்புமிகு அம்மாவின் இந்த அரசு.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி சிறப்புகளும், தனி அடையாளங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் பேசும் போதெல்லாம், அந்தந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தனாகவே மாறி, அம்மாவட்டத்தின் பெருமை, அம்மாவட்டத்தில் பிறந்தும், வளர்ந்தும் சாதனை நிகழ்த்திய மகத்தான மனிதர்கள், அம்மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மாவும், மாண்புமிகு அம்மாவின் அரசும் வழங்கிய திட்டங்கள் பற்றி, புள்ளி விவரங்களோடு உரை ஆற்றியுள்ளேன். இவற்றையெல்லாம் பொறுக்க முடியாதவர்கள், பல அவதூறுகளைப் பரப்பி, மாண்புமிகு புரட்சித்தலைவரின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தையே நிறுத்த முயற்சி செய்தார்கள்!

அதிலும் அவர்கள் தோல்விதான் அடைந்தார்கள்! எதிர்ப்புகளையெல்லாம் மீறி, இன்று, சென்னையில் பிரமாண்டமாக நிறைவு விழா நடைபெறுவதை எண்ணி, நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்! ஒவ்வொரு மாவட்டத்திலும், நான் நேரில் பார்த்ததையும், கேட்டு அறிந்ததையும், திட்டங்கள்

அறிவித்ததையும், முடிவடைந்த திட்டங்களை தொடக்கி வைத்ததையும், மகிழ்வோடு இந்த நிறைவு விழாவில் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகின்றேன்! மதுரையில் தொடங்கி, கன்னியாகுமரி வரையிலான 31 மாவட்டங்களுக்கும் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா மூலம் பெற்ற திட்டங்களின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? 10 ஆயிரத்து 884 கோடியே 42 இலட்சம் ரூபாய்! இச்செலவில், 5 ஆயிரத்து 571 திட்டங்கள் அடங்கியுள்ளன என்று செய்தியையும் இவ்விழாவிலே தெரிவிப்பதில் அளவில்லா மகிழ்ச்சியடைகிறேன். இதில் மொத்தம் அறிவிக்கப்பட்ட 547 அறிவிப்புகளில், 434 அறிவிப்புகளுக்குக் குறுகிய காலத்தியே அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன! அவற்றில், 391 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றும், 43 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையான நிறைவேற்றப்பட்டும் உள்ளன. மீதமுள்ள அறிவிப்புகளில், 84 அறிவிப்புகளுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 29 அறிவிப்புகள், மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், "இது ஆடம்பர விழாவாக நடக்கிறது!" என்று குறிப்பிட்டார். நாம் எவ்வளவு திட்டங்களை அறிவித்திருக்கின்றோம். ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்கின்றபொழுது, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவது மட்டுமன்று; நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற அந்த நிகழ்ச்சியிலே, அங்கிருக்கின்ற மாவட்ட மக்களுக்கு எத்தனை திட்டங்களை அறிவித்திருக்கின்றோம்! அத்தனை திட்டங்களும் அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். இந்த அரசு மக்களுடைய அரசு, மக்களுக்காகப் பாடுபடுகின்ற அரசு. ஆகவேதான், அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களையும், இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதனை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இது ஆடம்பர விழா அன்று; மக்களுக்கு நன்மை பயக்கின்ற நூற்றாண்டு விழா என்பதனையும் மிக அழுத்தமாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராகவும், எதிர்க்கட்சியினுடைய தலைவராகவும் இருக்கின்ற திரு.ஸ்டாலின் அவர்கள், எப்பொழுது பார்த்தாலும் நம்முடைய இயக்கத்தைப் பற்றியும், நம்முடைய அரசைப் பற்றியும் வாடிக்கையாகக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் உண்மையைச் சொன்னால் பரவாயில்லை. ஆனால், அவர் வாய் திறக்கின்றபோதெல்லாம் பொய்களாகவே கொட்டித்தீர்க்கிறார்! அதுபோன்று, பேட்டி எடுக்க நம்முடைய நிருபர் சென்றால், அவர் சொல்வது அத்தனையுமே பொய்யாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஏனென்று சொன்னால், இந்த ஆட்சியில் எதுவும் நடைபெறவில்லை என்று அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, என்னென்ன திட்டங்களை நாட்டு மக்களுக்குச் செய்தார்கள் என்பதை விவரமாக

எடுத்துச் சொன்னோம். அதேபோல், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒரு வருடம் 7 மாத காலத்திலே என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, என்னென்ன திட்டங்களை தமிழகத்திலே கொண்டு வந்தோம் என்பவற்றையும் புள்ளிவிவரத்தோடு சொல்லியிருக்கின்றோம். இன்னும் என்ன சொல்லவேண்டும்? என்னதான் அவர் எதிர்பார்க்கின்றார்? அவருடைய ஆட்சியிலே என்ன திட்டத்தைக் கொண்டு வந்தார், தமிழ்நாட்டு மக்களுக்கு? அதனால் மக்கள் என்ன நன்மைகள் பெற்றார்கள்? எதுவுமேயில்லை! துன்பங்களைத்தான் பெற்றார்கள்! எனக்கு முன்னால் மீன்வளத் துறை அமைச்சர் மிக அழகாகக் குறிப்பிட்டார், எதிர்க்கட்சியாக இருக்கின்றபொழுதே, நாட்டு மக்களை எப்படிப் படாதபாடு படுத்தினார்கள் என்ற விளக்கத்தைச் சொன்னார். ஹோட்டலிலே சாப்பிட்டுவிட்டு, பணம் கொடுக்காமல் அந்த முதலாளியை எப்படி அடித்துத்துவைத்தார்கள் என்று நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தெரியும்! ஓர் அழகு நிலையத்திற்குச் சென்ற திமுக கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சிக் குழு உறுப்பினர், அந்தப் பெண்மணியை, எப்படி அடித்து, உதைத்து, காலால் மிதித்தார் என்று ஊடகத்தின் வாயிலாக, நாட்டு மக்கள் அத்தனைபேரும் தெரிந்து கொண்டார்கள்! மகளிருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவதைப்போல, பல பத்திரிகைகளிலே செய்தி வெளியிட்டார். அது என்னவென்று உங்களுக்குத் தெரியும்!

ஆகவே, அவருடைய கட்சியைச் சேர்ந்தவர், அழகு நிலையத்தில் புகுந்து இப்படி ஒரு தகாத செயலில் ஈடுபட்டிருக்கின்றார், ஏதாவது கண்டித்தாரா? இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா? ஆகவே, அப்படிப்பட்ட கட்சிதான் திமுக கட்சி என்று, இந்த நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதனையும் இந்த நேரத்திலே நினைவுகூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் சட்டம்–ஒழுங்கு சிறப்பாக இருந்து கொண்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது சட்டம்–ஒழுங்கு எப்படிச் சிறப்பாக இருந்ததோ, அதேபோலத்தான் அம்மாவினுடைய ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று, சென்னை மாநகரில் நடைபெறும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின் நிறைவு நாளில், சென்னை நகரின் வளர்ச்சிக்கு மட்டும், மாண்புமிகு அம்மாவின் அரசு, 18 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை வழங்கியிருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு விழாக்களின் மூலம் திட்டங்கள் மட்டும் கிடைக்கவில்லை. மாண்புமிகு புரட்சித்தலைவரின் உழைப்பையும், வளர்ச்சியையும், இந்தத் தலைமுறையினரும் நன்கு புரிந்து கொண்டார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவரின் வாழ்க்கையைப் பாடமாகக் கொண்டு, முன்னேறத் துடிக்கிறார்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனிக்கட்சி தொடங்கியபோது, தம்முடைய தலைவரும், வழிகாட்டியுமான பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப்

படத்தைத் தன் கட்சிக்கொடியில் வடிவமைத்து, அண்ணாவின் பேரும் புகழும் தமிழ் மண்ணில் காலம் காலமாக நிலைத்து நிற்க வழி வகுத்தார்கள்!

'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைந்து 30 ஆண்டுகள் ஆனாலும், மக்கள் மனதில் இன்றும் பசுமையாக இருப்பதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தாம்! மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் விட்டுச் சென்ற மக்கள் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழ், காலம் உள்ள வரை நிலைக்கும் அளவிற்கு, மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வழங்கி வருவதை தமிழ்நாட்டு மக்கள் அறிவீர்கள்!

"நாட்டுக்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார். பொது நலத்தில் தானே, நாள் முழுக்க கண்ணாயிருந்தார்! ஏற்றுக் கொண்ட பதவிக்கெல்லாம் பெருமையைத் தந்தார்! தன் இனிய குடும்பம் ஒன்றுக்குத்தான் வறுமையைத் தந்தார்!" என்று நேற்று, இன்று, நாளை என்ற படத்தின் வாயிலாக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அண்ணாவைப் பற்றி மிகவும் கவலைப்பட்டார்.

கட்சியில் அடிமட்டத் தொண்டனுக்கும் தலைவர் பதவி வழங்கும் ஜனநாயகக் கட்சி ஒன்று உண்டு என்றால், அது அ.இ.அ.தி.மு.க. மட்டும்தான். அதற்கு உதாரணமாகத்தான், ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த நான், இன்று உங்கள் கண்முன்னே முதலமைச்சராக நிற்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் துடிப்பான செயல்பாடுகளின் காரணமாக, வேளாண் உற்பத்திக்கு, கடந்த 7 ஆண்டுகளில், 5 விருதுகளும், மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறைக்கு, 19 விருதுகளும், தேசிய விருதுகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு, 6 விருதுகளும்,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் எரிசக்தித் துறைக்கு, தலா 3 விருதுகளும் மற்றும்கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை போன்ற பல துறைகளுக்கும் சர்வதேச விருதுகள் மட்டுமன்றி, மத்திய அரசின் தேசிய விருதுகளையும் கிடைத்துள்ளன. அவைமட்டுமல்ல, மின்துறை, போக்குவரத்துத் துறை, இப்படி பல துறைகளில், இன்றைக்கு அகில இந்திய அளவிலே விருதுகளை பெற்ற அரசு அம்மாவுடைய அரசு.

பெங்களூரைச் சேர்ந்த ஓர் அமைப்பு, சமூக, பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு உட்பட முக்கியமான 10 அடிப்படைக் காரணிகளைக் கொண்டு, அரசின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து வெளியிட்ட அறிக்கையில், சிறந்த ஆளுமைக்கான இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாட்டைத் தேர்வு செய்துள்ளது என்பதை எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வரசின் செயல்பாட்டில் குறை சொல்லும் எதிர்க்கட்சியினர், இதற்கு என்ன பதில் சொல்வார்கள்? செயல்படாத அரசாக இருந்தால், விருதுகளை வெல்ல முடியுமா? என்று எண்ணி பார்க்க வேண்டும்!

இந்தத் தலைமுறை மக்களாகிய நாம், நமக்குப்பின் வரும் தலைமுறையினருக்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றிய உயர்ந்த எண்ணங்களையும், கருத்துகளையும் கூற வேண்டும்.

'அறிவூட்டும் தந்தை,
நல்வழி காட்டும் தலைவன்'

என்ற பாடலுக்கேற்றவாறு, புரட்சித்தலைவர் வழி வந்த தலைவர்களையே, மக்கள் தங்கள் தலைவர்களாக ஏற்றுக் கொள்வார்கள்.

'மாபெரும் சபைதனில் நீ நடந்தால்,
உனக்கு மாலைகள் விழ வேண்டும்.
ஒரு மாற்று குறையாத மன்னவன் இவன்
என்று போற்றிப் புகழ வேண்டும்!'

என்ற புரட்சித்தலைவரின் பாடல் வரிகளை, இளைஞர்களிடம் கொண்டு சென்றால், தமிழ்நாடு எதிர்காலத்தில் நல்ல தலைவர்களைப் பெறும்.

ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கென்றே, வடலூர் வள்ளலார் அவர்கள் அணையா அடுப்பினை ஏற்றிவைத்தார். அதற்குப் பிறகு, ஓர் அணையா அடுப்பு எரிந்தது என்றால், அது ஏழை, எளிய மக்களுக்காகவும், தொண்டர்களுக்காகவும், ஏற்படுத்தப்பட்ட ராமாவரம் தோட்ட அணையா அடுப்பு தான்!

அத்தகைய புரட்சித்தலைவரின் வள்ளல் குணத்தைப் பார்த்த பின்புதான், பலரும் அதைப் பின்பற்ற ஆரம்பித்தனர். இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் வாழ்ந்த ஒரு பெரிய மனிதருக்கு செல்வச் செழிப்பு தந்த கர்வம் அதிகம். அவரிடம் பணம் ஏராளமாக இருந்தது. ஆனால், மன நிறைவு இல்லை! அவர் தமது ஊருக்கு ஒரு துறவி வந்திருப்பதாகவும், அவர் தம்மைப் பார்க்க வருபவர்களுக்கு, மன அமைதிக்கான நல்ல ஆலோசனைகளை வழங்குவதாகவும் அறிந்த செல்வந்தர், அலட்சியமாக அந்த துறவி தங்கியிருந்த வீட்டிற்குள் வேகமாக நுழைந்தார். அங்கே, அந்தத் துறவி தமது வேலையில் மூழ்கி இருந்தார். சற்று நேரத்தில் தலை நிமிர்ந்த அந்தத் துறவி, வந்த செல்வந்தர் பற்றிய அனைத்து விவரங்களையும் கூறினார்.

"இது எல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும், யார் சொன்னார்கள்?" என அந்தச் செல்வந்தர் கேட்டார். அந்தப் பெரிய மனிதரைப் பார்த்த துறவி, "போனதெல்லாம் போகட்டும், கடவுள் உங்களுக்கு அளித்துள்ள பெரும் செல்வம், ஏதுமற்ற லட்சக்கணக்கான மக்களுக்கு நல்லது செய்யவே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றவர்களுக்கு கொடுக்க பழகுங்கள்" என்றார். "எனக்கு புத்திமதி சொல்ல இவர் யார்"என்று மனதில் நினைத்த அந்த செல்வந்தர் கோபமாக வெளியேறினார்.

ஆனால் ஒரு வாரத்திற்குப் பிறகு, மீண்டும் அங்கே வந்த அந்த செல்வந்தர், பொதுநலத் தொண்டு ஒன்றிற்காக அவர் வழங்கிய தொகை பற்றிய ஆவணங்களைக் காட்டி, ''என்ன திருப்திதானே? இப்போது எனக்கு நீங்கள் நன்றி சொல்லலாம்'' என்றார். உடனே துறவி, ''நன்றி சொல்ல வேண்டியது நானல்ல, நீங்கள்தான்''என்றார் அமைதியாக.

துறவி ஏன் அவ்வாறு கூறினார் என்பது அந்த பெரிய மனிதருக்குப் புரியவில்லை! எனினும், துறவியின் வார்த்தைகள் அவரைச் சிந்திக்க வைத்தன. அப்போதுதான், தான் துறவியின் சொல்படி வறுமையில் வாடுபவர்களுக்கு தானம் வழங்கும் போது, அவர்கள் தன்னை வாழ்த்தியதையும், அது அவருக்கு மன நிறைவை அளித்ததையும் அவர் உணர்ந்தார். அன்றிலிருந்து அவர் மாறினார்! அவரது திரண்ட செல்வத்தை, வாழ்க்கையில் துன்பப்படும் அனைவருக்கும் வாரி வாரி வழங்க தொடங்கினார்!

செல்வந்தராகிய அந்தப் பெரிய மனிதரை, வள்ளலாக மாற்றிய துறவி – சுவாமி விவேகானந்தர்!

வள்ளலாக மாறிய செல்வந்தர் – ஜான் டி. ராக்ஃபெல்லர் என்ற அமெரிக்க தொழில் அதிபர்.

ராக்ஃபெல்லர் தனது 33வது வயதிலேயே பெரும் தொழில் அதிபராக மதிக்கப்பட்டார்; அவருக்கு தெரிந்ததெல்லாம் தொழில், போட்டி, வெற்றி, பணம் ஆகியவை மட்டுமே. அவரது சுக துக்கங்களைப் பங்கிட்டுக் கொள்ள, உறவினர்களோ, நண்பர்களோ யாரும் இல்லை! அதன் விளைவு, மன அழுத்தம், கவலை, பயம் யாவும் ஒன்று சேர்ந்து அவரின் உடல் நிலையைக் கடுமையாக பாதித்தன. அப்போது, ராக்ஃபெல்லருக்கு வயது 53. இந்த சூழ்நிலையில்தான், அவர் சிகாகோ நகரில் சுவாமி விவேகானந்தர் அவர்களைச் சந்தித்தார்; இந்த சந்திப்புக்குப்பின், அவர் வாழ்க்கையில் தானம் செய்வது, அவ்வளவு எளிதான காரியமாக அமையவில்லை. அவர் கொடுத்ததைப் பலரும் வாங்க மறுத்தனர். இருந்தாலும், அவர் சலிக்காமல் நன்கொடை கொடுத்துக் கொண்டே இருந்தார்.

மேலும், இவரது பொருள் உதவியினால், உலகெங்கும் உள்ள மக்கள் நலனுக்காக அறிவியல் ஆராய்ச்சிகள், மருத்துவ சேவைகள், பல வியாதிகளுக்கான மருந்துகள் கண்டுபிடித்தல் போன்ற ஏராளமான பணிகள் நடைபெற்றன. கருணை உள்ளம் கொண்ட மாமனிதர் என்ற நிலைக்கு மாறிய ராக்ஃபெல்லருக்கு கிடைத்தவை என்ன?

அமைதி, ஆனந்தம், ஆரோக்கியம்!

எனவே, செல்வம் இருப்பவர்கள், இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள்! கல்வி அறிவு உள்ளவர்கள், இல்லாதவர்களுக்கு அறிவு புகட்டுங்கள்! உள்ளத்தில் அன்புள்ள அனைவரும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைப் போல், பிறருக்கு எந்த வகையிலாவது, இயன்ற சேவைகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்! இதே எண்ணத்தில்தான், மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

அறிவிப்புகள்

வடசென்னை மேம்பாட்டுத் திட்டம்

- ✶ பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் எண். 1 முதல் 5 வரை உள்ள பகுதிகளில் வசித்து வரும் வடசென்னை மக்களின் கோரிக்கைகளை ஏற்று, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்குவது பற்றிப் பரிசீலித்து அறிக்கை அளிக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு நிறுவனத்தை அமர்த்தியது. அந்நிறுவனம் ஒரு திட்ட அறிக்கையைத் தயாரித்துத் தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது.

- ✶ அதன்படி, மீன்பிடிபடகு தயாரித்தல், மீன்பிடி படகு பழுதுபார்க்கும் தளம், படகுத்துறை மேம்பாடு, கல்வி மேம்பாட்டுப் பணிகள், அடிப்படைக் கட்டமைப்புகள் உருவாக்குதல், நலவாழ்வுத் திட்டங்களுக்கான கட்டமைப்புகளை மேம்படுத்துதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், தொழிற்பயிற்சி வழங்குதல், குடியிருப்புகளை மேம்படுத்துதல், விளையாட்டு மேம்பாடு உள்ளிட்ட திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையை, விரைந்து பரிசீலித்து மாண்புமிகு அம்மாவின் அரசு தக்க மேல் நடவடிக்கை எடுக்கும்.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை

- ✶ நகரப் பகுதிகளில் வீடுகளின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும், நகரங்களில், குறிப்பாக, சென்னையில் வாழும் மக்களின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாக அனுமதிக்கப்படும் தளப் பரப்பளவு குறியீட்டைத் (FSI) தற்போதுள்ள 1.5லிருந்து 0.5 உயர்த்தி, 2.0 ஆக மாற்றி வழங்கும்.

- ✶ அதே போன்று, ஊக்கத் தளப் பரப்பளவுக் குறியீடும் (Premium FSI) உயர்த்தப்படும். கட்டட விதிமுறைகளில், இதற்கான மாற்றங்கள் செய்யப்பட்டு 01.10.2018 முதல் இந்த மாற்றங்கள் நடைமுறைக்கு வரும்.

- ✶ இதன் மூலம், ‘அனைவருக்கும் வீடு’ என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் தொலைநோக்குப் பார்வை 2023இன் இலக்கை அடைய முடியும்!

சென்னைக்குப் புதிய பன்னாட்டு விமான நிலையம்

- ✶ சென்னையின் தொழில் வளர்ச்சி, அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வு ஆகியவற்றின் காரணமாக, தற்போதுள்ள சென்னை விமான நிலையம், வருகின்ற 2024ஆம் ஆண்டில், பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து ஆகியவற்றைக் கையாள்வதில் முழு நிறைவை அடைந்து விடும் என்பதால், புதிய விமான நிலையம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, சென்னைக்கு அருகில் உலகத் தரம் வாய்ந்த புதிய பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை அமைக்கும்.

பொதுப் பணித் துறை

* தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்களை மேலும் செம்மைப்படுத்த, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவி பெற்று பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களை தயாரித்து, செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தைப் போன்று, தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் நதிகளை சீரமைக்கும் பணிகளை செயல்படுத்துவதற்கு ஏதுவாக "தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் நதிகளை சீரமைத்தல் கழகம்" என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும். இந்தக் கழகம் செயல்பட ஏதுவாக முதன்மைச் செயலாளர் நிலையில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் உடனடியாக நியமிக்கப்படுவார்.

வேளாண்மைத் துறை

"மாண்புமிகு முதலமைச்சரின் கிராமப்புற வீட்டுக் காய்கறி உற்பத்தித் திட்டம்"

* தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் வீடு அல்லது தங்கள் நிலத்தின் ஒரு பகுதியில் காய்கறிகள் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில், ஒரு புதிய முன்னோடித் திட்டமாக "மாண்புமிகு முதலமைச்சரின் வீட்டுக் காய்கறி உற்பத்தித் திட்டம்" இந்த நிதியாண்டில் கிராமப்புறங்களில் தொடங்கப்படும்.

எரிசக்தி துறை

* சிங்கபெருமாள்கோவில் மற்றும் வீராபுரம் ஆகிய 230 கி.வோ துணை மின் நிலையங்களின் மின் சுமையை குறைப்பதற்காகவும், மாம்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் பெருகிவரும் மின் தேவையை ஈடு செய்யவும், மாம்பாக்கத்தில் 230 கி.வோ துணை மின் நிலையம் 137 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

* வியாசர்பாடி, குக்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையம் ஆகிய துணை மின் நிலையங்களின் மின் சுமையை குறைக்கும் வகையில், மதுரவாயல், எழும்பூர், பி & சி மில்மற்றும் ஐ.சி.எப் ஆகிய நான்கு இடங்களில் உள்ள 33 கி.வோ துணை மின் நிலையங்கள் அந்தந்த இடங்களிலேயே 203 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் 110 கி.வோ வளிம காப்பு துணை மின் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

* தென்சென்னை புறநகர் பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி, பள்ளிக்கரணை பகுதியில் தேசிய நலவாழ்வுக் குழும நிதியில் 100 படுக்கைகள் கொண்ட பள்ளிக்கரணையில் புறநகர் மருத்துவமனை ஒன்று சுமார் 31 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

* கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, 12 அறுவை அரங்கங்கள் மற்றும் 260 படுக்கை வசதி கொண்ட அடித்தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட புதிய கட்டடம், சிறுநீரக அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, சிறுநீரகவியல் பிரிவு, இரத்தம் சுத்திகரிப்புப் பிரிவு, பொது மருத்துவம், உடனடி சிகிச்சைப் பிரிவு மற்றும் 'இமேஜிங்' பிரிவு ஆகிய பிரிவுகளுடன் கூடிய ஓர் அலகு, 141 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

* மேலும், இம்மருத்துவமனைக்கு 'எம்.ஆர்.ஐ. ஸ்கேன்', 'சி.டி.ஸ்கேன்', 'சி.ஆர்.எம்.' ஊடுகதிர் அலகு, செயற்கைச் சுவாசக் கருவிகள் (Ventilators), 'அல்ட்ரா சவுண்டு' கருவி போன்ற மருத்துவக் கருவிகள், 134 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை

* சென்னைப் புறநகர் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதத்தில், முக்கிய சாலைக் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், 216 கோடி ரூபாய் மதிப்பில், பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக, தற்போது 45.15 கி.மீ. நீள முக்கிய சாலைகளை, அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகள் 344 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

* விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில், இரண்டு கட்டங்களாக, 400 கோடி ரூபாய் மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலை விரிவாக்கப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மூன்றாம் கட்டமாக விரிவுப்படுத்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில், 125 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

* தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை, (கட்டம் – II) 33 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

* மவுண்ட் – பூந்தமல்லி ஆவடி சாலையில், ஆவடி அருகே, 12 கோடி ரூபாய் மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அகலப்படுத்தப்படும்.

* தில்லை கங்கா நகரில் உள்ள இரயில்வே கீழ்ப் பாலத்திற்குக் கூடுதலாக மேம்பாலம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை, 50 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

* சென்னை அடையாறு பகுதியில், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, சர்தார் பட்டேல் சாலையில், மத்திய கைலாஷ் பகுதியில் சாலை மேம்பாலம் கட்ட, 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

* சென்னை திருத்தணி–ரேணிகுண்டா சாலையில், கி.மீ.75/6இல் இரயில்வே மேம்பாலம் அமைக்க 48 இலட்சம் ரூபாய் மதிப்பில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

- ✶ சென்னை உள்வட்டச் சாலையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளி அருகில், நடை மேம்பாலம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை, 10 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை

- ✶ இராயபுரம், தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அக்கட்டடத்தினை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பில், இரண்டு மாணவியர் விடுதிகள் கட்டப்படும்.

- ✶ மாண்புமிகு, 'பாரத ரத்னா', புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் இல்லமான ராமாவரம் தோட்டம் அமைந்துள்ள, சுமார் 20.8 கிலோ மீட்டர் நீளமுள்ள மவுண்ட்–பூந்தமல்லி–ஆவடி நெடுஞ்சாலை, தலைவர் அவர்களது நினைவினைப் போற்றும் வகையில்,

- ✶ 'புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். நெடுஞ்சாலை' என்று பெயர் சூட்டப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமாக விளங்கும் கோயம்பேடு பேருந்து நிலையம், 102 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு, 2002 ஆம் ஆண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடக்கி வைக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்திற்கு, நாள் ஒன்றுக்கு, 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆகவே, இந்த கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருப்பெயரான, 'புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம்' என்று பெயர் சூட்டப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 30.06.2017இல் மதுரையில் தொடங்கிய விழா, வெற்றிகரமாக நிறைவு பெற்றிருக்கிறது என்றால், அந்த வெற்றியில் பங்கு வகித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களவைத் துணை சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே தவறாமல்

பங்குபெற்றுள்ள தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் , எனது அலுவலகத்தில் பணியாற்றும் அரசு செலாளர்களுக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும், செய்தி மக்கள் தொடர்புத் துறையினருக்கும், சிறு அசம்பாவிதம் கூட ஏற்படாமல் திறமையாகச் செயலாற்றிய காவல் துறையினருக்கும், நம்முடைய நூற்றாண்டு விழாவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக மக்களுக்குச் சென்றடையக்கூடிய பணியில் ஈடுபட்டிருக்கின்ற ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பெருந்திரளாக வருகைதந்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், இளைஞர்களுக்கும் அனைவருக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. 31 மாவட்டங்களிலும், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா கொண்டாடினோம்! இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்த அமைச்சர் பெருமக்களுக்கும், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அவரோடு பணியாற்றிய அரசு அலுவலர்களுக்கும், 32 மாவட்டங்களிலும், இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு உதவியாக இருந்த கழகக் கண்மணிகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

வாழ்க அண்ணா நாமம்!

வாழ்க புரட்சித்தலைவரின் புகழ்!

தொடர்க புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சி!

என்று சொல்லி, எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, தமிழகம் முழுவதிலும் வந்திருக்கின்ற அத்தனை தொண்டர்களும், நிர்வாகிகளும் பத்திரமாக வாகனங்களில் வீடு செல்ல வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
30.09.2018 அன்று, சென்னையில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்
நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை.

“புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** அவர்களின் கனவை புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் நனவாக்கினார்கள். புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்.”

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை